உ
சிவமயம்

# திருக்கோணமலை மாவட்ட திருத்தலங்கள்



வெளியீடு:

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாதுமையம்பாள் சமேத கோணேஸ்வரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருக்கோணமலை மாவட்ட திருத்தலங்கள்


ஆசிரியர்:

சைவ சித்தாந்த சிகாமணி
சைவப் புலவர், பண்டிதர்
இ.வடிவேல்
திருக்கோணமலை



வெளியீடு
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
98, வேட் பிளேஸ்
கொழும்பு - 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை மாவட்டத் திருத்தலங்கள்


| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | பண்டிதர் இ. வடிவேல் |
| இரண்டாம் பதிப்பு | : | டிசம்பர், 1997 |
| உரிமை | : | இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் |
| வெளியீடு | : | இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,<br>98, வோட் பிளேஸ்,<br>கொழும்பு - 07. |
| அச்சு | : | யுனி ஆர்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட்,<br>48 B , புளூமெண்டால் ரோட்,<br>கொழும்பு - 13. |
| விலை ரூபா | : | |


# Thirukkonamalai Mavatta Thiruththalanga


| | | |
|---|---|---|
| **Author** | : | Pandithar E. Vadivel |
| **2nd Edition** | : | December 1997 |
| **Copy Right** | : | Dept. of Hindu Religious &<br>Cultural Affairs |
| **Published by** | : | Dept. of Hindu Religious & Cultural Affairs<br>98, Ward Place,<br>Colombo -07 |
| **Printed at** | : | Unie Arts (Pvt) Ltd.<br>48 B, Bloemendhal Road,<br>Colombo -13. |
| **Price** | : | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் இந்து விவகாரங்களுக்கு பொறுப்பான மேலதிகச் செயலாளரும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளருமாகிய திருமதி. இராஜலெட்சுமி கைலாசநாதன் அவர்கள்

## இரண்டாம் பதிப்பிற்களித்த வாழ்த்துச் செய்தி.

திருக்கோணமலை மாவட்டத்தின் இந்து ஆலயங்களின் வரலாறுகள் தொகுக்கப்பட்டு 1982 ஆம் ஆண்டு பிரதேச அபிவிருத்தி இந்துசமய கலாசார அலுவல்கள் தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சு மூலமாக முன்னைநாள் அமைச்சர் மதிப்பிற்குரிய செல்லையா இராசதுரை அவர்களினால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்நூலை சைவச் சான்றோரும், பண்டிதருமாகிய ஞானசிரோன்மணி இ.வடிவேல் அவர்கள் மிகச் சிறந்த முறையில் தொகுத்து எழுதியிருந்தார். முதற் பதிப்பின் பிரதிகள் தீர்ந்து விட்டபடியினால் சைவ அபிமானிகளின் வேண்டுகோளுக்கிணங்க இதன் இரண்டாவது பதிப்பினை வெளியிடுவது மிகவும் அவசியமாகியது. இப்பதிப்பினை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மூலமாக வெளியிட்டு வைப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

திருக்கோணமலை மாவட்டத்திருத்தலங்களின் இரண்டாம் பதிப்பினை அவசியம் திணைக்களம் செய்ய வேண்டும் என வற்புறுத்தியதோடு ஆலோசனைகளும், ஒத்துழைப்பும் வழங்கிய பண்டிதர் இ.வடிவேல் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இப்பதிப்பினை சிறப்பாகப் பதிப்பிக்க உதவிய திணைக்களப் பிரதிப்பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன், உதவிப் பணிப்பாளர்கள், திரு.வீ.விக்கிரமராஜா (நிர்வாகம்) திரு.எஸ்.தெய்வநாயகம் (ஆராய்ச்சி), அச்சுப் பிரதிகளை ஒப்பீடு செய்த தகவல் அலுவலர் திரு.ம.சண்முகநாதன் ஆகியோருக்கும் எனது பாராட்டுக்கள் உரியன.

திருமதி இ. கைலாசநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனதுரை

"திருக்கோணமலை மாவட்டத் திருத்தலங்கள்" என்னும் நூலின் மறுபதிப்புக்கு, இந்நூலின் முதற் பதிப்பின் முகவுரையை அடுத்த எனதுரை அமைய வேண்டியதன் அவசியத்தை உணர்கிறேன்.

பல்கலைக்கழகப் பட்டப்படிப்பில் பயிலும் மாணவமணிகள் திருக்கோணமலை மாவட்டத் தலவரலாறுகளையும், அதன் பின்னணியில் மக்களுடைய சமய, சமுதாயப் பாரம்பரிய வழக்குகளையும், கலை கலாச்சார நெறிகளையும், தமிழ் மக்களுடைய பண்பாடு மொழி வளங்களையும் அறிவதற்காகத் திருக்கோணமலை மாவட்டத் திருத்தலங்கள் என்ற நூலைத் தேடி வருவார்கள். இந்நூல் கிடைப்பதற்கரிதாகிவிட்டால், என்னிடமுள்ள ஒரு நூலையும், கிழக்கு மாகாணத்தில் வெருகலம் பதி தொடக்கம் தென்னமரவாடி வரையுமுள்ள இடங்களில் தேடிச் சேமித்து வைத்திருக்கும் வரலாற்றுச் சான்றுகளையும் கொடுத்துதவி வந்தேன்.

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழினத்தின் வரலாற்றுச் சான்றுகள், தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இனவாத யுத்தத்தால் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இங்கு வாழ்ந்த, வாழ்கின்ற தமிழினத்தின் வரலாறுகள் வருங் கால மக்களுக்குக் கிடைப்பது அரிதாகி விடலாம். எனவே இவைகளைப் பேணிப் பாதுகாப்பதற்காக இந்நூலை மறுபதிப்பு செய்ய வேண்டிய தேவையை உணர்ந்து, இந்து கலாச்சார சமய அலுவல்களின் மேலதிகச் செயலாளர் திருமதி. இராஜலெட்சுமி கைலாசநாதன் அவர்களிடம் எனது வேண்டுகோளைத் தொடுத்தேன்.

இந்து சமய கலாச்சாரத் திணைக்களத்தின் பணிப்பாளர்கள் திருமதி. சாந்தி , திரு.நாவுக்கரசன், திரு. விக்கிரமராஜா, திரு. தெய்வநாயகம், திரு. குமார் வடிவேல் முதலிய மேலாளர்களுக்கும் எனது வேண்டுகோள் முன்னரே எட்டியிருந்தது. இதனால் இந்து சமய கலாச்சாரத் திணைக்களம் எனது வேண்டுகோளை மனமுவந்து ஏற்றுக் கொண்டதைப் பெருமகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

1983 ஆம் ஆண்டு "திருக்கோணமலை மாவட்டத் திருத்தலங்கள்" என்ற நூலை எழுதி அமைச்சுக்குக் கொடுத்த போது சில ஆலயங்கள் விடுபட்டுப் போயிற்று. அவைகளின் வரலாறுகளையும் மறுபதிப்பில் சேர்க்கவேண்டுமென்று வேண்டிக் கொண்டேன். இதனைத் திணைக்களம் ஏற்றுக் கொண்டதையும் மனப்பூர்வமாக வரவேற்று திணைக்களத்தின் மேலதிகச் செயலாளருக்கும், பணிப்பாளர்களுக்கும் நன்றி கூறி அமைகிறேன்.

ஞானசிரோன்மணி
பண்டிதர் இ. வடிவேல்.
01.06.97

15, வித்தியாலயம் ஒழுங்கை,
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஆசியுரை..... | |
| 2. | அணிந்துரை.... | |
| 3. | முகவுரை.... | |
| 4. | தேவாரப் பாடல் பெற்ற திருக்கோணேஸ்வரம் ..... | 1–28 |
| 50. | சிவன் கோவில்கள்... | 29–61 |
| 6. | சிவயோகபுரம் நடேசர் கோவில்.... | 62–69 |
| 7. | ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோவில்கள்.... | 70–116 |
| 8. | ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்கள்..... | 117–140 |
| 9. | செண்பக நாச்சியம்மன் கோவில்..... | 141 |
| 10. | பிள்ளையார் கோவில்கள்..... | 142–273 |
| 11. | முருகன் கோவில்கள்..... | 274–319 |
| 12. | ஸ்ரீகிருஷ்ணன் கோவில்..... | 320–327 |
| 13. | சனீஸ்வரன் கோவில்..... | 328 |
| 14. | வைரவர் கோவில்..... | 329–332 |
| 15. | நாகதம்பிரான் கோவில்..... | 333 |
| 16. | வீரபத்திரன் கோவில்..... | 334 |
| 17. | நாதனார் கோவில்..... | 335 |
| 18. | நூல் நிறைவு..... | 336 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# ஆசியுரை

**ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா அவர்கள்**
**சிவயோக சமாஜம்— திருக்கோணமலை**

தென் திருக்கயிலாயநாதனுக்குச் சரியை, கிரியைகள் வழி நின்று அரும் தொண்டாற்றிவரும், சைவசிகாமணி-சைவப் புலவர்- பண்டிதர் இ. வடிவேல் அவர்கள் பெரும் முயற்சி செய்து இப்பெரும் கிரந்தத்தை ஆக்கித் தந்துள்ளார். தெட்சணேஸ்வரன் அமர்ந்திருக்கும் திருக்கோணமலை முற்றிலும் புனிதச் சைவத் திரு நாடாயிருந்ததென்பதை ஓதாமல் ஓதிநின்று வந்ததற்குச் சான்று கூறும் வண்ணம் இந்நூல் அமைந்திருக்கின்றது. இலங்கையின் தீர்க்ககாலச் சைவப் பரம்பரையை உள்ளங்கை நெல்லிக்கனி போன்று எடுத்துக் காட்டுவதற்கு இப்புனித நூல் ஒன்றே போதுமானதாயிருக்கின்றது. இதைப்போன்ற புண்ணிய காரியங்களை கைங்கரியம் செய்வதற்கு ஒருசில புண்ணிய சீலருக்கு மாத்திரந்தான் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. பூர்வ ஜென்ம சிவ புண்ணிய வசத்தால் பண்டிதர் அவர்களுக்கு அது கிடைத்திருக்கின்றது. இந்தக் கிரந்தத்தை ஒவ்வொரு இந்துக்களும் தங்கள் தங்களுடைய இதயஸ்தானத்தில் கௌஸ்துவமணிபோல் அணிவரேயானால் இந்து, யதார்த்த இந்துவாவதற்குரிய சிந்தனா சக்தியை இந்நூல் நிச்சயம் தூண்டிவிடும்.

முதன்முறையாகத் தென்கயிலையிலிருக்கும் முழு ஸ்தல ஆலயங்களின் வரலாறுகளையும் புராண, சரித்திர ரீதியில் ஆராய்ந்து இருளிலிருந்து ஒளிக்குக் கொண்டுவந்து தந்திருக்கும் கிரந்த கர்த்தாவாகிய பண்பு நிறைந்த பெரும் பண்டிதர் திரு. வடிவேல் அவர்கள் சிவத் திருமணி விளக்குப்போல் சைவ சமயத்திற்கொரு ஒளிவிளக்காக வாழ்க. சிவஞான தர்மங்களை உணர்ந்த ஒரு சைவப் பெருமகனாக நீடூழி வாழ்க, வாழ்க.

**சிவயோக சமாஜம்**
**திருக்கோணமலை**
**9-12-81**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

**புலவர் சிவஸ்ரீ வை.சோமாஸ்கந்தக் குருக்கள்**

பிரதமகுரு – மாரியம்மன் கோவில் தேவஸ்தானம்
சமாதுப்பிள்ளையார் கோவில் தேவஸ்தானம்

தலைவர் - திருவள்ளுவர் கழகம்
சித்த, ஆயுர்வேத, அக்யூபஞ்சர் வைத்திய ஆராய்ச்சியாளர்.

திருக்கோணேசர் அருள் பாலிக்கும் அழகிய நகரம் திருக்கோணமலை. தென்கயிலாயம் எனப்படும் இந்தச் சிவபூமியிலே பெரிதும், சிறிதுமாக நூற்றுக்கு மேற்பட்ட திருக்கோவில்கள் இருக்கின்றன. "கோவிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை அமர்ந்தாரே" என்று திருஞானசம்பந்தர் திருக்கோணேஸ்வரத்திற்குப் பாடியருளிய தேவாரத்தில் கூறுகின்றார். அந்த அமுதவாக்கில் அடங்கியுள்ள கோவில்களில் அறுபத்தைந்து கோவில்களின் அற்புத வரலாறுகளைப் படிக்க மெய்சிலிர்க்கின்றது.

சைவப்புலவர்- பண்டிதர் இ.வடிவேலு அவர்கள் பிரதேச அபிவிருத்தி, இந்து கலாசார அமைச்சரின் பணிப்பினை உளக்கொண்டு, திருக்கோணமலை மாவட்டத்தில் வெருகலம்பதி தொடக்கம் தென்னமரவாடி வரையுமுள்ள திருத்தலங்களுக்கெல்லாம் சென்றார். அவர் சென்று கண்டாராய்ந்த திருத்தலங்களின் அற்புதங்கள், சரித்திரங்கள், புராண இதிகாசப் பின்னணிகள், ஆலய அமைப்பு முறைகள், சைவமக்களின் பண்பாடு, சமயநெறி என்பனவற்றைக் கால நிர்ணயங்களுடன் சுவைபடத் தந்திருக்கின்றார். திருக்கோணமலை மாவட்டத் திருத்தலங்கள் அனைத்தையும் ஒரே பார்வையில் கண்டு களிக்க உதவும் அற்புதத் தொலைநோக்கி போன்றது, "திருக்கோணமலை மாவட்டத் திருத்தலங்கள்" என்ற வரலாற்றுநூல்.

திருக்கோணேஸ்வரமும் அதனைச் சூழ்ந்த கிராமங்களிலுள்ள திருக்கோயில்களும், பலநூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்த வளமான நிலையினை இந்நூலாசிரியர் உணர்த்தும் வகையால் உணரும்போது உள்ளத்திலேற்படும் ஆனந்தம் சொல்லாற் சித்திரிக்க இயலாதது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியான ஒரு வரலாற்றுநூல் இந்த மாவட்டத்தில் முதன் முதல் பிறந்திருக்கின்றது.

இந்நூலாசிரியர் திருத்தல வரலாறுகளை எழுதிய ஆராய்ச்சி முறையைப் படிக்குந்தோறும், அத்தலங்களையெல்லாம் நாமும் சென்று தரிசித்துக் கண்டு கேட்டு அனுபவிக்க வேண்டுமென்ற ஆர்வம் பிறக்கின்றது. வரலாறுகளையும், திருவருட் செயல்களையும் இயற்கை வளங்களையும், இன்றைய உண்மை நிலையினையும் சுவைபட எழுதி வருங்காலச் சந்ததிக்கு விருந்தாக வழங்கியுள்ளார்.

*வாழ்க வளர்க அவர்பணி!*

**வை. சோமாஸ்கந்தக் குருக்கள்**
**திருக்கோணமலை.**

471, திருஞானசம்பந்தர் வீதி,
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# முகவுரை

திருக்கோணமலை மாவட்டத் திருத்தலங்கள் பற்றிய வரலாறுகளைத் தேடியெடுத்து நூலாக்கித் தரும்படி பிரதேச அபிவிருத்தி இந்து கலாசார தமிழ் அலுவல்கள், கௌரவ அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை அவர்கள் பணித்திருந்தார்கள். இந்தப் பணிப்புரையை என்னை அடிமை கொண்ட மாதுமையம்பாள் சமேத கோணேசப் பெருமானுடைய அருளாணையாக ஏற்றுக் கொண்டேன். என் குருநாதராயிருந்து வழிநடத்தும், சிவயோக சமாஜ யோகாச்சிரம முனிவர் ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தர் அவர்களிடம் எனக்குக் கிடைத்த பணியை எடுத்துக் கூறியபோது அவருடைய இதயம் இதற்கு அனுமதியளித்ததைக் கண்கள் பளிச்சிட்டுக் காட்டின. வாய் ஆசீர்வதித்தது. கோணேஸ்வரம் சுவாமிஜீயுடைய ஞானாலயம் என்பதை யானறிவேன். ஆதலால் கோணேசப் பெருமானுடைய அருளாணையை சுவாமிஜீயிடமிருந்து பெற்றுக்கொண்டு என்பணியைத் தொடருகின்றேன்.

மத்திய மின்சார நிலையத்திலிருந்து உபநிலையங்களுக்கு மின்சாரம் பாய்வதுபோன்று, திருக்கோணேஸ்வரத்திலிருந்து புறப்படும் திருவருளால் திருக்கோணமலை மாவட்டத் திருத்தலங்கள் பிரகாசிக்கின்றன. இதன் அடிப்படைக் கருத்து என் நெஞ்சில் நீண்ட காலமாக வேரூன்றி வளர்ந்திருந்தது. இந்நூலை எழுத எடுத்துக்கொண்ட பிரயத்தனங்களின்போது இந்த உண்மைகளை நேரில் அனுபவிக்க முடிந்தது.

வெருகலம்பதி தொடக்கம் தென்னமரவாடிவரையுமுள்ள இந்துக்கோவில்கள் அனைத்தையும் தரிசித்து, ஆங்காங்குள்ள முதியவர்கள் செவிவழிச் செய்தியாக வைத்திருந்த வரலாற்றுச் செல்வங்கள் குடைந்தெடுக்கப்பட்டன. ஒவ்வொரு கோவிலைப் பற்றியும் அறியக்கூடிய சுவடிகள், நூல்கள், செப்பேடு என்பன துழாவப்பட்டன. சிதைந்து கிடக்கும் வரலாற்றுப் பெருமைமிக்க ஆலயங்களின் கல்வெட்டுக்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவுருவங்கள், தூண்கள், படிக்கற்கள், லிங்கங்கள் முதலியன புரட்டிப் புரட்டி ஆராயப்பட்டன. திருக்கோணமலை மாவட்டத்தில் பண்டைக் காலத்திலிருந்து ஆலயங்கள் இயற்கை ஏதுக்களாலோ வேறு காரணங்களினாலோ பராமரிப்பிழந்து, காடுகள் மண்டி மறைந்த போதிலும் அங்கிருந்த திருவுருவங்கள் கிடைக்கப் பெற்று அவை எங்கெங்கே இப்போது கோவில் கொண்டுள்ளன என்ற வரலாறுகள் கண்டறியப்பட்டன. பழமை மிக்க ஆலயங்களின் அமைப்பு முறைகளும் திருவுருவங்களின் சிற்ப முறைகளும் சிந்தனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு காலங்கள் கணிக்கப்பட்டன. புதிய கோவில்கள் தோன்றுவதற்குரிய காரணங்கள் தேடப்பட்டன. கோவில்களை அச்சாணியாக வைத்துக் கிராமங்கள் தோறும் வாழும் மக்களின் பாரம்பரிய சமய நெறிகளும் விழாக்களும் கோவிற் தொழும்புகளும் இன்று அவற்றில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களும் கோவில்களில் நிகழ்ந்த, நிகழ்கின்ற அற்புதச் செயல்களும் அறியப்பட்டன. பாடல்பெற்ற ஸ்தலங்களுக்குரிய தலபுராணங்களும் ஆராயப்பட்டன. இந்த அனுபவங்களின் ஆக்கமாக இந்நூல் பிறக்கின்றது. நீங்களும் அனுபவிக்க வேண்டுமென்ற வேணவாவினால் உள்ளே அழைத்துச் செல்கின்றோம்.

திருஞான சம்பந்தர் கோணேசப் பெருமானுக்குப் பாடியருளிய தேவாரப் பதிகத்தில் "கோவிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை அமர்ந்தாரே" என்று கூறியிருப்பதைப் படித்த காலத்தில் எழுந்த சந்தேகங்கள் இந்த நூலை எழுத முயன்றபோது தீர்ந்துவிட்டன. எந்தக் கிராமத்திலுள்ள கோவிலுக்குச் சென்றாலும் கோணேசப் பெருமானுடைய திருநாமத்தை உச்சரித்தே மக்கள் தங்களுடைய ஆலய வரலாறுகளைத் தந்தார்கள். கோணேஸ் வரத்திற்காகவே அவர்கள் வாழ்ந்தார்கள், வாழ்கின்றார்கள். குளக்கோட்டு மன்னனுடைய கோணேசர் கல்வெட்டைக் கோணேசப பெருமானுடைய அருளாணையாக மதிக்கின்றார்கள். இன்றும் அதனைக்கூறிப் பெருமைப்படுகின்றார்கள். கோணேசப் பெருமானுடைய அருளாட்சியே அன்று நடைபெற்றது; இன்றும் நடைபெறுகின்றது. இனியும் அந்த ஆட்சியே நடைபெறப்போகின்றது. திருஞானசம்பந்தர் கூறியதுபோலத் திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள கோவில்களெல்லாம் திருக்கோணேஸ்வரத்தோடு தொடர்புடைய கோவில்களாகச் சூழ்ந்து காணப்படுகின்றன. பாடல்பெற்ற கோணேஸ்வரத்தின் வரலாறுகள் தனியானதொரு நூலாக்கப்படவேண்டியதாயிருந்தும் விரிவஞ்சிச் சுருக்கித் தரப்பட்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூலை ஆக்குவதில் எனது சிற்றறிவால் வழுக்கள் ஏற்பட்டிருக்கலாம். காலங்கடந்த செய்திகள் சில எனக்குக் கிடையாதிருந்திருக்கலாம். எனது ஆய்வுகளில் தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். அனைத்தையும் பொறுத்து ஆக்கத்தை மேலும் ஊக்குவிக்க உதவும் படி அனைவரையும் பணிவுடன் வேண்டுகின்றேன். மறைந்துகொண்டும், மறைக்கப்பட்டுக் கொண்டுமிருக்கும் சைவத் தமிழுலக வரலாறுகளில், திருக்கோணமலை மாவட்டத் திருத்தலங்களின் உண்மை வரலாறுகளை இன்னும் பலநூறு வருடங்களின்பின் அறிவதற்கு இந்த நூல் உதவுமெனக் கருதிச் சைவ உலகத்திற்குப் பணிவோடு இதனைச் சமர்ப்பிக்கின்றேன்.

இந்நூலை எழுதும்படி பணிப்புரை வழங்கிய பிரதேச அபிவிருத்தி இந்து கலாசார தமிழ் அலுவல்களின் கௌரவ அமைச்சர் திரு.செல்லையா இராசதுரை அவர்களுக்கும், பணிப்புரையை நிறைவேற்ற என்னை ஊக்கப்படுத்திய திருக்கோணமலைக் கலைக் கலாசார வரலாறுகளில் ஆழ்ந்த அனுபவமுடையவரும், இந்து சமய இந்து கலாசார அமைச்சின் பணிப்பாளருமாகிய திருவாளர் ஆறுமுகம் பாஸ்கரதாஸ் அவர்களுக்கும், திருக்கோணமலை மாவட்டத் திருத்தலங்கள் இருக்குமிடங்களை விளக்கும் வரை படத்தை அமைத்துத் தந்த நிலஅளவையாளர் அன்பர் திரு இ.பொன்னுச்சாமி அவர்களுக்கும், இந்த நூலை எழுதுவதற்குத் தேவையான தகவல்களையும், ஆலயங்களுக்குரிய பாடல்களையும் தந்துதவிய அனைவருக்கும் மனங்கனிந்து கூறும் நன்றி உரித்தாகுக.

சைவப்புலவர்– பண்டிதர்
இ.வடிவேல்

"பாக்கியபதி"
15, வித்தியாலய ஒழுங்கை, திருக்கோணமலை
மாசி 1982.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை மாவட்டம்
# திருக்கோணேசர் ஆலயம்

நிரைகழல் அரவஞ் சிலம்பொலியலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பரும் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும்
கோணமா மலையமர்ந் தாரே.

-திருஞானசம்பந்த சுவாமிகள்

திருக்கோணமலை பாடல் பெற்ற திருத்தலங்களைக் கொண்ட புண்ணிய பூமி. கோயிலும், குளமும் எங்கும் எழுப்பப்பட்டு இந்து மக்கள் எழிலோடு வாழும் இடம். அதி உத்தம ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா, பிரதேச அபிவிருத்தி அமைச்சுக்காக என்னை நியமித்து இந்து சமய இந்து கலாசார, தமிழ் மொழி அலுவல்கள் ஆகிய கடமைகளை என்னிடம் ஒப்படைத்துள்ளார். என் மனதில் கருக்கூட்டிய எண்ணங்களில் ஒன்று இலங்கையிலுள்ள இந்து ஆலயங்களின் வரலாறுகளைக் கொண்ட தொகுப்பு நூல் வெளியிடுவதாகும்.

அகில உலக இந்து மாநாடு நடைபெறுகின்ற இந்த நல்ல நாளில் திருக்கோணமலை மாவட்டத்தின் திருக்கோயில்களின் வரலாற்று நூலினை வெளியிட்டுவைப்பதில் பெருமைப்படுகின்றேன். எனது கருத்தை நான் வெளியிட்டபோது சைவ சிகாமணி, சைவப் புலவர், பண்டிதர், இ. வடிவேல் அவர்கள் திருக்கோணமலை மாவட்டத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோயில்களின் வரலாற்று நூலினை உருவாக்கித் தருவதற்கு முன்வந்தார். தான் எடுத்துக் கொண்ட பணியை மிகச் சிறப்பாகச் செய்து முடித்திருக்கின்றார் என்பதை நூலைப் பார்த்தபோது அறிந்து கொண்டேன். 'செய்வன திருந்தச் செய்' என்னும் முதுமொழிக்கு அமையத் தன் கடமையினை இருதய திரிகரண சுத்தியோடு செய்திருக்கின்றார். பண்டிதர் இ. வடிவேல் கலை ஞானமும், புலமையும் மிகுந்த குடும்பத்தில் இருந்து வந்தவர். அவரின் பணிவும், தன்னடக்கமும் கண்டு என்றோ என் மனதில் இடம் பெற்றுக் கொண்டார்.

பல்லாண்டுகளுக்கு முற்பட்ட வரலாறுகள் இந்நூலில் இடம்பெற்றிருக்கின்றன. சைவப் பெருமக்களுக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது.

பல ஆலயங்களுக்குரிய பாடல்கள், கல்வெட்டுக்கள், ஏட்டுச் சுவடிகள் தேடிக் கண்டெடுத்து இந்நூலில் சேர்க்கப்பட்டிருப்பது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். அவருக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். திருக்கோணமாமலையில் குடிகொண்டிருக்கும் திருக்கோணேசப் பெருமான் அவருக்கு நீண்ட ஆயுளையும், நிறைந்த செல்வத்தையும் வழங்கப் பிரார்த்திக்கின்றேன்.

காலம் சொற்பமாக இருந்த போதிலும் இந்நூலை மிகச் சீராகவும், சிறப்பாகவும் அச்சிட்டு உதவிய அரசு அச்சகத்தினருக்கு என் நன்றி.

அன்பன்,

**செல்லையா இராசதுரை,**
**பிரதேச அபிவிருத்தி, இந்து சமய இந்து கலாசார ,**
**தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை மாவட்டத் திருத்தலங்கள்

வரைபடத்திலுள்ள இலக்கங்கள் திருத்தலங்களைக்
குறிப்பிடுகின்றன

| | கோவிற் பெயர்கள் | ஊர்ப் பெயர்கள் |
|---|---|---|
| 1. | திருக்கோணேஸ்வரம் | திருக்கோணமலை |
| 2. | ஸ்ரீ ஆதிகோணநாயகர் கோவில் | தம்பலகமம் |
| 3. | திருமங்கலாய் சிவன்கோவில் | திருமங்கலாய் |
| 4. | விஸ்வநாதசுவாமி (சிவன்) கோவில் | திருக்கோணமலை |
| 5. | வெள்ளைவில்வபத்திரிக் கோணேசர் கோவில் | திருக்கோணமலை |
| 6. | கங்குவேலி சிவன்கோவில் | கங்குவேலி |
| 7. | அகஸ்தியர் ஸ்தாபனம் (சிவன்கோவில்) | திருக்கரைசையம்பதி |
| 8. | மல்லிகைத்தீவு சிவன்கோவில் | மல்லிகைத்தீவு |
| 9. | கந்தளாய் சிவன்கோவில் | போட்டங்காடு |
| 10. | சிவயோகபுரம் நடேசர் ஆலயம் | கன்னியாய் |
| 11. | ஸ்ரீ பத்திரகாளியம்பாள் ஆலயம் | திருக்கோணமலை |
| 12. | உப்புவெளிக் காளிகோவில் | உப்புவெளி |
| 13. | பறையன்குளம் எல்லைக் காளியம்மன் கோவில் | பறையன்குளம் |
| 14. | படுக்கைக் பத்திரகாளி கோவில் | திருக்கடலூர் |
| 15. | சம்பூர்ப் பத்திரகாளியம்பாள் ஆலயம் | சம்பூர் |
| 16. | பாலம்போட்டாறு பத்திரகாளியம்மன் கோவில் | பாலம்போட்டாறு |
| 17. | மாரியம்மன் கோவில் | திருக்கோணமலை |
| 18. | முத்துமாரியம்மன் கோவில் | தம்பலகமம் |
| 19. | முத்துமாரியம்மன் கோவில் | நிலாவெளி |
| 20. | மாங்கிணாய் ஸ்ரீ மாரியம்மன் கோவில் | மாங்கிணாய் |
| 21. | சல்லி முத்துமாரியம்மன் கோவில் | சல்லி |
| 22. | முத்துமாரியம்மன் கோவில் | கிளிவெட்டி |
| 23. | செண்பகநாச்சியம்மன் கோவில் | இலங்கைத்துறை |
| 24. | ஆலடி விநாயகர் ஆலயம் | திருக்கோணமலை |
| 25. | வீரகத்திப் பிள்ளையார் கோவில் | திருக்கோணமலை |
| 26. | சமாதுப் பிள்ளையார் கோவில் | திருக்கோணமலை |
| 27. | மனையாவெளி திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோவில் | திருக்கோணமலை |
| 28. | சின்னத்தொடுவாய் சித்திவிநாயகர் கோவில் | உப்புவெளி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 29. | பெரியதொடுவாய் பிள்ளையார் கோவில் | உப்புவெளி |
| 30. | கடற்படைப் பிள்ளையார் கோவில் | திருக்கோணமலை |
| 31. | கற்பகப் பிள்ளையார் கோவில் | திருக்கோணமலை |
| 32. | கடற்கரைப் பிள்ளையார் கோவில் | திருக்கோணமலை |
| 33. | பத்தாம் குறிச்சி கம்பனிப் பிள்ளையார் கோவில் | திருக்கோணமலை |
| 34. | பன்குளம் பிள்ளையார் கோவில் | பன்குளம் |
| 35. | கன்னியாய்ப் பிள்ளையார் கோவில் | கன்னியாய் |
| 36. | தில்லையம்பலப் பிள்ளையார் கோவில் | தம்பலகமம் |
| 37. | ஸ்ரீ தில்லையம்பலப் பிள்ளையார் கோவில் | அன்புவழிபுரம் |
| 38. | கட்டளைப் பிள்ளையார் கோவில் | கந்தளாய் |
| 39. | அருள்மிகு விநாயகர் கோவில் | ஆலங்கேணி |
| 40. | ஊற்றடிப் பிள்ளையார் கோவில் | சின்னக்கிண்ணியா |
| 41. | சம்பூர்ப் பிள்ளையார் கோவில் | சம்பூர் |
| 42. | கூனித்தீவுப் பிள்ளையார் கோவில் | கூனித்தீவு |
| 43. | வர்ணகுலப் பிள்ளையார் கோவில் | சேனையூர் |
| 44. | சித்திவிநாயகர் கோவில் | மல்லிகைத் தீவு |
| 45. | மூதூர்ப் பிள்ளையார் கோவில் | மூதூர் |
| 46. | பள்ளிக்குடியிருப்புப் பிள்ளையார் கோவில் | பள்ளிக்குடியிருப்பு |
| 47. | சித்திவிநாயகர் கோவில் | குச்சவெளி |
| 48. | வரத விநாயகர் கோவில் | திரியாய் |
| 49. | தென்னமரவாடிப் பிள்ளையார் கோவில் | தென்னமரவாடி |
| 50. | கும்புறுபிட்டி விநாயகர் கோவில் | கும்புறுபிட்டி |
| 51. | சித்தி விநாயகர் கோவில் | நிலாவெளி |
| 52. | வடலியம்பதிப் பிள்ளையார் கோவில் | சாம்பல்தீவு |
| 53. | ஆலடிவிநாயகர் ஆலயம் | செல்வநாயகபுரம் |
| 54. | ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம் | சீனக்குடா |
| 55. | வில்லூன்றிக் கந்தசுவாமி கோவில் | திருக்கோணமலை |
| 56. | முத்துக்குமாரசுவாமி கோவில் | திருக்கோணமலை |
| 57. | சித்திரவேலாயுதசுவாமி கோவில் | வெருகலம்பதி |
| 58. | ஸ்ரீ முருகன் கோவில் | திருக்கோணமலை |
| 59. | ஸ்ரீ கிருஷ்ண கோவில் | திருக்கோணமலை |
| 60. | சனீஸ்வரன் கோவில் | திருக்கோணமலை |
| 61. | ஞானவைரவர் கோவில் | அன்புவழிபுரம் |
| 62. | சோலைவைரவர் கோவில் | உப்புவெளி |
| 63. | நாகதம்பிரான் கோவில் | சேனையூர் |
| 64. | வீரபத்திரன் கோவில் | சேனையூர் |
| 65. | நாதனார் கோவில் | பெரியகுளம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேஸ்வரம்

ஈழத்தில் பாடல்பெற்ற சிவஸ்தலங்களாயிருப்பன திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் என்னுமிரண்டுமாகும். தமிழ் நாட்டுத் திருத்தலங்களின் வரலாறுகள் பன்னெடுங்காலமாக அகில உலகச் சைவமக்களின் நெஞ்சில் நிலைபெற்றிருப்பது போன்று ஈழ நாட்டுத் திருத்தலங்களும் இந்துக்களின் இதயத்தில் இருந்து வருகின்றன. திருக்கோணேஸ்வரம், இலங்கையின் கிழக்கே கிழக்கு மாகாணத்தில் உலகப் பிரசித்திபெற்ற இயற்கைத் துறைமுகமாகிய திருக்கோணமலைத் துறைமுகம் அமைவதற்குச் சாதகமாயுள்ள மலைகளொன்றின் உச்சியில் இருக்கின்றது. மூன்று மலைகளைக்கொண்டு முக்கோண வடிவில் அமைந்திருப்பதால் திருக்கோணமலை என்று இந்த நகரம் பெயர் பெற்றது. இந்த நகரத்தில் பிரசித்திபெற்ற திருத்தலம் கோணேஸ்வரம். ஆதலால் திருக்கோணமலை எனவும் இந்த நகரம் பெயர் பெறுகின்றது. இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இந்துக்களின் திருத்தலமாகிய திருக்கோணேஸ்வரம் புனித க்ஷேத்திரமாக இருந்து வந்ததைப்புராண, இதிகாச வரலாறுகள் கூறுகின்றன. எனவே இந்தத் தலத்தின் இயல்பான தெய்வீக விசேடத்தினாலே இந்நகரம் திருக்கோணமலை என்ற பெயரால் வழங்கி வருகின்றது.

திருக்கோணமலைப் புகையிரத நிலையத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் திருக்கோணேஸ்வரம் இருக்கின்றது. குளக்கோட்டு மன்னனால் திருப்பணிகள் செய்யப்பட்ட புராதன ஆலயத்தை கி.பி.1624ஆம் ஆண்டு போர்த்துக்கீசத் தளபதியாகிய கொன்ஸ்ரன்டைன் டிசா என்பவர் இடித்துத் தரைமட்டமாக்கிக் கொள்ளையடித்த பின்னர் முன்னூற்றைம்பது வருடங்களாக ஆகாயலிங்கமாக அமர்ந்திருந்த கோணேசப் பெருமானுக்கு சைவப் பெருமக்கள் மீண்டும் புதியதோர் ஆலயத்தைக் கட்டியுள்ளார்கள். இந்த ஆலயத்திலே இன்று கோணேசப்பெருமான் எழுந்தருளியிருக்கின்றார்.

தெட்சண கயிலாயம் என்று திருக்கோணேஸ்வரம் போற்றப்பட்டு வருகின்றது. வடக்கே இமயக் கொடுமுடியில், கயிலாய சிகரத்தில் கயிலைநாதன் எழுந்தருளியிருப்பது போல தெற்கே திருக்கோணமலையில் கோணேசப்பெருமான் அமர்ந்திருந்து அருள்பாலிக்கின்றார். பூகோள அமைப்பில் இந்த இரண்டு தலங்களும் ஒரே அட்சரரேகையில் அமைந்திருப்பதையும், இவையிரண்டுக்கும் நடுவே தில்லைத்திருத்தலம் அமைந்திருப்பதையும் திருமூல நாயனார் திருமந்திரத்திலே குறிப்பிடுகின்றார். (மேருநடுநாடி.... 2701 ஆம் பாடல்). இந்தத் தலங்கள் அமைந்திருக்கும் பாங்கை விஞ்ஞானரீதியாகவும் ஆராய்வது மேலும் திருக்கோணேஸ்வரத்தின் மகிமையை அறிவதற்கு உதவியாயிருக்கும்.

திருக்கோணேஸ்வரத்தின் வரலாறுகளைப் பின்வரும் நூல்கள் விரிவாகக் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை மாவட்டத் திருத் தலங்கள்

1. தெட்சண கயிலாய புராணம்
2. திருக்கோணசல புராணம்
3. கோணேசர் கல்வெட்டு
4. திருக்கோணாசல வைபவம்
5. திருமுறைகள்
6. திருப்புகழ்
7. திருக்கோணேஸ்வரம்
8. புராதன யாழ்ப்பாணச் சரித்திரம்
9. தமிழரும் இலங்கையும்
10. இலங்கையில் இந்துசமயம்
11. திருக்கோணமாமலை
12. திருக்கோணமலைத் திருவுருவங்கள்
13. திருக்கோணேசர் கோவில் தோற்றக்காலம்
14. கோணேஸ்வரம்
15. கோணேசர் ஆலய வரலாறு
16 திருக்கோணமலை அந்தாதி முதலியன

மேலே கூறப்பட்ட புராண, இதிகாச, வரலாற்று நூல்களைத் தவிர கோணேஸ்வரத்திற்குப் பாடப்பட்ட திருக்கோணேஸ்வரர் தோத்திரமாலை, கோணகிரீசர் அட்டகம், கோணேசர் திருவூஞ்சல் முதலிய துதிப் பாடல்களும், கோணேசர் கோவில் கும்பாபிஷேக மலர்களும் திருக்கோணேஸ்வரத்தின் மூர்த்தி, தலம், தீர்த்த மகிமைகளை விரிவாகக் கூறுகின்றன. இவைகளை விரிக்கிற் பெருகுமாதலால் சுருக்கமாகச் சிலவற்றை இங்கு குறிப்பிடுகின்றேன்.

மகாமேரு மலையின் சிகரங்களிலொன்றாகத் திருக்கோணமலை குறிப்பிடப்படுகின்றது. இந்த வரலாற்றைப் புராணங்கள் கூறுகின்றன. தெட்சண கயிலாய புராணத்தில் இதன் விரிவான வரலாற்றை அறியலாம். இற்றைக்கு ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது இராமாயண வரலாறு. அக்காலத்தில் வாழ்ந்த இலங்கை மன்னன் இராவணன் சைவசமயத்தவன் என்பதையும், அவன் திருக்கோணேஸ்வரத்தில் தவம் செய்து வழிபட்டு மலையெடுத்த வரலாற்றையும், கோணேசப் பெருமானிடம் வாளும், நாளும் பெற்ற வரலாற்றையும் புராணங்களும், திருமுறைகளும் கூறுகின்றன. கோணமாமலையில் இராவணன் வாளால் வெட்டி மலையெடுத்த இடம் இன்றும் "இராவணன் வெட்டு" என்று கூறப்பட்டு வருவதையும் அறிகின்றோம். "எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்" என்று திருக்கோணமலைப் பதிகம் கூறுவதாலும், இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல்மேல் என்று "இராவணன் மேலது நீறு" என்றும் திருமுறைகள் பேசுவதாலும் இற்றைக்கு ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுப் பெருமையுடையது திருக்கோணேஸ்வரம் என்பது புலனாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் திருக்கோணேஸ்வரத்திற்குத் தேவாரத் திருப்பதிகம் பாடியருளினர். போர்த்துக்கீசரால் கோணேசர் கோவில் அழிக்கப்பட்டபின் மாதுமையம்பாள் சமேத கோணேசப் பெருமான் இந்தத் திருமுறைகளையே கோவிலாகக் கொண்டு அமர்ந்திருந்தார் என்று கூறுவதில் இந்துக்கள் தெய்வீகப் பெருமையடைகின்றார்கள். "தெக்காரும் மாகோணத்தானே" என்று நாவுக்கரசரும், "மாகோணத்தானே" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளும், "ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில் மன்னுதிருக்கோணமலை மகிழ்ந்த செங்கண் மழவிடையார்" என்று சேக்கிழார் பெருமானும் "திருக்கோணமலை தலத்தாரு கோபுரம்" என்று அருணகிரிநாத சுவாமிகளும் கோணேஸ்வரத்தைப் பாடியருளினார்கள்.

சிவஸ்தலங்கள் சில, தானே தோன்றுகின்றன. வேறுசில அற்புதச் சம்பவங்களால் தோற்றுவிக்கப்படுகின்றன. திருக்கோணேஸ்வரம் இயல்பாகவே தெய்வீகமாகத் தோன்றிய ஸ்தலம். இதனை மெய்ஞானிகள் அறிவார்கள். அதற்கேற்றாற்போல கோணேசர் கோவிலின் கருவறையில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் மூலலிங்கமும் தான்தோன்றிலிங்கமும் என்று கூறுவது மிகையாகாது. போத்துக்கீசரின் அடாத செயலால் முன்னூற்றைம்பது வருடங்களாக ஆலயமில்லாதிருந்த இடத்தில் மீண்டும் ஓர் ஆலயத்தை நிருமாணிக்கத் திருக்கோணமலைச் சைவமக்கள் 1950 ஆம் ஆண்டு ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்கள். புதிதாக நிருமாணிக்கும் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்வதற்கு ஒரு லிங்கத்தைப் பெறக் காசிக்குச் சென்றபோது கங்காதேவியால் இயற்கையாக உருவாக்கப்பட்ட பாணலிங்கம் கிடைத்ததும் அற்புதமாகும். அதற்கும் மேலான அற்புதத்தில் அற்புதம் கோணேசப்பெருமானருளால் திருக்கோணமலையில் நிகழ்ந்தது. கோணேசப் பெருமானுக்கு கோயிலெடுக்கச் சைவமக்கள் ஆலோசனை நடத்திக்கொண்டிருக்கும் போது திருக்கோணமலை நகரசபையார் வீடமைப்புத் திட்டமொன்றுக்காக ஏகாம்பரம் வீதியில் கிணறு வெட்டினார்கள். அப்போது மூன்றடி ஆழத்தில் நிலத்தினடியிலிருந்து மாதுமை அம்பாள் சமேத கோணேசப் பெருமானும், சந்திரசேகரர், பார்வதி திரிபங்க வடிவத் திருவுருங்களும் வெளிப்பட்டன. அத்துடன் கணேசர், அஸ்திரதேவர், அன்னம் என்பனவும் கிடைத்தன. இந்தத் திருவருட் செயல்கள் சைவமக்களுக்குப் புத்துணர்ச்சியை ஊட்டின. இதனால் கோணேசப் பெருமானுக்குத் தற்போதிருக்கும் புதிய ஆலயத்தை அமைத்தார்கள். தெய்வீகம் இயல்பாகவே ஊற்றெடுத்துப் பிரவாகித்துக் கொண்டிருக்கும் இந்தச் க்ஷேத்திரத்தில் ரிக்ஷிகளும் யோகிகளும் பல்லாயிரமாண்டுகளுக்கு முன்னமே தமது தபோ பலத்தை இந்தத் தலத்தில் பொழிந்து வைத்துள்ளார்கள். எனவே இது தானே தோன்றிய சிவஸ்தலமாகும்.

மூன்றாவது கடல்கோள் நிகழ்ந்த காலத்தில் மாபெரும் கற்கோவிலொன்று சமுத்திரத்தில் மூழ்கியிருக்கலாமென்ற ஐதீகம் இருந்துவருகின்றது. திரு. மைக் வில்சன், திரு.ஆதர் கிளாக் போன்ற ஆழ்கடல் ஆய்வாளர்கள் கோணேசர் கோவிலுக்கு அயலிலுள்ள கடலில் நடத்திய ஆராய்ச்சியின் பின்னர் கூறியிருக்கும், கூற்றுக்களின்படி சமுத்திரத்தில் கோவிலின் தளங்கள், தூண்கள், மணிகள், விளக்குகள் என்பன இருப்பதாக அறியக்கிடக்கின்றது. அந்தக் கடல்கோளின் பின்னர் கோணமாமலையில் மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில்கள் அமைக்கப்பட்டிருந்தன. மலையடிவாரத்திலொன்றும், மலையுச்சியிலொன்றும், மலையின் நடுப்பாகத்திலொன்றும் இருந்தன. இந்தக் கோவில்கள் கிறிஸ்து பிறப்பதற்கு ஆயிரத்தி முன்னூறு ஆண்டுகளுக்கு முன், அதாவது இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டுள்ளன. கோணேசர் கோவிலைப் போர்த்துக்கீச தளபதி 1624 ஆம் ஆண்டு தமிழரின் புத்தாண்டுத் தினமாகிய சித்திரை வருடப் பிறப்பன்று இடித்தழித்தான். அப்போது ஆலயத்திலிருந்த கல்வெட்டுச் செய்தியைப் பிரதிசெய்து போர்த்துக்கல் மன்னனுக்கு அனுப்பிவைத்தான். இந்தச் செய்தியில் "மனுராசா அல்லது மாணிக்கராசா என்னும் மன்னன் இலங்கையை ஆண்டான். அவன் கி.மு.1300 ஆம் ஆண்டு கோணேசர் கோவிலைக் கட்டினான் என்று கூறப்பட்டுள்ளது. (அஜுடா நூல் நிலையச் சுவடி "கொண்குவிஸ்ரா" பக்கம் 51).

இந்தப் புராதன கோவிலுக்குத்தான் குளக்கோட்டு மன்னன் புனருத்தாரணத் திருப்பணிகள் செய்வித்தான். சோழமன்னனாகிய வரராமதேவனுடைய மகன் குளக்கோட்டு மன்னன். தந்தையாரின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக குளக்கோட்டு மன்னன் இலங்கைக்கு வந்து கோணேசர் கோவிலில் திருப்பணிகள் செய்தான். குளமும் கோட்டமும் கொண்டதால் குளக்கோட்டு மன்னன் எனப் பெயர் சூட்டப்பட்டிருக்கலாம். இயற்பெயர் மறைந்து திருப்பணிச் சிறப்பால் காரணப் பெயர் நிலையாக வழங்கிவந்திருக்கலாம். குளக்கோட்டு மன்னன் கோவில் திருப்பணிகளை நிறைவேற்றியபின் கோவிலைப் பராபரிப்பதற்காக, இரண்டாயிரத்து எழுநூறு அவணம் நெல்விதைப்புத் தரையை உண்டாக்கினான். அவைகளுக்கு நீர் பாய்ச்சுவதற்காக அல்லைக்குளம், வெண்டரசன் குளம், கந்தளாய்க்குளம் என்பவற்றைக் கட்டினான். இந்த வயல் நிலங்களை வளப்படுத்தி, வேளாண்மை செய்து கோணேசர் கோவிலைப் பரிபாலனம் செய்ய அமைக்கப்பட்ட சட்டதிட்டங்களே கோணேசர் கல்வெட்டு. ஏடுகளில் இந்தக் கல்வெட்டு எழுதிவைக்கப்பட்டிருந்தது. இன்றும் அந்த ஏடுகள் பிரதிசெய்து வைக்கப்பட்டிருக்கின்றன.

கோணேசர் கோவிலுக்குத் தொழும்புகள் செய்வதற்காகவும், கோவில் நிலங்களில் விவசாயம் செய்வதற்காகவும் குளக்கோட்டு மன்னன் மருங்கூர், காரைக்கால், சிந்துநாடு என்னுமிடங்களிலிருந்து குடிமக்களையும் அவர்களைப் பரிபாலிக்கத் தனியுண்ணாப் பூபால வன்னிமையையும் இந்தியாவிலிருந்து கொண்டுவந்து கட்டுக்குளப் பற்று, கொட்டியாபுரப்பற்று, தம்பலகமப் பற்று என்னும் இடங்களில் குடியேற்றினான். அவரவர்கள் கோணேசர் கோவிலுக்குச் செய்யவேண்டிய பணிகள் எவையென்பதையும் குளக்கோட்டு மன்னன் திட்டம்பண்ணி வைத்தான். இந்தத் திட்டங்களைக் கூறுவது கோணேசர் கல்வெட்டு.

திருந்து கலிபிறந்து ஐநூற்றொருபதுதுடன்
இரண்டாண்டு சென்ற பின்னர்
புரிந்திடப மாதமதில் ஈரைந்தாந் தேதி
புணர் நந்நாளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்த புகழ் ஆலயமும் சினகரமும்
கோபுரமும் தேரூர் வீதி
பரிந்து ரத்ன மணிமதிலும் பாபநாசச்சுனையும்
பகுத்தான் மேலோன்.

குளக்கோட்டு மன்னன் கலியப்தம் ஐநூற்றுப் பன்னிரண்டில் கோணேசர் கோவில் திருப்பணி செய்த வரலாறு இக்கல்வெட்டுப் பாடலில் கூறப்பட்டிருக்கிறது. இவ்வாறே ஆலயக் கடமைகளை யார் யார் எவ்வாறு செய்யவேண்டுமென்றும், அவர்களுக்குரிய மானியங்கள் எவையென்றும், செய்யத் தவறும் பட்சத்தில் அவர்களுக்குரிய தண்டனைகள் எவையென்றும் கோணேசர் கல்வெட்டில் கூறப்பட்டிருக்கின்றது.

போர்த்துக்கீசரால் கோணேசர் கோவில் அழிக்கப்படும்வரை கோணேஸ்வரத்தில் கல்வெட்டின் பிரகாரம் யாவும் நடைபெற்று வந்தன. போர்த்துக்கீசர் கோவிலை அழித்தபோது ஆலயத்திலிருந்த திருவுருவங்களை அங்கிருந்த குருமாரும், தொண்டர்களும் எடுத்துச் சென்று நிலத்திலும், குளங்களிலும் மறைத்து வைத்தார்கள். அவ்வாறு கொண்டு செல்லப்பட்ட திருவுருவமொன்று தம்பலகாமம் ஆதிகோணைநாயகர் கோவிலில் வைக்கப்பட்டிருக்கின்றது. அன்று தொடக்கம் இந்தக்கோவிலுக்குரிய மானியங்களெல்லாம் தம்பலகமம் ஆதிகோணைநாயகர் ஆலயத்தில் உடமைகளாக ஆட்சியிலிருந்து வருகின்றது. கோணேசர் கல்வெட்டில் கூறப்பட்டுள்ள தொழும்பு முறைகள் சிறிய மாற்றங்களுடன் தம்பலகமம் ஆதிகோணைநாயகர் கோவிலில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

1950 ஆம் ஆண்டு நிலத்திலிருந்து அற்புதமாக வெளிப்பட்ட ஐந்து அழகிய திருவுருவங்களையும் டாக்டர் திரு. பாலேந்திரா என்பவரும், திருக்கோணமலைச் சைவப் பெரியார்களும் இலங்கையெங்கும் ஊர்வலமாக எடுத்துச் சென்று மீண்டும் கோணேஸ்வரத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட ஆலயத்தில் வைத்து வழிபட்டு வந்தார்கள்.

கோணேசர் ஆலயப் புனருத்தாரணச் சபையொன்று அமைக்கப்பட்டது. அதில் திருக்கோணமலைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.சிவபாலன் தலைவராகவும், திரு. ந.இ. இராஜவரோதயம், திரு.ரி.ராஜரெட்ணம். திரு.எஸ்.எம்.மாணிக்கராஜா, திரு.ரி.சுப்பிரமணியம், திரு.சி.ஆறுமுகம், டாக்டர் டபிள்யு.பாலேந்திரா, திரு.கே.சரவணமுத்து, திரு.வி.இராமலிங்கம், திரு.ரி.ஏகாம்பரம், சிவஸ்ரீ. சிவசுப்பிரமணியக் குருக்கள், சிவஸ்ரீ.சபாபதி ஐயர் என்பவர்கள் நிர்வாக உறுப்பினர்களாகவும் இருந்து கோவில் திருப்பணியை ஆரம்பித்தார்கள். 1963ஆம் ஆண்டு திருப்பணி வேலைகளை நிறைவேற்றி அப்போது திருக்கோணமலைப் பாராளுமன்ற உறுப்பினராயிருந்த திரு.ந.இ. இராஜவரோதயம் அவர்கள் தலைமையில் முதலாவது கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. அதன்பின் டாக்டர் எஸ்.சித்திரவேலு அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையில் பரிபாலன சபை ஆலயத்தைப் பரிபாலித்து வந்தது. பதினெட்டு வருடங்களின் பின்னர் 1981ஆம் ஆண்டு திருக்கோணமலைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. இரா.சம்பந்தன் அவர்களின் அனுசரணையோடு அமைக்கப்பட்ட கோணேசர் ஆலயப்புனருத்தாரண சபையின் உதவியுடன் திரு.மு.கோ. செல்வராசா (ஜே.பி.யு.எம்.) அவர்களைத் தலைவராகவும், பண்டிதர்–சைவப்புலவர் திரு.இ. வடிவேல் அவர்களைச் செயலாளராகவும் கொண்ட கோணேசர் ஆலய பரிபாலனசபை இரண்டாவது மகாகும்பாபிஷேகத்தை நடத்தியிருக்கின்றது.

ஆகமசாஸ்திர முறைப்படி அமைக்கப்பட்ட அழகிய தூபிகளைக் கொண்ட ஆலயத்தின் கருவறையில் காசியிலிருந்து கொண்டுவரப்பட்ட பாணலிங்கமும், அழகிய கோபுரத்தையுடைய அம்பாள் கோவில் கருவறையில் மாதுமையம்பாள் சிலாவிக்கிரகமும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. ஸ்நபன மண்டபத்தில் சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமானும், வசந்த மண்டபத்தில் வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணியரும், சந்திரசேகர், சோமாஸ்கந்த மூர்த்தங்களும் எழுந்தருளி மூர்த்திகளாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. பிள்ளையார், சுப்பிரமணியர், நவக்கிரகங்கள், சூரியன், சந்திரர், நாகதம்பிரான், வைரவர், சண்டேஸ்வரருக்குத் தனித்தனி கோவில்கள் அமைக்கப்பட்டுள்ளன. ராஜகோபுரம் புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்றது. யாகசாலை, பாகசாலை, யாவும் முறைப்படி அமைக்கப்பட்ட அற்புதக் கோவிலை கோணேசர்மலை தாங்கித் தவம் செய்துகொண்டிருக்கின்றது. சமுத்திராதேவியானவள் கோணமாமலையைச் சுற்றி வளைத்துநின்று தனது அலைகளாகிய கரங்களால் ஆனந்தமாகச் சீராட்டிக் கொண்டிருக்கின்றாள். இப்படியான இயற்கையழகு தவழும் ஒரு அற்புதமான ஸ்தலத்தை வேறு எங்கேயும் பார்க்கமுடியாது. சுவாமிபெயர்–கோணேஸ்வரர், அம்பாள் பெயர்– மாதுமை, ஸ்தலவிருட்சம் – கல்லால்.

மலையுச்சியில் கடலோரமாக சிதாகாச வெளியில் மலைப்பூசை நடைபெறுகின்றது. போர்த்துக்கீசர் கோவிலை அழித்தபின்னர், பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் அவர்கள் அளித்த வழிபாட்டுச் சுதந்திரத்தினால் இந்த மலையுச்சியில்தான் இந்துக்கள் பூசைகளை நடத்திக் கொண்டு வந்தார்கள். இப்போதும் இந்தப் பூசை நடைபெற்ற பின்னர் தான் ஆலயத்தில் ஏனைய மூர்த்திகளுக்குப் பூசைகள் நடைபெற்று வருகின்றன. தினமும் ஆறுகாலப் பூசையும், பங்குனி உத்தரத்தன்று கொடியேறி பதினெட்டு நாட்களுக்கு மகோற்சவமும் நடைபெற்று வருகின்றது. மலையிலிருந்து கீழே இறங்கிச் சென்று தீர்த்தமாடவேண்டும். தீர்த்தோற்சவம் புதுமையான முறையில் நடைபெறுகின்றது. ஆலயத்திற்குரிய தீர்த்தக் கேணியைப் போர்த்துக்கீசர் அழித்துவிட்டார்கள். அதற்கு அருகிலிருந்த பாபநாசத்தீர்த்தக் கிணற்றிலிருந்து நீரிறைக்கும் இயந்திரத்தின்மூலம் தீர்த்தத்தை வெளிக்கொணர்ந்து மழைபோல் பொழிவார்கள். மக்கள் அந்தத் தீர்த்தத்தில் தோய்ந்து தீர்த்தமாடிப் பாபநாசம் செய்து கொள்வார்கள். இந்துக்களுக்குரிய சகல வழிபாட்டுப் பூசைகளும் இங்கு நடைபெற்று வருகின்றன.

சிவராத்திரிக்கு முந்தின பதினைந்து நாட்களும் சிவலிங்கப் பெருமானுக்கு அபிஷேகங்கள் நடைபெற்று சிவராத்திரி விழா மிகச் சிறப்பாக அனுஷ்டிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவராத்திரிக்கு அடுத்த நாள் மாதுமையம்பாள் சமேத கோணேசப் பெருமான் நகர்வலத்திற்குப் புறப்படுவார். இரவில் நகர்வலம் நடைபெறும். முதலாம் நாள் விஸ்வநாதசிவன் கோவிலிலும், இரண்டாம் நாள் ஸ்ரீபத்திர காளியம்பாள் கோவிலிலும் தங்கியிருந்து மூன்றாம் நாள் தனது ஆலயத்திற்கு எழுந்தருளுவார். சிவன்கோவிலிலும், ஸ்ரீபத்திரகாளியம்பாள் கோவிலிலும் கோணேசப்பெருமானைப் பத்தி சிரத்தையுடன் சோடசோபசார மரியாதைகளுடன் வரவேற்று ஆலயத்தில் வைத்து அபிஷேகாதிகர்மங்களையும் பூசைகளையும் செய்வார்கள். நகர்வலத்தின்போது கோணேசப் பெருமான் திருக்கோணமலையிலுள்ள ஆலயங்களுக்கெல்லாம் சென்று தரிசனம் கொடுப்பார். பெருமான், தான் நிலத்திலிருந்து வெளிப்பட்ட கிணற்றுக்கும் சென்று அந்தத் தீர்த்தத்தை ஆசீர்வதிப்பார். அங்கங்கெல்லாம் உபசரணைகளும் பூசைகளும் நடைபெறும். இந்த நகர்வல விழாவைப் போல் வேறெங்குமே நடைபெறுவதாக யாமறியோம். மூன்று நாட்களும் மக்கள் பக்திவெள்ளத்தில் களித்திருப்பார்கள். ஒவ்வொரு வீட்டு வாசலிலும் கும்பம் வைத்து மங்களவிளக்கேற்றி வரவேற்று வழிபடுவார்கள். எல்லா வீதிகளையும் பந்தர்கள் அமைத்து மகர தோரணங்களினால் அலங்கரித்திருப்பார்கள். இந்திரவிழா நடைபெறுவதுபோல சாதி, மத, பேதமின்றி ஒரு தேசிய விழாவாக இது நடைபெற்று வருகின்றது.

ஆடியமாவாசைக்குச் சுவாமி மலையிலிருந்து இறங்கிக் கடற் தீர்த்தமாடச் செல்வார். அன்று திருக்கோணமலையிலுள்ள பல கோவில்களிலிருந்தும் சுவாமிகள் எழுந்தருளிவந்து கோணேசப் பெருமானோடு சேர்ந்து தீர்த்தமாடுவர். இந்தத் தீர்த்தக் கடற்கரையில் மகாமகத்திற்கு திருகோணமலையிலுள்ள எல்லா ஆலயங்களிலிருந்தும் சுவாமிகள் எழுந்தருளி வந்து மகாமகத் தீர்த்தோற்சவம் நடைபெறும். கோணேசப் பெருமானுடைய மகோற்சவமுடிவில் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. தெப்போற்சவத்திற்குச் சுவாமி மலையிலிருந்து கீழிறங்கிவந்து தெப்பத்தில் ஆரோகணித்து, கோணமாமலையைச் சுற்றிச் சமுத்திரத்தில் வலம்வருவார். சமுத்திரக்கரையில் இரவு பூராவுமிருந்து அடியார்களுக்கு அருள்புரிவார். கலைநிகழ்ச்சிகள் ஒருபுறம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கும். அடுத்தநாள் காலையில் சுவாமி எழுந்தருளிவந்து ஆலயத்தை அடைவார். மாதுமையம்பாளுக்குத் தனிமகோற்சவம் நடைபெற்று வருகின்றது. ஆடிப் பூரத்தைத் தீர்த்த தினமாகக் கொண்டு அதற்கு முந்திய பத்து நாட்களும் உற்சவம் நடைபெற்று வருகின்றது. நவராத்திரியில் ஸ்ரீ சக்கர பூசையும், திருவெம்பாவைக் காலத்தில் ஆதிரையானுக்குப் பெருவிழாவும், நடைபெறுகின்றது. சாதி, மத, பேதமற்று யாவரும் வந்து வழிபட்டு இஷ்ட சித்திகளைப் பெறும் புனித கோணேஸ்வரம் அருணகிரிநாதர் கூறியதுபோல "நினைத்த காரியம் அனுக்கூலமே தரும்" பெருமானாகிய மாதுமையம்பாள் சமேத கோணேசப் பெருமானால் சிறப்புற்று விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேசர் திருவூஞ்சற் பதிகம்

ஆக்கியோன்:
சைவப்புலவர் பண்டிதர் இ.வடிவேல் அவர்கள்
திருக்கோணமலை

## காப்பு

வேழ முகத்தவனே வினாயகனே நின்னடியில்
ஏழையேன் வீழ்ந்து இறைஞ்சுகின்றேன்– ஆளுடைய
பிள்ளைக் கவியமுதைப் பெற்று திருக்கோணேச
வள்ளல்தனக் கூஞ்சல் வழக்கு

## நூல்

சீர்மேவு மாமறைகள் கால்களாகச்
செய்ய திரு ஆகமங்கள் விட்டமாக
பார்மேவு பைந்தமிழ்சேர் பண்களோடு
பகரரிய திருமுறைகள் வடமதாக
ஏர்மேவும் ஓங்காரப் பீடமீதில்
ஏழிசையின் மலர்தூவி இனிது போற்றக்
கார்மேவு தென்கைலைக் கோடு தன்னில்
மாதுமைசேர் கோணேசர் ஆடீரூஞ்சல்.

தண்மதியின் ஒளிதவழும் கோனைக் குன்றில்
தவயோக முனிவர்களின் தேசுதங்க
விண்ணவர்கள் சூழ்ந்திருந்து வேதமோத
விஞ்சையர்கள் வேதமொடு கீதம் பாட
இன்னிசை நாரதர் வீணைதன்னிற் கூட்ட
எழிலுடனே நந்தி மத்தளமுங்கொட்ட
மண்ணிலுயர் கோணைநகர் தன்னில் மேவும்
மாதுமைசேர் கோணேசா ஆடீரூஞ்சல்.

திருமகளும் கலைமகளும் வடந்தொட்டாட்ட
செய்ய புவிமகள் கவரி வீசி நிற்க
கருமேக வண்ணனொடு வருணன் வாயு
கணநாதர் இந்திரன் கைகூப்பி நிற்க
அருள்மேவும் அரமகளிர் பரதமாட
ஆதிசேடனு மருகே அமர்ந்து நோக்க
திருமேவும் தெக்காரும் மாகோணத்தில்
திகழ் கோணை நாதரே ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை மாவட்டத் திருத் தலங்கள்

அருக்கனொளி ஆழ்கடலின் மீதெழுந்து
அருட்கோணை நாதரடி தழுவி யோங்கச்
செருக்குடைய இராவணன் தென்கைலை தன்னைச்
சினங்கொண்டு வாளோச்சி எடுக்கும்போது
வெருக்கொடுமை தனைக்கரத்தா லணைத்துக்காலின்
விரலதனால் அடர்த்தவனுக் கருள்புரிந்த
மறக்கருணைத் திருக்கோணை நாதரே நீர்
மாதுமையோ டினிதிருந்து ஆடீரூஞ்சல்.

சினகரமும் கோபுரமும் தேரூர் வீதி
செய்யதிரு மண்டபமும் மதிலும்கட்டி
கணபதிக்கும் கந்தனுக்கும் கோவில் கொண்டு
கருவாய வல்வினைகள் அறுக்கவல்ல
பவநாசம் செய்யுமுயர் பாவநாசத்
தீர்த்தமுடன் திருப்பணிகள் பலவும் செய்து
சிவநேயக் குளக்கோட்டன் கோயில் மேவும்
செய்யதிருக் கோணேசா ஆடீரூஞ்சல்.

அகத்தியரும் அருணகிரிநாதர் ஞான
சம்பந்தர் துதித்த அருட்கோணை நாதா
இகத்திலுனை இதயத்தில் இருத்து வோர்க்கு
இகபரபோகம் அருளும் ஈசா அன்பர்
பவத்தொடக்கை அறமாற்றும் பாவ நாசா
பரஞ்சுடரே பதமுத்தி தன்னையீந்து
சிவத்துவத்தில் சேர்த்தெம்மை ஆளுங் கோணைத்
தேவாதி தேவரே நீர் ஆடீரூஞ்சல்.

ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில்
அரியதிருக் கோணமலை நாதர் தன்னைக்
காழிவளர் பிள்ளைமனம் கசிந்து பாடக்
கஜபாகு மன்னனகங் கரித்து வந்து
ஊழ்வினையால் இருகண்ணும் இழந்து மீண்டும்
உயர்திரு வெண்ணீறணிந்து உய்திபெற்றான்
சோழனொடு பாண்டிய மல்லவரும் போற்றும்
கோணைநகர்க் கரசேநீர் ஆடீரூஞ்சல்.

சைவநெறி தழைத்தோங்கத் தமிழுமோங்கத்
தவமுனிவருள மோங்கத் தர்ம மோங்கத்
தெய்வ மணந் திகழ்ந்தோங்கத் திருவுமோங்கத்
தேவார இசையோங்க வேத மோங்க
உய்யுநெறி கொண்டு குளக்கோட்டு மன்னன்
உளமோங்க எடுத்ததிருக் கோயில் தன்னை
பொய்மாயப் போத்துக்கீ சர்செய் தீதைப்
புன்னகையால் ஏற்றவரே ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணேசர் திருவூஞ்சற் பதிகம்

மன்றில் வளர் மாமணியே ஆடீரூஞ்சல்
மந்திரமும் தந்திரமும் மருந்து மாகிக்
குன்றில் வளர் குருமணியே ஆடீரூஞ்சல்
குகனையருள் குலமணியே ஆடீரூஞ்சல்
துன்றுபிடி யன்னநடை மாதுமையாம்
அம்சகமனாம்பிகை யோடாடீரூஞ்சல்
இன்றெமக்கும் இருள்கடிந்து அருள்செய்கின்ற
இறையவரே கோணேசா ஆடீரூஞ்சல்.

திங்களொடு கங்கை வளர் சடையு மாடத்
திகழ்ந்தோங்கு சர்ப்போப வீதமாடி
நங்கை மாதுமையாட நயனமாட
நவமணிக் குண்டலமாடக் குழையுமாட
அங்கமெலாங் குழைந்தபய வரமாட
அடியிணையிற் சிலம்பாடக் கழலுமாட
எங்கள் மனம் களித்தாட இரங்கும் கோணை
இறையவரே கோணேசா ஆடீரூஞ்சல்.

### வாழி

அஞ்செழுத்து மந்திரமும் நீறும் வாழி
அரனடியார் அந்தணர்கள் ஆவும் வாழி
பிஞ்செழுத்தாம் சிவப்பழமாம் பொருளே வாழி
பிரபஞ்ச மனைத்துமருள் பெற்று வாழி
மஞ்சுதவழ் மாமலையில் மழையும் வாழி
மன்னரொடு மக்கள்நலம் பெற்றுவாழி
எஞ்சலிலாத் தமிழ்வாழி சைவம்வாழி
இறைவனடியா ரெல்லாம் வாழி வாழி.

### எச்சரிக்கை

திருவார் கோணைப் பதிமேனிய தேவா எச்சரிக்கை
தேவிமாதுமையாளொடு வருவாய் எச்சரிக்கை
மருவார் கொன்றை மதிசூடிய மகிபா எச்சரிக்கை
அரனே திருக் கோணேஸ்வர நாதா எச்சரிக்கை.

மானோடொரு மழுவேந்திய கையாய் எச்சரிக்கை
மதியோடுயர் நதிதங்கிய சடையாய் எச்சரிக்கை
வானோர்முடி தவழும்திரு அடியாய் எச்சரிக்கை
கோனார் தசமுகனார்க்கருள் கோவே எச்சரிக்கை.

உமைமாதொடு உயர்கோணையில் உறைவாய் எச்சரிக்கை
உருவாய் அருவுருவாய் நிறைதிருவே எச்சரிக்கை
எமையாண்டருள் கோணாசல ஈசா எச்சரிக்கை
எங்கள் உயிர்க்குயிராய் வரு குருவே எச்சரிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லாலி

லாலி லாலி லாலி லாலி லாலி
ஆலமுண்ட நீலகண்ட லாலி லாலி

கோணமலை மேவியமர் கோவே லாலி
கொண்டல்வண்ண மாதுமை சேர் தேவே லாலி ( லாலி)

தத்துவங் கடந்தவரே லாலி லாலி
முத்திதரும் வித்தகரே லாலி லாலி (லாலி)

சோதி வடிவானவரே லாலி லாலி
ஆதிக்கோணை நாயகரே லாலி லாலி (லாலி)

## பராக்கு

அரியயனும் அறியாத ஆதி பராக்கு
ஆதியந்தமில்லா அரனே பராக்கு
திரிபுர மெரித்தருளும் தேவே பராக்கு
தென்திசைக் கோணைவளர் சிவமே பராக்கு.

திருமுறைகள் வேதமும் ஆனாய் பராக்கு
திகழ்சைவ ஆமகத்துறைவாய் பராக்கு
அருள்புரிந்தடியவரை ஆள்வாய் பராக்கு
அகிலாண்டநாயகத்தரனே பராக்கு.

காலனைக் காலாற் கடிந்தாய் பராக்கு
கண்ணப்பனுக் கருள் கடவுள் பராக்கு
ஆலமுண்டமரருக்கருள்வாய் பராக்கு
அடியர்துயர் தீர்த்தென்றுமாள்வாய் பராக்கு.

## மங்களம்

மங்களம் மங்களம் மங்களம்– ஜெயஜெய
மங்களம் மங்களம் மங்களம்

ஆதியந்தமில்லாத மாதுமையாள் பாகருக்கும்
ஐங்கரக்கடவுளுக்கும் ஆறுமுகவள்ளலுக்கும் (மங்)

சுத்தபரி பூரணர்க்கும் சோதி வடிவானவர்க்கும்
நித்திலங் கொளிக்கும் திருக்கோணமலை நாகருக்கும் (மங்)

தொண்டருக்கும் தாசருக்கும் தோத்திரம் செய் நேசருக்கும்
அண்டருக்கருளுமண்ணல் கோணமலை வள்ளலுக்கும் (மங்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணைநாயகர் பதிகம்

ஆக்கியோன்:
திருவாளர் வே.அகிலேசபிள்ளை அவர்கள் இயற்றியது.
திருக்கோணமலை

1. கடிகமழு மலர்பறித் தாகம விதியோ டனுதினமுங் கருணையோடு
படிமிசைநின் பதமதனை வேதியர் பூசிக்கவருள் பாலித்தாள்வாய்
பிடியனமென் நடைபாக மதின் மருவ மகிழ் பெரிது பூத்து
அடியவரை நிதங்காக்குந் திரிகோணச் சிலம்புறையு மாதிமூர்த்தி.

2. சந்ததமு நினதுபய பதமலரை வேதியர்கள் தான் பூசித்து
வந்தனை செய்திடக் கருணை வைத்தருள்வாய் குளக்கோட்டு மகிபற்குற்ற
பந்தவினை தனை நீக்கிப் பகரரிய முத்தியினைப் பரிவாயீயும்
அந்தமிகு வாரிதிசூழ் திரிகோணச் சிலம்புறையு மாதிமூர்த்தி.

3. பன்னரிய நினதுபைய பதமலரை வேதியர்கள் பரிவு கூர்ந்து
முன்னிறுவி யருச்சனை செய்திட வருள்வாய் மூவருக்குண் முதல்வனாக
வன்னமிகு குமரகுருபரவேளை விநாயகரை மகிழ்ந்து தந்த
அன்னநடை யுமைகூடத் திரிகோணச் சிலம்புறையு மாதிமூர்த்தி.

4. முப்புரிநூன் மார்பிலங்கு வேதியர்க னினதுபத முண்டகத்தை
எப்பொழுதும் பச்சிலைகொண் டிறைஞ்ச வருள்புரிந்திடு வாயிமயோருக்குத்
தப்ிதஞ்செய் திடர்விளைத்த வசுரணைவேல்கொடு தடிந்தோன்றன்னைத் தந்த
அப்புவலஞ் சூழ்ந்திலங்குந் திரிகோணச் சிலம்புறையுமாதி மூர்த்தி.

5. கஞ்சமல ரயன்முகத்தி லுற்பவித்த வேதியர்கள் கருணையோடு
மஞ்சிலகு நின்னுபைய மலரடி பூசிக்கவருள் வழங்குமையா
தஞ்சமின்றிப் பவக்கடலிற் கிடந்து வருந்திடுமடியார் தம்மைநோக்கி
அஞ்சலெனக் கரமீயுந் திரிகோணச் சிலம்புறையு மாதிமூர்த்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. மட்டவிழு மலரெடுத்து வேதியர்க ணினதுபய பதமதனைப் பரிவினோடு
நித்தியமு மருச்சனைசெய்திடக் கிருபை கூர்ந்தருள்வாய் நிகழ்த்தவொண்ணாச்
சக்தியுமை புடைமருவச் சந்ததமு மடியார்துயர் தன்னை நீக்கி
அத்திரியோர் தமைக்காக்குந் திரிகோணச் சிலம்புறையு மாதிமூர்த்தி.

7. சண்டனையோ ரன்பனுக்கா யுதைத்த நினதுபைய பதந்தன்னை நாளும்
பண்டையநின் மரபில்வரு வேதியர் பூசிக்கவருள் பாலித்தாள்வாய்
மிண்டுசெயு மசுரர்களைக் கண்டதுண்டஞ்செய்த வைவேலவனைத் தந்த
அண்டர்களு மறியவொணாத் திரிகோணச் சிலம்புறையு மாதிமூர்த்தி.

8. பக்தியுடன் வேதியர்க ணினதுபய பதமதனைப் பரிவினோடு
நித்தியமு மருச்சனைசெய்திடச் கிருபை கூர்ந்தருள்வாய் நிகழ்த்தவொண்ணாச்
சக்தியுமை புடைமருவக் சந்ததமு மடியார்துயர் தன்னை நீக்கி
அத்திரியோர் தமைக்காக்குந் திரிகோணச் சிலம்புறையு மாதிமூர்த்தி.

9. பற்றுடனே பச்சிலைகள் பறித்து நிதம் வேதியர்கள் பாங்கினின்று
குற்றமொரு சிறிதுமிலாப் பூசனைகள் செய்யவருள் கூருமையா
பொற்புலவு மாதுமையாள் புடைமருவ விடையில் வரும் புனிதா மிக்க
அற்புதங்க ளமைந்திலங்குந் திரிகோணச் சிலம்புறையு மாதிமூர்த்தி.

10. அம்புவியை யரசுசெய்யு நீசமகிபாலர்கள் அக்கிரமமாக
வம்பவிணின் பதமலரை மறையவர்கள் பூசனைபுரியாவகை தடுத்தார்
எம்பரனே யிவர்கள் கொடுங் கட்டளைகளழிய வருளீந்துன் பாத
வம்புயக் காட்சியைத் தருவாய் திரிகோணச் சிலம்புறையு மாதிமூர்த்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவேட்டைத் திருவிருத்தம்-திருக்கோணேஸ்வரம்

1. திரு மருவு ரௌத்திரி உத்திரட்டாதி தேதி ஈரிரண்டு தன்னில்
செறிவு பெறு சனிவார நாளில் அமாவாசைத் திதியுறு தினத்தில்
செப்பரிய விந்திரனும் முப்பத்து முக்கோடி தேவரும் விரைந்து வந்து
தென் கைலைமீதிலுறை கோணேச நாதரின் செஞ்சரண மலரிறைஞ்சித்
தேவாதி தேவனே கோணையம் பதியிலுறு செய்ய சந்தன வனத்தில்
திரிலோகமஞ்சிடத் தக்கவோர் சூரகஞ் சேர்த்து லவுகின்றமையினால்
திகழு நற் சோலையையடைந்து சூகர மதைத் திரு வேட்டை யாடுதற்குத்
திருவருள் புரிந் தெழுந் தெம்முடன் வருகவெனத் தேவர்களிரங்கி நிற்க
மருமருவு மாதிரி தயாபரி கிரிபாகரி மனோன்மணி யகோரி வீரி
மறை புகழு மாமந்ர ரூபி திரிசூரி கவுமாரி கல்யாணி வாணி
மயிட சம்மாரி யோங்காரி றீங்காரி நன் மகேஸ்வரி மாதங்கி நீலி
மரகத நிறத்திமுக்கோண ஷட் கோணத்தி வயிரவி வராகி மாரி
வாலை திரிபுரை புவனை சுந்தரி பராபரி சுமங்கலி பர்வதவர்த்தினி
மாட்சியுறு மாதுமை விசாலாட்சி மீனாட்சி காமாட்சி கமலாசனாட்சி
மாணிக்கவல்லி நவகோணத்து மெல்லி ஐவர்க்கு மனையான நல்லி
வாமி யபிராமி சிவகாமி குறமாதுக்கு மாமி மகமாயி யாயி.

தருமருவு நாரி மௌனா க்ஷரி, சடா க்ஷரி சகல காரண வக்க்ஷரி
தண்மையுறு குமரகுரு பரமுருக குழகனைத் தந்து காத்திட்ட செல்வி
தற்பவனதாரி பரநாரி இமவானருள் செய்ய சக்தி பாண்டியகுமாரி
சங்கரி ருத்திராணி மலர்வேணி சுகபாணி சகல ஆகமபுராணி
தமணியப் பள்ளியறை தன்னில் நவரத்தினச் சப்பிர மஞ்சத்தின் மீது
தண்கமல விழிதுயிலு மாதுமைக் கிதுகதைதனைச் சற்றுமறிவியாமல்
தாரணியிலனுதினந் துதிசெய்யும் தாசர்க்குத் தண்ணருள் வழங்க வெண்ணித்
தங்கமிகு வலிமையுறு எறி ஈட்டி முதலான சகலவாயுதமு மேந்தி
கருமருவு சைவசமயஞ் செழித் தோங்கவும் கவினுலவும் அக்குமணியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதரிய ஐந்தெழுத்துஞ் சிறந்தொளிரவும் காசினியை யாளுமகிபர்
கவினுலவுசெங்கோல் தழைக்கவும் மடமாதர் கற்புநெறி மிக வளரவும்
கயலினங் குதிகொளும் வயல்கள் விளைவோங்கவும் காலமது தவறிடாமற்
காசினியில் மாதத்தில் மும்மாரி பெய்யவும் கன பசுவினம் பெருகவும்
காதலுறு மங்கையர்கள் வெண்கவரி வீசவும் கற்றவர்கள் புகழ் பேசவும்
கஞ்சமலர் அயனொடரி செஞ்சரன் இறைஞ்சிடுங் கர்த்தன டியவர்களுக்குக்
கதியருளு மீசனாம் கோணேச நாதர் சூகர வேட்டை யாடினரே.

குறிப்பு:- *இதனைப் பாடுபவர்கள் முதலிரண்டு வரிகளையும் திருவேட்டை நிகழுந் தினத்திற் கேற்ப வருடம், திதி, நட்சத்திரம், வாரம், திகதிகளைப் பொருத்தமாக மாற்றி படிக்கவும்.*

*திருக்கோணமலைப் பெரியார் திரு.வே.அகிலேசபிள்ளை அவர்கள் விஸ்வநாத சிவன் கோவிலுக்குப் பாடிய இப்பாடலை, அவருடைய வழித்தோன்றல், திரு.அ.கணேசலிங்கம் அவர்களின் அனுமதியுடன் சைவப்புலவர் பண்டிதர் இ.வடிவேல் அவர்களால் கோணேசப் பெருமானுக்குப் பொருத்தமாக மாற்றியமைக்கப்பட்டது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணசர் ஊஞ்சற் பதிகம்

## காப்பு

அஞ்சுகர ஆனைமுகத் தையன் பாதம்
அஞ்சலிசெய் தகத்திருத்தி ஏத்தல் செய்வாம்
தஞ்சமெழு தக்கணத்தைச் சமஞ்செய் வானாய்
சார்ந்ததவத் தமிழ்முனிவன் காணு மாற்றால்
அஞ்சநடை அம்பிகைபால் அமர்ந்து தோன்ற
அமைந்தமணக் கோலமதே காட்டி வைகும்
எஞ்சுதலில் கோணகிரி ஈசர்க் கூஞ்சல்
இயலிசைகள் இயலவினி திசைக்கு மாறே.

## நூல்

சீர்மறைகள் பவளக்கால், சிறந்த அங்கம்
திண்வயிர விட்டம், அருட் சிவநூல் தாமே
ஏர்மலியும் முத்தவடம், இயலோங் காரம்
எழிலார் பொற் பலகையிசை ஊஞ்சல் ஏறிப்
பார்முகடாம் பனிவரையோன் பயந்த பாவை
பயிலன்ன நடையன்னை பாங்கே மேவக்
கார்வளர்தென் கயிலையெனும் கோணை மேவும்
கல்யாண சுந்தரரே ஆடீர் ஊஞ்சல்.

கதிர்மதியம் கவிகைகொளக், கமலம் மேவும்
காரிகையார் கவரிகொள, வருணன் காலோன்
கதிர்விரியும் வட்டங்கால் பற்றக், கஞ்சன்
கானமறை வீணைகடம் கலந்து விம்ம
முதிர்மதுர மங்கலங்கள் முழங்க எங்கும்
முற்றாத முலையன்ன நடையாள் கூடக்
கதிதருதென் கயிலையெனும் கோணை நாத
கல்யாண சுந்தரரே ஆடீர் ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை மாவட்டத் திருத் தலங்கள்

அந்தணரும் அருந்தவரும் அயல்நின் றேத்த,
அயனரிநா ராயணர்கள்அமரர் போற்ற,
இந்திரைநா மகளிமையோர் மகளிர் வாழ்த்த,
இருநிலத்து மகளிர்திரு விசைப்பாப் பாட,
சந்தமிசை தமிழ்வேதம் வல்லார் சாற்ற,
சதுர்மறையே ழிசையோடு சதுரர் ஓத
கம்சகம னாம்பிகைபாற் கலந்து வைகக்
கயிலாயக் கோணேச ஆடீர் ஊஞ்சல்.

தருக்குடைய தசமுகனார் எடுக்க வெற்பைத்
தழுவ உமை அச்சமொடு தாளால் ஊன்றிச்
செருக்குடைய முடிதோள்கள் சிதையச் சென்றே
சிவமுனிவா கீசருரை சிலங்கொண் டன்னான்
இருக்கினிசை இசைப்பவினி தருள்கள் ஈந்தே
எழிற்கோணா சலத்தன்ன நடையாள் சேரத்
திருக்கயிலை அமர்ந்ததிருக் கோலத் துற்ற
தேவாதி தேவவினி தாடீர் ஊஞ்சல்.

சேடனிடங் கால்பறித்து வீசச் சேர்ந்து
திருக்கயிலைச் சிகரமதாய் அகத்தி யன்பின்
சேடனைரா வணன் சோழ ராம தேவன்
சேயான குளக்கோடன் கஜபா கென்போன்
சோடனையும் கயல் சூட்டும் பாண்டி வேந்தன்
சுகுணஜெக ராஜசே கரனாச் சொற்றோர்
ஈடிணையில் திருப்பணிகொள் இறைவ ராஜ
ராஜேசு வரஉமையோ டாடீர் ஊஞ்சல்.

இருவினையால் இருண்மலத்தோ டியாத்து வீழ்த்த
இரும்பிறவிக் கடலிடைநின் றேற லுற்றோம்
இருவினையுங் கழல இருண் மலவேர் இற்றே
இறந்துபட அருட்சத்தி நிபாதம் எய்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணசர் ஊஞ்சற் பதிகம்

குருவினைமுன் கொண்ட சிவ போதத் தோடும்
குறித்தவிளை வாயசிவ யோகங் கூடத்
திருமலையிற் சிரோமணியே உமையாள் சேரத்
திருவடியெம் சிரமணிசெய் தாடீர் ஊஞ்சல்.

அருவமுமாய் அருவுருவாய் உருவந் தானாய்
அருளிலய போகஅதி காரங் காட்டி
உருவமுறு முயிர்க்குணர்வாய் வேறாய் ஒன்றாய்
உடனாகி அருக்கனொளிக் குவமை யாகிப்
புரிவதெலாம் புரிந்துபுண ராத பூட்கைப்
புனிதவருட் பூரணரே புனிதை கூடத்
திருமலை சேர் சிவக் கரும்பே அடியேம் உய்யத்
தீஞ்சாறு சிறந்தொழுக ஆடீர் ஊஞ்சல்.

கூற்றூருக் கணித்தாய்ச்செந் தமிழ்கூ றூராய்க்
குணக்கொளிகள் ஒளி கொளற்காய்க் குணத்த தென்றோ
மாற்றூராம் கடவூர்மாண் கயிலை காசி பாவநாசம்
மதுரைதிரு மன்றாரூர் காஞ்சி என்னும்
வேற்றூரில் பாவநாசசுனைத் திருமலையே விரும்பி மேவும்
விடங்க அன நடையன்னை இடப்பால் மன்ன
ஏற்றூரும் இறைவகுளக் கோட்டன் பூவாய்
இணைய இணை யடியீந்தீர் ஆடீர் ஊஞ்சல்.

மலைக்குறவி மாட்டுக்கோன் தங்கை மேலும்
வலைஞர்மகள் தன்மேலும் மாட்சி யாளோ
மலைக்குறவ காடுகடல் இருபால் மன்ன
மறந்தவற்றைத் திருமலைமேல் மகிழ்ந்து வாழ்வீர்
கலைக்குருவு தருநடனம் கனக மன்றில்
காட்டுமருட் காரணரே அம்மை யோடும்
தலைக்குறவு தருந்தாளீர் ஏழூற் றாடித்
தளையறவும் தலைப்படவும் ஆடீர் ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவமறிந் துமிழ்ந்தூனோ டம்போ டேந்தும்
பருவில்லோ டியைதிண்ணர் படிவம் போன்றே
பருவ மழை திருமலைவாய் உமிழ்நீர் பெய்யும்
பண்பதனாற் காளத்திப் படியே தோன்றும்
திருவரையில் பாவநாசமுடன் ஏழ்தீர்த்தம் சிறந்த தெய்வச்
சிகாமணியே அன்னநடைத் தேவி சேரக்
கருவழியில் வீழாமல் எம்மைக் காக்கும்
கல்யாண சுந்தரரே ஆடீர் ஊஞ்சல்.

வார்குழலும் வளர்சடையும் மயங்கி ஆட
மன்னுதிரி நயனவருள் மலர்ந்தே ஆட
வார்குழையுங் குண்டலமும் வயங்கி ஆட
மணிவடமும் அக்கமணி வடமும் ஆட
ஏர்குலவு பட்டிசைதோ லுடைகள் ஆட
இணையடியிற் சிலம்புகழ லிசைந்தே ஆட
ஈர்வடிவி னோருருவீர் ஆடீர் ஊஞ்சல்
ஏழுற்றுக் கோணேச ஆடீர் ஊஞ்சல்.

*ராஜேசுவரி ராஜகோணேச ஆடீர் ஊஞ்சல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழி விருத்தம்

வாழியவே அஞ்சநடை பாகத் தத்தர்
வாழிதிரு மலையெழு தீர்த்தம் ஈழம்
வாழியவான் அந்தணரான் அரசும் நன்றே
வாழிமழை பொழியவளம் சுரந்து ஞாலம்
வாழிசுக முடன் மக்கள் தீங்கு நீங்க
வாழியவை திகசைவம் தமிழும் வாழ்க
வாழிதிரு ஐந்தெழுத்தும் நீறும் என்றும்
வாழிதிரு மலையரனார் அடியார் எல்லாம்.

## எச்சரிக்கை

ஆனைம்முக அறுமாமுகர்க் கத்தா எச்சரிக்கை
அன்னநடை உமைபால் மகிழ் ஐயா எச்சரிக்கை
மானைம்மழு வுடனேந்திய வரதா எச்சரிக்கை
மன்றாடிய மருந்தேமணி மிடறா எச்சரிக்கை.

தலையிற்றலை மாலைதரி தலைவா எச்சரிக்கை
தசமாமுகன் தருக்கோட்டிய தாளா எச்சரிக்கை
மலையின்மலை போன்மாணிக்க மலையே எச்சரிக்கை
மறலிம்மற மறமாற்றிய வலவா எச்சரிக்கை.

வில்லாமலை துணையேந்திய விகிர்தா எச்சரீக்கை
விஜயன்றனி வில்லாண்மை கொள் விஜயா எச்சரிக்கை
இல்லாமலை மகளைக் கொளும் இனியாய் எச்சரிக்கை
எமையாண்டருள் கோணாசல ஈசா எச்சரிக்கை

## பராக்கு

திங்களணி செஞ்சடைய தேவா பராக்கு
தினகரனில் ஒளிமிக்க தேசா பராக்கு
அங்கமல அயன்சிரங்கொள் கரனே பராக்கு
அரிநார ணன்பணியும் அரனே பராக்கு.
அன்றால நீழலமர் குருவே பராக்கு
ஆலாலம் உண்டவமு துருவே பராக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை மாவட்டத் திருத் தலங்கள்

அன்றால வனத்தாடும் ஐயா பராக்கு
அன்பால யத்தமரும் மெய்யா பராக்கு.

வஞ்சநடை யார்பாலில் வாராய் பராக்கு
வாய்மைநெறி வாழவரந் தாராய் பராக்கு
அஞ்சநடை அம்பிகைச மேதா பராக்கு
அரியதிரு மலையாளும் நாதா பராக்கு .

## மங்களம்

சுத்தபரி பூரணர்க்கு மங்களம் –துய்ய
சோதிவடி வானவர்க்கு மங்களம்
அத்தியுரி போர்த்தவர்க்கு மங்களம்– அன்னை
அம்பிகையொர் பாகருக்கு மங்களம்.

முப்புரமும் எய்தவர்க்கு மங்களம்– பாசம்
மூன்றுமறச் செய்பவர்க்கு மங்களம்
எய்ப்பினில்வைப் பாயவர்க்கு மங்களம் –யாவும்
ஈன்றவருட் டாயவர்க்கு மங்களம்.

வீணைவல வித்தகர்க்கு மங்களம்–நல்ல
வீடுதரு முத்தருக்கு மங்களம்
கோணமலை அண்ணலுக்கு மங்களம்– செய்ய
கோதில்மணி வண்ணருக்கு மங்களம்.

*திருக்கோணேசர் திருவடி சரணம்*
*திருமலையான் திருவருளே துணை.*

ஆக்கியோர்கள்:
அ-நாராயணசாமிக்குருக்களின்
உதவியுடன்,
ச. சுப்பிரமணியம் பண்டிதர் அவர்கள்...
ஆவரங்கால் , புத்தூர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பிலாக் கோணமலை அப்பா

*கழகப்புலவர்*
திரு.பெ.பொ.சிவசேகரனார் அவர்கள்
*திருக்கோணமலை*

கருணையங் கடலே அரிய
கற்பனை தனக்கு மெட்டாப்
பெருமையே பெருமைக் கெல்லாம்
பெருமையாய் வளர்ந்து நின்ற
அருமையே உரிமை யோடெம்
அடியவர் சொரியுங்கண்ணீர்
உருவமாய் அருளுங் கோணை
ஒருவனே வாழ்க நீயே.

உன்னருள் பெற்று நின்றுன்
அருட்புகழ் பாடும் பிள்ளை
பன்னரும் பதிகம் பாடி
பரவினான் தமிழில் கோணை
அண்ணல்உன் பெருமை கேட்ட
அளவிலே உருகி உள்ளம்
உன்னடிக் கன்பு செய்ய
அறிகிலான் அறிவ தென்றே.

பொய்குடி களவுசூது
புரிகொலை பெருகி இந்த
வையகம் அடவி காடாய்
மக்களும் விலங்காய் மாறி
வெய்துயர்க் கடலில் வீழ்ந்து
வீயவோ பிறந்தார் வீணே
உய்நெறி இலையோ இலையோ
ஒப்பிலாக் கோணை அப்பா.

கோண நாயகனே போற்றி
கோதிலா அமுதே போற்றி
ஆணவ மழிய வாழ்த்தி
அகங்குழைந் தழுவார்க் கிரங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானமா மழையே போற்றி
நாவலர் கருத்தில் நாவில்
ஊனமா நடனம் ஒய
உவந்தருள் அறிவே போற்றி.

மந்திரவடிவாய் வந்து
மலங்களைந் தருள்வாய் போற்றி
ஐந்தெழுத் துருவாய் எண்ணி
அறிபவர்க் கருள்வாய் போற்றி
முந்திவந் தடியார்க் கருளும்
மூவருள் முதல்வா போற்றி
சிந்தனைச் செல்வர் ஓம்பும்
செந்தமிழ்ச் செல்வா போற்றி.

கல்லினுள் மறைந்து நின்று
கரங்குவித் திறைஞ்சு வார்க்கு
நல்லருள் சுரக்கும் கோண
நாயக மணியே போற்றி
தில்லையில் நடன மாடும்
சிதம்பரக் கனியே போற்றி
பல்லுயி ருள்ளுஞ் சென்று
பயின்றருள் பதமே போற்றி.

முருகனை மடியில் வைத்து
முத்தமிழ் மழலை கேட்டு
பருகிய உமையாள் குழைந்து
பான்முலை சுரக்கத் தாங்கா
தருகினில் சென்று மகனின்
திருமுகந் தழுவிக் கொஞ்சி
ஒருமுலை கையால் திறந்தன்
றூட்டிய எந்தாய் போற்றி.

அமுதினை வேண்டி ஐய
ஆர்வத்தால் சூழ்ந்து கடலை
இமையவர் கடையப் பொங்கி
எழுந்தவக் கொடிய நஞ்சுண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டமைவிலா தவரைக் காத்த
அருளும் எங்கே எங்கே
உமையொரு பாகா கோண
மாமலை அமர்ந்த கோவே.

பொய்நெறிப் புலமை யாளர்
புரிதரு கொடுமைக் கஞ்சி
மெய்நெறி பற்றி வாழ்ந்த
மங்கையர்க் கரசி வேண்டப்
பையவே சென்று மதுரைப்
பாண்டியர்க் காக வென்றான்
செய்தமிழ் உவந்து கேட்பார்
சிலம்பொலி முழங்கக் காண்பார்.

நீறணி தடந்தோள் வாழ்க
நிரைகழல் வாழ்க, கங்கை
ஆறணி மகளும் வாழ்க
அருள்நெறி வாழ்க, ஐயன்
ஏறிய ஏறும் வாழ்க
ஏறணி கொடியும் வாழ்க
மாறிலா திலங்கை வாழ்க
வாழ்கசீர் வைய மெல்லாம்.

--------◇◇◇-------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோண நாயகர் ஊஞ்சல்

எண்ணாகி எழுத்தாகி இசையுமாகி
எம்பொருளுந் தானாகி எங்கும் நிறைந்து
விண்ணாகி வளியாகித் தீயு மாகி
வெள்ளமாய் மண்ணாகி வேறுமாகி
கண்ணாகிக் கருத்தாகிக் கசிந்துள் ளூறும்
கண்ணீரால் அருச்சிக்கும் அடியார் காண
உண்ணாடும் ஓங்கார ஒளியைப் போற்றி
உயர்கோண மலையீசன் ஊஞ்சல் சொல்வாம்.

மேன்மைகொள் சைவநெறி உலகில் ஓங்க
மெய்ஞ்ஞானத் துறையுலகில் மேலும் ஓங்க
நான்மறைகள் ஆகமங்கள் உலகில் ஓங்க
நல்லதிரு முறைகள் பன் னிரண்டு மோங்க
கோன்மைநெறி யுயர்ந்துலகில் அமைதி ஓங்க
குலமாதர் கற்புநெறி உலகில் ஓங்க
வான்கலந்த அருணகிரி வாழ்த்துங் கோண
மாமலையார் புகழ்பாடி ஆடீர் ஊஞ்சல்.

பாராண்ட இராவணப்பேர் கொண்ட வேந்தன்
பண்ணோடு இசைகூட்டி யாழை மீட்டி
தேராண்ட படையோடு வந்து நின்று
தென்கயிலை மலையுறையுஞ் சிவனே யென்று
தாராண்ட மார்பிணிலே கண்ணீர் வழிய
சாயாத முடிசாய்த்துப் பணிந்து போற்றக்
காராண்ட கோணமலை அருளுங் காட்சி
கண்குளிரக் காணநாம் ஆடீர் ஊஞ்சல்.

ஒல்காத புகழேறு தொல்காப்பியனார்
உரைத்தபொரு ளிலக்கணமே பலகை யாக
பல்காலுந் தமிழ்ப்புலவர் தந்த பத்துப்
பாட்டோடு தொகைநூல்கள் கயிற தாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோண நாயகர் ஊஞ்சல்

சொல்லேறுந் திருக்குறளே வளைய தாக
தூயபெருங் காப்பியங்கள் கம்பன் பாடல்
நல்லார்செய் திருநூல்கள் கால்க ளாக
நால்வர்தமிழ் ஒங்கமலை ஆடீர் ஊஞ்சல்.

கும்பங்கொண் டபிடேகம் ஆட்டி ஆட்டி
கும்பிட்டு மலர்தூவி வாழ்த்தி வாழ்த்தி
சம்பந்தன் அருட்பாடல் பாடப் பாட
சதுர்மறையோர் வேதங்கள் ஒத ஒத
துன்பங்கள் அடியாரைத் தொடரா வண்ணம்
தூயதிரு நாமங்கள் சூழச் சூழ
அன்பர்க்கு வெளிவந்துன் அருளைக் காட்டி
ஆழிசூழ் குணமலையீர் ஆடீர் ஊஞ்சல்.

பார்மகளும் பூமகளும் வடந்தொட் டாட்ட
பாராண்ட இராவணனார் வடந்தொட் டாட்ட
கோமகனார் குளக்கோட்டன் வந்து நின்று
கும்பிட்டு மலர்தூவி வடந்தொட் டாட்ட
தேமதுரத் தமிழ்ப்புலவர் வடந்தொட் டாட்ட
தில்லை வாழ் அந்தணர்கள் வடந்தொட் டாட்ட
மாமலையில் நீயாடக் கண்டு தேவர்
வந்துவடந்தொட்டாட்ட ஆடீர் ஊஞ்சல்.

மூத்தமகன் ஓடிவந்து மடியி லேற
முற்றாதமான்கையைத் தப்பி ஓட
பார்த்திருந்த வேல்முருகுப் பிள்ளைஓடி
பையவே பிடித்தன்னை மடியிலேறி
நேர்த்தியாய் அமர்ந்திடத்தன் கையைத் தூக்கி
நீட்டியதைப் பிடிக்கவரும் போது நெஞ்சில்
சேர்த்தணைத்துக் கொள்ளும்விளை யாடல்கண்டு
சிரித்ததிருக் குணமலையீர் ஆடீர் ஊஞ்சல்.

பொன்னி வளநாட்டின் குணபால் தோன்றும்
பொற்பான காரணத்தை அறியார் இன்று
பின்னமுறுங் காரணங்கள் பலவுங் காட்டி
பிறப்பித்தார் குணமலையின் பெயரைத் திரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னுதிருக் குணமலையென் றோதி ஓதி
மகிழ்வாரைத் தீவினைகள் சேரா வண்ணம்
முன்னின்று காத்தருளும் முதல்வா தில்லை
மூதூரில் ஆடியவா ஆடீர் ஊஞ்சல்.

தீமைதரு பாவங்கள் தேயத் தேய
தீராத தீவினைகள் தீரத் தீர
பூமிதனில் நோய்நொடிகள் ஓய ஓய
புரட்டுகளும் விரட்டுகளும் மாய மாய
காமுகரின் ஆட்டங்கள் ஆட்டங் கொடுக்க
கலைவாணர் செருக்கொழிந்து காற்றில்பறக்க
தேமதுரத் தமிழ்மொழியாள் துயரந் தீர
திருக்குணமா மலையாரே ஆடீர் ஊஞ்சல்.

பாதிமதி வேணியரன் கோயில் வாழ
பத்திநெறி பாடும்அடி யார்கள் வாழ
நீதிநெறி ஞாலமிசை நீடு வாழ
நியமங்கள் தவறாது பூசை செய்யும்
வேதியர்கள் ஓதுமறை நாலும் வாழ
விஞ்ஞான மெய்ஞ்ஞான நூலும் வாழ
பேதமற ஈழவள நாடும் வாழ
பீடுடைய மாமலையீர் ஆடீர் ஊஞ்சல்.

--------✧✧✧-------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்பலகமம்
## ஸ்ரீ ஆதிகோணநாயகர் கோவில்

தம்பலகமம் இயற்கையழகு நிறைந்த சைவக் கிராமம். திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து கண்டிக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் இருபத்தினாலு கிலோமீற்றர் தூரத்தில் ஒரு கிளைப்பாதை பிரிகின்றது. அங்கிருந்து மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள தம்பலகமத்தில் இந்த ஆலயம் இருக்கின்றது. இந்த ஆலயமும் கிராமமும், தேவாரப் பாடல்பெற்ற திருக்கோணேஸ்வரத்தோடு தொடர்புடைய சரித்திரப் பின்னணியோடு பின்னிக் கிடக்கின்றன. இந்தச் சரித்திரப் பின்னணியைக் காய்தல், உவத்தலின்றி வரலாற்று ஆசிரியர்கள் உன்னிப்பாக அவதானித்துச் சிந்திக்கக் கடமைப்பட்டவராவர்.

திருக்கோணேஸ்வரத்தோடு தொடர்புடைய வரலாறுகளெல்லாம் தம்பலகமம் ஆதிகோணநாயகர் ஆலயத்தோடும் தொடர்புறுத்தப்பட்டிருக்கின்றது. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் தெட்சண கயிலாயம் எனப்படும் திருக்கோணேஸ்வத்தைத் தேவாரப்பதிகம் பாடித் துதித்துள்ளார். கோணேசர் கல்வெட்டின் பிரகாரம் குளக்கோட்டு மன்னன் கலியப்பதம் 522ஆம் ஆண்டில் கந்தளாய்க் குளத்தைக் கட்டும் பெரும் பணியையும் செய்து நிறைவேற்றியதாக அகச்சான்றுகள் காணப்படுகின்றன. கிறீஸ்து பிறப்பதற்கு 1300 வருடங்களுக்கு முற்பட்ட திருக்கோணேசர் கோவிலுக்கு, கி.பி.5ஆம் நூற்றாண்டளவில் சோழ அரசனான குளக்கோட்டு மன்னன் புனருத்தாரணத் திருப்பணிகள் செய்துள்ளான். இந்த மன்னனால் திருக்கோணேஸ்வரத்திற்குச் செய்யப்பட்ட திருப்பணிகள், மானியங்கள், நிபந்தங்கள், நிர்வாக ஆணைகள் யாவும் கோணேசர் கல்வெட்டில் கூறப்பட்டிருக்கின்றது. இக்கல்வெட்டிலுள்ள ஆணைகளை இன்று தம்பலகமம் ஆதிகோணநாயகர் ஆலயம் கடைப்பிடித்து வருகின்றது. மானியங்களை அனுபவித்து வருகின்றது. ஆதிகோணேசர் என்பதிலுள்ள "ஆதி" என்ற சொல் திருக்கோணேஸ்வரத்தைச் சுட்டிக் காட்டுகின்றது. போத்துக்கீசர் கோணேஸ்வரத்தில் செய்த அட்டூழியங்களே தம்பலகமம் கோணேசர் கோவிலுக்கு "ஆதி" என்ற அடைமொழியைச் சேர்க்கக் காரணமாயிருந்தது என்று கூறலாம். கி.பி.1624ஆம் ஆண்டு போத்துக்கீசத் தளபதியாகிய கொன்ஸ்டன்டைன் டிசா என்பவனும், அவனுடைய படைகளும் திருக்கோணேசர் ஆலயத்தை இடித்து அழித்தார்கள். அப்போது அங்கிருந்த பாசுபதர்களும், தொழும்பாளர்களும், ஆலயத்திலுள்ள திருவுருவங்களை எடுத்துச் சென்று கிணறு குளங்களில் போட்டும், நிலத்தில் புதைத்தும் மறைத்திருக்கின்றார்கள். அந்தத் திருவுருவங்களில் ஒன்றைத் தம்பலகமத்திலுள்ள சுவாமி மலையில் வைத்துப் பாதுகாத்துப் பராமரித்து வந்தார்கள். அந்தத் திருவுருவம் இப்பொழுதும் தம்பலகமம் ஆதிகோணநாயகர் ஆலயத்தில் வைத்துப் பூசிக்கப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்பின்புதான் இவ்வாலயம் ஆதிகோணேசர் ஆலயம் என்ற பெயரால் வழங்கி வந்துள்ளது.

6ஆம், 7ஆம், நூற்றாண்டில் பல்லவர் காலத்திலும், 9முதல் 11ஆம் நூற்றாண்டுவரை சோழர் காலத்திலும், 12ஆம் 13ஆம் நூற்றாண்டில் பாண்டியர் காலத்திலும் திருக்கோணமலை, பொல்லனறுவை, அனுராதபுரம் முதலிய இடங்களிலெல்லாம் சிவாலயங்கள் சிறப்புற்றிருந்திருக்கின்றன. திருக்கோணமலை மாவட்டத்தில், திருக்கரைசை, கந்தளாய், தம்பலகமம், தென்னமரவாடி, பெரியகுளம் போன்ற இடங்களில் சிவன்கோவில்கள் இருந்து அழிந்த அழிபாடுகள் இன்றும் காணப்படுகின்றன.

இப்பொழுது ஆதிகோணநாயகர் ஆலயம் இருக்கும் இடத்திற்குச் சிறிது தூரத்தில் "தீனேரி" "பாண்டியூற்று" என்ற இடங்கள் இருக்கின்றன. திருநகர், என்பது திருநகரியாகிப் பின்னர் தீனேரியாகவும், பாண்டியன் ஊற்று பாண்டியூற்றாகவும் காலப்போக்கில் திரிபுபட்டிருக்கலாம். இங்கு சிவாலயங்களிருந்ததற்குரிய அழிபாடுகள் கிடைத்திருக்கின்றன. இங்கிருந்த சிவலிங்கம், நந்தி என்பன பல்லாண்டுகளுக்குமுன் கொண்டுவரப்பட்டு தம்பலகமம் கோணேசர் கோவிலில் வைக்கப்பட்டிருந்தன. இவ்வாலயத்திற்கு இராசசிங்க பாண்டியன் திருப்பணிகள் செய்ததாகவும் சரித்திர வரலாறுகள் காணப்படுகின்றன.

சோழசாம்ராச்சியம் தலைதூக்கிய காலத்தில் ஆதித்ய சோழனின் மகன் முதலாம் பராந்தகன் (கி.பி. 907–956) மதுரையைக் கைப்பற்றிப் பாண்டி நாட்டைச் சோழ சாம்ராச்சியத்தோடு இணைத்தான். அவ்வேளையில் பாண்டிய மன்னனாய் இருந்த இரண்டாம் இராஜசிங்கன் இலங்கை மன்னான ஐந்தாம் காசியப்பனின் (கி.பி. 915–923) துணையைச் சோழருக்கெதிராக நாடினான். சோழரோடு செய்த யுத்தத்தில் தோல்வியடைந்த இராஜசிங்கன் இலங்கைக்கு ஓடி ஒளித்தான். இந்த மன்னனால் தம்பலகமம் சிவன்கோவில் திருப்பணி நடைபெற்றிருக்கவேண்டும்.

மிக்கசீர் இலங்கை நாட்டில் விரிகதிர் பரிதியோச்சி
உக்கிரசேன சிங்கன் உதவிய சிறுவனென்னும்
மைக்கடுங் களிற்றுத் தானை வரராச சிங்க மன்னன்
புக்கு மற்றவர்கள் போற்றப் பொருவிலாவரசு செய்தான்.

என்னும் திரிகோணசல புராணச் செய்யுள் இராசசிங்க மன்னன் இலங்கையை ஆண்டதாகக் கூறுகின்றது. இந்த மன்னன் தம்பலகமத்தில் ஆதியில் இருந்த ஆலயத்திற்குத் திருப்பணிகள் செய்துள்ளான். குளக்கோட்டுமன்னன் திருப்பணிகள் செய்து வழிபட்ட கோணேசர் ஆலயத்திலிருந்து போத்துக்கீசருடைய கையிலகப்படாமல் மறைத்துக் கொண்டு வரப்பட்ட ஆதிகோணநாயகரை இவ்வாலயத்தில் ஸ்தாபித்து இன்றும் வழிபட்டு வருகின்றார்கள். இம்மாபெரும் கைங்கரியத்தினால் குளக்கோட்டுமன்னன் கோணேஸ்வரத்திற்கு வழங்கிய மானியங்களில் ஒரு பகுதியேனும் காப்பாற்றப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய மானியங்கள் காடுகளாகிப் பிற்காலத்தில் நாடாளுபவர்களின் குடியேற்ற நிலங்களாக விருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

கோணேசர் கல்வெட்டில் கூறப்பட்ட தொழும்புப் பணிகள் தம்பலகமத்தில் பரம்பரையாகப் பேணப்பட்டு வருகின்றன. குளக்கோட்டு மன்னனால் ஆலயத் தொழும்புகளுக்காக இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட குடிமக்களின் பரம்பரைகள் தொடர்ந்து இங்கு பணிசெய்து வருகின்றார்கள். கல்வெட்டில் கூறப்பட்ட அற்புதச் செயல்கள் இன்றும் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. போத்துக்கீசரால் அழிக்கப்பட்ட திருக்கோணேஸ்வரத்தில் சுமார் முன்னூற்று முப்பத்தொன்பது ஆண்டுகளாக ஆலயம் இல்லாதிருந்ததினால் கோணேசர் கல்வெட்டில் கூறப்பட்ட முக்கியமான மூன்று அம்சங்களைப் பேணிவரும் தம்பலகமம் ஆதிகோணேசர் ஆலய வரலாற்றில் அவைகளைக் கூறுவது பொருத்தமாகும்.

குளக்கோட்டு மன்னனால் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட தொழும்பாளர்களில்,

பாசுபதர்– ஆகம முறைப்படி பூசை செய்பவர்கள்

தானத்தார்– அன்றாடம் வரும் வரவு செலவுகளைக் கணித்தல், இறைவனுக்குத் தினமும் ஆராத்தி எடுத்தல், நடனமாடுதல், பன்றிகுற்றல், முதலிய கடமைகளைச் செய்பவர்கள்.

வரிப்பத்தார்– பட்டாடை கொய்தல், கட்டல், புஷ்ப பத்திரமெடுத்தல், விளக்கேற்றல், கோவில் தளபாடங்களை விளக்குதல், தீர்த்தமெடுத்துக் கொடுத்தல், நெல்லுக்குத்துதல், சந்தனமரைத்துக்கொடுத்தல், கொடியேற்றல் இறக்கல், கட்டல், சுற்றல் போன்ற உட்பணிகளைச் செய்தல்.

இவர்களைத் தவிர வருடக் கணக்குகள், மானியத் தொகைகளைப் பெரியவளமைப் பத்ததியின்படி செயற்படுத்தும் கனகசுந்தரம் பெருமாளும், எல்லோரையும், எல்லாவற்றையும் கவனித்து நடத்தும் சிற்றரசன் போன்ற தனியுண்ணாப் பூபால வன்னிமை போன்றவர்களும், குளக்கோட்டு மன்னனால் நியமனம் செய்யப்பட்டுப் பணிபுரிந்து வந்தார்கள். இந்தத் தொழும்புமுறை காலப்போக்கில் தானத்தார், வரிப்பத்தார் எனப்பட்டவர்கள் காரியப்பர், வயிராவியர் என்று மாறினர். இந்தப் பரம்பரையினர் தம்பலகமம் கோணேசர் கோவிலில் இன்று பணியாற்றி வருகின்றார்கள். அடப்பன், கங்காணம் என்ற பணியாளர்கள் பிற்காலத்தில் தோன்றியவர்கள். இவர்களும் ஆலயப் பணிகளை மேலாளராக இருந்து செய்துவருகின்றார்கள். "அடப்பன்" "கங்காணம்" என்று சொற்கள் வேறுமதத்தவர்களிடமும் பிரயோகத்திலிருந்து வருகின்றது. வெருகலம்பதி சித்திரவேலாயுத சுவாமி கோவில் நிர்வாகத்திலும் இந்தச் சொற்பிரயோகம் இருந்துவருகின்றது. இந்தச் சொற்களின் மூலவேர் எங்கிருந்தது என்பதை தீர்க்கமாக அறியவேண்டும். இதன் உண்மை புலப்பட்டால் தம்பலகமம் ஆலயத்தின் பூரண வரலாறும் தெளிவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளக்கோட்டு மன்னன், கோணேசர் கல்வெட்டில் கூறிய மற்றொரு ஆணையையும் தம்பலகமம் கோணேசர் கோவில் கடைப்பிடித்து வருகின்றது. "மன்னு பச்சைப் பட்டுவரின் மழையுதவும், சிவப்பு மகா வெளிலே காட்டும்" என்பது அவ்வாணை. குளக்கோட்டு மன்னன் கந்தளாய்க் குளத்தைக் கட்டி மகாவலி கங்கை நீரைத் திசைதிருப்பிக் குளத்தில் விட்டிருந்தான். மகாவிஷ்ணுவின் ஆணைப்படி குளத்திற்குக் காவலாக, விநாயகர், காளமாமுனி, புலத்தியர், மங்கலர், வீரபத்திரன், வதனமார், வைரவர், அண்ணமார், பலபல பூதங்கள், ஐயனார், சக்திகாவலர்கள், கன்னிமார், பத்தினி, காளி என்னும் தெய்வங்கள் இந்தக் குளக்கட்டில் இருத்தப்பட்டன. இந்தக் காவற் தெய்வங்களுக்கு ஒரு வருடத்தில் மடையும், மறுவருடத்தில் வேள்வியுமாக (பொங்கல்) செய்யும்படி குளக்கோட்டு மன்னன் பணித்தான். இன்றும் அது நடைபெற்று வருகின்றது. முறைப்படி பொங்கல், வேள்விகளைச் செய்து கோணேசருக்கு நேர்த்தி வைத்து பச்சைப்பட்டுக் கட்டினால் மழைவருவதும், சிவப்புப் பட்டுக் கட்டினால் வெயில் காய்வதும் இங்கு நடைபெற்றுவரும் அற்புத நிகழ்ச்சியாகும்.

திருக்குளத்து வேள்வி செய்யும்போது அனுமன், கருடன் இவர்களது துணையோடு செய்யத் தொடங்குவர். காட்டுக்குச் சென்று மாடு பிடித்துப் பால்கறந்து பொங்கல் செய்யவேண்டுமென்பது விதி. மறிகாரர் மாடு பிடிப்பதற்கு உரிமையுடையவர்கள். கட்டாடியார் என்ற என்ற பூசாரியார் கயிறெடுத்துக் கொடுக்க, மந்திரங்கள் பல சொல்லி, வேண்டுதல்கள் பல செய்து, காட்டிற்குச் சென்று குளுமாடுகளைப் பிடித்துப் பால் எடுத்துப் பொங்கலிடுவார்கள். "நன்னயஞ்சேர் பாகிலையும், பாலடிசில் திருவிளக்கும் நல்ல தூபம் சொன்னபடியே கொடுப்பர்" ஆயிரம் வெற்றிலை, ஆயிரம் பாக்கு, ஆயிரம் பழம், ஆயிரம் பூ, அனைத்தையும் பய பக்தியோடு படைத்து மடைபோடுவார்கள். இன்றும் வருடத்திற்கொருமுறை இவ்விழா நடைபெற்று வருகின்றது.

சுவாதியம்மன் என வழங்கும் மூர்க்கமாதா என்ற தெய்வத்திற்குச் செய்யும் "ஆலடிவேள்வி" பத்தினியம்மனுக்குச் செய்யும் "ஐயனார்வேள்வி" அண்ணமார் வேள்வி எனப் பலவேள்விகள் இங்கு நடைபெற்று வருகின்றன. இந்த வேள்விகளின்போது பலவிதமான வரலாற்றுக் காவியங்கள் பாடுவார்கள்.

கங்காணம், அடப்பன், வயிராவி, காரியப்பர், புலவன், குருக்கள் என்ற பணியாளர்களைக் கொண்ட ஓர் அறங்காவல் நிலையமாகத் தம்பலகமம் கோணேசர் கோவில் இருந்து வருகின்றது. இவர்களுக்கெல்லாம் வயல்நிலங்கள் மானியமாக வழங்கப்பட்டிருக்கின்றன.

தம்பலகமம் ஆதிகோணநாயகர் ஆலயம், பொதுநம்பிக்கைப் பொறுப்பாளரின்கீழ் இயங்கும் தர்மகர்த்தா சபையினால் தற்போது பரிபாலனம் செய்யப்பட்டு வருகின்றது. கடைசியாக 1980ஆம் ஆண்டு தை மாதம் 28ஆம் திகதி, புனருத்தாரணத் திருப்பணிகள் நிறைவேறி மகா கும்பாபிஷேகம் சிறப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்றது. வானளாவிய பஞ்சதள ராஜகோபுரத்தையுடையது ஸ்ரீ ஆதிகோணநாயகர் கோவில். தென்னஞ்சோலைகள் சூழ்ந்த இயற்கையழகுப் பொலிவோடும், வற்றாத நீர்வளத்தினால் சோழநாடுபோல் செந்நெற் கழனிகள் சூழ்ந்து நிறைந்த இடம் தம்பலகமம். கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்நபன மண்டபம், ஸ்தம்பமண்டபம், என்பவைகளைக்கொண்ட பெரும் கற்கோவில். உள்வீதி சுற்று மதிலால் காப்புச் செய்யப்பட்டிருக்கின்றது. கருவறையில் கிரியாலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. சுவாமிபெயர்– ஆதிகோணநாயகர். அம்பாள்பெயர்–அம்சகமனாம்பிகை. அம்பாளுக்கு அழகிய விமானமுடைய கருவறையும் அர்த்தமண்டபமும் உடைய தனிப்பீடம் அமைக்கப்பட்டிருக்கின்றது. விநாயகர், சுப்பிரமணியர், நவக்கிரகம், சண்டேஸ்வரர் என்பவர்களுக்குத் தனியாலயங்களுண்டு. எல்லா ஆலயங்களுக்கும் புதிதாகத் தூபிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. புராண, இதிகாச வரலாற்றுச் சம்பவங்களை விளக்கும் அழகிய சிற்பங்கள் தூபியிலே பொறிக்கப்பட்டிருக்கின்றன. அர்த்தமண்டபத்தில் கதிர்காம சுவாமியும் அம்பாள் சன்னிதியில் அம்சகமனாம்பிகையும், மகாமண்டபத்தில் சோமாஸ்கந்தர், பிள்ளையார், வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர் அஸ்திரதேவர், பாலம்போட்டாற்று அம்மன் என்னும் எழுந்தருளி விக்கிரகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. பாலம்போட்டாற்றுப் பத்தினியம்மன் கோவிலில் வருடமொருநாள் பொங்கல் பெருவிழா நடைபெற்று வருகின்றது. அன்று இவ்வாலயத்திலிருந்து பத்தினியம்மனை எழுந்தருளச் செய்வார்கள். விழாமுடிவில் மீண்டும் இங்கு கொண்டுவந்து வைத்திருப்பார்கள்.

ஸ்நபன மண்டபத்தில் சிவகாமியம்மாள் சமேத நடராஜப் பெருமான் பிரிதிஷ்டை செய்யப்பட்டுள்ளார். ஆதிகோணை நாயகருக்குத் தனிக்கோவில் இருக்கின்றது. வைரவர், நாக தம்பிரான் பீடங்களும் மணிக்கோபுரமும் கொண்டதாய் சாஸ்திரரீதியாக இவ்வாலயம் அமைக்கப்பட்டிருக்கின்றது. வசந்த மண்டபம் தனியாக அமைக்கப்படும் முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆனி உத்தரத்தில் கொடியேறிப் பதினெட்டு நாட்கள் மகோற்சவமும் தீர்த்தோற்சவமும் நடைபெற்று வருகின்றது. ஆடியமாவாசைக்கு சுவாமி மகாவலி கங்கை முகத்துவாரத்திற்குச் சென்று தீர்த்தமாடுவார். இந்தத் தீர்த்த வரலாறு பற்றிய விபரத்தை ஆலங்கேணி அருள்மிகு விநாயகராலய வரலாற்றில் பார்க்கவும் மகோற்சவத்தின் போது கதிர்காமசுவாமி உற்சவமும், சூகரவேட்டைத் தூதும் இங்கு நடைபெறும் விசேடமான திருவிழாக்களாகும். கௌரி விரதம், கந்தசஷ்டி, நவராத்திரி, சிவராத்திரி, சித்திரா பூரணை, திருவெம்பாவை முதலிய விசேடபூசை விழாக்களும், ஒரு நாளைக்கு மூன்றுமுறை நித்திய பூசைகளும் நடைபெற்று வருகின்றன. திரு. சு.கா.சிவசுப்பிரமணியம் அவர்களைத் தலைவராகவும், திரு.மு.கோ. செல்லராசா அவர்களைச் செயலாளராகவும் கொண்ட தர்மகர்த்தாசபை இப்பொழுது ஆலயத்தைப் பரிபாலனம் செய்து வருகின்றது. இந்த ஆலய வரலாறுகளைத் தந்துதவிய தலைவர் சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு அன்போடு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு தம்பலகாமம்

## ஸ்ரீ ஹம்ச கமனாம்பிகா சமேத
## ஸ்ரீ ஆதிகோணநாயக சுவாமி

## திருவூஞ்சல்

*இயற்றியவர்:*
*"இயலிசை வாரிதி" "ஸாஹித்ய சிரோமணி"*
**யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ. என். வீரமணி ஐயர் அவர்கள்**

### காப்பு

செந்நெல்லும் கழனிதரு செல்வம் ஓங்கிச்
செழுங்கலைகள் கல்வியொடு செழித்தே வாழும்
நன்னகர்ஈ ழக்கோண மலையின் பாங்கே
நயஞ்சேரும் தம்பலகா மத்தில் மேவி
அன்னமெனும் மென்னடையாள் அழகியொடு
அமர்ந்துஆதி கோணநா யகனார் ஆட
இன்னமுதாம் தமிழூஞ்சல் இனிதே பாட
ஏரம்பக் கணபதிதாள் காப்ப தாமே.

### நூல்

சீரோங்கு சுருதிநாற் கால்க ளாகச்
சிவாகமமே நல்வயிர விட்டம் ஆகத்
தாரோங்கு கலைஞானம் கயிற தாகத்
தண்ணருளாம் ஓங்காரம் பீட மாகப்
பாரோங்கும் பைந்தமிழ் ஊஞ்சல் வைகிப்
பார்வதியாம் அன்னநடை அழகி யோடு
ஊரோங்கு தம்பலகா மத்தின் ஆதி
கோணநா யகஸ்வாமி ஆடீர் ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு தம்பலகாமம்

புந்தியிலே பக்தியெனும் கால் நிறுத்திப்
புலனைத்தைச் சேர்த்தொன்றாய் விட்டமாக்கி
வந்திடுநாற் கரணங்கள் வடங்க ளாக்கி
வளமார்ந்த திருவருளாம் பலகை தேக்கி
அந்தமிலாச் சீவனவன் இனிதே ஆட
அன்னநடை அழகியொடு அருளும் தேவா!
கொந்தவிழ்பூந் தம்பலகா மத்தில் ஆதிக்
கோணநா யகஸ்வாமி ஆடீர் ஊஞ்சல்.

பாதிமதி புனலரவு ஆட ஆடப்
பரந்துவிரித் திலங்குசடை ஆட ஆட
காதிலணி குழைதோடு ஆட ஆட
கரமணிமான் மழுவனலும் ஆட ஆட
ஓதிமத்தின் நடையழகு ஆட ஆட
ஓங்காரப் பிரணவமும் ஆட ஆட
ஓதிலரும் தம்பலகா மத்தின் ஆதிக்
கோணநா யகஸ்வாமி ஆடீர் ஊஞ்சல்.

நூலாட நுதலாட நீறும் ஆட
நுண்கலைகள் பண்கமழும் துடியும் ஆட
மாலாட மறையாட மதனும் ஆட
மலர்த்தொடையுந்த லைமாலை ஆரம் ஆட
வேலாட விழியாட விசும்பும் ஆட
விண்ணோரும் மண்ணோரும் வியந்தே ஆட
சேலாடும் தம்பலகா மத்தின் ஆதிக்
கோணநா யகஸ்வாமி ஆடீர் ஊஞ்சல்

வேதனொடு வாணியுமோர் வடந்தொட் டாட்ட
விஷ்ணுவொடு லக்குமியோர் வடந்தொட் டாட்ட
காதலுடன் சிவகணமோர் வடந்தொட் டாட்ட
களித்துருகும் அடியரொடு வடந்தொட் டாட்ட
ஓதிமத்தின் நடையழகு ஒய்யாரத் தோடு
ஊஞ்சலிலே அமர்ந்திருந்து ஓரக்கண் மாந்தி
கோதவிழும் தம்பலகா மத்தின் ஆதிக்
கோணநா யகஸ்வாமி ஆடீர் ஊஞ்சல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழிற்கோட்டு மென்முலையாள் ஏக னொடு
என்றென்றும் குலவிமகிழ்ந் தருளைச் செய்ய
குளக்கோட்டு மன்னவன் கோவில் செய்தே
கும்பிடவே முத்தியதைக் கொடுத்த தேவா!
வழகோட்டுப் பண்பாட்டின் வம்ஸம் வாழ
வரைந்தேகல் வெட்டுக்கள் அருளும் சீலா!
குழைத்தோட்டுத் தம்பல காமத்தின் ஆதிக்
கோணநா யகஸ்வாமி ஆடீர் ஊஞ்சல்.

வேந்தனவன் இராவணனும் வேகம் கொண்டே
விறல்வீரத் தோள்களினால் மலையைத் தூக்கப்
பூந்தளிரின் பாதத்தின் விரலும் ஊன்றிப்
புவியரசன் அகந்தைதனைத் தொலைத்த வீரா!
கூந்தல் கமழ் ஓதிமமென் நடையாளோடு
குலவிமகிழ்ந் தருளதனைச் செய்யும் நாதா!
காந்தள்மலி தம்பலகா மத்தின் ஆதிக்
கோணநா யகஸ்வாமி ஆடீர் ஊஞ்சல்.

ஞாயிறுவெண் குடையேந்த ஆல வட்டம்
ஞாலமதில் சந்திரனாம் திங்கள் தூக்க
மாயிமக மாரிஅன்ன நடையாள் செவ்வாய்
மலர்ந்தன்பு தன்னாலே புளகம் எய்த
தேயவுடன் கண்டமதில் வியாழன் பூண்டு
திகழ்வெள்ளிப் பனிமலையில் ஆசனிக்கும்
கோயிலுறை தம்பலகா மத்தின் ஆதிக்
கோணநா யகஸ்வாமி ஆடீர் ஊஞ்சல்.

கற்றை முடி மண்சுமந்த களைப்பும் தீரக்
காவலனால் அடிபட்ட நோவும் ஆற
உற்றசக சுந்தரன்சொற் பித்தம் நீங்க
உதைத்தேகண் அப்பிய அவ்வலியம் மாற
குற்றவிட மள்ளியுண்ட கண்டம் தேற
கோதைக்குந் தூதான கால்கள் ஆற
கொற்றவனே தம்பலகா மத்தின் ஆதிக்
கோணநா யகஸ்வாமி ஆடீர் ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு தம்பலகாமம்

தத்துவத்தின் தத்துவனே ஆடீர் ஊஞ்சல்
தயாபரனே உமாபதியே ஆடீர் ஊஞ்சல்
அத்துவிதங் கடந்தவனே ஆடீர் ஊஞ்சல்
ஆனந்த மெய்ப்பொருளே ஆடீர் ஊஞ்சல்
சத்துசித்து ஆனவனே ஆடீர் ஊஞ்சல்
சச்சிதா னத்தமயா ஆடீர் ஊஞ்சல்
கொத்து மலர்த் தம்பலகா மத்தின் ஆதிக்
கோணநா யகஸ்வாமி ஆடீர் ஊஞ்சல்.

அந்தணரும் வானவரும் ஆனும் வாழி
அருமாரி அரசன் செங் கோலும் வாழி
செந்தமிழின் பண்பினோடு சீரும் வாழி
செப்பரிய கற்புநிலை சிறந்து வாழி
அந்தமிலாச் சைவநெறி வாழி வாழி
அன்னநடைச் சிற்றிடையாள் வாழி வாழி
கந்தமலர்த் தம்பலகா மத்தில் ஆதிக்
கோணநா யகஸ்வாமி வாழி வாழி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமங்கலாய் சிவன்கோவில் திருக்கரைசையம்பதி

இது மிகப் பழமைவாய்ந்த சிவன்கோவில். கிளிவெட்டியிலிருந்து ஒன்பது கில்லோமீற்றர் தூரத்தில் இருக்கின்றது. திருக்கோணமலை மாவட்டத்தில் கொட்டியாரப்பற்றிலுள்ள சைவக்கிராமம் கிளிவெட்டி. இவ்விடத்திற்குச் செல்வதற்குரிய மார்க்கம் கங்குவேலிக் சிவன்கோவில் வரலாற்றில் கூறப்பட்டிருக்கின்றது. கிளிவெட்டியிலிருந்து திருமங்கலாய்க்குப்போகும் மார்க்கத்தில் நாலு கில்லோமீற்றர் தூரம் காட்டுப்பாதையினூடாகச் செல்ல வேண்டும். தற்போது இந்த ஆலயம் பெரும்பாலும் அழிந்தநிலையில் இருக்கின்றது. கற்பக் கிரகம் சிதைந்துவிட்டது. அர்த்தமண்டபம் சிதைந்த நிலையில் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது. மகாமண்டபமும், மற்றும் ஆலயக் கட்டிடங்களும் அத்திவாரமட்டத்தில் சிதைந்து மண்ணில் மறைந்து கிடக்கின்றன. அத்திவாரம் பெரும் கருங்கற்களால் அமைக்கப்பட்டிருக்கின்றது. இவற்றையெல்லம் பார்க்கும்போது இங்கு ஒரு பெருங்கோவில் இருந்ததற்குரிய அடையாளங்கள் காணப்படுகின்றன. ஆலயங்களுக்குத் தலபுராணம் பாடப்பட்டிருக்குமானால் அந்த ஆலயம் பிரசித்தியும், மகத்துவமும் வாய்ந்ததாக இருக்க வேண்டும். என்ன காரணத்தினால் இவ்வாலயம் அழிந்ததென்பது தெரியவில்லை. ஆனால் ஆலயத்திற்குரிய தலபுராணம் உயிரோடிருக்கின்றது. கொட்டியாபுரப்பற்றிலுள்ள பல ஆலயங்களில் திருக்கரைசைப்புராணம் இன்றும் படிக்கப்பட்டு வருகின்றது. திருமங்கலாய் சுவாமி பெயர் சுந்தரலிங்கேஸ்வரர். திருமங்கலாய் சிவன் கோவிலில் இருந்து சுவாமி எழுந்தருளிச் சென்று மகாவலிகங்கையில் ஆடியமாவாசியன்றும், மகரமாதத்திலும் தீர்த்தமாடுவார். ஆலயம் அழிந்த பின்னர் இந்த வழமையின்படி கங்குவேலிச் சிவனும், தம்பலகாமம் கோணேசரும் மகாவலிகங்கயைில் தீர்த்தமாடி வருகின்றனர்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் முறையே பொருந்திச் சிறந்து விளங்கியது திருமங்கலாய் சிவன்கோவில். மகாவலி கங்கையின் பெரு வெள்ளப் பெருக்கினால் இந்த ஆலயம் அழிந்திருக்கலாம். ஆலயமழிந்து காடுவளர்ந்து மூடியிருந்த காலத்தில் இங்குள்ள சைவ மக்களின் உதவியோடு ஸ்ரீதியாக ராசாக் குருக்கள் என்பவர் ஆலயத்திலிருந்து லிங்கத்தையும், அம்பாளையும் எடுத்து வந்து வெருகலம்பதியில் ஒரு சிறு கோவில் கட்டி வைத்திருந்தார்கள். அந்தக் கோவிலும் பராபரிப்பிழந்ததினால், இப்போது இந்தத் திருவுருவங்கள் மூதூரிலுள்ள பிள்ளையார் கோவிலில் வைக்கப்பட்டிருக்கின்றன. சுமார் மூன்றடி உயரமான லிங்கமும், அம்பாளும் சிறிது பின்னப்பட்டிருந்தபோதிலும் மிக அழகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவுருவங்களாகக் காணப்படுகின்றன. திருமங்கலாய் ஆலயத்திலிருந்த மணியொன்று கங்குவேலிச் சிவன்கோவிலில் இருக்கின்றது.

திருமங்கலாய் சிவன் கோவிலுக்குரிய திருக்கரைசைப் புராணம், இவ்வாலயத்தின் தொன்மையையும் சிறப்பையும் எடுத்துக் கூறுகின்றது. இலங்கையின் கிழக்குப் பிரதேசங்களில் தமிழ் மன்னர்கள் பன்னெடுங் காலத்திற்கு முன்பே ஆண்டு வந்துள்ளார்கள் என்பதை திருக்கரைசைப்புராணம் கூறுகின்றது. இந்திய மன்னர் பரம்பரையைச் சேர்ந்த சிங்கபூதரன் என்பவன் அயோத்தியிலிருந்து இலங்கைக்கு வந்தான். தற்போது இலங்கைத்துறை என்று சொல்லப்படுமிடத்தில் கப்பலில் வந்திறங்கினான். அப்போது இப்பிரதேசத்தை ஆண்டுகொண்டிருந்தவன் எழில்வேந்தன். இவனுடைய மகள் திருமங்கை. திருமங்கையைச் சிங்கபூதரன் திருமணம் செய்து திருக்கரைசையம்பதியில் அரண்மனையமைத்து நாட்டையாண்டுவந்தான். அரண்மனை அமைத்த இடத்திற்கு இரணியன்குன்று என்று பெயர். இப்பெயர் இன்று திரிபுபட்டு இரணியன் கொட்டு என்று வழங்கிவருகின்றது. இந்தச் சிங்கபூதரனும், மனைவி திருமங்கையும் அமைத்த கோவில் தான் திருமங்கலாய் சிவன் கோவில். இப்போது மிகவும் பழுதடைந்த நிலையிலிருக்கின்றது. ஆலயச் சிதைவுகளைத் தேடியெடுத்து ஒழுங்குப்படுத்திப் பாதுகாத்தவர் திரு.க.செல்லத்துரைச் சுவாமியார். அன்னாருக்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஸ்வநாத சுவாமி (சிவன்) கோவில்
# திருக்கோணமலை

இவ்வாலயம் திருக்கோணமலைப் பட்டினத்தில் சிவபுரி என்னுமிடத்தில் திருஞானசம்பந்தர் வீதிக் கருகாமையில் அமைந்திருக்கின்றது. இவ்வாலயம் இருக்குமிடம் பண்டைக் காலத்தில் செங்கற்பண்ணை என்னும் பெயரையுடையதாயிருந்தது. இந்தக் கோவிலில் வைத்து வழிபட்டுவந்த லிங்கத்தை ஆரம்பகாலத்தில் திரு.சோமலிங்க முதலியார் என்பவர் வாணிபதெருவில் (தற்போது மத்தியவீதி) உள்ள ஒரு காணியில் சிறு கொட்டில் கோவிலொன்று கட்டிப் பலவருடங்களாக அதில் வைத்து வழிபட்டுவந்தார். இந்தக்காணி இன்றும் விஸ்வநாத சுவாமி (சிவன்) கோவிலுக்குரியதாக இருந்து வருகின்றது. பலவருடங்களாக அவ்விடத்தில் பொதுமக்களால் வழிபடப்பட்டு வந்த லிங்கத்தை சுமார் முன்னூறு வருடங்களுக்குமுன் தற்போது விஸ்வநாதசுவாமி (சிவன்) கோவில் உள்ள இடத்தில் திரு.கதிர்காம முதலியார் என்பவர் புதிதாகச் செங்கற்பண்ணை என்ற இடத்தில் அமைக்கப்பட்ட மடாலயத்தில் வாணிபதெருவில் வைத்து வழிபட்டுவந்த லிங்கத்தைக் கொண்டுவந்து பிரதிஷ்டை செய்தார். தீர்த்தமாடுவதற்கு அருகிலே கேணியையும் அமைத்துக் கும்பாபிஷேகம் செய்வித்து வழிபட்டுவந்தார். மக்கள் இவ்வாலயத்தில் வழிபட்டுவரும் காலத்தில் காசிப்பதியினின்றும் ஸ்தல யாத்திரையின் நிமித்தம் திருக்கோணமலைக்கு வந்த சந்நியாசியொருவர், தாம் ஆத்மார்த்த பூசை செய்வதற்காக காசியிலிருந்து கொண்டுவந்த லிங்கத்தை, இந்த ஸ்தலவிஷேடத்தினால் செங்கற்பண்ணைச் சிவன்கோவிலில் பிரதிஷ்டை செய்தார். அதன்பின் திரு. கதிர்காம முதலியாருடைய பரம்பரையில் வந்த திரு.த.வேலுப்பிள்ளை, திரு.வே.அகிலேசபிள்ளை ஆகிய இருவரும் இக்கோவிலின் முகாமையாளராயிருந்து பணியாற்றி வந்தார்கள். இவர்கள் 1895ஆம் ஆண்டில் ஆலயத்தை புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்விக்கத் திட்டமிட்டார்கள். அதற்காக சென்னை "ரிப்பன் பிரசில்" பிரசுரிக்கப்பட்ட பிரகடனப்பத்திரம் ஒன்று மேற்கூறப்பட்ட வரலாற்றையும் ஆலயத் திருப்பணிக் கருமங்களைப்பற்றியும் கூறுகின்றது. பழமையான அந்தப் பிரகடனப் பத்திரத்தை அப்படியே தருகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை
# விஸ்வநாதசுவாமி கோவிற் கும்பாபிசேகப்
# பிரகடனப் பத்திரம்

சைவசமயப் பிரபுக்களே!

புண்ணிய பூமியாகிய பரத கண்டத்திலுள்ள நவபாகங்களுள் ஒன்றாய் இலங்காதீபம் என்னும் பெயரையுடைய இவ்வீழமண்டலத்திலே மிக்க மகத்துவமுடையதாய்த் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரால் அருளிச்செய்யப்பட்ட தேவாரத் திருப்பதிகமுடையதாய்த் தக்ஷிணகைலையென்று புராணங்களில் விதந்து பாராட்டப்பெற்றதாயுள்ள, இத்திருக்கோணமலையிலே, விசாலாக்ஷியம்பா சமேத விசுவநாத சுவாமி இற்றைக்கு 200 வருஷங்களின்முன், காசிப்பதியினின்றும் தலயாத்திரை நிமித்தம் இங்குவந்த ஒரு சந்நியாசியின் ஆத்மார்த்தலிங்கமாயிருந்து, இத் தலவிசேஷத்தினால் தம்மை இங்குத் தாபித்துவிடும்படி அந்தச் சந்நியாசிக்கு உத்தரவு செய்து அவரால் தாபிக்கப்பட்டவராய்ச் செங்கற்பண்ணை என்னுமிடத்திற் கோயில்கொண்டு எழுந்தருளியிருந்து வேண்டுவோர்க்கு வேண்டிய வரங்களையெல்லாம் கொடுத்து வருதல் எவருக்குந் தெரிந்த விஷயமே.

சிவரூபமாயுள்ள ஆலயம், பழுதடைந்திருப்பினும், அஷ்டபந்தனம் எடுபட்டிருப்பினும், சிவசாந்நித்தியம் குன்றுமென்று ஆகமம் கூறுதலினால் அது குறையாமைப்பொருட்டு விசுவநாதசுவாமியினதும், விசாலாக்ஷியம்மையினதும், ஆலயங்களைப் பழுதுபார்ப்பித்தும், சுப்பிரமணியசுவாமியின் சுப்பிரமணியசுவாமியின் ஆலயத்தைச் சீர்ணோதாரஞ்செய்தும், நடேசராலயத்தைப் புதிதாகக் கட்டியும் மேற்படி சுவாமிகளுக்கு அஷ்டபந்தன சகித கும்பாபிஷேகஞ் செய்யும்பொருட்டு துன்முகி வருடம் ஆனி மாதம் 17ஆம் திகதி சூரிய உதயத்தில் மிதுனலக்கினமாக முகூர்த்தம் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது. இவற்றை நிறைவேற்ற (3000) மூவாயிரம் ரூபாய்க்குக் குறையாத தொகை வேண்டியிருப்பதனால் சைவசமயாபிமானிகளாகிய நீங்கள் எல்லோரும் எத்தருமங்களினும் மேம்பட்டதாகிய, இச்சிவதரும விஷயத்தில் முன்னின்று, உங்களாலியன்ற பொருளுதவியோடு சரீரவுதவியுஞ்செய்து வந்துநின்று நடப்பித்து இதனை நிறைவேற்றி விசுவநாதசுவாமியினதும், விசாலாக்ஷியம்மையினதும் அனுக்கிரக பூர்ண கிருபாகடாக்ஷத்திற்குப் பாத்திரராவீர்கள்.

பழுதடைந்திருக்கும் ஆலயம், மடம் முதலியவற்றைப் புதுக்குவித்தவர், முன் அவற்றைப் புதிதாகச் செய்தவர் பெறும் பயனிலும் இரண்டாயிரம் மடங்கு அதிகமாகிய பயனைப்பெறுவர் என்பது ஆகம சம்மதம்.

*இங்ஙனம்*

மன்மத வருடம்
பங்குனி மாதம் 12

த. வேலுப்பிள்ளை வன்னிமை
வே. அகிலேசபிள்ளை
கோயில் மனேஜர்கள்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்மதவருடம் **1895–96** மதராசு ரிப்பன்பிரஸ், சென்னை.

மேலேகூறப்பட்டுள்ள கும்பாபிஷேகப் பிரகடனப்பத்திரத்தின் பிரகாரம் இவ்வாலயத்தில் புனருத்தாரணத் திருப்பணிகளோடு நடேசர் கோவிலையும் புதிதாகக் கட்டியுள்ளார்களென்பது தெரியவருகின்றது. இத்திருப்பணி வேலைகளை நிறைவேற்றியபின் **1898**ஆம் ஆண்டு ஆனி மாதத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றிருக்கின்றது. இதன்பின் முன்னையவர்களின் பரம்பரையில் வந்த திரு. அ. இராசகோன் அவர்களும் திரு. வைரவப்பெருமாள் என்பவரும் சேர்ந்து **1909**ஆம் ஆண்டு புனருத்தாரணத் திருப்பணிகள் செய்து கும்பாபிஷேகம் செய்வித்தார்கள். திரு.இராசகோன் சிவபதமடைந்தபின்னர் திரு.அ.அழகைக்கோன் ஆலயப் பொறுப்பையேற்று நடாத்திவந்தார். **1939**ஆம் ஆண்டு இரண்டாவது உலகமகா யுத்தம் ஆரம்பமாகியது. திருக்கோணமலை ஜப்பானியரின் குண்டுவீச்சுக்கு இலக்காகியது. ஆலயங்களெல்லாம் மூடப்பட்டுக்கிடந்தன. பலவருடங்களின்பின் ஆலயத்தைப் பராபரித்து வந்தவர்களும், பொதுமக்களும் சேர்ந்து ஆலய பரிபாலனசபை **1957** ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்து ஆலயத்தை பராபரித்து வருகின்றது. கடந்த காலங்களில் இவ்வாலயத்தைக் கட்டிப் பராபரித்தவர்கள் நித்திய நைமித்திய கருமங்கள் எவ்வித குறைபாடுமின்றி நடைபெறுவதற்காக காணிகளை மானியமாக வழங்கியுள்ளார்கள்.

இவ்வாலயம் கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் ஸ்நபனமண்டபம், ஸ்தம்பமண்டபம், ஆகிய மண்டபங்களையுடையதாய் அமைந்திருக்கின்றது. அழகிய தூபியையுடைய கர்ப்பக்கிரகத்தில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. மகா மண்டபத்தினூடாகத் தரிசனம் செய்யக்கூடியதாக தெற்கு நோக்கிய திருவாயிலையுடையதாய் விசாலாட்சியம்பாளுக்குத் தனியாலயமுண்டு. மகாமண்டபத்தில் பிள்ளையார், முருகன், விசாலாட்சியம்பாள் சமேத விஸ்வநாதசுவாமி, பிட்சாடணர், ராஜராஜேஸ்வரி, சிவகாமியம்பாள், சண்டேஸ்வரர் முதலிய உற்சவத் திருவுருவங்கள் காணப்படுகின்றன. ஸ்நபனமண்டபத்தின் வடக்குப் பக்கமாக சிவகாமி அம்பாள் சமேத நடராஜப் பெருமானுக்குத் தனிக்கோவில் இருக்கின்றது. உள்வீதியில் பிள்ளைார், சுப்பிரமணியர், நாகதம்பிரான் என்பவர்களுக்கு தனித்தனியே கோவில்கள் அமைக்கப்பட்டுள்ளன. சுற்று மதிலால் காப்புச் செய்யப்பட்டுள்ள உள்வீதியில் தீர்த்தக் கிணறும் அருகிலே சண்டேஸ்வரர் கோவிலும் இருக்கின்றன. வசந்தமண்டபத்தையடுத்து யாகசாலை, பைரவர், சூரியனுக்கும் தனியாலயங்களிருக்கின்றன. இரண்டாவது வீதியையடுத்து தீர்த்தக்கேணியும், பூந்தோட்டமும் காணப்படுகின்றன. இவ்வாலய ரதோற்சவத்திற்குக் கட்டுத்தேரையே பயன்படுத்திவருகின்றார்கள்.

மூன்றுகாலம் நித்தியபூசையும், ஆனிமாதத்தில் உத்தர திதியைத் தீர்த்த தினமாகக்கொண்டு பத்துநாட்கள் மகோற்சவம் நடைபெற்றுவருகின்றது. நவராத்திரி, சிவராத்திரி, கௌரிநோன்பு, சோமவாரத் திருவிழா, திருவெம்பாவை, பிரதோஷ திருவிழாக்கள், நடேசரபிஷேகங்கள், வருடப்பிறப்பு முதலிய நைமித்திய பூசை, விழாக்களும் சிறப்பாக நடைபெற்றுவருகின்றன.

திருவெம்பாவைக் காலத்தில் திருவாதவூரடிகள் புராணம் படித்துப் பயன்சொல்லும் வழக்கம் இங்கிருந்து வருகின்றது. இவ்வாலயத்திற்கே உரிய சிறப்பான திருவூஞ்சல் பாடல்களும், சூகரவேட்டைத் தூதும், விசாலாட்சியம்மை விருத்தம் என்ற பாடல்களும் இருக்கின்றன.

இவ்வாலயத்தைப் பற்றிய வரலாறுகளை ஆர்வத்தோடு தந்துதவிய திரு.அழகைக்கோன்– கணேசலிங்கம் அவர்களுக்கு என்றும் நன்றியுடையோம். ஆலயத்தின் நித்திய நைமித்திய பூசைகளை சிவஸ்ரீ பூரண சண்முகரெத்தினக் குருக்கள் அவர்கள் சிறப்பாக நடத்திவருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை
# விஸ்வநாத சுவாமி (சிவன்) ஊஞ்சல்

ஆக்கியோன்:
திரு.வே.அகிலேசபிள்ளை அவர்கள்
திருக்கோணமலை

சீரோங்கு திரிகோண மலையினோர் பாற்
திருவோங்கு வளர் செங்கற் பணையில் வாழும்
ஏரோங்கு கண்டர் விசாலாட்சி பாகம்
கலந்தவற்கே ஊஞ்சலிசை இனிதாய்ப் பாட
வாரோங்கு செஞ்சடை மவுலி நிமலர் தந்த
வனமோங்கு கலகமுலை வலவை பாகம்
பாரோங்க வைத்தடியர் துயரகற்றும்
பண்போங்கு கணபதிதன் பாதங் காப்போமே.

ஆதிமறை நான்குமுயர் கால்களாக
அங்கமோராறு மகல் விட்டமாக
நீதி சிவாகமங்களே கயிறதாக
நிரஞ்சனமாம் பிரணவமே பீடமாக
கோதிலணி யூஞ்சலின்மே வினிது வைசி
குலவு பல வளம்பெருகும் கோணைவாழும்
கலையில் நிகருருவ விசாலாட்சி பாகம்
விளங்கு விசுவேசுபரரே யாடிருஞ்சல்.

நாரணனும் நான்முகனும் வடந்தொட் டாட்ட
நாமகளும் பூமகளும் நயந்து பாட
வாரணனும் மந்திரியுங் கவரி வீச
மாபதியும் தினபதியும் கவிகை யேந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை மாவட்டத் திருத் தலங்கள்

காரணனுங் கொடிபிடிக்கக் கனலி நந்தி
கட்டியங்கூறிடச் செங்கற் பணையில் மேவு
மாரணனும் கைலை விசாலாட்சி பாகம்
கலந்த விசுவேசுபரரே யாடீருஞ்சல்.

கொடி கவரி முரசு விளக்கோடு கண்ணாடி
குடமுபய கயல் தோட்டி கொண்டு தெய்வத்
துடியிடை மங்கையர் சூழ விஞ்ஞை மாதர்
சுருதி முறை யிசைபாடத் தூய நாதப்
பிடியன நடைய ராலாத்தி காட்டப்
பிறங்கு புகழ் கோணமலை தன்னில் மேவும்
அடியவருக் கடியவரே யாடுவீர் தென்
கைலை விசுவேசுபரரே யாடீருஞ்சல்.

பேரி தவில் கொம்பு சங்கு வீணை சின்னம்
பீலி துடி காளநந்தி தட்டை பம்மை
துரியமெங்கணுாந் துவைப்ப விண்ணின் மாதர்
சோபனங் கூறிட மறையோர் சுருதியோதப்
பாரி விசாலாட்சியிடப் பாகம் மேவ
பரிவுடன் தென் கைலைப் பதியில் மேவு
மாரிட மந்திரப் பொருளே யாடுவீர்
காசி விசுவேசுபரரே யாடீரூசல்.

தாதாடுந் தொடையாடத் துடியுமாடச்
சடையாட நதியாடச் சசியுமாட
காதாங் குழையாடப் பணியுமாட
கலையாட வடியவர்கள் களித்தேயாட
நாதாவென் றடிபணியத் தென் கைலை மேவும்
நற்கருணை வாருதியே ஞானமுற்றோர்க்
காதாரமாம் பரமே யாடுவீர் காசி
விசுவேசுபரரே யாடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை விஸ்வநாத சுவாமி ( சிவன்) ஊஞ்சல்

வானாகி வளியாகிக் கனலுமாகி
வாரியாய் நீண்ட பசுந் தரையுமாகித்
தானாகி வருஞ் சராசரமுமாகிச்
சதுர்மறையா யாகமங்கடாமாய் விண்ணோர்
கோனாகி யமரர் கடங் குழுவுமாகிக்
குறித்த நவ பேதமுமாய் தென்னிலங்கை தன்னில்
மாறாம லுறைபொருளே யாடுவீர் காசி
விசுவேசுபரரே யாடீருஞ்சல்.

நித்தியமாய் நிட்களமாய் நிமலமாகி
நிரா மயமாய்ப் பராபரமாய் நிறைந்து நீங்காச்
சுத்தமுமாய் சமீபமுமாய் தூரமாகித்
துரியநிறை சுடர்வடிவாய்ச் சுருதியாவும்
வைத்திருந்த தாரகமாய் மனவாக் கெட்டா
மறுவறு சித்துருவாகி வைய முய்ய
வத்துவித மாகியெழிற் கோணை வாழும்
தேவ விசுவேசுபரரே யாடீரூஞ்சல்.

விரைமலரோ னாதி சிவனாகி யைந்து
வியன் றொழிலும் புரிபவரே யாடீரூஞ்சல்
அரிய விந்து நாதமதாய்ச் சத்தியாகிய கண்ட
பரிபூரணரே யாடீரூஞ்சல்
மருவளருங் குழலிமைய மீன்ற பச்சை
மாது விசாலாட்சியுட னாடீரூஞ்சல்
திருவளர் தென் கைலைநகர் வாசவீச
தேவ விசுவேசுபரரே யாடீரூஞ்சல்.

ஐந்துமுகத் தெந்தையரே யாடீரூஞ்சல்
அரியயன் றேடரும் பொருளே யாடீரூஞ்சல்
சிந்துநதிச் சடையவரே யாடீரூஞ்சல்
சிவகாமி யுடையவரே யாடீரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை மாவட்டத் திருத் தலங்கள்

முந்ததரவ கங்கணரே யாடீரூஞ்சல்
　　யோக காரண வடிவே யாடீரூஞ்சல்
அந்தமுத லில்லவரே யாடீரூஞ்சல்
　　காசி விசுவேசுபரரே யாடீரூஞ்சல்.

பொன்னுலவு புகரிலை முத்தலைவேல் வாழி
　　புனையுமணி நீறுடனே யைந்தெழுத்தும்
மன்னு மிரகதக்கிரி நேர் நந்தி வாழி
　　வளங்குலவு மழைபொழி மாமுகில்கள் வாழி
தென்னிலங்கை வளர் கைலை சிகரம் வாழி
　　சிவனடியா ரனைவர்களும் சிறந்து வாழி
அன்னநடை விசாலாட்சி யம்மை வாழி
　　ஆதி விசுவேசுபரரே வாழி வாழி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவகாமியம்மன் ஊஞ்சல்
## (திருகோணமலைச் சிவன்கோவில்)

ஆக்கியோன்:
திரு. வே. அகிலேசபிள்ளை அவர்கள்
திருகோணமலை

சீரோங்கு திரிகோண மலையி னோர்பாற்
திருவோங்கி வளர் செங்கற் பணையில் வாழும்
ஏரோங்கு சிவகாமி யம்மை மீது
லினமோங்கு மூஞ்சலிசை யினிதுபாட
வாரோங்கு களப பரிமளவுல்லாச
வனமோங்கு கும்பதள வலவை பாகம்
பாரோங்க வைத்தடியார் பவந்தொலைக்கும்
பண்போங்கு கணபதிதன் பதங்காப்பாமே.

சுந்தரஞ்சேர் விந்து மணிவிட்டமாக
சுடரிலங்கு மிருசக்தி தூணதாகச்
சந்தமிகு கலைகளெலா மிளையதாகச்
சாற்று புராணாகமங்கள் கயிறதாக
புந்திமகிழ் நால்வேதம் பலகையாகப்
போற்றுமுப நிடதமுயர் பீடமாகக்
கந்தமலர்க் கொன்றையணி யீசர் பாதம்
கலந்த சிவகாமியம்மே யாடீரூஞ்சல்.

சுருதிமுறை யிசைநூல் வல்லவர்கள் கூடத்
தொவிதரு மத்தளமடிக்கத் தாளம் போடச்
சதிமுறையி னரம்பையர்கள் நடனமாடத்
தவமுனிவரொடு மறையோர் வேதம் பாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிமுறையி னாமமெவர் களுங் கொண்டாட
விரதியர்க ளதுசமுக மீதினாட
நிதிமுறையி னருள் செங்கற் பணையினாளும்
நிலவு சிவகாமி யம்மே யாடீரூஞ்சல்.

உனித வபிநய மகளிர் கவரிவீச
உசித மருமுனிவர் சதுர் மறைகள் பேச
மனிதர் சுரர் அவுணர் பரவிடவுல்லாச
வனிதமதி திகழொளி கண்டவர் கண்கூச
புனித திருமங்கிலிய சொயம் பிரகாசப்
பொலிவு மழலென வொளிகுலவு வாசப்
பனிமலரா ரிதழியணி யீசர் பாகம்
பரவு சிவகாமியம்மே யாடீரூஞ்சல்.

தொண்டர் சிரத் துபையபதாம் புயங்களாரச்
சுயானந்தப் பெருவாழ்வின் சுகத்திற் சேரக்
கண்டவர் தங்கண்ணிரண்டு மருவி வாரக்
கருதுமவர் நெஞ்சமது கசிந்து சோரத்
தண்டமிழின் முனிவர் மனத் துவகை கூரத்
தயங்கு மடியவர்களின் மும்மலமுந் தீர
நண்டுரு மெழிற் செங்கற் பணையில் வாழும்
நயஞ்செய் சிவகாமி யம்மே யாடீரூஞ்சல்.

இந்திரையும் கலைமகளும் வடதொட் டாட்ட
விருமறையோர் பதமதிற் பூ வினிது சூட்டச்
சுந்தரி பல்லாண்டொடு சோபனங்கள் நாட்டத்
துகளறு நல் லரமகளிர் சுருதி கூட்ட
நந்தொடு பல்விய மரியி னோதை வீட்ட
நன்குலவு மருளடியார் வினையை யோட்ட
அந்தமிகு கங்கையணி யீசர் பாதம்
அமைந்த சிவகாமி யம்மே யாடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவகாமியம்மன் ஊஞ்சல்

தங்கரத்னக் கொப்பாட முருகு மாடத்
தளதளென வொளி குலவு கம்மலாடத்
துங்கமிகு பதசாலச் சதங்கையாடச்
சூடகங் கங்கண மொலித்துச் சொலித்தேயாட
மங்கையர்கள் தொண்டுபுரிந் தருகிலாட
மைந்தனிடை தனின்மேவி மகிழ்ந்தே யாடக்
கங்கையணி நடராச ரிடத்தி னாளும்
கலந்த சிவகாமியம்மே யாடீரூஞ்சல்.

பொன்னவிர் பூங்குழன் மடவார் கற்பு வாழி
புவியரசர் பசுவினங்கள் பொழிந்து வாழி
மின்னுலவு திருகோண நகரம் வாழி
விளங்கு சிவாகம மறையோர் மிகுந்து வாழி.
இன்னருள்சேர் விசுவேசர் பதங்கள் வாழி
எங்கெங்குஞ் சிவசமய மியைந்து வாழி
பன்னரிய சிவனடியார் வாழி வாழி
பரம சிவகாமி பதம் வாழிதானே.

## எச்சரிக்கை

சிவனாரொரு பால்மேவிய தேவி எச்சரிக்கை
பவமோசன கருணாகர பரையே எச்சரிக்கை.
தவமேபுரி முனிவோர் பணி தாயே எச்சரிக்கை
புவனந் துதி கைலாயம் வாழ் பொன்னே எச்சரிக்கை.

தேனார்கொன்றை விசுவேசர்பாற் சேர்ந்தாய் எச்சரிக்கை.
செப்புஞ் செங்கற்பணை மேவிய சிவையே எச்சரிக்கை.

வானோருடன் புவியோர் தொழும் மானே எச்சரிக்கை
மறையாகம முதலாய்ச் சொலும் மாதே எச்சரிக்கை.

கனமார்குழ லனநேர் நடைக் கவுரீ எச்சரிக்கை
கதியேதரு நிதியே சிவகாமி எச்சரிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமேதொழு மடியார் வினை தீர்ப்பாய் எச்சரிக்கை
செப்புங் குகன் றனைப் பயந்த தேவி எச்சரிக்கை.

சகலாகம வுருவாகிய தாயே எச்சரிக்கை
தமியேற்கருள் புரியவிது சமயம் எச்சரிக்கை.

## பராக்கு

ஆரணனுங் காணரிய அம்மா பராக்கு
ஆதிசிவனார் பாலி லமர்வாய் பராக்கு

காரணி விசாலாட்சி கவுரி பராக்கு
கந்தனை யுகந்தருளு மெந்தாய் பராக்கு.

வாலை திரிபுரை புவனை மாதே பராக்கு
மன்னுசெங்கற் பணைமீதுறை வாழ்வே பராக்கு.

வாசமலி கோணைநகர் வாழ்வே பராக்கு
வாலமதி நுதல்ஞான வல்லி பராக்கு.

## லாலி

லாலி லாலி லாலி லாலி லாலி
ஈசநடராச கோணை வாசா லாலி

மங்கை லாலி மாயன் தங்கை லாலி
வாமி யபிராமி சிவகாமி லாலி

மாரி லாலி திரி சூலி லாலி
மாதரி தயாபரி கிர்பாகரி லாலி

மன்னே லாலி மலர்ப் பொன்னே லாலி
மாட்சிமை மிகும் விசாலாட்சி லாலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளை வில்வபத்திரிக் கோணேசர் கோவில்

இவ்வாலயம் திருக்கோணமலைப் பட்டினத்தில், மின்சார நிலையவீதியில் இருக்கின்றது. ஆலயம் சிதைந்த நிலையிலிருந்தாலும், இங்குள்ள திருவுருவங்கள் இவ்வாலயத்தின் பண்டைக்காலச் சிறப்பைக் கூறும் எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. சோழர்காலச் சிற்பமுறையிலமைக்கப்பட்ட இத்திருவுருவங்கள் பின்னப்பட்டிருந்த போதிலும் ஆலயம் ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்ட வரலாற்றுப் பெருமையுடையது என்பதைத் துணிந்து கூறலாம். ஆலயம் பராபரிப்பற்றுப் பரிதாபநிலையில் இருப்பதைக் காணும்போது வேதனையாயிருக்கின்றது. "கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணேஸ்வரம்" என்று திருஞானசம்பந்தர் பாடியருளினார். சோழவம் சத்தவனாகிய குளக்கோட்டு மன்னன் திருக்கோணேஸ்வரத்தில் திருப்பணிகள் செய்து நிறைவேற்றிய காலத்தில், கோணேசப் பெருமானுக்கு பெருவிழா எடுத்த வரலாறு கோணேசர் கல்வெட்டில் கூறப்பட்டிருக்கின்றது. கோணேசப் பெருமானுடைய மகோற்சவ முடிவில் பெருமான் நகர்வலம் வருவதாகவும், அப்போது கோணேசப் பெருமான் இவ்வாலயத்தில் ஒருநாள் தங்கிச்செல்வதாகவும், இந்த ஆலயத்திற்கு முன்பக்கமிருந்த குளத்திற்குக் கோணேசப்பெருமான் தெப்பத் திருவிழாவுக்காக எழுந்தருளுவதாகவும் கர்ணபரம்பரையாகப் பேசப்பட்டு வருகின்றது. இக்காரணத்தினாலும், இவ்வாலயத்தைச் சுற்றி வெள்ளை வில்வமரங்களிருந்ததாலும், இவ்வாலயத்திற்கு வெள்ளை வில்வம் கோணேசர் கோவில் எனப் பெயர் அமைந்தது.

பிரித்தானியப் படைவீரராயிருந்த இந்திய முஸ்லீம்கள் "பஞ்சா" என்றொரு விழாவை வருடாவருடம் நடத்தி வந்தார்கள். அவர்கள் விழாமுடிவில் முக்கோண வடிவத்தில் அமைந்த அந்தப் "பஞ்சா" என்ற உருவத்தை இந்தக் குளத்திலிட்டு விழாவை நிறைவேற்றுவார்களாம். குளத்திற்குச் சமீபத்தில் ஒரு பள்ளிவாசலுமுண்டு. இதனால் இக்குளத்தைப் பிற்காலத்தில் தக்கியாக் குளம் என்றும் கூறிவந்தார்கள். 1924 இல், போத்துக்கீசர் கோணேசர் கோவிலை இடித்தழித்த பின், கோணேசருடைய பெருவிழா நடைபெறாதபடியால் இவ்வாலயமும் குளமும் பராபரிப்பற்றுக் கைவிடப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரவியம் சேர்க்கும் பேராசையினால் போத்துக்கீசர் இவ்வாலயத்தையும் அழித்திருக்கலாம். பிரித்தானியராட்சிக் காலத்தில் தக்கியாக் குளத்தில் அவர்கள் தங்கள் குதிரைகளைக் கழுவிவந்தார்கள். அதனால் இக்குளம் குதிரைக்குண்டு என்ற பெயரோடிருந்ததாக திருக்கோணமலைக் கச்சேரியில் ஒரு பதிவேடு இருந்தது. இப்போது அந்தக் குளம் தூர்க்கப்பட்டு அதன் ஒருபகுதியில் கட்டிடங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன.

இவ்வாலயத்தைச் சமீபகாலத்தில் சிலர் துப்பரவுசெய்து முன்பக்கத்தில் கிடுகினால் வேய்ந்த மண்டபமமைத்து பராபரித்து வருகின்றார்கள். திரு. செல்லையா என்பவர் ஊக்கமாக உழைத்துவந்தார். அவருக்குப்பின் அவருடைய மகன் திரு. செ. சிவசோதிராசா என்பவர் பரபரித்து வருகின்றார். செங்கற்களால் கட்டப்பட்ட தாக்கமான சுவர்களைக் கொண்ட கற்பக்கிரகமும், அர்த்த மண்டபமும் சிதைந்த நிலையில் இருக்கின்றன. கருவறையில் ஆவுடையார் இல்லாமல் சிவலிங்கம் மாத்திரம் காணப்படுகின்றன. லிங்கத்தின் பிரம்மபாகம் சதுரப்பட்டமாயும், விஷ்ணுபாகம் எட்டுப்பட்டங்கொண்டதாயும், சிவபாகம் உருளை வடிவாகவும் அற்புதமான அமைப்போடு காணப்படுகின்றன. ஆலயத்துள் கல்வெட்டொன்று பாதி உடைந்த நிலையில் இருக்கின்றது. அர்த்த மண்டபத்தில் பின்னப்பட்ட நிலையில் தெட்சணாமூர்த்தியும், அம்பாளும், நந்தி, பலிபீடமும் காணப்படுகின்றன. சிதைந்த கற்றூண்களுமுண்டு. சிவலிங்கம் பதினெட்டு அங்குலம் உயரமானது. ஒரு நாளைக்கு ஒரு தரம் பூசைசெய்து வருகின்றார்கள். பழைய சிறப்போடு அந்த ஆலயம் விளங்கத் திருவருள்தான் துணை செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கங்குவேலி சிவன்கோவில்

திருக்கோணமலை மவாட்டத்தில், கொட்டியாபுரப்பற்றிலுள்ள மூதூரிலிருந்து பதினாறு கில்லோமீற்றர் தூரத்திலுள்ளது கிளிவெட்டியென்ற சைவக்கிராமம். அங்கிருந்து மேற்கே செல்லும் பாதைவழியாகச் சென்று ஆறு கில்லோமீற்றர் தூரத்திலுள்ள கங்குவேலி என்ற கிராமத்தையடையலாம். மகாவலிகங்கையை எல்லையாகவுடைய கிராமமாதலால் இதற்கு "கங்கைவேலி" என்ற பெயரிருந்தது. காலக்கிரமத்தில் பெயர் மருவி கங்குவேலி என்று இப்பொழுது வழங்கி வருகின்றது. கொட்டியாபுரப்பற்றிலுள்ள கிராமங்களின் சரித்திரப் பின்னணிகளையும், அங்கங்கேயிருந்து அழிந்துபோன ஆலயங்களின் வரலாறுகளையும் ஆராயும்போது, திருக்கரை சையம்பதியை மத்தியஸ்தானமாகக் கொண்ட ஒரு சைவசாம்ராட்சியமே இங்கிருந்து மறைந்துவிட்டதுபோல் தோன்றுகின்றது. கங்குவேலியில் பண்டைக்காலத்திலிருந்த சிவன்கோவில் அழிவுற்ற பின்னர் கிளிவெட்டியில் வாழ்ந்த சைவமக்கள் இற்றைக்குச் சுமார் இருநூறு வருடங்களுக்கு முன் கங்குவேலியில் புதிய சிவன்கோவிலைக் கட்டினார்கள். அயல் கிராமமாகிய மல்லிகைத்தீவு மக்களும் இந்தத் திருப்பணியில் ஈடுபட்டு ஆதரித்தும் பராபரித்தும் வந்தார்கள். கங்குவேலியிலிருந்த பண்டைய சிவன்கோவில் "கல்வெட்டு" ஒன்று இப்போதுள்ள சிவன்கோவிலில் வைக்கப்பட்டிருக்கின்றது. ஆலயத்தின் ஒருபக்கம் வயல்வெளிகளும், மறுபக்கம் மக்களின் குடியிருப்புக்களும் காணப்படுகின்றன. சுமார் நூறு குடிமக்கள் இங்கு வாழ்கின்றார்கள். அபிவிருத்தி, குடியேற்றத் திட்டம் என்ற புனரமைப்பில் இந்தப் பிரதேசத்தில் பண்டுதொட்டு வாழ்ந்து வந்த சைவத் தமிழ் மக்களின் செல்வாக்கும், குடியிருப்புக்களும் பெலயீனப் படுத்தப்பட்டிருப்பதை அவதானிக்கக்கூடியதாயிருக்கின்றது.

கங்குவேலிலில் தற்போது காணப்படும் சிவன்கோவில் கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. கருவறையில் அங்குஷ்டப் பிரமாணமுள்ள சிவலிங்கமொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. இதனை ஒரு சந்நியாசி ஸ்தாபித்ததாகக் கூறுகின்றார்கள். பிள்ளையார், முருகன், சந்திரசேகரர், அம்பாள், அஸ்திரதேவர் என்னும் தாமிரத் திருவுருவங்களும், சிலையினாலான அட்டதிக்குப் பாலகருக்குரிய பலிபீடங்கள் எட்டும், நாக தம்பிரானும் அர்த்தமண்டபத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. பலிபீடங்களெட்டும் அழிந்துபோன பண்டைய சிவன் கோவிலிலிருந்தவைகள் என்று கூறுகின்றார்கள். அஸ்திரதேவர் அகஸ்தியர் ஸ்தாபனத்திலிருந்து கொண்டுவரப்பட்டு, இங்கு வைக்கப்பட்டிருக்கின்றது. அழிந்துபோன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமங்கலாய் சிவன்கோவிலில் இருந்த மணியொன்றும் இவ்வாலயத்திற் கொண்டுவந்து வைக்கப்பட்டிருக்கின்றது. அந்த மணியில் பின்வரும் வாசகம் காணப்படுகின்றது. "திருமங்கலாய் கோவிலுக்கு அவ்வூரிலிருக்கும் பத்திப்போடி மகன் பத்தனுடைய உபயம்".

இவ்வாலயத்தில் தினம் ஒரு பூசை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. சிவராத்திரி. கௌரிநோன்பு, திருவெம்பாவை முதலிய விசேட வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன. ஆடியமாவாசைக்கு அம்பாள் சமேதராக சிவபெருமான் அகஸ்தியர் ஸ்தாபனத்திற்கருகிலுள்ள மகாவலிகங்கைக்குத் தீர்த்தமாடச் செல்லும் பெருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்று வருகின்றது. பல கிராமங்களிலிருந்தும் மக்கள் இவ்விழாவுக்காக வந்து கூடுவார்கள். முதல் நாளிரவில் தீர்த்தக்கரையில் சமய, கலாசார நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும். அன்று இரவு முழுவதும் திருக்கரசைப் புராணம் படித்துப் பயன்சொல்லி நிறைவேற்றுவார்கள். உதயத்தில் தீ மிதிப்பு வைபவம் நிகழும். அதனைத் தொடர்ந்து சுவாமி தீர்த்தமாடுவார். பயங்கரமான கங்கைக்கரைக் காடு ஆடியமாவாசை இருட்டிலும் தேவலோகம்போலக் காட்சியளிக்கும். தீர்த்தமாடித் திரும்பி வரும்போது ஆலயவாசலிலுள்ள வைரவருக்கு உருண்டைச் சோறிடுதல் என்னும் வழிபாடு நடைபெறுகின்றது. கண்காணாமல் பாகம்பண்ணிய மூன்று பெரிய சோற்று உருண்டைகளை வைரவருக்குப் படைத்துப் பூசை செய்வார்கள். வைரவருக்கு நடைபெறும் இந்தப் பூசை பண்டைய வழக்கப்படி வருடத்தில் ஒருமுறைதான் நடைபெறும். கங்குவேலிச் சிவன்கோவிலில் உள்ள சுவாமி பெயர் கமலேஸ்வரன். அம்பாள் பெயர் கமலேஸ்வரி. தற்போது சிவஸ்ரீ. அ. குமாரசுவாமிக் குருக்கள் ஆலயத்திற் பூசை செய்துகொண்டிருக்கின்றார். இவ்வாலயத்தைத் துடிப்புள்ள இளைஞர்களைக் கொண்ட ஒரு பரிபாலனசபை நடத்தி வருகின்றது. சபையின் செயலாளர் திரு. வைரமுத்து சிவானந்தராசா என்பவரும், பொருளாளர் திரு. கணபதிப்பிள்ளை பாலசுந்தரம் என்பவரும் இவ்வாலயத்தைப் பற்றியும், அகத்தியர் ஸ்தாபனத்தைப்பற்றியும் தேவையான வரலாறுகளைத் தந்து உடன்வந்து உதவிபுரிந்த நன்றியை மறக்க முடியாது. திரு. எஸ். சீவரெட்டினம் என்பவர் சபையின் தலைவராயிருந்து நடத்தி வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகஸ்தியர் ஸ்தாபனம் சிவன் கோவில்
# திருக்கரைசையம்பதி

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள கொட்டியாபுரப் பற்று மகாவலி கங்கையினால் வளம் பெற்ற பெரிய பிரதேசம். அப்பிரதேசத்தில் சிவாலயங்கள் பலவற்றைக் கொண்ட திருக்கரைசையம்பதி பண்டைக்காலத்தில் தமிழ் குறுநில மன்னர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. திருக்கரைசைப்புராணம் இந்தச் செய்தியைத் தருகின்றது. திருக்கரைசையம்பதியில் திருமங்கையால் அமைக்கப்பட்ட திருமங்கலாய் சிவன்கோவில் போல, அகஸ்திய முனிவரால் சிவலிங்கம் ஸ்தாபிக்கப்பட்ட இடம் அகஸ்தியர் ஸ்தாபனம். அங்கு பிரசித்திபெற்ற சிவன்கோவில் இருந்தமைக்குரிய ஆதாரங்கள் காணப்படுகின்றன. சிவாலயம் இருந்த இடத்தில் லிங்கம், நந்தி, பலிபீடம், சுப்பிரமணியர், அஸ்திரதேவர், கோவில் வாயிற் கற்கள், கோமுகை, அபிஷேக வாசனைத் திரவியங்கள் அரைக்கும் முக்கூட்டுக்கல், வாசல் படிக்கற்கள், தூண்கள் முதலியன இன்றும் இருக்கின்றன. இவற்றை ஒன்று சேர்த்து ஒரு சிறிய கோவில் கட்டிப் பாதுகாத்து வைத்திருக்கின்றார்கள்.

இந்த இடத்திற்குச் செல்லும் மார்க்கத்தைக் கிளிவெட்டி முத்துமாரியம்மன் கோவில் வரலாற்றில் பார்க்கவும். கிளிவெட்டியிலிருந்து பதினொரு கில்லோமீற்றர் தூரத்தில் அகஸ்தியர் ஸ்தாபனம் இருக்கின்றது. கிளிவெட்டியிலிருந்து கங்குவேலிக்கூடாக மோட்டாரில் செல்லக்கூடிய பாதை இருக்கின்றது. பாதை நல்லநிலையிலில்லை. மோட்டார் வண்டிச் சொந்தக்காரன் இப்பாதையில் வண்டியைச் செலுத்த விரும்பமாட்டான். மாரிகாலமென்றால் சொல்லவேண்டாம். நடந்து சென்றாலும் வழுக்கி விழாமலிருக்க முடியாது. அகஸ்தியர் ஸ்தாபனத்திலிருந்து இரண்டு கில்லோமீற்றர் தூரத்தில் மகாவலிகங்கை கரைபுரண்டு ஓடிக்கொண்டிருக்கின்றது. திருக்கரைசையம்பதியிலிருந்த ஆலயங்கள் பண்டைக்காலத்தில் மகாவலிகங்கையின் பெருவெள்ளத்தினால் அழிந்திருக்கலாம் என்று ஊகிக்கத் தோன்றுகின்றது. வெருகலம்பதியிலுள்ள சித்திரவேலாயுத சுவாமி கோவிலைச் சுற்றியோடும் மகாவலியின் கிளையாகிய வெருகல்கங்கை, பெருவெள்ளமேற்படும் போது திசைமாறி ஓடுவதுண்டு. திருக்கோணமலை மாவட்டத்திற்குரிய வெருகல் சித்திரவேலாயுத சுவாமிகோவிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றைக்கோ ஒரு நாள் மகாவலிகங்கை மட்டக்களப்பு மாவட்டத்தோடு சோத்துவிடுமோ என்ற அச்சம் இருந்து வருகின்றது.

அகஸ்தியர் திருக்கயிலாயத்திலிருந்து தெற்கே வந்த வரலாறுகள் பல புராணங்களில் கூறப்பட்டிருக்கின்றன. அகஸ்தியர் ஒருவரா? பலரா? என்ற ஆராய்ச்சி வேறு விஷயம். திருக்கரைசைப்புராணம், திருக்கோணாசலபுராணம் என்பவைகளில் கூறப்படும் அகஸ்தியர் தமிழ் மக்கள் வாழ்ந்ததும், குறுநில மன்னர்களால் ஆளப்பட்டதும், தவம்செய்வதற்குரிய இயற்கை அமைவுகளையுடையதுமாகிய திருக்கரைசையம்பதிக்கு வந்து லிங்கஸ்தாபனம் செய்து சிவன் கோவிலைக் கட்டியிருக்கின்றார். அந்த ஆலயம் அழிந்து, காடடர்ந்து பெரும் வனமாயிருந்த காலத்தில் கிளிவெட்டிப்பகுதியில் வாழ்ந்த சில அன்பர்கள் இந்தக் காட்டுப் பிரதேசத்தில் அழிந்து கிடந்த ஆலயத்தைக் கண்டறிந்தார்கள். காடுதிருத்தி ஆராய்ந்த போது, அழிந்த ஆலயத்தின் எஞ்சியபகுதிகள் கிடைத்தன. அவற்றை ஒழுங்குபடுத்தி ஒரு கொட்டில் கோவில் கட்டி அதில் வைத்து வழிபட்டு வந்தார்கள். அருணாசலம் சுவாமி, ஸ்ரீ நாராயணசுவாமிக் குருக்கள் என்பவர்கள் பூசைவழிபாடு செய்து ஆதரித்து வந்தார்கள். அகஸ்தியர் தவம்செய்த இடமாதலால், பெரும் காடடர்ந்திருந்தபோதிலும் இயற்கையாகவே தெய்வ சாந்நித்தியம் நிறைந்த இடமாயிருப்பதை உணரக்கூடியதாயிருக்கின்றது. இதற்கருகிலுள்ள மகாவலிகங்கைக் கரையிலேதான் இருநூற்றைம்பது வருடங்களாக ஆடியமாவாசைத் தீர்த்தோற்சவம் நடைபெற்று வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லிகைத்தீவு சிவன் கோவில்

திருக்கோணமலையிலுள்ள எந்தச் சைவக்கிராமத்தை எடுத்துக் கொண்டாலும் அவைகள் தெட்சணகயிலாயம் எனப்படும் திருக்கோணேஸ்வரத்திற்கு தொழும்புவகையில் தொடர்புபட்டவைகளாகவே காணப்படுகின்றன. அப்படிச் சொல்வதில் அந்தந்தக் கிராமத்தவர்கள் கௌரவமும் பெருமையுமடைகின்றார்கள். குளக்கோட்டு மன்னனால் கோணேஸ்வரத்தோடு இணைக்கப்பட்ட கிராமங்களில் மல்லிகைத்தீவு ஒன்று. பண்டைக்காலத்தில் கோணேசர் ஆலயத்திற்கு மல்லிகைத்தீவு மக்கள் மல்லிகைப்பூ அனுப்பும் திருத்தொண்டைச் செய்துவந்தார்கள். இதனால் அவ்வூர் மல்லிகைத் தீவு எனப்பட்டது.

கொட்டியாபுரப்பற்றிலுள்ள மூதூரிலிருந்து வெருகலம்பதிக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் மூதூரிலிருந்து எட்டுக் கில்லேமீற்றர் தூரத்தில் வலப்பக்கமாக ஒரு வீதி பிரிந்து செல்கின்றது. அந்த வீதிவழியாகச் சென்றால் இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் இவ்வாலயம் இருப்பதைக் காணலாம். கொட்டியாபுரப்பற்றிலுள்ள திருக்கரைசையம்பதி மகோன்னத நிலையில் இருந்த காலத்தில் மல்லிகைத்தீவு என்ற கிராமம் அப்பதியோடு தொடர்புடையதா யிருந்திருக்கலாம். இங்குள்ள மக்கள் திருக்கரைசையம்பதி, அகத்தியர் ஸ்தாபனம், கங்குவேலி என்னுமிடங்களிலுள்ள சைவ ஆலயங்களுக்குத் தொண்டுசெய்பவர்களாகவும், நிருவாகத்தில் பங்குடையவர்களாகவும் இருந்து வந்திருக்கின்றார்கள். நாநூறு வருடங்களுக்குமுன் வாழ்ந்த சோமநாத உடையார் என்பவர் கங்குவேலி சிவன்கோவிலைப் பராபரித்து வந்துள்ளதாக அறியக்கிடக்கின்றது. குளக்கோட்டுமன்னனால் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட சிந்துநாட்டவர்கள் கொட்டியாபுரப்பற்றில் சில கிராமங்களில் குடியேற்றப்பட்டார்கள். விவசாயம் செய்து கோணேஸ்வரத்திற்கு நெல்முதலியவற்றை அனுப்பிவைக்கும் பெருந்தொண்டைச் செய்யும்படி குளக்கோட்டு மன்னனால் பணிக்கப்பட்டவர்கள். இவர்களுடைய பரம்பரை பெருகிச் செல்வாக்கடைந்த காரணத்தினால் ஆலய நிர்வாகங்களையும் நடத்தி வந்திருக்கின்றார்கள். கங்குவேலிச் சிவன்கோவில் இயற்கை ஏதுக்களால் அழிந்துவிட்டபோதிலும் ஆலயம் இருந்த இடத்தில் சிறுகோவில் கட்டி சோமநாத உடையார் பரம்பரையில் வந்தவர்கள் பராபரித்து வழிபட்டு வந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்குவேலிச் சிவன் கோவிலுக்குத் தொன்று தொட்டுப் பணிபுரிந்து வந்தவர்கள், அந்த ஆலயம் இருந்த இடத்தைச் சுற்றி வாழ்ந்துவந்தவர்கள். அந்த மக்கள் தற்போது பெருக்கமடைந்து அவர்களே இப்போது கங்குவேலிச் சிவன்கோவிலைப் பராபரித்து வருகின்றார்கள். திரு.சோமநாத உடையார் பரம்பரையில் வந்த மக்கள் மல்லிகைத்தீவில் நிலையாகக் காலூன்றிவிட்டதனால் சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன் தங்கள் ஊரிலேயே ஒரு சிவன் கோவிலைக் கட்டி சிவலிங்கமொன்றைத் தாபித்து வழிபட்டு வருகின்றார்கள். அரியமான் கேணிக் காட்டில் பெண்கள்கேணி என்ற இடத்தில் அழிந்து கிடந்த ஆலயத்திலிருந்த சிவலிங்கத்தை எடுத்துவந்து இவ்வாலயத்தில் பிரதிஷ்டை செய்திருக்கின்றார்கள். இவ்வாலயத்தை இப்போது ஒரு பரிபாலன சபை பரிபாலித்து வருகின்றது.

புதிய ஆலயம் அமைப்பதற்கு இங்குள்ள மக்கள் முயற்சி செய்து கொண்டிருக்கின்றார்கள். இப்போதுள்ள ஆலயத்திற்குப் பக்கத்தில் கற்பக்கிரகம், அர்த்த மண்டபம் என்பன கல்லால் கட்டப்பட்டிருக்கின்றன. திருப்பணிவேலையின் வேகம் போதாது. ஆலயத்தைச் சுற்றி செந்நெற்கழனிகள் பச்சைப் பசேலென்று காட்சியளிக்கின்றன. சோழநாட்டைப் பார்ப்பதுபோல் இவ்வூர் சிறப்பாக இருக்கின்றது. மக்கள் நினைத்தால் சிவலிங்கப் பெருமானுக்கு சிறப்பாக ஆலயம் அமைக்கலாம். இப்போதுள்ள ஆலயத்தில் நித்தியம் ஒருநேரப் பூசை நடைபெறுகின்றது. ஆடியமாவாசைக்குச் சுவாமியை எழுந்தருளச் செய்து மகாவலிகங்கைக் கரையில் "மடத்துத்தெத்தி" என்ற இடத்தில் தீர்த்தமாடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தளாய்ச் சிவன் கோவில்

கந்தளாய் என்ற ஊர் திருக்கோணமலைப் பட்டணத்திலிருந்து கொழும்பு கண்டி ஆகிய இடங்களுக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் முப்பதொன்பது கில்லோமீற்றர் தூரத்தில் இருக்கின்றது. ஈழத்தின் மிகப் பெரிய விவசாயப் பிரதேசங்களிலொன்றாகக் கந்தளாயும் கணிக்கப்பட்டு வருகின்றது. வரலாற்றுப் பின்னணிகள் பலவற்றைக் கொண்டுள்ள இவ்வூருக்குக் கந்தளை, கண்தளை, கந்தளாய் என்னும் திரிபுபட்ட வெவ்வேறு பெயர்களும் இருந்து வருகின்றன. காரணப் பெயர்கள் காலக்கிரமத்தில் திரிபுபட்டு வழங்கி வருகின்றன.

சமீபகாலக் குடியேற்றத் திட்டங்களால் கந்தளாயின் பண்டைய வரலாறுகள் மறைக்கப்பட்டும், மறைபட்டுக் கொண்டும் வருகின்றன. இப்படியான செயல்கள் இலங்கையில் வாழ்கின்ற தேசிய இனங்களுக்கிடையிலுள்ள சௌஜன்ய உறவுக்கு ஊனமேற்படுத்துமென்பதைச் சான்றோர்கள் அறிவார்கள். கோணேஸ்வரத்திற்குத் திருப்பணிகள் செய்து நிறைவேற்றிய குளக்கோட்டு மன்னன், விவசாயத்தை விருத்தி செய்து அதனால் கிடைக்கும் பிரயோசனங்களால் கோணேசர் கோவிலைப் பராபரிப்பதற்காக அல்லைக்குளம், வெண்டரசன் குளம் என்பவற்றை கட்டி இரண்டாயிரத்து எழுநூறு அவணம் நெல்விதைக்கும் விதைப்புத் தரையை உண்டாக்கினான். இந்த நிலங்களில் விவசாயம் செய்வதற்காகவும், திருக்கோணேஸ்வரத்தின் தொழும்புகளைச் செய்வதற்காகவும், மருங்கூர், காரைக்கால், சிந்துநாடு என்னுமிடங்களிலிருந்து மக்களைக் கொண்டுவந்து குடியேற்றினான். குளக்கோட்டு மன்னனால் உண்டாக்கப்பட்ட விவசாயப் பூமிகளை நீர்ப்பாய்ச்சுவதற்கு அல்லைக்குளம், வெண்டரசன் குளங்களின் நீர் போதாமையினால் கந்தளாய்க் குளத்தைக் கட்டி மகாவலிகங்கையிலிருந்து வாய்க்கால் மூலம் கந்தளாய்க் குளத்தில் நீரைத் தேக்கினான். இந்தக் குளத்தினுதவியால் விரிவான திட்டத்தில் விவசாயம் நடைபெற்று வந்தது என்ற வரலாறுகள் கோணேசர் கல்வெட்டில் கூறப்பட்டிருக்கின்றது.

இற்றைக்கு ஆயிரத்து ஐநூறு வருடங்களுக்கு முன், குளக்கோட்டு மன்னனுடைய திட்டபிரகாரம் சைவத் தமிழ் மக்களின் குடியிருப்புக்களும், பிராமணக் குடியிருப்புக்களும் கந்தளாயில் இருந்து வந்தன. பேராசிரியர் செ. குணசிங்கமவர்களுடைய கல்வெட்டு ஆராய்ச்சிகள் இதனை உறுதிப்படுத்துகின்றன. 1952ஆம் ஆண்டுக்குப் பின் கந்தளாயிலும் அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும் இலங்கை அரசாங்கம் குடியேற்றத் திட்டங்களைச் செயல்படுத்தியபோது அங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேறியவர்கள் நிலத்தினடியிற் கண்டெடுத்த பிள்ளையார், அம்பாள், மகாவிஷ்ணு முதலிய இந்துசமயத் திருவுருவங்களும் இதனை உறுதிப்படுத்துகின்றன.

இந்தியாவில் சோழராட்சி மகோன்னத நிலையில் இருந்த காலத்தில் அவர்களுடைய செல்வாக்கு இலங்கையிலும் பரவியிருந்தது. பொலனறுவை, திருக்கோணமலை, கந்தளாய், திருக்கரசை போன்ற இடங்களில் சோழப்பேரரசின் செல்வாக்கினால் சிவன் கோவில்கள் கட்டப்பட்டன. கி. பி. 1010ஆம் ஆண்டு இராசேந்திர சோழன் கந்தளாயில் சிவன்கோவிலைக் கட்டினான். மிகப்பெரிய சரித்திர வரலாற்றைக் கொண்ட இந்தச் சிவன் கோவில், தமிழர்களின் வரலாற்றையும் சைவசமயத்தின் பண்டைப் பெருமையையும், பிராமணக் குடியிருப்புகளின் தொன்மையையும் நினைவுபடுத்துகின்றது. கந்தளாயில் போட்டங்காடு என்னுமிடத்திலுள்ள சிவன் கோவிலின் கருங்கற் திருப்பணிச் சிதைவுகளும், திருவுருவங்களும் மண்ணில் புதைந்தும் புதையாமலும் காட்சியளிக்கின்றன. குடியேற்றத்திற்காக அரசாங்கத்தினால் காடுகள் அழிக்கப்பட்டபோது 1952ஆம் ஆண்டு இந்தச் சிவன் கோவில் கண்டு பிடிக்கப்பட்டது. அப்போது கிடைத்த கருங்கற் திருவுருவங்களை, அதன் அருமைதெரியாத தொழிலாளிகளும், தெரிந்தும் அதனை மறைக்கவேண்டுமென்ற விகார புத்தி படைத்த புத்திசாலிகளும் அழித்துச் சிதைத்து மறைத்து விட்டார்கள். அந்தச் சிவன்கோவிலை அத்திவாரத்தோடு மறைக்க முடியாத காரணத்தினால் எஞ்சியுள்ள பின்னப்பட்ட இரண்டு சிவலிங்கங்களும், இரண்டு ஆவுடையாரும், சிவன் பார்வதி சிலைகளின் சிதைந்த பாகங்களும் பீடங்கள், பின்னமடைந்த நந்தி, கருங்கற்தூண்கள், படிக்கற்கள், நிலைகள், ஆசனக் கற்கள் என்பன இராசேந்திர சோழனால் கட்டப்பட்ட சிவன் கோவிலின் சிறப்பு வரலாற்றுக்கு எடுத்துக் காட்டுக்களாக விளங்குகின்றன.

இங்கு கண்டெடுக்கப்பட்ட இரண்டு கற்சாசனங்களில் இவ்வாலயத்தின் வரலாறுகளும், பதினோராம் நூற்றாண்டில் தமிழர்களின் அரசியல் செல்வாக்குகளும் விரிவாகவும், தெளிவாகவும் கூறப்பட்டிருக்கின்றன. நிசங்கமல்லன் கந்தளாயைத் தன்னாட்சிக்குட் கொண்டுவரப் பிராமணக் குடியேற்றம் தடையாயிருந்ததென்பதையும் சைவத் தமிழரின் செல்வாக்கு வலுப்பெற்றிருந்ததென்பதையும் அறியக்கூடியதாயிருக்கின்றது. கந்தளாய்ச் சிவன்கோவிலுக்குச் செல்லும் வீதியில் 1977 ஆம் ஆண்டு கந்தளாய்ச் பட்டினசபையினரால் வடிகால் வெட்டும் போது ஒரு வெண்கலச் சிலையும், பூசைமணியும் கண்டெடுக்கப்பட்டன. அந்தச் சிலை நாயன்மார்களில் ஒருவருடைய சிலை என்று திரு. கனக-தாமோதரம்பிள்ளை என்பவராலும், வேறு சில அன்பர்களாலும் அடையாளம் காணப்பட்டு தொல்பொருள் நிலையத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. இந்தச் சிலையும், மணியும், பண்டைச் சிவன் கோவிலின் சிறப்பை நினைவுபடுத்துகின்றன.. இந்தக் கோவிலின் கிழக்குப் பக்கமாக நானூறு மீற்றர் தூரத்தில் தெப்பக் குளம் இருந்திருக்கலாமென ஊகிக்கலாம். ஆரம்பக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேற்றவாசிகளால் அந்த இடம் குளப்பள்ளம் என்று அழைக்கப்பட்டு வந்தது. இந்தத் தகவலை வயோதிப முஸ்லீம் ஒருவர் கூறக்கேட்டேன். இந்தக் கோவிலைச் சுற்றிச் சைவத் தமிழ்க்குடும்பங்களே சீவிக்கின்றன. இவர்கள் 1954ஆம் ஆண்டு இங்கு குடியேற்றப்பட்டபோது தங்களது நிலங்களைப் பண்படுத்தினார்கள். அவ்வேளையில் ஒரு செங்கற் பாதை காணப்பட்டதாகக் கூறினார்கள். அப்பாதை கோவிலின் தெற்கு மூலையில் இருநூறு மீற்றர் தூரத்திலிருந்து ஆரம்பமாகி கிழக்குப்பக்கமாகக் கோவிலை நோக்கி அமைந்திருந்ததாம். தேரோடும் வீதியாக அது அமைந்திருக்கலாம். முன்பு வெண்கலச் சிலை கிடைத்த இடத்தில் 1945 ஆம்–50 ஆம் ஆண்டுக் கால எல்லைக்குள் விநாயகரின் கற்சிலையொன்று கண்டெடுக்கப்பட்டு மறைக்கப்பட்டுவிட்டதாக அறிகின்றோம். கந்தளாய்க் காடுகளிலிருந்த பல கோவில்கள் அழிக்கப்பட்டதை நேரில் கண்டவர்கள் இன்றும் கூறுகின்றார்கள்.

இராசேந்திர சோழனால் கட்டப்பட்டு அழிந்துபோன சிவன் கோவில் 1960 ஆம் ஆண்டு புனரமைப்புச் செய்யப்பட்டு 1975ஆம் ஆண்டு ஆனி மாதம் பத்தொன்பதாம் திகதி குடமுழுக்குவிழா நடைபெற்றது. கருவறையில் நிலத்திலிருந்து வெளிப்பட்ட சிவலிங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. மூன்றுகாலம் நித்திய பூசைகளும், கும்பாபிஷேகதினத்திற்கு அலங்காரப் பூசைகளும், விஷேடகால பூசைகளும் நடைபெற்று வருகின்றன. ஸ்ரீ.செல்லையா குருக்கள் பூசைகளைச் செய்து வருகின்றார். ஊர்ப்பொதுமக்கள் பரிபாலன சபையமைத்து கோவிலைப் பராபரித்து வருகின்றார்கள். தமிழ் மக்கள் சென்று தரிசிக்க வேண்டிய ஓர் இடமாக கந்தளாய்ச் சிவன்கோவில் விளங்குகின்றது. இந்தக் கோவில் வரலாறுகளைத் தந்துதவிய திரு. கனக தாமோதரம் பிள்ளை அவர்களுக்கு என்றும் நன்றிக்கடப்பாடுடையேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவயோகபுரம் நடேசர் ஆலயம் கன்னியாய்

இலங்கையிலுள்ள ஒரேயொரு நடேசர் ஆலயம் என்ற தனிப்பெருமையை உடையது இவ்வாலயம். திருக்கோணமலையிலிருந்து அனுராதபுரம் செல்லும் நெடுஞ்சாலையில் திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து ஐந்து கில்லோமீற்றர் தூரத்தில் இவ்வாலயம் இருக்கின்றது. மூன்று பக்கமும் மலைகள் சூழ்ந்துள்ள ஒரு சமவெளியில் ஆண்டான் குளத்திற்குச் சமீபமாக இருக்கும் இவ்வாலயம் அமைதியான சூழலில் அமைந்திருக்கின்றது. சுற்றியுள்ள வயல்வெளிகள் அமைதியைக் காத்து ஆத்மீக சுகத்தையளிக்கின்றது. இங்கிருந்து மூன்று கில்லோமீற்றர் தூரத்தில் பிரசித்திபெற்ற கன்னியாய் வெந்நீரூற்றுக்கள் இருக்கின்றன. குளக்கோட்டு மன்னன் கட்டிய கோணேசர் கோவில் போத்துக்கீசரால் அழிக்கப்பட்டபின் கோணேசப் பெருமானுக்கு புதியதோர் ஆலயம் அமைக்குந் திருப்பணியை நிறைவேற்றி 1963ஆம் ஆண்டு கோணேசப் பெருமானுக்கு முதற் கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்த தருமசீலரும், திருக்கோணமலை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமாகிய திரு.ந.இ.இராஜவரோதயம் அவர்கள் தர்மசாதனம் செய்த காணியில் நடேசர் ஆலயம் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது.

சமய, சமூகப் பணிகளால் மக்களுக்குத் தொண்டு செய்து கொண்டிருக்கும் சிவயோக சமாஜத்தை ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா அவர்கள் ஸ்தாபித்தார்கள். திருக்கோணேஸ்வரத்தில் கருவுற்ற சிவயோக சமாஜம் திருக்கோணமலைப் பட்டினத்தில் அருளொளி வீசிக்கொண்டிருக்கின்றது. இந்த யோகாச்சிரமம் ஆழ்கடல் முத்துப்போல அகில உலகத்திற்கும் அமைதியாகச் சேவை செய்துகொண்டிருக்கின்றது. சேவைகளுக்கு மகுடம் வைத்தாற்போல விளங்குவது இந்த நடேசர் ஆலயம். சுவாமிஜீயின் இதயாலயத்தில் ஆனந்தத் தாண்டவமாடிக்கொண்டிருக்கும் அம்பலக் கூத்தனுக்கு சிவயோகபுரத்தில் நடேசர் ஆலயத்தை நிர்மாணித்துள்ளார். இலங்கையில் நடராஜப் பெருமானுக்குத் தனிக்கோவில் இல்லாதிருந்த குறையை நிறைவுசெய்து முதன் முதல் நடேசராலயத்தைச் சுவாமி கெங்காதரானந்தா ஜீயவர்கள் அமைத்துள்ளார்கள். கருவறையில் சிதம்பரத்திலிருந்து யாழ் நகர் பொறியியலாளர் ஸ்ரீ.இ.வைத்திலிங்கம் அவர்களால் கொண்டுவரப்பட்ட நடராஜத் திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தின் உள்வீதியின் நிருதிமூலையில் விநாயகருக்கும் வாயுமூலையில் பாலசுப்பிரமணியருக்கும், ஈசானத்தில் வைரவருக்கும் தனித்தனியே அழகிய ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளன. மணிக்கோபுரமும் கெம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. பஞ்சாக்கரப் படிகளையுடைய அம்பலத்தோடு சிற்சபையுள் சிவகாமசுந்தரி சமேதராக நடராஜப் பெரமான் அனவரதத் தாண்டவமாடிக்கொண்டிருக்கும் அருட்கூத்தை அடியார்கள் கண்டுகளிக்கவேண்டிய அழகிய ஆலயமாக இது அமைந்திருக்கின்றது. பஞ்சாக்கரப் படியை அடுத்து மகாமண்டபம், ஸ்நபன மண்டபம், தெரிசன மண்டபம் யாவும் சாஸ்திர விதிகளுக்கமைவாக, புதுமைப் பொலிவோடு அழகாகக் கட்டப்பட்டிருக்கின்றன. மாறுபடாத இந்துமத தத்துவங்கள் நிலையாயிருப்பதனையும், மாறுபட்டுவரும் மக்களுடைய வாழ்க்கையின் எதிர்காலப் சுபீட்சத்தையும், சென்நெறியையும் கருத்திற் கொண்டு இவ்வாலயத்தை ஸ்ரீமத் சுவாமி கெங்கதாரானந்தா அவர்கள் அமைத்துள்ளார்கள். தொடர்ந்து ராஜகோபுரத்தையும் நிர்மாணிப்பதற்கு சுவாமிஜீயுடைய திருவுள்ளத்தில் எண்ணம் நிறைந்திருக்கின்றது. மக்கள் தங்கியிருந்து வழிபாடு செய்வதற்கும், யோகசாதனைகள் பயில்வதற்கும் மடங்களும் கட்டப்பட்டிருக்கின்றன.

இவ்வாலயத் திருப்பணியைச் சுவாமிஜீயவர்கள் 1970ஆம் ஆண்டு ஆரம்பித்து, 1972ஆம் ஆண்டு ஆனிமாதம் பன்னிரண்டாம் திகதி மகாகும்பாபிஷேகத்தைச் செய்துவைத்தார்கள். இவ்வாலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் நடராஜ மூர்த்தியைச் சிதம்பரத்திலிருந்து கொண்டுவந்து யாழ்ப்பாணத்தில் பத்து நாட்களாக நடைபெற்ற மகாயாசிரமத்திற்குக் கொண்டு வந்தார்கள். யோகாச்சிரமத்திலிருந்து நகர்வலமாகச் சென்று இங்குள்ள ஆலயங்களுக்குத் தரிசனங்கொடுத்து, சைவமக்கள் பயபக்தியோடு தொடர சைவஸ்தாபனங்கள் பஜனை செய்து கொண்டு சிவயோகபுரத்திற்கு எழுந்தருளச் செய்து பிரதிஷ்டை செய்தார்கள்.

சாஸ்திரோத்தமான கிரியைகளோடு ஜலாசயப் பிரதிஷ்டையாக நடராஜப் பெருமான் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றார். இம்மாபெரும் திருப்பணிக்கு சுவாமிஜீயவர்களுக்கு அணுக்கத் தொண்டர்களாயுள்ள சில அன்பர்கள், உடனிருந்து திரிகரண சுத்தியோடு உதவிபுரிந்தார்கள். அவர்கள் நினைவிலிருத்தப்படவேண்டியர்வர்கள். திருக்கோணமலையில் இவ்வாலயம் ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. பூஜைகள், பூஜைக்குரிய திரவியங்கள், பூஜாமுறைகள் ஆகமசாஸ்திர முறை வழுவாமல், கால தேச வர்த்தமானத்திற்கேற்ற வகையில் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. கடந்த காலத்தையும், இனிவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தையும் கருத்திற்கொண்டு இவ்வாலயம் இயங்கிவருகின்றது. சைவசமயத்தவர்கள் உன்னிப்பாகக் கவனித்தால் உண்மைவிளங்கும். மன அமைதியைத்தேடிச் சுவாமிஜீயிடம் வரும் அன்பர்களுக்கு நடேசராலயம் புகலிடமாயிருந்து வருகின்றது.

தினமும் காலைச்சந்தி, உச்சிக்காலம், மாலைச்சந்தி ஆகிய மூன்றுகாலப் பூசைகள் நடைபெற்று வருகின்றன. நடராஜப் பெருமானுக்குரிய ஆறு அபிஷேகங்களும், அலங்காரப் பூஜைகளும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. திருவெம்பாக் காலங்களில் சிவயோக சமாஜத்திலிருந்து நாம சங்கீர்த்தனம் செய்துகொண்டு இவ்வாலயத்திற்கு அடியார்கள் வந்து சேர்வார்கள். திருவாதிரைவிழா பெருவிழாவாக நடைபெறுகின்றது. சிவராத்திரி விழாவும் இங்கு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. கன்னியாய், அன்புவழிபுரம், பாலையூற்று, பாரதிபுரம், வரோதயநகர் முதலிய அயல்கிராமங்களிலிருந்தும், வேறு பல ஊர்களிலிருந்தும் மக்கள் வந்து வழிபட்டுச் செல்கிறார்கள். சிவஸ்ரீ.வி.சிவசாமிக் குருக்கள் தற்போது ஆலயப் பூஜைகளைச் செய்துவருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவயோகபுரம்
# சிவகாமிசுந்தரி சமேத நடராஜப் பெருமான்
# திருவூஞ்சல்

ஆக்கியோன்:
சைவப்புலவர்- பண்டிதர் திரு. இ. வடிவேல் அவர்கள்
*திருக்கோணமலை*

## விநாயகர் துதி

முந்தை வினைகடிந்து மூவாசை தான்தடிந்து
பந்தமறச் சிந்தை யிருள்பறித்து –எந்தாமும்
வந்தருளும் வாரணமே வாழ்வளிக்கு மானைமுக
ஐங்கரனே நின்தாள் சரண்.

## நூல்

காரோங்கு கோணமலை யமர்ந்து நாளும்
கருணைமழை பொழிந்தருளுங்கோணை நாதன்
பேரோங்கு பெரும்பதிகள் பலவு ளொன்றாம்
பிரிவிலா வடியர் மனப் பிணிகள் தீர்க்கும்
சீரோங்கு சிவயோக புரத்தில் மேவித்
திருநடஞ்செய் நடராஜ வள்ளல்மீது
ஊரோங்கு மூஞ்சலிகை யினிது பாட
ஓங்கார விநாயக நீ யருள்செய்வாயே.

நல்லொளிசேர் நவமணிகள் தூண்களாக
நவையிலா வைரமதால் விட்டம் பூட்டி
சொல்லரிய ஆணிமுத்து வடங்கள் மாட்டித்
துலங்குமுயர் நால்வேத மீடமீது
தில்லையிலே யாடுகின்ற கூத்தன் செல்வ
நடராஜர் தேவியோடு மினிதமர்ந்து
செல்வநிறை சிவயோக புரத்தில் வாழும்
சிவயோக நடராஜர் ஆடீருஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயவனோ டயனு மகபதியு முந்தன்
மலரடியே சரணமென மகிழ்ந்து போற்ற
தூயதவ யோகியருந் தேவர் தாமுந்
தூமலர்கள் தூவியுனைத் துதித்து நிற்க
ஆயசதுர் வேதமொடு மாகமங்கள்
அந்தணர்க ளோதியுனை யஞ்சலிக்க
நேயமொடு தொண்டுசெயு மடியர் சூழுஞ்
சிவயோக நடராஜர் ஆடீருஞ்சல்.

கலைமகளுங் கந்தருவர் தாமும் வந்து
கானமழை பொழிந்துன்னைக் கனிந்து பாட
தகைமையொடு நாரதர் யாழ் தாங்கி மீட்டத்
தத்தித்தோ மென்று நந்தி மேளங் கொட்டப்
பலகலையு மோதுமயன் சுருதியோடு
பாங்குடனே தாளலய மோங்கி நிற்க
மலைமங்கை சிவகாமி யம்மையோடு
சிவயோக நடராஜர் ஆடீருஞ்சல்.

ஊரிலான் பேரிலான் ஒன்றுமில்லான்
எல்லாமா யிருக்கின்ற தன்மை காட்டிச்
சீரோங்கு சிதம்பரத்தே நடனமாடிச்
சிதாகாச வெளிக்குள்ளே சிவமாய் நின்று
பாரிலுயர் சிவயோக புரத்தே மேவிப்
பாங்கொடுநற் கோயில்கொண்ட பரனே ஞானச்
சீரிலங்க சிவகாம சுந்தரியாளோடும்
சிவயோக நடராஜர் ஆடீருஞ்சல்.

அன்றுனது நடங்காணு மார்வ முந்த
அருந்தவத்து முனிவர் பதஞ்சலியினோடு
என்றுமுன தடிபரவும் வியாக்ரபாதர்
இருவருமே தில்லையிலே யெல்லையில்லா
மன்றுநடங் கண்டு கண்டு மகிழ்வு செய்ய
மதிநதிசெஞ் சடையாட மங்கையோடு
குன்றுபுடை சூழுசிவ யோகபுரமேவும்
சிவயோக நடராஜர் ஆடீருஞ்சல்.

பானல்வாய் மலந்தழுத பாலனுக்குப்
பாலமுத மூட்டியுயர் ஞானங் கூட்டிச்
சீலமொடு சிவயோக நெறியுங் காட்டுஞ்
சிவகாம சுந்தரியோ டாடீரூஞ்சல்
வானவர்கள் நாடோடு வையமுய்ய
ஐந்தொழில்செய் யெந்தை சிவலோக நாதா
தேனருவி சிந்துசிவ யோகபுர மேவும்
சிவயோக நடராஜர் ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவயோகபுரம்- திருவூஞ்சல்

விரித்த செஞ்சடையாட விளங்கு மார்பில்
வெண்டரள மாலைமுப் புரிநூலாட
தரித்த நதி மதியாடத் தவள மேனி
தாங்கிய கங்கணமாடக் கலிங்கமாட
வெறித்தபுலி யதளாடக் குண்டலமுமாட
விளங்குமண்ட சராசரங்க ளனைத்துமாட
நரிக்குலங்கள் பரிக்குலமா யாக்கவல்ல
சிவயோக நடராஜர் ஆடீரூஞ்சல்.

ஊனாகி யுயிராகி யொளியுமாகி
உள்குவா ருள்ளத்தோங் காரமாகி
வானாகி மண்ணாகி வளியு மாகி
வளர்கின்ற தீயாகி நீருமாகி
நானானெனுமரிக்கு மயன்தனக்கும்
நண்ணாத பொருளாகி நானிலத்தே
கோனாகி யோகபுரக் கோவில் கொண்ட
சிவயோக நடராஜர் ஆடீரூஞ்சல்.

சிவயோக முனிவரோடு மறைக ளோதும்
சீர்பெருகு மந்தணரு மாவும் வாழி
அகமாயை கெடம்பணியு மடிய ரோடு
ஆகமநூ லறநெறியும் வாழி வாழி
இகபோக பரசுகமும் ஈவாய் வாழி
எடுத்த திருவடி வாழி ஈசா வாழி
சிவகாம சுந்தரியோ டுஞ்சலாடும்
சிவயோக நடராஜர் வாழி வாழி.

### லாலி

லாலி லாலி லாலி லாலி லாலி
சச்சிதானந்தப் பொருளே லாலி லாலி

அம்பலத்தில் ஆடுகின்ற ஆதி லாலி
ஆனந்த நடராசரே லாலி லாலி

இகபர சுகமருளும் எந்தாய் லாலி
ஈஸ்பரியாள் சிவகாமி நேசா லாலி

உலகமுய்யத் தாண்டவங்கள் ஆடுங்கோவே
ஊழ்வினைகள் தீர்த்தருள்வாய் லாலி லாலி

எவ்வுயிர்க்குந் தானாகி நின்றாய் லாலி
ஏதங்களறுத்து எம்மை யாள்வாய் லாலி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தொழிலுக் கதிபதியே லாலி லாலி
அல்லலறுத் தெமையாள்வாய் லாலி லாலி

ஒளிக்குள் ஒளியாகி நின்றாய் லாலி லாலி
ஓங்கார தத்துவமே லாலி லாலி

சிவயோக புரத்தரசே லாலி லாலி
சீரடியார் வாழ அருள் செய்வாய் லாலி

## எச்சரிக்கை

அடியார்மனத் தருளாடல்செய் நடராஜநற் பொருளே
ஆதிசிவ காமிமகிழ் அரசே எச்சரிக்கை

இகலோகமும் பரலோகமும் ஈவாய் எச்சரிக்கை
ஈசா சிவயோக புரத் தேவா எச்சரிக்கை

உலகேழொடு ஏழுமுய்ய உயிர்ப்பாய் எச்சரிக்கை
ஊனுடலுள் ஞானநட மருள்வாய் எச்சரிக்கை

எண்ணியநான் எண்ணியதை ஈவாய் எச்சரிக்கை
ஏகாந்தத்தி லின்பமதை ஈவாய் எச்சரிக்கை

ஐங்கரனு மாறுமுகன் ஆனாய் எச்சரிக்கை
அண்டமொடு பிண்டமெலா மானாய் எச்சரிக்கை

ஒன்றாகியும் பலவாகியும் நின்றாய் எச்சரிக்கை
ஓவாதநற் சத்தத்தின் ஒலியே எச்சரிக்கை

தேவாரநற் பதிகம் பெறு திருக்கோணநன் நகரில்
சிவயோகபுரம் மேவிய சிவமே எச்சரிக்கை.

## பராக்கு

அருள்தவழு மம்பலத் தரசே பராக்கு
ஆதியந் தமுமிலா அமுதே பராக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவிலா நிறைவாகி நின்றாய் பராக்கு
குறையெலாந் தீர்த்தெமை ஆள்வாய் பராக்கு
மறையுமாய் மறைபொருளு மானாய் பராக்கு
மாதவர்கள் உள்ளமதி நிறைவாய் பராக்கு
சிற்சபையி லாடுகின்ற சிவமே பராக்கு
சீர்பரவுவார் துயரந் தீர்ப்பாய் பராக்கு
சிவகாம சுந்தரி மணாளா பராக்கு
சிவனடியார் சிந்தைநிறை செல்வா பராக்கு
அரியயனு மிந்திரனு மானாய் பராக்கு
அரியதமிழ் ஆரியமு மானாய் பராக்கு
அரியபொரு ளானநின் திருவடிகள் தொழுத
பிரிவிலா அடியர்துயர் தீர்ப்பாய் பராக்கு
சிவயோக புரமதனில் உறைவாய் பராக்கு
சிவகாம சுந்தரி சமேதா பராக்கு.

## மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் ஜெய ஜெய
மங்களம் மங்களம் மங்களம்

தந்திமுக ஐங்கரர்க்கும் கந்தனுக்கும் மங்களம்
பந்தமகல் கோணையி லமர்ந்த கோணை நாதருக்கும் (மங்)

அம்மைசிவ காமியோடு ஆடல்புரிவார் தமக்கு
செம்மைநிறை சிவபுரத்துச் செல்வநடராஜருக்கும் (மங்)
நாரணர்க்கும் நான்முகற்கும் நற்றமிழ்சொல் பாவலர்க்கும்
ஆரணங்க ளோதுகின்ற அந்தணற்கும் அடியவற்கும் (மங்)

சிவயோக புரமதனில் சேரும்பல மாந்தருக்கும்
தவயோக ஞானியற்கும் தண்ணளிசேர் தாசருக்கும் (மங்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம்
# திருக்கோணமலை

இந்த ஆலயம் திருக்கோணமலைப் பட்டினத்தின் இருதய ஸ்தானம்போல் அமைந்திருக்கின்றது. திருக்கோணமலைப் புகையிரத நிலையத்திலிருந்து ஒரு கில்லோமீற்றர் தூரத்தில் பேருந்து நிலையத்திற்குச் சமீபத்தில் டொக்கியாட் வீதிக்கு அருகாமையில் உள்ளது. ஆலயத்திற்கெதிரே பரந்த விளையாட்டு மைதானமும், அதையடுத்து விரிந்து பரந்து கிடக்கும் இந்து சமுத்திரமும் இவ்வாலயத்திற்கு இயற்கையழகை ஊட்டிக்கொண்டிருக்கின்றன.

ஈழநாட்டின் தலைசிறந்த புண்ணிய க்ஷேத்திரமாகிய பாடல்பெற்ற திருக்கோணேஸ்வரத்தை இவ்வாலயத்தில் நின்றபடியே தரிசிக்கலாம். அம்பாளின் அருட்கடாட்சம் கோணேஸ்வரத்தில் படிய, கோணேஸ்வரப் பெருமானின் கிருபாகடாட்சம் அம்பாளுடைய ஆலயத்தில் நிறைந்துகொண்டிருப்பதுபோன்ற உணர்வு, இவ்வாலயத்தில் நிற்கும்போது ஏற்படுகின்றது. ஆலயத்தின் உள்ளும், புறமும் எப்பொழுதும் புனிதமாகவேயிருக்கும். ஆலய தர்மகர்த்தாவாகிய பிரம்மஸ்ரீ சு.கு. சோமஸ்கந்தக் குருக்களும், வழிபடவரும் அடியார்களுக்கும் பக்திவிஸ்வாசத்தோடு கூடிய அன்புத்தொடர்பு இருந்துவருகின்றது. இது ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் அருட் செயலென்றே கூறலாம். இதனால் இவ்வாலயத்தைச் சிறப்பாகவும், புனிதமாகவும் வைத்திருப்பதில் ஆதீனகர்த்தருக்கும், அடியவர்களுக்கும் அக்கறை இருந்து வருகின்றது.

இவ்வாலயத்தின் வரலாறுகளைத் திட்டவட்டமாக வரையறுத்துக் கூறமுடியவில்லையென்றாலும் இவ்வாலயத்தில் கிடைத்துள்ள கல்வெட்டுகள், பழைய சாசனங்கள், கர்ண பரம்பரையாக வழங்கிவரும் கதைகள், அக்கதைகளோடு தொடர்புடையதாய் தற்போது ஆலயத்திலிருக்கும் விக்கிரகம், தகளி, வாகனம், மற்றும் பொருட்களாகியவற்றை ஆதாரமாகக்கொண்டு முதலாம் இராஜேந்திர சோழனுடைய காலமாகிய பதினோராம் நூற்றாண்டில் இவ்வாலயம் சிறப்புற்று இருந்திருக்க வேண்டுமென்று சரித்திரப் பேராசிரியர் திரு.செ.குணசிங்கம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இதனால் இவ்வாலயம் அதற்கு முற்பட்ட காலத்திலிருந்தே வழிபாட்டுக்குரிய ஸ்தலமாக இருந்துவந்துள்ளதென்பதைத் துணிந்து கூறலாம். தற்போது இவ்வாலயமிருக்குமிடத்தில் பன்னெடுங்காலத்திற்கு முன்பு நிலத்தை அகழ்ந்தபோது 'ஒரு தகளி கிடைத்ததாகவும்' அதற்குள்ளே அம்பாளின் திருவுருவம் (தாமிரவிக்கிரகம்) இருந்ததாகவும் கூறுகின்றார்கள். அந்தத் திருவுருவம் இப்போதும் ஆலயத்திலிருக்கின்றது. சில விசேஷ உற்சவங்களுக்கு இந்த அம்பாளை எழுந்தருளச் செய்வார்கள். சிங்கவாகனம் ஒன்றை இந்தியாவிலிருந்து கப்பலில் ஏற்றி கொண்டு இந்து சமுத்திரத்தில் ஒருகப்பல் சென்றுகொண்டிருந்ததாயும், ஸ்ரீ பத்திரகாளியம்பாள் ஆலயத்திற்கு நேராக இக்கப்பல் ஓடாமல் நின்றுவிட்டதாகவும், அம்பிகையின் அருளால் கப்பற்தலைவன் கண்ட சொற்பனத்தின்படி அந்தச் சிங்கவாகனத்தை இவ்வாலயத்திற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்த பின்னரே கப்பல் ஓடத்தொடங்கியதென்றும் கர்ணபரம்பரைக் கதையொன்று கூறப்படுகின்றது. அந்தச் சிங்கவாகனமும் இவ்வாலயத்திலிருக்கின்றது. மேலே குறிப்பிட்ட கல்வெட்டும் ஆலயத்திலிருக்கின்றது.

சுமார் நானூறு ஆண்டுகளுக்குமுன் நிகழ்ந்ததாகக் கூறப்படும் கர்ணபரம்பரைக் கதையொன்று ஸ்ரீ பத்திரகாளி அம்பாளிடத்துப் பயபக்தியை ஸ்திரப்படுத்திக் கொண்டிருக்கின்றது. பண்டைக்காலத்தில் இவ்வாலயத்திலும், ஆலயச் சூழலிலும் அனாச்சாரமாக நடந்துகொள்வதற்கு மக்கள் பயப்படுவார்களாம். இன்றுமப்படித்தான். ஒருநாள் ஒரு யாவுகப்பெண் தலைவிரிகோலமொடு அம்பாளுடைய சந்நிதானத்திற்கு முன்பாக உதாசீனமாகச் சென்றாளாம். அதனால் அப்பெண்ணுடைய தலை ஒருபக்கம் திரும்பிவிட்டதாம். (கழுத்து வாங்கல்) அம்பாளுக்கு அபசாரம் செய்துவிட்டதாக அப்பெண் சொற்பனங்கண்டு, குற்றத்தையுணர்ந்து ஆலயத்திற்கு வந்து தனது தலைமயிர்களைக் கத்தரித்து நேர்கடனாகச் கொடுத்தபின்புதான் தலையைச் சரியான நிலைக்குத் திருப்பக் கூடியதாயிருந்ததாம். அந்தப் பெண் தனது தலைமயிரை நேர்கடனாகக் கொடுத்தாளாம். அதனைப் பாதுகாத்து வைத்திருந்து மகிஷாசூர சம்மாரம் நடைபெறும்போது அம்பாளுடைய சடைமுடியோடு சேர்த்துக் கட்டி அலங்கரிக்கும் வழக்கம் இருந்துவந்ததாம். அந்த மயிர்களில் ஒருபகுதி இன்றும் இருப்பதாகக் கூறுகின்றார்கள்.

முன்னொருகாலத்தில் இவ்வாலயத்திற் பூசை செய்து கொண்டிருந்த குருக்கள் ஒருவர், இரவு பூசையை முடித்துக் கொண்டு திருக்கதவை அடைத்துக்கொண்டு வீட்டுக்குச் சென்று விட்டார். தனது பிள்ளை ஆலயத்தினுள்ளிருந்ததை அவர் காணவில்லை. வீட்டுக்குப்போய்ச் சாப்பாட்டுவேளையில் பிள்ளையைக் காணாமல் எங்கும் தேடிவிட்டு ஆலயத்திற்கு வந்து பார்த்தபோது, பிள்ளை அங்கிருப்பதைக் கண்டு மனைவியிடம் கூறினாராம். பூசை முடிந்து கதவடைத்தபின் ஆலயத்தைத் திறப்பது சாஸ்திரவிரோதமானது. அதனால் காலையில் பார்க்கலாம் என்று கூறியும் மனைவி ஏற்றுக்கொள்ளாமல் அடம்பிடித்தாளாம். அதனால் குருக்கள் ஆலயத்தைத் திறந்தபோது காவல்தெய்வமாகிய வைரவர் அந்தப் பிள்ளையை இரண்டாகக் கிழித்துப்போடுவதைக் கண்டாராம். அத்தகைய உக்கிரமூர்த்தியாகிய வைரவரை மந்திர, தந்திரக் கிரியைகளால் இடம்பெயர்த்து எங்கேயோ ஒரு மலையிற்கொண்டு போய் ஸ்தாபித்ததாக ஆலயக் குருக்கள் கூறுகின்றார். முன்னொருநாள் இவ்வாலயத்தினுள் சுருண்டு படுத்திருந்த ஒரு சர்ப்பத்தின் மேல், பெரிய பாரமான கிடாரமொன்றை கவலையீனமாகத் தூக்கி வைத்துவிட்டார்களாம். சர்ப்பம் அதனடியில் நசுங்கி இறந்துவிட்டது. அந்தச் சர்ப்பத்தின் சாபத்தால் இவ்வாலயத்தில் பூசைசெய்துவந்த அந்தணர் பரம்பரையில் ஏழு சந்ததிக்குப் பின்பே ஆண்குழந்தை பிறந்ததாம். அதற்கு முன்பெல்லாம் பெண் சந்ததியே தொடர்ந்து பிறந்திருக்கின்றது. யாமறிந்தவரையில் இவ்வாலயத்தில் பிரம்மஸ்ரீ கா.குமாரசுவாமிக் குருக்களும், பிரம்மஸ்ரீ கு.சுவாமிநாதக் குருக்களும், பிரம்மஸ்ரீ சு.கு.சோமாஸ்கந்தக் குருக்களும் பூசை செய்துவந்துள்ளார்கள். இவர்களில் தற்போது ஆலய தர்ம கர்த்தாவாக இருக்கும் சோமாஸ்கந்தக் குருக்களுக்குத்தான் ஏழாவது தலைமுறையில் ஆண்குழந்தை பிறந்ததாம். இப்போது அவருடைய மகனாகிய சிவஸ்ரீ சோ.ரவிச்சந்திரக் குருக்கள் ஆலயப் பொறுப்பையேற்றுத் தந்தையாருடைய வழிநடத்தலின்படி பூசைசெய்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீபத்திரகாளியம்பாளின் ஆலயப் பூசையைச் செய்து கொண்டிருக்கும் பிரம்மஸ்ரீ சு.கு. சோமாஸ்கந்தக் குருக்கள் தமது தந்தையார் இயற்கையெய்திய காரணத்தினால் பதினாறாவது வயதில் இவ்வாலயத்தின் பூசைப்பொறுப்பை ஏற்றுநடத்தி வந்தார். இவர் பொறுப்பேற்கும்பொழுது கற்பக் கிரகமும், மற்றும் மண்டபங்களும் மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்தன. மரங்களினால் முட்டுக்கொடுத்துக் கருவறை விமானத்தைப் பாதுகாக்கவேண்டிய நிலையிலிருந்தது. "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்ற இலட்சியத்தோடு அம்பாளின் திருவருளைவேண்டிப் பிரார்த்தித்துக் கொண்டு திருப்பணிவேலைகளை ஆரம்பித்தார். 1933ஆம் ஆண்டு அம்பாளின் ஆலயத் திருப்பணிவேலைகள் சிலவற்றைச் செய்து கும்பாபிஷேகம் நடைபெற்றது. அக்காலத்தில் சகடையில் கம்புதடிகளால் தேர்போலக் கட்டி ரதோற்சவம் செய்யப்பட்டுவந்தது. இந்தக் கும்பாபிஷேகத்தின்பின் ஒரு புதியதேருக்குக் கீழண்டம் மாத்திரம் செய்து கட்டுத்தேரை இரதோற்சவத்திற்குப் பயன்படுத்தி வந்தார்கள். 1947இல் மகாமண்டபம் கோபுரமண்டபங்களைச் சிறப்பாகத் திருத்தியமைத்து இரண்டாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து 1962ஆம் ஆண்டில் வசந்தமண்டபத்தையும் மற்றும் சில திருத்தவேலைகளையும் செய்துமுடித்து மூன்றாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1979ஆம் ஆண்டு கற்பக்கிரக விமானத்தைப் பூரணமாகத் திருத்தியமைத்து அதில் சுதைச் சித்திரங்களாக சப்தகன்னியர்கள் அமைக்கப்பட்டன. அர்த்தமண்டபத்தின் தென்புறத்தில் முச்சக்திகளும், வடபுறத்தில் அம்பாள் விநாயகர் முருகனும் அமைக்கப்பட்டன. மகாமண்டபத்தின் சாளக்கிராமத்தில் ராஜராஜேஸ்வரியின் திருவுருவமும், விமானத்தில் கௌரியம்பாளும் அமைக்கப்பட்டுள்ளன. ஸ்நபனமண்டபம் சிற்பசித்திர வேலைப்பாடுகளோடு மிகச் சிறப்பாகப் பூரணமாக மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றது. மேற்தளத்தில் அட்டநாக பந்தனம், ராசிச்சக்கரம் என்பன சுதையினால் அமைக்கப்பட்டிருக்கின்றன. அம்மண்டபத்தின் தெற்குபக்கம் மகாலெட்சுமியையும், வடக்குப்பக்கம் சரஸ்வதியையும், பரிவார மூர்த்திகளாகவைக்கும் ஆலயம் அமைக்கப்பட்டு திருவுருவங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. சிம்மம், பலிபீடம், கொடிஸ் தம்பம், மூலாதாரகணபதி என்பனவும், நாகதம்பிரான், பைரவர் ஆலயங்களும் பூரணமாகத் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. வெளிமண்டபத்தோடுள்ள சாளக்கிராமத்தில் பத்திரகாளியம்பாளின் திருவுருவம் சுதையினால் சித்திரிக்கப்பட்டிருக்கின்றது. மண்டப வாசலுக்கருகே மணிக்கூட்டுக் கோபுரத்தை நாற்பதடி உயரத்திற்கு உயர்த்திக்கட்டி அறுநூறு இறாத்தல் எடையுள்ள கண்டாமணி புதிதாக ஏற்றப்பட்டிருக்கின்றது. மேலே கூறிய திருப்பணிகளைச் சிறப்பாகச் செய்து 6-2-80 ஆம் ஆண்டு சம்புரோட்சண கும்பாபிஷேகம் மிக விமரிசையாக நடைபெற்றது. இவ்வாலயத்திலிருந்த கட்டுத்தேருக்குப் பதிலாக 1972ஆம் ஆண்டு சித்திரத்தேர் மூன்றும் மஞ்சமும் செய்யப்பட்டு ரதோற்சவத்திற்குப் பயன்பட்டு வருகின்றது. கிழக்கிலங்கையில் முதன் முதலாக உருவாக்கப்பட்ட சித்திரத் தேர் இதுவாகும். 1981ஆம் ஆண்டு இந்தத் தேர்களைப் பாதுகாப்பதற்காக பெரும் பணச் செலவில் தேராலயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாலயத்திற்கு ராஜகோபுரம் அமைப்பதற்கு தேவஸ்தானக் குருக்களும், மக்களும் நினைவில் வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். அம்பிகையின் அருட்பலத்தால் இவ்வெண்ணம் நிறைவேறுமென்ற நம்பிக்கை மக்களிடையே இருந்து வருகின்றது. கருவறையில் சதுர்ப் புஜங்களையுடைய அம்பாளின் சிலாவிக்கிரகம் பிரதிஷ்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டிருக்கின்றது. சூலம், டமருகம், கட்கம், கபாலம் தாங்கியதிருக்கரங்களோடு அம்பாள் பத்மாசனத்தில் அமர்ந்திருக்கின்றார். மகாமண்டபத்தில் ஸ்ரீ பத்திரகாளியம்பாள், விநாயகர், முருகன், தாளியில் கிடைத்த அம்பாள், ராஜராஜேஸ்வரி, சண்டேஸ்வரி என்னும் தாமிரவிக்கிரகங்களும், அந்த மண்டபத்தில் பிள்ளையாரும் வடக்குப்பக்கம் தண்டாயுதபாணியின் சிலாவிக்கிரகங்களும், வைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாலயத்தில் உச்சிக் காலம், சாயரட்சை ஆகிய இரண்டு காலங்களிலும் நித்திய பூசை நடைபெற்றுவருகின்றது. பங்குனி உத்தரத்தைத் தீர்த்தோற்சவ தினமாகக்கொண்டு பத்துநாட்கள் மகோற்சவம் நடைபெறுகின்றது. ஒன்பதாம் நாள் ரதோற்சவம் நடைபெற்று வருகின்றது. பங்குனி உத்தரத்தன்று அம்பாள் கோணேசப்பெருமான் எழுந்தருளியிருக்கும் கோணவரையின் அடிவாரத்திலுள்ள கடற்கரையில் அதிகாலையில் தீர்த்தமாடுவார். அன்று மக்கள்வெள்ளம் கடல்வெள்ளத்தை மறைத்து நிற்கும் அற்புதக் காட்சியைக் காணலாம்.

வைகாசிப் பௌர்ணமிக்கு முதல்வரும் திங்கட்கிழமை இவ்வாலயத்தில் பொங்கல்விழா நடைபெற்று வருகின்றது. திருக்கோணமலையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பத்திகாளியம்பாளுக்கும், திருக்கோணமலையிலிருந்து பத்தொன்பது கில்லோ மீற்றல் தூரத்திலுள்ள பாலம்போட்டாறு பத்தினியம்மனுக்கும், ஏழு கில்லோமீற்றர் தூரத்திலிருக்கும் சல்லியம்மனுக்கும் ஏதோ ஒருவிதத் தொடர்பு பண்டுதொட்டு இருந்து வருகின்றது.

## வைகாசிப்பொங்கல்

வைகாசிப் பூரணை வரும் தினம் எதுவோ அதற்கு முன்னர் வரும் திங்கட்கிழமை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோவிலும் பொங்கலும், இந்தத்தினத்திற்கு முன்னர்வரும் திங்கட்கிழமை பாலம் போட்டாற்றுப் பத்தினியம்மன் கோவிற் பொங்கலும், இந்தத்தினத்தை அடுத்துவரும் வாரத்தில் செவ்வாய்க்கிழமை சல்லியம்மன் கோவில் பொங்கலும் நடைபெற்றுவருகின்றது. இந்த ஒழுங்கு பண்டுதொட்டு நடைமுறையிலிருந்து வருகின்றது. இதனால் வைகாசிமாதம் முழுவதும் திருக்கோணமலையில் சக்திவழிபாடு பக்திவெள்ளத்தில் மூழ்கியிருப்பதைக் காணலாம். பத்திரகாளியம்மன் பொங்கல், ஆலயத்தைச் சுற்றியுள்ள வீதியில் நடைபெறும். பொங்கலுக்குரிய இடம் பிடிப்பதில் மக்கள் ஒருவரை ஒருவர் முந்திக்கொள்வார்கள். அன்றிரவு ஆலயவீதி முழுவதும் யாகசாலைபோல் காட்சியளிக்கும். புகைமண்டலம் இருளைமூடி இருண்டுநிற்கும். அக்கினிதேவன் வீதியெங்கும் பிரகாசித்துக் கொண்டிருப்பான். மக்கட்கூட்டம் வீதியில் எஞ்சியுள்ள இடங்களை மூடியிருப்பார்கள். அம்பாளின் பொங்கல் மண்டபவாசலில் வெளியில் நடைபெறும். அடியார்களின் பொங்கல் வீதியெங்கும் நடைபெறும். அம்பாளின் பொங்கற்பிரசாதமும், அடியார்களின் பிரசாதமும் தேவிக்குப் படைக்கப்பட்டு பூசை நடைபெற்றுப் பொங்கல் விழா நிறைவேறும். வெண்மணல் பரந்தவீதி காலையில் கரிக்குவியல்களால் மூடுண்டு கிடப்பதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவராத்திரி

புரட்டாதிமாதப் பிரதமை தொடக்கம் ஒன்பது இரவுகளும் இயந்திரபூசை நடைபெற்று ஒன்பதாவது நாள் நவமியன்று மகிஷாசூர சங்காரம் (சூரன்போர்) நடைபெறும். முதல் மூன்றுநாள் துர்க்கைக்கும், அடுத்த மூன்று நாள் இலட்சுமிக்கும், அடுத்த மூன்று நாள் சரஸ்வதிக்கும் அலங்காரப் பூசைகள் நடைபெற்று திருவீதியுலாவும் நடைபெறும். பத்தாவது நாள் விஜயதசமியன்று கும்பம் சொரிந்து தீர்த்தோற்சவம் நடைபெறும்.

## கும்பவிழா

திருக்கோணமலையில் நடைபெறும் கும்பவிழாவைப்போல் இலங்கையில் வேறு எங்காவது நடைபெறுவதாகத் தெரியவில்லை. இவ்விழா இந்த ஆலயத்திற்குமாத்திரம் உரிய சிறப்பு விழாவல்ல. விஜயதசமின்று திருக்கோணமலையில் பரவலாகக் கும்பவிழா நடைபெற்று வருகின்றது. எனினும் இவ்விடத்தில் இவ்விழாவைப்பற்றிக் குறிப்பிடுவது சாலவும் பொருத்தமுடையதெனக் கருதுகின்றேன். பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றி ஆட்சிசெலுத்திவரும் காலத்தில் திருக்கோணமலையில் கடற்படைத்தளம் அமைக்கும் வேலையை ஆரம்பித்தார்கள். அத்தளத்தில் வேலை செய்வதற்காக இந்தியாவிலிருந்து சீக்கியமக்களையும், பஞ்சாபியர்களையும் அழைத்துவந்திருந்தார்கள். இஸ்லாமிய மதவழிபாடுடைய பஞ்சாபியர்கள், தமது மதபக்தியினாலும், நம்பிக்கையினாலும் தங்கள் நாட்டில் கடைப்பிடித்துவந்த விழாக்களை இங்கும் ஆரம்பித்தார்கள். "பஞ்சா" எடுத்தல் என்பது அவ்விழா. சந்தனக்கூடுகட்டி (தேர்போல் அலங்கரித்து அமைப்பது). அதில் பஞ்சா என்ற சின்னத்தை வைத்து, வீதிதோறும் கொண்டுசென்று பெருவிழாவாகக் கொண்டாடினார்கள். இவ்விழாவுக்கு பல இடங்களிலுமிருந்து இஸ்லாமியர்கள் வந்து கலந்துகொள்வார்கள். பஞ்சா எனப்படும் விழா திருக்கோணமலையில் பல பள்ளிவாசல்களிலும் நடைபெற்றது. அவ்வவ்விடங்களிலிருந்து அழகாக அலங்கரிக்கப்பட்ட பஞ்சாக்கள் (கரகம்போல் முக்கோணவடிவில் கட்டுவது) குதிரைகள் பூட்டப்பட்ட வண்டிகளில், தற்போது இங்கு கும்பவிழா நடைபெறுவதுபோல வீதிகள்தோறும் கொண்டு செல்லப்படும். விழாமுடிவில் அந்தப் பஞ்சாக்களை வில்வபத்திரிக் கோணேசர் கோவிலுக்கு அருகிலிருந்த குளத்திலே போடுவார்கள். இதனால் பிற்காலத்தில் அந்தக் குளத்திற்குத் தக்கியாக் குளம் என்று பெயர் வந்ததாம். பஞ்சாபியர் ஒப்பந்தம் முடிந்து, தங்கள் நாட்டுக்குச் சென்றபின் இவ்விழா அருகிக்கொண்டே வந்து தொடர்ந்து நடைபெறாமல் மறைந்து விட்டது. இங்குள்ள இஸ்லாமியர்கள் அதனைத் தொடர்ந்து நடத்த விரும்பவில்லைப்போலும். பஞ்சாபியர்களைப்போல் இந்துக்களாகிய சீக்கியர்கள் கும்பவிழாவை நடத்தினார்கள். சீக்கியரால் ஆரம்பிக்கப்பட்ட கும்பவிழா, அவர்கள் இந்த நாட்டைவிட்டுச் சென்றபின்னரும் இங்குள்ள இந்துக்களால் தொடர்ந்து விமரிசையாகக் கொண்டாடப்பட்டுவருகின்றது. திருக்கோணமலை மாவட்டம் இந்துக்களின் குடியிருப்பாகப் பன்னெடுங்காலமாக இருந்து வருகின்றது. கோணேசப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானுடைய தெய்வீக அருள் இப்பிரதேசமெங்கணும் வியாபித்திருந்ததை ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஞானசம்பந்தப்பெருமான் தேவாரத் திருப்பதிகத்தில் பாடியருளினார். 'கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை' என்பது அவருடைய திருவாக்கு. திருக்கோணமலையில் இந்துக் கோவில்கள் நிறைந்திருந்ததால் சீக்கியர் ஆரம்பித்த கும்ப விழாவை, அவர்கள் இந்த நாட்டைவிட்டுச் சென்றபின்னரும் இங்குள்ள ஆலயங்கள் தொடர்ந்து நடத்திவருகின்றன. ஆலயங்களிலிருந்து கும்பங்கள், கரகங்கள் அழகாக அலங்கரிக்கப்பட்டு பக்திபூர்வமாக, அதேவேளையில் போட்டிமனப்பான்மையுடன் வீதிகளில் வலம்வந்துகொண்டிருக்கும். ஒரு ஆலயத்துக் கும்பம் இன்னொரு ஆலயத்துக்கும்பத்தை எதிர்ப்படாமல் (எதிர்ப்பு ஏற்படாமலிருப்பதற்காக) வீதிகளில் வலம்வரும். இந்தக் கும்பம் கரகங்களைத் தாங்கிவருபவர்கள் ராஜமேளம் அடிக்கப்படும் தாளத்திற்கமைய ஆடிக்கொண்டு வருவார்கள். உடுக்கடித்துக் காவியங்கள், காவடிச்சிந்துக்கள், பாடிக்கொண்டும் வருவார்கள். மங்களமேளங்களும் வாசிப்பதுண்டு. கும்பம், கரகங்களைத் தாங்கிவருவோர் உருவேறி ஆடுவதுமுண்டு. அருள்வாக்குகள் கூறுவதுமுண்டு. விஜயதசமியன்று இரவுபூராவும் இவ்விழா நடைபெறும். கும்பம் கரகங்களைப் பயபக்தியுடன் வரவேற்க மக்கள் தத்தம் வீட்டு வாசல்களில் நிறைகுடம் வைத்துக் காத்துக்கொண்டிருப்பார்கள். ஒவ்வொரு ஆலயத்திலுமிருந்து புறப்படும் கும்பம், கரகங்கள், மற்ற ஆலயங்களுக்குச் சென்று தரிசித்துக்கொண்டு மீண்டும் புறப்பட்ட இடத்தைப் போய்ச் சேர்வதுடன் இவ்விழா நிறைவுபெறும். கும்பம் எனப்படுவது பெரிய செப்புக்குடத்தில் வேப்பம் பத்திரத்தினால் அகலமான அடித்தளம் அமைத்து சுமார் பத்தடி உயரத்திற்கு தேர்போல மலர்களாலும், வர்ணக் காகிதங்களாலும் அலங்கரித்துக் கட்டப்படுவது. கும்பத்தின் அடிப்பாகம் அகன்றும் மேலே போகப் போகப் ஒடுங்கியும் செல்லும். கரகம் செப்புக்குடத்தில் அம்பாளின் முகபடாம் வைத்து, வேப்பம் பத்திரத்தினால் கட்டப்படுவது. எல்லா ஆலயங்களிலிமிருந்து புறப்படும் கும்பம் கரங்கள் தத்தம் கோஷ்டிகளுடன் ஸ்ரீ பத்திரகாளியம்பாள் ஆலயத்திற்கு வந்து தரிசிப்பார்கள். இவைகளைப் பார்ப்பதற்காக இவ்வாலயத்தில் மக்கள் திரளாகக் கூடிநிற்பார்கள். அன்று இவ் அம்பாள் ஆலயத்திற்கு எதிரேயுள்ள மைதானத்தில் மானம்புத் திருவிழாவுக்காக எழுந்தருளுவார். அவ்விடத்தில் கோணேசர் கோவிலிலிருந்து மாதுமையம்பாளும், சிவன்கோவிலிருந்து விசாலாட்சியம்பாளும் வந்து மானம்பு விழா நடத்திச் செல்வர். இதுவும் இந்துக்களுக்கு ஒருவாய்ப்பான சமய நிகழ்ச்சியாக நடைபெற்று வருகின்றது.

## இலட்சார்ச்சனை

இவ்வாலயத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்ற திதிக்கு வருடா வருடம் சங்காபிஷேகம் செய்வார்கள். சங்காபிஷேகத்திற்க முன்னுள்ள பத்து நாட்களும், இலட்சார்ச்சனை நடைபெற்று மறுநாள் சங்காபிஷேகம் நடைபெறுகின்றது. அம்பிகையின் ஆயிரத்தெட்டு நாமங்களை பீஜமந்திரத்தோடு உச்சரித்து ஐந்து சிவாச்சாரியர்கள் ஒரு நாளைக்கு இரண்டு தரம் பத்து நாட்களுக்கு அர்ச்சனை செய்து இலட்சார்ச்சனையை நிறைவு செய்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேதாரகௌரி விரதம்

புரட்டாதிமாதம் விஜயதசமியன்று இவ்விரதம் ஆரம்பிக்கப்பட்டு ஐப்பசிமாத அமாவாசிதிதியில் நிறைவு பெறுகின்றது. இருபத்தொரு நாட்களுக்கு அனுட்டிக்கப்படும் இவ்விரதம், திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளியம்பாள் ஆலயத்தில் கடந்த நூற்றிஐம்பது வருடங்ளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து இவ்விரதத்தை அனுட்டிக்க ஆயிரக்கணக்கில் மக்கள் இங்கு வந்து கூடுவார்கள். அம்பிகையின் அற்புதமான அருட்பலத்தால் வருடாவருடம் இவ்விரத்தை அனுட்டிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு வருகின்றது. ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர் அனைவரும் இவ்விரதத்தை அனுட்டிக்கலாம். ஆதலால் ஒவ்வொரு வருடமும் ஐயாயிரத்திற்குமதிகமானோர் இவ்வாலயத்தில் வந்திருந்து இவ்விரதத்தை அனுட்டிப்பார்கள். இவ்விரதத்தை அனுட்டிப்பவர்கள் தரிப்பதற்குரிய விரதநூலும் வகைக்கு இருபத்தொன்றாக பழம், பாக்கு, வெற்றிலை, மஞ்சள், பூ, பலகாரம் என்பனவும், தேங்காய் விபூதி, குங்குமம் என்பனவும் அடங்கிய பூசைப் பெட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டு அலங்காரப் பூசை நடைபெறும். பூசை முடிவில் இவ்விரதத்திற்காக முன்னரே பதிவு செய்துகொண்டவர்களை அழைத்துப் பூசைப் பெட்டிகள் வழங்குவார்கள். தனியாக விரத நூலைமாத்திரம் பெற்று இவ்விரதத்தை அனுட்டிப்பவர்களுமுண்டு. ஆலயத்தில் தங்கியிருந்து விரதமனுட்டிப்பவர்களுக்கு அடுத்தநாள் பாரணைப்பூசையும் செய்து அனுப்புவார்கள்.

6.3.80 இல் நடைபெற்ற கும்பாபிஷேகத்தின்பின் ஆனி உத்தரத் திருவிழாவும் தொடர்ந்து பத்துத் தினங்களுக்கு நடைபெற்று வருகின்றது. சிவராத்திரியைத் தொடர்ந்து நடைபெறும் கோணேசர் ஊர்வலத்தில் மாதுமையம்பாள் சமேத கோணேசப் பெருமான் ஸ்ரீபத்திர காளியம்பாள் ஆலயத்தில் ஒருநாள் தங்கியிருப்பார். கோணேசப்பெருமானை இவ்வாலயத்தின் ஆதீனகர்த்தரும், அடியார்களும் சோடசோபசார மங்களச் சின்னங்கள் புடைசூழ மங்களவாத்தியங்களோடு வரவேற்று ஆலயத்திற்கு எழுந்தருளச் செய்து பூசை முதலியன முடித்து மாலையில் மங்களவாத்தியம் முழங்க வீதியுலாவுக்கு அனுப்பிவைப்பார்கள்.

பண்டைக்காலம் தொடக்கம் இன்றுவரை, ஸ்ரீ பத்திரகாளியம்பாளின் திருவருளால் இவ்வாலயத்தில் பல அற்புதங்கள் நடைபெற்று வந்துள்ளன. இவற்றினால் மக்களிடம் பயபக்தி வளர்ந்துகொண்டு வருகின்றது. இதனால் பக்தியோடு வழிபடும் அடியார்கள் அம்பிகையின் கிருபாகடாட்சத்தால் எண்ணியன எண்ணியாங்கெய்தி இன்புற்று வாழ்கின்றார்கள். இவ்வாலயத்தில் குறித்த குறித்த நேரத்தில் பூஜை திருவிழாக்கள் நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும். இதற்கெல்லாம் சூத்திரதாரியாயிருப்பவர் இவ்வாலயத்தின் ஆதீனகர்த்தாவாகிய பிரம்மஸ்ரீ சு.கு.சோமாஸ்கந்தக் குருக்களும் அவருடைய ஏகபுத்திரன் சிவஸ்ரீ.சோ.ரவிச்சந்திரக் குருக்களுமாவர் என்பது மிகையாகாது. சிரமதானப் பணிக்கென்றே இவ்வாலயத்தில் ஒரு சிரமதானப் பணிக்குழு இயங்கிவருவதனாலும் இவ்வாலயம் சிறப்பாகக் நடைபெற்றுவருகின்றதென்பது போற்றுவதற்குரிய உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்
# திருவூஞ்சல்

ஆக்கியோன்:

திருவாளர் வி.வேலாயுதம்பிள்ளை ஆசிரியர் அவர்கள்

திருக்கோணமலை

## காப்பு

சீர்பூத்த முக்கயிலை தன்னி லொன்றாய்த்
திரைகடல் சூழ் திரிகோண மலையில் வாழும்
ஏர்பூத்த பத்திரகாளித் தாய் பேரில்
இசைமேவு செந்தமிழில் ஊஞ்சல் பாட
வார்பூத்த முலையுமையாள் பாகர் சென்னி
மதிமலி செஞ் சடையரனார் தந்த முக்கண்
கார்பூத்த களிற்று முகக் கடவுள் பாதம்
கரமலர் கொண்டேத்தி யுளங் களித்து வாழ்வாம்.

நலனோங்கு செம்பவளங் கால்க ளாக
நல்வயிர ரத்தினமே விட்டமாக
வலனோங்கு மரகதமே சட்டமாக
வரைவிலுயர் கனகமதே கயிறதாக
நிலனோங்கு மாமணியே பலகையாக
நிகழ் தரள மாடத்தில் ஊஞ்சல் மாட்டே
பலனோங்கு திரிகோண மலையில் வாழும்
பத்திர காளித் தாயே ஆடீருஞ்சல்.

அன்னநடைச் சசி கவிகை பிடித்து நிற்க
அரம்பையர்கள் இருமருங்குங் கவரிவ்ச
வன்னமுலை உருவசி பொற் களாசி யேந்த
மணியணி மேனகை பாக்கு வெற்றிலை நல்க
மின்னுமிடைத் திலோத்தமை நன்நடனஞ் செய்ய
வியந்து பாடகிகள் நின்று துதிகள் பாட
மன்னுமெழிற் திருகோண மலையில் வாழும்
பத்திர காளித் தாயே ஆடீருஞ்சல்.

தவளவளை யேந்தரியு மயனும் போற்ற
தயங்கு திருவாயில் வயிரவர்கள் காப்பச்
சிவமறையோர் தூபமொடு தீபங் காட்டச்
செய்ய தழற் கடவுள் தீவர்த்தி யேந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை மாவட்டத் திருத் தலங்கள்

தவமுனிவர் தாழ்ந்து பூமாலை சாத்தத்
தறுகணரித் துவசமகல் வர்ணந் தூர்ப்பப்
பரவுமருட் டிருகோண மலையில் வாழும்
பத்திர காளித் தாயே ஆடீரூஞ்சல்.

முரசு தமருக நாதசின்ன மார்ப்ப
முத்து மணிக் குடையால வட்டமோங்க
வரமுனிவர் அடிபணிந்தே ஆசி கூற
வானவர்கள் வாச மலர் மாரி பெய்ய
மகரயாழ் தும்புரு நாரதர்கள் பாட
மகிழ்ந்து மறையவர் வேத கோஷஞ் செய்ய
பரனருளும் திருகோண மலையில் வாழும்
பத்திர காளித் தாயே யாடீரூஞ்சல்

செங்கமல மாதுமொரு வடந் தொட்டாட்ட
சிறந்த கலைமகளு மொரு வடந் தொட்டாட்ட
திங்கள் நுதற் சசியுமொரு வடந் தொட்டாட்ட
தேசிலுயர் ரதியுமொரு வடந் தொட்டாட்ட
அங்கையர்க்க ணுருவசியோர் வடந் தொட்டாட்ட
அழகு திலோத்தமையு மொரு வடந் தொட்டாட்ட
பங்கமில் சீர் திருகோண மலையில் வாழும்
பத்திர காளித் தாயே யாடீரூஞ்சல்.

அரவ மணி முடிபசும் பொற் சுட்டியாட
ஆணிமுத்து மாலையொடு பதக்கமாட
விரைவு மெழின் மாணிக்கத் தோடுமாட
விளங்கு தங்கவளையல் கங்கணமுமாட
சரிசு நெளி பாடகமுஞ் சிலம்பு மாட
தண்டை கிண்கிணி பாதசரமு மாட
பரவு மெழிற் திருகோண மலையில் வாழும்
பத்திர காளித் தாயே யாடீரூஞ்சல்.

பூமேவும் நான்மறையும் கால்களாகப்
பொருவிலுயர் ஆகமங்கள் விட்டமாக
நாமேவு கலைகளெல்லாஞ் சட்டமாக
நலமுறு மந்திரங்கள் திருக் கயிறதாக
தூமேவு பிரணவமாம் பலகையேறித்
தொடர் பவத்துளோரை யருட் கரையிலேற்றப்
பாமேவு திருகோண மலையில் வாழும்
பத்திர காளித் தாயே யாடீரூஞ்சல்.

முந்து நவ மகளில் துதி செய்தே பாட
முன்னின்று பொன் மகளிர் அசைந்தே யாட
விந்தை செறி மகளிரருள் வேண்டி யாட
விளம்புமுயர் மகளிரடி வணங்கி யாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தருவ மகளிரிசை பாடியாடக்
கண்டு மொழி புவிமகளிர் களிகொண்டாட
பந்தமில் சீர் திருகோண மலையில் வாழும்
பத்திர காளித் தாயே யாடீரூஞ்சல்.

அந்தரியே சுந்தரியே யாடீரூஞ்சல்
ஆரணியே காரணியே யாடீரூஞ்சல்
சந்திர சேகரி சிவையே யாடீரூஞ்சல்
சங்கரி கங்காதரியே யாடீரூஞ்சல்
இந்திரை நாரணி யுமையே யாடீரூஞ்சல்
இகபர வாழ் வீபவரே யாடீரூஞ்சல்
பைந்தரு சேர் திருகோண மலையில் வாழும்
பத்திர காளித் தாயே யாடீரூஞ்சல்.

மதிமுக மாலின் பரையே சிவையே போற்றி
மலிகருணைத் தடங் கடலே போற்றி போற்றி
அதிமதுர மாரமுதே கனியே போற்றி
அவனியுயர் கனகமணி மலையே போற்றி
விதிமுறை யெண்ணான் கறமும் வளர்த்தாய் போற்றி
வீரி திரிசூலி முக்கண்ணி போற்றி
பதியிலுயர் திருகோண மலையில் வாழும்
பத்திர காளித் தாயே யாடீரூஞ்சல்.

அந்தணரோ டரசர் வைசியரும் வாழி
அகன்ற புகழ் காராளராவும் வாழி
முந்து மறையாகம நூல் முழுதும் வாழி
முனிவர் சைவ சமயம் அறம் தழைத்துவாழி
இந்து நுதற் கற்புடை நங்கையரும் வாழி
இறைவி தமிழூஞ்சல் படிப்போரும் வாழி
பந்தமகல் திருகோண மலையில் வாழும்
பத்திர காளித் தாயே வாழி வாழி.

## எச்சரிக்கை

திருவார் சேடன் முடியசையச் செய்த வாயுவாலே
மருவார் கோணை மலைமேவிய வரதீயெச்சரிக்கை
கண்ணன் கண்ணை யிடத் தந்தருள் கண்ட சிவனாரோ(டு)
மண்ணில் நின்று வாது செய்த வரதீ யெச்சரிக்கை
அரனின் பராசக்தி யாதி சக்தி யிச்சா சக்தி
வரமேதரு ஞானக் கிரியா வரதீ யெச்சரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமான் முதலறியாப் பரம் பொருளாயருள் ஒளியாய்
வாம பாகத் தமர்ந்தே யருள் வரதீ யெச்சரிக்கை
அனமே வரு மயனும் மரி யறியமுடியாதோன்
குணமாமணி பங்காயுறை வரதீ யெச்சரிக்கை
மாயன் வலச் சக்தியாக மாதங்கிடமாக
மாயஞ் செய்து சிவனார் மகிழ் வரதீ யெச்சரிக்கை
துங்கமிகு மண்டகோடி துதிக்க யாரும் மதிக்க
சிங்கத்தினில் ஏறிவரும் தேவீ யெச்சரிக்கை
அரசமரத் தருகே அமர்ந்து கோவில் தொழுமடியார்
கரிசங் கறுத் தருளும் பத்திர காளீ யெச்சரிக்கை
திருஞான சம்பந்தனருட் தேவாரம் புனைந்து
கோணைநாதன் மகிழுங் காளி வரதீ யெச்சரிக்கை
பண்ணார் மொழி மாதும் யானை பகருங் கந்தஸ்வாமி
கண்ணாரரன் மகிழ வரும் வரதீ யெச்சரிக்கை
அண்டர் சிவகலைகள் மேலகண்ட கண்ட புவனம்
எண்டிசையும் வாழ்க வாழி வாழி வாழியவே.

## பராக்கு

சீரார் கொன்றைத் திருவும் மலி செஞ்சடைப் பிரானார்
போரார் மகிழ் வெய்துங் கோணைப் பிராட்டி பராக்கு
கஞ்ச மலரோனும் மாலும் காண்டற் கரிதான
செஞ்சுடராய் நின்ற சிவகாமி பராக்கு,
இந்துவுடன் ஆதவனும் அழல்மூன்றும் கண்ணானோன்
வந்துன்னை யுவந்தேயருள் மாதே பராக்கு,
தந்திமுகன் தன்னையீன்ற தந்தையில்லா மேலோன்
புந்தி மகிழ் வெய்தி நின்ற புவிநாயகி பராக்கு,
கந்தன் தன்னை உலகோர் துயர் களையவுவந் தளித்த
எந்தைபிரான் உவக்கும் பரமேஸ்வரி பராக்கு,
ஆன்மகோடி செய்த பாவம் அனைத்தும் பொறுத்தருளும்
தானேயருள் தாயாய் நின்ற சங்கரி பராக்கு,
புத்தர் தம்மை வாதில் வென்ற புண்ணியர் தமக்கு
சுத்த குருவானோன் தர்ம சுந்தரி பராக்கு,
ஆலிலைமேற் பள்ளி கொள்ளும் அந்த மாயற் கிளைய
சீலமுறுந் தங்காய் அருள் திருவே பராக்கு,
கந்த மலர் சூடும் மாதர் கண்டு கண்டு போற்றும்
விந்தையுள்ள நாயகியே வீரி பராக்கு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றோர் மற்றோர் காவலருங் கண்டங்குளங் களிக்கும்
பொற்பேர் கோணை மேற்கே கோயில் புகுங் காளி பராக்கு,

## லாலி

லாலி லாலி லாலி லாலி லாலி
தத்துவங் கடந்தவளே லாலி லாலி
ஆயிரங்கண் உடையவளே லாலி லாலி
அம்மை பத்திர காளி உமை லாலி லாலி
உலகமெலாம் ஈன்றவளே லாலி லாவி
உம்பர் தொழும் ஈஸ்வரியே லாலி லாலி
கோணைநகர் வாழ்பவளே லாலி லாலி
கொண்டல் வண்ண மேனியளே லாலி லாலி
ஈஸ்வரியே சுந்தரியே லாலி லாலி
எங்கும் நிறையுங் பொருளே லாலி லாலி.

## மங்களம்

### பல்லவி

மங்களம் மங்களம் மங்களம் –ஜெய ஜெய
மங்களம் மங்களம் மங்களம் (மங்)

### அனுபல்லவி

ஐங்கரம் கொண்டேயருளும் ஆனைமுக வள்ளலுக்கும்
அங்குச பாசம் பிடிக்கும் ஐயனாம் விநாயகர்க்கும் (மங்)

### சரணம்

நம்பர் எங்கள் ஈசனுக்கும் நாயகி உமைதனக்கும்
எங்கள் சுப்பிரமணியருக்கும் ஏனையமெய்த் தேவருக்கும்
கோணமலையில் வாழும் அம்மை பத்திர காளிக்கும்
ஏனைய மறையோருக்கும் எல்லோருக்கும் மங்களம். (மங்)

## தேர்ச் சிந்து

என்ன சிங்கார மெங்கள் ஈஸ்வரி தேரினில்
ஏறிவரும் பவனி பார்– தேரினில் (ஏறி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரை கௌரி ஏழ்வகை மாதர்கள்
சுந்தரமாகவே வந்து பணிந்திட (என்ன)

கன்னன் மொழிக் கிளியே அன்னபூரணியம்மா
கந்தனைத் தந்தநாயகி –என்னம்மணி–கந்தனைத் தந்தநாயகி
கற்றிடுமடியர் புத்தியிலேயுறை
சிற்றிடை மாதுமை நற்தின மதனில் (என்ன)

சந்தனங் குங்குமம் ஜவ்வாது புனுகுடன்
தாழ்சடை நாகந் தூங்கவே –புனுகுடன், தாழ்சடை நாகந்தூங்கவே
சந்திர சூரியர் எண்டிசைப் பாலகர்
செந்திருவே யென வந்தனை செய்திட (என்ன)

வன்னச் சிமிக்கியும் மதாணிப் பதக்கமும்
வைடூரியத்தினோலையும் பதக்கமும், –வைடுதியத்தினோலையும்
வாய்ந்த பட்டாடையிற் சார்ந்தவொட்டியாணமும்
நேர்ந்த திருக்கரத் தேந்து பொற்கிளியும் (என்ன)

சித்திர ரதந்தனிலே தேவி எழுந்திடல்
செய்ய கண்காட்சி மாட்சியே– எழுந்திடல், –செய்ய கண்காட்சி மாட்சியே
இத்திரு கோணையின் பத்தருக்கேயருள்
உத்தமி சாம்பவி சித்தமிரங்கியே (என்ன)

அற்புதக் காட்சியிது வல்லோ பிர்மானந்தம்
ஆனந்தம் நித்யானந்தம் –பிர்மானந்தம்,– ஆனந்தம் நித்யானந்தம்
ஆதரவுடனே பூதல வுயிர்க்கு
மாதமும்மாரி பெய்தேதுயர் நீங்கிட (என்ன)

பாடி அம்மன் புகழை நாடி நயந்து நாம்
பாடித் துதித்து ஆடுவோம் –பாடுவோம்– கூடித்துதித்து ஆடுவோம்
பங்கயன் தங்கையை இங்கித நங்கையை
திங்களைத் தாங்கிய சங்கரன் மங்கையை (என்ன)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை
# பத்திரகாளி அம்மன் காவியம்

ஆக்கியோன்:
திரு.வ.கோ.வேலுப்பிள்ளை வைத்தியர் அவர்கள்
திருக்கோணமலை

அகிலமிசை அழகுசெறி கோணையம் பதியில்
ஆடவர்கள் கூடிவிளையாடு முத்த வெளியில்
மகிழ்வினோடு அரசடியி னருகினிலிருக்கும்
மடமாது காளிதன் மீது சொற்றமிழால்
கதிபெறு நற் காவியம் புகல அருள் புரியும்
கயமுகனே உனைமனதில் அனுதின நினைந்தேன்
பதியென நல் ஆலடியில் வீற்றிருக்கின்ற
வல்ல விக்னேஸ்வரரே வரமருளுமையா.

ஆதியாய் இவ்வுலகை யாளநீ வந்தாய்
அடியவர்க ளீடேற அருளது புரிந்தாய்
பாதியாம் அந்தணனின் பாலனை யிரண்டாய்ப்
பாவையரே நீகிளித் தேயங்கெறிந்தாய்
காதினிலே குரலோசை கேளாதிருந்தாய்
கனபொங்கல் பூசை மடைவாங்கி நீயிருந்தாய்
பாதி மதி சூடுமரன் பக்கல் முன்னிருந்தாய்
பாலனெனை யாண்டருள்வாய் காளியென்தாயே.

இந்த உலகந்தன்னி லுள்ள மங்கையர்கள்
இடுமஞ்சல் காவிவகை பூசியுன் முன்பு
சிந்தை துணிந்து சிவப்புப் பட்டாடை சேரவே
பச்சையு மணிந்தவர்கள் வந்தால்
விந்தையிது தானெனவே நீயவர்கள் மீது
வேடிக்கை பார்ப்போமென வேதனைகளிட்டாய்
இந்தவகை யென்மீது செய்யாதே யம்மா
எளியனெனை யாண்டருள்வாய் காளியென் தாயே.

ஈரமென் முழுகு தலை கூந்தல் முடியாமல்
ஏசியே யாகுவப் பெண்ணுனது வாசல்
தீரமுடன் தாவிவர அயலவர்கள் கண்டு
தீங்கேது மணுகுமடி கூந்தல் முடியென்ன
வீரமுடன் கேளாமல் உன்வாசல் பார்த்து
விரைவாக ஏகின்ற வேளை நீயவளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரான சென்னியோர் பக்கமது வைத்தாய்
செல்வியே தேடரிய காளியென் தாயே.

உற்றவினை யாலே யவள் மெத்தவுங் கலங்கி
உலகபிணி யிது வெனவே பலவகை புரிந்து
குற்றமதால் வந்தவினை யென்று நினையாமல்
கோதையவள் படுமவதி பார்த்து நீயிரங்கி
சுற்ற மனமாகி யவள் முன்பேகி நின்று
தோகையே நாளையென் சந்நிதியில் வந்து
முற்ற முடி வெட்டி நீ யென்கிரசுக் கீந்தால்
மோதுபிணி தீருமென மொழிந்த காளியரே.

ஊரவர்க ளறிய இவள் விடியவு மெழுந்து
ஓதரிய உன்னுடைய சந்நிதியில் வந்து
கூரரிய கத்தரிக் கோல் கையில் கொண்டு
கோதை தன் கூந்தல்தனை வெட்டியுனக் கீந்து
பூர ஒளி பரவவே சாம்பிறாணி வாடை
புகையெங்கும் வீசிவரப் பூவை பிணிதீர்ந்து
கூறரிய மகிழ்வோடு தன்மனைபுக விலையோ
குற்றமே பொறுத்தெனையாள் காளியென் தாயே.

எண்ணிய புதுமைபல செய்தவள் நீயல்லோ
ஏழைகளின் துயர் நீக்கி யாழ்பவள் நீயல்லோ
வெண்ணையுண்டோனுக்கு இளையவள் நீயல்லோ
வேங்கை மரமாய் நின்ற வேலவர் தாயல்லோ
பெண்ணெனவே பூவுலகில் வந்தவள் நீயல்லோ
பேசரிய கோதாரி தீர்த்தவள் நீயல்லோ
தென்கோணை வாழ்வென வந்தவள் நீயல்லோ
செல்வியே தேடரிய காளியென் தாயே.

ஏகமுமே ஒளியாகி நின்றவள் நீயல்லோ
ஏழைகளின் துயர்நீக்கி யாள்பவள் நீயல்லோ
வேகமொடு சிங்கமதில் ஏறியே நீயம்மா
வினைதீர்க வேணுமென வந்தவள் நீயம்மா
தேகமதில் நோய் பிணிகள் தீர்ப்பவள் நீயம்மா
தேவர்தமைச் சிறைமீட்ட செல்வி நீயம்மா
மேகமெனுங் குடைநிழலில் வீற்றவள் நீயம்மா
மேதினியி லெமையாள வந்தகாளியரே.

ஐயனார் பரிகலத் தலைவி வேறுண்டோ
ஆடிவரு காடேறி யானவள் வேறுண்டோ
மையான மீதில் நடம் புரிந்தவள் வேறுண்டோ
மலையரசன் மகளாய்முன் வந்தவள் வேறுண்டோ
வைகயத் தன்னிலெனக் கெவரு முண்டோ
வறுமை நோய் பிணிதீர்க்க வேறெருவ முண்டோ
தையலே யுனைநம்பித் தாளடி பணிந்தேன்
தாபரித் தெமையாள வருகாளித் தாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பரிய தாயே நீ வாவா சிவாயநம
ஒருபொழுதும் நான் மறவேன் வாவா சிவாயநம
தொப்ப வயிறோன் தாயே வாவா சிவாயநம
தொல்லை துயர் பிணி தீர்க்க வாவா சிவாயநம
ஒப்பரிய தேரேறி வாவா சிவாய நம
ஓசையென் மொழி கேட்க வாவா சிவாயநம
கொப்பிறகை யணிமாதே வாவா சிவாயநம
கோணைநகர் தனையாளு காளியென் தாயே.

ஓதுவேன் உன்புகழ் உனக்கோலம் ஓலம்
ஒன்று மறியாத நான் உனக்கோலம் ஓலம்
சோதியொளி யானவளே உனக்கோலம் ஓலம்
சுந்தரியே தாயே உனக்கோலம் ஓலம்
மோதிவரு பிணிதீர் உனக்கோலம் ஓலம்
முன்பகைஞர் தனைவதைசெய் உனக்கோலம் ஓலம்
கோதி குழலணிதாய் உனக்கோலம் ஓலம்
குவலயமே லெனையாளு காளியென் தாயே.

அவ்வசுரன் தம்மோ டமர் பொருதி நின்று
அன்பாக ஒன்பதாம் நாளவனை வென்றாய்
கௌவிவரு அசுரர்தமை வேரோடறுத்தாய்
கடியதோர் தேவர் சிறை தம்மை நீமீட்டாய்
சௌரிய முனைப்போல வேறெவரு முண்டோ
சாற்று மொழி உன்செவி கேட்கிலையோ அம்மா
மௌனமொடு உனைநிதமு மலரடி பணிந்தேன்
மனமகிழ இத்தருணம் அருள் காளித் தாயே.

அக்கிரம மாகியுனை நினையாத பேர்க்கு
அதிகபிணி பலகவலை யடையவே நீவைப்பாய்
தக்கதெனவே உனது சரணடைந்தோரைத்
தாபரித்தே கவலை பிணி தீர்த்து வைப்பாய்
மக்கள் மனை மகிழவென் றேத்தியே செந்தமிழால்
வாகுபெற வேற்பிள்ளை காவிய முரைத்தேன்
சக்கரந் தண்டு வாள் பரிச முடையவளே
சத்தியே உலகு புகழ் காளியென் தாயே.

கார்வாழி வேதமுணர் அந்தணர்கள் வாழி
கற்புடைய மங்கையர் பொற்பு மிக வாழி
வாராழி சூழுலக மன்னவர்கள் வாழி
மாசகலும் நான்மறையோ டாகமமும் வாழி
சீரான செந்நெல் விளை பழனங்கள் வாழி
தேவாலயங்க ளுய ரானினம் வாழி
பார்வாழி பல்லுயிர்க் கருள் புரிந் தாளும்
பத்திரகாளித் தாயின் பதகமலம் வாழ்க வாழியவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை
# ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்
# திருக் குளிர்ச்சிக் கவிகள்

*யாத்தவர்:*

திரு. மாசிலா சிவதாசன் அவர்கள்

*திருக்கோணமலை*

*மட்டக்களப்பு தலைமைத் தமிழ்ப் புலவர்மணி*

திரு.ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்கள்

*உவந்தளித்த சிறப்புப் பாயிரம்*

## ஆசிரிய விருத்தம்

அழிவின்றி யாக்கமிலை அவனி மீதில்
அழிவின்றி யின்பமிலை யுயிர்கட் கெல்லாம்
ஒழிவின்றி யொடுக்கமிலை யென்னு முண்மை
உலகுணரத் திருக்கோணைப் பதியில் நின்று
களிநடஞ் செய் மாகாளி தேவி சத்தி
கருணை வடிவினைப் பாடி யுருகி யன்பு
வழிய வொரு தமிழ் இனிய பண்பன்
மாசிலாச் சிவதாசன் கவிவல்லோனே.

குருக்கள் மடம்
23.9.70

ஏ.பெரியதம்பிப்பிள்ளை

## காப்பு

புழைக்கரம் பேழைத் தொந்தி புகர்முகம் படைத்த தெய்வம்
அழைக்குமுன் னடியார்க் கஞ்சல் அளித்திடும் ஆதி மூர்த்தி
பிழைப்படும் அடியேம் இன்னல் பெரும்பவம் ஒழித்து மேன்மேற்
தழைத்திடக் கருணைகாட்டுந் தயாபரக் கணேசன் காப்பே.

## ஸ்ரீ பத்திரகாளி வணக்கம்

## வெண்பா

சுந்தரஞ்சேர் கோணை நகர்த் தொல்பதியில் வீற்றிருக்கும்
அந்தமில் சீர்க் காளியம்மை யாளுதற்கு– தந்தருளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்ற இடரோட்டி உய்ய வழிகாட்டி
பற்று வைப்பா ளெம்மேற் பரிந்து.

வெண்சாந்தும் வெண்டுகிலும் வெண்பணியும் வெண்பூவும்
கொண்ட வெழில் மிக்க நிதிக் கோமாட்டி– மிண்டுமிடி
என்னை வருத்தவிடா தின்கவிகள் பாடுதற்கு
என்னகத்தே வந்தே யிரு.

## திருக்குளிர்ச்சி

அற்றார்க்கு மலர்ந்தார்க்கு மருள்செய் மூர்த்தி
அம்மையே நீயல்லா தவனி மீதில்
மற்றாரு முண்டேன்றோர் கணப்போ தேனும்
மனத்தினிடை நினைத்தாலும் நிகழ்வதல்ல
முற்றாவா யென்றனந்த காலந் துய்த்தல்
உண்மையிதற் கையமிலை யுடையீயெம்மை
தற்காத்தே யருள்கோணை நகர்வாழ் காளி
தஞ்சம்வே றிலைத்தாயே குளிர்ந்தருள்வாய்.

அச்சமெலாந் தீர்த்தாள வல்ல தேவி
அகங்கார மாயையுடன் கூடி யெம்மை
வைச்சாட்டுங் குரங்காட்ட மெல்லாங் கண்டும்
மனதார வொன்றறியார் போலே நீதான்
பச்சையிலா நெஞ்சினர்போ லிருத்தல் நாம் செய்
பாவமெனி நீவிழிக்க நீறா காதே
நற்றிரிகோ ணேசநகர் பத்திரகாளி
தஞ்சம் வேறிலைத் தாயே குளிர்ந்தருள்வாய்.

அடிமைசெயப் புகுந்திடுத னினக்காளாகி
ஆத்தாளே யற்பமதோ வந்தோ மெத்தக்
கடினமிதை யறியாதா ரற்பம் பண்ணிக்
கருத்தழிந்து மோசத்திற் காளாய் விட்டார்
செடிமையுளப் பாதகராம் எமக்கு மந்தத்
தீக்கதிவந் தடையாமே பணிசெய் குற்றந்
தடுத்தாள்வாய் திரிகோணை மலைவாழ் காளி
தஞ்சம் வேறிலைத் தாயே குளிர்ந்தருள்வாய்

அம்மாவெம் அகக்கிடக்கை யாவும் நீயே
அறிந்திருந்தும் சோதனைக்கிங் கெமையாளாக்க
அம்மாவுன் றிருவுளத்தே நினைவு கொண்டால்
அறும்புலை நாய்க் கடையேற்கு மீட்சியுண்டோ
இம்மாலைத் தத்துவங்க ளெல்லா முன்பொன்
மெல்வினைக்கே யர்ப்பணித்துக் கதறி வீழ்ந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தர் புகழ்கோணை நகர்வாழ் சக்தி
தஞ்சம்வே றிலத்தாயே குளிர்ந்தருள்வாய்

அருட் சோதிப் பிழம்பேயாம் பிறந்து மண்மேல்
அருந்துயர்ப்பட் டலமந்தே மினியெம் மாலே
ஒருசிறிதும் படமுடியா தன்னாய் போதும்
ஓயாத கவலையிதற் கோய்வு காட்டிச்
சரணமலர்த் தாளளிப்பாய் ஆதி சக்தி
சற்சொரூபி சாமுண்டி திரிசூ லிதேவி
தருக்கள் நிறை கோணைநகர்ப் பத்ரகாளி
தஞ்சம்வே றிலைத்தாயே குளிர்ந்தருள்வாய்

அருமறை யாகமங்கள் எடுத்துச் சொன்ன
அனந்தவித சாத்திரங்க ளெல்லா மென்னுள்
மருவியுள தத்துவங்க டொன்னூற் றாறின்
வகையுரைத்த லன்றியிலை வாய்மையீ தென்று
ஒருமுறைபோற் பன்முறையு முணர்த்தி மேலும்
உள்முகநோக் காலெதையும் தேர்வா யென்று
தருமருள் தந்தாய் கோணை நகர்வாழ் காளி
தஞ்சம்வே றிலைத்தாயே குளிர்த்தருள்வாய்

அருமறை யாகமங்கள் எடுத்துச் சொன்ன
அனந்தவித சாத்திரங்க ளெல்லா மென்னுள்
மருவியுள தத்துவங்க டொன்னூற் றாறின்
வகையுரைத்த லன்றியிலை வாய்மையீ தென்று
ஒருமுறைபோற் பன்முறையு முணர்த்தி மேலும்
உள்முகநோக் காலெதையும் தேர்வா யென்று
தருமருள் தந்தாய் கோணை நகர்வாழ் காளி
தஞ்சம்வே றிலைத்தாயே குளிர்ந்தருள்வாய்

அறுகோணத் திடைநடுவே பரையாய் நின்றிங்
கானந்தத் தாண்டவஞ்செய் யமலீ யுந்தன்
சிறுபாதப் பெருவிரலூற் றெடுத்துப் பாயும்
சீவரட்சா மிர்தமதைச் சிரத்தாற் கொண்டிங்
கறுபகைவென் றீரிருவ ருறவைப் பற்றி
யகண்டார்த்தம் பெறுந்தருண மிதைக்கை விட்டோம்
தறுகண்தீர் திரிகோணைநகர்வாழ் காளி
தஞ்சம்வே றிலைத்தாயே குளிர்ந்தருள்வாய்

அத்தமுட னல்வாழ்வின் களிப்பா யென்பார்
அருமிடிவல் வினைநோய்கள் தீர்ப்பா யென்பார்
புத்திரநற் பாக்கியங்க ளீவாய் என்பார்
பூவுலகிற் பெரியனென்ற பேர்தா வென்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் திருக் குளிர்ச்சிக் கவிகள்

இத்திறங்கள் ஈதல்விடல் உந்தன் சித்தம்
எளியேற்கிங் கெவ்வகைக்கே டுறினு மஞ்சாச்
சத்தி நீயே திரிகோணைப் பதிவாழ் காளி
தஞ்சம்வே றிலைத்தாயே குளிர்ந்தருள்வாய்

அயனாய்நின் றண்டமெலாம் படைப்பாய் நீயே
அரியாய்நின் றண்டமெலாம் காப்பாய் நீயே
ஐயவீர சக்திசிவ மாகக் கொண்டிச்
சராசரமெல் லாமரனாய் அழிப்பாய் நீயே
மயலாருஞ் சீவர்களுள் வழியே நின்று
மகேசுரனாய் அவ்வவற்றை மறைப்பாய் நீயே
தயைஈவாய் திரிகோணைப் பதிவாழ் காளி
தஞ்சம்வே றிலைத்தாயே குளிர்ந்தருள்வாய்

அஞ்சலென்றுன் மெய்யடியார் தம்மைக் காத்திங்
கருட்கண்ணா லெவ்வினையு மகல வோட்டிக்
கஞ்சமலர்த் தாளிணியீத் துடலோ டாவி
கருதுபொரு ளிவையனைத்தும் பதிலா யேற்றுக்
கொஞ்சமெனு மிஞ்சவிடா தொன்றி யாக்கிக்
கூடத்தம் பிரமமாக்குந் தேவி யுன்பா
தஞ்சரணே திரிகோணைப் பதிவாழ் காளி
தஞ்சம்வே றிலைத்தாயே குளிர்ந்தருள்வாய்

அழிப்பவளு மளிப்பவளு மடுத்தார்க் குன்னை
யளிப்பவளு மாணவப்பேய் பிடியுண்டாரை
அழிப்பவளு மருள்முகிழ்வால் இரங்கிப் பின்னும்
அம்மைகையி லளிப்பவளு முயிர்க டோறும்
ஒழிப்பவளும் பக்குவருக் குணர்த்த வேண்டி
உருவருளாற் றரிப்பவளு மடியா ருய்யத்
தழைப்பவளும் நியேதென் கைலைவாழ் காளி
தஞ்சம்வே றிலைத்தாயே குளிர்ந்தருள்வாய்

அற்புதையே நின்னடிக்கே ஓலம் ஓலம்
அருட்டேவி நின்னடிக்கே ஓலம் ஓலம்
பொற்றிருவர் ணச்சடையீ ஓலம் ஓலம்
புகலறுகோ ணத்திருமே னியளே ஓலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பகச் சின் மயத்தாயே ஓலம் ஓலம்
கடைநாயேம் மயத்தாயே ஓலம் ஓலம்
சற்குரவர் போற்றிதிரு மலைவாழ் காளி
தஞ்சம்வே றிலைத்தாயே குளிர்ந்தருள்வாய்

வாழி

வாழிய சகங்களெல்லாம் வாழிய சீவகோடி
வாழிய பத்ரகாளி வாழியிம் மூன்று மொன்றாய்
ஊழிதோ றுயிர்த்து நின்ற உண்மையாஞ் சாட்சி வாழி
வாழிய துணர்ந்து விட்டோர் வாழிமெய் யடியரெல்லாம்.

*******

திரு.வி.வேலாயுதம்பிள்ளை ஆசிரியர் இயற்றியது

இராகம்- பந்துவராளி | தாளம்- ரூபகம்

பல்லவி

ஈஸ்வரியே பத்ரகாளி– தாயே (ஈஸ்)

அ.ப.

ஜெகதீஸ்வரியுன் கிருபை தாராயோ
இன்பமதாய் இச்சமயம் வாராயோ (ஈஸ்)

சரணம்

பக்தியுடனுந்தன்கழல் நித்தநித்தம் போற்றி செய்தேன்
பாலனினி யேது செய்வேன் காலமதில் நீயேதுணை
பாவியெனை ஆண்டருளத் தேவி சிங்கம் மேல்வருவாய் (ஈஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை
# பத்திரகாளி ஊஞ்சல்

*ஆக்கியோன்:*
திரு.வே.அகிலேசபிள்ளை அவர்கள்
*திருக்கோணமலை*

சீருலவு தென்கயிலை மலைக்கோர் பாலில்
தேவருலகெனத் தகைமை சேர்ந்திலங்கும்
பேருலவு திரிகோணை நகரத் தன்னைப்
பிரியமுடன் காத்தருளும் பெருமை வாய்ந்த
ஏருலவு பத்திரகாளியின் மீது ஊஞ்சல்
இசைபாட அடியவர்கள் இடரை நீக்கிக்
காருலவும் ஆலடியி லினிது வாழும்
கணபதியி னுபயபதங் காப்பதாமே.

சுந்தரஞ் சேர் மரகதத்தாற் றூண்கள் நாட்டித்
துலங்கு புட்பராகமதால் விட்டம் பூட்டி
அந்தமுறு நித்திலச் சங்கிலிகள் மாட்டி
அவிர் கிரண மாணிக்கப் பலகைமீதே
இந்திரையுங் கலைமகளும் வடந்தொட் டாட்ட
இருமருங்கு மரமகளிர் களாசி நீட்ட
பந்தமிகு திரிகோணைப் பதியில் வாழும்
பத்திரகாளித் தாயே யாடீருஞ்சல்.

காவலர்கள் கரங்கூப்பி வணங்கிப் போற்றக்
கன்னியர்கள் ஆலாத்தி கைக்கொண் டேற்றத்
தேவர்களன் போடு புட்ப மாரி பெய்யத்
திசைமுகனு மிந்திரனும் சேவை செய்யக்
காவல் செயு பூதகணாதிபர்கள் யாருங்
காளிபராக் கெனக் கூறிக் களிப்புற்றாடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை மாவட்டத் திருத் தலங்கள்

பாவலர்கள் புகழ் கோணைப் பதியில் வாழும்
பத்திரகாளித் தாயே யாடீரூஞ்சல்.

எத்திசையும் புனுகு சந்த வாசம் வீசக்
குரைகடல்போல் வாத்தியங்க ளிரைந்து பேச
அத்திரநேர் விழிமடவார் நடனமாட
அன்பினோடு நாரதர்யாழ் இசைகள் பாட
மெத்துமெழி லரமகளிர் கவரி போட
மேதினி மானுடர் மகிழ்ச்சிமீறி யாட
பத்திமிகு மடியர் செறி கோணை வாழும்
பத்திரகாளித் தாயே யாடீரூஞ்சல்.

வாலை திரிபுரை புவனை மதங்கி நீலி
வாமி யமிராமி பகவதி யென்றே தான்
சீலமிகு மடியர்துதி செய்து போற்றச்
சிந்தை மகிழ்ந் தந்தணர்க ளாசி சாற்றக்
கோலமுறு பரிதி மதி கவிகை யேந்தக்
கூசியட்ட பாலகர்கள் கொடிகைக் கொள்ளப்
பாலவிழி யரனுறையுங் கோணை வாழும்
பத்திரகாளித் தாயே யாடீரூஞ்சல்.

தண்ணருள்செய் முகமாடக் கிரீடமாடச்
சடையாட விடையாடத் தாரையாட
கிண்ணமுலை யசைந்தாடப் பதக்கமாடக்
கிரணமுத்து வடமாடக் கிளியுமாட
வண்ணமிகு கரமாட வளைக ளாட
மார்பிலிருந் தொளிர்செய் மலர்மாலையாட
பண்ணவர்க ணிதம் பரவும் கோணை வாழும்
பத்திரகாளித் தாயே யாடீரூஞ்சல்.

தங்கரத்னக் கொப்பாட முருகு மாடத்
தளதளெனப் பிரபைவிடுங் கம்மலாடத்
துங்க வைடூரியப் பொற் சிமிக்கியாடச்
சொல்லரு மூக்குத்தி முத்துச் சுடர்விட்டாட
சங்கைமிகு மிடையினிற் பாவாடையாட
தார்குழலில் வண்டினங்கள் சப்தித்தாடப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை பத்திரகாளி ஊஞ்சல்

பங்கயவாவிகள் செறியுங் கோணை வாழும்
பத்திரகாளித் தாயே யாடீரூஞ்சல்.

அரவணியுஞ் சிவனொடெதிர்த் தாடும் பாத
மசைந்தாடத் தங்கவொட்டியாண மாடச்
கரமுறுவா ளுடுக்கை கட்கங்கபாலமாடச்
கனகவொளி பரப்பு திரிசூல மாடச்
சரண விரன் மோதிரமுஞ் சிலம்பு மாடத்
தண்டை கொலிசொடு பாத சரமுமாடப்
பரவை செறி திரிகோணைப் பதியில் வாழும்
பத்திரகாளித் தாயே யாடீருஞ்சல்.

அன்னபரி பூரணியே யாடீரூஞ்சல்
ஆரணியே காரணியே யாடீரூஞ்சல்
பொன்னின் மலர்த் தாளுடையாய் யாடீரூஞ்சல்
புவனமெலா மீன்றவளே யாடீரூஞ்சல்
மன்னுமட மயிலொயிலா யாடீரூஞ்சல்
மயிடனைமுன் வென்றவளே யாடீரூஞ்சல்
பன்னரிய திரிகோணைப் பதியில் வாழும்
பத்திரகாளித் தாயே யாடீரூஞ்சல்.

சீர்வாழி செந்நெல்விளை பழனம் வாழி
தேசமெங்குஞ் சிவமயம் சிறந்து வாழி
ஏழ்வாழி யானினங்கள் மல்கிவாழி
எழின்முடி மன்னவர்வாழி இமையோர் வாழி
பார் வாழி திரிகோணை நகரம் வாழி
பகரரிய விபூதி பஞ்சாட்சரமும் வாழி
கார் வாழி மறைவாழி தேவி பத்ர
காளி பத மலரிணைகள் வாழி வாழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை
# ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
# ஸ்ரீ துர்க்காம்பிகைத் திருஊஞ்சல்

ஆக்கம்

சைவப்புலவர்-பண்டிதர் இ.வடிவேல் அவர்கள்
திருக்கோணமலை

## காப்பு

நீரோங்கி வளங்கொழிக்கும் வரைகள் சூழ்ந்த
நீடுபுகழ்த் திருக்கோணா சலத் தமர்ந்து
பாரோங்க அருள் சுரக்கும் பத்திரகாளிப்
பராபரையின் கோயிலமர் துர்க்கைமீது
சீரோங்கும் ஊஞ்சலிசை மாலைபாடிச்
சிறந்தோங்கு சேவடியிற் சூட்ட ஞானப்
பேரோங்கு மோங்காரப் பிள்ளையார்தன்
பேரருளா மிருசரணங் காப்பதாமே.

## ஊஞ்சல்

அண்டமெலாம் பூத்தருளும் ஆதிசக்தி
அரியயனும் அறியாத அமரஜோதி
கொண்டல்வண்ண மேனியிடைச் செம்பொற் பட்டும்
குவளைமலர்க் கண்களொரு மூன்றுங் கொண்டு
வண்டலம்பு மலர்மாலை மார்பில் மின்னும்
வரிவளையாள் வாரணியுங் கொங்கைச் செல்வி
புண்டரிகத் திருவடியிற் பொற்சிலம்பும்
பொலியவருமா துர்க்கையம்மா ஆடீரூஞ்சல்.

ஆதிபிரான் அருளும் வேதம் நான்கும்
ஆகமத்தின் மலர்புனைந்து அழகுசெய்யும்
சோதிமணி வடையங்களாய்த் துலங்கி யோங்கச்
சுந்தரநற் திருமுறை பொற் பீடமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதவத்தோர் மங்கலநற் தீபமேந்தி
மலர்தூவி வந்தனைகள் செய்து வாழ்த்த
தீதகலத் திருவூஞ்சல் மீதமர்ந்து
தேவிதுர்க்கை அம்பிகையே ஆடீரூஞ்சல்.

இடர்களையும் ஈஸ்வரியே ஆடீரூஞ்சல்
இஷ்டசித்தி தருபவளே ஆடீரூஞ்சல்
விடையவனின் வீரசக்தி யாகிவந்து
தடையருக்குந் தயாபரியே ஆடீரூஞ்சல்
படைவலிமை மிகவுடைய மகிஷன்மீது
படையெறியும் பராபரையே ஆடீரூஞ்சல்
அடியவரின் துயர்களையும் ஆதிசக்தி
அன்னை துர்க்கை அம்பிகையே ஆடீரூஞ்சல்.

ஈஸ்வரியே சுந்தரியே உலகமேழும்
ஈன்றுமிளங் கன்னியென வாழ்வாய் நீயே
மாசகல மகிஷனுயிர் மாயச் செய்த
மகாசக்தி மகமாயி தேவி நீயே
பாசவினை அறுத்தாளும் பார்வதியு நீயே
பக்தருளத் துறைகின்ற பைரவியு நீயே
தேசமெலாங் காத்தருளும் திரிபுரையு நீயே
தேவிதுர்க்கை அம்பிகையே ஆடீருஞ்சல்.

உண்டில்லை என்றவுருக் கொண்டு நின்று
உலகமெலாம் உய்விக்கும் ஒளியுமானாய்
பண்டுமின்று மென்றுமுள பரையுமாகிப்
பரவுவார் உளத்திலுறை திருவுமானாய்
கண்டறியாக் காரண காரியமா யென்றும்
கருதுவார் கடைத்தேறுங் கதியுமானாய்
அண்டர்தொழும் அம்பிகையே அமுதவல்லி
அன்னைதுர்க்கா தேவியளே ஆடீரூஞ்சல்.

ஊர்தியாய்ச் சிம்மமதில் இவர்ந்து கொண்டு
ஒன்னலரை அழித்திடவே உன்கை தன்னில்
கூரியவாள் வில்லம்பு கொடிய குலம்
குந்தமொடு சக்கரமுஞ் சங்குங்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ துர்க்காம்பிகைத் திருஊஞ்சல்

சீரியார் தமைக்காக்கும் அபயக்கையும்
சிறந்திலங்கு வரதமதிற் கபாலமேந்தி
வீரியாய் வந்தெம்மைக் காக்கும் தாயே
விமலை துர்க்கை அம்பிகையே ஆடீரூஞ்சல்.

எண்ணரிய தவமுனிவர் ஏத்தி நிற்க
ஏந்திழையார் லட்சுமி பாரதியுமங்கே
வண்ணவடம் தொட்டுநிதம் வாழ்த்தி நிற்க
வணங்குமடி யார்கள் கரங் கூப்பி நிற்க
கின்னரரும் கிம்புருடர் தேவர் தாமும்
பண்ணனொடு மிசைபாடி ஆடிநிற்க
மண்ணிலுயர் ஸ்ரீபத்ர காளியோடு
மருவியுறை துர்க்கையளே ஆடீரூஞ்சல்.

ஏடங்கை கொண்டவளே ஆடீருஞ்சல்
இறைவன்பங் குறைபவளே ஆடீரூஞ்சல்
வேடங்கள் பலவாகி யொன்றாய் நிற்கும்
வித்தகியே ரட்சகி யே ஆடீரூஞ்சல்
பாடும்பண் வேதமொடு நாதகீதப்
பாட்டிலுறை பைரவியே ஆடீரூஞ்சல்
தேடும்மெய் யடியர் துயர் தீர்க்குந்தேவி
துர்க்காபர மேஸ்வரியே ஆடீரூஞ்சல்.

ஐந்தெழுத்தி னுட்பொருளாய் அகிலமெல்லாம்
ஆண்டருளும் அம்பிகையே ஆடீரூஞ்சல்.
சிந்தையிலே தித்தித்துத் தேனாயூறும்
சிவஞான போதகியே ஆடீரூஞ்சல்.
சுந்தரியே சூலினியே ஆடீரூஞ்சல்.
சுத்தசிவ தத்துவமே ஆடீரூஞ்சல்.
பந்தமறுத் தெமையாளும் பரையே தேவி
துர்க்கா பரமேஸ்வரியே ஆடீரூஞ்சல்

ஒளிக்குள் ஒளியாகி உலகமெல்லாம்
உய்யவருள் பொழிகின்ற உமையும் நீயே
பழிகளொடு பாவவினை நீக்கியென்மேல்
பாதமலர் சூட்டுபரா பரையும் நீயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிவளரும் உள்ளத்து அமுதும் நீயே
அடியவர்க் கருள்புரியும் அம்மை நீயே
விழிகளொரு மூன்றுடைய விமலை நீயே
வீரி துர்க்கை அம்பிகையே ஆடீரூஞ்சல்.

ஓங்காரத் துட்பொருளாய் உயிர்கட்கெல்லாம்
உயிராகி ஒளிர்கின்ற ஓங்காரி வாழ்க
பாங்காய பணிபுரியும் பார்ப்பனரும் வாழ்க
பரவுமடி யார்களொடு பாவையரும் வாழ்க
ஆங்காரம் நீங்கி உலகாள்பவரும் வாழ்க
அறம்வாழ்க ஆனினமும் வானவரும் வாழ்க
தீங்கெலா மகற்றியெமைக் காக்குந் துர்க்கா
தேவிதிரு வடியிணைகள் வாழ்க வாழ்க.

எச்சரிக்கை

அண்டர் தொழும் அம்பிகையே ஆதிபரா சக்தி
கொண்டல் வண்ண மேனிகொண்ட துர்க்கா எச்சரிக்கை.

வண்டார் சூழல் மாதைப் பாகங் கொண்ட சிவனாரின்
விண்தோய்கோண மலைமேவிய துர்க்கா எச்சரிக்கை.

கண்டார்களி கொள்ளும்பத்ர காளிகோவில் மேவும்
எண்தோளுடை வீரி சக்தி துர்க்கா எச்சரிக்கை.

தண்டாமரைத் திருவும் சிவகௌரி யம்மையோடும்
வெண்டாமரை யமர்வாள் மகிழ் துர்க்கா எச்சரிக்கை.

பண்டேபகை கொண்டேயுனை மிண்டு மகிஷன்மேல்
தண்டாலெறிந் தாடல்செய்யும் துர்க்கா எச்சரிக்கை.

தொண்டர்தொழுந் தேவி திரி சூலி சிவகாமி
எண்டிசையும் போற்றும் துர்க்கா தேவி எச்சரிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ துர்க்காம்பிகைத் திருஊஞ்சல்

### பராக்கு

சீர் பெருகு கோணைவளர் தேவி பராக்கு
சிவசக்தி வடிவான தாயே பராக்கு
கூர்கொண்ட மூவிலைச் சூலி பராக்கு
கொற்றமொடு மகிஷனைக் கொன்றாய் பராக்கு.

ஆரணப் பொருளாகி அமர்வாய் பராக்கு
ஆதிபர மேஸ்வரியு மானாய் பராக்கு
பூரணி புராதனி சுமங்கலி பராக்கு
புவனநாயகி தேவி துர்க்கா பராக்கு.

காரணமுங் காரியமு மானாய் பராக்கு
கருணைபொழி முக்கணுடை கௌரி பராக்கு
வாரணியுங் கொங்கையுடை வல்லி பராக்கு
வரமருளி எமையாளும் வரதீ பராக்கு .

பார்புகழ வருகின்ற பார்வதி பராக்கு
பக் தருக் கருள்புரியும் பகவதி பராக்கு
தாரணியு மார்பழகித் தாயே பராக்கு
தாரணி தழைக்கவருள் தருவாய் பராக்கு.

### லாலி

லாலி லாலி லாலி லாலி லாலி
லாவண்ய ரூபி துர்க்கா தேவி லாலி

நீலி திரி சூலி அருளாளி லாலி
நித்தியத்தின் தத்துவமே லாலி லாலி (லாலி)
சுந்தரியே அம்பிகையே தாயே லாலி
சோதிவடி வானவளே லாலி லாலி. (லாலி)

பந்தமறுத் தெம்மையாளும் பத்ரகாளி
பாங்கிலுறை ஓங்காரி லாலி லாலி. (லாலி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியந்த மில்லா அபிராமி லாலி
அங்கு மிங்கு மெங்குநிறை அம்மை லாலி. (லாலி)

நாத பிந்து வான சிவ சக்தி லாலி
நான்மறைக்கும் நாயகியே லாலி லாலி. (லாலி)

பாதமலர் சூட்டியெமை ஆளுந் தாயே
பைரவி துர்க்காம்பிகையே லாலி லாலி. (லாலி)

## மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் ஜெய ஜெய
மங்களம் மங்களம் மங்களம்

ஆதிபர மேசனுக்கும் அன்னை பத்ர காளியர்க்கும்
நாதவடிவான அம்மை நாயகிக்கும் நான்முகிக்கும் (மங்களம்)

சங்கரிக்கும் சுந்தரிக்கும் சர்வபரி பூரணிக்கும்
சிங்கமதில் ஏறிவரும் எங்கள் துர்க்கா தேவியர்க்கும் (மங்களம்)

மறைகளுக்கும் மாதவர்க்கும் மந்திரத்தினுட்பொருட்கும்
இறைவியடித் தொண்டருக்கும் எம்மையாளும் ஈஸ்வரிக்கும் (மங்களம்)

மன்னுயிரைக் காத்தருளும் மாதங்கி மகேஸ்வரிக்கும்
அன்னையினுந் தயவுடைய ஆதிபரா சக்தியர்க்கும் (மங்களம்)

கோணமலை நாயகர்க்கும் குஞ்சர முகத்தவர்க்கும்
ஆனபுகழ் வேலவர்க்கும் அம்மை துர்க்கா தேவியர்க்கும் (மங்களம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உப்புவெளிக் காளிகோவில்

இந்த ஆலயம் பெரியதொடுவாய்ப் பிள்ளையார் கோவிலுக்கு அருகே இருக்கின்றது. இக்கோவிலுக்குச் செல்வதற்குரிய மார்க்கத்தைப் பெரியதொடுவாய்ப் பிள்ளையார் கோவில் வரலாற்றில் பார்க்கவும். 1980ஆம் ஆண்டு ஆவணி மாதம் 22ஆம் திகதி இவ்வாலயத்தில் பத்திரகாளியம்பாளைப் பிரதிஷ்டைசெய்து அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நடத்தியிருக்கின்றார்கள். இவ்வாலயத்தின் பழையவரலாறு இரண்டாவது மகாயுத்தத்தின் தாக்கத்தால் புதுவரலாறாக மாறியமைந்திருக்கின்றது. சுமார் நூற்றைம்பது வருடங்களுக்கு முன் தற்போது உப்புவெளி உபதபாற்கந்தோர் இருக்குமிடத்திற்கு அருகாமையில் இவ்வாலயம் இருந்தது. உப்புவெளி மக்கள் பயபக்தியோடு இவ்வாலயத்தில் வழிபட்டு வந்தார்கள். அப்போது இதற்கு நடுப்பத்திரகாளிகோவில் என்றும் ஒரு பெயரிருந்தது. இரண்டாவது உலகமகாயுத்தம் நடைபெற்றபோது இந்தக் கோவில் இருந்த பிரதேசம் முழுவதையும் சுமார் நூறு ஏக்கர் நிலத்தைப் பிரித்தானிய அரசாங்கம் கடற்படைத்தளம் அமைப்பதற்காகச் சுவீகரித்துக்கொண்டது. இதனால் பொதுமக்கள் இவ்வாலயத்திற்குச் சென்று வழிபட முடியாமற்போய்விட்டது. இவ்வாலயத்திலிருந்து அம்பாளையும் வெள்ளியினாலான சூலத்தையும் எடுத்துச்சென்று பெரியதொடுவாய்ப் பிள்ளையார் கோவிலில் வைத்திருந்தார்கள். இந்தச் சூலத்தையும் பத்திரகாளி அம்பாளின் திருவுருவத்தையும் தற்போது புதிதாக அமைக்கப்பட்டுள்ள உப்புவெளிப் பத்திரகாளிகோவிலில் நாம் தரிசிக்கக்கூடியதாயிருக்கின்றது.

கற்பக்கிரகம் அர்த்தமண்டபம் என்பனவற்றைக் கொண்ட இந்தச் சிறிய கற்கோவிலில் கருவறையில் அம்பாள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றாள். கற்பக்கிரகத்திற்குத் தூபி அமைத்திருக்கின்றார்கள். மகாமண்டபம் ஓலையால் வேயப்பட்டிருக்கின்றது. அம்பாள் வலது காலைத் தொங்கவிட்டு இடதுகாலை மடித்து சுகாசனமாக பத்மபீடத்தில் அமர்ந்திருக்கின்றாள். சூலம், கபாலம், பாசம், கட்கம் தாங்கிய சதுர்ப்புஜங்களோடு அம்பாள் திருக்காட்சி கொடுத்து அருள்புரிகின்றாள். அம்பாளுக்கருகில் வெள்ளிச் சூலமும் வீரபத்திரரும் ஸ்தாபிக்கப்பட்டிருகின்றன.

காலைச்சந்தி, மாலைச்சந்தி ஆகிய இரண்டுகாலப் பூசைகள் நடைபெற்றுவருகின்றன. ஆவணிமாதத்தில் கும்பாபிஷேகதினத்தை முதல்நாளாகக் கொண்டு விசேட ஸ்நபனாபிஷேகமும் அலங்கார உற்சவமும் நடைபெற்று பதினோராவது நாள் தீமிதிப்பு வைபவம் நடைபெறுகின்றது. வைகாசிப் பொங்கல், நவராத்திரி, கௌரிநோன்பு, திருவெம்பாவை என்பன விசேட வழிபாடுகளாக நடைபெற்று வருகின்றன. ஆலய நித்திய, நைமித்திய கருமங்களை சிவஸ்ரீ.ஏ.விஸ்வலிங்க குருக்களும், புலவர் வை.சோமாஸ்கந்தக் குருக்களும் நடத்தி வருகின்றார்கள். இந்த ஆலய வரலாறுகளைத் தந்த இவர்களுக்கு நன்றி உரியதாகுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறையன்குளம்
# எல்லைக் காளியம்மன் கோவில்

திருக்கோணமலையிலிருந்து அனுராதபுரம் செல்லும் நெடுஞ்சாலையில், இருபத்தைந்து கில்லோமீற்றர் தூரத்தில் முதலிக்குளச் சந்தியிலிருந்து வடக்கே ஒரு சிறுசாலை பிரிந்து செல்கின்றது. அந்தச் சாலையில் பத்துக் கில்லோமீற்றர் தூரத்தில் நல்லபிட்டியா என்ற கிராமம் இருக்கின்றது. அங்கிருந்து காட்டுப் பாதையினூடாக ஐந்து கில்லோமீற்றர் தூரம் சென்றால் பறையன்குளம் எல்லைக்காளியம்மன் கோவிலையடையலாம். மிகப்பெரிய மராமரங்களை அடர்த்தியாகக் கொண்ட பயங்கர வனமாகக் காணப்படுகின்றது. நல்லபிட்டி ஆறு அங்கு ஓடிக்கொண்டிருக்கின்றது. பளிங்கு போன்ற நீர் பாறைகளில் மோதி சலசலவென்று ஒடுகின்ற ஓசையை அந்த அமைதிச்சூழ்நிலையில் நன்கு அவதானிக்கக் கூடியதாயிருக்கின்றது. ஆற்றில் இறங்கிநின்று பார்த்தால் இருபக்கக் கரைகளும் மிக உயரமாகத் தெரியும். மாரிகாலத்தில் நீர் நிறைந்து ஓடும்போது பார்க்கப் பயங்கரமாக இருக்கும். கோடையில் நீர்வற்றி சிற்றாறுபோல் ஓடிக்கொண்டிருக்கும். ஆறு பெருக்கெடுத்து ஓடும்போது புரட்டிவிடப்பட்ட மரங்கள் கரைகளில் ஒதுக்கப்பட்டுக் கிடக்கின்றன. யானை, புலி, கரடி போன்ற பயங்கர மிருகங்கள் சுதந்திரமாக வாழுமிடம் பறையன்குளம்.

இந்தக் காட்டின் மத்தியிலே நல்லபிட்டி ஆற்றுக்கருகே பறையன்குளம் எல்லைக் காளியம்மன் கோவில் இருக்கின்றது. கோவிலைப் பார்க்கும் நினைப்போடு இங்குசென்றால் ஏமாற்றமாகவேயிருக்கும். சாஸ்திரரீதியாகச் சீராயமைக்கப்பட்ட கோவில் அங்கு இல்லை. களிமண்ணால் கட்டப்பட்ட ஒரு சிறு கோவில்தானுண்டு. மடாலயமாக ஒரு சிறு கோவிலைக் கற்களால் கட்டுவதற்கு திருக்கோணமலை இந்து இளைஞர் மன்றம் அத்திவாரக்கல் நாட்டியிருக்கின்றது. விரைவில் அந்தக் கோவிலைக் கட்டிவிடுவார்கள். தென்னமரவாடிப் பிள்ளையார் கோவில் வரலாற்றில் பறையன்குளம் தோன்றிய வரலாறு கூறப்பட்டிருப்பதைப் பார்க்கவும். பதவியாவில் தமிழர்கள் வாழ்ந்த காலத்தில் இந்த இடம் சைவப் பெருங்குடிமக்கள் வாழ்ந்து மிகவும் பிரசித்தி பெற்றிருந்ததை ஊகித்தறியக் கூடியதாயிருக்கின்றது.

இவ்வாலயத்தில் மிக அழகிய பத்திரகாளி அம்பாள் சிலாவிக்கிரகம் ஒன்று இருக்கின்றது. இந்த விக்கிரகமே கடந்தகால வரலாற்றைப்பற்றி ஆராய்வதற்குக் காரணியாயிருந்து வருகின்றது. இடதுகாலை மடக்கி, வலதுகாலைத் தொங்கவிட்டபடி சதுர்புஜங்களைக் கொண்டவளாக பீடத்தில் அம்பாள் அமர்ந்திருக்கின்றாள். இயற்கையின் தாக்கங்களால் சிலையின் அழுத்தம் சிறிது குறைந்திருந்தாலும், திருவுருவத்தில் பின்னமேற்படவில்லை. இந்த இடத்திற்குப் "புலிகண்டி" என்ற ஒரு பெயரும் வழங்கிவந்திருக்கின்றது. காட்டிற்கு வேட்டையாடச் சென்ற வேடர்கள் புலியில் ஒரு பெண் போவதைக் கண்டு தொடர்ந்து சென்றபோது அது ஒரு குறித்த இடத்திற்கப்பால் மறைந்துவிட்டதாம். அதனால் அந்த இடத்திற்குப் "புலிகண்டி" என்று பெயரிட்டார்களாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகண்டகுளம் என ஒரு குளமும் அங்கிருக்கின்றது. பிடாரியம்மன்சோலை என்றும் இந்தக் காட்டுப்பிரதேசத்தைக் கூறுவார்கள். இங்கிருக்கின்ற எல்லைக்காளி அம்மனைக் கருத்தில் கொண்டே இந்தப் பெயர்களையிட்டிருக்கலாம். இந்தப் பிரதேசத்தில் பறையன்குளம், புலிகண்டகுளம், கொக்குவிழுந்தான்குளம், கற்கட்டுக்குளம், இரணைமடுக்குளம், விளாங்குளம், குறிஞ்சாக்குளம் முதலிய குளங்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. ஆதலால் இப்பகுதியில் மக்கள் நீண்ட காலத்திற்கு முன்பே விவசாயம் செய்து வாழ்ந்து வந்திருக்கின்றார்கள் என்பதை ஊகித்தறிக்கக்கூடியதாயிருக்கின்றது.

சுமார் இருபத்தைந்து வருடங்களுக்குமுன் திரு.முத்தையாசாமியார் என்பவருடைய தலைமையில் கொமரங்கடவையில் வாழ்ந்த அப்புகாமியும், தட்டையா என்பவரும் இந்தக் கோவில் இருந்த இடத்தைத்தேடிப் பலநாட்கள் காட்டில் அலைந்து திரிந்திருக்கின்றார்கள். சிரமங்களையும், கஷ்டங்களையும் பொருட்படுத்தாமல் விடாமுயற்சியோடு இந்தப் பயங்கர வனத்தில் தேடியலைந்தபோது இந்தக் காளியம்மன் சிலை கழுத்து மட்டம்வரையில் மண்ணில் புதைந்திருப்பதைக் கண்டார்கள். இந்த இடத்தையடைவதற்குரிய வழியடையாளங்களை வைத்துக்கொண்டுவந்து, வேண்டிய உபகரணங்களோடு மீண்டும் சென்று நிலத்தை அகழ்ந்தபோது காளியம்பாளின் திருவுருவம் நிமிர்ந்தபடியே ஒரு கற்பாறையின் மேல் இருந்ததாம். அகழ்ந்த இடத்தில் சிதைந்த செங்கற்களும் காணப்பட்டன. எனவே இங்கு ஆலயமொன்றிருந்து பன்னெடுங்காலத்திற்கு முன்னரே இயற்கை ஏதுக்களினாலோ அன்றி வேறு காரணங்களினாலோ அழிந்திருக்கலாம். சற்றுத் தூரத்தில் எட்டடி உயரமான கருங்கற் தூண்களும் காணப்படுகின்றன. சதுரவடிவத் தூண்களில் சில சரிந்தும், சில நிறுதிட்டமாயும் காணப்படுகின்றன. சிதைந்த தூண்களும் சிலவுண்டு. சிறிய மண்டபம் அமைப்பதற்கு நாட்டப்பட்டது போல் காணப்படுகின்றன.

இந்தக் காளியம்மன் திருவுருவத்தைக் கண்டுபிடித்தவர்கள் இது இருந்த இடத்திலேயே வைத்துக் கொத்துப் பந்தல் அமைத்தார்கள். பின்னர் திரு முத்தையாச்சாமியார் களி மண்ணினாலும், கல்லினாலும் சிறுகோவில் கட்டி வழிபட்டு வந்தார். அவருடைய விடாமுயற்சியால் மக்களுக்கும் இந்தக் காளியம்பாளில் ஈடுபாடும், பயபக்தியும் ஏற்பட்டது. இப்போது ஒவ்வொரு தைப்பூசத்திற்கும் பொங்கல்விழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இந்த அம்பாள் பல அற்புதங்களைத் தனக்குக் காட்டியதாக இந்த விபரங்களைத் தந்த முத்தையாச்சாமியார் பயபக்தியோடு கூறினார். இந்த ஆலயம் இருந்த இடத்தைச் சுற்றிப் பல சிறிய ஆலயங்கள் இருந்து அழிந்துபோனதற்குரிய அறிகுறிகள் காணப்படுகின்றன. பறையன்குளம் பத்திரகாளியம்மன் ஆலயத்தைச் சுற்றி இடும்பன்மலை, வெள்ளாட்டிமலை, நாச்சியார்மலை, மச்சமலை, அசுவத்மலை, பிள்ளையார்மலை எனப் பல மலைகளுண்டு. இடும்பன் மலை மிக விசேடமானது. யோகிகள் தவம்செய்த இடம்போல குகைகளையுடையதாய்க் காணப்படுகின்றது. பல ஆண்டுகளாகப் பரிபாலித்துவந்த முத்தையாச்சாமியார் இப்போது திருக்கோணமலை இந்து இளைஞர் மன்றத்தினிடம் ஆலயத்தை ஒப்படைத்துள்ளார். இலங்கையைச் சோழ மன்னர்கள் ஆண்ட காலத்தில் திருக்கோணேஸ்வரத்திற்கு இது எல்லைக்காணியாக இருந்ததாம். அதேபோலக் கந்தளாயிலும், சம்பூரிலும், எல்லைக் காணிகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததாகக் கர்ணபரம்பரைக் கதைகள் இருந்துவருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படுக்கைப் பத்திரகாளி கோவில்
# திருக்கோணமலை

திருக்கோணமலையிலிருந்து நிலாவெளிக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து ஒரு கில்லோமீற்றர் தூரத்திலும், திருக்கோணமலைப் புகையிரத நிலையத்திலிருந்து கால் கில்லோமீற்றர் தூரத்திலும் இவ்வாலயம் இருக்கின்றது. பெரியதொடுவாய்ப் பிள்ளையார் கோவிலுக்கும், சின்னத்தொடுவாய்ப் பிள்ளையார் கோவிலுக்கும் இடையில் கடற்கரையோரமாக இவ்வாலயம் அமைந்திருக்கின்றது.

முற்காலத்தில் தொடுவாயாறு என்ற ஒரு ஆறு, கந்தசாமி மலையடிவாரத்தில் உள்ள மனையாவெளிக் குளத்திலிருந்து ஆரம்பித்து தக்கியாக்குளம், செங்கற்பண்ணைக்குளம் என்பவற்றினூடாக ஒடி வீரகத்திப் பிள்ளையார் கோவிலுக்கருகாமையிலுள்ள தாமரைக்குளத்தை நிரப்பி அங்கிருந்து ஒடி இரண்டு கிளைகளாகப் பிரிந்து, ஒருகிளை பெரியதொடுவாய்ப் பிள்ளையார் கோவிலையும், மற்றக்கிளை சின்னத்தொடுவாய்ப் பிள்ளையார் கோவிலையும், தாண்டிச் சென்று கடலை அடைந்தது. இந்த ஆறு இப்பொழுது இல்லையெனினும் முன்னர் அந்த ஆறு ஓடிய நிலப்பகுதி பள்ளநிலமாகக் காணப்படுகின்றது. இந்த இரண்டு கிளைகளுக்கும் இடைப்பட்டபகுதி "படுக்கை" எனப்பட்டது. இந்த இடத்தில் இவ்வாலயம் இருப்பதால் படுக்கைப் பத்திரகாளி கோவில் எனப் பெயர் பெற்றது.

சுமார் நூறு வருடங்களுக்குமுன் குப்பையர் தம்பு என்பவர், புதர்கள் மண்டிக்கிடந்த இந்தப் படுக்கை மேய்சற்தரையில் மாடுமேய்க்கச் செல்வது வழக்கமாம். தீராத நோய் வாய்ப்பட்டிருந்தபோதிலும், மாடுமேய்ப்பதை விட்டுவிட வில்லை. தனது நோயைப்பற்றிக் கவலைப்பட்டு அதனைத் தெய்வத்தினிடம் ஒப்படைத்து வாழ்ந்துவந்த தம்பு என்பவர், ஒருநாள் மாடுகளை மேயவிட்டு ஒரு மரநிழலில் படுத்துறங்கினார். அப்போது அவருடைய கனவில் பத்திரகாளி பிரசன்னமாகி "உனது நோயைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். அந்த நோயை நீக்கிவிடுவேன்" என்று வாக்கருளினாளாம். இந்த அற்புதத்தில் பெருமகிழ்ச்சியடைந்த தம்பு என்பவர். பத்திரகாளி காட்சியளித்த இடத்தில் ஒரு கொட்டில் கட்டி ஒரு சூலத்தை வைத்து வழிபட்டுவந்தார். அக்காலத்தில் அவருடைய மைத்துனர் ரெங்கசாமி முத்துச்சாமி என்பவரும் சேர்ந்து, இந்தக் கோவிலைச் சிறப்பாக நடத்தக் கருதி, சுதையாற் செய்யப்பட்ட துர்க்காதேவியின் சிலையொன்றை இந்தியாவிலிருந்து கொண்டுவந்து ஆலயத்தில் வைத்து வழிபாடு செய்துவந்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்புவின் நோய் நீங்கியதையறிந்த மக்கள் இந்த ஆலயச்சூழலில் சென்று குடியேறி பத்திரகாளி கோவிலை ஆதரிக்கத் தொடங்கினார்கள். பக்தர்களிடம் நம்பிக்கையும் விசுவாசமும் பெருகப் பெருக வழிபாட்டின்மூலம் அம்பாளின் அருளையும் அனுபவிக்கத் தொடங்கினார்கள். சிறு தெய்வ வழிபாடுபோல இங்கு நடைபெற்றுவந்த வழிபாட்டில் உருவாடித் திருவாக்குக் கூறும் வழக்கமிருந்துவந்தது. பக்தர்கள் "தாயார்" என்று பக்தியோடு அழைத்து வழிபாடுசெய்வார்கள். இப்போது சிறு தெய்வவழிபாட்டைக் கைவிட்டு உற்சவங்களை நடத்தி வருகின்றார்கள். முற்காலத்தில் இவ்வாலயத்தில் ஏற்றிவைக்கப்பட்ட விளக்கு எரிந்துகொண்டிருக்க ஓலையால் கட்டப்பட்டிருந்த கொட்டிற்கோவில் எரிந்து விட்டதாம். பக்தர்கள் கவலைப்பட்டு மீண்டும் கட்டினார்கள். சிலகாலத்தின்பின் மீண்டும் எரிந்துவிட்டது. இவ்வாறு பல தடவை நடைபெற்றதாம்.

இதன் காரணத்தைத் தாயாரிடமே கேட்டார்களாம். "திருக்கோணமலை ஆலடியிலிருக்கும் ஸ்ரீபத்திரகாளியே மக்களின் நலங்கருதி இவ்வாலயத்திற்கு எழுந்தருளி வருகின்றாள் மக்களிடம் கொடிய வியாதிகள், தொற்றுநோய்கள் பரவும் சமயங்களில் தானே அந்தத் துன்பங்களைத் தாங்கிக்கொண்டு ஆலயத்தை எரியச்செய்து மக்களுடைய நோய் துன்பங்களை எரித்துவருகின்றேன்" என்று திருவாக்கருளினாளாம். இதனால் மக்களுடைய பக்தி மேலும் மேலும் வளரத்தொடங்கியது.

ஆலயத்திலிருந்து சுதைத்திருவுருவம் பழுதடைந்த நிலையிலிருந்ததால் மக்கள் அந்த இடத்தில் அழகிய கற்கோவிலொன்றைக் கட்டி பத்திரகாளியம்பாளின் சிலாவிக்கிரகமொன்றை ஸ்தாபித்து வழிபட்டு வருகின்றார்கள். கற்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், தரிசனமண்டபங்களைக் கொண்ட மடாலயமாக இவ்வாலயம் அமைந்திருக்கின்றது. கருவறையிலுள்ள பத்திரகாளி ஒருகையில் பாசமும், ஒருகையில் உடுக்கும், மற்றிருகைகளிலும் சூலமும், கபாலமும் தரித்து பத்மபீடத்தில் ஒருகாலை மடித்து மறு காலைத் தொங்கவிட்டு அமர்ந்துள்ளாள்.

இங்கு காலைச்சந்தி, மாலைச்சந்தி ஆகிய இரண்டுகால நித்திய பூசைகள் நடைபெற்று வருகின்றன. ஆடிப்பூரத்தைத் தீர்த்ததினமாகக்கொண்டு பத்துநாள் அலங்கார உற்சவமும், பதினோராம் நாள் தீர்த்தோற்சவமும் நடைபெற்று வருகின்றன. தைப்பூசம், சிவராத்திரி, சித்திராபர்வம், வைகாசிப் பொங்கல், நவராத்திரி, ஐப்பசிக் கும்பாபிஷேகதின மணவாளக்கோலவிழா, திருவெம்பாவை என்பன விசேடபூசை வழிபாடுகளாக நடைபெற்று வருகின்றன. சிவஸ்ரீ.வி.சின்னப்பு ஐயர் பூசைகளை நடத்தி வருகின்றார். இவ்வாலயம் பரிபாலனசபையால் பராபரிக்கப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கடலூர் படுக்கை
# ஸ்ரீ பத்திரகாளியம்மை திருவூஞ்சல்

ஆக்கியோன்:

சிவகதாவாரிதி, சிவயோகச் செல்வர் திரு.த.சாம்பசிவம் அவர்கள்.

## விநாயகர் துதி

ஒற்றைமருப்பொடித் திதிகாச மெழுதியவா ஏரம்பா சீதள
கற்றைச் சடையான் தருமைந்தா கணபதியே திருக்கடலூர்மேவு
கொற்றவிஸ்ரீ பத்ரகாளிமீதடியேன் ஊஞ்சல்பாட விழைகின்றேன்
நற்குஞ்சரக்கன்றாம் நின்னடியே யெனக்கென்றும் காப்பதாமே.

## நூல்

உயிரெழுத்தாம் பன்னிரண்டு பவளக் காலில்
மெய்யெழுத்துப் பதினெட்டு வளைகள் பூட்டி
உயிர்மெய்யா லரியதிருப் பந்தல் நாட்டி
உயர் பசும்பொன் சங்கிலிகள் கோத்து நல்ல
ஆய்தவெழுத்துப்போ லணிபுட்பராக
அணிமணியிழைத்த உயர் பீடமீதில்
கோயில்திருக் கோணைவளர் திருக்கடலூர் தன்னில்
கங்காளி வந்தருளி யாடீரூஞ்சல்.

நெஞ்சமெனு மாலயத்தின் நடுவே தூய
நிறையொழுக்காம் சிவயோக நெறியில் நின்று
துஞ்சாத அன்புசால் மலர்கள் தூவித்
தூயதிரு மறைகளா லலங்கரித்துக்
கொஞ்சமுமே யிடையறாக் காதலோடு
கோதிலா வடியவர்கள் பண்கள் பாட
ரஞ்சிதமாய் ஊஞ்சலில் வந்தாடுமம்மா
திருக்கடலூர் ஸ்ரீ பத்ரகாளி தேவி.

வெள்ளெருக்கு மலர்த் தொடைகள் மார்பிலாட
வெருவு சங்கார சூலங் கரத்திலாட
வெள்ளமென வருவினைகள் நீக்கியாளும்
வீங்கொலிசேர் சிலம்பு கலீரென்றேயாடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தள்ளரிய அந்தணர்கள் வேத மோதத்
தத்தித்தோம் என்று இசையாளர் பாடத்
தெள்ளுதமிழ்ப் பாமாலை சூட்டியாடத்
திருக்கடலூர் மாகாளி ஆடீரூஞ்சல்.

கூறுதிருப் பாற்கடலில் அரவணையில் மீது
உறங்கு மரங்கேசனது தங்கை வீரி
நாறுமலர்த் தொடையிலுள தேறல் தன்னை
நாக்கொண்டு சுவைக்கவரு மறுகால் கீதம்
வேறுபடா வகையோத வேதமோதும்
வித்தகர்தம் பாவமதை வேரறுத்துப்
பேறனைத்துந் தருபவளே பத்திரகாளி
பேசரிய திரிசூரி ஆடீரூஞ்சல்.

ஒருபொழுது முனைமறவா தெந்த நாளும்
உன்னடியே போற்றியருட் பண்கள் பாடிக்
கருணைமழை பொழிந்தருள்வாய் காளியென்றே
கண்ணீர்விட் டோலமிட்டுக் கதறுகின்ற
குருகுலத்தோர் மெய்மறந்து கவரி வீசிக்
குளிர்ந்தருள வேண்டுமென வேண்டிநிற்க
அருள்சுரக்கும் அம்பிகையே ஆடீரூஞ்சல்
திருக்கடலூர் மாகாளி ஆடீரூஞ்சல்.

செந்நெல்விளை வயல்சார் திருக்கடலூர் மேவும்
செங்கமல நாயகியே ஆடீரூஞ்சல்
சந்ததமும் மறைபயிலு மடியார் சூழும்
சங்கரியே மாகாளி ஆடீரூஞ்சல்
மைந்தனுக்கு வேலளித்து மறையோர் தேவர்
மாத்துயர மாற்றிடுவாய் ஆடீரூஞ்சல்
பந்தமுறு காமாதியறு பகை கடிந்து
பசுபதியோ டணைபவளே யாடீரூஞ்சல்.

உதயகதிரோன் வந்து துதிகள் பாட
ஒலிகடலு மோடிவந்து கூத்துமாட
சதுர்முகனும் நாரணனு மருகில் நிற்கச்
சந்திரனு மிந்திரனு வந்தித்தேத்த
பதியொருபா லுன்விழியால் பரிந்து நோக்கப்
பண்ணிசைத்துக் கின்னரர் கிம்புருடர் பாட
மதுநிறையும் மலரணியும் மங்கை திருக்கடலூர்
ஸ்ரீ பத்ர காளியம்மா ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்பெருமான் மனமகிழ்ந்து வடந்தொட்டாட்ட
எழிலோங்கு நாரணனார் வடந்தொட்டாட்ட
செங்கமலச் ஸ்ரீதேவி வடந்தொட்டாட்ட
செய்யநவ கன்னியர்கள் வடந்தொட்டாட்ட
இம்மையிலும் மறுமையிலும் அடியார் தங்கள்
இன்னலகன் றின்பமுடன் கூடியாட
அம்புயமா தங்கிதிருக் கடலூர் மேவும்
அருட்கண்ணி மாகாளி ஆடீரூஞ்சல்.

பங்கயச் செஞ்சீரடியீராடீரூஞ்சல்
பரலொலிசெய் நூபுரத்தீ ராடீரூஞ்சல்
அங்கயற்கண் ணம்பிகையே யாடீரூஞ்சல்
அபயமருள் திருக்கரத்தீராடீரூஞ்சல்
செங்கமல வதனத்தீ ராடீரூஞ்சல்
செம்பொனணி முடியுடையீ ராடீரூஞ்சல்
வங்கமலி கோணைதிருக் கடலூர் வாழும்
வாராசி மாகாளி ஆடீரூஞ்சல் .

பாயல்விரி படகுசெறி பரவை சூழும்
பதியிலுயர் திருக்கடலூர் ஊஞ்சலாடக்
கோயில்செறி கோபுரத்து மணிகளெல்லாம்
கோணேசர் துதிபாடிக் குளிர்ந்தேயாட
வாயில்தொறும் மங்கையர்தங் கைகளாடி
மாக்கோலம் புனைந்தாட மனமுமாட
நாயினிலுங் கடைப்பட்ட நாயேன் பாடும்
நல்லூஞ்ச லுவந்தருளி யாடீரூஞ்சல்.

## வாழி

வளம்பெருக வான்பொழியு மழையும் வாழி
வங்கநிறை கடல்வளங்கள் பெருகி வாழி
திங்கணுத லரிவையர்கள் சிறந்து வாழி
திகழுமறை திருமுறையாகமங்கள் வாழி
அங்கமறி யந்தணரோ டானிரையும் வாழி
அடியவருங் குடியினரும் என்றும் வாழி
சங்கொலிசேர் திருக்கடலூர்க் கோயில்கொண்ட
சக்திசிவ மாகாளித் தாயே வாழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூர் பத்திரகாளி அம்பாள் ஆலயம்

திருக்கோணமலை மாவட்டத்தில் கொட்டியாபுரப்பற்றில் மூதூரிலிருந்து கட்டைபறிச்சான் என்னும் கிராமத்திற் கூடாக ஆறு கில்லோமீற்றர் தூரத்தில் கடற்கரையோரமாகவுள்ள கிராமம் சம்பூர். குளக்கோட்டுமன்னன் திருக்கோணேஸ்வரத்தில் திருப்பணிகள் செய்து நிறைவேற்றிய பின், கோவிற் தொழும்புகளுக்காக தென்னிந்தியாவிலிருந்து ஏழு குடிமக்களை கொட்டியாரப்பற்று, கட்டுக்குளப்பற்று, தம்பலகாமப்பற்று முதலிய இடங்களிற் குடியமர்த்தினான். அவ்வாறு குடியமர்த்தப்பட்டவர்களுக்குக் குளக்கோட்டு மன்னன் மானியங்களை வழங்கியுள்ளான். இந்த இடத்தில் குடியமர்த்தப்பட்டவர்கள் மன்னன் கொடுத்த மானியத்தை ஏற்று "யாவும் சம்பூரணம்" என்று பரமதிருப்தியடைந்தார்களாம். ஆதலால் இந்த இடம் சம்பூர்ணமான ஊர் என்ற பொருளில் "சம்பூர்" என வழங்கிவந்ததாக இவ்வூர் மக்கள் கர்ணபரம்பரையாகக் கூறி வருகின்றார்கள். இங்கிருக்கும் பத்திரகாளி கோவில் மிகப்பிரசித்திபெற்றது. திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள எல்லாச் சைவமக்களும் இந்த அம்பாளுக்கு நேர்கடன் வைத்துப் பயபக்தியோடு பொங்கலிட்டு வழிபட்டு வருகின்றார்கள்.

இங்கு எழுந்தருளியிருக்கும் பத்திரகாளி அம்பாளுக்கு வரலாற்றுப்பின்னணியொன்று இருந்துவருகின்றது. சுமார் 600 வருடங்களுக்குமுன் இந்தியாவிலிருந்து வந்த கப்பலொன்றில் இந்த அம்பாளின் திருவுருவம் கொண்டுவரப்பட்டது. அம்பாளின் அருளாணையின்படி அத்திருவுருவம் கெவுளியாமுனையில் இறக்கப்பட்டது. அங்குள்ள ஒருவருக்கு காளியம்பாள் கனவில் தோன்றி தான் வந்திருப்பதைத் தெரியப்படுத்தினாள். அவர் அந்தச் செய்தியை சம்பூரில் வாழ்ந்த காரியப்பர் என்பவருக்கு அறிவித்தார். காரியப்பர் என்பது குளக்கோட்டு மன்னனால் கோயிற் தொண்டுகளுக்காக நியமிக்கப்பட்ட தொழும்பாளர்களுக்குக் கொடுக்கப்படும் சிறப்புப் பெயர். அவர் அந்த ஊருக்கு முக்கியஸ்தராகக் கருதப்படுபவர். ஆதலால் அவருக்கு அறிவிக்கப்பட்டது. அவரும் சம்பூர் மக்களும் சென்று கெவுளியாமுனையிலிருந்த அம்பாளைச் சம்பூருக்குக் கொண்டுவந்து காட்டுத் தேங்காய் மரத்தடியில் வைத்துப் பூஜை செய்துவந்தார்கள். அந்தமரமும், மரத்தடியில் அம்பாளும் இன்றும் இருக்கின்றன. அந்த இடத்தைவிட்டு பத்திரகாளியம்பாளை அசைக்க முடியவில்லை. அந்தக்காரியத்தைச் செய்ய மக்கள் மிகவும் பயப்படுகின்றார்கள். அந்த அம்பாளுக்குச் சிறிய கோவிலொன்றமைத்து, அக்கோவிலையும் மரத்தையும் சுற்றி மதிலெழுப்பி மிகவும் பயபக்தியோடு வழிபட்டு வருகின்றார்கள். எட்டுத்திருக் கரங்களையுடைய பத்திரிகாளியம்பாள் ஒருகையிலுள்ள சூலத்தால் மகிஷாசுரனை மர்த்தனம் செய்த பாவனையில் அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கருகில் பத்திரகாளியம்பாளுக்குப் பெரிய கற்கோவில் கட்டி அதே திருவுருவ அமைப்பில் சிலாவிக்கிரகம் செய்து கருவறையிற் பிரதிஷ்டை செய்திருக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பூர் பத்திரகாளி அம்பாள் ஆலயம்

இந்தக்கோவில் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்டது. கற்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், தெரிசனமண்டபம் என்பவற்றைக் கொண்ட மடாலயமாக இக்கோவில் அமைந்திருக்கின்றது. மகாமண்டபத்தில் எழுந்தருளி அம்பாளும், விநாயகரும் வைக்கப்பட்டுப் பூசை நடைபெற்றுவருகின்றது. வீதியில் வீரபத்திரன், பைரவர், நாகதம்பிரானுக்கு தனிக்கோவில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. தெரிசன மண்டபத்தில் சிங்கம், பலிபீடம் என்பன உண்டு. இந்த ஆலயத்தில் ஒரு சிறப்பம்சத்தை அவதானிக்கக்கூடியதாயிருக்கின்றது. வடக்கு வீதியிலும், தெற்கு வீதியிலும், பத்து இடத்தில் பஞ்சலோகத்தாலமைக்கப்பட்ட அழகிய திரிசூலங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பலிபீடங்கள் காணப்படுகின்றன. பீடங்கள் வளைவு தளங்களால் மேற்கூரையிடப்பட்டிருக்கின்றன. திக்குக் காவற்தெய்வங்களாகக் கருதி இவைகளுக்குப் பூசை நடைபெற்று வருகின்றது.

சம்பூர்க் கிராமத்தில் மக்கள் குடியிருக்கும் இடத்திற்குச் சற்று ஒதுக்குப்புறமாக இவ்வாலயம் அமைந்திருக்கின்றது. அம்பாளிடத்தில் மக்கள் வைத்திருக்கும் பக்தியைப்போல பயமும் காணப்படுகின்றது. குற்றங்குறைகளை அம்பாள் பொறுக்கமாட்டாள் என்ற நம்பிக்கையால் ஆலயத்திற்கு அருகாமையில் மக்கள் குடியிருக்க விரும்புவதில்லை. இவ்வாலயத்தில் பொங்கல் நடத்தி நேர்கடன் கொடுப்பதுதான் மிக முக்கியமாகும். அம்பாளுக்குப் பொங்கல் செய்ய வருபவர்கள் ஒவ்வொருவரும் ஏழு பானை வைத்துப் பொங்குவார்கள். செவ்வாய்க் கிழமைகளில் பொங்கல் நடைபெற்றுவருகின்றது. குளக்கோட்டு மன்னனால் குடியமர்த்தப்பட்ட ஏழு குடிமக்களின் மகிமையைக் கௌரவிப்பதற்காவும், ஏழு குடிமக்களும் அம்பாளின் தொழும்பாளர்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காகவும் ஏழு பானை வைத்து பொங்கிப்படைக்கும் வழக்கம் இங்கிருந்துவருகின்றது.

சித்திராபூரணையை அடுத்துவரும் ஐந்தாம்நாள் தொடக்கம் சித்திரைமாத அமாவாசிவரையுமுள்ள பத்து நாட்களும் லெட்சார்ச்சனை நடைபெற்று முடிவில் சகஸ்ர சங்காபிஷேகம் செய்துவருகின்றார்கள். நவராத்திரி ஒன்பது நாளும் விசேட அலங்கார உற்சவம் நடைபெற்று வருகின்றது. சிவராத்திரி, கௌரிவிரதம், திருவெம்பாவை, தைப்பொங்கல், சித்திரைப் பிறப்பு என்பன விசேட விழாக்களாக நடைபெறுகின்றன. நித்தியம் மூன்றுகால பூசை நடைபெறுகின்றது. சிவஸ்ரீ க.சிவபாலக் குருக்கள் அவர்கள் ஆலயப் பூசகராக இருந்து வருகின்றார். இவ்வாலயத்திற்குப் பாடப்பட்ட காவியம் ஒன்று இருப்பதாக அறியக்கிடக்கின்றது. பரம்பரை உரிமைக்காரரடங்கிய பரிபாலனசபை இவ்வாலயத்தைப் பரிபாலித்து வருகின்றது. அந்தப் பரம்பரையைச் சேர்ந்த திரு. குழந்தை வேல் ஆசிரியரவர்கள் தந்த தகவல்கள் இவ்வாலயத்தைப் பற்றி எழுதுவதற்குப் பெரும் உதவியாயிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலம்போட்டாறு பத்தினி அம்மன் கோவில்

திருக்கோணமலையிருந்து கொழும்பு, கண்டிக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் திருக்கோணமலையிலிருந்து பதினாறு கில்லோ மீற்றர் தூரத்தில் இந்தக் கோவில் இருக்கின்றது. இவ்வாலயத்திற்குப் பக்கமாக ஒரு ஆறு ஒடுக்கின்றது. இது கஞுமுட்டியான் குளத்திலிருந்து ஊற்றெடுத்துப் பாய்ந்து திருக்கோணமலைத் துறைமுகத்தில் கப்பல்துறை என்ற இடத்தில் கடலோடு சங்கமமாகின்றது. இந்தக் கோவிலுக்குச் சமீபத்தில் இந்த ஆற்றுக்குமேலே ஒருபாலம் போடப்பட்டது. இதனால் இக்கோவில் பாலம்போட்டாறு பத்தினியம்மன் கோவில் எனப்பட்டது.

இற்றைக்குச் சுமார் நூறு வருடங்களுக்குமுன், இக்கோவிலிருக்கும் காட்டும் பிரதேசத்தில் மரம் வெட்டச் சென்றவர்கள், பயபக்தியினாலே தங்கள் தொழிலுக்குப் பாதுகாப்பாயிருந்து காக்கும்படி வேண்டுதல் செய்து காளியம்மன் ஆலயத்தைக் கொட்டில் கோவிலாகக் கட்டி வழிபாடு செய்து வந்தார்கள். அக்காலந்தொடக்கம் இவ்வாலயத்தில் பலியிடும் வழக்கம் இருந்துவந்தது. பத்தினித் தெய்வ வழிபாட்டுக்கு முக்கியமான தினம் வைகாசித் திங்கள். ஆதலால் வருடத்தில் ஒருமுறைவரும் வைகாசித்திங்கள் நாளில் இவ்வாலயத்தில் பொங்கல்விழா நடத்திப் பலியிட்டுப் பூசை செய்துவந்தார்கள். பிற்காலத்தில் சிவஸ்ரீ கா.யோகீஸ்வரக்குருக்கள் பொதுமக்களின் உதவியோடு கோவிலைக் கல்லால் கட்டுவித்து காளியம்மன் சிலையைப் பிரதிஷ்டை செய்து பூசையை நடத்திவந்தார். ஆனால் வழக்கம்போல முன்பு பூசை செய்துவந்த பூசாரிமார்களுடைய பலியிடும் பூசையும் நடைபெற்றுவந்தது. திரு. அப்பையர் என்பவர் பலியிடும் பூசையைச் செய்துவந்தார். பொங்கல் பூசை மூலஸ்தானத்தில் நடைபெற்றபின் கோவிலுக்கு வெளியே விடியற் சாமத்தில் ஆடு, கோழி பலியிட்டு வந்தார்கள். இப்போது பலியிடும் வழக்கம் நிறுத்தப்பட்டுவிட்டது. இவ்வாலயத்திற்குரிய எழுந்தருளியம்பாளைப் பாதுகாப்பின் நிமித்தம் தம்பலகமம் கோணேசர் கோவிலில் வைத்திருக்கின்றார்கள். வைகாசித் திங்களன்று அங்கிருந்து மங்கல வாத்தியங்களோடு எழுந்தருளச் செய்து கோவிலில் வைத்துப் பொங்கல் பூசை நடத்துவார்கள். மறுநாள் மீண்டும் தம்பலகமம் கோணேசர் கோவிலுக்குக் கொண்டுபோய் வைத்துவிடுவார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பூர் பத்திரகாளி அம்பாள் ஆலயம்

சிவஸ்ரீ யோகீஸ்வரக் குருக்கள் சிவபதமடைந்தபின் அவருடைய மகள் செல்வி. சி.யோகீஸ்வரக் குருக்கள் ஆலயத்தைப் பராபரித்து வருகின்றார். திருக்கோணமலை பத்திரகாளியம்பாள் தேவஸ்தானக் குருக்கள் பூசைகளைச் செய்து வருகின்றார். வைகாசித் திங்களன்று திருக்கோணமலைப் பத்திரகாளி கோவிலில் இருந்தும், மாரியம்மன் கோவிலில் இருந்தும் பெண்களும், ஆண்களும், பிள்ளைகளும், பாற்செம்பு, கும்பம், கரகம், காவடி எடுத்துப் பல்லாயிரக்கணக்கான மக்கள் பக்தி மயமான பாதயாத்திரை செய்வார்கள். வழியெங்கும் மக்கள் நிறைகுடம் வைத்து வரவேற்று ஆதரித்துப் பக்தர்களை வழியனுப்பி வைப்பார்கள். பத்தினியம்மன் கோவிலில் இரவு பூராவும் விழா நடைபெறும். ஒருவருடத்தில் ஒரு நாளில் மாத்திரம் நடைபெறும் இவ்விழாவில் இத்தனை ஆயிரம் மக்களும் பயபக்தியோடு வழிபாடு செய்யக் கூடுவதைச் சிந்திக்கும் போது இந்தப் பத்தினியம்பாளுடைய சக்தி மகத்துவமானது என்பது புலனாகின்றது. இந்த அம்பாளுக்கு நேர்கடன் வைத்து எண்ணியதை எண்ணியவாறு எய்தப் பெறுவதால் மக்களின் நம்பிக்கை வளர்ந்துகொண்டே வருகின்றது. அந்த நெடுஞ்சாலையில் செல்லும் வாகனங்களும், பாதசாரிகளும் பத்தினியம்பாள் ஆலயத்தில் சூடம் எரித்துத் தேங்காய் உடைத்துப் பிரார்த்தித்துச் செல்வார்கள். பராமுகமாய்ச் சென்றவர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகியுமிருக்கின்றார்கள். மூர்த்தி சிறிய தெனினும் கீர்த்தி பெரியதாகிய இந்த அம்பாளுடைய ஆலயத்தின் வரலாற்றைத் தந்துதவிய திரு. சஞ்சிக்கண்ணு ஆசிரியருக்கு நன்றி உரியதாகுக. தியாகி ராஜகோபால் அவர்கள் தலைமையில் நடைபெற்ற சத்தியாக்கிரக முயற்சியினாலும் ஆலய நிர்வாகிகளுடைய ஒத்துழைப்பினாலும் பலியிடும் வழக்கம் நின்றது போற்றத்தக்க சம்பவமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உவர்மலைக்
# கண்ணகி அம்மன் கோவில்

உவர்மலைக் கண்ணகி அம்மன் கோவில் திருக்கோணமலைப் பட்டணமும் சூழலுக்கும் உட்பட்ட உவர்மலைக் குன்றின் மத்தியில் அமைந்திருக்கின்றது. திருக்கோணமலைப் புகையிரத நிலையத்திலிருந்து அரை மைல் தூரத்திலும், திருக்கோணமலைப் பட்டணத்திலிருந்து ஒருமைல் தூரத்திலுமுள்ள இந்த ஆலயத்திற்கு உவர்மலை மத்தியவீதி வழியாகச் சென்று கண்ணகி புரத்தை அடையலாம். அங்கு இவ்வாலயம் அமைந்திருக்கின்றது.

கிழக்குமுகமாயமைந்த இவ்வாலயத்தில் நின்று பார்த்தால் கிழக்குத் திசையில் கோணமலைக் குன்றில் எழுந்தருளியுள்ள கோணேசப் பெருமானின் ஆலயம் தெளிவாகத் தெரியும். கண்ணகி அம்மன் ஆலயத்தின் தெற்குத் திசையில் திருக்கோணமலைத் துறைமுகக் கடல் பரந்து விரிந்து கிடப்பதையும் காணலாம்.

திருக்கோணமலையில் கண்ணகி வழிபாடு பற்றிய ஆய்வுக்குரிய வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது இந்த ஆலயம். சேரன் செங்குட்டுவன் திருச்செங்கோட்டில் கண்ணகிக்கு சிலையெடுத்த பெருவிழாவுக்கு ஈழ நாட்டில் கண்டியிலிருந்து அரசாண்ட கஜபாகு மன்னன் திருக்கோணமலைத் துறைமுகத்திலிருந்து சேரநாட்டுக்குச் சென்ற கடற்பிரயாண வரலாறும், அம் மன்னன் சேரநாட்டிலிருந்து கண்ணகி அம்மன் சிலையைத் திருக்கோணமலைத் துறைமுகத்துக்குக் கொண்டுவந்து, அங்கிருந்து பத்தினித் தெய்வமாகிய கண்ணகியின் சிலையை கண்டிக்குக் கொண்டு சென்ற வரலாறும், கண்ணகிக்கு கஜபாகு மன்னன் கண்டியில் ஆடிமாதத்தில் எழுந்த விழாவானது ஏசலப் பெரகராவாக மாறியமைந்த வரலாறும், ஈழநாட்டில் கண்ணகியம்மன் வழிபாட்டைப் பரப்பிய வரலாறும் உவர்மலைக் கண்ணகி அம்மன் கோவில் தோன்றுவதற்குக் காரணியாய் அமைந்திருப்பதாக சரித்திர வாயிலாக அறியக் கிடக்கின்றது.

மட்டக்களப்பு ஆரையம்பதியைப் பிறப்பிடமாகவும், திருக்கோணமலையை வதிவிடமாகவும் கொண்ட கண்ணகி அம்மனின் பக்தன் திரு.த.பொன்னம்பலம் என்பவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயம் தோன்றுவதற்கு அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். இன்று உவர்மலைக் கண்ணகி அம்மன் கோவில் இருக்குமிடம் அன்று பற்றைக் காடாக இருந்தது. 1989ஆம் ஆண்டு பொன்னம்பலம் குடும்பத்தினரும் காட்டைத் திருத்தி அங்கு நின்ற சிறிய வேப்பமரத்தடியில் ஒரு கல்லை வைத்து அதற்கு முகக்களையிட்டு, தினமும், கண்ணகி அம்மனுக்கு பூசை செய்து வழிபட்டு வந்தார்கள்.

கண்ணகி அம்மன் அங்கு எழுந்தருளியிருப்பதாக நம்பிய பொன்னம்பலம் என்பவர், கண்ணகிக்கு கற்கோவில் கட்டுவதற்கு திட்டமிட்டு அங்கு வாழ்ந்த மக்களின் உதவியோடு அந்த இடத்துக்கு கண்ணகிபுரம் எனப் பெயரிட்டு ஆலயம் அமைக்கத் தொடங்கினார்.

கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் என்பவற்றைக் கொண்ட பெரிய மடாலயம் அமைக்கப்பட்டது. சிவஸ்ரீ இ.கந்தசாமிக்குருக்கள் கண்ணகி விக்கிரகத்தை நூதனப் பிரதிஷ்டைசெய்து 1988ஆம் ஆண்டு கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தார்.

கற்பக் கிரகத்தில் திரிபங்க வடிவமான கண்ணகியின் தாமிர விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. கண்ணகியின் வலக்கரத்தில் சிலம்பு காணப்படுகிறது. ஆரம்ப காலத்தில் வழிபட்டுவந்து முகக்களையுடன் கூடிய கல்லும் கற்பக்கிரகத்தில் வைக்கப்பட்டு பூசை நடைபெற்று வருகிறது. வசந்த மண்டபத்தில் எழுந்தருளி அம்பாளின் திருவுருவம் காணப்படுகிறது. இந்த அம்பாளையே வீதியுலாவுக்கும், நகர்வலத்துக்கும் எழுந்தருளச் செய்வார்கள்.

ஆலய வீதியில் பரிவார மூர்த்திகளுக்குத் தனிச் சந்நிதிகள் அமைத்துள்ளார்கள். ஆலயத்தை வலம்வரும் அடியார்கள் முதலில் கோணேசலிங்கப் பெருமானைத் தரிசிக்கலாம். திருக்கோணேஸ்வரத்தைப் பார்த்தவண்ணம் இச்சந்நிதி அமைக்கப்பட்டிருக்கிறது. பஞ்சமுக சர்ப்பக் குடையின் கீழ் ஆவுடையாரோடு கோணேசலிங்கப் பெருமான் எழுந்தருளி இருக்கிறார். அதையடுத்த நிருதி சந்நிதியில் பிள்ளையார் சந்நிதி காணப்படுகின்றது. பிள்ளையாரின் சிலாவிக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. கற்பக் கிரகத்துக்குப் பின்னால் தலவிருட்சமாகிய வேப்பமரம் காணப்படுகிறது. அதைத் தாண்டிச் சென்றால் வாயு சந்நிதியில் உள்ள நாகதம்பிரானின் சிலாவிக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. வடக்கு வீதியில் குபேர சந்நிதியில் வள்ளி, தெய்வானை சமேதராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப் பெருமானின் சிலாவிக்கிரகமும், பஞ்சலோகத்தினாலான வேலும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. அதையடுத்து நவக்கிரக சந்நிதியும் – ஆலய வாசலுக்கு நேரே ஒரு பக்கம் வீரபத்திரரும் மறுபக்கம் வீரமாகாளியும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள, தனித்தனி சந்நிதிகள் காணப்படுகின்றன. ஈசான திக்கில் வைரவப் பெருமானின் சந்நிதியில் வைரவக் கடவுளும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறார்.

கண்ணகி அம்மன் ஆலயத்தில் காலை, மாலை இரண்டு நேரப் பூசை நடைபெற்று வருகின்றது. வைகாசிப் பூரணையில் நடைபெறும் சடங்குதான் இவ்வாலயத்தில் அதியுயர்ந்த விழாவாகும். கண்ணகி அம்மனுக்கு பொங்கல் படையல் பாணக்கம் வைத்து குளுர்த்திப் பாடல் பிடித்து கண்ணகி அம்மன் வழிபாடு மரபுப்படி பெருவிழாவாக நடைபெற்று வருகின்றது.

சித்திரை வருடப் பிறப்பு, தைப்பொங்கல், தைப்பூசத்தில் விசேட அபிஷேகம் பூசையும், நவராத்திரிப் பூசை, திருவெம்பாவைப் பூசை, கந்தசஷ்டி, கௌரியம்மன் விரத பூசை, கார்த்திகை விளக்கீடு என்னும் விசேட காலங்களில் அபிஷேகம் பூசை என்பன நடைபெறுகின்றன. பிள்ளையார் கதை, மாதாந்த சதுர்த்தி, ஆடிப்பூரம், பங்குனி உத்தரம், மாசிமகம், என்னும் விசேட காலங்களிலும் சிறப்பான பூசைகள் நடைபெற்று வருகின்றன.

நவக்கிரக ஆலயம் கட்டியபின் நவக்கிரகங்களுக்கும் முருகன் வள்ளி தெய்வயானைக்கும், வைரவருக்கும் 1993ஆம் ஆண்டு ஆவர்த்தன கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1996ஆம் ஆண்டு உற்சவ மூர்த்தி பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகமும் நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உவர் மலை
# ஸ்ரீ துர்க்கை அம்மன் கோவில்

உலகத்தில் மிகவும் பிரசித்திபெற்ற இயற்கைத் துறைமுகங்களில் ஒன்று திருக்கோணமலைத் துறைமுகம். திருக்கோணமலைப் பட்டணத்துக்கு மேற்குத் திசையில் உள்ள இந்தத் துறை முகத்துக்கு வடக்குப்பக்க அரணாக இருப்பது உவர்மலைத் தொடர். இம்மலைத் தொடரின் நாலாபக்கமும் தமிழ் பேசும் இந்துக்களின் குடியிருப்பாக அமைந்துள்ளது. சுமார் நாற்பது வருடங்களுக்கு முன் காடாய்க் கிடந்த இம்மலைப் பிரதேசம் இன்று அழகிய பட்டிணமாக மாறி அமைக்கப்பட்டு வருகின்றது. கோணேசபுரம், கண்ணகிபுரம் என்பன உவர்மலை எனப்படும் மலைப்பிரதேசத்துள் அடங்கும்.

திருக்கோணமலைப் பட்டணத்திலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் கண்ணகி புரத்துக்குத் தெற்கே இருப்பது ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயம். 1979ஆம் ஆண்டு குடியிருப்பதற்காக ஏற்பட்ட வீட்டுத் திட்டத்தின் பிரகாரம் வீடு கட்ட அத்திவாரம் வெட்டியபோது ஒரு வேப்பமரத் தடியில் வேர்களுக்கிடையே அம்பாளின் தாமிர விக்கிரகமொன்று நிலத்திற்கடியிலிருந்து கிடைத்ததாக இப்போது ஆலயத்தில் பூசை செய்து கொண்டிருக்கும் சிவ ஸ்ரீ. ஸ்ரீகாந்தக் குருக்கள் கூறுகிறார். அந்த இடம் அவருக்குச் சொந்தமானதால் அவர் அந்த விக்கிரத்தை வேப்பமரத்தடியில் சிறு கொட்டில் அமைத்து அதில் வைத்து வழிபாடு செய்துவரலானார். உவர்மலை மக்களுக்கும் அங்கு சென்று வழிபடத் தொடங்கினார்கள்.

"நம்பினார் கெடுவதில்லை இது நான்கு மறைத் தீர்ப்பு". ஆதலால் துர்க்கை அம்மனின் அருளாலும், அற்புதச் செயல்களினாலும் அந்தக் கொட்டில் கோவில் கற்கோவிலாகத் திருப்பணிகள் நடைபெற்று பிரபல்யம் மிக்க ஆலயமாக விளங்குகின்றது.

கற்பக்கிரகம் – அர்த்தமண்டபம் – மகாமண்டபங்களைக் கொண்ட இந்த ஆலயம் 1987ஆம் ஆண்டு திருப்பணிகள் நிறைவேறி மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. கற்பக் கிரகத்தின் மேல் அழகிய தூபி அமைக்கப்பட்டிருக்கின்றது. சதுர்ப்புஜங்களையுடைய துர்க்கை அம்பாளின் சிலாவிக்கிரகம் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. மகா மண்டபத்தின் வடக்குப் பக்கத்தில் அமைந்துள்ள வசந்த மண்டபத்தில் எழுந்தருளி மூர்த்தியாகிய துர்க்கை அம்மனின் தாமிர விக்கிரகமும் நிலத்திலிருந்து கிடைத்த சிறிய அம்பாளின் விக்கிரகமும் வைத்துப் பூசை நடைபெற்று வருகின்றது. மகா மண்டபத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையார் சிலாவிக்கிரகமும், வடக்கு வீதியில் தீர்த்தக் கிணறும், நவக்கிரக மூர்த்திகளுக்குத் தனிச் சந்நிதியும் இருக்கின்றது. ஆலயத்தின் ஈசான திக்கில் வைரவமூர்த்திக்குத் தனிச் சந்நிதியும் காணப்படுகின்றது. தலவிருட்சம் வேம்பு.

நித்திய பூசையாக காலை, மாலை இரண்டு நேரப் பூசைகள் நடைபெற்று வருகின்றன. இதைத் தவிர மாசி மாதம் அலங்கார உற்சவம் பத்து நாட்கள் நடைபெற்று பதினோராம் நாள் மாசி மகத்தில் தீர்த்தோற்சவமும் பன்னிரண்டாம் நாள் பூங்காவனமும், அடுத்தநாள் பிராயச்சித்த அபிஷேகமும் நடை பெற்று வருகின்றது. அலங்கார உற்சவத்தின் முடிவில் துர்க்கை அம்மன் நகர்வலம் வருவார்.

இவ்வாலயத்தில் அன்னம், கிளி, குதிரை, சர்ப்பம், வெண்தாமரை, செந்தாமரை, காராம்பசு, ரிஷபம், சிம்மம், கேடகம் என்னும் பத்து வாகனங்கள் இருக்கின்றன. அலங்கார உற்சவம் பத்து நாட்களிலும் துர்க்கை அம்மன் இவற்றில் ஆரோகனித்து வீதிவலம் வருவது சிறப்பானா ஏற்பாடாகும்.

வைகாசி விசாகத்தில் பொங்கல் பூசையும், ஆடித் செவ்வாயில் விசேட அபிஷேகமும், ஆடிப் பூரவிழா, ஆவணியில் வரலட்சுமிக்கு சுமங்கலி பூசையும், நவராத்திரி விழாவில் மகிஷாசுர மர்த்தனமும், திருவெம்பாவையும் நடைபெற்று வருகின்றது.

இவ்வாலயத்தில் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் ராகுகாலத்தில் அம்பாளுக்கு விசேடபூசை நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இவ்வாலயத்தில் நடைபெற்றுவரும் பூசைகள், அபிஷேகங்கள், அலங்கார உற்சவங்களால் ஒரு சைவச் சூழல் உருவாகி இந்துப் பண்பாடு பேணப்பட்டு வருகின்றது. சிவ ஸ்ரீ. ஸ்ரீகாந்தக் குருக்கள் தமது சொந்தப் பொறுப்பில் இவ்வாலத்தை மக்களின் ஆதரவுடன் நிர்வகித்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரியம்மன் கோவில், திருக்கோணமலை

திருக்கோணமலையிலுள்ள "மடத்தடி" என்னுமிடம் இற்றைக்குச் சுமார் மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே முக்கியமான இடமாக இருந்து வந்திருக்கின்றது. வீரகத்திப் பிள்ளையார் தோன்றிய வரலாற்றில் மடத்தடியைப் பற்றிய செய்தி கூறப்பட்டிருப்பதை வாசகர்கள் அவதானிக்கவும். இந்த மடத்தடியில்தான் கிருஷ்ணன் கோவிலும், மாரியம்மன் கோவிலும் இருக்கின்றன. திருக்கோணமலைப் புகையிரத நிலையத்திலிருந்து அரைக் கில்லோ மீற்றர் தூரத்தில் திருஞானசம்பந்தர் வீதியில் மாரியம்மன் கோவில் காணப்படுகின்றது.

இரண்டாவது உலக மகாயுத்தகாலத்தில் திருக்கோணமலையில் ஜப்பானியரின் குண்டு வீச்சினால் மக்கள் குடிபெயர்ந்து சென்றுவிட்டார்கள். இந்த யுத்தக் கெடுபிடியினால் ஆலயப் பராபரிப்புச் சீர்குலைந்துவிட்டது. 1938ஆம் ஆண்டு இவ்வாலயத்தில் கடைசியாகப் பிரம்மோற்சவம் நடைபெற்றது. அதன் பின்னர் 1945ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்வதற்காக "பாலஸ்தாபனம்" நடைபெற்று திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டபோதிலும், தவிர்க்கமுடியாத பல காரணங்களால் திருப்பணிவேலைகள் பூர்த்தியடையாத நிலையில் இன்றும் இருந்துகொண்டிருக்கின்றது. இவ்வாலயத்தைப்பற்றி எழுதுவதற்கு விஷயங்களைச் சேகரிக்கச் சென்ற போது இவ்வாலய வரலாற்றை உறுதிப்படுத்தும் கல்வெட்டுச் செய்தியொன்றும், ஆலய வரலாற்றுப் பின்னணியின் சுவையான சம்பவமொன்றும் கிடைத்தன. ஆலயத்தின் கருவறையிலுள்ள ஆதார சிலையில் ஒரு கல்வெட்டு இருப்பதை தற்போது இவ்வாலயத்திற் பூசைசெய்து கொண்டிருக்கும் புலவர் வை. சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்கள் காண்பித்தார்கள்.

கல்வெட்டு – சித்திரபானு வருஷம் (மார்கழி) மீ
திருக்கொணாசமலையூர் மரியம்மனுக்கு
திருநல்வேலியூர்க்காடு இளைய பெருமாள்
பிள்ளை சிவகயிலம் உபையம். உ

இக்கல்வெட்டுப் பிரதியை புலவர் அவர்கள் கலாநிதி திரு. செ. குணசிங்கமவர்களிடமும், கலாநிதி கா. இந்திரபாலா அவர்களிடமும் கொடுத்து கால நிர்ணயமும், வரலாற்று நிர்ணயமும் செய்யும்படி கேட்டிருக்கின்றார்கள். இந்த ஆய்வு இவ்வாலயத்திற்கு முக்கிய அம்சமாக இருந்து வருகின்றது. இவ்வாலயம் தோன்றிய வரலாற்றைக் கூறும் சுவையான சம்பவமொன்றைக் குறிப்பிட்டேனல்லவா? போத்துக்கேயரால் கோணேசராலயம் தரைமட்டமாக்கப்பட்டபின் திருக்கோணமலை அன்னியருடைய கைவசமிருந்தது. அக்காலத்தில் திருக்கோணமலையில் ஆங்காங்கே சிறிய சிறிய சைவக்கோவில்கள் இருந்தபோதிலும், சைவப் பெருங்குடிமக்கள் கோணேசராலயத்தைப் பெருங்கோயிலாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வழிபட்டு வந்தவர்களாதலால், அக்கோவில் தரைமட்டமாக்கப்பட்டபின் திருக்கோணமலையிலிருந்து சிறு கோவில்களைப் பறங்கியருக்குப் பயந்து பயந்து மறைமுகமாக ஆதரித்து வந்தார்கள். இவ்வாறு ஆதரிக்கப்பட்ட ஆலயங்களில் மாரியம்மன் கோவிலுமொன்று. இந்தியாவிலிருந்து வந்து இங்கு வாழ்ந்துகொண்டிருந்த பக்தர் ஒருவர், தாம் வரும்போது கொண்டுவந்த முத்து மாரியம்மன் கோவில் இருக்குமிடத்தில் வைத்து ஆதரித்து வந்தாராம். அந்த மாரியம்மனைக் கும்பத்தில் வைத்துக் கட்டி, மாரியம்மன் கும்பத்தை இந்தக் கோவிலிலிருந்து புறப்பாடுசெய்து வீதிகளில் எடுத்துச் செல்வாராம். இதனை மக்களும் பயபக்தியுடன் வழிபட்டு ஆதரித்துவந்தார்கள். இந்தக் கும்பத்தை அந்தப் பக்தர் கன்னியாய்க்கும் எடுத்துச் செல்வதுண்டு. ஒருநாள் அங்கு சென்றிருந்தபோது திருக்கோணமலையை ஆட்சிசெய்த பறங்கிய அதிகாரி ஒருவர் இந்தக் கும்பத்தை ஏளனம் செய்து காலால் உதைத்துத் தள்ளிவிட்டார். அன்று தொடக்கம் அந்த அதிகாரி நோய் வாய்ப்பட்டு வருந்தினாராம். இந்த விஷயத்தையறிந்த சிலர் அதிகாரியிடம் முத்துமாரியம்மனுடைய தெய்வீக சக்தியையும், அதிகாரிசெய்த அபசாரத்தையும் கூறினார்கள். அதிகாரியுடைய விருப்பப்படி அந்தப் பக்தர் அழைக்கப்பட்டார். அவர் அதிகாரிக்கு விபூதிப் பிரசாதம் கொடுத்து மந்திர சக்தியால் நோயைக் குணப்படுத்தினார். இதனால் திருப்தியும், மகிழ்ச்சியுமடைந்து அதிகாரி தற்போது மாரியம்மன் கோவிலிருக்கும் காணியையும் (சுமார் பத்து ஏக்கர்) கன்னியாவிலுள்ள கமுகஞ்சோலைக் காணியையும், நன்கொடையாக உபகரித்தார். தற்போது மாரியம்மன் கோவிலிருக்குமிடத்தில் முன்னிருந்த சிறிய கோவிலைத் திருத்திக் கட்டி, அந்த இந்தியப் பக்தர் தான் கொண்டுவந்த மாரியம்மன் சிலையை வைத்துப் பிரதிஷ்டை செய்தார். இந்த விக்கிரகம் இன்றும் மாரியம்மன் கோவிலில் வழிபாட்டு மூர்த்தமாயிருந்து வருகின்றது.

இந்தியப் பக்தருடைய மறைவுக்குப் பின் அவரோடு நட்புறவுகொண்டிருந்த குருகுலத்தவர்களுடைய பராபரிப்பில் இவ்வாலயம் இருந்துவந்தது. அந்தப் பரம்பரையில் வந்தவர்களில் மாரிமுத்து மணியம் என்பவர் சுமார் நூற்றைம்பது வருடங்களுக்கு முன் இக்கோவிலைத் திருத்திக் கட்டினார். அதன் பின். திரு. மூத்ததம்பி மணியம் என்பவரும் கோவிலில் பல திருப்பணிகளைச் செய்து ஆலயத்தைச் சிறப்பாக நடத்தி வந்தார்கள். ஆலயப் பூசைகளை, அன்று தொடக்கம் திரு. ராமையர், திரு. நாகமணி ஐயர், சிவஸ்ரீ சரவணமுத்துக் குருக்கள் சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள், புலவர் வை. சோமாஸ்கந்தக் குருக்கள் என்ற பரம்பரையில் சந்ததி சந்ததியாகச் செய்து வருகின்றார்கள். ஆறாவது பரம்பரையாக இன்று வை. சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்கள் பூசை செய்துகொண்டிருக்கின்றார்கள்.

கட்கம், கபாலம், டமருகம், பாசம் தாங்கிய சதுர்ப்புஜங்களோடு சுமார் பதின்மூன்றரைத் தேவாங்குல உயரமான மாரியம்மன் சிலாவிக்கிரகத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. மகாமண்டபத்தில் பன்னிரண்டு தேவாங்குல உயரமுடைய எழுந்தருளியம்பாளும், மாரியம்பாளுக்குரிய பரிவாரங்களாக காத்தவராயர், ஆரவல்லி, சூரவல்லி, தொட்டியச்சின்னான் என்பனவும், நாகதம்பிரான் பிள்ளையார் சிலாவிக்கிரகங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. ஸ்தம்பமண்டபம், யாகசாலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகசாலை, வசந்தமண்டபம், களஞ்சியம், வாகனசாலை, என்பனவற்றையும், சுற்றுமதிலோடுகூடிய இரண்டு வீதிகளையுமுடையது இவ்வாலயம். உள்வீதியில் (தெற்கில்) வடக்குநோக்கியதாக பேச்சியம்மன் ஆலயம் பரிவாரமூர்த்தமாக அமைந்திருந்தபோதிலும், இதற்குத் தனியாகச் சிறப்புப் பூசைகள் நடைபெற்று வருகின்றன. நோய்துன்பங்களை நீக்கும் தெய்வமாகக்கருதி மக்கள் இதனை பயபக்தியோடு வழிபட்டு வருகின்றார்கள். சாதி, சமய பேதமில்லாமல் சகலரும் பேய்ச்சியம்மனை வழிபடுவார்கள். முற்காலத்தில் பேய்ச்சியம்மனுக்குப் பலியிடும் வழக்கம் இருந்து வந்ததாம். அது இப்போது நடைபெறுவதில்லை. சுகப்பிரசவத்தை விரும்பும் கர்ப்பிணிப் பெண்கள் இந்தப் பேய்ச்சியம்மனுக்கு நேர்த்திவைத்து வழிபட்டுவரும் வழக்கம் இன்றும் இருந்து வருகின்றது.

சித்திராபூரணையில் தீர்த்தோற்சவம் நடைபெறக்கூடியதாக பத்து நாட்களுக்கு மகோற்சவம் நடைபெற்றுவந்தது. பத்தாம்நாள் ரதோற்சவம் நடைபெற்றுவந்ததாம். தேர் இப்போது இல்லை. அழிந்துவிட்டது. திருக்கோணமலையில் இந்த ஆலயத்தில் மாத்திரந்தான் துலாக்காவடி நடைபெறும். முப்பதடி உயரத்தில் கட்டப்பட்ட துலாவில் காவடியெடுக்கும் பக்தர் செடில் பாய்ச்சப்பெற்று துலாவில் பக்தியோடு காவடியெடுப்பார். மெய்சிலிர்க்கத்தக்க நிலையில் துலாவில் தொங்கும் அடியாரைத் தெய்வமாக நினைத்து மக்கள் அம்பாளுக்கு வழிபாடு செலுத்துவார்கள். வடக்கு வீதியில் தேர் வந்துகொண்டிருக்கும்போது கோவில் வாசலில் துலாக்கொடி நிகழ்ச்சி நடைபெறும். துலாக்காவடி எடுக்கும் பக்தர் ஒரு கூடையில் வில்வம், புஸ்பம், எலுமிச்சம் பழம் என்பவைகளை வைத்துக்கொண்டு அவற்றை அம்பாளுக்கு அர்ப்பணம் செய்து அஞ்சலி செலுத்துவார். மக்கள் அவர் எறியும் மலர்களைத் திவ்வியப் பிரசாதமாகப் பெற்றுத் திருப்தியடைவார்கள். நவராத்திரி, கௌரிவிரதம், திருவெம்பாவை என்பன விசேட பூசைகளாக நடைபெற்று வந்தன. திருக்கோணமலையில் நடைபெற்றுவரும் கும்பவிழா ஒரு விசேட விழா என்பதை ஸ்ரீபத்திரகாளியம்பாள் ஆலயத்தைப்பற்றி எழுதும்போது குறிப்பிட்டுள்ளேன். அந்தக் கும்ப விழாவுக்குத் திருக்கோணமலையிலுள்ள எல்லா ஆலயங்களிலும் கும்பம் வைத்து எடுப்பார்கள். அந்தக் கும்பங்களுக்கு இந்த ஆலயத்திலிருந்து தீர்த்தமெடுத்துச் சென்று கும்பம் வைப்பது வழக்கமாயிருந்து வந்தது. பாலம்போட்டாற்றுப் பத்தினியம்மன் கோவிலுக்கும், சல்லியம்மன் கோவிலுக்கும் கும்பம், கரகம், காவடி, பாற்செம்பு எடுத்துச் செல்லும் அடியார்கள் இவ்வாலயத்திற்கு வந்து வழிபட்டுச் செல்வார்கள். இப்போது இவ்வாலயத்தில் இரண்டுகால பூசைமாத்திரம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

சிற்பசாஸ்திரமுறையாக அமைக்கப்பட்டு, சிறப்புவிழாக்கள் நடைபெற்றுவந்த இவ்வாலயம், இன்றுள்ள நிலை பரிதாபத்திற்குரியது. விரைவில் திருப்பணிகள் செய்து கும்பாபிஷேகத்தை நடாத்த ஆஸ்திகர்கள் முன்வருவார்களா? நிர்வாகிகள், உரிமைகொண்டாடுபவர்கள் விரைந்து முன்வரவேண்டும். மடத்தடியில் முன்போல் பக்தி பிரவகிக்க வேண்டும். இறையருள் துணை நிற்பதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாமாரிதேவி திருவூஞ்சல்

ஆக்கியோன்:
படப்பாலை கவிஞன் திரு. வை. தி. கார்த்திகேயன் அவர்கள்

சீர்பூத்த தென்கயிலைப் பரமர் பாகஞ்
சிறந்தருள்கூர்ந் தெமைக்காக்கும் செல்வப் பாவை
ஏர்பூத்த கவுரி முத்து மாரி தன்மேல்
எழில்பெறுமோ ரூஞ்சலிசை யினிதுபாட
கார்பூத்த வொருகையொரு கொம்பிரண்டு
கன்னமுறு மதத்தனைந்து கரத்தன் ஞான
நீர்பூத்த நதிமதியார்ந்திலங்கு வேணி
நிமலர் மலரிணையடிகள் நினைதல் செய்வாம்.

திரு அகர உகாரமணித் துணை நாட்டிச்
செப்பரிய மகாரமெனும் விட்டம் பூட்டி
உருவளரு மோங்காரக் கயிறை மாட்டி
உலகுபுகழ் றீங்காரப் பலகை நீட்டி
கருவளரும் கலைக்யான விதானஞ் சூட்டி
கதிர் மதிய நாட் கோட்கள் கவின
அருள்வளரும் பார்வதியே ஆடீரூஞ்சல்
அமலமுத்து மாரியன்னை ஆடீரூஞ்சல்.

இந்திரையும் பூமகளும் கவிகை தாங்க
எழிற்சசியும் ஊர்வசியும் கவரி சாய்ப்ப
சுந்தரஞ்சேர் பார்பதியும் ரதியும் பாங்காய்
தொடையலுறு கோடிகங்க ளடைப்பை யேந்த
தந்திரநாயகி கவுரி யுடைவாளேந்த
சதுர்முகன் மாலரண் முதலோர் சார்ந்துநிற்ப
அந்தரிமா விந்தை மணி வடந்தொட்டாட்ட
அமலை முத்து மாரியன்னை ஆடிரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகமணி யணிதிகழ்மா மவுலி மின்ன
கமலமலரனைய முகங் கருணை காலப்
பனகமணித் தோடசையை குழைகள் மின்னப்
பதக்கமுடனார முப வீதந் துன்ன
வினகவடி வாள் வலக்கை வென்றி வாய்ப்ப
வியன்கொலுசு சதங்கை முதற் சிலம்பு மார்ப்ப
அனகனக வளஞ்சூழ் தென் கயிலை வாழும்
அமலை முத்து மாரியம்மை ஆடீரூஞ்சல்.

செங்கமல மனையமுகம் நகையோ டாடத்
திருமார்பி லார முபவீத மாடத்
துங்கமுறு மிடையுடையா பரணங்களாடச்
சொல்லரிய பாசமொடங்குசம் வாளுமாட
வம்பவிழ் பூத் தொடையாடக் குழைகளாட
மலரடியின் சிலம்பாடக் குழலுமாட
அம்பரவாணர்க ளாடச் சுருதி பாட
அமலை முத்து மாரியம்மை ஆடீரூஞ்சல்.

உனைநினையு மடியவர்க ளுளமே போலும்
ஒளிவளைசூழ் கம்பநதிக் காஞ்சி போலும்
வனகனக கற்பக நிறக் காவகமே போலும்
வளங்குலவு மீசனிடப் பாகம் போலும்
கனவருண குலாதிபதி மணியகாரன்
கவின்புரி நல் வாலயத்திற் கருணை கூர்ந்து
அனகனக வளஞ்சூழ் தென் கயிலை வாழும்
அமலை முத்து மாரியன்னை ஆடீரூஞ்சல்

கருதரிய ஐயனுடன் நாயன்மாரும்
காத்தவராயனு மரிய கறுப்பன் தானும்
விருதுடைய முன்னோடிகள் பின்னோடிகள் தானும்
மேன்மையுறு மங்கலர்சொல் வதனமாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாமாரிதேவி திருவூஞ்சல்

உருவுடைய பேச்சி முதற் பிடாரி தானும்
உன்மத்த வயிரவர் ஓர் கோடிதானும்
அருளுடனே யடியவர்கள் பரவி நிற்ப
அமலை முத்து மாரியன்னை ஆடீரூஞ்சல்.

திருமருவு வருணகுல திலக மதிபன்
செயவீர கோணப்ப னீன்ற செல்வன்
மருமருவு மாரிமுத்து மணியந் தன்னை
மகிமைபெறக் காத்திருந்தாள் வளங்கும் ஞானக்
கருமருவு வயிரவிதன் தவத்து நித்த
காமன் வெற்றி வேலுருவுக்குள் கருணை நல்கி
அருளுடனே அடியவர்கள் தன்னைக் காக்கும்
அமலை முத்து மாரியன்னை யாடீரூஞ்சல்.

சீராரும் மணிக்கோவில் தனிலுவந்து
திருவடிக்கே செயும் பூஜைவிதம் மகிழ
ஏராருங் கோணைநகர் தன்னைக் காத்து
இகபரம் வேண்டினற்குன் னருளினிது பூத்து
காராரும் படப்பாலை யிடத்துள் வைகிக்
கார்த்திகேயன் கவிக்குள் கருணை நல்கி
ஆராரும் புகழ வறந் தனையே நல்கும்
அமலை முத்து மாரியன்னை ஆடீரூஞ்சல்.

### வாழி

பாதி மதி நதி யணிபூஞ் சடையான் வாழி
பாகமகலாத பிடி நடையாள் வாழி
மாதர்கள் கற் பாவினங்கள் மறைகள் வாழி
மன்னுயிர்கள் இன்னலின்றி மகிழ்ந்து வாழி
சோதி செறி தென்கயிலை நகரம் வாழி
சொல்லரிய சிவாகமமா நூலும் வாழி
ஆதி பராபரை வாழி அர்ச்சகர்கள் வாழி
அமலை முத்து மாரியன்னை ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை
# கும்பத்துமால் கருமாரியம்மன் கோவில்

திருக்கோணமலை மாணிக்கவாசகர் வீதியில் இக்கோவில் இருக்கின்றது. சிற்பசாஸ்திர முறைப்படி அழகாக அமைக்கப்பட்ட இவ்வாலயம் கற்பக் கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபங்களை கொண்டது. மண்டபத்தின் தெற்குப் பக்கமுள்ள வசந்த மண்டபத்தில் எழுந்தருளி மூர்த்தி இருக்கும் சந்நிதியும், வடகிழக்கில் வைரவர் சந்நிதியும் இருக்கின்றது.

ஆலயத்தின் தென்மேற்கு மூலையில் பிள்ளையார் சந்நிதியும், வடமேற்கு மூலையில் கும்பத்துமால் தோற்றிய காலத்தில் வைத்து வழிபாடு செய்யப்பட்ட பிள்ளையார் கல் என்று கூறப்படும் லிங்கவடிவமான கல்லும், திரிசூலமும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள சந்நிதி காணப்படுகின்றது. இவ்வாலயத்தில் ஆகம முறைப்படி பூசைவழிபாடுகள் நடைபெறுகின்ற போதிலும், திரிசூலமும் லிங்கவடிவமான கல்லும் இருக்கும் சந்நிதியில் பண்டைய மரபுப்படியே பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. இவை இரண்டும் கும்பத்துமால் என்ற வழிபாட்டுத் தலத்தின் ஆதி வரலாறுகளைக் கூறும் காரணிகளாக விளங்குகின்றன.

திருக்கோணமலையில் பிரித்தானியர் கடற்படைத் தளம் அமைப்பதற்காக சீக்கியர்களை இங்கு கொண்டுவந்தார்கள். அவர்களுடைய கலை, கலாசார முறைப்படி நவராத்திரி காலங்களில் கும்பவிழாவை நடத்தி வந்தார்கள். அவர்கள் இந்நாட்டைவிட்டுப் போனபின்னர் இங்கு வாழ்ந்த இந்துக்கள் நவராத்திரி காலத்தில் கும்ப விழாவைத் தொடர்ந்து நடத்திவந்தார்கள். அவர்களும் இந்நாட்டைவிட்டுப் போனபின்னர் இங்கு வாழ்ந்த இந்துக்கள் நவராத்திரி காலத்தில் கும்ப விழாவைத் தொடர்ந்து நடத்தி வந்தார்கள். அப்பெருவிழா திருக்கோணமலையில் இன்றும் நடைபெற்று வருகின்றது.

ஆலயங்கள் தோறும் புரட்டாதி மாதத்தில் இங்கு கும்பவிழா நடைபெறும் போது, கும்பத்துமாலிலும் கும்பம், கரகம் எடுத்து விழா நடத்திவந்தார்கள். இதனாலே கும்பத்துமால் என்ற தொண்டு செய்யும் பண்டாரவண்ணார் எனப்படும் சலவைத் தொழிலாளிகளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பத்துமாலைப் பராபரித்துவந்தார்கள். பிற்காலத்தில் வேளாளரும் சேர்ந்து கும்பத்துமாலில் புரட்டாதி மாதத்தில் கும்ப விழாவை நடத்தி வந்தனர். கும்பவிழாவின் விரிவான வரலாற்றை இந்நூலில் திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோவில் வரலாற்றில் காண்க.

பண்டார வண்ணாருடைய நிர்வாகத்திலிருந்த கும்பத்துமால் கோவில், கிடுகினால் வேய்ந்த கொட்டில் கோவில் இங்கு அவர்கள் வைத்து வழிபட்ட லிங்க வடிவமான கல்லூம், திரிசூலமும் புதிய கற்கோவில் கட்டப்பட்ட பின்பும் கும்பத்துமால் கருமாரியம்மன் கோவிலின் வடமேற்கு மூலையில் சந்நிதியமைத்து அதில் பிரதிஷ்டை செய்து வழிபட்டுவருகிறார்கள். புரட்டாதி மாதத்தில் நவராத்திரி காலத்தில் இந்தச் சந்நிதியில் தான் கும்பம் வைப்பார்கள். புதிய கருமாரியம்மன் கோயிலுக்குள் கும்பம் வைப்பதில்லை.

பண்டார வண்ணார் நடத்தி வந்த கும்பத்துமால் கோவிலை பொறுப்பேற்று நடத்தும்படி இவ்வூரில் வாழ்ந்த வேளாளர் குலத்து வேலுப்பிள்ளை கதிர்காமப்பிள்ளை என்பவரை வேண்டிக் கொண்டனர். அவரும் அதனை ஏற்று தனது மைத்துனர். நாகரெத்தினம் என்பவரையும் சேர்த்துச் கும்பத்துமால் கோயிலை நடத்தி வந்தார்கள். நாகரெத்தினம். என்பவரே பூசகராகப் பணியாற்றினார். அதன் பின் விஸ்வலிங்க ஐயர் நீண்டகாலமாக பூசை செய்து வந்தார். நவராத்திரி கும்பவிழாப் பூசை மாத்திரந்தான் இங்கு நடை பெற்று வந்தது.

இவ்வாறு நடந்து வரும்போது இவ்வாலயச் சூழலிலுள்ள பக்தப் பெருமக்கள் கற்கோவில் கட்டத் திட்டமிட்டனர். திட்டப்படி எழுந்ததுதான் இன்றுள்ள கும்பத்துமால் கருமாரியம்மன் கோவில். மூலஸ்தானத்தில் கருமாரியம்மன் சிவாவிக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. மகா மண்டபச் சந்நிதியில் எழுந்தருளி அம்மன் வைக்கப்பட்டிருக்கிறது.

1993ம் ஆண்டு புதிய கற்கோவில் சிற்பசாஸ்திர முறைப்படி அழகாக அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகம சாஸ்திர முறைப்படி பூசைகள் நடைபெறுவதால் பூசைக்கு அந்தணர்களை நியமித்தார்கள். முதன் முதலில் இவ்வாலயத்தில் வேதாகம மாமணி சிவ ஸ்ரீ இராஜேஸ்வரக் குருக்கள் பூசை செய்து வந்தார். இன்று நித்திய பூசைகளை சிவசண முகரெட்ண சர்மா செய்து கொண்டிருக்கிறார். விஷேட அபிஷேக பூசைகளை சிவஸ்ரீ வ. சிவகுமாரக்குருக்கள் செய்து வருகிறார்.

இவ்வாலயத்தில் மூன்று நேரம் நித்திய பூசையும், பத்து நாட்களுக்கு அலங்கார உற்சவமும், நவராத்திரி, சிவராத்திரி, வைகாசிப் பொங்கல் திருவெம்பாவைப் பூசையும் ஒவ்வொரு பூரணைக்கும் விசேட அபிஷேகம் பூசைகளும் நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை கும்பத்துமால் கருமாரியம்மன் கோவில்

கும்பத்துமால் கருமாரியம்மன் கோவிலை திரு.செல்வரெத்தினம் என்பவர் தலைவராகவும், துரைசிங்கம் என்பவர் செயலாளராகவும், சபாரெட்னம் என்பவரை பொருளாளராகவும் கொண்ட திருப்பணிச் சபையினர் புனர் நிர்மானம் செய்து கும்பாபிஷேகத்தை நடத்தினார்கள். கும்பாபிஷேகத்தின் பின் திரு கதிர்காமப் பிள்ளையின் மகன் திரு. குகதாசன் என்பவர் சிவலிங்கம், மகாலிங்கம், என்பவர்களின் அனுசரணையோடு ஆலய நிர்வாகத்தை நடத்தி வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை
# கும்பத்துமால் கருமாரி அம்மன் திருவூஞ்சல்

ஆக்கியோன்:
ஞானசிகாமணி, சைவப்புலவர் பண்டிதர்.இ.வடிவேல்

## காப்பு

சீரோங்கு தென்கயிலைக் கோணைக் குன்றில்
திருவோங்க அருள்பொழியும் கோணைநாதர்
பாரோங்கு பல்வளமும் பல்கியோங்க
பராபரையின் திருக்கோவிற் பணிகளோங்க
காரோங்கு தென்கோனை மலையினோர்பால்
கருணைபொழி கருமாரி அம்மன்மீது
ஏரோங்கும் ஊஞ்சலிசை பாட ஐந்து
கரமோங்கு கரிமுகவன் காப்பதாமே.

## ஊஞ்சல்

அருவாகி உருவாகி அண்ட மெங்கும்
ஆதிசிவ னோடுறையும் அமலையாகி
கருவாகி உயிராகிக் கலைகளாகிக்
காலமெலாங் கடந்த அருட் கன்னியாகி
பெருவாழ்வை அருளுகின்ற பிராட்டியாகி
பிரமத்தோ டபின்னமாய் பிரபையாகி
திருவாகி அமர்கின்ற கும்பத்துமால்
கருமாரி அம்மையே ஆடீர் ஊஞ்சல்.

ஆரணங்கள் நான்குமுயர் வடங்களாக
ஆகமங்க ளானவை பொற் பீடமாக
வேதியர்கள் ஓதுதிரு மந்திரங்கள்
வினைதீர்க்குந் தோத்திரமாம் மாலை சூடி
சீரியநல் அடியவர்கள் துதித்து நிற்க
செம்பவளத் திருமேனி துலங்கியாட
பேரருள்செய் கும்பத்து மாலில் மேவும்
பெருமாட்டி கருமாரி ஆடீர் ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை மாவட்டத் திருத் தலங்கள்

இதயமணி மண்டபத்தில் உனையிருத்தி
இனியதமிழ் மறைபாடி ஏத்தியென்றும்
கதியுனது கழலடியே காப்பாமென்று
களிகூரும் அடியவர்கள் கருதிச் செய்த
புதியதிருப் பொற்கோயில் அமர்ந்த தாயே
புகழோங்கு கும்பத்துமாலாம் தூய
பதியிலுறை பராபரையே ஆடீர் ஊஞ்சல்
பகவதியே கருமாரி ஆடீர் ஊஞ்சல்.

ஈஸ்வரியே எவ்வுயிர்க்குந் தாயும் நீயே
ஏழுலகும் படைத்தழித்துக் காப்பாய் நீயே
மாசுடைய மகிஷனுயிர் மடியச் செய்து
மகிஷாசுர மர்த்தனியும் ஆனாய் நீயே
பாசவினைப் பற்றறுத்துப் பக்தர்க்கெல்லாம்
பவமகலப் பரிந்தருளும் பைரவியும் நீயே
தேசமெலாம் புகழ்கின்ற கும்பத்துமால்
கருமாரி அம்மையே ஆடீர் ஊஞ்சல்.

உலகமெல்லாம் உய்ய அருள் மாரி பெய்து
உவக்கின்ற உத்தமியாம் உமையும் நீயே
பலகலையும் ஆகமங்கள் பலவுந் தந்து
பைந்தமிழில் மறைதந்த பாரதியும் நீயே
நிலவுலகும் நீள்கடலும் வானும் நல்கும்
நிறைவுடைய நிதியருளும் திருவும் நீயே
நலமிகுந்த கும்பத்து மாலில் கோயில்
கொண்டகரு மாரியம்மே ஆடீர் ஊஞ்சல்.

ஊர்வதுமோர் அரியேறு உலக முய்ய
உரைப்பதுமோ நால்வேதம் ஒறுப்பதற்கு
கூரியவாள் பாசமொடு கபாலமேந்திக்
குவலயத்தைக் காக்கின்ற கருமாரியுந்தன்
சீரியநற் கரமதனில் துடியுமாட
சிங்காரத் திருவடியிற் சிலம்புமாட
காரிருள்சேர் கடையாடக் கலிங்கமாட
கருமாரி அம்மையே ஆடீர் ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பத்துமால் அம்மன் திருவூஞ்சல்

எழுதரிய மறைகருனை ஏத்தி நிற்க
ஏந்திழையார் இசைபாடி இரந்துநிற்க
தொழுமடியார் துணைக்கரங்கள் கூப்பி நின்று
துதிபாடி ஆடி மனம் மகிழ்ந்து நிற்க
முழுதுணர்ந்த முனிவர்களும் தேவர் தாமும்
மூவருமுன் புகழ்பாடி ஆடி நிற்க
பழுதில் உயர் கோணை நகர்க் கும்பத்துமால்
கருமாரி அம்மையே ஆடீர் ஊஞ்சல்.

ஏழுலகும் ஆள்பவளே ஆடீர் ஊஞ்சல்
இறைவனிடங் கொண்டவளே ஆடீர் ஊஞ்சல்
நாளுமுனை நாடிவரும் அடியார்க் கெல்லாம்
நல்வரங்கள் ஈபவளே ஆடீர் ஊஞ்சல்
வேழமுகன் வேல்முருகன் வீரபத்ரன்
வீரவடு கேசனையுந் தந்தெவர்க்கும்
வாழ்வளிக்கும் வைஷ்ணவியே கும்பத்துமால்
கருமாரி அம்மையே ஆடீர் ஊஞ்சல்.

ஐந்தெழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்து மாகி
அடங்கவரு ஹிறீங்கார ஓங்காரி நீயே
பந்தமெலாம் படவழிக்கும் பராபரையும் நீயே
பரம்பொருளின் பங்கிலுறை பராசக்தி நீயே
அந்தமிலா ஆனந்தம் அளிப்பவளும் நீயே
அகிலாண்ட கோடியெலாம் ஆள்பவளும் நீயே
சுந்தரஞ்சேர் கும்பத்துமால் கோயில் கொண்ட
கருமாரி அம்மையே ஆடீர் ஊஞ்சல்

ஒலிக்கின்ற தண்டையொடு சிலம்பணிந்த
உனதுதிரு மலரடிகள் வாழ்க வாழ்க
சலிக்காது பணிபுரியும் அடியாரும் வாழ்க
சதுர்மறையும் அந்தணரும் ஆனினமும் வாழ்க
மதிக்கின்ற அறம் வாழ்க மங்கையரும் வாழ்க
மலரிட்டு வணங்கிவரும் மனிதரெலாம் வாழ்க
துதிக்கின்ற ஊஞ்சலிசை கேட்போரும் வாழ்க
துய்யகரு மாரியம்மா வாழ்க வாழ்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எச்சரிக்கை

ஆதியந்த மில்லா அருள் சோதி எச்சரிக்கை
ஆதிசிவன் பங்கிலுறை அம்மா எச்சரிக்கை

பாதிமதி குடும்சடை பரனார் திருமேனிப்
பாதியென ஓதும்பரா பரையே எச்சரிக்கை

பாதமலர் தொழுதேதிருப் பணிகள் பல புரிவோர்
தீதகன்று வாழ அருள் செய்வாய் எச்சரிக்கை

வேதியரும் மாதவரும் விண்ணில் உறைவோரும்
நீதியொடு வாழ அருள் புரிவாய் எச்சரிக்கை

எங்கும்புகழ் திருக்கோணையம் பதியிலுனை என்றும்
நம்பும் அடியவர்கள் துயர் தீர்ப்பாய் எச்சரிக்கை

செம்பொன்னொளி வீசுந்திருக் கும்பத்துமால் கோயில்
தங்கும் மலை மகளே கருமாரி எச்சரிக்கை.

## பராக்கு

சீரோங்கு கோனை வளர் தேவி பராக்கு
சிவலோக நாயகிச் சிலையே பராக்கு
பேரோங்கு கருமாரித் தாயே பராக்கு
பிழைபொறுத் தெமையாள வருவாய் பராக்கு.

வாரண முகத்தோனை ஈன்றாய் பராக்கு
வடிவேலனுக் கருளும் வல்லீ பராக்கு
ஆரணப் பொருளாகி அமர்வாய் பராக்கு
அரியயனும் அறியாத ஆதி பராக்கு.

ஆதியொடு நடுவிறுதி ஆனாய் பராக்கு
அகிலமெலாம் ஆள்கின்ற அன்னை பராக்கு
கோதிலா அடியார்நிறை கும்பத்து மாலில்
குடிகொண்ட கருமாரி அம்மை பராக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பத்துமால் அம்மன் திருவூஞ்சல்

### லாலி

லாலி லாலி லாலி லாலி லாலி
ஆலமுண்ட கண்டன் மகிழ் அம்மை லாலி (லாலி)

காலமெல்லாங் கடந்தவளே லாலி லாலி
கருணைபொழி கருமாரி அம்மை லாலி (லாலி)

அந்தரியே சுந்தரியே லாலி லாலி
அகிலாண்ட நாயகியே லாலி லாலி (லாலி)

சங்கரியே பகவதியே லாலி லாலி
சர்வசக்தி சாம்பவியே லாலி லாலி (லாலி

எங்கும்நிறை ஈஸ்வரியே லாலி லாலி
பொங்குபுகழ் கும்பத்துமால் மாரி லாலி (லாலி)

பாதமலர் சூடியுனைப் பணியும் பக்தர்கள்
பாவமெலாம் நீக்குபரா சக்தி லாலி (லாலி)

நாதவடி வானவளே லாலி லாலி
நல்லருள்செய் கருமாரி அம்மை லாலி (லாலி)

### மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் ஜெய ஜெய
மங்களம் மங்களம் மங்களம்

ஆனைமுக வள்ளலுக்கும் ஆறுமுக வேலவர்க்கும்
கோணைநகர் ஈசனுக்கும் குன்றிலுறை மாதுமைக்கும் (மங்களம்)

பூரணி புராதனிக்கும் பூவிலுறை பாரதிக்கும்
ஆரணியெனப் புகலும் அம்பிகைக்கும் அந்தரிக்கும் (மங்களம்)

வாரணியுங் கொங்கை வளர் வாராகி வைஷ்ணவிக்கும்
ஆரணங்கள் போற்றும்பத்ர காளியொடு கௌரியர்க்கும் (மங்களம்)

துன்பமதை நீக்கியருள் துர்க்கா பரமேஸ்வரிக்கும்
கும்பத்துமால் கோயிலமர் கருமாரி அம்மையர்க்கும் (மங்களம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்து மாரியம்மன் கோவில்
# தம்பலகமம்

திருக்கோணமலை மாவட்டத்தில் தம்பலகமம் என்னுமிடத்தில் இந்தக் கோவில் இருக்கின்றது. இங்கு செல்வதற்குரிய மார்க்கத்தைத் தம்பலகமம் ஆதிகோணநாயகர் ஆலய வரலாற்றில் பார்க்கவும். தம்பலகமத்தில் மக்கள் குடியிருக்குமிடங்கள் கள்ளிமேடு, பட்டிமேடு, வர்ணமேடு, நாயன்மார்திடல், ஐயனார் திடல் என்று தனித்தனியே அமைந்திருக்கின்றன. மக்களின் குடியிருப்புக்களைச் சுற்றி வயல் நிலங்களாகவே இருக்கின்றன. சைவ மக்கள் நெடுங்காலமாக வாழ்ந்து வருகின்ற இடம் தம்பலகமம். இந்த மாரியம்மன் கோவில் கள்ளிமேடுக்குச் சற்றுத் தூரத்தில் சம்மாந்துறை என்ற இடத்தில் இருக்கின்றது. இந்த அம்பாளுக்குப் பாடப்படுகின்ற காவியத்தில் "பொருள்மருவு சம்மாந்துறைப்பதியில் வாழும் முத்தியே அருள்பெருகு மகமாரி அம்மனே" என்று வரும் அடிகள் ஆலயமிருக்குமிடத்தைக் குறிப்பிடுகின்றன.

ஒரு நூற்றாண்டு காலத்திற்கு முன் மாரியம்மனுடைய சிலையை ஓலைக் கொட்டிலில் வைத்து வழிபட்டு வந்தார்கள். சிறுதெய்வ வழிபாட்டில் பக்தியும், சிரத்தையும், நம்பிக்கையும் கொண்ட மக்கள் தமது இட்ஷதேவதையாக வைத்து வழிபட்டார்கள். அக்காலத்தில் திரு.கதிரவேலு விரக்குட்டி என்பவர் பூசைசெய்து வந்தார். உண்டென்றார்க்கு உறுதுணையாய் இருந்துவரும் அம்பாளுக்குக் கற்கோவில் கட்ட எண்ணி திரு.க.ஐயாத்துரை, திரு.கா.காளியப்பு, திரு.சங்கரப்பிள்ளை என்பவர்கள் மக்களின் உதவியுடன் கற்பக்கிரகம், அர்த்தமண்டபம் என்பனவற்றைக் கல்லால் கட்டி அம்பாளை ஸ்தாபித்து வழிபடத் தொடங்கினார்கள். திருமதி சரவணமுத்து கண்ணகையம்மா என்பவர் அம்பாளின் எழுந்தருளி விக்கிரகத்தைச் செய்து கொடுத்தார். மக்களின் பக்தி பெருகப் பெருக ஆலயமும் சிறப்பாக நடைபெறத் தொடங்கியது.

தம்பலகமத்தைச் சுற்றியுள்ள பல இடங்களிலும் பண்டைக்காலத்தில் மக்கள் குடியிருப்புக்களும் அங்கங்கே கோயில்களும் இருந்திருக்கவேண்டும். இயற்கை ஏதுக்களினாலோ, வேறு காரணங்களினாலோ அந்த ஊர்களைவிட்டு மக்கள் இடம்பெயர்ந்த காரணத்தினால் அங்கங்கேயிருந்த கோவில்கள் பராபரிப்பிழந்து காடு வளர்ந்து மூடியிருக்கலாம். நீண்ட நெடுங்காலத்திற்குப்பின் தற்போது குடியேற்றத் திட்டங்களை வகுத்து மக்களைக் குடியேற்றி வருகின்றார்கள். இப்படிக் குடியேறுபவர்கள் காடுகளை அழிக்கும்போது பழைய கோவில்களின் இடிபாடுகள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கிரகங்கள் என்பன கிடைக்கின்றன. கதிரடப்பஞ்சோலை என்ற இடத்தில் பத்திரகாளி சிலையொன்றிருந்தது. இது கோணேசர் கோவிலுக்குரிய எல்லைக்காளியாக இருக்கலாமென்று கருதுகின்றார்கள். இந்தக் காளியம்பாளை எடுத்துவந்து இந்தக் கோவிலுக்கருகில் ஒரு சிறு கோவில் கட்டி ஸ்தாபித்து வழிபட்டு வருகின்றார்கள். பொங்கலும், தீமிதிப்பு வைபவமும் பத்திரகாளியம்பாளுக்குச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

மாகமம் என்ற இடத்திலும் மக்கட்குடியேற்றம் ஒன்று நடைபெற்றது. அங்கு குடியேறிய இஸ்லாமியர் ஒருவர் தான் கட்டிய குடிசைக்கருகில் கிடந்த கருகல் ஒன்றில் மிளகாய் அரைப்பாராம். அது ஒரு துர்க்கையம்மன் சிலை என்பது அவருக்குத் தெரியவில்லை. சிலை குப்புறக் கிடந்ததால் அதன் பின்புறத்தைக் கருங்கல்லென்று நினைத்து மிளகாயரைத்திருக்கிறார். இந்த அம்பாள் மாரியம்மன்கோவில் பூசகருடைய கனவில் தோன்றி "எனக்கு முதுகு எரியுது, என்னை எடுத்து வந்து இங்கேவை" என்று கூறினாளாம். கனவின் பிரகாரம் சென்று பார்த்தபோது அற்புதமான துர்க்கையம்மன் சிலையாக இருப்பதைக் கண்டு அதையெடுத்து வந்து மாரியம்மன் கோவிலுக்கருகில் சிறுகோவில் கட்டி துர்க்கையம்பாளை ஸ்தாபித்து வழிபட்டு வருகின்றார்கள். இந்தக் கோவிலைப் பராபரிப்பதற்கு பரிபாலன சபையொன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்தக் கோவிலில் ஒரு நாளைக்கு ஒருதரம் நித்தியபூசை நடைபெறுகின்றது. மாரியம்மனுக்குக் கும்பாபிஷேகம் செய்த தினத்தில் ஒவ்வொரு வருடமும் சங்காபிஷேகம் செய்து அன்று தொடக்கம் ஏழு நாட்களுக்கு சுற்றியுள்ள கிராமங்களுக்கு அம்மனை ஊர்வலமாக எழுந்தருளச் செய்கின்றார்கள். நவராத்திரி, திருவெம்பாவை முதலிய விசேட பூசை வைபவங்களும் இங்கு நடைபெற்று வருகின்றன. உருவாடி வாக்குச் சொல்லும் வழக்கமும் இந்த ஆலயத்தில் இருந்து வருகின்றது.

இந்தக் கோவிலைக் கட்டிய ஐயாத்துரை பரம்பரையினரையும், காளியப்பு பரம்பரையினரையும் சேர்த்து ஊர்ப் பொதுமக்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பரிபாலனசபையின் தற்போதைய தலைவராயிருக்கும் திரு.க.கிருபானந்தன் அவர்கள், இந்த ஆலய வரலாற்றைத் தந்துதவியமைக்கு நன்றி உரியதாகுக. இப்போது திரு. ஆறுமுகம் காத்தமுத்து என்பவரும் திரு.வீ.வடிவேலு என்பவரும் ஆலயத்தில் பூசைசெய்து வருகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துமாரியம்மன் கோவில்
# நிலாவெளி

நிலாவெளிச் சித்திவிநாயகர் ஆலயம் இருக்கும் இடத்தையும், அதற்குச் செல்லும் மார்க்கத்தையும் அந்த ஆலய வரலாற்றில் கூறியுள்ளோம். அந்தக் கோவிலுக்குச் சமீபத்திலேயே முத்துமாரியம்மன் கோவில் இருக்கின்றது. எனவே இந்தக் கோவிலுக்குச் செல்லும் வழியை அங்கு பார்த்து அறியலாம்.

நிலாவெளிச் சித்திவிநாயகராலயத்திற்கு அருகில் வடக்குத் திசையில் முத்துமாரியம்மன் கோவில் காணப்படுகின்றது. சுமார் நூறு வருடங்களுக்குமுன் இந்தக் கோவில் கட்டப்பட்டிருக்கின்றது. இவ்வாலயம் இருக்குமிடத்தில் சுருட்டுக் கொட்டில் ஒன்று இருந்தது. சின்னப்பொடியார் என்பவர் அக்கொட்டிலில் சுருட்டுத்தொழில் செய்துகொண்டிருந்தார். இந்தக் கொட்டிலில் சிப்பியில் திரியிட்டு நெய்விளக்கு வைப்பார்களாம். ஒரு நாள் நெய் விடாமலே விளக்குத் தானாக எரிந்ததாம். இப்படித் தொடர்ந்து இரண்டு நாட்களாக விளக்கு எரிந்துகொண்டிருந்தது. இந்த அதிசய நிகழ்ச்சிக்குப் பின் சின்னப்பொடியருக்கு முத்துமாரி அம்மன் கனவிலே காட்சிகொடுத்ததால், அம்பாள்மீது கொண்ட பயபக்தியினாலே திரு.சின்னப்பொடியார் என்பவர் இந்தக் கோவிலைக் கட்டி ஆதரித்து வந்தார். கருவறையில் கும்பம் வைத்து முக அங்கியிட்டுப் பூசைசெய்து வருகின்றார்கள். கருவறையை மருவியபடி பிரம்மாண்டமான வேப்பமரம் இருக்கின்றது. சின்னப்பொடியாருடைய காலத்திற்குப்பின் சித்திவிநாயகர் கோவிலைப் பராபரித்துவரும் பரிபாலன சபையே இந்தக் கோவிலையும் பரிபாலனம் செய்துவருகின்றது.

கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபங்களைக் கொண்ட மடாலயமாக இந்தக் கோவில் கட்டப்பட்டிருக்கின்றது. வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் மாத்திரம் பூசை நடைபெற்று வருகின்றது. வைகாசி மாதம் அமாவாசைக்குப்பின்வரும் செவ்வாக்கிழமை இக்கோவிலில் கும்பவிழா ஆரம்பமாகின்றது. தொடர்ந்து பத்து நாட்கள் இவ்விழா நடைபெறும். பத்தாம் நாள் தீமிதிப்பு வைபவமும், பதினோராம் நாள் பொங்கல் வேள்விகளும் நடைபெற்று விழா நிறைவேறும். உருவாடி அருள்வாக்குக் கூறுவது இங்கு நடைபெறுவதால் சிறு தெய்வ வழிபாட்டில் பெருநம்பிக்கை வைத்திருக்கும் அடியார்கள் இங்கு உற்சவ காலங்களில் திரள் திரளாக வந்து கூடுவார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாங்கிணாய் ஸ்ரீ மாரியம்மன் கோவில்

இந்தக் கோவில் திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து பத்துக் கில்லோ மீற்றர் தூரத்தில் சாம்பல்தீவுக் கிராமத்தைச் சேர்ந்த மாங்கிணாய் என்னுமிடத்தில் இருக்கின்றது. டச்சுக்காரருடைய காலத்திற் கட்டப்பட்ட கிறீஸ்தவ தேவாலயமொன்று இந்தக் கோவிலுக்குச் சற்றுத் தூரத்தில் இருக்கின்றது. எனினும் இங்கு வாழ்கின்றவர்கள் சைவமக்களாகவே காணப்படுகின்றார்கள்.

கிராமப்புறங்களிலுள்ள ஆலயங்களில் பண்டைக்காலங்களில் சிறுதெய்வ வழிபாடு இருந்துவந்துள்ளதைப் பல இடங்களிலும் அவதானிக்கக் கூடியதாயிருக்கின்றது. இந்த மாரியம்மன் கோவிலும் ஆரம்பகாலத்தில் அவ்வாறு தானிருந்தது. சுமார் இருநூறு வருடங்களுக்குமுன் தாண்டவியார் என்பவர் தங்கள் குலதெய்வமாகிய மாரியம்மனுக்கு மாங்கிணாயில் ஒரு சிறு கொட்டில் கோவிலைக்கட்டி வழிபாடு செய்து வந்தார். தன்னை ஆதரிக்கும்படி அம்பாள் கனவில் காட்சி கொடுத்துக் கூறியதற்கிணங்க இவ்வாலயத்தைக் கட்டி வழிபட்டு வந்தாராம். தெய்வந்தான் மக்களை ஆதரித்துக் காப்பாற்றுகின்றது. அப்படியிருக்கத் தன்னை ஆதரிக்கும்படி தெய்வம் கூறியது என்பது அவரவரின் உள்ளத்தில் நிறைந்திருக்கும் பக்தியின் பிரதிபலிப்பேயாகும். தாண்டவியார் கட்டிய சிறிய கோவிலை அவருடைய மறைவுக்குப் பின் அவருடைய மகன் காத்தார் என்பவர் கோவிலைப் பராபரித்து வழிபட்டு வந்தார். இவருடைய மனைவியின் முதல் பிரசவம் சிக்கலாயிருக்கும்போது அம்பாள் அவருக்குக் கனவில் தோன்றி "உனக்கு வீடுகட்டக் கல்லும் மண்ணும் சேர்த்து வைத்திருக்கின்றாய். நீவழிபடும் இந்த ஆலயத்தைக் கட்டி விடு. உனக்கு ஓர் ஆண்குழந்தை சுகமாகப் பிறக்கப்போகின்றது" என்றுகூறியதாம். அம்மனுடைய வாக்குப்படி குழந்தை சுகமாகப் பிறந்தது. பொன்னம்பலம் என்று பெயரிட்டார்கள். குழந்தை சுகமாகப் பிறந்ததால், வீடுகட்ட வைத்திருந்த பொருட்களைக்கொண்டு அம்பாளுக்கு ஆலயம் கட்டினார்கள். அதன்பின் பொன்னம்பலம் பெரியவராகி, ஊர்மக்களுடைய உதவியையும் பெற்று ஆலயத் திருப்பணியைச் சிறப்பாகச் செய்து 1942ஆம் ஆண்டு கும்பாபிஷேகத்தைச் சிறப்பாகச் செய்வித்தார். இருபது வருடங்களுக்குப்பின் சுவாமி சச்சிதானந்த யோகிராஜ் அவர்களின் ஆசியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுசரணையும் கிடைக்கப்பெற்று 1962ஆம் ஆண்டு மேலும் திருப்பணிகள் செய்து இரண்டாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இந்த ஆலயத்தைக் கட்டியவர்களே பரம்பரை பரம்பரையாகப் பூசைசெய்து வந்துள்ளார்கள். தற்போது பொன்னம்பலம் என்பவருடைய மகன் இராசையா என்பவர் பூசைசெய்து வருகின்றார். இந்தப் பரம்பரையினருக்கு உதவியாக ஊர்ப் பொதுமக்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒன்பது பேரைக் கொண்ட ஒரு பரிபாலனசபை செயல்பட்டு வருகின்றது. சர்ப்பம், உடுக்கு, கட்கம், கபாலம் தாங்கிய சதுர்ப்புஜங்களையுடைய மாரியம்மன் சிலை கருவறையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. மகாமண்டபத்தில் எழுந்தருளியம்பாளும், பிள்ளையாரும் மேலும் வைக்கப்பட்டிருக்கின்றது. வீதியில் வைரவர், நாகதம்பிரான், காளி என்பனவும், கோவில் வாசலில் கழுமரமும் உண்டு. பலியிடும் வழக்கம் இப்போது இல்லை. நித்தியம் ஒருநேரப் பூசையும், சித்திராபூரணைத் திதியைத் தீர்த்த தினமாகக்கொண்டு அதற்கு முந்திய பத்து நாட்களுக்கு விசேட அலங்கார உற்சவம் நடைபெற்று வருகின்றது.

இவ்வாலயத்தை மையமாகவைத்து ஊர்க்காவல் செய்யும் மரபொன்று இங்கிருந்து வருகின்றது. இதனைத் "தூளி" என்று கூறுவார்கள். கிராமத்தின் நான்கு திக்குகளிலும் வெள்ளைச் சீலை விரித்து யந்திரம் வரைந்து மந்திர உட்சாடணம் செய்ய அம்மன் வந்து உருவாடுவார்கள். பிரதம பூசாமியார் வெற்றிலைச் சுருளில் அரிசியை நிரப்பி மந்திர உட்சாடணம் செய்து அரிசியை ஆகாயத்தை நோக்கி வீசுவார். இப்படிச் செய்வதையே தூளி காவல் என்பர். தீர்த்தமாடச் செல்லும்போது இந்தக் கிரியை நடைபெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சல்லி முத்து மாரியம்மன் கோவில்

இந்த ஆலயம் திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து பதினொரு கில்லோ மீற்றர் தூரத்தில் இருக்கின்றது. சாம்பல்தீவுப் பிரதான வீதிவழியாகச் சென்று கிழக்கே பிரிந்து செல்லும் மாங்கிணாய் சல்லிவீதி வழியாகச் சென்றால் கடற் கரையோரமாக அமைந்துள்ள இவ்வாலயத்தை அடையலாம். ஆண்டாகுளத்தில் உற்பத்தியாகும் செம்பியன் ஆறு சல்லி முத்துமாரியம்மன் கோவிலுக்கருகே ஓடிச்சென்று திருக்கோணமலைக் கடலில் சங்கமமாகின்றது. சங்கமமாகும் இடத்திலுள்ள வெள்ளைமலைக் குன்றில் கோயில் காணப்படுகின்றது. கிழக்கு நோக்கிய வாசலையுடையதாய், கடற்கரையோரமாகக் கோணேசர் ஆலயத்தைப் பார்த்த வண்ணம் இவ்வாலயம் அமைந்திருக்கின்றது. கடல்வழியாக இவ்வாலயம் கோணேசர் கோவிலில் இருந்து ஒன்றரைக் கில்லோமீற்றர் தூரத்திலிருக்கின்றது. இரவில் கோணேசர் ஆலயத்திலேற்றப்படும் தீபத்தை இவ்வாலயத்திலிருந்து தரிசிக்கலாம்.

இற்றைக்கு இருநூறு வருடங்களுக்குமுன் வாழ்ந்த திரு. சின்னத்தம்பி என்பவருக்கு அம்பாள் காட்சிகொடுத்து, இந்த ஊரின் நன்மைக்காக இவ்விடத்தில் தன்னை ஆதரிக்கும்படி அருள்வாக்குக் கொடுத்தாளாம். இவ்வூரில் வாழ்கின்ற சைவ மக்களின் சுபீட்சத்திற்காகவும், கடற்தொழில் செய்பவர்களின் வழிபாட்டுக்காகவும் திரு. சின்னத்தம்பி என்பவர் சிறிய கொட்டில் அமைத்து அம்பாளை வைத்து வழிபட்டு வந்தார். இவருக்குப்பின் திரு. சி. கார்த்திகேசு என்பவர் சிறிய கொட்டில் அமைத்து அம்பாளை வைத்து வழிபட்டு வந்தார். இவருக்குப்பின் திரு. வேலுப்பிள்ளை என்பவர் பூசகராயிருந்து பூசைகளை நடத்தி வந்தார். 1927ஆம் ஆண்டு இவ்வாலயத்தைக் கல்லினால் கட்டுவதற்காகத் திருப்பணிகளை ஆரம்பித்தார்கள். திரு.கார்த்திகேசு என்பவரின் மறைவுக்குப்பின் அவருடைய மகன் திரு.இரத்தினசபாபதிப்பிள்ளை என்பவர் கோவில் திருப்பணிகளை நிறைவேற்றி 1933ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்வித்தார். இவர் மணியகாரணாயிருந்து நடத்திவரும் காலத்தில் ஆலய பரிபாலனத்தைச் சிறப்பாக நடத்துவதற்காக பன்னிரண்டுபேர் கொண்ட பரிபாலன சபையொன்று மணியகாரனுக்குதவியாக அமைத்தார்கள். தற்போது திரு. தங்கவேல் என்பவர் சபையின் தலைவராயிருந்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இவ்வாலயத்தைச் சூழ்ந்து இருநூறு குடிமக்கள் வாழ்கின்றார்கள். சல்லியில் வாழும் சைவமக்கள் அனைவரும் சேர்ந்து 1979ஆம் ஆண்டு மீண்டும் பெரும் பொருட்செலவில் ஆலயத்தில் புனருத்தாரணத் திருப்பணிகள் செய்து இரண்டாம்முறை மிகச் சிறப்பாகக் கும்பாபிஷேகம் செய்வித்தார்கள். இந்தக் கும்பாபிஷேகத்திற்குபின் பரம்பரைப் பூசகரின் பூசை முறையைக் கைவிட்டு லிங்கதாரிகளாகிய சங்கமக்குருக்கள்மாரைக்கொண்டு பூசை செய்வித்து வருகின்றார்கள். இரண்டாவது கும்பாபிஷேகத்தை சிவஸ்ரீ விஸ்வலிங்கக் குருக்களும், புலவர் வை. சோமாஸ்கந்தக் குருக்களும் சர்வசாதகராகவும், சர்வபோதகராகவும் பொறுப்பேற்று நடத்தினார்கள்.

இவ்வாலயத்தில் முற்காலத்தில் பலிகொடுக்கும் வழக்கமிருந்து வந்தது. இப்போது அந்தவழக்கம் நீக்கப்பட்டுள்ளது. ஆலயவாசலில் நடப்பட்டிருக்கும் களுமரத்தில் அலங்கார உற்சவத்தின் கடைசிநாள் வேள்வியில் ஒரு சேவலைக் களுவில் குத்தியெடுத்து பறக்கவிடுவார்கள். அது பறந்துசென்று கோவில் முகட்டிலிருந்து கூவிவிட்டுச் செல்வதாக நேரில் பார்த்தவர்கள் கூறுகின்றார்கள். வைகாசித் திங்களன்று இவ்வாலயத்தில் கும்பம் வைத்து அலங்கார உற்சவம் ஆரம்பமாகும். அன்று பரம்பரை பூசாரியில் அம்மாள் வந்து உருவாடும். அவர் மண்கலசத்தில் கும்பமெடுத்து, இருப்புக் கும்பத்தை ஆலயத்தினுள் ஸ்தாபிப்பார். இந்த நிகழ்ச்சியோடு வருடாந்த உற்சவம் ஆரம்பமாகும். தொடர்ந்து பத்து நாட்கள் உற்சவம் நடைபெற்றுப் பதினோராம் நாள் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

தீர்த்தோற்சவத்தன்றும் பரம்பரைப் பூசாரியார் ஆலயத்திலுள்ள இருப்புக் கும்பத்தை எடுத்துச் சென்று தீர்த்தமாடும் வழக்கம் இன்றும் இருந்துவருகின்றது. தீர்த்தத்திற்கு முதல்நாள் திருக்கோணமலையிலிருந்து பக்திப்பரவசமான பாதயாத்திரையொன்று வருடாவருடம் நடைபெற்று வருகின்றது. திருக்கோணமலையில் மடத்தடியிலுள்ள மாரியம்மன் கோவிலில் இருந்தும், படுக்கைப் பத்திரகாளி கோவிலில் இருந்தும் உப்புவெளி நடுப்பத்திரகாளி கோவிலில் இருந்தும், செல்வ நாயகபுரம் வைரவர் கோவிலில் இருந்தும் கும்பம், கரகம், பாற்செம்பு எடுத்துச் சல்லி முத்துமாரியம்மன் கோவிலுக்கு நேர்கடன் வைத்து நடந்து செல்வார்கள். ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும் பாற்காவடி, செடில்காவடி ஏந்தியும், வாயில் அலகிட்டுக் கொண்டும் செல்வார்கள். உருவேறி ஆடிச் செல்பவர்களையும் காணலாம். மேலே கூறப்பட்ட ஆலயங்களிருந்து கும்பம், கரகம், காவடிகள் புறப்படும் போது கூடவே மக்களும் கூட்டங்கூட்டமாகச் சேர்ந்து வருவார்கள். துலாக்காவடியும் இந்தப் பாதயாத்திரையில் சேர்ந்து செல்லும். இதனைப் பார்ப்பதற்கும், சல்லியம்மன் கோவிலுக்குச் செல்லுவதற்கும் மக்கள் திரண்டு வருவார்கள். எல்லோரும் சாரி சாரியாகச் செல்வதைப்பார்த்தாலே பக்திப் பரவசமுண்டாகும். இவர்களை உபசரிப்பதற்காக வீதியில் இடையிடையே தண்ணீர்ப் பந்தல்கள் வைத்திருப்பார்கள். எல்லோருக்கும் மோர், பாணக்கம் என்பன வழங்கி உபசரிப்பார்கள். இரண்டு கில்லோமீற்றர் தூரத்திற்கு அடியார்களின் தொடர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையீடில்லாமல் முன்னேறிச் செல்வது கண்கொள்ளாக் காட்சியாயிருக்கும். இப்படிச் செல்லும் அடியார்கள் சல்லியம்மன் கோவிலையடைந்து ஆலயப் பூசகரிடம் தமது நேர்கடனைச் செலுத்தித் தமது சங்கற்பத்தை நிறைவேற்றுவார்கள். மேளம், ராஜமேளம், உடுக்கு என்பனவற்றை இந்த யாத்திரையில் பக்தி உணர்ச்சியைத் தூண்டக்கூடிய விதமாகக் கையாளுவார்கள். உருவாடிச் செல்பவர்களுக்கு மந்திரப் பிரயோகங்களும், அத்துடன் காவியங்கள், காவடிச் சிந்துகளைப் பாடிக்கொண்டு செல்வார்கள். திருக்கோணமலையில் நடைபெறும் பக்தியாத்திரையாக வருடமொருமுறை இது நிகழ்ந்து வருகின்றது.

ஆலயத்தின் கருவறையில் முத்துமாரியம்மன் சிலாவிக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. மகாமண்டபத்தில் எழுந்தருளி விக்கிரகமிருக்கின்றது. தரிசனமண்டபத்தில் பலிபீடமும், அந்த மண்டபத்தின் ஈசானதிக்கில் வைரவருக்குத் தனி ஆலயமுமிருக்கின்றன. மண்டப வாசலில் களுமரமும், அருகே மணிக்கோபுரமுமுண்டு.

காலை, மாலை இரண்டு வேளையும் நித்தியபூசை நடைபெற்று வருகின்றது. நவராத்திரி, திருவெம்பாவை போன்ற காலங்களில் விசேடபூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன. வருடாந்த அலங்கார உற்சவம் நடைபெற்று தீர்த்தோற்சவம் நடைபெறும். அன்று அம்பாள் தீர்த்தமாடியபின் அருச்சனை நடைபெறும். அதன்பின் கண்ணகியம்மன் குளித்தி பாடுவார்கள். தொடர்ந்து சுண்ணமிடித்துத் துள்ளுமாவைத்து தீபாராதனை நடைபெறும். அதன் பின்புதான் அம்பாளைப் பீடத்தில் இருத்துவார்கள். இது இவ்வாலயத்தில் நடைபெற்றுவரும் சிறப்பு வழக்கமாகும். இந்த ஆலயத்தின் தெய்வ சாந்நித்தியம் இங்கு வைத்துப் பூஜிக்கப்படும் ஸ்ரீசக்கரத்தின் மாபெரும் சக்தியால் பேணப்பட்டுவருகின்றது. திருக்கோணமலையில் பல கோவில்களிலுள்ள ஸ்ரீ சக்கரங்கள் வரையப்பட்டவை. ஆனால் இவ்வாலயத்திலுள்ள ஸ்ரீசக்கரம் வார்ப்பினாலமைந்தது. சுமார் நூற்றைம்பது வருடங்களுக்குமுன் சிவஸ்ரீ கதிர்காமத்தம்பிக் குருக்கள் இந்தச் சக்கரத்தை ஸ்தாபித்தார். அவருக்குப்பின் முறையே சிவஸ்ரீ கண்ணமுத்துக் குருக்களும், சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்களும், சிவஸ்ரீ விஸ்வலிங்கக் குருக்களும், புலவர் வை.சோமாஸ்கந்தக் குருக்களும் ஸ்ரீசக்கர பூசை செய்துவந்துள்ளார்கள். இந்த வரலாற்றைத் தந்த புலவர் அவர்களுக்கும், திரு.இரத்தினசபாபதிப்பிள்ளை அவர்களுக்கும் முன்னை நாள் கிராமசபைத் தலைவரும் கல்வெட்டாய்வாளருமான திரு.நா.தம்பிராசா அவர்களுக்கும் நன்றி உரியதாகுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துமாரியம்மன் கோவில்
# கிளிவெட்டி

திருக்கோணமலை மாவட்டத்தில் கொட்டியாபுரப் பற்றில், மூதூரிலிருந்து பதினாறு கில்லோமீற்றர் தூரத்தில் கிளிவெட்டி என்ற சைவத் தமிழ்க் கிராமம் இருக்கின்றது. திருக்கோணமலையிலிருந்து இயந்திரப் படகில் கடல் மார்க்கமாக மூதூருக்குப்போய் அங்கிருந்து வெருகலுக்குச் செல்லும் தரைப்பாதை வழியாகக்கிளிவெட்டிக்குச் செல்லலாம். திருக்கோணமலையிலிருந்து கண்டிக்குச் செல்லும் நெடுஞ்சாலை மார்க்கமாகத் கந்தளாய்க்குப் போய், கந்தளாயிலிருந்து தரைப்பாதை வழியாகவும் கிளிவெட்டிக்குச் செல்லாம். கங்குவேலி, திருமங்கலாய், அகத்தியர் ஸ்தாபனம், ஈச்சிலம்பத்தை இலங்கைத்துறை, ஆனெய்த்தீவு முதலிய பல கிராமங்களுக்கு மத்தியில் கிளிவெட்டி அமைந்திருக்கின்றது.

கிளிவெட்டி முத்துமாரியம்மன் கோவில் சுமார் இரு நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னே கட்டப்பட்டது. சக்கரவர்த்திகுடி, வீரப்பணிக்கன்குடி, படையாண்டகுடி, கவுத்தன்குடி, பாட்டுவாளிகுடி, வண்ணார்குடி, பறையர்குடி, என்று சொல்லப்படுகின்ற ஏழு குடிமக்களும் வழிபாடு செய்யக் கூடியதாக இவ்வாலயத்தை அமைத்தார்கள். இருநூற்றைம்பது வருடங்களுக்குமுன் இவ்வூரில் கொடிய அம்மைநோய் பரவியதாம். மக்களிடத்திலே சாதி, குலம், குடி முதலிய உயர்வு, தாழ்வு மனப்பான்மை இருக்கலாம். ஆனால் அம்மை நோய் அந்த வேற்றுமைகளைப் பார்க்காது. அந்நோய் பல்லோரையுந்தான் பற்றிக்கொண்டது. இதனால் பாட்டுவாளி குடியில் வாழ்ந்த ஒரு பெரியார் அம்மைநோய்த் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக மாரியம்மனுக்கு நேர்த்தி வைத்து இந்த ஆலயத்தைக் கட்டினாராம். ஆரம்பத்தில் மண்ணால் சுவர்வைத்து வைக்கோலால் வேய்ந்து சிறிய கோவிலைக்கட்டி முத்துமாரியம்மனை ஸ்தாபித்தார்கள்.

திரு. வேலாயுதப் பாட்டுவாளியார் என்பவர் இந்த ஆலயத்தைத் தொடங்கி வைத்தார். திரு. கோணமலையார் என்பவர் விக்கிரகத்தைக் கொடுத்துதவினார். திரு.அம்பலவாணபிள்ளை என்பவர் கோவிலைக் கட்டிக்கொடுத்தார். முத்துமாரியம்மனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தாபித்து வழிபட்டு வருங்காலத்தில் அம்மைநோயும் நீங்கிவிட்டது. பாட்டுவாளியார்குடிப் பரம்பரையில் வந்தவர்கள் வழிவழியாகப் பூசைசெய்துகொண்டு வந்தார்கள். பின்னர் கிளிவெட்டி மக்கள் சேர்ந்து இவ்வாலயத்தைக் கல்லினாலே கட்டினார்கள். கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், தெரிசனமண்டபங்களைக் கொண்ட மடாலயமாக இவ்வாலயம் அமைக்கப்பட்டது. கருவறையில் சதுர்ப்புஜங்களோடுள்ள முத்துமாரியம்மன் சிலாவிக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. அர்த்தமண்டபத்தில் எழுந்தருளி விக்கிரகங்களுமுண்டு. தெரிசன மண்டபத்தில் சிம்மம் பலிபீடம் என்பன காணப்படுகின்றன. விநாயகருக்குத் தனியாலயம் இருக்கின்றது. மூன்றுகாலம் நித்திய பூசையும், நவராத்திரி, சிவராத்திரி, திருவெம்பாவை, பிள்ளையார்கதை, கந்தசஷ்டி முதலிய விசேட பூசைகளும் நடைபெற்று வருகின்றன. கும்பாபிஷேகத்தின் விழாவைச் சிறப்பு விழாவாகக் கொண்டாடுகின்றார்கள். இவ்வாலயத்திற்குப் பக்கத்தில் கிளிவெட்டி ஆறு ஓடிக்கொண்டிருக்கின்றது. கொடிய அம்மைநோய் நடைபெற்ற காலத்தில் முத்துமாரியம்பாளுடைய அருளால் நோய்பரவாது தடுக்கப்பட்டது போல, கடும் வரட்சி ஏற்பட்ட காலத்தில் இந்த அம்பாளைக் கிளிவெட்டி ஆற்றில் வைத்து அபிஷேகம் செய்தபோது மழை கொட்டிய அதிசயமும் இங்கு நிகழ்ந்துள்ளதாம். 1947ஆம் ஆண்டு ஊர்மக்கள் கூடி ஆலயப்புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்து வைத்துள்ளார்கள். சிவஸ்ரீ சுப்பிரமணிய சர்மா ஆலயத்தில் பூசை செய்துகொண்டிருக்கின்றார். பெரியார் திரு. மயில்வாகனம் வைரமுத்து என்பவர் இவ்வாலய விவரங்களைத் தந்துதவினார். அன்னாருக்கு நன்றி உரியதாகுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செண்பக நாச்சியம்மன் கோவில்
# இலங்கைத்துறை

திருக்கோணேஸ்வரத்திற்குத் திருப்பணிசெய்த குளக்கோட்டு மன்னன் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட சிந்து நாட்டவர்களைப் பண்டு குடியமர்த்திய இடம் இலங்கைத்துறை. கொட்டியாபுரப்பற்றிலுள்ள மூதூரிலிருந்து இருபத்தொன்பது கில்லோமீற்றர் தூரத்தில் ஈச்சிலம்பத்தைக் கிராமத்திற்கூடாகச் சென்று இவ்வூரை அடையலாம். இலங்கையின் கிழக்குக் கரையோரப் பிரதேசங்களைத் தமிழ் மன்னர்கள் ஆண்ட காலத்தில் இது துறைமுகமாயிகுந்து வந்தது. இதனால் இவ்வூர் இலங்கைத்துறை எனப் பெயர் பெற்றது. இப்போது இது ஒரு சிறிய பின்தங்கிய கிராமமாயிருக்கின்றது.

இந்தியாவிலிருந்து கிழக்கு மாகாணத்திற்குக்குக் கொண்டு வரப்பட்ட மூன்று அம்மன் விக்கிரகங்களில் செண்பகநாச்சியம்மன் விக்கிரகமும் ஒன்று. செண்பகப் பூப்போல அழகுப் பொலிவோடு இருந்ததால் செண்பகநாச்சி எனப் பெயரிட்டார்களாம். இந்த அம்மனை இலங்கைத்துறையில் இறக்கியபோது அங்கு வாழ்ந்த சிந்து நாட்டவர்கள் கோவில்கட்டிப் பிரதிஷ்டை செய்தார்கள். மற்ற இரண்டு விக்கிரகங்களில் ஒன்று சம்பூரிலும், மற்றது மட்டக்களப்பிலுள்ள தம்பிலுவில் என்ற இடத்திலிருப்பதாகவும் கூறுகின்றார்கள். இலங்கைத்துறையில் கல்லினால் கோவில் கட்டிச் செண்பகநாச்சியம்மையாரைத் தாபித்திருந்தார்கள். அக்கோவிலுக்கு எதிரே ஏழு குளங்கள் வெட்டப்பட்டனவாம். அங்கு வாழ்ந்து வந்த சக்கரவர்த்தி குடி, வீரப்பணிக்கன்குடி, படையாண்டகுடி, பறையர்குடி என்னும் ஏழு குடிமக்களுக்கும் அந்தக் குளங்கள் தனித்தனியே உரிமையுடையதாயிருந்ததாம். ஒரு குடிக்குரிய குளத்தை மற்றக் குடியினர் பாவிப்பதில்லை. தொழில்வகையால் அன்று இனம் பிரிக்கப்பட்ட குடிமக்கள் காலக்கிரமத்தில் உயர்வு தாழ்வுத் தடிப்பில் ஊறியிருந்தார்கள். இன்று அந்த வழமைகள் மறைந்துகொண்டு வந்தபோதிலும், வாழ்வு தாழ்வுச் சம்பவ சந்தர்ப்பங்களில் தலைதூக்கி அடங்குகின்றது.

களுவன்கேணியில் வாழ்ந்துவந்த வேடர்கள் சீர்திருந்தி வேறு கிராமங்களுக்குச் சென்று குடியேறியபோது, அவர்களில் ஒருசாரார் இலங்கைத்துறையிலும் குடியேறினார்கள். அக்காலத்தில் இலங்கைத்துறையில் ஏற்பட்ட இயற்கைத் தாக்கங்களால் அங்குவாழ்ந்த சிந்துநாட்டு மக்கள் செண்பகநாச்சி அம்மனை எடுத்துவந்து ஈச்சிலம்பத்தைக் கிராமத்தில் புதிதாக ஆலயம் அமைத்து ஸ்தாபித்து வழிபட்டு வந்தார்கள். இப்போது அந்த அம்மன் ஈச்சிலம்பத்தையில் இருக்கின்றது. தினமும் பூசைசெய்து வழிபாடு நடைபெறுகின்றது. முன்னர் செண்பகநாச்சியம்மன் ஆலயம் இருந்த இடத்தில் இப்போது ஒரு அம்மனை வைத்து செண்பகநாச்சியம்மன் என்றபெயரில் வேடர்பரம்பரையில் வந்த சீர்திருந்திய மக்கள் வழிபட்டு ஆதரித்து வருகின்றார்கள். முன்னே கூறப்பட்ட குளங்களிலிருந்து தாமரைப்பூ எடுத்து அம்பாளுக்குப் பூசைசெய்து வருகின்றார்கள். இலங்கைத்துறையிலும், ஈச்சிலம்பத்தையிலும் வாழ்கின்ற மக்கள் சிறந்த விவசாயிகள். பழம் பெருமை பேசுவதில் சளைக்காத மக்கள், கோவிலைப்பராபரிப்பதில் அலுத்துக் களைத்துச் சோர்ந்திருப்பது வேதனையைத் தருகின்றது. ஆலயத்தைச் சீரமைத்துச் சிறப்பாக நடத்த முன்வரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி விநாயகர் ஆலயம்

இந்த ஆலயம் திருக்கோணமலைப் பட்டினத்தின் மத்தியில் மக்கள் குடியிருப்பு நிறைந்த பகுதியில் அமைந்திருக்கின்றது. திருக்கோணமலையில் மிகப்பிரசித்திவாய்ந்த ஸ்ரீ பத்திரகாளி அம்பாளுடைய ஆலயத்திற்கருகே அதன் ஈசானதிக்கில் அமைந்திருப்பது இவ்வாலயத்திற்கு ஒரு தனிச்சிறப்பாகும். ஆலடி விநாயகர் ஆலயத்திற்கு ஈசானதிசையில் ஈழத்தில் மிகப் பிரசித்திபெற்ற பழம்பெரும் ஷேத்திரமாகிய திருக்கோணேசர் ஆலயம் தெட்சணகயிலாயம் என்ற திருப்பெயருக்கு லெட்சணமாக மலையுச்சியில் காட்சியளிக்கின்றது. ஆலடி விநாயகராலயத்தை வழிபடும் அடியவர்கள் அங்கு நின்றபடியே திரும்பி நின்று கோணேசப் பெருமானைக் கைகூப்பி வணங்குவதை காணக்கூடியதாயிருக்கின்றது.

இவ்வாலயத்திற்கு வடக்குத்திசையில் சுமார் 200 யார் தூரத்தில் ஐயனார்கேணி என்ற ஓர் இடம் இருக்கின்றது. தற்போது அந்த இடம் மக்கள் குடியிருப்பாக மாறி, வீதிக்கு மாத்திரம் ஐயனார்கேணி வீதி என்றபெயர் இருந்துவருகின்றது. சுமார் 100 வருடங்களுக்குமுன் பன்னகாமத்திலிருந்து (மாத்தளை) கூடாரவண்டிகளில் வியாபாரப் பொருட்களை ஏற்றி வந்து திருக்கோணமலையில் வியாபாரம் செய்யும் வழக்கம் இருந்து வந்தது. வியாபாரத்திற்காக வரும் வியாபாரிகள் மாட்டுவண்டிகளோடு ஐயனார்கேணி என்ற இடத்தில் தங்கி முகாமிட்டு வந்தார்கள். அங்கு ஒரு கேணியும், கேணியடியில் பிள்ளையாரும் இருந்தது. உள்ளூர் வியாபாரிகளோடு, வெளியூர் வியாபாரிகளும் தாங்கள் முகாமிட்டுவரும் கேணியடிப்பிள்ளையாரைப் பக்தியோடு வழிபட்டுப் பூசைசெய்துவந்தார்கள். காலப்போக்கில் வியாபார நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட அந்த இடம் மக்கள் குடியிருப்பாக மாறுதலடைந்தது. இதனால் சுமார் 80 வருடங்களுக்குமுன் இங்கிருந்த விநாயகரை எடுத்துவந்து ஸ்ரீ பத்திரகாளி கோவிலுக்கருகேயிருந்த ஆலமரத்தடியில் குடிசைக்கோவில் ஒன்று கட்டி அதில் வைத்து வழிபட்டுவந்தார்கள். ஆலமரத்தடியில் வைத்து வழிபட்டுவந்தால் ஆலடிவிநாயகர் என்று அழைத்து வந்தனர். அக்காலத்தில் திரு. சின்னையாக்குருக்கள் என்பவர் பூசைசெய்துவந்தார். திரு. சின்னையாக்குருக்களவர்கள் 1905ஆம் ஆண்டில் மடாலயம் ஒன்று அமைத்து, அதில் விநாயகரைப் பிரதிஷ்டைசெய்து பூஜை செய்து வந்தார்.

காலத்திற்குக் காலம் இவ்வூர் தர்மவான்கள் ஆலயத்திற்கு மகாமண்டபம், தரிசனமண்டபங்களைக் கட்டிக்கொடுத்தார்கள். 1924ஆம் ஆண்டில் எழுந்தருளிவிநாயகரைப் பிரதிஷ்டைசெய்து, அன்று தொடக்கம் அலங்கார உற்சவத்தை நடாத்தி வருகின்றார்கள். 1945ஆம் ஆண்டு முதன் முதலாக சம்புரோட்சண கும்பாபிஷேகம் நிறைவேறியது. 1959ஆம் ஆண்டு திருக்கோணமலைவாழ் சைவப் பெருங்குடி மக்களின் உதவியினால் முன் மண்டபமும் சிறிய கோபுரமும் அமைக்கப்பெற்று, ஆலடிவிநாயகராலயம் அழகுப்பொலிவு பெற்றது. சிறுமடாலயமாயிருந்து வளர்ச்சியடைந்த இவ்வாலயத்திற்கு சைவப்பெருமக்களின் உதவியினால் 1970ஆம் ஆண்டில் கற்பக்கிரகம் புனருத்தாரணம் செய்யப்பெற்று தூபியமைத்து கருவறையில் புதிய விநாயகத் திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பெற்று, 28-1-72 இல் மகாகும்பாபிஷேகம் நிறைவேறியது. இப்பெரும்பணியை திரு.வே.கு.சுப்பையாக் குருக்களின் மகனாகிய திரு.சு.கு.முத்துக்குமாரசாமிக் குருக்களவர்கள் முன்னின்று நடாத்திவைத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயம் தற்போது கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், தரிசனமண்டபம், கோபுரத்தை உள்ளடக்கிய வெளிமண்டபங்களைக் கொண்டது. கற்பக்கிரகம் அழகிய சுதைச்சிற்பவேலைகளையுடைய ஸ்தூபியைக்கொண்டது.

அபயம், வரதம், அங்குசம், பரசம் தாங்கிய திருக்கரங்களையுடைய சதுர்ப்புஜ விநாயகப்பெருமான் ஆசனத்தில் இருந்தபாவனையில் கற்பக்கிரகத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார். மகாமண்டபம் இவ்வாலயத்தில் வசந்தமண்டபமாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இம்மண்டபத்தினுள் பொதுமக்கள் போவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. இம்மண்டபத்தின் வடக்குப்பக்கமாக அமைக்கப்பட்டுள்ள பீடத்தில் பஞ்சலோகத்தினாலாகிய விநாயகப்பெருமான், பஞ்சமுக விநாயகர், மகாவிஷ்ணு, சுப்பிரமணியர் ஆகிய மூர்த்திகள் திருவோலக்கங்கொண்டுள்ளனர். இந்த மூர்த்திகளுக்கு நித்தியதீபம் ஏற்றப்பட்டபடி இரண்டு பாவைவிளக்குகள் வசந்தமண்டபத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன. இவ்வாலயத்தின் வரலாற்றுக்குரியதும், ஐயனார்கேணியிலிருந்து கொண்டுவரப்பட்டதுமாகிய விநாயகப்பெருமானும், ஒரு சிவலிங்கமும் இம்மண்டபத்தினுள் வைத்துப் பூஜிக்கப்பட்டு வருகின்றன. தரிசனமண்டபத்தில் மூஷிகமும், பலிபீடமும் இருக்கின்றன. இம்மண்டபத்தின் சுவர்களில் கஜமுகன் போர், விநாயகசஷ்டி விரதம், அனந்தன்சாபநீக்கம் பற்றிய புராணக் கதைகளை விளக்கும் அழகிய வர்ணச் சுவரோவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. மகாமண்டப வாசலை பன்னிரண்டடி உயரமும், பத்தடி அகலமுங்கொண்ட பித்தளையாற் செய்யப்பட்ட அழகிய பெரிய திருவாசியொன்று அலங்கரித்துக்கொண்டிருக்கின்றது. தெரிசனமண்டபத்தின் வடகிழக்குத் திசையில் பைரவரும், நாகதம்பிரானும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. சுமார் முப்பத்தைந்தடி உயரமுடைய சிறிய கோபுரத்தைக்கொண்டது இவ்வாலயம்.

இவ்வாலயத்தில் திருவனந்தல், காலைச்சந்தி, உச்சிக் காலம், சாயரட்சை ஆகிய நான்குகாலப் பூஜைகள் நடைபெற்று வருகின்றன. சித்திராபூரணையைத் தீர்த்ததினமாகக் கொண்டு பத்து நாள் அலங்கார உற்சவமும், மாதசதுர்த்தி, விநாயகவிரதம், கஜமுகாசூரசம்மாரம், சர்வாலயதீபம், திருவெம்பாவை, சுவர்க்கவாயில் ஏகாதசி, தைப்பூசம் முதலியனவும் நைமித்திய பூஜை வழிபாடுகளாக நடைபெற்று வருகின்றன. மார்கழி மாதம் முழுவதும் திருப்பள்ளியெழுச்சிப் பூசையும், சங்காபிஷேகமும் இங்கு சிறப்பாக நடைபெற்று வருகின்றன. சித்திராபூரணையன்று ஆலடிவிநாயகப் பெருமான் கடற்தீர்த்தம் ஆடச்செல்வார்.

கிழக்குமாகாணத்தில் இவ்வாலயத்தில்தான் முதன்முதல் பஞ்சமுகவிநாயகர் பிரதிஷ்டைசெய்யப்பட்டுள்ளது. ஈசானத்திருமுகத்தை மத்தியில் மேல்நோக்கிய பாவனையில் வைத்து, தத்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் ஆகிய நான்கு திருமுகங்களையும் நான்குதிக்கையும் நோக்கியிருக்கும் படியாக இந்தப் பஞ்சமுகவிநாயகர் அமைக்கப்பட்டுள்ளார். இத்திருவுருவத்திற்கு விநாயகவிரதகாலம் இருபத்தொரு நாளும் பஞ்சமுகார்ச்சனை நடைபெற்றுவருகின்றது. இத்திருவுருவம் 1980 ஆம் ஆண்டு ஆவணிமாதம் 21ஆம் திகதி பிரதிஷ்டை செய்யப்பெற்று கும்பாபிஷேகம் நடைபெற்றது. தற்போது இவ்வாலய தர்மகர்த்தாவாக ஸ்ரீ.சு.கு.முத்துக்குமாரசாமிக் குருக்களும், அவருடைய மைந்தர் ஸ்ரீ.கு.சுந்தரலிங்க தேசிகரும் ஆலயத்தைச் சிறப்பாக நடாத்தி வருகின்றார்கள். திருக்கோணமலைப் பட்டினத்தில் விநாயகராலங்கள் பல இருந்தபோதிலும் இவ்வாலயத்தில் எண்ணிய பொருளெல்லாம் எளிதில் முற்றுறச் செய்யும் கண்ணுதலுடைய களிற்று மாமுகப்பெருமான் சாந்நித்தியமாயிருந்து அடியார்களுக்கு வேண்டியதை ஈந்து அருள்பாலித்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை ஆலடி விநாயகர் திரு ஊஞ்சல்

ஆக்கியோன்:

சிவஸ்ரீ கணேசஐயர் அவர்கள்

திருக்கோணமலை

## காப்பு

சித்தி வரும் முத்தி தரும் செந்தமிழ் நாத் தேன்பருகும்
சுத்த வருட் சோதி யொளி தோன்றி வரும்— நித்தம்
அழகு செறி கோணமலை ஆலடியிலே யமரும்
அழகு மத வேழ நினைத்தால்.

சீரேறு மேரு கிரிச் சிகர மாகுந்
திரிகூடா சலமதனிற் கோயில் கொண்ட
காரேறு குழல்மாதர் சித்தி புத்தி
கவினு மிருபா மமர் கணேசர் மீது
ஏரேறு நற்றவிழில் ஊஞ்சல் பாட
இசைவுறு நல்லருள் பொழிய வென்றே நாளும்
தாரேறு மறுகு மலர் முடியிற் சூடுந்
தந்தி முகனிரு சரணந் தலைமேற் கொள்வாம்.

தங்க நவரெத்தின மண்டபத்தினூடே
தயங்கு பிரணவ மென்னும் பலகை மாட்டி
துங்கமிகு நால்வேத விட்டம் பூட்டித்
துலங்கு மாகம மெனுஞ் சங்கிலிகள் மாட்டி
திங்களா தித்தரிரு விதானம் கூட்டிச்
செய்ய வரமகளிர் வடந் தொட்டாட்ட
அங்கணமார் திருக்கோணை யாலின் கீழ்வாழ்
வல்லபை நன்மண மகனே யாடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரகத மாணிக்க ரத்னப் பதக்கமாட
மருவு புயத்துத் தரிய மசைந்தே யாட
கரமத னிற் கங்கணங்கள் கவின் பெற்றாட
காட்டுமொரு கையினி லங்குசமுமாட
பரவுமணி மருப்புடன் மோதக முமாட
பயில் மார்பில் முந்நூ லாபரணமாட
வரமுதவு திருக்கோணை யாலின் கீழ்வாழ்
வல்லபை நன்மண மகனே யாடீரூஞ்சல்.

தொந்தி வயிறுடன் துதிக்கை துலங்கியாட
தூயவரை ஞான் சதங்கை துவன்றேயாட
வந்து பணி பாதசரம் ஒலி செய்தாட
மருவு தண்டை கொலிசு முடைவாளுமாட
இந்து நுதற் சித்திபுத்தி களென் றோதும்
இனிய வரிவையர் மருங்கி விருந்தேயாட
மந்தரநேர் திருக்கோணை யாலின் கீழ்வாழ்
வல்லபை நன்மண மகனே யாடீரூஞ்சல்.

பன்னுமமரர்கள் புட்ப மாரி பெய்ய
பரவு கின்னரர் களிசை பாடல் செய்ய
மின்னுமணி யரம்பையர் நன்னடனஞ் செய்ய
வேதநந்தி வேத்திரத்தால் விலகச் செய்ய
துன்னு மயிராவணத்திற் சித்தி புத்தி
துலங்க வரும் பவனியதி யழகு செய்ய
மன்னு மெழிற் திருக்கோணை யாலின் கீழ்வாழ்
வல்லபை நன்மண மகனே யாடீரூஞ்சல்.

மங்களமார் சங்கமுர சதிர்ந்தே யோங்க
வயங்கு தித்தி வீணைகுழல் மலிந்து வீங்க
இங்கொலி செய் மத்தள தாளங்க ளோங்க
இனிய தங்க நாதசுரம் இலங்கித் தேங்க
பங்கமில் நற்கன்னியர்கள் பண்கள் தாங்க
பகரரிய சங்கீதம்பாடி யோங்க
வங்கமலி திருக்கோணை யாலின் கீழ்வாழ்
வல்லபை நன்மண மகனே யாடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை ஆலடி விநாயகர் திரு ஊஞ்சல்

சந்திரசேகரர் தலைமை தாங்கி நிற்கத்
தகைமை பெறு நந்திபிரம் பேந்தி நிற்க
சுந்தரமார் சுப்ரமண்யர் வில்லிகாரி
தொடர்ந்து பலபணி செய்து சூழ்ந்து நிற்க
கந்தருவர் கின்னரர் கிம்புருடர் நாகர்
கணாதிபர்க ளெங்கணு நற்கரும மேற்க
வந்துனை செய் திருக்கோணை யாலின் கீழ்வாழ்
வல்லபை நன்மணமகனே யாடீரூஞ்சல்.

மின்னலிடைச் சசிகவிகை கையி லேந்த
விளங்கும் ரம்பையர் கவரி வீசிமுந்த
மன்னுமர மகளிர் பொற்களாசி யேந்த
வாளியுமை நாமகளுமாசி சிந்த
பின்னலுறு பூஞ்சடையார் தெய்வயானை
பேசு வள்ளி நாயகி யாலாத்தி யேந்த
வன்ன நகர் திருக்கோணை யாலின் கீழ் வாழ்
வல்லபை நன்மண மகனே யாடீரூஞ்சல்.

வக்ரதுண்ட விநாயகரே யாடீரூஞ்சல்
வல்லபையாள் நாயகரே யாடீரூஞ்சல்
விக்கினராசப் பெருமா னாடீரூஞ்சல்
விளங்கு சிந்தாமணிப் பெயர் ராடீரூஞ்சல்
தொக்க கஜான னப்பரனே யாடீரூஞ்சல்
தூமிரகேதுப் பெருமா னாடீரூஞ்சல்
மக்கள்புகழ் திருக்கோணை யாலின் கீழ் வாழ்
வல்லபை நன்மண மகனே யாடீரூஞ்சல்.

பாலசந்த்ர விநாயகரே யாடீரூஞ்சல்
பன்னுமதோற்கடப் பெருமா னாடீரூஞ்சல்
நீலமயூரேசபிரா னாடீருஞ்சல்
நின்மல நற்கணபதியே யாடீரூஞ்சல்
தால துண்டி விநாயகரே யாடீரூஞ்சல்
தாசர்துதி கணேசரே யாடீரூஞ்சல்
மால்வரை நேர் திருக்கோணை யாலின் கீழ் வாழ்
வல்லபை நன்மண மகனே யாடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை மாவட்டத் திருத் தலங்கள்

ஆலமருங் குருமூர்த்தி யடிகள் வாழி
ஆகம வேதங்கள் புராணங்கள் வாழி
சூலமொடங்குச பாசம் வாழி வாழி
துலங்கு சித்தி புத்தி சுகந்தோன்ற வாழி
ஞாலமதிலா னினங்கள் நயந்து வாழி
நவில் கற்பு மங்கையர்கள் நாளும் வாழி
வேலைசூழ் வையக மன்னவரும் வாழி
வேழமுகப் பெருமானே வாழி வாழி.

### எச்சரிக்கை

சிவனார்தரு முதல்வா ஜெக தீசா எச்சரிக்கை
தேவாலடி வாழு மெங்கள் செல்வா எச்சரிக்கை

பவமோசன கருணாகர பரனே எச்சரிக்கை
பல்லாயிரங் கணங்கள் தொழும் பாலா எச்சரிக்கை

தவமே யென்னவுன்சேவை செய் தமியேமை யாட்கொள்ளுஞ்
சாமி சிவகாமி மகிழ் தனையா எச்சரிக்கை

முன்னாட் கிரி தன்னில் நல்ல முத்தமிழினடைவை
அந்நாளெ ழுதிய காரணா அமலா எச்சரிக்கை
மனதிற் பக்தியூன்று மன்பர் வினைதீர்த்ததன் பயனாம்
கனமார்பத மூன்று மருள் கர்த்தா எச்சரிக்கை

தினமே பணிவோரைக் கழல் சேர்ப்பாய் எச்சரிக்கை
திரிகோணை நன்னகர் கற்பக தேவே எச்சரிக்கை.

### பராக்கு

திருமருவு கோணைவளர் தேவே பராக்கு
செம்பு திருவாலடி வாழ் தேவே பராக்கு
பரவு மடியவர் கடுயர் தீர்ப்பாய் பராக்கு
பஞ்ச பாண்டவர்க்கருள் செய் பரனே பராக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை ஆலடி விநாயகர் திரு ஊஞ்சல்

வரமுதவ வீற்றிருக்கும் வள்ளல் பராக்கு
மால் மருக முருக முன்னவனே பராக்கு

தந்தை தமச் சிறுத்த தனையா பராக்கு
தானவரை வேரறுத்த சாமி பராக்கு

முந்து ஔவை பூசை முற்று மேற்றாய் பராக்கு
மூல மந்திரமான முதல்வா பராக்கு.

### லாலி

லாலி லாலி லாலி லாலி லாலி
லம்போதர சம்புசுத லாலி லாலி

வேழ முக ஐங்கரனே லாலி லாலி
வேத நாதகீத பர லாலி லாலி

சிந்தித்த அடியார்க் கருள் செய்வாய் லாலி
அங்குச பாசங் கொண்டமர் ஆதி லாலி

கயமுகனை வீடியருள் கலா லாலி
கங்கை பெற்றெடுத்த வைந்துகைய லாலி

கோணமலை யாலடி வாழ் கோவே லாலி
கூறுபவம் நீறுபடக் கொய்வாய் லாலி.

### மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் ஜெய ஜெய
மங்களம் மங்களம் மங்களம்

தங்கமாத கும்பமுள
தும்பிமுக வைங்கரற்கு
அங்குச பாசம் பிடிக்கும்
அணிமருப் பேரம்பருக்கும் (மங்களம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லபை மணாளருக்கும்
மாதுமையாள் பாலருக்கும்
சொல்லடியார் வேண்டு வரம்
சோர்விலாது ஈபவற்கும் (மங்களம்)

கயமுகா சுரனை யன்று
காய்ந்த வாகு வாகனர்க்கு
நலமுட னாலடியில் வாழ்
நாயகர் முக்கண்ணருக்கு (மங்களம்)

சீர்கொள் திரிகோணமலை
சேரும் பல மாந்தருக்கும்
தேவர் மோத கஸ் தரடி
சேவை செய்யுந் தாசருக்கும் (மங்களம்)

*மங்களம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி விநாயகர்
# திருப்பள்ளியெழுச்சி

ஆக்கியோன்:
கழகப் புலவர் -பெ.பொ.சிவசேகரனார் அவர்கள்
திருக்கோணமலை

போற்றியாம் நினைத்தவை முடித்திடும் பொருளே
புண்ணியா நின்புகழ் பரவுதற் கென்றே
ஏற்றஇப் பிறவியில் நின்னருள் பெறுமா (று)
இவ்விடம் வந்தனம்; பருதியும் வானில்
தோற்றினன்; புவியினை மூடிய இருளுந்
தொலைவினிற் போயது; தொன்மைசேர் கோணை
ஊற்றென ஆலடி உவந்தருள் கின்ற
உயிர்க்குயி ரே பள்ளி எழுந்தரு ளாயே.

சேவல்கள் கூவின; சிலம்பின புட்கள்;
சீரணி முரசுகள் முழங்கின எங்கும்;
நாவல ராகிய அந்தணர் ஓதும்
நான்மறை யிசையினின் றெழுந்தது நாதம்;
தேவர்தம் வாழ்த்தொலி பரந்தது வானில்
திசையெலாஞ் சங்கினம் முழங்கின; அன்பர்
ஆவலோ டடைந்தனர் கோணையம் பதிசேர்
ஆலடி யாய்பள்ளி எழுந்தரு ளாயே.

மாலயன் தேடியுங் காணுதற் கரிய
மதியணி சடைமுடி எம்பெரு மானில்
பாலக னாகிய பழமைப் பொருளே
பாவலர் நாவலர் புகழ்முதற் பொருளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாலமீ துயர்ந்தநற் கோணமா மலையில்
நம்பினோர்க் கருள்செய்யும் ஞானமா மலைஇய
ஆலடி யாய்அடி யவர் தமக் கெளியாய்
ஆருயிரே பள்ளி எழுந்தரு ளாயே.

பூமலர் ஏந்திய கையினர் ஓர் பால்
புகழினைப் பண்ணினில் இசைப்பவர் ஓர்பால்
பாமலர் கொண்டடி பரவுநர் ஓர்பால்
பணிந்துளங் கசிந்து உருகுநர் ஓர்பால்
ஓமெனும் மந்திரம் ஓதுநர் ஓர்பால்
உன்னருட் கொடையினுக் கிரங்கினர் கரணாய்
ஆமலி கோணையம் பதிய மர்ந் தோனே
ஆலடி யாய்பள்ளி எழுந்தரு ளாயே.

நீதியாய் நிமலனாய் நித்தனாய் எங்கும்
நிறைந்திட நின்றபே ரறிவுமாய் வாழ்வின்
சோதியாய்ச் சுடரொளிப் பிழம்புமாய் அழியாத்
தோற்றமாய்ப் பேரருட் கருணையு மாகி
ஓதுதற் கரியதாய்க் கோணையம் பதியில்
உறைந்தருள் தெய்வமாய் உலகினுக் கெல்லாம்
ஆதியாய் நின்றசீர் விநாயக மணியே
ஆலடி யாய்பள்ளி எழுந்தரு ளாயே.

வேழமா முகத்தெழில் காண்பதற் காக
விரைந்தனர் அடியவர் விடிவதன் முன்னே
காழியர் பெருமகன் திருவுளம் மகிழ்ந்து
கனிந்தருள் திருமறைப் புகழினை உடைய
ஈழ மா மணித்திரு நாட்டினில் இயற்கை
எழில்நலங் கெழுமிய முதுபதி யாய
ஆழிசூழ் கோணையம் பதியமர்ந் தோனே
ஆலடி யாய்பள்ளி எழுந்தரு ளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலடி விநாயகர் திருப்பள்ளியெழுச்சி

காலையும் மாலையும் நண்பகற் போதும்
கருத்துடன் நின்திரு வுருவினைத் தீண்டி
பாலையும் பழத்தையும் அமுதையும் படைத்துப்
பரிவுடன் செய்திடும் பூசனை ஏற்போய்
வேலவன் தனக்கருள் புரிந்திட அன்று
வேழமாய் வள்ளிமுன் விளங்கிய துணையே
ஆலயத் தமர்ந்தருள் கோணையம் பதியோய்
ஆலடி யாய்பள்ளி எழுந்தரு ளாயே.

ஓமெனும் மந்திர ஒலியினை எழுப்பி
உலகெலாம் உன்னடி பரவுதல் கேளாய்
காமமுங் குரோதமும் அகன்றிட உன்றன்
கழலடி தஞ்சமென் றடைந்தனர் நின்பால்
பூமலி கோணையம் பதியினில் வாழ்வோர்
புகழுற ஆலடி அமர்ந்தருள் வோனே
நாமகள் திருமகள் தொழுபரம் பொருளே
நாயகனே பள்ளி எழுந்தரு ளாயே.

உலகினில் முதன்மொழி ஆகிய மொழியில்
உன் புகழ் பாடிடும் அடியவர் தமக்குப்
பலமுறை அருளிய நின்னருட் பண்பை
பார்த்துன தருள்பெறக் காத்துநிற் கின்றோம்
நிலவுமிழ் பிறைமதிச் சடையணி பெருமான்
நினைந்திட உமையவள் களித்திட உதித்தோய்
அலகில் நற் கோணையம் பதியமர்ந் தோனே
ஆலடி யாய்பள்ளி எழுந்தரு ளாயே.

குறைவிலாக் கோணையம் பதியினில் அன்பர்
கூடிநின் றுன்பதம் தொழுதிட முன்னோர்
நிறைவுடன் வைத் தசீ ராலடி அதனில்
நீயருள் வழங்கிடும் மாண்பினைக் கேட்டு
நறுமலர் ஏந்திநாம் வந்துநிற் கின்றோம்
நாதமே நினைத்தவை முடித்திடும் நலமே
இறைவனே ஈசனே எம்பெரு மானே
இன்னுயிரே பள்ளி எழுந்தரு ளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை
# ஆலடி விநாயகர் ஆலயம்
# ஸ்ரீ லெட்சுமி நாராயணர் திருவூஞ்சல்

*ஆக்கியோன்:*
ஞானசிரோன்மணி -பண்டிதர் இ.வடிவேல்

## காப்பு

நீலவண்ணக் கண்ணன் நெடுமால் திருவடிமேல்
கோலத் திருவூஞ்சல் பாடுதற்கு– ஆலடிவாழ்
சீலமுறுஞ் சித்தி விநாயகனே செய்யதமிழ்
மாலைதனைப் பாடவருள் தா.

## நூல்

அணியரங்க மேறி உலகாளும் மாலே
ஆதியே அமலனே அயனை யுந்தன்
மணிவயிற்றுக் கமலமதி லீன்று இந்த
மண்ணினொடு விண்படைக்க வைத்த தேவே
மணிவண்ணா திருமகளை மார்பிற் கொண்டு
மண்மகளைத் திருவடியில் வைத்துகந்து
அணிகொளுயர் அனந்தன்மேற் பள்ளி கொள்ளும்
ஆதிநாராயணப் பெருமாள் ஆடீருஞ்சல்.

ஆலிலைமேற் பாலகனாய்ப் பள்ளி கொண்டாய்
அண்டமெலா முண்டதனை ஆண்டு கொண்டாய்
பாலமுதம் பொழிந்துலகைப் புரக்குந் தெய்வப்
பசுக்களை நீ காக்க மலை குடையாய்க் கொண்டாய்
ஞாலமெலா நடுங்கவொலி யிசைக்கும் பாஞ்ச
சன்னியநற் சங்கதனைக் கையிற் கொண்டாய்
சீலமுறு சக்கரத்தா லெத்திசையும் காக்கும்
சீரோங்கு நாரணனே ஆடீருஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரனை ராவதத் தோடிங்கு வந்து
இணையடிகள் தொழுதேத்தி இறைஞ்சி நிற்க
அந்தரத்து அமரர் திருக் கூட்டமெல்லாம்
அடியிணையை அர்ச்சித்து அமர்ந்திருக்க
மந்திரத்தால் முனிவரோடு இயக்கர் நாகர்
வித்யாதரர் தாமும் வியந்து பாட
சுந்தரஞ்சேர் சௌபாக்ய லெட்சுமியினோடு
சுரர்பரவும் நாரணனே ஆடீருஞ்சல்.

ஈரேழுலக மெல்லாம் நீயேயானாய்
ஈரடியாலுலகளந்து ஈசனானாய்
பாரெல்லாம் ஆண்ட பலிச் சக்ரவர்த்தி
படியிலுன தோரடிக் கீழ் பணியச் செய்தாய்
பேரேறே யுனையெதிர்த்த இலங்கை வேந்தன்
புலம்பியழப் போர்தொடுத்தே மடியச் செய்தாய்
கார்வண்ண மேனியனே கம்சன் மாளக்
கணைதொடுத்த நாரணனே ஆடீருஞ்சல்.

உந்திக் கமலமதிற் பிரமன் தோன்றி
உலகோடுயிர்களையும் படைக்கச் செய்தாய்
நந்தகோபன் மகனாய் வந்துதோன்றி
நப்பின்னையாள் தன்னை நயந்து கொண்டாய்
கந்தங் கமழ்ந்தெழவே கடைந் தெடுத்த
கனிவுறு நல்வெண்ணெய் நிறை கலங்கள் தன்னை
உந்தித்துளாவி எடுத்துண்ட கண்ணா
உலகளந்த நாரணனே ஆடீருஞ்சல்.

ஊர்களோ ரைந்தேனும் உவந்து கேட்டு
உன்மத்தனாந் துரியோதனன் பாற் சென்று
பார்புகழ்ப் பாராண்ட பாண்டவர்க்காய்
பாதமலர் நோவெடுந் தூது சென்றாய்
கார்வண்ண மேனியனே கமலக் கண்ணா
காண்டீப மேந்திவரு பார்த்தனுக்காய்த்
தேர்வண்ண மோட்டியருங் கீதை யோதும்
திருமாலே நாரணனே ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் மணிவண்ணா ஏதிலார் போரேறே
பங்கயக்கண் தங்கை பார்புகழும் நப்பின்னை
கொங்கைத் தடத்துக் கிடக்கும் குளிர்மார்பா
கோவர்த்தன கிரியைக் குடையாயெடுத்தவனே
அங்கண்மா ஞாலத்துள் ஆழ்வார்கள் பாசுரத்தில்
சங்கத்தமிழரின் தனிச்சுவையாய் வாழ்பவனே
செங்கண்மால் மாயோனே ஸ்ரீதேவி நாதனே
லெட்சுமி நாராயணனே ஆடீரூஞ்சல்.

ஏற்றமுறு கூற்றவனும் இரவியங்கி
இந்திரனுஞ் சந்திரனும் இமையோரெல்லாம்
ஆற்றல் மிகும் இரணியனின் ஆணைக்கஞ்சி
அவனடியில் வீழ்ந்து பணிந்தேத்தி நிற்க
போற்றி ஹரிஓம் என்ற மந்திரத்தால்
போற்றுகின்ற பிரகலாதனனைக் காக்கச்
சீற்றமெடு நரசிங்க மூர்த்தியாகச்
சீறிவரு நாரணனே ஆடீரூஞ்சல்.

ஐயனார் ஐந்துதலை அனந்தன் மீது
அறிதுயில் கொண்டரங்கமா நகரிலுள்ளார்
கையிலோர் சங்கமொடு சக்கரங்கொள்
கார்வண்ண மேனியனார் காளிங்கன் மேல்
பையவேயேறி நடமாடும் மெய்யர்
பார்த்தனுக்குக் கீதையுபதேசஞ் செய்த
செய்யாய் வேய்ங்குழலார் செங்கண் மாலே
சீரோங்கு நாரணனே ஆடீரூஞ்சல்.

ஒருத்தி மகனாய் பிறந்து ஓரிரவில் வேறு
ஒருத்தி மகனாய் வளர்ந்த மாயா நீயும்
பருத்தவுடல் வெறித்த விளிக்கஞ்சன் வஞ்சப்
பழிதீர்க்க நெருப்பெனவே வந்த கண்ணா
மருத்தெனவும் விளவெனவும் மாயம் பூண்டு
மரமாகி நின்றகொடும் அசுரர் தங்கள்
கருத்தழியக் கண்றுகுண லொசித்த மானே
கருமுகிலே நாரணனே ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலடி விநாயகர் ஆலயம் ஸ்ரீ லெட்சுமி நாராயணர் திருவூஞ்சல்

ஓதநெடுங் கடலமுதங் கடைந்த நெடுமாலே
வேதநெறி யுணர்த்தும் வேதியர்கள் மாதவனே
ஆதிப் பரம் பொருளே ஆதிமூலமே யென்று
ஓலமிடும் கஜேந்திரனின் உயிர்காத்த உத்தமனே
காதிற் குழையாடக் கங்கணமுமாடக்
கலிங்கமொடு கழலாடக் கன்னியருமாட
வேதனொடு ஆதிசேடனுமாடக் கருடாழ்வார்
மீதுவரும் நாரணனே ஆடீரூஞ்சல்.

அனந்த சயனப் பெருமானாடீரூஞ்சல்
ஆதி நாராயணப் பெருமானாடீரூஞ்சல்
தனந்தரு சௌபாக்யவதி லெட்சுமியினோடும்
ஜெகமாதுமுடனாட ஆடீரூஞ்சல்
மனங்கவரும் மணிமந்ர ஔஷதத்தால்
மாதவர்கள் சேவித்து மகிழ்ந்து நிற்க
மணங்கமழும் மலர்மஞ்ச ஊஞ்சல் மீது
மாதேவா நாரணனே ஆடீரூஞ்சல்.

### வாழி

ஆலடிவாழ் ஆனைமுக வள்ளல் வாழி
ஐந்து முகத்தைங்கரனின் அடியார் வாழி
மாலொடு மாலெட்சுமி மண்மகளும் வாழி
மாமாயக் கண்ணனடியாரும் வாழி
ஆலயத்தில் அரும்பணிகள் செய்வோர் வாழி
அர்ச்சிக்கும் அந்தணரும் ஆவும் வாழி
காலமெலாங் கைகூப்பிக் கண்ணீர் மல்கிக்
கருப்பொருளைக் கருதுவோர் எல்லாம் வாழி.

*ஓம் நாராயணாய நம.*

### எச்சரிக்கை

1. நாராயண நாராயண நாதா எச்சரிக்கை
ஆராதனை செய்வோர்க்கருள் அரியே எச்சரிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கண்ணா மணிவண்ணா மலர்க்கண்ணா எச்சரிக்கை
மண்ணோர்மகிழ் மதுசூதன மாயா எச்சரிக்கை.

3. கீதா உபதேசா ஹரி கிருஷ்ண எச்சரிக்கை
நாதா நவநீதா நந்தபாலா எச்சரிக்கை

4. பண்ணார் மொழிபாவை லட்சுமி பாகா எச்சரிக்கை
விண்ணோர் தொழும் வேதா மலர்ப்பாதா எச்சரிக்கை

## லாலி

1. லாலி லாலி லாலி லாலி லாலி
ஆலின் இலை மீதுவளர் பாலா லாலி

2. பந்தமறுத் தாளும் பத்ம நாபா லாலி
பங்கயத் தயன்தனைப் படைத்தாய் லாலி

3. சங்கினொடு சக்கரங்கைக் கொள்வாய் லாலி
எங்கள் துயர் தீர்க்கவரும் ஈசா லாலி

4. பார்த்தனுக்குச் சாரதியாய் வந்தாய் லாலி
பாரதப்போர் முடித்தபரம் பொருளே லாலி.

## பராக்கு

1. வரமருளி வாழ்வுதரும் வரதா பராக்கு
வைகுந்த வாசனாய் வளர்வாய் பராக்கு
பரவுமடியார்கள் துயர் தீர்ப்பாய் பராக்கு
பையரவமீது துயில் கொள்வாய் பராக்கு.

2. அட்டலெட்சுமிகளையும் ஆள்வாய் பராக்கு
ஆனந்த வடிவான ஹரியே பராக்கு
துஷ்டர்களைத் தூசுபடச் செய்வாய் பராக்கு
சிஷ்டபரி பாலனஞ்செய் தேவே பராக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அண்டமொடு பிண்டமென நின்றாய் பராக்கு
அனந்த சயனப் பிரிய ஆதி பராக்கு
வண்டுளப மாலையணி மார்பா பராக்கு
வஞ்சகக் கஞ்சனுடல் மாய்த்தாய் பராக்கு.

## மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் ஜெய ஜெய
மங்களம் மங்களம் மங்களம்

1. சர்வலோக நாயகர்க்கும் சர்வபரி பூரணர்க்கும்
சர்வயக்ஞப் பிரியருக்கும் சர்வான்ம நேயருக்கும் (மங்களம்)

2. ஞானமௌன ஜெயப்பிரிய ஞானமுத்திராயருக்கும்
ஞானயக்ஞப் பிரியருக்கும் ஜனார்த்தனர்க்கும் மங்களம் (மங்களம்)

3. மாதவர்க்கும் மாலினுக்கும் யாதவர் குலத்துதித்த
நாராயண மூர்த்திதனை நம்புமடியார் தமக்கும் (மங்களம்)

*ஓம் நமோ நாராயணாய.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தினசிங்கப் பிள்ளையார் கோவில்

தெட்சணகைலாயமாகிய திருகோணமலைக்குத் தேவாரத் திருப்பதிகம் பாடியருளிய திருஞானசம்பந்தர் ஒரு தேவாரத்தில் "கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாலை" என்று குறிப்பிடுகிறார். ஏழாம் நூற்றாண்டிலே கோயில்கள் நிறைந்த புனித பூமியாயிருந்த திருகோணமலையில் பதினாறாம் நூற்றாண்டில் நிகழ்ந்த போத்துக்கீசரின் திருக்கோணேஸ்வரப் பேரழிவுக்குப் பின்னர் இங்கு வாழ்ந்த சைவப் பெருங்குடி மக்கள் தமது வழிபாட்டுக்காகக் கோயில்களைக் கட்டி வழிபட்டு வந்தார்கள். இதனால் குறிப்பிடத்தக்க பெரும் பெரும் கோயில்கள் திருகோணமலையில் எழுந்தன என்பதை மக்கள் அறிவார்கள்.

ஆலய வழிபாடும், அனுஷ்டானங்களும் சைவ மக்களின் வாழ்க்கையோடு ஒட்டிய பண்பாடு. பக்திவயப்பட்ட மக்கள் தமது வழிபாட்டுக்காக வீதி தோறும் கோயில்களைக் கட்டி ஆதரிக்கவும், வழிபடவும் தொடங்கிய காலப்பகுதியில் தோன்றிய கோயில்களும் பல திருக்கோணமலையில் காணப்படுகின்றன என்பதை சைவமக்கள் அறிவார்கள். பயபக்தியின் காரணமாக வீடு தோறும் சிறு கோயில்கள் அமைத்து மக்கள் வழிபட்டு வருவதையும் யாவரும் அறிவர். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது பழமொழி. "கோயிலில்லா வீதியில் குடியிருக்க வேண்டாம்" என்பது புதுமொழி. இந்த வகையில் இரத்தின சிங்கப் பிள்ளையார் கோவில் தோன்றுவதற்கும் ஒரு வரலாறு செவி வழிச்செய்தியாகக் கிடைத்திருக்கின்றது.

"கோபம் பாவம் தரும்" என்பது பழமொழி. "கோபம் கோவில் தரும்" என்பது புதுமொழி. அன்பு, தயை கருணை, இரக்கம், பயம் என்பவற்றாலும் தெய்வ பக்தி வளரும்; கோபம், வெறுப்பு என்பவற்றாலும் மக்களிடம் தெய்வபக்தி வளருவதுண்டு. இதனை வைராக்கிய பக்தி என்றும் கூறலாம். இரத்தின சிங்கப் பிள்ளையார் கோவில் வைராக்கிய பக்தியினால் தோன்றியதென்பது செவிவழிச் செய்தி.

சுமார் நூறு வருடங்களிற்கு முன் ஒரு பக்தருக்கேற்பட்ட பக்தி வைராக்கிய நிகழ்ச்சியினால் இரத்தின சிங்கப் பிள்ளையார் கோவில் தோன்றிய வரலாற்றைக் கூறுவதற்கு முன் இராமாயணத்தைப் பாடிய கம்பநாட்டாழ்வாருக்குச் சோழ மன்னன் மீது ஏற்பட்ட வெறுப்பையும், கோபத்தையும் குறிப்பிடும் பாடலொன்றை முன்னுதாரணமாகக் காண்போம்.

*"மன்னவனும் நீயோ வளநாடு முன்னதோ*
*உன்னையறிந்தோ தமிழை ஓதினேன்– என்னை*
*விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ உண்டோ*
*குரங் கேற்றுக் கொள்ளாத கொம்பு"*

சோழ மன்னன் கம்பர் மீது வெறுப்புற்று 'எனது நாட்டை விட்டுப்போ' என்று கூறியபோது கம்பர் இதனைப் பாடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரத்தினசிங்கப் பிள்ளையார் கோவில்

'சோழ மன்னா! உன்னுடனிருந்து தமிழை வளர்த்தேன். இப்போது நீ என்னை ஆதரிக்காமல் நாட்டை விட்டு வெளியேறச் சொல்கிறாய். நீ மாத்திரந்தான் ஒரு மன்னவனா? உன்னுடைய நாடு தான் ஒரு நாடா? இம்மானிலத்தில் எத்தனையோ மன்னர்கள் இருக்கிறார்கள். எத்தனையோ நாடுகள் இருக்கின்றன. என்னை எப்போதும் மன்னர்கள் விரைவாக ஏற்று ஆதரிப்பார்கள் என்பதை அறியாயா? குரங்கு தாவிக் குதிக்க எத்தனையோ மரக் கொப்புகளுண்டு' என்று கூறிய கம்பர் நாட்டை விட்டு வெளியேறியதாக ஒரு வரலாறுண்டு.

அது போல இரத்தினசிங்க முதலியார் என்பவர் இந்நாட்டில் வாழ்ந்த செல்வாக்குள்ள சிறந்த பக்தர். விஸ்வநாத சிவன் கோவில் அவருக்கு மிகவும் விருப்பமான வழிபாட்டுத்தலம். பிள்ளையார் விரதத்தை இவ்வாலயத்தில்தான் வருடா வருடம் விரதமிருந்து பூர்த்தி செய்வார். 1896ம் ஆண்டு விரத பூர்த்திப் பூசைக்காக சிவன் கோவிலுக்குப் போன போது கோவில் குருக்கள் இரத்தின சிங்க முதலியாருடைய வருகைக்காகக் காத்திருக்காமல் உரிய நேரத்தில் பிள்ளையார் பூசையைச் செய்து முடித்துவிட்டார். ஏமாற்றமடைந்த முதலியார் கோபங் கொண்டு கோவிலை விட்டு வெளியேறினார். அன்றைக்கே பிள்ளைார் விரத பூர்த்தியையும் செய்தாக வேண்டும். வைராக்கியப் பக்தியோடு சிந்தனையில் மூழ்கியிருந்தார்.

இக்கால கட்டத்தில் இங்கு வாழ்ந்து கொண்டிருந்த ஆசார சீலரும், வைதிக ஒழுக்கமுடையவருமாகிய ஸ்ரீ அப்பாச்சாமிக் குருக்கள், கனக சபாபதிக் குருக்களையணுகி விநாயக விரதத்தைப் பூர்த்தி செய்வதற்கான ஆலோசனைகளைக் கேட்டார். பிள்ளையாரை ஒரு கல்லில் ஆவாகனம் பண்ணி, மந்திர தந்திரங்களால் அதற்கு அருட் சக்தியை ஏற்றி, முறைப்படி விரத பூசை செய்து விரதத்தைப் பூர்த்திசெய்யலாமெனக் குருக்கள் கூறினார். இவருடைய யோசனையை ஏற்றுக்கொண்ட இரத்தின சிங்க முதலியார் கனகசபாபதிக் குருக்களைக் கொண்டு பிள்ளையாரை ஒரு கல்லில் ஆவாகனம் செய்வித்து, தமது வீட்டிலேயே பிள்ளையாரை எழுந்தருளச் செய்து, முறைப்படி பூசை செய்வித்து விரத பூர்த்தியை நிறைவு செய்து கொண்டார்.

பிள்ளையார் பிடிக்கக் கோவிலாய்த் தோன்றிய சம்பவம் பின்னர் நிகழ நேரிட்டது. 'வீட்டிலே முறைப்படி பூசை செய்த பிள்ளையாரை இனி வீட்டில் வைத்திருப்பது உசிதமல்ல. நித்திய பூசையை இந்தப் பிள்ளையாருக்கு இனிச் செய்ய வேண்டும். பிள்ளையாருக்குக் கோவில் கட்டி பிரதிஷ்டை செய்து, தொடர்ந்து பூசை வழிபாடுகளை நடாத்த வேண்டும். தவறினால் அது உங்கள் குடும்பத்தாருக்கு கஷ்டம் துன்பங்களைத் தரும்' என்று கனகசபாபதிக் குருக்கள் கூறவே, இரத்தின சிங்க முதலியாரும் தமது குடும்ப நலனைக் கருதி தமக்குச் சொந்தமான காணியில் ஒரு சிறுகோவிலைக் கட்டிப் பிள்ளையாரைப் பிரதிஷ்டை செய்வித்து, கனகசபாபதிக் குருக்களையே அர்ச்சகராக அமர்த்தி, பூஜை வழிபாடுகளை நடாத்தி வந்தார். வருடா வருடம் இவ்வாலயத்திலேயே முதலியாரவர்கள் விரதமனுட்டித்து வழிபட்டு வரலானார். மக்களும் இவ்வாலயத்தை ஆதரித்துப் பிள்ளையாரை வழிபட்டு வந்தார்கள்.

1916ம் ஆண்டு இவ்வாலயத்தையும் அதற்குரிய காணியையும் முதலியாரவர்கள் கனகசபாபதிக் குருக்களுக்கு தர்ம சாதனமாக எழுதிக் கொடுத்துவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தில் 1936ம் ஆண்டுவரை கனகசபாபதிக் குருக்கள் தொடர்ந்து பூசை செய்து வந்தார். அதன் பின்னர் குருக்களின் வயது முதிர்ச்சியின் இயலாமை காரணமாக இவரது சகோதரன் மார்க்கண்டு ஐயரும், மருமகனான சிவஸ்ரீ.எஸ்.சண்முகரெத்தின சர்மா அவர்களும் பூசை செய்து வந்தார்கள்.

1941ம் ஆண்டில் நடைபெற்ற இரண்டாம் உலக மகாயுத்தத்தினால் இக்கோயில் பாதிக்கப்பட்டு பூசை வழிபாடு நடைபெறாமல் தடைப்பட்டு விட்டது. மக்களுடைய வேண்டுகோளின்படி, 1942ம் ஆண்டு கனகசபாபதிக் குருக்களுடைய மகன் இரத்தினசபாபதிக் குருக்களால் கோவில் புனருத்தாரணம் செய்யப்பட்டு பூசை வழிபாடுகள் நடைபெற்று வந்தன. 1975ம் ஆண்டு இரத்தின சபாபதிக் குருக்கள் சிவபதமடைந்து விட்டார். அதன் பின் அவருடைய மகன் பிரம்ம ஸ்ரீ.இ.கனகசபாபதி சர்மாவினால் ஆலயப் பூசைகள் செய்யப்பட்டு வருகின்றன.

1984ம் ஆண்டில் கோவிலைப் புனருத்தாரணம் செய்வதற்காக ஆலயக் குருக்கள் புனருத்தாரண சபையை அமைத்தார். அச்சபையினர் கோயிலுக்குத் தீர்த்தக் கிணறும், மதிலும் கட்டினார்கள். 1989ம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினாலும், சீர்குலைவினாலும், நிச்சயமற்ற நிலையினாலும் புனருத்தாரண வேலைகள் பின்தங்கிவிட்டன. 1991ம் ஆண்டு புனருத்தாரண சபையைப் புனரமைப்புச் செய்து, புத்தூக்கமளித்து பிள்ளையாரை பாலஸ்தாபனம் பண்ணி உற்சாகமாக ஆலய புனருத்தாரண வேலைகள் தொடர்ந்தன.

இதனால் சிற்பசாஸ்திர முறைப்படி கட்டப்பட்ட இவ்வாலயத்தில் அழகிய தூபியுடனான கற்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், நந்தி, பலிபீடங்களமைந்த தெரிசனமண்டபம் என்பன அமைக்கப்பட்டன. கற்பக் கிரகத்தில் அங்குசம், பாசம், வரதங்கொண்ட சதுர்ப்புஜ விநாயகச் சிலாவிக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. இரத்தினசிங்கப் பிள்ளையார் கோவில் செய்யப்பட்டிருக்கிறது. இரத்தினசிங்கப் பிள்ளையார் கோவில் திருப்பணிகள் பூர்த்தியாகி 1996ம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது பிள்ளையாருடைய அருட்செயலேயாகும்.

இவ்வாலயத்தின் வடகிழக்கு மூலையில் வைரவருக்கு சந்நிதி அமைக்கப்பட்டிருப்பது, போல தென்கிழக்கு மூலையில் செல்வபத்தினி அம்மனுக்கு ஓர் ஆலயம் கட்டப்பட்டுள்ளது. பண்டிகையோடு கூடிய கற்பக்கிரகமும் அதைத் தொடர்ந்து பக்தர்கள் நின்று வழிபாடு செய்வதற்கு அழகிய மண்டபமும் கட்டப்பட்டிருக்கிறது.

துவிபுஜங்களும் சிரசிலுள்ள கிரீடத்தைச் சார்ந்து கன்னக் கொண்டை போன்ற சடா முடியும், கருணை பொழியும் கண்களும் ஒரு கையில் சிலம்பும், மறுகை வரதகரமாகவும் நின்றபாவனையிலுள்ள செல்வபத்தினி அம்மன் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு
# ஸ்ரீ இரத்தின சிங்கப் பிள்ளையார் கோவில் திருவூஞ்சல்

ஆக்கியோன்:
ஞானசிரோன்மணி, சைவப்புலவர் பண்டிதர். இ. வடிவேல்

## காப்பு

ஆரணத்தி னுட்பொருளாய் அமர்ந்த தேவா
அரியயனுங் காண்பரிய அரனாரீன்ற
பூரணமாம் ஓங்காரப் பொருளே உன்னைப்
போற்றுகின்ற மெய்யடியார் துன்பம் நீங்கும்
காரணமாய்த் திருமலையில் அமர்ந்த பிள்ளாய்
களிப்புடனே திருவூஞ்சல் பாடுதற்கு
வாரனத்து மாமுகவா உன் பாதத்தை
வணங்குகிறேன் வந்தெனக்கு அருள் செய்வாயே.

## ஊஞ்சல்

இரத்தினநன் மணிபதித்த மண்டபத்தே
ஏற்றமுறு நால்வேதத் தூண்கள் நாட்டிப்
பரத்திலொளி பரப்பியிருள் கடிதேயோட்டும்
பரிதியொடு மதியதனால் விதானங்கட்டி
வரத்திலுயர் ஆகமங்கள் வடங்களாக
வகுத்ததொரு பிரணவமாம் பலகை மாட்டி
சிரத்தையொடு செய்த திரு ஊஞ்சல் மீதே
இரத்னசிங்க விநாயகரே ஆடீருஞ்சல்.

சிரமதனில் செம்பொன்னின் மகுடமாட
செய்யதிரு மார்பதனில் பதக்கமாடக்
கரமதனில் கங்கணங்கள் கவின்பெற்றாடக்
கால்களிலே தண்டையொடு சிலம்பு மாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரமதனில் முப்புரிநூலாடக் கையில்
ஓதரிய அங்குசமும் அசைந்தேயாட
திருமலையின் நகரதனில் வந்தமர்ந்த
இரத்னசிங்க விநாயகரே ஆடீரூஞ்சல்.

அந்தணரும் அரம்பையரும் வடந்தொட்டாட்ட
அடியவரும் அயலவரும் வடந்தொட்டாட்ட
செந்தமிழும் சிவநெறியும் ஓங்கச் செய்து
சேவைபுரி தேசிகரும் வடந்தொட்டாட்ட
முந்துமறை ஓதுனரும் தமிழ் வேதத்தை
முழுதுணர்ந்து பாடுனரும் வடந்தொட்டாட்ட
எந்தமது சிந்தையிலே இனிதமர்ந்த
இரத்னசிங்க விநாயகரே ஆடீரூஞ்சல்.

அந்தியமர் சந்திபல அர்ச்சனைகள் செய்யும்
மந்திரங்கள் கேட்டுமகிழ் செவிகளாட
கந்தமுறு மலர்தூவிக் கமழுந் தூய
தீபமெலாங் கண்டுதிருக் கண்களாட
தொந்தி வயிறாடத் துதிக்கை யாடத்
தொடையாடத் தூயதிருப் பாதமாட
இந்துநுதல் சித்திபுத்தி இனிதேயாட
இரத்னசிங்க விநாயகரே ஆடீரூஞ்சல்.

சந்தனமுங் குங்குமமுங் தரித்தமார்பில்
தாராடத் திருமுடியில் கண்ணியாட
பந்தமுறக் கோத்தமணிச் சதங்கையோடு
பாதசரங் கொலிசுமொலி செய்தேயாட
வந்துதுதி செய்யடியார் வணங்கியாட
வாகான நாதசுர நாதங்கேட்டு
எந்தரமும் எமையாளும் ஈசன் கோனை
இரத்னசிங்க விநாயகரே ஆடீரூஞ்சல்.

முப்போதுந் திருமேனி தீண்டுவார் ஈண்டு
முழுமைபெறு பூசை செயச் சூழ்ந்து நிற்கக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்போது மலர்தூவிக் கந்தருவரோடு
களிப்புடனே கின்னரர்கள் இசைத்துப்பாட
தப்பேதுமில்லாது தத்தித்தோம் என்று
தாளலயத் தோடுநந்தி தாளங்கொட்ட
ஒப்பேது மில்லாத அரம்பையரு மாட
இரத்னசிங்க விநாயகரே ஆடீரூஞ்சல்.

செந்துவர்வாய் மாதுமையாள் சேரவந்து
சிவபெருமான் எம்பெருமான் கோணைநாதன்
முந்துதமிழ்க் கடவுளென முனிவர் போற்றும்
முருகனொடு வைரவரும் சூழ்ந்து நிற்க
பந்தமில் சீர்ப் பத்திரகாளித் தாயாரோடு
பாவையரும் அரம்பையரும் பரிந்து நோக்க
இந்திரனுஞ் சந்திரனும் இனிதே போற்றும்
இரத்னசிங்க விநாயகரே ஆடீரூஞ்சல்.

பொன்னகரின் மின்னலிடைச் சசியினோடு
பூவையரும் பாவையரும் பூக்கள் தூவ
வன்னமலர்க் கொடியனைய தேவமாதர்
வாழ்த்தியே தூபமொடு தீபமேந்த
மன்னுபுகழ் ஊர்வசியும் ரதியுமாட
மாண்புடனே பாரதியும் மகிழ்ந்து பாட
இந்நகரில் எல்லார்க்கும் அருளை நல்கும்
இரத்னசிங்க விநாயகரே ஆடீரூஞ்சல்.

நீலமயில் வாகனனார் வேண்ட அன்று
நெடுமலைபோற் குஞ்சரமாய் வந்துநின்று
கோலவள்ளி நாயகியைக் குமரனோடு
கூட்டுவித்த கஜானரரே ஆடீரூஞ்சல்
ஆலமுண்ட கண்டனொடு அம்மையுந்தான்
அகிலாண்ட மென்றவரைச் சுற்றிவந்து
சீலமொடு மாங்கனியைப் பெற்றுக்கொண்ட
இரத்னசிங்க விநாயகரே ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரமருளும் விநாயகரே வாழி வாழி
வந்தனைசெய் அந்தணரும் ஆவும் வாழி
பரவுமுயர் ஆகமங்கள் வேதம் வாழி
பாரிலுயர் தமிழ்மறையும் வாழிவாழி
உரமுடைய தொண்டர்களும் நீறும் வாழி
உறுசைவ நெறிவாழி அடியார்வாழி
திருமலையில் அமர்ந்தருளும் தேவே வாழி
இரத்னசிங்க விநாயகரே வாழி வாழி.

## எச்சரிக்கை

அரனார் மகிழ்ந்தருள் ஐங்கர தேவே எச்சரிக்கை
அம்மை சிவகாமி மகிழ் கோவே எச்சரிக்கை

திருமாமலை நகர்மேவிய செல்வா எச்சரிக்கை
பெருமாமறை பேசும் உயர் பொருளே எச்சரிக்கை

ஓங்காரத்துட் பொருளாயுரு ஆனாய் எச்சரிக்கை
ஆங்காரத்தை அறுக்குமானை முகவா எச்சரிக்கை

பாங்காயுந்தன் பாதந்தொழ வருவாய் எச்சரிக்கை
தீங்கேதுமே சேராதருள் செய்வாய் எச்சரிக்கை
அவ்வைக்கருள் செய்தே மகிழ் அமலா எச்சரிக்கை
அடியார்துயர் தீர்க்குந்திரு அமுதே எச்சரிக்கை

உய்வைத்தர வருவாய்சிவ உருவே எச்சரிக்கை
உன்பாதமே தஞ்சமெமைக் காப்பாய் எச்சரிக்கை.

## பராக்கு

வரமருள வந்தருளும் வள்ளல் பராக்கு
வாரண முகத்தழகு வடிவே பராக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிகோண மலை நகரில் சேர்வாய் பராக்கு
தீராத தீவினைகள் தீர்ப்பாய் பராக்கு

கந்தனொடு வள்ளியைச் சேர்ந்தாய் பராக்கு
கடிமணம் புணரவருள் செய்தாய் பராக்கு
முந்துமறை ஆகமப் பொருளே பராக்கு
மூலமந் திரமான முதல்வா பராக்கு

நம்பிக்கை கொண்டவர்கள் நாளும் வணங்கத்
தும்பிக்கையா உனது துணையே பராக்கு

எம்பிரான் என்றேத்தும் இறைவா பராக்கு
இரத்னசிங்கப் பிள்ளையார் ஐயா பராக்கு.

## லாலி

லாலி லாலி லாலி லாலி லாலி
லம்போதர தும்பிமுக லாலி லாலி

ஆனைமுக ஐங்கரனே லாலி லாலி
வானவரும் போற்றவரும் தேவே லாலி

கஜமுகனைச் சாடியருள் செய்தாய் லாலி
கந்தனுக்கு முன்பிறந்த ஐயா லாலி
பயமனைத்தும் நீக்கியருள் செய்வாய் லாலி
பாரதத்தைத் தந்ததிருக் கையா லாலி

மூலாதார கணபதியே லாலி லாலி
முக்கணுடை முழுமுதலே லாலி லாலி

சீலமொடு சேவைசெய்யும் அடியவர்க்கு
சித்தியெல்லாம் தருபவரே லாலி லாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் ஜெய ஜெய
மங்களம் மங்களம் மங்களம்

அங்குச பாசம் பிடிக்கும்
ஆனைமுக வள்ளலுக்கும்
சங்கரர்க்கும் ஐங்கரர்க்கும்
மங்கையுமை மாதினுக்கும் (மங்களம்)

செல்வக் கணபதிக்கும்
சிங்கார வேலவர்க்கும்
கல்லைக் கனியாக்கும்
வல்லபை மணாளருக்கும் (மங்களம்)

மூஷிக வாகனர்க்கும்
மோதகப் பிரியருக்கும்
வீதிவலம் வந்தருளும்
வேழமுக விநாயகர்க்கும் (மங்களம்)

ஏகதந்தம் ஏந்திவரும்
இரத்ன சிங்கப் பிள்ளையார்க்கும்
ஆகமங்கள் ஓதும் மறை
அந்தணர்க்கும் அடியவர்க்கும் (மங்களம்)

--------✧✧✧-------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரகத்திப் பிள்ளையார் கோவில்

இந்த ஆலயம் திருக்கோணமலைப் பட்டினத்தில் தற்போது மடத்தடி என்று கூறப்படும் இடத்தில் திருக்கோணமலைப் புகையிரத நிலையத்திற்குச் சமீபத்தில் இருக்கின்றது. "மடத்தடி" என்ற இடப்பெயர் இவ்வாலயத்தின் வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. கி. பி. 1650 ஆம் ஆண்டளவில் பெரியராசகோன் முதலியார் என்பவர் தனக்குச் சொந்தமானதும், தற்போது இவ்வாலயம் கட்டப்பட்டுள்ளதுமாகிய இரண்டு ஏக்கர் நிலத்தில், ஒரு சிறிய பிள்ளையார் கோவிலைக்கட்டி, அக்கோவிலுக்கருகே ஒரு மடத்தையும் கட்டினார். வீரகத்திப் பிள்ளையார் கோவிலென அக்கோவில் வழங்கப்பட்டுவந்தது. அக்கோவிலையும் மடத்தையும் பெரியராசகோன் முதலியாருக்குப்பின் அவருடைய வழிவழிச் சந்ததியினர் பராபரித்து வந்தார்கள். பெரிய ராசகோன் முதலியாருக்குப் பின் குலசேகர முதலியாரும், அவருக்குப்பின் திரு. அழகைக்கோன் என்பவரும் பராபரித்து வந்தார்கள். அழகைக்கோனுடைய மறைவுக்குப்பின் அவருடைய மூன்று குமாரர்களில் மூத்தவராகிய திரு. வேலுப்பிள்ளை என்பவர் ஆலயப் பராபரிப்புப் பொறுப்பை ஏற்றார். மேலேகூறப்பட்ட குடும்பப் பரம்பரையினருக்கே இவ்வாலயத்தின் உரித்துரிமைகள் இருந்துவந்ததால், பெரிய ராசகோன் முதலியாருடைய பரம்பரையில் வந்த திரு. த. சுவாமி நாதமுதலியார் என்பவரும் இவ்வாலயப் பொறுப்பையேற்று நடத்தத்தொடங்கினார்.

கி. பி. 1801 ஆம் ஆண்டில் திரு. அகிலேசபிள்ளை வேலுப்பிள்ளை என்பவரும் திரு. த. சுவாமிநாத முதலியார் பரம்பரையில் வந்த திரு. வீரகத்தி ராசகோன் முதலியார் என்பவரும் சேர்ந்து முன்னிருந்த சிறிய கோவிலைத் திருத்தி பெரிய அளவில் திருப்பணிகள் செய்தார்கள். இத்திருப்பணிகள் தொடங்குவதற்குமுன், திரு. அ. வேலுப்பிள்ளை என்பவரும், திரு. இராசகோன் முதலியார் என்பவரும், திரு. கோணப்பர் கதிர்காம முதலியாரும், ஸ்ரீகணபதிக் குருக்கள் என்பவரும் சேர்ந்து உடன்படிக்கைச் சாசனமொன்று எழுதிக் கொண்டார்கள். இந்த உடன்படிக்கையின் பின்னரே பின்வரும் திருப்பணிகள் செய்யப்பட்டன. பெரியராசகோன் முதலியாருடைய தரும மடமிருந்த வளவில், திரு. வீரகத்தி ராசகோன் முதலியார், ஊர்த் தருமங்களையும் சேர்த்து கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்நபனமண்டபம், ஸ்தம்பமண்டபம், சுற்று மதிலும் அதற்குள்ளாக மடைப்பள்ளி, களஞ்சியம், யாகசாலை, வாகனசாலை என்பவைகளையும் வடக்கு வீதியில் குருக்கள் பிராமணருக்கு அக்கிரகாரமும், சங்கமர் இருக்க வீடுகளும், மடமும், மேளக்காரருக்கு வீடுகளும், கோவில் பணி விடையாளர்களுக்கு வீடுகளும், கிணறுகளும் கட்டி ஆலயத்திற்குத் தேரும், வாகனங்களும், கேடகங்கள், குடை, கொடி, ஆலவட்டம் முதலிய பரிவட்டங்களும் பொன், வெள்ளி நகைகளும் சேர்த்து ஆலயக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அப்போது ஆலயத்தில் இரண்டு காலப் பூசைகள் நடைபெற்றுவந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1878 ஆம் ஆண்டு திரு. அ. வேலுப்பிள்ளை என்பவரின் மறைவுக்குப்பின் அவருடைய மகன் திரு. வே. அகிலேசபிள்ளை என்பவரும் அவருடைய மறைவுக்குப்பின் (1910ஆம் ஆண்டு) மூத்த குமாரன் திரு. அ. இராசக்கோன் என்பவரும், மயில்வாகன முதலியார் சுப்பிரமணியம் என்பவரும் ஆலயத்தைப் பரிபாலித்து வந்தார்கள். இக்காலத்தில் ஆலயத்தில் நாலுகாலப் பூசைகள் நடைபெற்று வந்தன. நித்திய, நைமித்திய கருமங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்று வந்தன. திரு. அ. இராசக்கோன் அவர்கள் அரசாங்க உத்தியோகத்தில் இருந்தமையினால் ஆலய பரிபாலனத்தை முழுமையாக ஏற்று நடத்த முடியாதவராயிருந்தார். இதனால் அவருடைய சகோதரன் திரு. அ. அழகைக்கோன் என்பவரும் திரு. ம. மு. சுப்பிரமணியம் என்பவரும் முழுப்பொறுப்பையுமேற்று ஆலயத்தைப் பரிபாலித்து வந்தார்கள். இவர்களுடைய காலத்தில் 1942ஆம் ஆண்டு மாசிமாதம் 6ஆம் திகதி இவ்வாலயத்தில் நவக்கிரக கோவில் கட்டி விக்கிரகங்களைப் பிரதிஷ்டைசெய்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தார்கள். இவ்வாலயத்திற்கு நான்கு கும்பாபிஷேகங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஒவ்வொரு கும்பாபிஷேகத்திற்கும் திருப்பணி வேலைகளும் நடைபெற்று வந்திருக்கின்றன.

கருவறையில் பிள்ளையார் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றார். கற்பக்கிரகம் தொடக்கம் ஸ்தம்பமண்டபம் வரையிலுள்ள மண்டபங்களும், ஸ்தூபி, மணிக்கோபுரம் என்பனவும், பைரவர், நவக்கிரகங்களுக்குரிய ஆலயங்களும், சிற்பசாஸ்திர முறைப்படி முறையாக அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆலயத்திற்கு இரண்டு வீதிகளுமுண்டு. இரண்டாவது உலக யுத்தத்தின் தாக்கத்தினால் சகல நித்திய, நைமித்திய கருமங்களும் கைவிடப்பட்டிருந்தன. தற்போது இரண்டு காலப் பூசைகள் நடைபெற்று வருகின்றன. இரண்டாவது உலகயுத்தத்திற்கு முன் ஆவணிச் சதுர்த்தி திதியில் கொடியேற்றப்பட்டு பத்து நாட்கள் மகோற்சவமும், தீர்த்தோற்சவமும் நடைபெற்று வந்தன. நவராத்திரி, சிவராத்திரி, கந்தசஷ்டி, பெருங்கதை, திருக்கார்த்திகை, திருவெம்பாவை, தைப்பூசம் என்பனவற்றிற்கு விசேட அலங்காரப் பூசைகள் நடைபெற்று வந்தன. இவ்வாலயத்திற்குத் தீர்த்தக்குளமொன்றும் இருக்கின்றது. எழுந்தருளி விக்கிரகங்கள் யாவும் ஆலயத்தில் இருக்கின்றன. ஆலயத்தை எவ்வித குறைபாடுமின்றி நடத்துவதற்கு இவ்வாலயத்திற்கு முன்னோர் வழங்கியுள்ள காணிபூமி மானியங்களும் நிறைய உண்டென்பது அறியக்கிடக்கின்றது. இவ்வாலயத் திருப்பணிகள் செய்யப்பட்டு முன்பு போல இவ்வாலயம் சிறப்பாக நடைபெறவேண்டுமென்பது மக்களின் பெருவிருப்பமாயிருந்து வருகின்றது. சிறந்த அமைப்புக்களோடு விளங்கும் இவ்வாலயத்தைச் சிதையவிட்டிருப்பது வேதனைக்குரிய விஷயமே. ஆலயச் சூழல் மத ஆசாரமற்ற பிறமதத்தவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றது. இதுவும் எதிர்காலத்தில் ஆலய நிர்வாகத்திற்கு இடைஞ்சலாயமையலாம். ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்ற நிலைமை இவ்வாலயத்திற்கு ஏற்படாவண்ணம் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். இவ்வாலய விபரங்களைத் தந்துதவிய திரு. அழகைக்கோன் கணேசலிங்கம் அவர்களுக்கு நன்றிகூறக் கடப்பாடுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரகத்திப் பிள்ளையார் ஊஞ்சல்

ஆக்கியோன்:
திரு. அ. இராசகோன் அவர்கள்
திருக்கோணமலை

சீரோங்கு திரிகோண மலையினோர்பாற்
றிருவோங்கு வளர் பாலைப் பதியில் வாழும்
ஏரோங்கு வீரகத்தி யீசன் மீது
இனமோங்கு மூஞ்சலிசை யினிது பாட
வாரோங்கு களப பரிமள வுல்லாச
வனமோங்கு கும்பதன வலவை பாகம்
பாரோங்க வைத்தடியர் பவந் தொலைக்கும்
பண்போங்கு மலர்ப்பதங்கள் பணிதுமாமே.

ஆதிமுறை நான்குமுயர் கால்களாக
அங்கமோ ராறு மகல் விட்டமாக
நீதி சிவாகமங்களே கயிறதாக
நிரஞ்சனமாம் பிரணவமே பீடமாகக்
கோதிலணி யூஞ்சலின்மே லினிது வைகிக்
குலவு பல வளம்பெருகுஞ் கோணைவாழும்
வேதனொடு மரிகாணா வீசர் தந்த
வீரகத்தி விநாயகரே யாடீருஞ்சல்.

பாவலர்கள் மூவர் தமிழ் பரவு கீதப்
பாடல்களைப் பண்ணுடனே பரிவாய்ப் பாடக்
காவல் செயும் பூதகண நாதர் யாரும்
கணபதயே நமவென்று களிப்புற்றாட
ஆவலொடு சிவனடியா ரொருபானின்றே
அரகர வென்றே போற்று மரவமோங்க
மேவு மாவலி சூழுங் கோணை வாழும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

பக்தியுட னடியார் திருப் புகழைப் பாட
பகரரிய பூதகணர் புடையிற் கூட
முத்திதரு மைந்தெழுத்துச் சரிப்போர் தேட
முனிவர் மறையவ ராசி பேசி யாட
நத்தியுலகத்தவர்கள் பலரும் போற்ற
நாகர்கள் மாணிக்க மழை தூவியேத்த
வித்தாரப் பொன்மதில் சூழ் கோணை வாழும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

மஞ்சிலகு சந்திரசேகரனோர் பாலில்
மகனழகு கண்டு மனமகிழ்ச்சி கொள்ள
கஞ்சமலர்க் கண்ணனுளங் களித்து வாழ்த்தக்
கவினுலவு மன்மதன் செங்கரங்கள் கூப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சமிகு மட்டதிசைப் பாலரானோர்
சாமி பராக்கெனக் கூறி தாழ்ந்து போற்ற
விஞ்சையர்கள் துதி கூறிக் கோணை வாழும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

நித்தமுமாய் நிட்களமாய் நிமலமாகி
நிராமயமாய்ப் பராபரமாய் நிறைந்து நீங்காச்
சுத்தமுமாய் சமீபமுமாய்த் தூரமாகித்
துரியநிறை சுடர்வடிவாய்ச் சுருதியாவும்
வைத்திருந்த தாரகமாய் மனவாக்கெட்டா
மறுவறு சித்துருவாகி வையமுய்ய
வித்தையுறு மத்துவிதமாகி யெழிற் கோணைவாழும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

சூரியனுஞ் சந்திரனுங் கவிகை தாங்கச்
சுந்தர மாருதன் கரத்திற் கவரியோங்க
வாரியின் கோமகன் சாந்தாற்றி வாங்க
மகபதி கைத்தலத்தால வட்டந் தூக்கக்
காருலவு மொலியென வாத்தியங்க ளோங்கக்
காசினியிற் பிணி வறுமை யாவும் நீங்க
ஏருலவு மடியவர்க ளிடரைப் போக்கும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

காவிவிழி யரமகளிர் வடந்தொட்டாட்டக்
கவினுலவு மயிராணி களாசி நீட்ட
மேவியுமை நோக்கி மனக்களிப்புக் கொள்ள
வேண்டுமடியவர் வணங்கி வினையைத் தள்ள
நாவி நறுங்கலவை மணமெங்கு நீட
நாரியர்க ளிருபுறமுங் கவரி போட
மேவுவினை தீர்த்தடியார் பவந்தொலைக்கும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

பவவினைதீர்த் தாள்பவரே யாடீரூஞ்சல்
பண்ணவர்க்குப் பண்ணவரே யாடீரூஞ்சல்
தவமுனிவர்க் கருங்குருவே யாடீரூஞ்சல்
தந்தமுக முடையவரே யாடீரூஞ்சல்
நவமணிப் பூணணிபவரே யாடீரூஞ்சல்
நாளுமெமைக் காப்பவரே யாடீரூஞ்சல்
மேவு கலைமகள் மகனே யாடீரூஞ்சல்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்

சந்தமறை யாகம சாத்திரங்கள் வாழி
சாருமறை யாளரொடு பின்னோர் வாழி
சுந்தரமா முகில் வாழி செங்கோல் வாழி
தூய மடமகளிர் பதிவிரதம் வாழி
சிந்தை மகிழ் பூசைவிழா செய்வோர் வாழி
செப்பரிய பசுவினங்கள் செறிந்து வாழி
விந்தையுறு வல்லபைசேர் வீரகத்தி
விநாயக நின் மலர்ப்பாதம் வாழிதானே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதுப் பிள்ளையார் கோவில்

இந்த ஆலயம் திருக்கோணமலைப் பட்டினத்தில் பிரதான வீதியில், திருக்கோணமலைப் புகையிரத நிலையத்திலிருந்து ஒரு கில்லோமீற்றர் தூரத்திலிருக்கின்றது. சமாதிப் பிள்ளைார் என்ற பெயர் திரிபுற்றுச் சமாதுப் பிள்ளையார் என வழங்கிவருகின்றது. சமாதி என்ற சொல்லுக்குள் அடங்கியிருக்கும் பழைய வரலாறொன்றின் காரணத்தினாலேயே இவ்வாலயத்திற்குச் சமாதுப்பிள்ளைார் கோவில் எனப் பெயர் வழங்கிவருகின்றது.

இவ்வாலயத்தை உள்ளடக்கிய காணிக்குச் சமாதிவளவு என்று பெயர். சுமார் நூற்றியைம்பது வருடங்களுக்குமுன் கனகசபைச் சாமியார் என்னும் பெரியாரின் சமாதி ஒன்று அந்த வளவில் இருந்தது. சமாதி வைக்கப்பட்டிருந்த வளவு சிலகாலங்களின்பின் தோட்டக் காணியாகப் பயன்படுத்தப்பட்டுவந்தது. தோட்டத்திற்கு நீரிறைக்கும் கிணற்றடியில் லிங்கவடிவமான கல்லொன்றிருந்ததாம். அந்தக் கல்லைச் சிறுவர்கள் அந்த வளவின் ஓரிடத்தில் வைத்துப் பூசைசெய்து விளையாடுவார்களாம். சிறுவர்களின் சிறுபிள்ளை விளையாட்டுத் தோட்டக்காரருக்கு இடைஞ்சலாகவும், தோட்டப்பயிர்களின் அழிவுக்குக் காரணமாகவும் இருந்தது. அதனால் தோட்டக்காரர் சிறுபிள்ளைகளின் விளையாட்டை நிறுத்துவதற்காக அந்தக் கல்லையெடுத்துக் கிணற்றினுள் போட்டுவிட்டார்கள். அடுத்தநாள் அந்தக்கல் கிணற்றுக்கு வெளியே வந்திருந்ததாம். மறுநாளும் தோட்டக்காரர் அந்தக் கல்லைத்தூக்கிக் கிணற்றினுள் போட்டார்கள். திரும்பவும் அந்தக் கல்லு வெளியே வந்திருந்தது. இப்படிப் பலமுறை நிகழ்ந்த காரணத்தினால், இச்செயல் தோட்டக்காரருக்கு ஆச்சரியமாகவும் பயமாகவுமிருந்ததாம். இதனால் இந்தக் கல்லின் வரலாற்றை அறிய முயன்றபோது இந்தக் காணியில் சமாதி வைக்கப்பட்டிருக்கும் கனகசபைச் சாமியார் ஆத்மார்த்தமாகப் பூசை செய்து வழிபட்டுவந்த பிள்ளையார் என்பது தெரியவந்தது.

அக்காலத்தில் வாழ்ந்த சுப்பு உடையார் என்பவரின் கனவில் பிள்ளையார் தோன்றித் தன்னை ஆதரிக்கும்படி கேட்டுக் கொண்டாராம். இதனால் சுப்பு உடையார் இந்த ஆலயத்தைச் சிறிய அளவில் கட்டி மேலே கூறப்பட்ட அற்புதக் கல்லைப் பிள்ளையாராக வைத்துப் பிரதிஷ்டைசெய்து வழிபட்டுவந்தார்கள். இக்காரணத்தினாலேயே இவ்வாலயம் சமாதுப்பிள்ளையார் கோவிலெனப் பெயர் பெற்றது. இக்கோவிலுக்கருகில் சமாது ஒழுங்கை என்ற பெயருடன் ஒரு வீதி இன்றும் இருக்கின்றது. கோவிலின் கருவறையில் முற்கூறப்பட்ட லிங்கவடிவ வட்டக்கல்லையே பிரதிஷ்டைசெய்து இன்றும் வழிபட்டு வருகின்றார்கள். இந்த அமைப்பிலுள்ள கல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகலிங்கம் என்று கூறுவதுண்டாம். இது சுமார் பன்னிரண்டு அங்குல உயரமுடையது. முன்பக்கம் புருவமுடையதாய் முப்பட்டைவடிவில் இந்த விநாயகலிங்கம் காணப்படுகின்றது. பூசை நடைபெறும்போது வெள்ளியினாலான பிள்ளைார் அங்கியைத் தரித்துப் பூசைசெய்து வருகின்றார்கள். தங்கவிநாயகரென்றும் இதனைக் கூறுவர்.

சுமார் நூற்றிநாற்பது வருடங்களுக்கு முன் திரு.சுப்பு உடையாரால் கட்டப்பட்ட சிறிய கோவிலை, திரு.வேலுப் பிள்ளை என்பவர் 1928ஆம் ஆண்டு ஆலயத்தில் சில திருத்தங்களைச் செய்து கும்பாபிஷேகம் செய்வித்தார். அதன்பின் திரு.த.இராமலிங்கம் என்பவர் பொதுமக்களின் உதவியுடன் பல திருப்பணிகளைச் செய்து 1968ஆம் ஆண்டு கும்பாபிஷேகத்தை மிகச் சிறப்பாக நிறைவேற்றிவைத்தார். வடக்கு நோக்கிய, பிரதான வாசலைக்கொண்டதாக அமைந்திருக்கும் இவ்வாலயம் கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபங்களையுடைய சிறிய ஆலயமாயிருந்தபோதிலும், மூர்த்தி விசேடத்தினாலே கீர்த்தி மிகவுடையது.

மகாமண்டப வாசலில் மணிக்கோபுரம் இருக்கின்றது. கருவறை அழகிய சிறிய தூபியையுடையது. அலங்கார உற்சவம் நடைபெறும்போது சுவாமி எழுந்தருளியிருப்பதற்காக மகாமண்டபத்துடன் இணைந்து வசந்தமண்டபம் அமைத்திருக்கின்றார்கள். அர்த்தமண்டபத்தில் இடதுபக்க மேடையில் பிள்ளையார் சிலாவிக்கிரகமும், வலதுபக்க மேடையில் எழுந்தருளிப் பிள்ளையாரும் பைரவருமுண்டு.

ஆடியமாவாசியைத் தீர்த்த தினமாகக்கொண்டு முதற்பத்து நாட்களும் அலங்கார உற்சவம் நடைபெறுகின்றது. தண்டிகைத் திருவிழாவும், பூங்காவன விழாவும் மிகச் சிறப்பாக இங்கு நடைபெறுவதுண்டு. மாதசதுர்த்தி, திருக்கார்த்திகை, திருவெம்பாவை, நவராத்திரி என்பன விஷேட பூசைத் தினங்களாகும். காலைச்சந்தி, மாலைச்சந்தி ஆகிய இரண்டு காலப் பூசைகள் நடைபெற்று வருகின்றன. கும்பாபிஷேகம் நடைபெற்ற தினத்தில் விஷேட ஸ்நபனாபிஷேகமும், நகர்வலமும் நடைபெறுகின்றது. ஆடியமாவாசையன்று சுவாமி கடற்றீர்த்தமாடுவார். இவ்வாலயத்தில் புலவர் வை. சோமாஸ்கந்த குருக்களவர்கள் பூசை செய்து வருகின்றார். இவருடைய முன்னோரே பரம்பரையாகத் தொடர்ந்து பூசை செய்து வந்திருக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதுப் பிள்ளையார்
# திருவூஞ்சல்

ஆக்கியோன்
புலவர் சிவஸ்ரீ. வை.கு.சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்கள்
திருக்கோணமலை

## காப்பு

பொன்னுலவு மீழநக பொலிய வோங்கு
புகழ்மேவு கோணமலைப் பதியி னோர்பால்
மின்னுலவு மடத்தடியில் மேவு தங்க
விநாயகர்மே லன்புநிறை யூஞ்சல் பாட
நன்னிலவு பொழிசடிலக் கோணை நாதர்
நாயகி யன்னத்திநடை மாது போற்றும்
கொன்னுலவு கரிவதன எந்தை பாதம்
கூறரிய துணைபுரிந்து காப்பதாமே.

பண்ணுலவு சதுர்வேதம் பலகையாகப்
பகரரிய ஆகமங்கள் விட்டமாக
எண்ணுலவு எண்ணான்குகதை கயிறதாக
எழில்வளரு முபநிடதம் பீடமாக
விண்ணுலவு சுரர் முனிவர் நின்று வாழ்த்த
விளங்குமருள் மாழிபொழிந் தினிது ஒங்க
கண்ணுலவு கோணமலை தன்னில் மேவும்
களிகொள் தங்க விநாயகரே ஆடீரூஞ்சல்

விள்ளரிய பல்லியங்க ளெங்கு மோங்க
விண்ணவர்கள் ஆலவட்டம் கவரி தாங்க
உள்ளுருகு மன்பருயர் கீதந் தேங்க
ஒதுதமிழ் வேதமொழி யாழில் வீங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை மாவட்டத் திருத் தலங்கள்

புள்ளுறையும் அரி பிரமர் போற்றிசெய்ய
புரமெரித்த கருணையர் புதல்வனாகி
வள்ளலெனக் கோணமலை தன்னி னோர்பால்
வளர்தங்க விநாயகரே யாடீரூஞ்சல்.

பக்திநிறை யன்பரருட் பாக்கள் பாட
பாவையர்கள் பரதமுறை நின்றேயாட
உத்தம கந்தருவ ரிசை யாழிற் கூட்ட
ஒளிவிலன்பர் பாதமலர் சிரமேற் சூட
முத்தரருள் எத்திசையும் நின்றேயாட
முனிவர் பலர் சாமரைகள் முறையே போட
சித்தமகிழ் கோணமலைப் பதியினோர் பால்
திகழ் தங்க விநாயகரே யாடீரூஞ்சல்.

பண்ணிசைக்கும் நாரதமா முனிவனீந்த
பகரரிய மாங்கனியைப் பெறுவேனென்று
விண்ணவர்கள் துயர்தீர்த்த கார்த்திகேயன்
விரைவாகப் பெறும்வழியை உள்ளம் நாடி
வண்ணமயின் மீதமர்ந்து உலகைவர
வளர்மதியோன் தனைச்சுற்றிக் கனியைப் பெற்ற
மண்ணவர்கள் தொழுதேத்துங் கோணை நகர்
மகிழ்தங்க விநாயகரே யாடீரூஞ்சல்.

பூமேவு நான்முகனார் கண்ட ஞாலப்
புண்ணியத்தால் வியாசமுனி யாய்ந்துகண்ட
பாமேவு பாரதமாம் காப்பியத்தைப்
பகர்ந்திடவே கூராணி கொம்பதாக
மாமேரு வெற்பினிலே வரைந்தஞான
மருக்கொழுந்தே மரகதமே அடியார்தம்
நாமேவு திருக்கோண மலையுறையும்
நனிதங்க விநாயகரே யாடீரூஞ்சல்.

தினைப் புனத்தில் காவலாக நின்ற வள்ளி
தேமொழியாள் தனைநாடி வந்த செவ்வேள்
உனைநினைக்க வில்லையென்ற மாற்றத்தாலே
ஓங்கார சோதியதாம் தம்பி வேண்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாதுப் பிள்ளையார் திருவூஞ்சல்

தினைப்போதில் யானையென நீயே வந்து
திருமணமே செய்து வைத்தாய் அருளினாலே
வினைபோக்கும் கோணமலை தன்னில் மேவு
விளைதங்க விநாயகரே யாடீருஞ்சல்.

கின்னரர்கள் கிம்புருடர் தேவரெல்லாம்
கீதமாம் வேதங்கள் ஓதாநிற்க
பொன்னுல கோனோடு புகழ் இந்திராணி
பூசனைகள் பற்பலவே யாற்றா நிற்ப
இன்னமுதாம் வீணையிசை பிரமனுடன்
இங்கிதமாய் நாமகளே மீட்டா நிற்ப
மன்னுபுகழ் கோணைநகர் தன்னில் மேவு
மலர் தங்க விநாயகனே யாடீரூஞ்சல்.

பாற்கடல் சேர் வண்ணனொரு பாலே நின்று
பரமனிடம் தன்மகிழ்வைக் காட்டி நிற்ப
மாற்றமிலாச் செந்திருவும் பார்வதிபோல்
மாறாத அன்புடன் பார் உன்மைந்தனென்று
ஏற்றம்பெறு குபேரனோ டட்ட திக்கோர்
ஏத்தித் தம் முடிமேலே திருவடியைப்
போற்றிசைக்கக் கோணமலை தன்னில் மேவு
புகழ் தங்க விநாயகரே யாடீரூஞ்சல்.

உள்ளரிய கோணமலை நாதர் வாழி
உயிரன்ன மென்னடையி னம்மைவாழி
தன்னிகரில் வேதமோ டாகமங்கள் வாழி
தகுமாரி பசுவாழி தமிழும் வாழி
மன்னுபுகழ் அடியார்கள் மகிழ்வினோடு
மானிலத்தில் பெருவாழ்வு மலிய வாழி
எந்நிலமும் போற்றுதிருக் கோணை மேவும்
இனிய தங்க விநாயகரே வாழி வாழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனையாவெளி
# திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோவில்
# ஸ்ரீவல்லபசக்தி தேவஸ்தானம்

மனையாவெளிப் பிள்ளையார் கோவிலென விளங்கும் திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோவில் தெட்சணசயிலாயம் எனப்படும் திருக்கோணமலையில், மனையாவெளி என்னும் இடத்தில் இருக்கின்றது. ஈழத்தின் கிழக்குக் கரையில் திருக்கோணேசப் பெருமான் அமர்ந்திருக்கும் கோணேசமலைக்கும் கந்தசுவாமிமலைக்கும் (கடற்படைத்தளப் பிரதேசத்திலுள்ளது) இடையிலுள்ள இராசமலை என்னும் குன்றின் சாரலில் கடற்கரையை அடுத்துள்ள சமவெளியில் கிழக்குமுகமாக இவ்வாலயம் அமைந்திருக்கின்றது. திருக்கோணமலைப் புகையிரத நிலையத்திலிருந்து மூன்று கில்லோமீற்றர் தூரத்தில் டொக்கியாட் வீதியிலிருந்து பிரிந்துசெல்லும் நீதிமன்ற வீதியின் கோடியில் இவ்வாலயம் இருக்கின்றது.

போத்துக்கீசர் இலங்கையைக் கைப்பற்றிய காலந்தொடக்கம் பிரித்தானியராட்சிக்காலம் வரையும் இராசமலை என்று சொல்லப்படும் சிறு குன்றிலுள்ள அரசாங்கமனையில்தான் அரசாங்க அதிபர் இருந்து திருக்கோணமலையை ஆட்சிசெய்துவந்தார். இன்றும் அப்படித்தான் நடைபெற்று வருகின்றது. இதனால் இந்த இடத்தை "இராசமலை" என்று பரம்பரையாக வழங்கிவருகின்றார்கள். "மனையார்வெளி" என்பது மனையாவெளி என்று மருவி வழங்கி வருவதாகக் கருத இடமுண்டு. அரசமனையைச் சேர்ந்தவர்களுடைய மாடு, ஆடுகளின் மேய்ச்சல் வெளியாக இருந்ததனால் இந்த இடம் மனையார்வெளியெனப் பெயர் பெற்றிருந்தது. இவ்வாலயம் தற்போதுள்ள இடத்தைக் "கோயிற்காடு" எனப் பண்டைக் காலத்தில் வழங்கிவந்தார்கள். 27-9-1905ஆம் ஆண்டு இந்தக் கோவிற்காட்டில் அரை ஏக்கர் நிலத்தை அரசாங்கம் திரு. முருகப்பர் கதிரைவேலு என்பவருக்கு ரூபா பதினேழுக்கு விலையாகக் கொடுத்திருந்தது. இந்தக் காட்டில் சிதைவடைந்த நிலையில் கோவிலொன்றிருந்தது. இதனால் இந்த இடத்தைக் கோவிற்காடு என்று அரசாங்க நில அளவைப்பகுதியாரும் குறிப்பிட்டுவந்திருக்கின்றார்கள்.

திரு. முருகப்பர் கதிரவேலு என்பவர் யாழ்ப்பாணம், வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அவர் திருக்கோணமலைக்கு வந்தபோது மனையாவெளிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டில் ஒரு பாழடைந்த ஆலயம் இருப்பதையறிந்தார். அரசாங்கத்தின் அனுமதிபெறாது அந்த இடத்தைத் துப்பரவு செய்து ஆலயத்தைத் திருத்த முற்பட்டதினால் அரசாங்கம் அவருக்கெதிராக வழக்குத் தொடர்ந்தது. அந்த வழக்கின் வெற்றியாகத்தான் 1905ஆம் ஆண்டில் அரையேக்கர் நிலத்தை விலையாகப் பெற்றார். அதன்பின் ஆலயத்தின் திருத்தவேலைகளை ஆரம்பித்து கற்பக்கிரகம், அர்த்தமண்டபங்களைத் திருத்திக் கட்டி 1906ஆம் ஆண்டில் கும்பாபிஷேகம் செய்வித்தார். தொடர்ந்து ஆலயத்தைப் பராபரித்து வருங்காலத்தில் சுற்றுப்புறங்களிலுள்ள காட்டை நோட்டம்விட்டு ஆராய்ந்தபோது ஒரு புதருக்குள் அம்மன் சிலாவிக்கிரகமொன்று இருப்பதைக் கண்டு அதனை எடுத்துவந்து தான் திருத்தியமைத்த பிள்ளையார் கோவிலுக்குள் வைத்திருந்தார். இந்த விக்கிரகம் பாழடைந்து கிடந்த பண்டைக் கோவிலுக்குரியதாயிருக்க வேண்டும். இந்த பிரதேசம் முழுவதும் பண்டைக்காலத்தில் சைவத் தமிழ் மக்களின் குடியிருப்பாக இருந்ததென்பதற்கு இவை ஆதாரமாகின்றன. திருக்கோணேஸ்வரத்தோடு தொடர்புபட்ட வரலாறொன்று இவ்வாலயத்திற்குண்டு. இவ்வாலயத்தில் கோணலிங்கத்திற்குத் தனியாகச் சிறிய கோவிலொன்றிருக்கின்றது. இவ்வாலயத்திலிருந்து அபிஷேக திரவியங்கள் எடுத்துச் சென்று கோணேஸ்வரத்தில் அபிஷேகம் செய்வித்த பின்னரே இவ்வாலய அலங்கார உற்சவம் ஆரம்பமாகும். இந்தப் பண்டைய வழக்கம் இன்றும் நிகழ்ந்து வருகின்றது.

இந்தியாவிலிருந்து வந்த சந்நியாசி ஒருவர் இங்கு வந்த போது இந்த அம்மன் விக்கிரகம் பராபரிப்பில்லாமல் வைக்கப்பட்டிருப்பதைத் தனது ஞானத்தாலறிந்து, கதிரவேலு என்பவரையழைத்து, அந்த அம்பாளின் மகத்துவத்தைப்பற்றிக் கூறி இந்தப் பிள்ளையார் கோவிலிலேயே அம்பாளையும் பிரதிஷ்டை செய்யும்படி வேண்டிக்கொண்டாராம். ஊர்ப் பொது மக்களுக்கிடையில் அபிப்பிராயபேதம் இருந்தபோதிலும் கோணேசப் பெருமானை முன்வைத்து அப்பெருமானுடைய திருவருட் குறிப்பைப் பெற்று இந்த அம்பாளைச் சந்நியாசியார் பிரதிஷ்டை செய்தார். அவர் ஸ்ரீ வல்லபாம்பிகையின் ஆலயவாசலிலுள்ள குண்டத்தில் அன்று தொடங்கிவைத்த நித்தியாக்கினி இன்றும் அணையாமல் காப்பாற்றப்பட்டு வருகின்றது. இன்றும் அக்குண்டத்தில் வேப்பங்கட்டைகளையிட்டு அக்கினியை அணையாமல் வளர்த்து வருகின்றார்கள். ஸ்ரீ வல்லபாம்பிகைக்கு பிள்ளையார்கோவிலின் மகாமண்டபத்தில் விமானத்தோடு கூடிய தனி ஆலயமமைத்து தெற்குமுகமாகப் பிரதிஷ்டைத் தாயாராக அம்பாள் அருள்பாலித்துக்கொண்டிருக்கின்றாள். திரு.கதிரவேலு அவர்களின் மறைவுக்குப்பின் அவருடைய மகன் திரு.க.குணசேகரம் என்பவர் பயபக்தியோடு பல திருபணிகளைச் செய்து சிறப்பாக நடத்திவந்தார். அவருக்குப்பின் அவருடைய மகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.கு.லிங்கராசா அவர்களும் அவருடைய மகன் திரு.லி.அம்பலவாண நம் ஆலயத்தைப் பராபரித்து வருகின்றார்கள். இவ்வாலயத்தில் ஆரம்பத்தில் சிவஸ்ரீ சிவச்சாமிக் குருக்கள் பூசை செய்துவந்தார். பின்னர் அவருடைய பரம்பரையில் வந்த சிவஸ்ரீ இ.கு.பூரணானந்தேஸ்வரக் குருக்களுடைய பரம்பரையினர் பூசை செய்து வருகின்றார்கள். இப்போது சிவஸ்ரீ பூ.சுந்தரேஸ்வர ஐயர் பூசை செய்துகொண்டிருக்கின்றார்.

கருவறையில் பிள்ளையார் பிரதிஷ்டையும், மகாமண்டபத்திலுள்ள அம்பாள் கோவிலில் ஸ்ரீ வல்லபாம்பிகையும் பிரதிஷ்டையும் செய்யப்பட்டிருக்கின்றது. அம்பாள் அற்புதமான அமைப்பையுடையது. சதுர்ப்புஜங்களையுடைய நின்ற திருவுருவம், மேல்நோக்கிய இரு கரங்களிலும் சங்கும், சக்கரமுமுண்டு. மற்றிருகைகளில் ஒன்று அபயம், மற்றது தொடையோடு தொங்கவிடப்பட்டிருக்கின்றது. அம்பாளுக்குமுன் நித்தியாக்கினிக் குண்டம் காணப்படுகின்றது. எழுந்தருளி விக்கிரகங்களும் மகாமண்டபத்திலிருக்கின்றன. ஸ்நபனமண்டபத்தில் தெற்குப் பக்கம் சுப்பிரமணியருக்கும், வடக்குப் பக்கம் கிருஷ்ணருக்கும், அவருக்கெதிரே சூரிய நாராயணருக்கும் தனித்தனி ஆலயங்களிருக்கின்றன. ஸ்தம்ப மண்டபவாசலில் சாளக்கிராமம் கட்டப்பட்டு அருகே மணிக்கோபுரமுமுண்டு. தெற்கு வீதியில் வைரவருக்கும், வடக்கு வீதியில் நாகதம்பிரானுக்கும் கோணலிங்கத்திற்கும் தனியாலயங்களிருக்கின்றன. நாகதம்பிரான் கோவிலுக்கருகில் வேம்பும், அரசும் ஒன்றாக வளர்ந்து அதனைச் சுற்றிப் பெரிய புற்று வளர்ந்திருக்கின்றது. புற்றில் நாகபாம்பு இருக்கின்றது. இந்த இடத்தில் மக்கள் நாகதோஷத்திற்கு நேர்கடன் வைத்து பூரண பலனைப் பெற்று வருகின்றார்கள்.

காலை, மாலை இரண்டுகாலம் நித்தியபூசை நடைபெற்று வருகின்றது. தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம், வைகாசி விசாகம், சித்திராபூரணை, ஆனிஉத்தரம், ஆவணிமூலம் ஆகிய விசேட தினங்களில் பிள்ளையாருக்கு விசேட அலங்கார விழாக்களும், வருடப்பிறப்பு, பங்குனித் திங்கள், வைகாசிப் பொங்கல், நவராத்திரி என்பன வல்லபாம்பிகைக்கு விஷேட விழாக்களும் நடைபெற்று வருகின்றன. கிருஷ்ணருக்கு உறியடி உற்சவமும், வீம ஏகாதசி, சுவர்க்க வாயில் ஏகாதசி விழாக்களை நடத்துகின்றார்கள். கோவிலுக்குரிய தீர்த்தக் குளம் பாவிப்புக்குரிய நிலையில்லை. அதனால் சுவாமி கடலில் தீர்த்தமாடச் செல்வார். இவ்வாலயத்தில் உருவாடித் திருவாக்குச் சொல்லும் வழக்கம் இருந்து வருகின்றது. இவ்வாலய வரலாற்றைத் தந்துதவிய திரு.கு.லிங்கராசா அவர்களுக்கு நன்றி உரியதாகுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனையாவெளி
# வல்லபசக்தி அம்பாள் ஊஞ்சல்

ஆக்கியோன்:

சைவப்புலவர் -பண்டிதர் திரு.இ.வடிவேல் அவர்கள்

ஸ்ரீவல்லபாம்பிகை கோவில் கும்பாபிஷேகத்தின்போது
(30-4-1969) பாடப்பெற்றது.

## சிற்றம்பலப் பிள்ளையார் துதி

சிற்றம்பலத்தாடும் தேவனடிபோற்றி திருச்
சிற்றம்பலப் பிள்ளையாரடிபோற்றி– கொற்றமுயர்
கோணைநகர் வெற்பதனில் கோயில்கொண் டெமையாளும்
ஆனைமுகனே யருளைத் தா.

## வல்லபசக்தி அகவல்

### ஆசிரியப்பா

சக்தியே மாகாளி சற்சனரின் மாதாவே
நித்திய கல்யாணி நின்னடியே சரணம்மா
புத்திக் குறைவிடமே பூலோகச் செல்வமே
உத்தமர்களுள்ளத் துறையு மொருபொருளே
வித்தகியே வேதங்க ளோதும் விழுப் பொருளே
அத்தனுக் கங்கமாம் அர்த்தநா ரீஸ்வரியே
ஒன்றா யிரண்டா யுலகமா யெங்கெங்குங்
குன்றாதுறையுங் கோமளமே தாயே
ஆழ்ந்தகன்ற ஞான அறிவுப் பொருளாக
ஆனைமுகத்தோனை அளித்தருளு மன்னையே
ஞானநீ தவம் மோனம் நல்வீரப் பொருளான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்த வாரியாம் அறுமுகனைத் தந்தவளே
அஞ்ஞானம் மோகம் அகந்தைதனை யழித்து
மெய்ஞானப் பொருளாக மேவிடும் சக்தியே
இகபரத்தி னின்பமெலா மெழுதினளித்து எமை
சுகபோகம் துய்ப்பிக்குந் தூயமகா லெட்சுமியே
கலைஞானச் செல்வமெலாங் காத்து எமக்களித்து
நிலையாக என்னெஞ்சில் நின்றொளிருங் கலைமகளே
நவசக்தியாகி நின்று நானிலத்தைக் காக்கும்
யுகசக்தியே தேவி ஜெகசக்தியே சரணம்
சரணம் சரண மருட் தாயே
சரணம் சரணமம்மா சார்பொருளே சரணம்

## வல்லபாம்பிகை துதி

அன்னைவல்ல பாம்பிகையே – ஆருயிர்கட்கன்பான
முன்னவளே முன்னவற்கு மூத்தவளே– இன்னமுத
வாழ்வளித்து வையத்தை வாழ்விக்கும் வல்லபையுன்
தாள்தொழுவார் தமையென்றுங் கா.

## திருவூஞ்சல்

சீரோங்கு திருக்கோண மலையிற் சாலச்
சிறந்தோங்கு கந்தகிரிச் சாரல்தன்னில்
நீரோங்கு ஆழிபுடை சூழ நின்று
நிலமடந்தை தனையாட்ட நித்தமாடும்
காரோங்கு குன்றில் வளர் கோணை நாதன்
கழலடிகள் போற்றி வல்லபையாள் மீது
பேரோங்கு மூஞ்சலிசை பாட என்றும்
பிரணவநற் பெருமானைப் பேணுவோமே.

சொல்லரிய செம்பவளக் கால்கள் நாட்டித்
துலங்கு மணி மரகதத்தால் விட்டம் பூட்டி
நல்லொளிசேர் ஆணிமுத்து வடங்கள் மாட்டி
நால்வேதப் பொற்பலகை மீதமர்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனையாவெளி வல்லபக்தி அம்பாள் ஊஞ்சல்

பல்லுயிரும் படைத்தளித்துக் காக்குந் தாயே
பரம்பொருளி னொருபாகத் தமர்ந்த தாயே
எல்லையிலா ஆனந்தத் தாயே எங்கள்
வல்லபாம்பிகைத் தாயே யாடீரூஞ்சல்.

கந்தருவர் கானமழை பொழிந்து போற்றக்
கணநாதர் நந்தி மத்தளங்கள் கொட்ட
தும்புரு நாரதருவந்து வீணை மீட்ட
துதிசெய்யு மயன் தாளம் சுருதி கூட்டப்
பந்தமறப் பதம் பாடும் வாணியோடு
பாக்கிய லட்சுமியுடனே வானமாதர்
வந்துனது பொன்னூஞ்சல் வடந் தொட்டாட்ட
வல்லபாம்பிகைத் தாயே யாடீரூஞ்சல்.

மன்னுமலர்க் குழலாட மணிகளாட
மாணிக்க மிழைத்தபொன் மகுடமாட
மின்னு நவரத்னமணி மாலையோடு
மிக்கமலர்த் தொடை மார்பில் மிளிர்ந்தேயாட
பொன்னுறு கங்கணமாடத் தண்டையாட
புகலரிய மேகலையுஞ் சிலம்புமாட
அண்ணலொரு பாகத்தே யமர்ந்தே யாட
அருள் வல்லம்பாம்பிகையே யாடீரூஞ்சல்

பூரணியே புராதனியே யாடீரூஞ்சல்
பொற்புறு நற் சுமங்கலியோ யாடீரூஞ்சல்
காரணியே நாரணியே யாடீரூஞ்சல்
கருணைமழை பொழிபவளே யாடீரூஞ்சல்
நீறணியுந் திருமேனி நிமலனோடு
நின்றொளிருஞ் சுந்தரியே யாடீரூஞ்சல்
காருறையுங் கந்தவெற்பில் வந்தே யெம்மை
காத்திடு வல்லபாம்பிகையே யாடீரூஞ்சல்

வல்லபையே வாராசி யாடீரூஞ்சல்
வனச மலருறைபவளே யாடீரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லரிய பைரவியே யாடீரூஞ்சல்
சுகமருளும் மனோன்மணியே யாடீரூஞ்சல்
எல்லையிலா வண்டங்க ளனைத்து மீன்று
இடர்களையு முமையவளே யாடீரூஞ்சல்
பல்லுயிர்க்கு முயிராகிப் பரந்த சக்தி
வல்லபாம்பிகைத் தாயே யாடீரூஞ்சல்.

திருஞான சம்பந்தர் பதிகம் பெற்ற
திருக்கோண மாமலையிற் கோயில் கொண்டு
அருள்ஞான முரைத்தருளு மழகன் வேலன்
ஆரணநூற் பொருளானை முகவனோடு
தெருளாமற் காத்தருளும் வீரபத்ரன்
பைரவரை யீன்றருளும் பாங்குணர்ந்து
ஒருநாளும் மறவாதே யடியாரேத்தும்
வல்லபாம்பிகைத் தாயே யாடீரூஞ்சல்.

உருவாகி யருவாகி யனைத்துமாகி
உள்ளதுமா யில்லதுமா யொன்றோயாகி
கருவாகி யுயிராகிக் கதியுமாகி
கருதரிய விதியாகிக் கலந்து நின்றாய்
பெருநோய்கள் தேசத்தே பெருகாவண்ணம்
பிரம்பொடு வேம்பிலையேந்திக் காக்குந் தாயே
வெருவாம லுன்னடியார் வியந்து பாட
விளங்கு வல்லபாம்பிகையே யாடீரூஞ்சல்.

ஆதிபரம் பொருளோடே யமர்ந்த சக்தி
ஆதிசக்தி மகா சக்தி இச்சா சக்தி
வேதமுரை செய்தருளுங் கிரியா சக்தி
வேதாங்க மாயமர்ந்த ஞான சக்தி
போதமெலாந்த தந்தருளும் புனித சக்தி
போகமெலா மீந்தருளும் நாத சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனையாவெளி வல்லபக்தி அம்பாள் ஊஞ்சல்

மாதவத்தோ ருள்ளுறையும் மௌன சக்தி
மாதேவி வல்லபையே யாடீரூஞ்சல்.

அந்தமிலா அருளாளி வாழி யுந்தன்
அடியர் துயர் தீர்ப்பவளே வாழி ஞான
மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி
வந்தவினை தீர்ப்பவளே வாழி வாழி
பந்தமறுத் தெமையாளும் பகவதி வாழி
பக்தர்களும் முத்தரொடு சித்தர்களும் வாழி
கந்தகிரி யுறைபவளே வாழி வாழி
வல்லபாம்பிகைத் தாயே வாழி வாழி.

## எச்சரிக்கை

அரனாருட னருளாடல் கொள் அன்னா யெச்சரிக்கை
ஆதிசிவ காமி யெமை யாள்வா யெச்சரிக்கை

இகலோகமும் பரலோகமும் ஈவா யெச்சரிக்கை
ஈசன் மகிழ் மாதே துயர் தீர்ப்பா யெச்சரிக்கை

உலகேழொடு எழுந்தரு உமையே யெச்சரிக்கை
ஊழேதவிர்த் துள்ளே வளர் ஒளியே யெச்சரிக்கை

எல்லாமுமா யென்தாயுமாய் இயைவாய் எச்சரிக்கை
ஏகாந்தத்துள் எழுமின்பமாய் இருப்பா யெச்சரிக்கை

ஒன்றாகியு மிரண்டாகியு மொளிர்வாய் எச்சரிக்கை
ஓதத் தகுபொருளாயுருக் கொள்வா யெச்சரிக்கை

ஔதாரிய வலபாம்பிகை சக்தி யெச்சரிக்கை
உய்வார் தொழுங் கோணை நகர் உறைவா யெச்சரிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பராக்கு

அருளொழுகு மங்கையர்க் கண்ணீ பராக்கு
ஆதிசிவன் மாதேவி அம்பிகை பராக்கு

வரமருள வந்தருளும் வல்லபை பராக்கு
வாரண முத்தோனை ஈன்றாய் பராக்கு

பரவுமடியார் துயரம் தீர்ப்பாய் பராக்கு
பரமனொடு பாகமாய் நின்றாய் பராக்கு
சிகரமுயர் கோணைநகர் சேர்ந்தாய் பராக்கு
சிவஞானச் செல்வமுந் தந்தாய் பராக்கு

மனையாவெளிப் பதியில் வந்தாய் பராக்கு
வினையெலாந் தீர்த்தெமைக் காத்தாய் பராக்கு

உமையாளெனப் பெயர் கொண்டாய் பராக்கு
ஓங்கார தேவியே வல்லபை பராக்கு.

## லாலி

லாலி லாலி லாலி லாலி லாலி
வல்லபை சக்தியே தாயே லாலி லாலி

ஆலமுண்ட கண்டனது தேவி லாலி
ஆறுமுக நாதனுக்கு வந்தாய் லாலி லாலி

மாறுபடு மகிஷனை மர்த்தனஞ் செய்தே
மாயை வினை காய்பவளே லாலி லாலி

கூறு படக் கொடுவினை யறுப்பாய் லாலி
கூற்றுவனை விலக்கியெனை ஏற்பாய் லாலி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனையாவெளி வல்லபக்தி அம்பாள் ஊஞ்சல்

அல்லலெலாந் தீர்த்தெம்மை ஆள்வாய் லாலி
அன்னை வல்லபாம்பிகையே லாலி லாலி

## மங்களம்

மங்களம் மங்களம் மங்களம்– ஜெய ஜெய
மங்களம் மங்களம் மங்களம்

சங்கரர்க்குந் தந்தி முக ஐங்கரர்க்கும் மங்களம்
பங்கமகல் பைரவர்க்கும் துங்கவீர பத்திரர்க்கும் (மங்)

வல்லபையாள் அம்பிகைக்கும் வாணிதேவி லட்சுமிக்கும்
எல்லையிலா இன்பமருள் ஈசனுமையாள் தனக்கும் (மங்)

கோணைநகர் நாதனுக்கும் கோகுலநற் காவலற்கும்
ஞானமுயர் வானவர்க்கும் நற்றமிழ் சொல் பாவலர்க்கும் (மங்)

பாரிலுயர் கோணை நகர் வாழும் பல மாந்தருக்கும்
ஏர்கொள் வல்லபாம்பிகையாள் இணையடிசேர் தாசருக்கும் (மங்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனையாவெளி (இராசமலை)
## திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஊஞ்சல்

ஆக்கியோன்:
யாழ்ப்பாணம், தும்பைநகர் திரு.கு.நாகலிங்க ஐயர் அவர்கள்

சீரேறு திரிகோண மலையின் மேவுஞ்
செய்ய கந்த மலைச்சார லதனிலோர்பால்
பேரேறு வினைகளெலாந் தீர்க்கும் ஞான
பிரணவமோ ருருவான பெரியோன் மீது
ஏரேறு மூஞ்சலிசை இனிது பாட
வெமக்கருளை யீந்திடுமென் றிருகைகூப்பித்
தாரேறு சடைமுடியோ னீன்ற வொப்பில்
தந்திமுக னடியிணைகள் தலைக்கொள்வாயே.

செய்ய பவளங்களதே கால்களாகச்
செம்மணியா லாயதொரு விட்டம் பூட்டி
துய்யமுத்து வடமாட்டிப் பச்சை தன்னால்
சொலற்கரிய பலகையது தோன்றக் கட்டி
மையணியு மரமகளிர் வடந்தொட்டாட்ட
வானவர்கள் கணேசவென வாழ்த்திக் கூட்ட
சையமதி லுயர்கந்த வெற்பின் சாரல்
சார்ந்திருக்குந் தந்திமுக வாடீரூஞ்சல்.

தந்திமுக மாட வைந்து கரங்களாடத்
தகதகெனச் சிரமிசையே மௌலியாடச்
சுந்தரமார் கனக நவரத்னமாலை
நொந்திமிசை விழுந்தசைந்து துலங்கியாட
இந்திராக்கினி வருண னனிலனாதி
யிருநாலு திக்கினரு மிசைந்தேயாடச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனையாவெளி (இராசமலை) திருச்சிற்றம்பலப் பிள்ளைார் ஊஞ்சல்

சந்திரமண்டல முயரு கந்த வெற்பின்
சாரவமர் தந்திமுக வாடீரூஞ்சல்.

நாமகளும் பூமகளும் வடந் தொட்டாட்ட
நாரதர் தம்புரு வீணை நயந்து மீட்ட
சாமியொடு வீரனுறு முத்தனையன்
சதுர்முகன் சங்காழியினான் சுருதி கூட்ட
தோமிலர னம்மையொடு மகிழ்வு காட்டச்
சுருதியொ டாகமமெவையுந் துதியே நீட்ட
தாமிலங்கு கந்தவரை யென்னும் வெற்பில்
சாரவமர் தந்திமுக வாடீருஞ்சல்.

காலிலணி சிலம்பாட மறையோர் பாடக்
காந்தருவர் விஞ்சையர்கள் கலந்து பாட
சேலிலணி விழிச் சித்தி புத்தி யென்னும்
தேவியர்க ளிருபுறமுஞ் சிறந்தேயாட
மாலகலு மன்பர்குழாங் கீதம்பாட
மலர்க்கரத்திலே பொன்பூச் சொரிந்து போட
சாலவுயர்ந் திலங்குமருட் கந்த வெற்பிற்
சாரவமர் தந்திமுக வாடீரூஞ்சல்.

அன்பினொடு கதிர்வேல னமைத்த செய்ய
அற்புதமாந் திருக்கோயி லதனில் வைகி
அன்பர் துயர் அகற்றுமெங்க ளமரர் நாத
னருள்மதம் வாரானைமுக வமலனார்தம்
இன்புதவு சித்தி புத்தி யென்னுஞ் சக்தி
யிருவருட னங்குச பாசங்களேந்தி
தன்னுயர்வொப் பில்லாத கந்த வெற்பில்
சார்ந்திடு மெந் தந்திமுக வாடீரூஞ்சல்.

கும்பமொடு மணிக்கரத்தா யாடீரூஞ்சல்
கொற்றவில்லி லணிக்கரத்தா யாடீரூஞ்சல்
அம்புவியிற் குரோதியெனு மாண்டில் மேவு
மணிமேஷ பதி பத்தாந் திகதி தன்னில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை மாவட்டத் திருத் தலங்கள்

நம்புமடியாற் கருளக் கோயில் கொண்ட
நாகமதியன் சடையா யாடீரூஞ்சல்
சம்புமலைக் கருகமரு கந்த வெற்பில்
சாரலமர் தந்திமுக வாடீரூஞ்சல்.

ஆனைமுகத் தரசே யெம் மருளே ஞான
வற்புதமே சிற்பரமே யாடீரூஞ்சல்
தேனைநிகர் மொ ழிபேசுந் தேவிமார்கள்
தினமருகி லமர்பவரே யாடீரூஞ்சல்
ஞானமுடை யன்பர்களுக் கெளியனாகி
நாதவிந்து கடந்தவனே யாடீரூஞ்சல்
தானுயரு கந்த வெற்பின் சாரல் தன்னில்
தானமருந் தந்திமுக வாடீரூஞ்சல்.

கருவாகி யெம்பொருட்கு மனாதியான
ஆனைமுகப் பரம் பொருளே யாடீரூஞ்சல்
கருவாகி உயிராகிக் கருத்துளூறும்
கருணைமழை பொழிமுகிலே யாடீரூஞ்சல்
குருவாகி வந்தருளி யடியாருள்ளக்
குறைதீர்க்கும் குஞ்சரமே யாடீரூஞ்சல்
உருவாகிக் கந்த வெற்பின் சாரல் வைகும்
ஓங்காரப் பிரணவமே யாடீரூஞ்சல்.

கோணமலை யப்பனருட் குழந்தாய் வாழி
குஞ்சரத்தின் வடிவாகிக் கருணை கூர்ந்து
பேணுமடியார்கள் வினை தீர்ப்பாய் வாழி
பிறவாத பேரின்பம் தருவாய் வாழி
ஆணவத்தின் கொட்டமெல்லாம் அடக்கி நாட்டில்
அன்பு தயை சாந்தியுற வைப்பாய் வாழி
காணவுருத் தாங்கிவருங் கந்த வெற்பின்
கற்பகத்தின் பொற்பதங்கள் வாழி வாழி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னத் தொடுவாய் சித்திவிநாயகர் கோவில்

இந்த ஆலயம் திருக்கோணமலைப் பட்டினத்தில், புகையிரத நிலையத்திற்குச் சமீபமாக இருக்கின்றது. பாடல் பெற்ற திருக்கோணேஸ்வரத்தோடு இவ்வாலய வரலாறு சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. திருக்கோணசல புராணத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கின்றது. " அனுராதபுரத்திலிருந்து அரசாண்ட கஜபாகு மன்னன் திருக்கோணஸ்வரத்தை இடித்து அழிக்கப்போவதாகக் கூறிக்கொண்டு, அனுராதபுரத்திலிருந்து படையுடன் வந்தானாம். வழியில் இரண்டு கண்களும் பார்வை இழந்து விட்டன. தனது அகங்காரத்தினால் தான் இப்படி நேர்ந்ததென்று உணர்ந்தான். இப்போது கந்தளாய் என்று கூறப்படும் இடத்தில் ஒரு அந்தணன் எதிர்ப்பட்டு, விபூதி கொடுத்து ஆசீர்வதிக்க ஒரு கண் பார்வை பெற்றது. கண் தளைத்த இடமாதலால் அந்த இடம் கந்தளாய் என்று பெயரிடப்பட்டது. தனது அகங்காரத்திற்குப் பரிகாரம் தேடும் ஆவலோடு கஜபாகு மன்னன் கோணேஸ்வரத்தை நோக்கி வந்து கொண்டிருந்தான். திருக்கோணஸ்வரத்திற்குச் சமீபமாக வரும்போது கோணேசர் அருளால் மற்றைக் கண்ணும் பார்வை பெற்றதாம். இதனால் இந்த இடத்திற்குச் சின்னக் கந்தளாய் என்று பெயரிடப்பட்டதாகக் கூறப்படுகின்றது." திருக்கோணாசல வைபவமாலையும் இவ்விடயத்தைக் கூறுகின்றது.

இந்தச் சின்னக் கந்தளாய் என்னுமிடத்தில் தான் சின்னத் தொடுவாய்ப் பிள்ளையார் கோவில் இருக்கின்றது. படுக்கைப் பத்திரக்காளி கோவில் வரலாற்றில் சின்னத்தொடுவாய், பெரியதொடுவாய் என்ற காரணப் பெயர்களுக்குரிய வரலாறுகள் கூறப்பட்டிருப்பதைப் பார்க்கவும். சின்னத் தொடுவாய் அருவி சங்கமமாகும் இடத்தில் கடற்கரையோரமாக இவ்வாலயம் கட்டப்பட்டதால் இதற்குச் சின்னத்தொடுவாய்ப் பிள்ளையார் கோவில் என்று பெயர் சூட்டப்பட்டது. திருக்கோணமலையில் தெட்சணகயிலாயம் எனப்படும் கோணேஸ்வரம் தான் பெரிய கோவில். ஆதலால் கோணமாமலையிலுள்ள ஏனைய கோவில்கள் அக்காலத்தில் சிறியனவாகவே கட்டப்பட்டிருந்தன. இவ்வாலயம் கல்லால் கட்டப்பட்ட சிறிய கோவில்தான். கோவில் வாசலில் நின்றபடியே கோணமாமலையமர்ந்த கோணேசப்பெருமானையும் தரிசிக்கலாம். இடையில் கடல் தான் பிரித்து நிற்கின்றது. இவ்வாலயத்திற்கருகில் ஒரு திருமடம் இருக்கின்றது. பக்கத்திலே கேணியும், சுமைதாங்கியும், ஆவுரிஞ்சுதூணும் உண்டு. அக்காலத்தில் சாம்பல் தீவு, நிலாவெளி முதலிய கிராமங்களிலிருந்து வருபவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தின் அருகிலுள்ள சுமை தாங்கியில் தாம் கொண்டு வந்த வியாபாரப் பொதிகளை இறக்கி வைத்து கேணியில் நீர் பருகி, திருமடத்தில் இளைப்பாறிச் செல்வார்களாம். ஆவரிஞ்சுதூணில் மாடுகள் முதுகுதேய்த்துத் தினவுநீக்கிக் கொள்ளுமாம். எப்படியெப்படியெல்லாம் தர்மம் பேணப்பட்டு வந்துள்ளதென்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

இந்தத் திருமடம் திருக்கோணமலையில் ஒரு ஆதீனமாக இருந்து தமிழையும், சைவத்தையும் வளர்த்து வந்ததாகக் காலஞ்சென்ற பெரியார் திரு.அ.அழகைக்கோனவர்கள் பல வருடங்களுக்குமுன் கூறியது ஞாபகத்திற்கு வருகின்றது. இதில் உண்மையிருக்கின்றதென்பதை, இவ்வாலயத்தைப் பற்றி எழுதுவதற்குச் சென்றபோது, இவ்வாலயத்திற் பூசை செய்துகொண்டிருக்கும் திரு.விஸ்வலிங்கம் சின்னப்பு ஐயர் அவர்களிடமிருந்து தெரிந்துகொண்டேன். இந்த ஆலய வரலாறுகளைத் தந்துதவியவரும் அவரே. அன்னாருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். திருக்கோணமலை மாவட்டத்தில் கோவிற்பூசை செய்துவந்த சைவக் குருக்கள் பரம்பரைப் பட்டியலொன்று வைத்திருந்தார். அதனையும் தந்துதவினார். திருக்கோணேஸ்வரம் பற்றிய வரலாறுகளைச் சேகரிப்பதற்காக, திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள பல கிராமங்களுக்கும் சென்றிருந்தேன். திருக்கோணமலைப் பட்டினத்தில் வாழ்ந்த பெரியார் திரு. அகிலேசபிள்ளை அழகைக்கோன் என்பவரிடமிருந்து இருபத்தைந்து வருடங்களுக்கு முன் "திருக்கோணமலை அந்தாதி" என்னும் ஏட்டுப்பிரதியொன்று கிடைத்தது. அவருடைய அனுமதியோடு அந்த ஏட்டுப் பிரதியைப் பிரதிசெய்து வைத்திருந்தேன். அந்தாதியை ஆக்கியோன் சிதம்பரநாதர் ஆறுமுகம் என்று எழுதப்பட்டிருந்தது. இந்த நூலாசிரியர் யார் என அறிவதற்குத் தொடர்ந்து முயன்று கொண்டிருந்தேன். "மில்க்வைற் செய்தி" என்ற சஞ்சிகையின் ஆசிரியர் திரு.க.சி.குலரத்தினம் அவர்கள் தமது சஞ்சிகையில் இலங்கையில் எழுதப்பட்ட பழங்காலத்து நூல்கள் சிலவற்றையும், அவற்றின் ஆக்கியோன்களின் பெயர்களையும் வெளியிட்டிருந்தார். அதில் "திருக்கோணமலை அந்தாதி– ஆக்கியோன் சி. ஆறுமுகப் புலவர்" என்றிருந்தது. இந்த ஆக்கியோனுடைய வரலாற்றை திரு.க.சி.குலரத்தினம் அவர்களிடம் கேட்டேன். வரலாறொன்றும் தெரியாது. பெயர்மாத்திரந்தான் தெரியும் என்று கூறினார். இந்த நிலையில் சின்னத்தொடுவாய்ப் பிள்ளையார் கோவில் வரலாற்றைச் சேகரிக்கச் சென்றிருந்தபோது சுப்பிரமணிய பண்டாரத்தவரின் சந்ததியில் வந்த சிதம்பரநாதர் –ஆறுமுகப் புலவர் என்பவர் இந்தத் திருமடத்திலிருந்து திருக்கோணமலை அந்தாதியை எழுதினார் என்ற செய்தி கிடைத்ததும் மட்டற்ற மகிழ்ச்சியைத் தந்தது. இந்த அந்தாதிக்கு உரையெழுதிவைத்துள்ளோம். அச்சிட்டு வெளிவர வேண்டுமென்ற பேரவா இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சின்னத்தொடுவாய்ப் பிள்ளையார் கோவிலோடு தொடர்புபட்டிருந்த இந்தத் திருமடம் சுமார் நானூற்றைம்பது வருடங்களுக்குமுன் ஆதீனமாயிருந்தது. இந்த ஆதீன பரம்பரையினர் நூல்களை இயற்றியும், தமிழாராய்ந்தும், புராணங்களை ஏடுகளில் எழுதியும், சமயப்பணியாற்றி வந்துள்ளார்கள். ஆறுமுகப்புலவரால் பிரதி செய்யப்பட்ட கந்தபுராண ஏடொன்று இன்றும் திரியாயிலுள்ள திரு.க.கந்தையா ஐயரிடம் இருக்கின்றது. அச்சுவாகனங்கள் அசுரவேகத்தில் சவாரிசெய்யும் இந்தக் காலத்திலும் சமய, இலக்கியங்களை ஏட்டில் எழுதித் தமிழ்த்தொண்டும், சமயத்தொண்டும் செய்துகொண்டிருக்கும் சான்றோர்களும் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். தற்போது திருக்கேதீஸ்வரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் இளைப்பாறிய பொன்னாவெளி உடையார், பெரியார், திரு.கு.அருளம்பலம் அவர்கள் பன்னிரு திருமுறைகளையும் ஏட்டில் எழுதி வேண்டுவார்க்கு வேண்டும் போது வழங்கி சமயத்தொண்டாற்றிக் கொண்டிருக்கின்றார்.

பண்டைக்காலத்தில் சிறியதாயிருந்த இவ்வாலயம் பின்னர் கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், தெரிசனமண்டபங்களைக் கொண்டதாகக் கல்லால் கட்டப்பட்டது. ஆலயத்திற்குச் சொந்தமாக எட்டு ஏக்கர் காணி நன்கொடையாக வழங்கப்பட்டிருக்கின்றது. திரு.கதிரவேல் முதலியாரும் அவருடைய சந்ததியினரும் காணிகளை நன்கொடையாகக் கொடுத்து ஆதரித்து வந்துள்ளார்கள். கருவறையில் பிள்ளையார் சிலாவிக்கிரகம் பிரதிஷ்டைசெய்யப்பட்டிருக்கின்றது. மகாமண்டபத்தில் மூஷிகம், பலிபீடம் உண்டு. சுவாமி தீர்த்தமாடுவதற்கு அருகிலே கேணியிருக்கின்றது. காலைச்சந்தி, மாலைச்சந்தி ஆகிய இரண்டுகாலப் பூசைகளும், ஆனி உத்தரத்தைத் தீர்த்ததினமாகக் கொண்டு முதற் பத்து நாட்களும் அலங்கார உற்சவம் நடைபெற்று வருகின்றது. பிள்ளையார்கதை, திருவெம்பாவை, சித்திராபூரணை போன்ற நாட்களில் விசேட பூசைகள் நடைபெறுகின்றன. இரண்டாவது உலக மகாயுத்தத்தின் பின்னர் ஆலயச் சூழல் மாற்றமடைந்திருக்கின்றது. இதனையுணர்ந்த உணர்ச்சியும், பயபக்தியும், விசுவாசமுமுள்ள இளைஞர்கள் ஆலய பரிபாலன சபையை அமைத்துப் பரிபாலனம் செய்து வருகின்றார்கள். திருப்பணி வேலையும் ஆரம்பமாகியிருக்கின்றது. 9–11–1981ல் பாலஸ்தாபனம் செய்து, கும்பாபிஷேகம் நடைபெறவிருப்பதையறிந்து மகிழ்ச்சியடைகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவக் குருக்கள் பரம்பரை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியதொடுவாய்ப் பிள்ளையார் கோவில்

திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து நாலரைக் கில்லோ மீற்றர் தூரத்திலும் புகையிரத நிலையத்திலிருந்து மூன்று கில்லோமீற்றர் தூரத்திலும், உப்புவெளிக் கிராமத்தின் மத்தியில் நிலாவெளிக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் இவ்வாலயம் இருக்கின்றது. இந்த ஆலயம் பெரியதொடுவாய்ப் பிள்ளையார் கோவில் எனப் பெயர்பெற்றதற்கோர் காரணம் கூறப்படுகின்றது. முற்காலத்தில் கந்தசுவாமி மலையிலிருந்து ஊற்றெடுத்த சிற்றாற்றின் ஒரு கிளை தற்போது இந்த ஆலயம் இருக்கும் இடத்திற்குச் சமீபமாகப் பாய்ந்ததென்றும்; மற்றொருகிளை தற்போதிருக்கும் சின்னத்தொடுவாய்ப் பிள்ளையார் கோவிலுக்குச் சமீபமாகப் பாய்ந்து சமுத்திரத்தில் சங்கமமாகியதென்றும் கர்ணபரம்பரையாகப் பேசப்பட்டு வருகின்றது. எனவேதான் முன்னது பெரியதொடுவாய் என்றும், பின்னது சின்னத்தொடுவாயென்றும் அழைக்கப்படுகின்றது. இவை இரண்டு கிளைகளுக்கும் இடைப்பட்ட நிலப்பகுதி படுக்கையெனப்படும். இப்போதும் இப்பிரதேசம் படுக்கையென்ற பெயராலேயே வழங்கி வருகின்றது. இங்கு ஒரு பத்திரகாளி கோவில் இருக்கின்றது. நிலாவெளியிலுள்ள உப்பளங்களில் உற்பத்தியாகும் உப்பு திருக்கோணமலைக்கு எடுத்துவரப்படும் வழியில் தங்கிச்செல்லும் இடமாயிருந்ததால் இக்கிராமம் உப்புவெளியென்றும், இங்குள்ள ஆலயம் உப்புவெளிப் பெரிய தொடுவாய்ப் பிள்ளையார்கோவிலென்றும் பெயர் பெற்றது.

சுமார் இருநூற்றைம்பது வருடங்களுக்குமுன் இவ்விடத்தில் பிள்ளைார் வழிபாடு ஆரம்பிக்கப்பட்டதென ஊகிக்க இடமுண்டாகின்றது. 1715ஆம் ஆண்டளவில் தற்போது இவ்வாலயமிருக்குமிடத்தில் ஒரு பெரிய ஆலமரம் இருந்ததாகவும், அதன்கீழிருந்த கல்லைப் பிள்ளையாராகக்கருதி மக்கள் வழிபட்டு வந்ததாகவும் அறியக்கிடக்கின்றது. பின்னர் உயர்திரு. அருணகிரிக் குருக்கள் அந்த இடத்தில் சிறுகோவிலொன்றைக் கட்டி அந்தக் கல்லை வைத்து வழிபாடியற்றிவந்தார். தற்போதுள்ள கற்கோவிலிலும் இந்தக்கல் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. இதற்கு முதற்பூசை முடித்தபின்பே மூலஸ்தானப் பூசைகள் செய்யப்பட்டு வருகின்றன. திரு. அருணகிரிக் குருக்களும், அவருடைய மகன் திரு. நல்லதம்பி ஐயரும் ஆதியிலமைக்கப்பட்ட கோவிலில் பல ஆண்டுகள் தொடர்ந்து பூசை செய்து வந்தார்கள். இவர்களுடைய பரம்பரையில் வந்த உயர்திரு ஏரம்பு ஐயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களும், அவருடைய மாமனார் திரு. கந்தசாமிக் குருக்களும், மைத்துனர் திரு. நாகலிங்கக் குருக்களும் உப்புவெளிச் சைவப்பெருங்குடி மக்களின் உதவியோடு மடாலயமொன்றைக் கட்டிப் பல திருத்தவேலைகளையும் செய்து ஆலயத்தை முன்னரிலும் சிறப்பாக நடத்திவந்தார்கள். பின்னர் ஏரம்பு ஐயருடைய மகன் சிவஸ்ரீ விஸ்வலிங்கக் குருக்கள் ஊர்ப்பொதுமக்களின் உதவியோடு தூபி முதலிய ஆலயத்திருப்பணிகளை முறைப்படி செய்துநிறைவேற்றி 18.5.1933இல் சம்புரோட்ஷண மகாகும்பாபிஷேகத்தை நடத்திவைத்தார். 1973இல் கடைசியாகச் செய்யப்பட்ட கும்பாபிஷேகத்துடன் இவ்வாலயத்தில் நான்குமுறை கும்பாபிஷேகங்கள் நடைபெற்றுள்ளன.

கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், தெரிசனமண்டபம் என்னும் நான்கு மண்டபங்களைக் கொண்ட இவ்வாலயத்தின் கருவறையில் விநாயகர் சிலாவிக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. அங்குசம், பாசம், ஒற்றைக்கொம்பு, மோதகங்களைத் தாங்கிய சதுர்ப்புஜங்களோடு ஐங்கரமூர்த்தி கருணாமூர்த்தியாகக் காணப்படுகின்றார். ஆதியில் வழிபாடுசெய்யப்பட்டுவந்த கல்லுப்பிள்ளையார் அர்த்தமண்டபத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றார். நாகதம்பிரான், பைரவர் என்னும் பரிவார மூர்த்திகளும் அம்மண்டபத்திலிருக்கின்றது. மகாமண்டபத்தில் உற்சவ மூர்த்தியும், வேலும், தெரிசனமண்டபத்தில் மூஷிகம் பலிபீடம் என்பனவும், ஆலயத்தின் முன்புறத்தில் மணிக்கோபுரமுமுண்டு. காலைச்சந்தி, மாலைச்சந்தி ஆகிய இரண்டுகாலமும் நித்தியபூசைகள் நடைபெற்றுவருகின்றன. ஆனி உத்தரத்தில் அலங்கார உற்சவம் ஆரம்பமாகிப் பத்து நாட்கள் தொடர்ந்து நடைபெறுகின்றது. பதினோராம் நாள் சுவாமி கடலில் தீர்த்தமாடுகின்றார். அடுத்தநாள் பூங்காவன உற்சவத்தை உப்புவெளி இந்து இளைஞர் சிறப்பாக நடத்திவருகின்றார்கள். இவைகளை விட விநாயக சதுர்த்தி, திருக்கார்த்திகை, பெருங்கதை, சூரன்போர், திருவெம்பாவை முதலிய விசேட பூசைகளும் நடைபெற்று வருகின்றன. பண்டைக்காலந் தொடக்கம் சைவப் பெருங்குடிமக்கள் பக்திபூர்வமாக ஆதரித்து வந்த இவ்வாலயத்தை இன்றும் அவ்வாறே நடத்திவருகின்றார்கள். தற்போது இவ்வாலயத்தில் சிவஸ்ரீ ஏ.விஸ்வலிங்கக் குருக்களும், புலவர் ஸ்ரீ வை.சோமாஸ்கந்தக் குருக்களும் நித்திய, நைமித்திய பூசைகளை நடத்திவருகின்றார்கள். ஸ்ரீ.ஏ.விஸ்வலிங்கக் குருக்களால் பாடப்பெற்ற திருவூஞ்சல் பாடல் இவ்வாலயத்திலிருக்கின்றது. இந்த ஆலய வரலாற்றைத் தந்துதவிய இப்பெரியாருக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை உப்புவழி
# பெரியதொடுவாய் சித்திவிநாயகர் ஊஞ்சல்

ஆக்கியோன் :
சிவஸ்ரீ ஏ.வை.விஸ்வலிங்கக் குருக்கள் அவர்கள்
*திருக்கோணமலை*

பொன்னுலவும் ஈழநகர் பொலிய வோங்கு
புகழ்மேவு கோணமலைப் பதியின் ஓர்பால்
மின்னுலவும் உப்புவழி மேவும் சித்தி
விநாயகர் மேலன்பு நிறை யூஞ்சல் பாட
நன்னிலவு பொழிவதனக் கோணைநாதர்
நாயகி அன்னத்து நடைமாது போற்றும்
கொன்னுலவு கரிவதன எந்தை பாதம்
கூறரிய துணைபுரிந்து காப்பதாமே.

பண்ணுலவு சதுர்வேதம் பலகையாக
பகராரிய ஆகமங்கள் விட்டமாக
எண்ணுலவு எண்ணான்கு கதை கயிறதாக
எழில் வளரும் உபநிடதம் பீடமாக
விண்ணுலவு சுரர்முனிவர் நின்று வாழ்த்த
வேதனொடு மாலிருவர் புகழ்ந்து போற்ற
கண்ணுலவும் உப்புவழி தன்னில் மேவும்
களிகொள்சித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

பத்திநிறை அன்பருட் பாக்கள் பாட
பாவையர்கள் பரதமுறை நின்றேயாட
உத்தம கந்தரு வரிசை யாழிற் கூட
ஓவிலன்பர் பாதமலர் சிரமேற் சூட
வித்தகஞ்சேர் எத்திசையும் நின்றே யாட
வேறுபலர் சாமரைகள் முறையே போட
சித்தமகிழ் உப்புவெளி தன்னில் மேவு
செய்ய சித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

வின்ளரிய புள்ளினங்கள் எங்கு மோங்க
விளங்கு மருள் மாரிமழை நிறைந்து தேங்க
உள்ளுருகி அன்பரிசைக் கீதம் தூங்க
ஓதுதமிழ் வேதமுறை யாழில் வீங்க
புள்ளுறையும் அரிபிரமர் போற்றி செய்ய
புரமெரித்த கருணையர்தம் புதல்வனாகி
வள்ளலென உப்புவழி தன்னில் மேவும்
வளர் சித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை மாவட்டத் திருத் தலங்கள்

சங்கமொடு காகளமும் முழவமார்க்க
தாவில் சிறு சின்னமது தயங்கி யார்க்க
மங்கலஞ்சேர் துந்துபி வேய்ங் குழலுமார்க்க
மாசில் முர சோடு மிருதங்க மார்க்க
பங்கமிலாப் பூதகணம் குழுமியார்க்க
பாசமற அடியர்துதி கூறியார்க்க
துங்கமுறும் உப்புவழி தண்ணி லோர்பால்
தோற்று சித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

சுந்தரமா மணிமகுடச் சோதிமின்ன
தூயமகரக் குழைகள் சேர்ந்து மின்ன
மந்தரநேர் புயவாகு வலயம் மின்ன
மாறில் நவரத்தினமுறு மதாணி மின்ன
சிந்தனைசேர் அரைஞா ணுத்தரீயம் மின்ன
தோன்றிய புன்முறுவலது துவன்றி மின்ன
பந்தமருளும் உப்புவழிப் பதியினோர்பால்
பரிந்து வாழ் விநாயகரே யாடீரூஞ்சல்.

ஒப்பரிய பாரிடர்கள் புறத்தே காக்க
ஓங்கு மால் அனவிருவர் கவரி சாய்க்க
தப்பறு சந்திர தபனர் குடைகள் தூக்க
தயங்கி யெழு சமீரணர்கள் கொடிகள் சேர்க்க
செப்புறும் இந்திரனென்பான் அடைப்பை தூக்க
திறல் பூதவீரர் வாள் தாங்கி நோக்க
இப்புவியிலுள அடியார்க்கு அருளை நல்கி
யுற்ற சித்தி வினாயகரே யாடீரூஞ்சல்.

தும்புறு நாரதரிருவர் யாழ்கள் தாங்க
துகளரு கந்தரு வரிசைக் கீதம் தேங்க
வம்ப விழும் மலர் சொரிந்து சுரர்களோங்க
மாசில் முனிவோர் துதி செய்து இருளை நீங்க
நம்புறு மெய்யடியார்கள் அருளை வாங்க
நானிலத்து அன்பரெல்லாம் உயர்ந்தே ஓங்க
எம்பரமர் மதலையென வந்துதித்த
இனிய சித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

புந்தி மகிழ் வானோர் பூமாரி வீழ
பூதலத்திலுள்ள வடியார் புன்மை யாழ
சிந்தனைசேர் வேதியர்கள் நின்று தாழ
தீதில் கண நாதர்கள் வான் சிறந்து சூழ
நிந்தையறும் அன்புடையோர் செல்வம் நீழ
நீதியுள்ள அரசர் செங்கோல் நிரைந்து வாழ
உந்து திருக் கோணமலைப் பதியினோர் பால்
உற்ற சித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்படைத்தளப் பிள்ளையார் கோவில்

உலகப் பிரசித்திபெற்ற திருக்கோணமலைத் துறைமுகத்தைச் சுற்றி அமைக்கப்பட்டிருக்கும் இலங்கைக் கடற்படைத் தளம் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் அவர்களுடைய ஆதிக்கத்திலிருந்தது. இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் 1948ம் ஆண்டு, இலங்கை அரசாங்கத்தினரிடம் கையளிக்கப்பட்டது. இந்தக் கடற்படைத் தளத்தில் ஒரு பிள்ளையார் கோவில் இருக்கின்றது. திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து இரண்டு கிலோமீற்றர் தூரத்திலுள்ள இந்தக் கோவிலை டொக்கியாட் வீதி வழியாகக் கடற்படைத்தளத்தின் பிரதான வாயிலுக்கூடாகச் சென்றடையலாம்.

1815ஆம் ஆண்டு பிரித்தானிய அரசாங்கம் இலங்கையைத் தன்னாதிக்கத்தின் கீழ் எடுத்துக்கொண்டது. அதன்பின் தனது ஆட்சியைப் பலப்படுத்தும் பொருட்டுத் திருக்கோணமலையில் ஒரு கடற்படையை வைத்திருந்தது. அந்தப் படையில் இந்திய ரஜபுத்திர வீரர்களைக் கொண்ட ஒரு படைப்பிரிவு இருந்தது. இந்தப் படையிலுள்ள இந்துக்கள் தமது வழிபாட்டுக்காக திருக்கோணமலைக் கடற்படைத் தளத்தில் ஒரு கோவிலைக் கட்டி இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட பிள்ளையார் சிலாவிக்கிரகத்தை ஸ்தாபித்து வழிபட்டுவந்தார்கள். அக்காலத்தில் திருக்கோணமலையில் வாழ்ந்த மக்களில் தொண்ணூற்றைந்து சதவீதமானவர்கள் தமிழ் மக்கள். திருக்கோணமலையில் அக்காலத்திலிருந்த சைவத் தமிழ் மக்கள் கடற்படைத் தளத்தில் வேலைக்கமர்த்தப்பட்டார்கள். இதனால் இவர்களும் இந்தப் பிள்ளையார் கோவிலை ஆதரித்து வழிபட்டுவந்தார்கள். சுமார் நூற்றைம்பது வருடங்களுக்குமுன் இந்தக் கோவில் கட்டப்பட்டதாக அறியக்கிடக்கின்றது.

கடற்படைத் தளத்தையமைத்த பிரித்தானிய அரசாங்கம் 1904ஆம் ஆண்டு விக்டோறியா மகாராணியாரின் ஆட்சிக் காலத்தில் கடற்படைத் தளத்தை மூடிவிட்டு, ''லம்டன்'' என்ற மேல்நாட்டவரொருவரின் கண்காணிப்பில் தளத்தை ஒப்படைத்திருந்தார்கள். 1914ஆம் ஆண்டு முதலாவது உலக மகாயுத்தம் ஆரம்பமானதினால் 1923ஆம் ஆண்டு மீண்டும் கடற்படைத் தளம் திறக்கப்பட்டது. இந்தப் பிள்ளையார் கோவிலைக் கட்டிய ரஜபுத்திரப் படைப்பிரிவினர் தளத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டகன்றதன் பின் தளத்தில் வேலைக்கமர்த்தப்பட்ட சைவ மக்கள் தொடர்ந்து ஆலயத்தைப் பராபரித்து வந்தார்கள். கப்டன் திரு. கதிர்காமர் என்பவர் இந்த ஆலய அபிவிருத்திக்குப் பெரும் உதவியாயிருந்து வந்தார். இதனால் 1948ஆம் ஆண்டுக்கும், 1950ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் சைவமக்கள் ஒன்று சேர்ந்து "கடற்படை இந்து பரிபாலன சபை" யை அமைத்து கற்பக்கிரகம், அர்த்தமண்டபங்களைக் கொண்டதாயிருந்த கோவிலுக்கு மகாமண்டபத்தையும் புதிதாகக் கட்டிக் கோவில் முழுவதையும் புனருத்தாரணம் செய்து, கும்பாபிஷேகத்தை நடத்தி வழிபட்டு வந்தார்கள். வைரவருக்கும் தனிப்பீடம் அமைக்கப்பட்டது. ஆரம்பத்தில் சைவக்குருக்கள் பூசை செய்து வந்தார். பின்னர் தொடர்ந்து பிராமணர்கள் பூசை செய்து வருகின்றார்கள். காலைச்சந்தி, மாலைச்சந்திகளில் நித்திய பூசைகளும் ஆவணிச் சதுர்த்தி, நவராத்திரி, திருவெம்பாவை, பிள்ளையார்கதை முதலிய விசேட பூசைகளும் நடைபெற்று வருகின்றன. கருவறையில் பிள்ளையார் சிலாவிக்கிரகமும், அர்த்த மண்டபத்தில் எழுந்தருளி விநாயகரும் திருக்காட்சி தருகின்றனர். ஆவணிச் சதுர்த்தியை அடுத்து மூன்று நாட்கள் சுவாமி நகர்வலம் வந்து மக்களுக்குத் திருவருள் புரிவார். இப்போது அந்த நகர்வலம் நிறுத்தப்பட்டுவிட்டது. பொதுமக்கள் இங்கு சென்று வழிபடுவதற்கு நிரந்தரமான அனுமதியும் வழங்கப்பட்டிருக்கின்றது. இந்தப் பிள்ளையாருடைய அருளால் பல அற்புதங்கள் நடைபெற்றதாகக் கூறுகின்றார்கள். கப்பல் துறை என்னுமிடத்திலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்திலுள்ள இந்தக் கோவிலுக்கு யானைகள் கடலில் நீந்திவந்து செல்வதும் ஒரு அற்புத நிகழ்ச்சியாக நடைபெற்று வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பகப் பிள்ளையார் கோவில்

திருக்கோணமலைப் பட்டினத்தில் திருஞானசம்பந்தர் வீதியில் இந்த ஆலயம் இருக்கின்றது. இவ்வாலயத்திற்குச் சமீபத்தில் விஸ்வநாதசுவாமி சிவன் கோவில் இருக்கின்றது. சுமார் இருநூற்றைம்பது வருடங்களுக்குமுன் திரு. கதிர்காமமுதலியார் என்பவர் இந்தச் சிவன் கோவிலைக் கட்டுவதற்காகத் தற்போது கற்பகப் பிள்ளையார் கோவில் கட்டப்பட்டிருக்குமிடத்தில் காணியைத் தர்மசாதனம் செய்து சிறிய மடாலயமொன்றைக் கட்டினார். கோவில் கட்டிடவேலை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, அந்த இடம் பிற்காலத்தில் ஆலயத்தை விஸ்தாரமாகக் கட்டுவதற்குப் போதாமலிருக்கும் என்ற காரணத்தினால், கட்டிட வேலையை அப்படியே கைவிட்டுவிட்டு தற்போதிருக்கும் விஸ்வநாதசுவாமி கோவிலைக் கட்டினார். அவரால் கைவிடப்பட்ட கோவிலை அந்த அயலிலுள்ள மக்கள் கட்டிமுடிக்க எத்தனித்தார்கள். திரு. கதிர்காம முதலியாரால் கைவிடப்பட்டு நீண்டகாலத்திற்குப்பின் அந்த இடத்தில் வாழ்ந்த கற்பகம் என்ற அம்மையார் மேலும் காணிகளைத் தர்மசாதனம் செய்து நிதியுதவியும் செய்தார். அதன்பின் கட்டிப் பூர்த்தி செய்யப்பட்ட கோவிலுக்கு கற்பகப் பிள்ளையார் கோவில் என்று பெயர் வைத்தார்கள். இவ்விடத்தில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களின் ஆழமான சமய பக்தியினால் இவ்வாலயம் அமைக்கப்பட்டதென்ற செய்திகளும் முதியவர்கள் வாயிலாகத் தெரிய வந்தது. பேதாபேதமற்ற பெருமானை வழிபடும் பேதபுத்தி படைத்த ஒருசாராரால் அக்காலத்தில் இந்த ஆலயம் ஒரின மக்களின் கயிலாயமாகக் கட்டியெழுப்பப்பட்டது. அக்காலத்தில் விஸ்வநாதசுவாமி சிவன் கோவிலுக்காகக் கொண்டுவரப்பட்ட பிள்ளையாரின் திருவுருவத்தையே கற்பகப் பிள்ளையார் கோவிலின் கருவறையில் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தார்கள்.

கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபங்களைக் கொண்டதாயிருந்த இவ்வாலயத்தில் சுமார் நூற்றியிருபத்தைந்து வருடங்களுக்கு முன் திரு. நாகன் பரியாரியார் என்பவர் ஸ்தம்ப மண்டபமும், மணிக்கோபுரமும் கட்டிக் கோவிலைப் புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தார். தாழ்த்தப்பட்ட மக்களே இந்த ஆலயத்தை தனித்துவமாகப் பராபரித்து வருகின்றார்கள். இறைவனுடைய சன்னிதானத்தில் தாழ்வு, உயர்வு பார்க்கும் சமூகநோய் இருக்கும் வரையும் ஆலயங்கள் சிறப்படைய முடியுமா? இந்த ஆலயம் இதற்கோர் எடுத்துக்காட்டு.

அர்த்த மண்டபத்தில் எழுந்தருளிப் பிள்ளையாரும், வீரபத்திரர், அம்மனின் முகபடாம், வேல் நாகதம்பிரான், அஸ்திர தேவர் என்பன வைக்கப்பட்டிருக்கின்றன. உள்வீதியில் பத்திரகாளிக்கும், வைரவருக்கும் தனிக்கோவில்களுண்டு. மாசிமகத்தைத் தீர்த்த தினமாகக் கொண்டு அதற்குமுந்திய பத்து நாட்களும் வருடாந்த அலங்கார உற்சவம் நடைபெற்று வந்தது. இரண்டாவது உலக மகாயுத்தத்தின்பின் பூசைகள் யாவும் கைவிடப்பட்டிருந்தன. இப்பொழுது உச்சிக்காலம், மாலைச் சந்தியாகிய நித்திய பூசைகளும் சிவராத்திரி, திருவெம்பாவை, ஆவணிச் சதுர்த்தியாகிய விசேட பூசைகளும் நடைபெற்று வருகின்றன. கோணேசர் ஊர்வலம் நடைபெறும்போது இவ்வாலய பரிபாலன சபையாரும் மக்களும் சேர்ந்து பக்திபூர்வமான வரவேற்புச் செய்து வழிபடுவார்கள். தற்போது இவ்வாலய பரிபாலன சபையின் செயலாளராயிருக்கும் திரு. த. துரைராசா என்பவர் ஆலயத்தின் வரலாறுகளைத் தந்துதவியமைக்கு நன்றி உரித்தாகுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை
# தெய்வானைப் பிள்ளையார் கோவில்

ஆதி மனிதனின் கந்தளி வழிபாடு இலிங்க வழிபாடாகப் பரிணமித்து, இந்துக்களின், சிறப்பாகச் சைவசமயிகளின் மதக் கோட்பாட்டுத் தத்துவம் குறியாக விளங்குவது சிவலிங்கம் "குறியைக் குறியாது குறித்தறியும் நெறி" என்று அருணகிரிநாதர் கூறுகிறார். தெய்வானைப் பிள்ளையார் கோவிலின் மகாமண்டபத்தில் மிகப்பெரிய சிவலிங்க வடிவமான கல்லொன்று காணப்படுகின்றது. வேல் பொறிக்கப்பட்ட மூன்றடி உயரமான கற்தூண் ஒன்றும் இதனருகே ஸ்தாபிக்கப்பட்டு பூசை வழிபாடு நடைபெறுகின்றது.

திருக்கோணமலைப் பட்டினத்தின் மத்தியில் ஹஸ்கிசன் வீதியின் அயலில் தெய்வானைப் பிள்ளையார் கோவில் இருக்கின்றது. செல்வமும் செல்வாக்குமுள்ள குடும்பத்தைச் சேர்ந்த தெய்வானைப் பிள்ளை என்பவர் தமது குடும்பத்தவர்களின் வழிபாட்டுக்காக இவ்வாலயத்தைக் கட்டியதனால் தெய்வானைப் பிள்ளையார் கோவில் என்று பெயர் அமைந்திருக்கலாம்.

தெய்வானைப் பிள்ளையார் கோவிலில் இப்போது பூசகராயிருக்கும் புலவர்.வை.சோமாஸ்கந்தக் குருக்களின் முன்னோர்களில் ஒருவர் தெய்வானைப் பிள்ளை என்பதும், அவரால் கட்டப்பட்டது இக்கோவில் என்பதும், செவிவழிச் செய்தி.

"கோவிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை" என்று பாடிய ஞானசம்பந்தனின் வாக்கிற்கமைய, போர்த்துகீசர் கோணேஸ்வரத்தின் நிகழ்த்திய அழிவுக்குப்பின் திருக்கோணமலையில் வீதி தோறும் கோவில்கள் எழுந்தன. தெய்வானைப் பிள்ளையார் கோவிலும் அவற்றிலொன்றாயிருக்கலாம். கோவில் வீதியில் பத்மபேதி செதுக்கப்பட்ட பல தூண்களும் கிடக்கின்றன. அவற்றின் வரலாறுகளை புதைபொருளாராய்ச்சியாளர்களால் தான் கண்டறிய முடியும். இக் கோவிலுக்குரிய காணிகளில் குடியிருக்கும் மக்கள் வீடுகட்டவோ, கிணறுவெட்டவோ, நிலத்தை அகழ்ந்த போது கேணிப் படித்துறைக் கற்கள் கிடைக்கப் பெற்றதாகக் கூறுவதால் தெய்வானைப் பிள்ளையார் கோவில் ஒரு காலத்தில் சீரும் சிறப்புமாயிருந்த அறிகுறிகள் காணப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை தெய்வானைப் பிள்ளையார் கோவில்

1920ஆம் ஆண்டளவில், ஸ்ரீ க.கு.வைத்தீஸ்வரக் குருக்கள் காலத்தில் இந்தக் கோவிலில் நவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்று வந்ததாக அறியக்கிடக்கின்றது.

இரண்டாவது உலக மகா யுத்தகாலத்தில் தெய்வானைப் பிள்ளையார் கோவிலில் இருந்த மூலஸ்தான விக்கிரகம் அகற்றப்பட்டதால் 1936ஆம் ஆண்டளவில் தெய்வானைப் பிள்ளையார் கோவிலில் இப்போது மூலஸ்தானத்திலிருக்கும் பிள்ளையாரை திரு.ஏ.வை.விஸ்வலிங்கக் குருக்கள் ஸ்தாபித்துப் பூசைசெய்து வந்தததாக அறிகிறோம்.

பலவருடங்களாகப் பழுதடைந்திருந்த ஆலயத்தை தமது முன்னோர்களின் தர்மத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் புலவர் வை.சோமாஸ்கந்தக் குருக்கள் 1960ஆம் ஆண்டளவில் மூலஸ்தானத்தைத் திருத்தியும் 1975ஆம் ஆண்டு தீர்த்தக்கிணறு அமைத்தும் தெய்வானைப் பிள்ளையார் கோவிலைப் புனருத்தாரணம் செய்து பூசை வழிபாடுகளை நிகழ்த்திவந்தார். 1997ஆம் ஆண்டு திரு.வி.சிவலிங்கம், திரு.இ.தங்கவேலாயுதம் என்பவர்களின் ஊக்கத்தாலும் ஆக்கத்தாலும் மகாமண்டபத் திருப்பணி நிறைவேறி பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

கற்பக்கிரகத்தின் மேலுள்ள தூபி மிகப் பழமையானது. கோவில் வீதியில் காணப்படும் பாரிய கற்தூண்கள் போன்ற செதுக்கப்பட்ட கற்கள் தூபியிலும் காணப்படுகின்றன. மகாமண்டபத்தின் வடகிழக்கு மூலையில் திரிசூலம் ஸ்தாபிக்கப்பட்டு வைரவ பூசை நடைபெறுகின்றது.

இக்கோவிலில் காலையில் ஒருவேளைப் பூசை நடைபெறுகின்றது. வெள்ளி, செவ்வாய் நாட்களில் மாலைப் பூசையும் சதுர்த்தி, நவராத்திரி, திருவெம்பாவைப் பூசையும் நடைபெற்று வருகின்றது. ஆலயச் சூழலிலுள்ள வழிபாட்டாளர்களின் ஆதரவுடனும், அணுக்கத் தொண்டர் திரு.வி.சிவலிங்கம் என்பவரின் அனுசரணையுடனும் புலவர்.வை.சோமாஸ்கந்தக் குருக்கள் நித்திய நைமித்திக பூசைகளைச் செய்துவருகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்கரைப் பிள்ளையார் கோவில் பத்தாம் குறிச்சி

திருக்கோணமலைப் பட்டினத்தில் ஏகாம்பரம் வீதிக்கும் கடலுக்கும் இடையில் கடற்கரையோரமாக இந்தக் கோவில் இருக்கின்றது. இன்று இந்தக் கோவிலின் மகாமண்டபம் சிதைவடைந்த நிலையில் காணப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் சுன்னாகம் என்னுமிடத்தில் வாழ்ந்த மெய்ச்சன் என்பவர் சுமார் இருநூறு வருடங்களுக்குமுன் தனது உறவினர்களுடன் திருக்கோணமலைக்கு வந்து குடியேறினார். அக்காலத்திலிருந்த சாதிப் பாகுபாட்டினால் இவர்கள் இங்குள்ள ஆலயங்களுக்குச் சென்று வழிபடமுடியாமையினால் தனக்கும் தன்னின மக்களுக்கும் வழிபாட்டுத் தலமொன்றை உண்டாக்க நினைத்தார். இதனால் தற்போது இந்தக் கோவில் இருக்குமிடத்தில் ஓலைக் கொட்டிலால் ஒரு கோவில் கட்டி அதில் பிள்ளையாரை வைத்து வழிபட்டு வந்தார். அவருக்குப் பின் அவருடைய மகன் திரு. நல்லதம்பியார் என்பவர் தற்போது சிதைவடைந்திருக்கும் கற்கோவிலைக் கட்டித் தங்கள் இனத்தவர்களுக்குள் ஆசாரமும் ஒழுக்கமுமுள்ள ஒருவரை நியமித்துப் பூசை, விழாக்களைச் செய்வித்துவந்தார். இந்தக் கோவிலைக் கட்டிய மெய்ச்சனுடைய சந்ததியாரில் நான்காவது தலைமுறையில் இன்று வாழ்ந்துகொண்டிருக்கும் எழுபத்தொன்பது வயதுடைய திரு. அ. நல்லதம்பி என்பவர் இந்த விபரங்களைத் தந்துதவினார். மெய்ச்சன் நல்லதம்பியின் ஆண் சந்ததியில் வந்தவர்களும், பெண்சந்ததியில் வந்தவர்களும் இவ்வாலயத்திற்கு உரிமைக்காரராயிருந்து ஆலயத்தைப் பராபரித்து வந்தார்கள். தற்போது ஆண் சந்ததி வழியில் வந்த திரு. வாரித்தம்பி என்பவர் கிறீஸ்தவராகி விட்டார். எனினும் இந்தக் கோவிலை மீண்டும் சிறப்பாக நடத்த வேண்டும் என்ற நன்னோக்கத்தினால் பெண்சந்ததி வழியில் வந்த திரு. அ. நல்லதம்பி என்பவரையும் சேர்த்துக் கொண்டு ஆலயப் பொறுப்பை ஏற்று நடத்திவருகின்றார்கள்.

இரண்டாவது உலக மகாயுத்தத்திற்குப் பின்பு இவ்வாலயம் பராபரிப்பை இழந்து நாளாந்தம் சீணித்துவிட்டது. யுத்தத்திற்குமுன் அலங்கார உற்சவங்களும், விசேட பூசைவழிபாடுகளும் மிகச் சிறப்பாக நடைபெற்று வந்திருக்கின்றன. பிள்ளையார்கதை இருபத்தொருநாட்களும், ஆவணிச் சதுர்த்தியும், திருவெம்பாவையும், இவ்வாலயத்தில் மிகப் பயபக்தியோடு நடைபெற்று வந்ததாம். தாழ்த்தப்பட்ட வேறு இனமக்களும் இவ்வாலயத்தில் ஒற்றுமையாக விழாக்களைச் செய்து வந்திருக்கின்றார்கள்.

கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், தெரிசனமண்டபம் என்பவைகளையுடைய கற்கோவிலின் கருவறையில் பிள்ளையார் சிலாவிக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. அர்த்தமண்டபத்தில் பிள்ளையார், அம்பாள், எழுந்தருளி விக்கிரகங்களும், வேலும் வைக்கப்பட்டிருக்கின்றது. மகாமண்டபத்தில் வைரவர் உண்டு. தெரிசனமண்டபத்தில் மூஷிகம், பலிபீடம் காணப்படுகின்றது. தற்போது வெள்ளிக்கிழமைகளில் மாத்திரம் பூசை நடைபெற்று வருகின்றது. இவ்வாலயத்திற்கு முன்னோர் வழங்கியுள்ள மானியச் சொத்துக்களை முறையாகப் பயன்படுத்தினால் விரைவில் இவ்வாலயத்தைப் புனருத்தாரணம் செய்து முன்புபோல் ஆலயத்தைச் சிறப்பாக நடத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாம் குறிச்சிக் கம்பனிப் பிள்ளையார் கோவில்

திருக்கோணமலைப் பட்டினத்தில் ஆரியநாட்டார் குடியிருப்பாகவுள்ள இடத்தில் இவ்வாலயம் இருக்கின்றது. ஆரிய நாட்டார் என்று குறிப்பிடப்படுபவர்களை பட்டணவர் என்றும் கூறுவார்கள். நாகபட்டினத்திலிருந்து வந்த மக்கள் இங்கு வசிப்பதால் பட்டணவர் எனப்பட்டனர். இந்தியாவிலிருந்து வந்தவர்களும் இவ்வூர் மக்களும் சேர்ந்து இந்த இடத்தில் ஒரு கொட்டில் கோவிலைக் கட்டி காமன் பண்டிகை என்ற விசேட விழாவை நடத்திவந்தார்கள். இவ்விழாவில் "லாவணி" என்ற பாடல் பாடப்படும். திருக்கோணமலைச் சிவன் கோவிலில் இருந்து சுவாமியை இவ்வாலயத்திற்கு எழுந்தருளச்செய்து ஆலயத்திற்குமுன்னே நிறுத்தி "லாவணி" என்ற பாட்டு பாடப்படும். இரண்டு கட்சியினராக மக்கள் பிரிந்து நின்று இப்பாட்டைப் பாடுவார்கள். காமனை எரித்த வரலாறு இதில் கூறப்படும். பாடிமுடித்துக் காமனை எரிப்பார்கள். இது காமன் பண்டிகை எனப்படும். அக்காலத்தில் பிரித்தானியப் படையில் சேவையிலிருந்த இந்திய இந்துக்களும் ஆர்வத்தோடு இவ்விழாவிற் பங்கெடுத்து நடத்தி வந்ததாகவும் அறியக் கிடக்கின்றது. இவ்வாலயத்தில் பங்குனி மாதத்தில் மன்மதன் திருவிழாவும், புரட்டாதி மாதத்தில் நவராத்திரி விழாவும் தொடர்ந்து பல ஆண்டுகளாகச் சிறப்பாக நடைபெற்று வந்தன. இக்கோவிலை மன்மதன்கொட்டில் என்றும் அழைப்பார்கள். காமன்விழா இப்போது கைவிடப்பட்டுள்ளது. மன்மதன்கொட்டில் கம்பனிப் பிள்ளையார் கோவிலாக மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றது.

1928ஆம் ஆண்டு பத்தாம் குறிச்சியில் பிரபல செல்வந்தராயிருந்த திரு. கண்ணுச்சாமி என்பவர் பிள்ளையார் ஆலயம் ஒன்றை அமைக்கவிரும்பி இந்தியாவில் இருந்த தனது நண்பனாகிய திரு. அரசப்பர் என்பவரிடம் ஒரு பிள்ளையார் திருவுருவத்தைக் கொண்டுவரும்படி வினயமாக வேண்டிக்கொண்டார். இந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட அரசப்பர் அப்பணியை நிறைவேற்றுவதற்கு முயன்று கொண்டிருந்தார். அக்காலத்தில் நாகபட்டினத்தில் சிலை வடிக்கும் கலைக்கூடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றிருந்தது. இந்தக் கலைக்கூடத்திலே பிள்ளையார் சிலையொன்றை வைத்து வழிபட்டு வந்தார்கள். இந்தக் கலைக்கூடத்திற்கு கம்பனிப் பிள்ளையார் கலைக்கூடம் என்று பெயர் சூட்டப்பட்டிருந்தது. காலப்போக்கில் இந்தக் கலைக்கூடம் கவனிப்பாரற்றுக் கைவிடப்பட்டிருந்தது. இதையறிந்த அரசப்பர் இந்தக் கலைக்கூடத்திலே வைத்து வழிபட்டு வந்த பிள்ளையார் சிலையைப் பெற்றுக்கொண்டு வந்து திரு. கண்ணுச்சாமி என்பவரிடம் கொடுத்தார். அவர் இந்தப் பிள்ளையாரைக் காமன் கொட்டிலாயிருந்த கோவிலில் வைத்து வழிபட்டு வந்தார். கம்பனிப்பிள்ளையார் கலைக்கூடத்திலிருந்து பிள்ளையாரைக் கொண்டுவந்ததால் இது கம்பனிப்பிள்ளையார் கோவில் எனப் பெயர் பெற்றது.

இந்த வட்டாரத்தைச் சேர்ந்த விவேகானந்த கடற்தொழிற் சங்கத்தினர் பத்தாம் குறிச்சி மக்களுடைய ஒத்துழைப்புடன் இந்த ஆலயத்தைக் கற்கோவிலாகக் கட்டி புனருத்தாரணம் செய்து 1973ஆம் ஆண்டு கார்த்திகைமாதம் 22ம் திகதி மகாகும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நடத்தி வைத்தார்கள். அன்று தொடக்கம் அந்தணர்களைக் கொண்டு ஆலயத்திற்குப் பூசை செய்வித்து வருகின்றார்கள்.

இது கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபங்களைக் கொண்ட ஆலயம். கருவறையில் பிள்ளையார் சிலாவிக்கிரகமும், அர்த்தமண்டபத்தில் எழுந்தருளி விக்கிரகமும் வைக்கப்பட்டிருக்கின்றது. காலை, மாலை இரண்டு காலப் பூசை நடைபெற்று வருகின்றது. ஆடியமாவாசியைத் தீர்த்தோற்சவமாகக்கொண்டு அதற்கு முந்திய பத்து நாட்களும் அலங்கார உற்சவம் நடைபெறுகின்றது. மாதசதுர்த்தி, ஆவணிச் சதுர்த்தி, நவராத்திரி, திருவெம்பாவை முதலியன விசேட பூசைகள். பரிபாலனசபை ஆலயத்தைப் பரிபாலித்து வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கம்பனிப் பிள்ளையார் ஆலய திருவூஞ்சல்

## காப்பு

காராரும் கோணமலை கம்பனிப் பிள்ளையார்
சீராரும் ஊஞ்சல் சிறந்திடவே—தாரணியில்
என்னெஞ்சில் பூக்கும் எழில் தாமரையடிகள்
என்னெஞ்சிற் கென்றும் துணை.

## திருவூஞ்சல்

பக்தி வைராக்கியமே கால்களாகப்
பதிவிரதா தர்மமுயர் வளையதாக
உத்தமர்தம் உறவுகளே கயிறதாக
ஒளிகாலும் இல்லறமே பலகையாக
வைத்தபெரு வாழ்க்கையெனும் ஊஞ்சலேறி
வாழிகலை செல்வமென ஆடீரூஞ்சல்
கைத்தலத்தை உயர்த்தியருள் செய்யுஞ் கோணை
கம்பனிப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்.

தேவர்குல மாதரிசை மீட்டிநிற்க
திருமகளும் கலைமகளும் கவரிவீச
நாவலர்கள் பாமாலை சூட்டிநிற்க
நாதசுர வாத்தியத்தின் நாதமோங்க
சேவைசெய்யும் அடியார்கள் உருகிநிற்க
திருக்கோணை யம்பதியில் அமர்ந்து நாளும்
காவல்புரி விநாயகரே ஆடீரூஞ்சல்
கம்பனிப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்

பொய்களவு சூதுமுதற் பாவங்களோடு
போராடிப் போராடி மடியுமிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ கம்பனிப் பிள்ளையார் ஆலய திருவூஞ்சல்

வையகத்தின் ஆட்டங்கள் ஓய ஓய
வாய்மை தயை நேர்மை கொடை ஓங்கி நிற்க
உய்யவரும் பார்வையினை ஈந்து மக்கள்
ஓர்குலமாய் வாழியென ஆடீரூஞ்சல்
கையுயர்த்தி அடியாரைக் காக்குங் கோணை
கம்பனிப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்.

பருவமழை பெய்து பசி பிணிகள் நீக்கி
பாரெங்கும் நல்லறத்தின் பயன்களோங்கி
தருமரங்கள் புல்லினங்கள் தழைத்து என்றும்
தள்ளாத விளையுள்தரும் உழவுமோங்கி
திருவளருங் கோணமலைப் பதியமர்ந்து
தினமருள்செய் விநாயகரே ஆடீரூஞ்சல்
கருவமொடு அகங்காரக் கலைகள் ஒழிய
கம்பனிப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்.

தேமதுரை இசைகாட்டித் சேலைகாட்டித்
திகழ் கொங்கை முனைகாட்டித் தெருவில் நின்று
போமவரின் வருமவரின் இதயம் ஈர்க்கும்
பூவையரின் துணை கொண்டு நடனமாடும்
காமனைத்தன் கனற்கண்ணால் சாம்பராக்கிக்
கற்புநெறி பூவுலகில் ஓங்கச்செய்த
மாமதுரைச் சொக்கரருட் கனியே கோணை
கம்பனிப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்.

முன்னீருஞ் சேர்கடலின் அலைகளாடி
முதுபெருநற் திரவியங்கள் கரையிற் சேர்த்து
பொன்னனைய மாதினோடு கோணைநாதன்
பொற்பமர்ந்து அருட்கண்ணால் நோக்கநோக்க
எந்நாளும் தொழுமடியார்க் கருள் புரிந்து
ஏற்றமுறு தொழில்வளங்கள் பெருகச் செய்யும்
கன்னமத கடகளிற்றுக் கருணை நாதா
கம்பனிப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியார்கள் குடியாக வாழுகின்ற
அலைகடலின் கரையருகே அமர்ந்திருந்து
முடியாத வினையெல்லாம் முடித்துவைக்கும்
முன்னவனே முழுமுதல்வா மூலமூர்த்தி
படிமீது எமைக்காக்கும் பாவநாசா
பரஞ்சுடரே பாதமலர் தொழுது நின்றோம்
செடியாய வல்வினைநோய் கடிதின் நீக்கும்
கம்பனிப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்.

வானவரும் தானவரும் வணங்கி நிற்க
வடிவேலன் உனதருகே மகிழ்ந்து நிற்க
மானமுறு வேதியர்கள் வேதமோதி
மலர்தூவி மந்திரங்கள் ஓதிநிற்க
கானமழை பொழிந்துனது கழல்கள் போற்றி
கந்தருவராதியோர் கனிந்து நிற்க
மீனவரை மானமொடு வாழவைக்கும்
கம்பனிப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்.

நெல்வயல்கள் உழுவார்கள் வடந்தொட்டாட்ட
நீரிறைத்துப் பயிர்செய்வார் வடந்தொட்டாட்ட
கல்வி குணம் படைத்தோர்கள் வடந்தொட்டாட்ட
கன்னியரும் காளையரும் வடந்தொட்டாட்ட
சொல்லரிய ஞானிகளும் வடந்தொட்டாட்ட
சுந்தர விநாயகரே ஆடீரூஞ்சல்
கல்லிலிருந் தருள்பொழியும் கோணை மேவும்
கம்பனிப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்.

ஆதிமுதலானரே ஆடீரூஞ்சல்
ஆனைமுக மானவரே ஆடீரூஞ்சல்
சோதி வடிவானவரே ஆடீரூஞ்சல்
சுருதி மறையானவரே ஆடீரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ கம்பனிப் பிள்ளையார் ஆலய திருவூஞ்சல்

பேதமெலாம் அகன்றிடவே ஆடீரூஞ்சல்
பீடைதுயர் ஒழிந்திடவே ஆடீரூஞ்சல்
காதலுடன் தொழுதேத்தும் கோணை மேவும்
கம்பனிப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்.

## வாழி

ஆதி முதலானவரே வாழி வாழி
ஆழிக்கரை அமர்ந்தவரே வாழி வாழி
சோதிவடி வானவரே வாழி வாழி
சுந்தர வினாயகரே வாழி வாழி
கந்தனுக்கு முன்பிறந்தாய் வாழி வழி
கருணை நமக்கீந்தவரே வாழி வாழி
கங்கைக் கடலருகில் கோயில் கொண்ட
கம்பனிப் பிள்ளையாரே வாழி வாழி

## எச்சரிக்கை

சிவனார்தரு முதல்வா உமைபாலா எச்சரிக்கை
பவமோசன கருணாகர பரனே எச்சரிக்கை

கயமுகனைச் செருவென்றிடு கஜமுகவா எச்சரிக்கை
கருணைபுரி உயர்கம்பனிப் பிள்ளாய் எச்சரிக்கை

பல்லாயிர கணங்கள் தொழும் பாலா எச்சரிக்கை
எல்லாரையும் காக்கும் எங்கள் ஈசா எச்சரிக்கை

முன்னாள் கிரிதன்னில் பாரதமெழுதும் பெருமானே
என்னேரமும் எமைக்காத்திடும் இறைவா எச்சரிக்கை

உன்னைப் பணி அடியார்க்கருள் செய்வாய் எச்சரிக்கை
ஓங்காரத்துப் பொருளானாய் உருவானாய் எச்சரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பராக்கு

திருமருவு கோணமலைத் தேவே பராக்கு
திவ்யமுக ஐங்கரத் தேவே பராக்கு

வரமருளி மீனவரைக் காப்பாய் பராக்கு
வக்ரதுண்ட வினாயகரே வரதா பராக்கு
தந்தைரதம் அச்சிறுத்த தனையா பராக்கு
தந்திமுகனே கம்பனிப் பிள்ளாய் பராக்கு

அகத்தியனுக் கருள்புரிந்த அத்தா பராக்கு
அன்னசிவ காமியருள் பாலா பராக்கு

முன்னைவினை தீர்த்தருளும் முதல்வா பராக்கு
மோதகப் பிரியனே அருள்வாய் பராக்கு.

## லாலி

லாலி லாலி லாலி லாலி லாலி
லாலி லாலி லாலி லாலி லாலி

கங்கையணி சங்கரர்க்கு மைந்தா லாலி
கம்பனிப் பிள்ளையார் கோவில் வந்தாய் லாலி

எங்கள் குல தெய்வமே லாலி லாலி
துங்கமுக ஐங்கரனே லாலி லாலி

அங்குச பாசங்கொண்ட ஆனை லாலி
அன்னை உமை பாலகனே லாலி லாலி

ஆழ்கடலில் மீனவரைக் காப்பாய் லாலி
ஆனைமுக வள்ளலே லாலி லாலி

பானைவயிற் றோனே பரம்பொருளே லாலி
பக்தர்களைக் காத்திடுவாய் லாலி லாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ கம்பனிப் பிள்ளையார் ஆலய திருவூஞ்சல்

### மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் ஜெய ஜெய
மங்களம் மங்களம் மங்களம்

தந்திமுக கும்பமத ஐங்கரற்கு மங்களம்
அங்குச பாசம்பிடிக்கும் ஐயனுக்கு மங்களம் (மங்)

சித்தி புத்தி தேவியர்கள் சேரும்சிவ பாலனுக்கும்
சத்தியுமை பாலனுக்கும் சங்கரர்க்கும் மங்களம் (மங்)

தும்பிமுகங் கொண்டதிரு கம்பனிப் பிள்ளையாருக்கும்
தம்பிதனைக் காக்கவனம் வந்தவர்க்கும் மங்களம் (மங்)

தொண்டுசெய்யும் அடியவர்கள் துன்பங்களைத் தீர்ப்பவற்கும்
அண்டர் தொழும் ஐயனுக்கும் ஆனைமுக வள்ளலுக்கும் (மங்)

கோணமலை வாழ்பவர்க்கும் கொத்தடிமை செய்பவர்க்கும்
வானவர்க்கும் மீனவர்க்கும் ஏனையோர்க்கும் மங்களம். (மங்)

குறிப்பு: *கழகப்புலவர் பெ.பொ.சிவசேகரம் இவ்வூஞ்சலில் ஏழுபாடல்களைப் பாடிவைத்திருந்தார். அதனை நிறைவு செய்து தரும்படி ஆலய பரிபாலனசபையார் கேட்டுக் கொண்டதால் ஊஞ்சலில் 6ம் 7ம் 8ம் பாடல்களையும் எச்சரிக்கை, பராக்கு, லாலி, மங்களம் என்பனவற்றையும் பாடி நிறைவு செய்து கொடுக்கப்பட்டது.*

ஞானசிரோன்மணி
பண்டிதர் இ.வடிவேல்
05.07.94



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்குளம் பிள்ளையார் கோவில்

திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து அனுராதபுரம் செல்லும் நெடுஞ்சாலையில் இருபத்து நான்கு கில்லோமீற்றர் தூரத்திலுள்ள கிராமம் பன்குளம். இங்கிருக்கும் குளத்தில் பாய்முடைவதற்குரிய "பன்" என்று சொல்லப்படுகின்ற ஒருவகைப் புல் வளர்வதால், பன்குளம் எனப் பெயர் பெற்றது. குளத்தின் பெயரே ஊருக்குமாயிற்று.

அனுராதபுரத்திற்குச் செல்லும் நெடுஞ்சாலையை அமைத்த காலத்தில், வீதியமைப்புவேலை செய்த தொழிலாளர்கள் இந்த இடத்தில் வாடியமைத்துத் தங்கியிருந்தார்கள். அவர்களில் ஒருவர் ஒருநாள் இயற்கைக் கடன் கழிப்பதற்காகக் காட்டிற்குள் சென்றபோது ஒரு குருந்த மரத்தடியில் எதிர்பாராதபடி ஒரு ஒளி மிகப் பிரகாசமாகத் தோன்றியதாம். அந்த ஒளியினால் அவர் அறிவுமயங்கி விழுந்துவிட்டார். இங்கிருந்த தொழிலாளர்களுக்கு மேற்பார்வையாளராக இருந்த திரு.வேலுப்பிள்ளை என்பவர், இதனை அறிந்து அவரைத் தூக்கிக்கொண்டு வந்து மயக்கம் தெளிவித்தார்கள். மயங்கித் தெளிந்தவர் தாம் குருத்த மரத்தடியிற் கண்ட அதிசயத்தைக் கூறினார். இந்தத் தெய்வீக நிகழ்ச்சியை உணர்ந்த வேலுப்பிள்ளை என்பவர் குருந்த மரமிருந்த இடத்திலுள்ள காட்டை வெட்டித் துப்புரவாக்கி அவ்விடத்தில் ஒரு சிறு கொட்டிற்கோவில் கட்டிப் பிள்ளையாரை வைத்து வழிபட்டு வந்தார்.

கடந்த அறுபது வருடங்களாக இந்தக் கோவிலில் பூசை செய்துவந்த திரு. செட்டிப்பிள்ளை பொன்னையா என்பவர் இந்த வரலாற்றைக் கூறுகின்றார். தொண்ணூறு வயதைத் தாண்டிவிட்ட பொன்னையா என்பவருக்குக் கண்பார்வையும் மங்கிக் காதும் கேளாது தள்ளாத வயதிலும் உற்சாகமாகவும் பரவசமாகவும் இவ்வாலயத்தின் வரலாற்றைத் தந்ததற்கு நன்றி கூறுகின்றேன். திரு.வேலுப்பிள்ளை என்பவர் அதிசயமான ஒளிதோன்றிய குருந்த மரத்தடியில் சுமார் இருநூறு வருடங்களுக்குமுன் கட்டிய கொட்டிற் கோவிலை அவருக்குப் பின் அவருடைய மகன் திரு.தாமோதரப்பிள்ளை ஆதரித்து வந்தார். இவருடைய மறைவுக்குப்பின் அவருடைய மகனாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.சீவரெத்தினம் என்பவர் இந்தக் கொட்டிற் கோவிலைக் கல்லால் கட்டிப் பிள்ளையாரை ஸ்தாபித்து பூசை விழாக்களைச் செய்வித்துவந்தார். அக்காலத்தில் இந்தக் கோவில் மிகவும் பிரபல்யமடைந்திருந்தது. மோட்டார் வாகனங்களைப் பயன்படுத்தாத பண்டைக் காலத்தில் மாட்டு வண்டிகளில் மக்கள் வந்து பொங்கிப் பூசை வழிபாடுகளைச் செய்துவந்தார்கள். இந்தக் கோவிலைத் தாண்டிச் செல்லும் வாகனங்களும், பிரயாணிகளும் பிள்ளையாருக்குத் தேங்காயுடைத்துக் காணிக்கை செலுத்தாமல் செல்வதில்லை.

ஆலயத்தின் கருவறையில் சீவரெத்தினம் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்ட பிள்ளையாரே இன்றும் இருக்கின்றார். இரண்டடி உயரமுள்ள லிங்கவடிவான பெரிய கல்லில் பிள்ளையாரின் திருவுருவம் செதுக்கப்பட்டிருக்கின்றது. மகாமண்டபத்தில் வைரவர், நாகதம்பிரான், பத்தினியம்மன் முகக்களை என்பன வைக்கப்பட்டிருக்கின்றன. நவராத்திரியில் பத்தினியம்மன் முகக்களையைக் கும்பத்தில் ஆவாகனம் செய்துவைத்து அலங்கார உற்சவம் பத்து நாட்களுக்கு நடைபெற்று வருகின்றது. ஆவணிச் சதுர்த்தி, திருவெம்பாவை முதலிய விசேட பூசைகளும் நடைபெறுகின்றன. தற்போது பொன்னையாவின் மகன் திரு.முருகையா என்பவர் பூசைசெய்து வருகின்றார். ஆதியில் இந்தக் கோயிலை ஸ்தாபித்த வேலுப்பிள்ளை என்பவர் சிறந்த விஷவைத்தியர். அவர் அக்காலத்திலிருந்து அரசாங்க அதிபரின் மனைவிக்கு விஷம் தீண்டியபோது விஷநீக்கம் செய்து குணப்படுத்தியதினால் வெள்ளைக்கார அரசாங்க அதிபர் இந்தக் கோவிலுக்கு முன்னூற்று முப்பத்து மூன்று ஏக்கர் காணியை நன்கொடையாக வழங்கியிருந்தாராம். இப்பொழுது ஒரு ஏக்கர் காணிகூட ஆலயத்திற்குச் சொந்தமாயில்லையென்று கூறுகின்றார்கள். இந்தக் கோவிலைக் கட்டிய பரம்பரையினரோ, இங்கு விவசாயம் செய்பவர்களோ இவ்வாலயத்தைப் புனருத்தாரணம் செய்யாதிருப்பது வேதனைக்குரிய விஷயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னியாய் பிள்ளையார் கோவில்

இலங்கையில் மிகப் பிரசித்திபெற்ற கன்னியாய் வெந்நீரூற்றுக்களுக்கு அண்மையில் இந்த ஆலயம் இருக்கின்றது. திருக்கோணமலையிலிருந்து அனுராதபுரம் செல்லும் நெடுஞ்சாலையில் எட்டுக் கில்லோமீற்றர் தூரத்திலிருந்து தெற்கே பிரிந்து செல்லும் வீதியாற் சென்று இவ்வாலயத்தை அடையலாம். இந்த இடம் திருக்கோணேஸ்வரத்தோடும், இராவணனுடைய சரித்திர சம்பவங்களோடும் தொடர்புடைய நீண்டகால வரலாற்றையுடையது. இராவணன் தனது தாயார் வழிபடுவதற்காக லிங்கத்தைப் பெற்றுச் செல்வதற்கு, கோணேசப் பெருமானை நினைத்துக் கோணேஸ்வரத்திலிருந்து தவம் செய்தான். கோணேசப் பெருமான் திருக்காட்சி கொடுக்காததினால் ஏமாற்றமடைந்து, கடுஞ்சினங்கொண்டு கோணமாமலையையே வாளால் வெட்டி எடுத்துச் செல்ல முயற்சித்தான். அவன் மலையை வெட்டிப் பிளந்த இடத்திற்கு இன்றும் இராவணன்வெட்டு என்ற பெயர் வழங்கி வருகின்றது. அவன் மலையை வெட்டி அசைத்தபோது இறைவன் தனது காற்பெருவிரலால் அழுத்த இராவணன் மலையின் கீழ் அகப்பட்டு விட்டான். இந்தச் செய்தியையறிந்த அவனுடைய தாயானவள் தனது மைந்தன் இறந்துவிட்டான் என்று நினைத்து, மனத்துயரினால் தானும் இறந்துவிட்டாள். ஆனால் இராவணன் அகந்தையொழிந்து, இறைவனை நினைத்துச் சாமகீதம் பாடித் திருவருளுக்குப் பாத்திரமானான். இறைவனிடமிருந்து வீரவாளையும், நீண்ட ஆயுளையும் பெற்ற இராவணன், தனது தாயார் இறந்த செய்தியை அறிந்து கவலையுற்றுத் தாயாருக்கு அந்தியக்கிரியை செய்வதற்காகத் தனது வாளால் நிலத்தைக் குத்தி நீரூற்றை வருவித்தான். அவன் குத்திய ஏழு இடங்களிலுமிருந்து ஏழு வெந்நீரூற்றுக்கள் சுரந்து வெளிப்பட்டன. அவைகளே கன்னியாய்வெந்நீரூற்றுக்களென்று புராணங்கள் கூறுகின்றன. இராவணனால் தொடங்கிவைக்கப்பட்ட அந்தியக்கிரியைச் சடங்குகள் இன்றும் இவ்விடத்தில் நடைபெற்று வருகின்றன. சைவசமயத்தவர்கள் தங்கள் அந்தியேட்டிக் கருமங்களைக் கன்னியாயில் இன்றும் செய்து வருகின்றார்கள்.

கற்பக்கிரகம், அர்த்தமண்டபங்களைக் கொண்ட கற்கோவிலொன்று இங்கிருக்கின்றது. மிகப் பழமை வாய்ந்த இவ்வாலயம் எப்போ ஆரம்பிக்கப்பட்டதென்பது தெரியவில்லை. வெந்நீரூற்றுக்கு நீராடச் செல்பவர்கள் இவ்வாலயத்திலிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையாரைத் தரிசித்து வழிபட்டு வருகின்றார்கள். இயற்கையழகு தவழும் இந்த இடம் மனதிற்கு இதமாகவும் சுகமாகவும் இருக்கின்றது. கமுகஞ்சோலைகள் ஆலயத்தைச் சுற்றிக் காணப்படுகின்றன. காற்றில் அவைகள் அசைவதனால் எழுகின்ற ஓசை ஓங்கார நாதம்போல் ஒலித்துக்கொண்டிருக்கின்றது. இந்த ஆலயம் மலையடிவாரத்தில் இருக்கின்றது. மலையில் ஒற்றையடிப் பாதைவழியே ஏறிச்செல்லலாம். மலையுச்சியில் ஒரு முஸ்லீம் பெரியார் அடங்கியிருக்கும் நாற்பதடி நீளமான சமாதியொன்றிருக்கின்றது. அந்த மலையுச்சியில் நின்று பார்த்தால் திருக்கோணேஸ்வரம் பளிச்சென்று தெரியும்.

கன்னியாய் பிள்ளையார் கோவிலமைப்புப் பழமையைக் காட்டுகின்றதேயொழிய காலத்தைக் கூறமுடியாமலிருக்கின்றது. இராவணனுடைய வரலாற்றையும், இந்தத் தலத்தின் பெருமையையும் கூறும் சிறுகுறிப்புக்கள் எழுதப்பட்ட விளம்பரப் பலகையொன்று அங்கே வைக்கப்பட்டிருக்கின்றது. பூசகர் ஒருவர் நித்தியபூசை செய்துகொண்டிருக்கின்றார். விசேட பூசைகள் அங்கு நடைபெறுவதில்லை. கன்னியாய் வெந்நீரூற்றுக்கள் ஏழும் மதிற்சுவரால் பாதுகாக்கப்பட்டு பராபரிக்கப்படுகின்றன. முற்காலத்தில் இவ்வாலயத்தையும், வெந்நீரூற்றுக்களையும் திருக்கோணமலையிலுள்ள முத்துமாரியம்மன் கோவில் மணியகாரர் பராபரித்து வந்தார்கள். இப்பொழுது உப்புவெளிக் கிராமசபை பராபரித்து வருகின்றது.

கன்னியாய்ப் பிள்ளையார் கோவிலுக்கு அருகிலுள்ள வெந்நீரூற்றுக்கள் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தவை. திருக்கோணேஸ்வரத்தோடு தொடர்பு பட்ட வரலாற்றுப் பெருமையுடையது. ஆடியமாவாசைத் தினங்களில் விசேட தீர்த்தோற்சவ விழாவின்போது **1961**ஆம் ஆண்டு புலவர்மணி, கலாநிதி திரு. ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்களால் பாடப்பெற்ற "கன்னியாய்த்திரு" கவிதைகள் இவை.

## கன்னியாய்த் திரு

திருந்துமினிய மனச் சான்றோர் சினம்போல் வெம்மை செய்தேநீர்
சுரந்து வருவ தென்னே நீ சொல்வாய் கன்னியாய்த் திருவே
சுரந்து வருவ தென்னையெனில் தொட்டேயென்னை யணைவார்க்கு
மருந்தாய்ப் பாவம் பிணிதீர்க்கும் வகையென்றுணர்வீர் மாந்தர்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னியாய் பிள்ளையார் கோவில்

சைவர் பவுத்தர் கிறிஸ்தவர்கள் சார்ந்தெச் சமயத்தோருமுனை
மெய்தொட்டாட விரும்புவதேன் விளம்பாய் கன்னியாய்த் திருவே
மெய்தொட்டாடக் கண்டுள்ளம் விரும்புந்தன்மையுரைத்திடுவேன்
தெய்வமெவர்க்கும் பொதுவென்னும் திறத்தை விளக்குஞ் செயல்கண்டீர்.

அள்ள அள்ளக் குறையாமல் வெந்நீர்ச் செல்வமதையருளி
மெள்ளத் தவழ்ந்து வருவதென்னே விளம்பாய் கன்னியாய்த் திருவே.
மெள்ளத் தவழ்ந்து வருஞ்செயலால் விரும்பியுலகோர் மென்மேலும்
கொள்ளக் கொள்ளக் குறையாத கல்விபோல்வேனென வுணர்வீர்.

அன்னை தனக்கா யிராவணனார் அந்தியேட்டி செய்யவென்று
உன்மையமைத்த துண்மையதோ உரைப்பாய் கன்னியாய்த்திருவே
என்னையமைத்தா ரிராவணனா ரென்னுமுரைகொண் டுயர்சைவத்
தொன்மை நெறியி லவர்நின்ற தொடர்பையுணர்வீர் சைவர்களே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டித்திடல்
# ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்

பட்டித்திடல் கொட்டியாபுரப் பற்றில் மூதூரிலிருந்து ஐந்து மைல் தூரத்திலுள்ள பழமையான கிராமமாகும். திருக்கோணேஸ்வரத்தில் ஆலயத் திருப்பணிகள் செய்த குளக்கோட்டு மன்னன் கோணேஸ்வரத்தைப் பரிபாலனம் செய்வதற்காக திருக்கோணமலை மாவட்டத்தை கொட்டியாபுரப்பற்று, கட்டுக் குளப்பற்று, தம்பலகமப்பற்று என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்துப் பரிபாலித்து வந்தான் என்பதை கோணேசர் கல்வெட்டு எனப்படும் சாசன ஏட்டிலிருந்து அறியக்கூடியதாயிருக்கிறது.

கோணேஸ்வரத்தின் தொழும்பாளர்களாக குளக்கோட்டு மன்னனால் குடியமர்த்தப்பட்டவர்கள் கொட்டியாபுரப் பற்றிலும் வாழ்ந்தார்கள். கி.பி. 1624ஆம் ஆண்டு போத்துக்கீசர் கோணேஸ்வரத்தை அழித்தபின் கொட்டியாபுரப் பற்றிலுள்ள கிராமங்களில் வாழ்ந்த தொழும்பாளர்களின் வழித்தோன்றல்கள் அங்கங்கே கிராமங்கள் தோறும் வழிபாட்டுத் தலங்களை அமைத்து வாழ்ந்தார்கள்.

பட்டித்திடல் என்பது கோணேஸ்வரத்துக்குப் பால், தயிர், நெய் என்பனவற்றை வழங்குவதற்காக பசுக்களைப் பட்டி பட்டியாக கட்டி வளர்த்த கிராமம். இந்தக் கிராமம் மூதூரிலிருந்து ஐந்து மைல் தூரத்தில் மல்லிகைத் தீவையடுத்து மூதூர் மட்டக்களப்பு நெடுஞ்சாலையில் இருக்கின்றது.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்கலாகாது என நினைத்த வையன்–வெள்ளையன் என்பவர் 1892ஆம் ஆண்டு ஒரு கல்லைப் பிள்ளையாராகப் பாவனை செய்து ஓர் ஆலமரத்தடியில் வைத்து வழிபட்டுவந்ததாக அறியக்கிடக்கின்றது. இதனால் இந்தப் பிள்ளையார் ஆலடிப் பிள்ளையாரென வணங்கப்பட்டார். சிறு கொட்டிலாயிருந்த ஆலடிப் பிள்ளையார் கோவிலை மரங்களினால் பெரிய கோயிலாகக்கட்டி ஓலையால் வேய்ந்து 1912ஆம் ஆண்டு திருக்கோணமலைக் கடற்கரைப் பிள்ளையார் கோவிலில் இருந்து பிள்ளையார் சிலாவிக்கிரகமொன்றை நல்லதம்பி வைத்தியலிங்கம் என்பவரின் உபயமாகக் கொண்டுவரப்பட்டு பட்டித்திடல் பிள்ளையார் ஆலயத்தில் வைத்து வழிபட்டு வந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டித்திடல் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்

1948ஆம் ஆண்டு இந்தக் கொட்டில் கோவிலைக் கற்கோவிலாகக் கட்டுவதற்கு இந்து சேவா வாலிபசங்கம் ஒன்றை அமைத்து பட்டித்திடல் மக்களின் உதவியுடன் கல்லாலயம் அமைப்பதற்கு முயற்சித்து 1965ஆம் ஆண்டு சிவானந்த தபோவனத் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சச்சிதானந்த யோகீஸ்வரரால் ஆகம விதிப்படி ஆலயம் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டது. இந்து சேவா வாலிப சங்கத்தின் விடாமுயற்சியால் ஆலயத் திருப்பணி பூர்த்தி செய்யப்பட்டு 06.09.76ல் மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நிறைவேறியது.

புதிதாக அமைக்கப்பட்ட மடாலயத்தில் கற்பக்கிரகம் அர்த்த மண்டபம்—மகாமண்டபம் என்பன அமைந்துள்ளது. கற்பக்கிரகத்தில் புதிதாகச் செய்யப்பட்ட சிலாவிக்கிரகம் பிள்ளையார் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. முன்னர் வழிபாட்டிலிருந்த பிள்ளையார் விக்கிரகம் அர்த்த மண்டபத்தில் வைத்து வழிபாடு செய்யப்படுகின்றது. வடக்குத் திசையில் தீர்த்தக் கிணறும் ஈசானத்தில் வைரவர் திரிசூலமும் பிரதிஷ்டை செய்யப்பட்ட வைரவர் கோவிலும் இருக்கின்றது.

நித்திய பூசை மூன்றுகாலமும் நடைபெற்று வருகின்றது. விசேடபூசை வழிபாடுகளாக சித்திரைப் புதுவருடப் பிறப்பு, சித்திரைக் கஞ்சி, ஆடி அமாவாசை, ஆவணி ஓணத்திருவிழா, விநாயகர் சதுர்த்தி, கந்தசஷ்டி, தீபாவளி விஷேடபூசை, பிள்ளையார்கதை, திருவெம்பாவை, தைப்பொங்கல், தைப்பூசம், மகாசிவராத்திரி என்பன நடைபெற்று வருகின்றன.

இந்த ஆலயத்தில் வைகாசிப் பூரணையன்று கண்ணகை அம்மனுக்கு விஷேடபூசை நடைபெறுகின்றது. ஒரு வருடத்தில் ஒரு நாள் கண்ணகை அம்மனுக்காக தற்காலிகமான மண்டபம் அமைத்து அதில் அம்பாள் விக்கிரகத்தை வைத்து பூரணையன்று பொங்கல் விழாவும், விடிகாலையில் குளுர்த்திப் பாடல் படித்து சடங்குப் பூசையும் நடைபெற்று வருகின்றது. அன்று மக்களுக்கு தயிர்ச் சாதமும் பாணக்கமும் பிரசாதமாக வழங்கப்படுகின்றது.

பட்டித்திடலில் சுமார் முன்னூறு சைவக் குடும்பங்கள் வாழ்கின்றன. இந்த விசேட விழாவுக்காக அயல் கிராமங்களிலிருந்தும் மக்கள் வந்து கூடுவார்கள். இவ்விழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமமக்களின் கலை கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் மிகவும் பயனுள்ள விழாவாக நடைபெற்று வருகின்றது.

பட்டித்திடல் பிள்ளையார் கோவில் பூசை உரிமை முன்னாளில் பூசை செய்துவந்த பரம்பரைக்குரியதாகப் பேணப்பட்டு வருகின்றது. இப்போது கந்தன்–அருணாசலம் என்பவர் பூசை செய்து வருகிறார்.

இவ்வாலயத்துக்கு சுவாமி தந்திரதேவா அவர்களின் உதவியுடன் மணிக் கோபுரம் கட்டப்படுகின்றது. இராமக் கிருஷ்ண சங்கக் கொழும்புக்கிளைத் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாந்த மகராஜ் அவர்கள் இவ்வாலயத்துக்கு விஜயம் செய்து நூல் நிலையம் அமைப்பதற்கு நூல்களும் அலுமாரியும் வழங்கியுள்ளார். இந்து இளைஞர் மன்றத்தின் ஊக்குவிப்பினால் அறநெறிப் பாடசாலை ஞாயிறு தோறும் நடைபெறுகிறது. வெள்ளிக்கிழமை தோறும் ஆலயத்தில் கூட்டுப் பிரார்த்தனையும் நடைபெற்று வருகின்றது. பட்டித்திடல் இந்து இளைஞர் மன்றச் செயலாளர் திரு.யோகேந்திரன் அவர்கள் இவ்வாலயத்தை முன்னின்று நடத்தி வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உவர்மலை
# ஸ்ரீ விநாயகர் ஆலயம்

திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் உவர்மலை ஸ்ரீ விநாயகர் ஆலயம் இருக்கின்றது உவர்மலை மத்திய வீதி வழியாகப் போய் ஸ்பெல்வின் வீதியின் வலப்பக்கக் கிளைப்பாதை வழியாகச் சென்று விநாயகர் வீதி வழியாக இவ்வாலயத்தைச் சென்றடையலாம்.

அமெரிக்கப் பிரஜையான சுவாமி தந்திரதேவா அவர்கள் இந்துசமய கலாசாரத்தில் ஊறித் திளைத்த ஆசாரசீலர். இந்து சமய சாஸ்திரங்களைக் கற்றுத் தெளிந்து அதன்படி ஒழுகும் உத்தமர். சனாதனதர்மத்தைச் கடைப் பிடித்து வாழுபவர். அவர் கிராமப்புறங்களில் ஆலயம் இல்லாத இடங்களுக்குச் சென்று மக்களுக்குச் சிறிய ஆலயங்களைக் கட்டிக் கொடுத்து சிவநெறியில் மக்கள் வாழுவதற்கு உதவுகிறார். அவ்வாறே அவர் உவர்மலையில் வசிப்பதற்கு வந்த காலத்தில் உவர்மலை மக்களுக்கு ஸ்ரீ விநாயகர் ஆலயத்தைக் கட்டிக் கொடுத்தார்.

சிவாச்சாரியப் பெருமக்களின் ஆலோசனையோடு ஆகமசாஸ்திர முறைப்படி 1984ஆம் ஆண்டு ஸ்ரீ விநாயகர் ஆலயத்துக்கு அடிக்கல் நாட்டி சிறந்த சிற்பாசாரியரைப் கொண்டு ஆலயத்தைக் கட்டிமுடித்து உவர்மலை மக்களுக்கு வழங்கினார்.

தூபியுடனான கற்பக்கிரகமும், அர்த்த மண்டபம், மகாமண்டபங்களைக் கொண்ட அழகிய ஆலயம் கட்டப்பட்டது. ஆலயத்துக்கு மணிக் கோபுரமும் சுற்று மதிலும் கட்டப்பட்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

கற்பக் கிரகத்தில் விநாயகர் சிலாவிக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. அர்த்த மண்டபத்தின் வலது பக்கத்தில் சிவலிங்கப் பெருமானும், வேலும், வைரவர் திரிசூலமும், வெள்ளியினால் செய்யப்பட்ட நாகதம்பிரானும் வைக்கப்பட்டு பூஜை நடைபெற்றுவருகிறது. மகாமண்டபம் தெரிசன மண்டபமாகவும் பயன்பட்டு வருகின்றது.

மகா மண்டபத்தின் வலது பக்கத்தில் "கிருஷ்ணலோக" மண்டபத்தை சுவாமி தந்திரதேவா அவர்கள் 17.10.90இல் அமைத்துள்ளார். அதில் பகவத்கீதை வகுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்று வருகின்றது. கீதைவகுப்பை திரு.ந.கணபதிப்பிள்ளை என்பவர் முன்னின்று நடத்தி வருகிறார்.

கீதை வகுப்பில் பயிலும் அன்பர்களில் ஒருவர் கீதா போதத்தின் மன நிறைவினால், பஞ்சலோகத்தினாலான மகாவிஷ்ணுவின் அனந்த சயனத் திருவுருவத்தையும், மகாலெட்சுமி, ஆஞ்சனேயரையும் ஆலயத்துக்கு அன்பளிப்புச் செய்துள்ளார். அந்த தாமிர விக்கிரகங்கள் விநாயகர் ஆலய அர்த்த மண்டபத்தில் வைக்கப் பெற்று பூசை வழிபாடு நடைபெற்று வருகின்றது.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பகவத்கீதை வகுப்பு நடைபெறுகிறது. ஒவ்வொரு ஏகாதசியிலும் மகாவிஷ்ணுவுக்கு சகஸ்ர நாம அர்ச்சனை நடைபெறுகின்றது. அர்ச்சனையின்போது பகவத்கீதை படிக்கும் அன்பர்கள் தமது கரங்களினாலேயே துளசி தளத்தை எடுத்து மகாவிஷ்ணுவுக்கு அர்ச்சனை செய்து வருகின்றார்கள்.

விநாயகர் ஆலயத்தில் இருநேரப் பூசைகள் நடைபெற்று வருகின்றது. விநாயக சதுர்த்தி, பிள்ளையார் காப்பு விரதம், திருவெம்பாவை, சிவராத்திரி, நவராத்திரி, கந்தசஷ்டி, என்னும் விஷேட பூசை வழிபாடுகளும், வைகுண்ட ஏகாதசியன்று விசேஷ அபிஷேகம், பூசைகளும் நடைபெற்று வருகின்றன.

சுவாமி தந்திரதேவா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஆலயம் இப்போது திரு. எ. நமசிவாயம் என்பவரை தலைமையாகக் கொண்ட பரிபாலன சபையால் நடத்தப்பெற்று வருகின்றது. ஸ்ரீ வைத்தியலிங்கக் குருக்களும் அவருடைய பிள்ளைகளும் விநாயகர் ஆலய பூசைகளைச் செய்து வருகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தில்லையம்பலப் பிள்ளையார் கோவில்
# தம்பலகமம்

திருக்கோணமலை மாவட்டத்தில் பிரசித்திபெற்ற ஆதிகோணநாயகர் எழுந்தருளியிருக்கும் தம்பலகமத்தில் பட்டிமேடு என்னுமிடத்தில், திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து இருபத்துமூன்று கில்லோமீற்றர் தூரத்தில் இந்தக் கோவில் இருக்கின்றது.

தற்போது இந்தக் கோவில் இருக்குமிடத்தில், ஒரு ஆலமரம் இருந்தது. அந்த ஆலமரத்தின்கீழ் முட்டைவடிவமான ஒரு பிள்ளையார் கல்லை சுமார் இருநூறு வருடங்களுக்கு முன் வைத்து வழிபட்டு வந்தார்கள். இந்தப் பிள்ளையாரை வைத்து ஆதரித்துவந்தவர்களோடுள்ள உட்பகை காரணமாக யாரோ ஒருவர் இந்தக் கல்லை இரவோடிரவாகத் தூக்கிக் கொண்டுபோய் தூரத்திலுள்ள வயல் வெளியில் போட்டு விட்டார்கள். அடுத்த நாள் பிள்ளையார் கல்லைக் காணாமையால் துயரமடைந்த திரு. காளியப்பு என்பவர் பிள்ளையாருக்கு நேர்த்திவைத்துத் தேடிச்சென்று பிள்ளையாரைக் கண்டுபிடித்தார். அதனைத் தூக்கியபோது தூக்கமுடியாமல் மிகப் பாரமாயிருந்ததாம். பின்னர் ஏழு, எட்டுப்பேர் சேர்ந்து தூக்கிவந்து முன்போல ஆலமரத்தடியில் வைத்து வழிபட்டு வந்தார்கள். பல வருடங்களுக்குப்பின் திரு. கா. சுப்பிரமணிய உடையார் என்பவர் அந்த இடத்தில் ஒரு கொட்டில் கோவிலைக் கட்டி அந்தப் பிள்ளையாரை ஸ்தாபித்து வழிபட்டு வந்தார்கள். அக்காலத்தில் ஆலடிப்பிள்ளையார் கோவிலென்று அந்தக் கோவிலுக்குப் பெயரிருந்தது. இந்தக் கோவிலைப் பரம்பரையாகப் பராபரித்து வந்தவர்களும், பொதுமக்களும் பயபக்தியோடு வழிபட்டு வருங்காலத்தில் திரு. சு. காளியப்பு என்பவரும், திரு. கோணாமலை வைராவியாரும், தோம்பர் திரு. கதிர்காமத்தம்பி என்பவரும் சேர்ந்து கொட்டிற்கோவில் இருந்த இடத்தில் கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபங்களைக் கொண்ட கற்கோவிலைக் கட்டிக் கருவறையில் பிள்ளையார் திருவுருவத்தைப் பிரதிஷ்டை செய்து பண்டுதொட்டு வழிபட்டுவந்த பிள்ளையார் கல்லை அர்த்தமண்டபத்தில் ஸ்தாபித்து 1932ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்வித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தில்லையம்பலப் பிள்ளையார் கோவில், தம்பலகமம்

காலக்கிரமத்தில் மக்களுடைய ஆதரவு பெருகப் பெருக மீண்டும் கோவிலில் புதிய திருப்பணிகளைத் தொடங்கி ஸ்நபனமண்டபம் தெரிசனமண்டபம் என்பவைகளையும் சுற்றுமதிலையும் கட்டி 1951ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நடத்தி வைத்தார்கள்.

அழகிய தூபியையுடைய கருவறையில் விநாயகரும், மகாமண்டபத்தில் எழுந்தருளி பிள்ளையாரும் ஸ்நபனமண்டபத்தில் மூஷிகம் பலிபீடமும் காணப்படுகின்றது. உச்சிக்காலம், மாலைச்சந்தியாகிய இரண்டுகால நித்திய பூசைகளும், ஆவணி மாதத்தில் கும்பாபிஷேக தினத்தை ஆரம்பநாளாகக் கொண்டு பத்து நாட்கள் அலங்கார உற்சவமும், ஆவணிச் சதுர்த்தி, நவராத்திரி, திருவெம்பாவை, பிள்ளையார் கதை முதலிய விசேஷ பூசைகளும் நடைபெற்றுவந்தன. ஸ்ரீ. சு. சோமசுந்தரக் குருக்கள் ஆலயத்தில் பிரதம குருவாயிருந்து பூசை செய்து வருகின்றார். தற்போது பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கற்பக்கிரகம் தொடக்கம் சகல மண்டபங்களும் திருத்திக் கட்டப்பட்டிருக்கின்றன. அத்துடன் புதிதாக மணிக்கோபுரமும், வைரவர், நாகதம்பிரான் என்னும் மூர்த்திகளுக்குத் தனிக் கோவில்களும் கட்டப்பட்டிருக்கின்றன. பாகசாலை, களஞ்சியத் திருத்தவேலைகளும் நிறைவேறிய பின், விரைவில் மகாகும்பாபிஷேகம் செய்யப்படவிருப்பதாக திரு. சு. கா. சிவசுப்பிரமணியம் அவர்கள் கூறுகின்றார்கள். 1914ஆம் ஆண்டு தம்பலகமத்தில் வாந்திபேதி நோய் பரவி மக்களை வருத்தியபோது சிந்தாமணிப் பிள்ளையார், தான் எழுந்தருளியிருக்கும் பட்டிமேட்டு மக்களுக்கு இந்த நோய்வராமல் காப்பாற்றினார் என்ற தகவலையும் தந்த ஆலய முகாமையாளர் சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீதில்லையம்பலப் பிள்ளையார் கோவில்
# அன்புவழிபுரம்

திருக்கோணமலையிலிருந்து அனுராதபுரத்திற்குச் செல்லும் நெடுஞ்சாலையில் பட்டினத்திலிருந்து ஐந்து கில்லோமீற்றர் தூரத்தில் அன்புவழிபுரம் என்ற புதிய குடியேற்றக்கிராமம் இருக்கின்றது. இலங்கை சுதந்திரமடைந்த பின் தோன்றிய சைவத் தமிழ்க் கிராமம். காட்டை வெட்டி நாடாக்கிய தமிழ் மக்கள் அன்பினால் இணைந்து குடியேறியதினால் அன்புவழிபுரம் என்று பெயரிட்டார்கள். இது நிகழ்ந்தது 1952ஆம் ஆண்டு.

இங்கு குடியேறியவர்களுக்கு வழிபாட்டுக்கு கோவில் இல்லாத காரணத்தினால் இங்கு குடியேறிய திரு. க. கந்தையா என்பவர் மக்களுக்கும் தனது வழிபாட்டுக்குமாக ஒரு கோவிலைக் கட்டினார். கோவிலில் பிரதிஷ்டை செய்வதற்குப் பிள்ளையார் திருவுருவமொன்றைச் செய்விப்பதீற்கு முயற்சித்துக்கொண்டிருந்த போது இங்கிருந்து பன்னிரண்டு கில்லேமீற்றர் தூரத்திலுள்ளதாகிய "கல்லன்பத்தை என்னுமிடத்தில் நான் இருக்கிறேன். என்னை நீ கட்டிய கோவிலில் வைத்து ஆதரிப்பாயாக" என்று கனவிலே பிள்ளையார் கூறினாராம். இதனால் கல்லன்பத்தை என்ற இடத்தைப்பற்றி விசாரிக்கத் தொடங்கினார்.

கல்லன்பத்தை என்பது பண்டைக்காலத்தில் மக்கள் வாசம் செய்த பழைய கிராமம். இப்போது காடாய்க் கிடக்கின்றது. அங்கே ஒரு குளம் இருக்கின்றது. அந்தக் குளத்து நீரைப் பாய்ச்சி விவசாயம் செய்து மக்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். மக்கள் அங்கு வாழ்ந்த காலத்தில் ஆலயமொன்றிலிருந்து அழிந்துவிட்டது. இயற்கை ஏதுக்களினாலோ அன்றி வேறு காரணத்தினாலோ அந்த இடத்தைவிட்டு மக்கள் வெளியேறியபின் அங்கிருந்த ஆலயம் பராபரிப்பற்றுக் காடு வளர்ந்து கோவில் அழிந்துவிட்டது. பல்லாண்டுகளுக்குப் பின் அந்த இடத்திற்கு திரு. கதிர்காமர் என்பவர் சென்று விவசாயம் செய்து வந்தார். யானை, புலி, கரடி முதலியகொடிய வனவிலங்குகளின் எதேச்சையான வாசஸ்தலமாயிருந்த பிள்ளையார்தான் துணை. வேறு மனித நடமாட்டமே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட்டையாடுபவர்கள் மாத்திரம் அங்கு போய் வருவார்கள். அப்படியான இடத்தில் கதிர்காமர் துணிச்சலாக விவசாயம் செய்துவந்தார். விதைத்துப் பயிராகியபின் "பயிருக்கு மிருக அழிவு வராமல் எல்லாவற்றையும் நீயே பார்த்துக்கொள். பயிர்ப் பாதுகாப்பு உன் பொறுப்புத்தானே" என்று கூறிவிட்டு வந்துவிடுவாராம். பின்னர் அறுவடைக்குத்தான் அங்கு போவார். அந்த இடத்தில் பகலிலும் இரவிலும் யானைகள் எதேச்சையாகச் சுற்றித் திரியுமாம். அப்படியிருந்தும் கதிர்காமருடைய காவலாளிபோலப் பிள்ளையார் பயிரைப் பாதுகாத்துக் கொடுப்பாராம். இந்தச் செய்தியையறிந்த கந்தையா என்பவர் அங்கு சென்று கதிர்காமரிடம் விஷயத்தைக் கூறிப் பிள்ளையாரை எடுத்துவந்து 1957ஆம் ஆண்டு அன்புவழிபுரம் பிள்ளையார் கோவிலில் ஸ்தாபித்து தில்லையம்பலப் பிள்ளையார் என்று திருநாமமும் சூட்டினார். அன்று முதல் இங்குள்ள மக்கள் இவ்வாலயத்தில் வழிபாடு செய்துவருகின்றார்கள். ஆலயம் சிறியது. மூர்த்தி கீர்த்தியுடையது.

கற்பக்கிரகம், அர்த்தமண்டபம் இரண்டும் கல்லால் கட்டப்பட்டுள்ள மடாலயம். மகாமண்டபம் ஓலையால் வேயப்பட்டிருக்கின்றது. கருவறையில் பிள்ளையாரும், நாகதம்பிரானும், வைரவர் சூலமும் வைக்கப்பட்டிருக்கின்றது. வெள்ளிக்கிழமைகளிலும், விசேட தினங்களிலும் சிவராத்திரி, நவராத்திரி, திருவெம்பாவை ஆவணிச்சதுர்த்தி போன்ற காலங்களிலும் பூசைகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆலய வரலாற்றைத் தந்துதவிய திரு. க. சிவகுரு ஆசிரியரை செயலாளராகக் கொண்ட பரிபாலனசபை தற்போது ஆலயத்தைப் பரிபாலித்து வருகின்றது. இவ்வாலயத்தைச் சிறந்தமுறையில் கட்டி முன்னேற்றுவதற்கு மக்கள் முயற்சியெடுக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டளைப் பிள்ளையார் கோவில் கந்தளாய்

திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து கொழும்பு, கண்டிக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் முப்பத்தொன்பது கில்லோமீற்றர் தூரத்தில் கந்தளாய் என்ற இடம் இருக்கின்றது. புராதன வரலாறுகளைக் கொண்ட இவ்வூர் கந்தளாய்க் குளத்தினால் இன்றும் சிறப்புற்று விளங்குகின்றது. திருக்கோணேஸ்வரத்திற்கும், கந்தளாய்க்குமுள்ள தொடர்புகள் சிலவற்றைக் கந்தளாய் சிவன்கோவில் வரலாற்றில் கூறியுள்ளோம். அனுராதபுரத்தை அரசாண்ட கஜபாகு மன்னன் திருக்கோணேஸ்வரத்தை அழிக்கும் நோக்கத்தோடு படையெடுத்து வந்ததாகவும், அவனுடைய அகங்காரத்தினால் கண்பார்வையை இழந்ததாகவும், கோணேசப்பெருமானுடைய அருளால் மன்னன் வரும் வழியில் ஒரு கண்பார்வையைப் பெற்றதாகவும், கண்தளைத்த இடத்திற்குக் கண்தளை என்று பெயரிட்டதாகவும் திருக்கோணாசல புராணம் கூறுகின்றது. கண்தளை என்ற இடமே கந்தளாய் என்று இன்று அழைக்கப்பட்டு வருகின்றது. பின்னர் கஜபாகுமன்னன் கோணேஸ்வரத்தைத் தரிசித்து கோவிலை ஆதரித்து மானியங்களும் கொடுத்தானென்று கோணேசர் கல்வெட்டும் கூறுகின்றது.

கந்தளாய்ச் சந்தியிலிருந்து நானூறு மீற்றர் தூரத்தில் இந்தக் கட்டளைப் பிள்ளையார் கோவில் கோவில் இருகின்றது. இவ்வாலயத்தின் மேற்கு வீதியை எல்லையாகக் கொண்டு தம்பலகமத்து வயல்வெளிகளை நீர்ப்பாய்ச்சும் பேராறு வருடம் முழுவதும் நீர்நிறைந்து பாய்ந்துகொண்டிருக்கின்றது. குளக்கோட்டு மன்னனால் கந்தளாய்க் குளம் கட்டப்பட்டபோது, விநாயகப் பெருமானை வழிபட்டுக் கட்டுவேலையை ஆரம்பித்தான். அதற்காகப் பிள்ளையாரைப் பிரதிஷ்டை செய்யக் கட்டப்பட்ட கோவிலே இந்தக் கட்டளைப் பிள்ளையார் கோவில். கந்தளாய்க்குளத்தைக் கட்டுவதில் மனிதசக்தியையும், தெய்வசக்தியையும் பயன்படுத்தியதாகப் புராணங்களும், கோணேசர் கல்வெட்டும் கூறுகின்றன. இன்றும் இந்தத் தெய்வ சக்திகளுக்குரிய வேள்விக் கிரியைகள் நடைபெற்று வருகின்றன. தம்பலகாமத்திலுள்ளவர்கள் மக்களின் நன்மைக்காகவும், விளைபூமிகளின் நல்ல விளைச்சலுக்காகவும், மழை, வெயில் என்பனவற்றை அவ்வப்போது பெறுவதற்காகவும் கந்தளாய் வேள்வி, மாகமம் வேள்வி, நெருஞ்சித்தீவு வேள்வி, மல்லிகைத்தீவு வேள்வி, நாயன்மார்திடல் வேள்வி முதலிய வேள்விகளை பண்டைக்காலத்திலிருந்தே செய்துவந்திருக்கின்றார்கள். இந்த வேள்விகளின் விபரத்தைத் தம்பலகமம் ஆதிகோணநாயகர் வரலாற்றில் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டளைப் பிள்ளையார் கோவில், கந்தளாய்

தம்பலகமம் விவசாயிகள் மழைவேண்டும்போது மழையையும், வெயில் வேண்டும் போது வெயிலையும் பெறுவதற்காக விதைப்பு, அறுவடை காலங்களில் திருக்கோணேஸ்வரத்திற்கு நேர்த்தி வைப்பார்கள். மழை வேண்டுமென்றால் பச்சைப் பட்டும், வெயில் வேண்டுமானால் சிவப்புப் பட்டும் நேர்த்தி வைத்து அங்கிருந்து மங்கள வாத்தியங்களுடன் அந்தப் பட்டை எடுத்துவந்து கந்தளாய்க் குளக்கட்டின் அருகாமையிலுள்ள கட்டளைப் பிள்ளையாருடைய திருவடிகளில் ஒரு இரவு முழுவதும் வைத்து வழிபாடு செய்வார்கள். அடுத்த நாள் சூரியோதயத்தில் அந்தப் பட்டை எடுத்துச் சென்று கந்தளாய்க் குளத்தில் அதற்குரிய இடத்தில் சாத்தி வழிபாடு செய்வார்கள். இன்றும் இந்த வைபவம் நடைபெற்று வருகின்றது. இப்படிச் செய்வதால் அவர்கள் விரும்பும் வேளையில் மழையையோ வெயிலையோ பெற்று வருகின்றார்கள். ஈழத்தில் எங்குமே காணமுடியாத இவ்வற்புத நிகழ்ச்சி இன்றும் நாம் காணக்கூடியதாக இங்கு நடைபெற்று வருகின்றது.

கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபங்களைக் கொண்ட இந்த ஆலயத்தின் கருவறையில் குளக்கோட்டு மன்னனால் ஸ்தாபிக்கப்பட்ட விநாயகப் பெருமான் திருவுருவம் காணப்படுகின்றது. அர்த்தமண்டபத்தில் எழுந்தருளி விநாயகரும் மகாமண்டபத்தில் மூஷிகம் பலிபீடமும் இருக்கின்றது. வைரவருக்குத் தனிக்கோவிலும் மணிக்கோபுரமும் உண்டு. மூன்றுகாலத் தினப்பூசையும், ஆவணிச் சதுர்த்தி, பிள்ளையார் கதை, திருவெம்பாவை, சிவராத்திரி, முதலிய விசேட பூசைகளும் நடைபெற்று வருகின்றன. கந்தளாய்க் குளம் கட்டியபோது குளக்கோட்டு மன்னன் மந்திராலோசனை செய்வதற்காக அமைக்கப்பட்ட கருங்கல்லால் செய்யப்பட்ட ஆசனங்கள் இந்தக் கோவிலிருந்து சிறிது தூரத்தில் இருப்பதாகவும் இந்த ஆலய வரலாற்றைத் தந்த திரு. வ. இ. ஜீவானந்தமவர்கள் கூறுகின்றார்கள்.

கந்தளாய்க் கட்டளைப் பிள்ளையார் கோவிலைத் தரிசிப்பவர்களுக்கு முக்கிய தெரிசனமாய் அமைந்திருப்பவர் நாகதம்பிரான். விடந்தீர்க்கும் புஜங்கப் பெருமானாகிய ஐந்துதலை நாகதம்பிரான் சிலை இந்தப் பிள்ளையார் கோவிலுக்கருகில் தனிக் கோவில் கட்டி ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. முன்னொருகாலத்தில் நன்னியர் என்பவர் வேட்டைக்குச் சென்றபோது கந்தளாய்க் குளத்திற்கு மேற்கே குறிஞ்சாக்குளம் என்ற இடத்தில் இந்த நாகதம்பிரான் சிலையைக் கண்டாராம். விஷமுள்ளுக் கீறியதால் ஏற்பட்ட காயம் அவருடைய காலில் இருந்தது. அந்த நாகதம்பிரான் சிலைக்கு அருகே சென்றபோது காந்தத்தால் இழுக்கப்படுவதுபோல் அவருடைய கால் இழுக்கப்பட்டு காயம் நாகதம்பிரானுடைய வாயருகில் ஒட்டிக்கொண்டதாம். சிறிது நேரத்தில் காயத்தில் உள்ள விஷம் நீங்கி விடுபட்டதாம். இந்த அற்புதத்தை அவர் சிலருக்குக் கூறி அங்கு சென்று நாகதம்பிரானை வண்டியில் ஏற்றி வந்தார்கள். வரும்போது பல சோதனைகளுக்குட்பட்டார்களாம். இரண்டு வண்டிகள் உடைந்து விட்டன. மூன்றாவது வண்டியில் ஏற்றிவந்து ஊத்தூர்ப் பிள்ளையார் கோவிலில் வைத்துப் பொங்கல் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபட்டு அங்கிருந்து இந்தக் கோவிலுக்குக் கொண்டுவந்தார்களாமென்ற செய்தியை கூறினார். அவருக்கு நன்றியுடையோன். இந்த நாகதம்பிரானை இங்கு வைத்து அபிஷேகம் பூசைகள் செய்து வழிபட்டுவரும்போது இதன் மகத்துவத்தையறிந்த ஓவசியர் திரு. இரத்தினசிங்கம் என்பவர் திரு. இரத்தினசிங்கம் என்பவர் இந்த நாகதம்பிரானுக்குக் கோவில் கட்டிப் பிரதிஷ்டை செய்வித்தார். இதற்கும் மூன்றுகாலப் பூசை நடைபெற்று வருகின்றது. விஷத்தால் தீண்டப்படுபவர்கள் இந்த நாகதம்பிரானுடைய வாயில் கடியுண்டவரின் காயப்பகுதியை அழுத்தியவுடன் அப்பகுதி காந்தத்தால் ஈர்க்கப்பட்ட இரும்புபோல இறுகப் பற்றிக்கொள்ளும். விஷம் முழுவதும் சிலையில் சென்றதும் கடியுண்ட அப்பகுதி விடுபடும். பின்னர் பால், தீர்த்தம் என்பவற்றால் அபிஷேகம் செய்து பூசை செய்வார்கள். இன்றும் இது நடைபெற்று வருவதாகக் கூறினார்கள். ஐந்து தலைகளையுடைய நாகதம்பிரானின் இடது பக்கத்திலுள்ள இரண்டாவது தலையிலுள்ள வாயில்தான் விஷக்காயத்தை அழுத்துவார்களாம். திரு. நா. நாகராசா அவர்கள் இந்தத் தகவலைக் கூறினார். அன்னாருக்கு நன்றி.

கந்தளாய்க் கட்டளைப் பிள்ளையார் கோவிலுக்கருகில் ஸ்ரீமுத்துமாரியம்மன் கோவிலொன்றும் இருக்கின்றது. கற்பக்கிரகம் அர்த்தமண்டபம், மகாமண்டபங்களைக் கொண்ட இக்கோவில் 1936ஆம் ஆண்டு திரு. மாரிமுத்து இராசையா என்பவரால் தமக்கேற்பட்ட துன்பம் நீங்கி இஷ்டசித்தி பெற்றதனால் நேர்கடனுக்காகக் கட்டப்பட்டது. கருவறையில் சதுர்ப்புஜங்களையுடைய மாரியம்பாள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. அர்த்தமண்டபத்தில் அம்பாளின் எழுந்தருளி விக்கிரகம் இருக்கின்றது. தினமும் மூன்றுகாலப் பூசையும், நவராத்திரியில் விசேட அலங்காரப் பூசைகளும் நடைபெற்று வருகின்றன. இந்த மூன்று கோவில்களுக்கும் ஸ்ரீ. பா. நித்தியானந்தக் குருக்கள் பூசை செய்து கொண்டிருக்கின்றார். இந்தக் கோவிலில் உரு ஆடி அருள்வாக்குக் கூறும் வழக்கம் இருந்துவருகின்றது. இவ்வாலய வரலாற்றைத் தந்துதவிய திரு. சின்னத்தம்பு இராசையா என்பவருக்கு நன்றி உரியதாகுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு விநாயகர் கோவில்
# ஆலங்கேணி

திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து பதினாறு கில்லோமீற்றர் தூரத்தில் ஆலங்கேணி என்ற கிராமம் இருக்கின்றது. திருக்கோணமலையிலிருந்து கிண்ணியாத் துறையை அடைந்து, அங்கிருந்து இயந்திரப் படகின்மூலம் கடலைத் தாண்டிக் கிண்ணியாக் கிராமத்தினூடாக ஆலங்கேணியையடையலாம். திருக்கோண மலையிலிருந்து தம்பலகாமத்திற்குச் சென்று அங்கிருந்து தரைப்பாதையாலும் ஆலங்கேணிக் கிராமத்தை அடையலாம். தம்பலகமம் ஆதிகோணைநாயகர் கோவிலிருந்து எட்டுக் கில்லோமீற்றர் தூரத்தில் ஆலங்கேணி விநாயகர் கோவில் இருக்கின்றது. மகாவலி கங்கையின் ஒரு கிளையாகிய குருக்கள் கங்கை இவ்வாலயத்திற்குச் சற்றுத் தூரத்தில் ஓடிச்சென்று கங்கைத்துறை என்னுமிடத்தில் கடலில் சங்கமமாகின்றது. தம்பலகமம் ஆதிகோணைநாயகர் ஆடியமாவாசைத் தீர்த்தத்திற்கு எழுந்தருளிவரும்போது ஆலங்கேணி அருள்மிகு விநாயகர் ஆலயத்தில் தங்கி இளைப்பாறிச் சென்று கங்கைத்துறையில் தீர்த்தமாடுவார். இந்த வழமை பண்டைக்காலந் தொடக்கம் நடைபெற்று வருகின்றது. கங்கைத்துறையில் நடைபெறும் ஆடியமாவாசைத் தீர்த்தத்திற்குப் பல கிராமங்களிலிருந்தும் முதல் நாளிரவே மக்கள் திரளாக வந்து கூடுவார்கள். கடற்கரையோரமாகவுள்ள பரந்த மணற்பரப்பில் மக்கள் விடுதிவிட்டுத் தங்கியிருப்பார்கள். அங்கு சிறிய கோவிலொன்றிருக்கின்றது. அக்கோவிலில் அன்றிரவு திருக்கரைசைப் புராணப்படிப்பு நடைபெறும். கோவிலுக்கருகிலமைக்கப்பட்டிருக்கும் மேடையில் சமயக்கலாசாரக் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். அதிகாலையில் கங்கைச் சங்கமத்தில் சுவாமி தீர்த்தமாடி ஆலங்கேணியினூடாகத் தம்பலகாமத்தைச் சென்றடைவார்.

இருநூறு வருடங்களுக்குமுன் யாழ்ப்பாணம் காரைநகரிலிருந்து இங்கு வந்த திரு. கணபதிப்பிள்ளை என்பவர் இந்த இடத்திலுள்ள காடுகளைத் திருத்தித் தனது வம்சத்திலுள்ள சில குடிகளையும் அழைத்து வந்து குடியமர்த்தினார். அரசாங்கத்திடமிருந்து கிரயமாகப் பெற்ற இந்தக் காணியில் ஒரு பெரிய ஆலமரமிருந்தது. அதற்கருகில் ஒரு கேணியும் இருந்தது. ஆலமரமும் கேணியும் இருந்தபடியால் அந்த இடத்திற்கு ஆலங்கேணி என்று பெயரிட்டார். திரு. கணபதிப்பிள்ளையுடைய தகப்பனார் பெயர் விநாயகர். ஆதலால் ஆலமரத்தடியில் தான் அமைத்த கோவிலுக்கு அருள்மிகு விநாயகர் ஆலயம் எனப் பெயரிட்டார். அநாதியில் ஒருகொட்டில் கோவில்தான் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடு திருத்தும்போது ஆலமரத்தடியிற்கிடைத்த தான்தோன்றி லிங்கமொன்றையே கொட்டில் கோவிலில் வைத்து வழிபட்டுவந்தார். அந்த லிங்கமே இன்றும் ஆலயக் கருவறையில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. காலத்திற்குக் காலம் கொட்டில் கோவிலுக்கு ஓலை மண்டபங்களமைத்துப் பெரிதாக்கி கணபதிப்பிள்ளையாருடைய சந்ததியினரே பூசைகளையும் செய்து வந்தார்கள். அவருடைய சந்ததியினராகிய திரு. காசிநாதர் சுப்பர், தம்பையர், செல்லையா, அம்பலவாணர் என்பவர்கள் தொடர்ந்து ஒருவர்பின் ஒருவராக ஆலயத்தைப் பராபரித்துப் பூசைகளையும் செய்துவந்தார்கள்.

திரு. தம்பையர் காலத்தில் இவ்வாலயம் கற்கோவிலாகக் கட்டப்பட்டது. நாற்பது வருடங்களுக்குமுன் கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், தெரிசனமண்டபங்களைக் கொண்ட மடாலயமாகக் கட்டப்பட்டு தான்தோன்றியாகிய பழைய லிங்கத்தையே கருவறையில் பிரதிஷ்டை செய்தார்கள். ஆனால் அருள்மிகு விநாயகர் ஆலயம் என்றே பெயர் வழங்கிவருகின்றது. பிள்ளையாருக்குரிய பூசைமுறைகளே இங்கு நடைமுறையில் இருந்துவருகின்றன.

1980ஆம் ஆண்டு தொடக்கம் இந்த ஆலயத்தை இந்து இளைஞர் மன்றத்தினர் பொறுப்பேற்று நடத்திவருகின்றார்கள். இவர்கள் பிராமணக் குருக்களைப் பூசைக்கு நியமித்திருக்கின்றார்கள். பிராமணக் குருக்கள் பூசைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டபின் கருவறையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் தான்தோன்றி லிங்கத்தை அகற்றிவிட்டு பிள்ளையாரை ஸ்தாபிக்க வேண்டுமென்று ஆலோசனை கூறினாராம். அதனால் அவருக்குப் பல குடும்பக் கஷ்டங்கள் ஏற்பட்டதாம். இதனை உணர்ந்த குருக்கள் அந்த எண்ணத்தைக் கைவிட்டு விட்டார்.

ஆலங்கேணிக் கிராமத்தில் நானூறு குடும்பங்கள் வாழ்கின்றன. இந்தச் சைவக் குடும்பங்களுக்கு இது ஒன்றுதான் சைவாலயமாயிருந்து வருவதால் மிகவும் பயபக்தியோடு மக்கள் வழிபட்டு ஆதரித்து வருகின்றார்கள். அர்த்தமண்டபத்தில் எழுந்தருளி விநாயக விக்கிரகம் வைக்கப்பட்டிருக்கின்றது. வீதியில் ஆலமரத்தடியில் நாகதம்பிரானும், ஈசானதிக்கில் வில்வமரத்தடியில் வைரவரும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. மார்கழித் திருவாதிரையைத் தீர்த்த தினமாகக் கொண்டு அதற்குமுன்னுள்ள பத்து நாட்களும் வருடாந்த அலங்கார உற்சவம் நடைபெற்று வருகின்றது. நித்திய பூசை மூன்று காலங்கள் நடைபெறுகின்றன. ஆவணிச் சதுர்த்தி, நவராத்திரி, சிவராத்திரி, தைப்பொங்கல், சித்திரா பூரணை என்பன விசேடபூசை விழாக்களாக அனுசரிக்கப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊற்றடிப் பிள்ளையார் கோவில்
# சின்னக்கிண்ணியா

இவ்வாலயம் திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து பதினாறு கில்லோதீற்றர் தூரத்திலுள்ள சின்னக்கிண்ணியா என்ற கிராமத்திலிருக்கின்றது. கிண்ணியாக்கடல் நீரிணையை இயந்திப் படகுமூலம் கடந்து இவ்வாலயத்தையடையலாம். திருக்கோணலையிலிருந்து தம்பலகமத்திற் கூடாகச் செல்லும் நெடுஞ்சாலை வழியாக முப்பத்திரண்டு கில்லோமீற்றர் பிரயாணம் செய்தும், கடல் நீரிணையைக் கடக்காமல் இவ்வாலயத்திற்குச் செல்ல வேறொரு மார்க்கமும் உண்டு.

இவ்வாலயத்தின் கருவறையில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் பிள்ளையார் விக்கிரகத்திற்கு வரலாற்றுப் பின்னணியொன்று தெரிய வருகின்றது. கிண்ணியா என்ற கிராமம் தோன்றுவதற்குமுன், சிறப்போடிருந்த கிராமம் தம்பலகமம். தம்பலகமத்திலிருந்து சுமார் முப்பது கில்லோமீற்றர் தூரத்தில் தம்பங்கடவைப் பக்கமாக "தீநகரி" என்ற கிராமமொன்று இருந்தது. இப்போது தீனேரி என்று கூறுகின்றார்கள். அது இயற்கை ஏதுக்களால் அழிந்துவிட்டது. அது ஒரு பழம்பெரும் சைவக்கிராமமாக இருந்ததாம். அங்கு ஒரு சைவாலயம் இருந்து அழிவுற்றுக் காடுமண்டிக் கிடந்தது. தம்பலகமத்திலிருந்து தம்பங்கடவைக்கு மாடு வாங்கச் சென்ற ஒருவர் காட்டுமார்க்கமாகச் செல்லும்போது இருண்டு விட்டதினால் அக்காட்டினுள் அழிந்துகிடந்த ஒரு கட்டிடத்தைக் கண்டு அன்று இராப்பொழுதை அங்கே கழிக்கக் கருதிப்படுத்திருந்தாராம். நள்ளிரவில் மணியோசை, மேளச்சத்தம் என்பன கேட்டதாம். சிறிது நேரத்தில் ஒருவர் வந்து மோதகமும், புக்கையும், தண்ணீரும் கொடுத்துச் சென்றாராம். பொழுது புலர்ந்த பின் பார்த்தபோது தான் படுத்திருந்த இடம் பாழடைந்த கோவிலாயிருப்பதைக் கண்டாராம். இந்தச் செய்தியை அவர் தம்பலகமத்திற்கு வந்து மக்களுக்கு அறிவித்திருந்தார்.

இது இவ்வாறிருக்க, சுமார் இருநூறு வருடங்களுக்கு முன் தம்பலகமத்தில் வசித்த திரு. வி. காசிநாதர் என்பவர் மூன்று தமிழ்க் குடும்பங்களோடு சின்னக்கிண்ணியாவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து குடியேறினார். குளக்கோட்டு மன்னனால் தம்பலகமத்தில் குடியமர்த்தப்பட்ட காரியப்பர் குடியைச் சேர்ந்த காசிநாதர், காடாய்க்கிடந்த இடங்களைத் திருத்திச் சின்னக்கிண்ணியாவில் குடியேறி விவசாயம் செய்து வாழ்ந்து வந்தார். இதற்குப் பின்னரே இஸ்லாமியக்குடியேற்றமும் பரம்பலும் அந்தப் பகுதியில் விஸ்தரித்தது. இன்று கிண்ணியா என்றால் முஸ்லீம் கிராமம் என்பது யாவருமறிந்ததே. ஆதியில் இக்கிராமத்தை உருவாக்கிய திரு. வி. காசிநாதரும் அங்கு குடியேறிய தமிழ் மக்களும் வழிபாட்டுக்காக ஒரு ஆலயத்தை ஓலைக்கொட்டிலாகக் கட்டினார்கள். அந்த ஆலயத்தில் முன்னே குறிப்பிட்ட தீநகரி என்ற அழிந்த கிராமத்திலிருந்து சிதைந்து போன கோவிலிலுள்ள பிள்ளையாரைக் கொண்டுவந்து வைத்து வழிபட்டுவந்தார்கள். ஊற்றடி என்ற இடத்தில் இவ்வாலயம் அமைக்கப்பட்டதால் ஊற்றடிப் பிள்ளையார் கோவில் என்று பெயர் பெற்றது.

காசிநாதருடைய மகன் திரு. கா. தம்பர் என்பவர் காலத்தில் கற்பக்கிரகம் கல்லினாற் கட்டப்பட்டு ஓட்டினால் வேய்ந்த மடாலயமாக இருந்தது. பின்னர் அவருடைய மகன் திரு. த. காசிநாதர் என்பவர் சின்னக்கிண்ணியா மகாவித்தியாலயத்தில் அதிபராயிருந்த காலத்தில் இவ்வாலயத்தைப் பரிபூரணமாகத் திருத்தியமைக்க எண்ணி இவ்வாலயத்திற்கு அருகில் கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபங்களைக்கொண்ட கற்கோவிலொன்றை மடாலயமாகக் கட்டியுள்ளார். இந்தப் புதிய ஆலயத்தில் ஊற்றடிப்பிள்ளையாரைப் பிரதிஷ்டைசெய்து கும்பாபிஷேகம் செய்யவிருப்பதாக அவர் கூறுகின்றார்.

தற்போது சின்னக்கிண்ணியா ஊற்றடிப்பிள்ளையார் கோவிலில் ஒரு நேரம் நித்தியபூசை நடைபெற்று வருகின்றது. ஸ்ரீ. சி. பரமேஸ்வரன் என்ற பிராமணக் குருக்கள் பூசைகளைச் செய்துவருகின்றார். கருவறையில் பிள்ளையாரும், அர்த்த மண்டபத்தில் பைரவரும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. ஆவணிச் சதுர்த்தி, பிள்ளையார்கதை, நவராத்திரி, திருவெம்பாவை முதலிய விசேஷ பூசைகளும் நடைபெற்று வருகின்றன. திரு. த. காசிநாதரைத் தலைவராகக் கொண்ட பரிபாலனசபை ஆலயத்தைப் பரிபாலித்து வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூர் பிள்ளையார் கோவில்

கொட்டியாபுரப்பற்றில் மூதூரிலிருந்து ஆறு கில்லோமீற்றர் தூரத்தில் சம்பூர்க் கிராமம் இருக்கின்றது. திருக்கோணமலைக் கோணேசராலயத்திற்குத் திருப்பணி செய்த குளக்கோட்டு மன்னனுடைய வரலாற்றோடு சம்பந்தப்படாத கிராமம் திருக்கோணமலை மாவட்டத்தில் இல்லையென்றே சொல்லலாம். கொட்டியாபுரப்பற்றிலிருந்து கோணேசர் ஆலயத்திற்கு அனுப்பிவைக்கப்படும் நெல், நெய், இலுப்பைநெய், தேன் முதலான திரவியங்கள் சம்பூருக்குக் கொண்டுவரப்பட்டு அங்கிருந்து கெவுளியாமுனையிலுள்ள மீகாமனிடம் ஒப்படைக்கப்படும். மீகாமன் அவற்றைப் படகுகளில் எடுத்துச் சென்று கோணேசர் கோவிலில் ஒப்படைப்பான். இது குளக்கோட்டு மன்னனுடைய ஏற்பாடு.

சம்பூர் பத்திரகாளிமீது கொண்ட பயபக்தியினால் மக்களின் குடியிருப்பு ஆலயத்திற்குச் சற்றுத் தூரத்தில் அமைந்திருந்தது. அவ்வூர் மக்களின் வழிபாட்டுக்காக காரியப்பர் குடியின் பரம்பரையில் வந்த திரு. பெரியதம்பி காரியப்பர் என்பவர், கிராமத்தின் மத்தியிலே நூற்றியைம்பது வருடங்களுக்குமுன் ஓர் பிள்ளையார் கோவிலைக் கட்டினார். சம்பூர் பத்திரகாளி கோவிலிலிருந்து கால் கில்லோமீற்றர் தூரத்தில் இந்த ஆலயம் இருக்கின்றது. கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபங்களைக் கொண்ட மடாலயமாக செங்கல்லால் இவ்வாலயம் கட்டப்பட்டிருக்கின்றது. கற்பக்கிரகத்தில் பிள்ளையார் சிலாவிக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. எழுந்தருளி மூர்த்திகளாக பிள்ளையாரும், வள்ளிதெய்வானை சமேத சுப்பிரமணியப் பெருமானும், சூரியனுக்குத் தனித்திருவுருவமும், அர்த்தமண்டபத்தில் வைத்துப் பூஜிக்கப்பட்டு வருகின்றது. இங்கு ஆவணிச்சதுர்த்தியில் தொடங்கிப் பத்து நாள் அலங்கார உற்சவம் நடைபெற்று வருகின்றது. தினமும் ஒருவேளைப் பூசையும், விசேஷ காலங்களில் விசேஷ பூசைகளும் நடைபெற்று வருகின்றன. வைகாசி மாதத்தில் தொடங்கி மூன்று மாதத்தில் கந்தபுராணம் படித்துப் பயன் சொல்லும் வழக்கம் நடைமுறையில் இருந்துவருகின்றது. மக்கள் ஆர்வம் செலுத்தினால் இவ்வாலயத்தில் மேலும் பல திருப்பணிகள் செய்து சிறப்பாக நடாத்தலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூனித்தீவுப் பிள்ளையார் ஆலயம்

கொட்டியாபுரப்பற்றில் மூதூரிலிருந்து கெவுளியா வெளிச்சவீட்டுக்குச் செல்லும் பாதையில் சம்பூருக்கூடாகச் சென்று கூனித்தீவை அடையலாம். கடற்கரையை அண்டியுள்ள இக்கிராமம் மிகவும் பழமைவாய்ந்தது. மீனவர்கள் தொழில் செய்யக்கூடிய வாய்ப்பு இருப்பதால் முற்காலங்களில் அங்கு மீன்பிடித்தொழில் செய்த மீனவர்கள் இக்கிராமத்திற்கு கூனித்தீவு என்று பெயரிட்டார்கள். கூனி என்ற ஒருவகை இறால் இங்கு பிடிபட்டதால் அப்பெயர் வைக்கப்பட்டதாகக் கூறுகின்றார்கள். தென்னஞ்சோலைகள் நிறைந்த இந்தக் கிராமத்தைத் தூரத்தில் நின்று பார்க்கும்போது அழகாகக் காட்சியளிக்கின்றது.

பொற்கொல்லர்கள் பரம்பரையாக இக்கிராமத்தில் வாழ்ந்து வருகின்றார்கள். அந்தச் சமுகத்தினரே இந்த ஆலயத்தைக் கட்டிப் பராபரித்து வருகின்றார்கள். சுமார் நூற்றியைம்பது வருடங்களுக்கு முன் இந்த ஆலயம் குடிமக்களின் வழிபாட்டு வசதிக்காக அமைக்கப்பட்டது. ஆரம்பகாலத்தில் கொட்டில் கோயிலாக இருந்து, காலத்திற்குக் காலம் திருப்பணிகள் செய்து கற்கோயிலாகக் கட்டியுள்ளார்கள். கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், தெரிசனமண்டபங்களைக் கொண்ட மடாலயமாக இவ்வாலயம் காட்சியளிக்கின்றது. கருவறையில் பிள்ளையார் சிலாவிக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. அர்த்தமண்டபத்தில் பிள்ளையார் எழுந்தருளி விக்கிரகம் வைத்துப் பூசை செய்து வருகின்றார்கள். சிவஸ்ரீ க. சிவபாலக்குருக்கள் இங்கு பூசை செய்து வருகின்றார். ஒரு நாளைக்கு ஒரு தரம் நித்தியபூஜை நடைபெறுகின்றது. ஆவணிச்சதுர்த்தி, சிவராத்திரி, நவராத்திரி விழாக்களும், விநாயகவிரதம், திருவெம்பாவை, தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு முதலிய விசேட பூசைகளும் நடைபெற்று வருகின்றன. ஆலய பரிபாலன சபை இவ்வாலயத்தைப் பரிபாலித்து வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணகுலப் பிள்ளையார் கோவில்
# சேனையூர்

திருக்கோணமலை மாவட்டத்தில் கொட்டியாபுரப்பற்றில் சேனையூர்க் கிராமத்தின் மத்தியில் இவ்வாலயம் இருக்கின்றது. அகஸ்தியர் ஸ்தாபனம் அமைந்துள்ள, திருக்கரைசையம்பதி சிறப்புற்று விளங்கிய காலத்தில் சைவமக்கள் நெருக்கமாய் வாழ்ந்த கிராமங்களில் இதுவுமொன்று. குளக்கோட்டுமன்னன் கோணேஸ்வரத் திருப்பணிகளை நிறைவேற்றியபின் விவசாய நோக்கங்களுக்காக அல்லைக் குளத்தைக் கட்டி மக்களை இந்தியாவிலிருந்து கொண்டுவந்து குடியேற்றினான். அவ்வாறு குடியேற்றப்பட்ட மக்களும் இங்கு வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். இதனால் தற்போது இவ்வாலயம் இருக்கும் இடத்தில் மக்கள் ஒரு சிறிய வழிபாட்டுத் தலத்தை வைத்து ஆதரித்து வந்திருக்கின்றார்கள்.

சுமார் இருநூறு வருடங்களுக்குமுன் இந்தியாவிலிருந்து வந்த முத்துலிங்க சந்நியாசி என்பவர் இவ்வூருக்கு அருகிலுள்ள மருதடிச்சேனை என்று கூறப்படும் இடத்தில் தங்கியிருந்தார். அவருடைய தபோபலத்தால் இந்த இடம் தெய்வீகமானதாகப் பிரகாசித்தது. அவர் இவ்வூரில் வாழ்ந்துவந்த திரு. கந்தப்பர் என்பவருக்கு, இந்த இடத்தில் ஆலயம் அமைக்கும்படி அருள்வாக்குக் கொடுத்தாராம். ஆலயம் அமைப்பதற்குரிய நிதியும் கொடுத்துச் சென்றதாகக் கூறுகின்றார்கள். அடுத்த முறை அந்தச் சந்நியாசி வந்தபோது ஆலயம் அமைக்கப்படாததைக் கண்டு வருந்தி, தனது அருட்கட்டளையை உதாசீனம் செய்ததால் கந்தப்பர் குடியின்மீது சினங்கொண்டு சாபமிட்டாராம். அந்தச் சாபம் பரம்பரைபரம்பரையாக அந்தக் குடும்பத்தினரைத் தாக்கிவந்ததாகக் கூறுகின்றார்கள். பிறக்கும்போது நன்றாகப் பிறக்கும் பிள்ளைகள் வளர்ந்து வரும்போது எலும்புருக்கி நோயால் தாக்கப்படுகின்றார்களாம். ஏதாவது ஒரு குடும்பத்தில் ஆணுக்கோ, பெண்ணுக்கோ இந்த நோய் காணப்படுகின்றதாம். இப்போதும் இது நடைபெற்று வருகின்றது.

சினங்கொண்ட சந்நியாசியார் இங்கு வாழ்ந்திருந்த தியாகராசா தில்லைவனம் என்பவரை அழைத்து விபூதி மந்திரித்து அவருடைய வாயிலிட்டு, இந்த இடத்தில் ஆலயம் அமைக்கும் படியும், குளக்கோட்டு மன்னனால் கட்டப்பட்ட அல்லைக் குளத்தடியில் அரசடிவானில் உள்ள பிள்ளையாரை எடுத்து வந்து பிரதிஷ்டை செய்யும்படியும் கூறினாராம். சந்நியாசியுடைய தபோபலத்தால் தில்லைவனம் என்பவர் கல்வியறிவும், செல்வமும் பெற்றுச் சிறப்புற்று விளங்கினார். சுவாமியின் கட்டளையைச் சிரமேற்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆலயத்தின் கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபங்களைக் கொண்ட சிறிய ஆலயத்தையமைத்து அல்லைக்குளத்துப் பிள்ளையாரைக் கொண்டு வந்து பிரதிஷ்டை செய்து மக்கள் வழிபட்டு வந்தார்கள். தில்லைவனம் பரம்பரையில் வந்தவர்கள் வறுமையால் அல்லல்படும்போது முன்னர் சாபத்திற்காளான கந்தப்பு குடியினர் சாபநீக்கத்திற்காக ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து 1887ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்துவைத்தனர். ஆலயம் சிறப்பாக நடந்துகொண்டிருக்கும்போது 1929ஆம் ஆண்டு ஒரு கும்பாபிஷேகமும், பின்னர் ஸ்நபனமண்டபம், ஸ்தம்பமண்டபங்களைக் கட்டிப் புனருத்தாரணத் திருப்பணிகளை நிறைவேற்றி 1948ஆம் ஆண்டில் கும்பாபிஷேகமும் செய்துள்ளனர். அதன்பின் வசந்த மண்டபம், வைரவர் கோவில், சந்தானகோபாலர், சுப்பிரமணியர் என்பவர்களுக்கும் ஆலயங்கட்டி 1972ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்துள்ளார்கள். நவக்கிரக கோவிலும், வெளி மண்டபமும் அமைத்து ஆலயம் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றது. ஆலயத்தில் நடைபெற்றுவந்த அலங்கார உற்சவத்தை 1981ஆம் ஆண்டிலிருந்து கொடியேற்றி மகோற்சவமாக நடத்துகின்றார்கள்.

அழகிய தூபியையுடைய கருவறையில் விநாயகப் பெருமான் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார். மகாமண்டபத்தில், இருநூறு வருடங்களுக்கு முற்பட்ட, ஆதியில் ஸ்தாபித்திருந்த விநாயகர் சிலாவிக்கிரகமும், எழுந்தருளி விநாயகரும், வள்ளி, தெய்வயானை சமேத சுப்பிரமணியர், சந்திரசேகரர், பாலசுப்பிரமணியர், அஸ்திரதேவர் என்பனவும் உண்டு. பரிவாரமூர்த்திகளும் சிறப்பாக வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனி உத்திரத்தைக் கொடியேற்ற தினமாகக் கொண்டு தொடர்ந்து பத்து நாட்கள் மகோற்சவம் நடைபெற்றுவருகின்றது. மகாவலிகங்கையின் கழிமுகத்தில் பிள்ளையார் சமுத்திர தீர்த்தமாடுவார். ஆவணிச் சதுர்த்தி, ஆடியமாவாசை,கௌரி விரதம், கந்தசஷ்டி, பெருங்கதைவிரதம், திருவெம்பாவை என்பன விசேட விழாக்களாக நடைபெற்று வருகின்றன. மூன்றுகாலப்பூசை தினமும் நடைபெறுகின்றது.

இவ்வாலயத்தில் ஒரு செப்பேடு பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கின்றது. அவ்வேட்டிலுள்ள முக்கிய பகுதிகளை இங்கே தருகின்றேன்.

செப்பேட்டுச் சாசனம் –

"திரிகோணாசலத்தில் தென்பாரிசத்தில் திருக்கொட்டியாபுரபற்று மருதடிச்சேனையில் இருக்கின்ற (தியாகராசா மகன்) ஆயிரத்தி எண்ணூற்றி எண்பத்தி ஏழாம் ஆண்டு வைகாசி மாதத்தின் திங்கட்கிழமை 12ஆம் திகதி 12 மணிக்கு... கடாட்சம் பொருந்திய முத்துலிங்க சந்நியாசியார் எனது சொந்தக் காணியில் நிலம் எடுத்து விக்கினேஸ்வரருக்கு ஆலயம் கட்டும்படி உத்தரவு தந்தார். அவருடைய உத்தரவுப்படி ஆலயம் கட்டிவிச்சி அந்தப் பொன்னாச்சியார் வந்து அபிஷேகம் செய்துவைத்தோம். பூசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெய்வேத்தியம் செய்து வந்தோம். ஒருவருடம் சென்றதன்பின் அவரின் குடியாராகிய சின்னாச்சியார் என்பவர் இந்தியாவுக்குச் சென்று தட்டு முட்டுச் சாமான்களும் செய்து கொடுத்தோம். இந்தத் தட்டு முட்டுச் சாமான்கள், கந்தபுராண ஏடு, காசிகாண்டஏடு, உபதேசகாண்ட ஏடு, குத்துவிளக்கு இரண்டு, வெங்கலக் கரண்டி............ (இவ்வாறு ஆலயப் பொருட்களின் பட்டியலொன்று எழுதப்பட்டிருக்கின்றது.

1894ஆம் ஆண்டு சி. கந்தப்பர் என்பவர் தர்மசாதனமாக வருணகுலப்பிள்ளையார் கோவில் கட்டித்தருவதாக கோவில் உரித்தாளர் அ. ச. கை. பெ. பொன்னாச்சியிடமும், வாலசிங்கமிடமும் உத்தரவு பெற்றுக் கட்டிமுடித்தார்.

இந்த வருணகுலப்பிள்ளையார் ஆலயத்திற்கு சொந்தமாக உள்ளவர்கள் வைத்த விளக்கு நூராமலும் மகாபயபக்தியுடன் காத்துவருவீர்களாக. கவனயீனமாக விடுவீர்களாயின் கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவத்திற்கு உள்ளாவீர்கள்."

இப்படிக்கு
உண்மையுள்ள
தியாகரராசா - தில்லைவனம்

பண்டைக்காலத்தில் ஆலயத்தைப் பரிபாலனம் செய்துவந்த கந்தப்பர் பரம்பரையும் தற்போது ஒரு பரிபாலன சபையை அமைத்து ஆலயத்தைச் சிறப்பாக நடத்தி வருகின்றார்கள். சபையிலுள்ள திரு. கா. கணபதிப்பிள்ளை, திரு. கா. வீரசிங்கம், திரு. கு. கனகசிங்கம் என்பவர்கள் இந்த ஆலய வரலாற்றை உற்சாகத்தோடு தந்துதவியமைக்கு நன்றி கூறுகின்றேன். சிவஸ்ரீ கணேச சண்முகதாச சர்மா அவர்கள் ஆலயப் பூசைகளைச் சிறப்பாக நடத்தி வருகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திவிநாயகர் கோவில் மல்லிகைத்தீவு

மல்லிகைத்தீவுச் சிவன் கோவிலைப்பற்றிக் கூறப்பட்ட வரலாற்றில் அந்த ஆலயத்திற்குச் செல்லும் மார்க்கம் கூறப்பட்டிருப்பதைப் பார்க்கவும். அந்தச் சிவ கோவிலிலிருந்து சிறிது தூரத்தில் சித்திவிநாயகராலயம் காணப்படுகின்றது. கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், தரிசனமண்டபங்களையுடையதாக இவ்வாலயம் கட்டப்பட்டிருக்கின்றது, கருவறையில் விநாயகர் ஸ்தாபிக்கப்பட்டுள்ளார். மகாமண்டபத்தில் மூஷிகம் பலிபீடம் வைக்கப்பட்டிருக்கின்றது. தென்னஞ்சோலைகளும், பச்சைப் பசேலென வயல்வெளிகளும் சூழ்ந்த அமைதியான இயற்கைச் சூழலில் இவ்வாலயம் இருக்கின்றது. ஆனால் ஆலயப் பராபரிப்பைச் சிறப்பித்துக் கூற முடியாது. இந்த ஆலயத்தைப் பொதுமக்கள் புனருத்தாரணம் செய்வதற்கு முயற்சித்துக் கொண்டிருப்பதாக அறிந்தேன். ஒரு நாளைக்கு ஒரு பூசைதான் நடைபெற்றுவருகின்றது. விநாயகசதுர்த்தி, பெருங்கதை, திருக்கார்த்திகை, தைப்பூச விழா என்பன நடைபெற்று வருகின்றது.

மல்லிகைத் தீவு தனித்தமிழ்ச் சைவக்கிராமம். பரம்பரையாக மக்கள், பண்பாட்டையும், பண்டைய வழக்கங்களையும் பாதுகாத்து வருகின்றார்கள். நீலாப்பழை அயலிலுள்ள ஒரு கிராமம். அங்கு ஒரு பத்தினியம்மன் கோவில் இருக்கின்றது. அந்தக் கோவிலையும் மல்லிகைத் தீவு மக்கள் பராபரித்து வந்திருக்கின்றார்கள். இதற்கென்று பாடப்பட்ட காவியம் ஒன்றும் இருக்கின்றதாம். கஜபாகு மன்னனால் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட பத்தினித் தெய்வ வழிபாடு இங்கு நடைபெற்று வருகின்றது. இவ்வாலயமும் கவலையீனமாக விடப்பட்டிருக்கின்றது. மிகமிகப் பரிதாபத்திற்குரிய நிலையில் இவ்வாலயம் இருக்கின்றது. இனக்கலவரங்களின் தாக்கம் இவ்வாலயத்தைப் பெரிதும் பாதித்திருக்கின்றது. ஆலயத்தைச் சுற்றிப் புதர் மண்டிக் கிடக்கின்றது.

ஆலயம் நல்லநிலையில் இருந்த காலத்தில் பத்தினியம்மன் விழாவோடு சம்பந்தப்படுத்தி மல்லிகைத்தீவு மக்கள் கொம்பு விளையாட்டு நடாத்தி வந்தார்கள். கொம்பு விளையாட்டு பள்ளிக்குடியிருப்பிலும் நடைபெறுவதுண்டாம். பத்தினித் தெய்வவழிபாடு நடைபெறும் மட்டக்களப்பிலும் இவ்விளையாட்டு நடைபெற்று வருகின்றது.

மல்லிகைத்தீவிலுள்ள மக்களின் மாடுகளுக்கு "மேழிசுழி, தாமரைப்பூ" குறிசுடும் வழக்கமொன்று இருந்துவருகின்றது. இந்த வழக்கம் பள்ளிக்குடியிருப்பு, ஈச்சிலம்பத்தை, ஆனெய்த்தீவு என்னுமிடங்களிலும், இதே வழக்கம் மட்டக்களப்பு மாவட்டத்தில் கதிரவெளி, கிரான், சந்திவெளி, சித்தாண்டி, வந்தாறுமூலை, மயிலெம்பாவெளி, குடியிருப்பு, குருக்கள் மடம், களுதாவளை, களுவாஞ்சிக்குடி, மண்டூர் கொக்கட்டிச்சோலை, காரைத்தீவு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பிலுவில், திருக்கோவில், பொத்துவில் ஆகிய இடங்களிலும் காணப்படுகின்றதாம். கொம்பு விளையாட்டும், "மேழிசுழிக் குறியிடும்" வழக்கமும் திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய இரண்டிடங்களிலும் இருந்துவருகின்றது. இது ஒரு உண்மையைப் புலப்படுத்துவதாகத் தெரிகின்றது. குளக்கோட்டுமன்னன் உன்னாசிகிரியில் அரசாட்சி செய்துகொண்டிருந்த ஆடகசவுந்தரியைத் திருமணம் செய்து வாழ்ந்த காரணத்தால், குளக்கோட்டு மன்னனால் கொண்டுவரப்பட்ட சிந்துநாட்டவர்களின் பரம்பல் திருக்கோணமலை மாவட்டத்திலிருந்து மட்டக்களப்பு மாவட்டம்வரை பரந்து சென்றிருக்கின்றதென ஊகிக்க இடமுண்டாகின்றது. திரு. முத்துக்குமாரு கனகசபை, திரு. நல்லதம்பி கோணாமலை ஆகிய இரண்டு பெரியார்களும் இந்த வரலாறுகளை உறுதியோடும் ஆதாரங்களோடும் தந்துதவியமைக்கு நன்றி உரித்தாகுக. வரலாறுகளைச் சேகரிக்க உடனிருந்துதவிய சைவப்புலவர் அருணாசலம் பரசுராமன் அவர்களுக்கு என்றும் கடமைப்பட்டுள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலிங்க நகர்
## கோணலிங்கப் பிள்ளையார் ஆலயம்

திருக்கோணமலைப் பட்டினத்தில் நகரசபை எல்லைக்குள் இந்த ஆலயம் இருக்கின்றது. பட்டினத்திலிருந்து ஒன்றரை மைல் தூரத்திலுள்ள இந்த ஆலயத்தை திருக்கோணமலையிலிருந்து கண்டிக்குச் செல்லும் நெடுஞ்சாலை வழியாகப் போய் இலிங்கநகர் சந்தியிலிருந்து பிரிந்து செல்லும் கிளைப்பாதை வழியாகக் சென்று அடையலாம்.

1957ஆம் ஆண்டு திருக்கோணமலை நகரசபையின் குடியேற்றத் திட்டத்தில் உருவாகியது இலிங்க நகர். கோணேசப் பெருமானின் அருளாட்சிக்குட்பட்ட இந்தக் குடியேற்றத்திட்டப் பகுதிக்கு கோணேசப் பெருமானை நினைவு கூரும் பாங்கில் இலிங்க நகரெனப் பெயர் சூட்டப்பெற்றது. கோணேசப் பெருமான் மகா சிவராத்திரிக்கு அடுத்தநாள் தொடக்கம் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு நகர்வலம் வரும் போது, இலிங்க நகருக்கும் எழுந்தருளி அருட்காட்சி கொடுப்பார்.

இலிங்க நகரில் அறுநூற்றைம்பது சைவக் குடும்பங்கள் இப்போது வாழ்கிறார்கள். இலிங்க நகர் குடியேற்றத் திட்டத்தின் ஆரம்ப காலத்தில் வாழ்ந்த சைவமக்கள் தமது வழிபாட்டுக்கு ஒரு கோவில் கட்டவேண்டுமென்று விரும்பினார்கள். அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக அங்குரார்ப்பணம் செய்ததுபோல அங்கு குடியேறி வாழ்ந்த சுவாமிநாதன் என்பவர் 1961ஆம் ஆண்டு அங்கிருந்த வேப்ப மரத்தடியின் ஒரு ஓலைக் கொட்டில் அமைத்து ஒரு கல்லைப் பிள்ளையாராகப் பாவனை செய்து நிறுவி அதனுடன் ஒரு சூலத்தையும் வைத்து தானே பூசைவழிபாடு செய்துவந்தார். அவருக்குப்பின் அவருடைய மகன் திரு.சு.மயில்வாகனம் என்பவர் பூசை செய்துவந்தார்.

நீண்டகாலமாக ஓலைக் கொட்டிலாயிருப்பதை விரும்பாத சுவாமிநாதன் அவர்கள் மக்களுடைய விருப்பத்தையும் அறிந்து ஓலைக் கொட்டிலைக் கற்கோயிலாகக் கட்டுவதற்கு திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையிடம் தனது விருப்பத்தைக் கூறி கோயில் உரிமையையும், நிர்வாகப் பொறுப்பையும் கையளித்தார். அப்போது பேரவையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலிங்க நகர் கோணலிங்கப் பிள்ளையார் ஆலயம்

மதிப்பார்ந்த செயலாளராயிருந்த சிவஞானச் செல்வர் திரு.செ.சிவபாதசுந்தரம் அவர்கள் 1977ஆம் ஆண்டு இலிங்க நகர் இந்து இளைஞர் மன்றத்தை நிறுவி அவர்கள் மூலம் ஆலயத் திருப்பணிகள் நிகழுவதற்கு உந்துசக்தியாயிருந்தார். 1982ம் ஆண்டு கோணலிங்கப் பிள்ளையார் ஆலயத் திருப்பணியை ஆரம்பிப்பதற்காக இலங்கை இந்து கலாசார அமைச்சின் பணிப்பாளராயிருந்த திரு.ஆ.பாஸ்கரதாஸ் அவர்களைக் கொண்டு சுபவேளையில் அடிக்கல் நாட்டுவித்தார்.

திருப்பணிகள் பூரணப்படுத்துவதற்குள் நாட்டில் ஏற்பட்ட வன்செயல்களால் இரண்டுமுறை கோவில் பாதிக்கப்பட்டு திருப்பணிகள் தடைப்பட்டன. திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஊக்கத்தாலும், லிங்கநகர் இந்து இளைஞர் மன்றத்தின் ஆக்கத்தாலும் மக்களின் ஆதரவாலும், கோணேசப் பெருமானின் திருவருளாலும் ஆலயத் திருப்பணிகள் நிறைவேறி கோணலிங்கப் பிள்ளையாருக்கு 5–7–95 இல் ஆவர்த்தன பிரதிஷ்டா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கடந்த முப்பத்தெட்டு வருடங்களாக, வழிபாட்டுக்கென முறையாக அமைக்கப்பட்ட இந்துக் கோவில் இல்லாமலிருந்த இலிங்கநகர் மக்களுக்கு இதுபெரும் வரப்பிரசாதமாயிருந்தது. கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபங்களைக் கொண்டது இக்கோவில். கற்பக்கிரகத்துக்கு அழகிய தூபி அமைக்கப்பட்டிருக்கிறது. மூலஸ்தானத்தில் சதுர்புஜங்களையுடைய பிள்ளையார் பிரதிஷ்டை செய்யப்பெற்றுள்ளார். முப்பத்தெட்டு வருடங்களுக்குமுன் வைத்து வழிபடப்பெற்ற கல்லுப் பிள்ளையார் மகாமண்டபத்தில் ஆகம சாஸ்திரப்படி ஸ்தம்பப் பிள்ளையாரைப் பிரதிஷ்டை செய்யவேண்டிய இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறார். மகா மண்டபத்தில் நந்தி பலிபீடம் இருக்கிறது. ஆலயத்தின் முகப்பில் சிறிய ராஜகோபுரம் கட்டப்பட்டிருக்கிறது. ஆலய வாசலின் இடப்பக்கத்தில் மணிக்கோபுரமும், அமைக்கப்பட்டிருக்கிறது. ஆலயத்தின் ஈசானத்திக்கில் வைரவப் பெருமானுடைய சிலாவிக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. மடைப்பள்ளி, களஞ்சிய சாலை காரியாலயம் என்பனவும் காணப்படுகின்றன.

ஆலயத்தில் ஒருநேரப் பூசை நடைபெற்று வருகின்றது. பிரம்மஸ்ரீ பத்மநாப சர்மா அவர்கள் பூசைகளை நடத்தி வருகிறார். விநாயகர் சதுர்த்தி, பிள்ளையார் பெருங்கதைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசைகளும், நவராத்திரி, சிவராத்திரி, திருவெம்பாவைப் பூஜைகளும், தைப்பொங்கல் தீபாவளி, சித்திரை, வருடப்பிறப்பு, தைப்பூசம், முதலிய விசேடகாலங்களில் விசேட அபிஷேகம் பூசைகள் நடைபெற்று வருகின்றன. கும்பாபிஷேகம் நடைபெற்ற தினத்துக்கு சங்காபிஷேகம் செய்யப்பெற்று அன்னதானமும் வழங்கப்படுகின்றது.

கோணலிங்கப் பிள்ளையார் கோவில் நிர்வாகத்தை இலிங்கநகர் இந்து இளைஞர் மன்றம், திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் அனுசரணையுடன் நிறைவேற்றி வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூர் பிள்ளையார் கோவில்

திருக்கோணமலை மாவட்டத்தில், கொட்டியாபுரப்பற்றிலுள்ள சிறிய பட்டினம் மூதூர். பழமையான ஊர் ஆதலால் மூதூர் என்று பெயர்பெற்றதென்றும், முத்துப் போன்ற நெல்மணிகள் விளையும் ஊர், ஆதலால் முத்தூர் என்ற பெயர் திரிபுபட்டு மூதூர் என்று பெயர் பெற்றதென்றும் முதியவர்கள் கூறுகின்றார்கள். இப்போது இந்தக்கோவில் இருக்குமிடத்தில் சுமார் இருநூற்றைம்பது வருடங்களுக்கு முன் வீரமரத்தடியில் லிங்க வடிவமான ஒரு கல்லை வைத்துப் பிள்ளையார் என்று வழிபட்டு வந்தார்களாம். அக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து கடல் மார்க்கமாகக் கொட்டியாபுரத்திற்கு வந்து வியாபாரம் செய்துவந்தார்களாம். பாய்க்கப்பல்களில் வரும் வியாபாரிகள் கடல் யாத்திரையை ஆரம்பிக்கும்போது இந்தப் பிள்ளையாரை வழிபட்டு பிரயாணத்தைத் தொடங்குவார்களாம். மூதூர் மக்கள் இந்தப் பிள்ளையாருக்கு ஒரு கொட்டில் கோவில் கட்டி வழிபட்டு வந்தார்கள்.

நூற்றைம்பது வருடங்களுக்குமுன் திரு. கதிர்காமத்தம்பி என்பவருடைய தந்தையார் திரு. அப்புக்குட்டி என்பவர் இந்தக் கோவிலைக் கல்லால் கட்டிப் பிள்ளையாரை ஸ்தாபித்து வழிபட்டுவந்தார். மக்களுடைய பயபக்தியும் ஆர்வமும் வளர வளரக் கோவிலைக் கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், தெரிசனமண்டபங்களைக் கொண்ட கற்கோவிலாக அமைத்தார்கள். அப்புக்குட்டியுடைய பரம்பரையில் வந்த தங்கம்மா, கதிர்காமத்தம்பி, செகநாதபிள்ளை என்பவர்கள் பராபரித்து வந்த இந்தக் கோவிலை இப்போது திரு. க. வர்ணகுலநாதன் என்பவர் பொறுப்பேற்றுப் பராபரித்துக் கொண்டிருக்கின்றார். ஆரம்ப காலத்தில் சைவக் குருக்கள் சிலர் பூசை செய்திருக்கின்றார்கள். பின்னர் கடந்த நூறு வருடங்களாகப் பிராமணக் குருக்கள்மார் பூசை செய்து வந்திருக்கின்றார்கள்.

மூதூர்ப் பட்டினத்தின் மத்தியில் அமைந்திருக்கும் இந்தக் கோவிலில் தற்போது பூசை செய்துகொண்டிருக்கும் சிவஸ்ரீ கோபாலஐயர் நடராசக் குருக்கள் என்பவரும், திரு. வர்ணகுலநாதன் என்பவரும் இந்தக் கோவிலின் வரலாற்றைத் தந்துதவினார்கள். இவர்களுக்கு எனது நன்றி உரியதாகுக. கருவறையில் ஆதிகாலந்தொடக்கம் பிள்ளையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கருதி வழிபட்டு வந்த லிங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. அர்த்தமண்டபத்தில் எழுந்தருளிப் பிள்ளையாரும், தெரிசனமண்டபத்தில் மூஷிகம், பலிபீடமும், வைரவரும் வைக்கப்பட்டிருக்கின்றது. உச்சிக்காலத்தில் மாத்திரம் நித்தியபூசை நடைபெறுகின்றது. வெள்ளிக் கிழமைகளில் இரண்டுநேரப் பூசையும், ஆவணிச் சதுர்த்தி, திருவெம்பாவை முதலிய விசேட பூசைகளும் நடைபெற்று வருகின்றன.

திரு. கதிர்காமத்தம்பி என்பவடைய மகன் திரு. வைரமுத்து என்பவர் ஆலயத்தைப் பராபரித்துவரும் காலத்தில் இற்றைக்கு நாற்பது வருடங்களுக்குமுன் இவ்வாலயத்தில் வழிபாடு செய்துவந்த விஸ்வகர்மா குலத்தவர்கள் தங்களுக்கென்று ஒரு கோவிலைக் கட்ட ஆசைப்பட்டு மூதூர்ப் பிள்ளையார் கோவிலுக்கு அருகிலேயே ஒரு கோவிலைக்கட்டிப் பராபரித்து வருகின்றார்கள். கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபங்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ள இந்தக் கோவிலின் கருவறையில் பிள்ளையார் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றார். பழம்பெருமைமிக்க திருமங்கலாய்ச் சிவன் கோவில் அழிந்த பின், அங்கிருந்த சிவலிங்கத்தையும், அம்பாளையும் வெருகலம்பதியில் வைத்திருந்தார்கள். அங்கும் இவைகள் சரியாகப் பாதுகாக்கப்படாமையினால், அந்த லிங்கத்தையும் அம்பாளையும் கொண்டுவந்து இந்த ஆலயத்தில் வைத்துப் பூசைசெய்து வருகின்றார்கள். அருகருகேயுள்ள இந்த இரண்டு கோவில்களுக்கும் சிவஸ்ரீ நடராசக் குருக்களே பூசை செய்துகொண்டிருக்கின்றார். இந்த இரண்டு கோவில் நிர்வாகிகளும் தமக்கிடையேயுள்ள துவேஷ மனப்பான்மையைக் கைவிட்டு ஒருங்கிணைந்து ஒரு நிர்வாகத்தின்கீழ் நடத்தி ஸ்தலத்தைச் சிறப்பிக்க முன்வரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிக் குடியிருப்புப் பிள்ளையார் கோவில்

திருக்கோணமலை மாவட்டத்தில் கொட்டியாபுரப்பற்றிலுள்ள மூதூர்ப் பட்டினத்திலிருந்து எட்டுக் கில்லோமீற்றர் தூரத்திலுள்ள சைவத் தமிழ்க் கிராமம் பள்ளிக் குடியிருப்பு. பள்ளக் குடியிருப்பு என்பது பள்ளிக் குடியிருப்பெனப் பெயர் மாற்றமடைந்திருக்கலாமென்றும், பள்ளிச்சி குடியிருப்பு என்பது பள்ளிக்குடியிருப்பு எனத் திரிபு பட்டிருக்கலாமென்றும் கூறுகின்றார்கள். குளக்கோட்டு மன்னன் கோணேசர் கோவில் திருப்பணிகளை நிறைவேற்றியபின்னர் சிந்துநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட மக்களை பள்ளிக் குடியிருப்பிலும் குடியேற்றினானென்றும், இங்கிருந்துகொண்டு இவர்கள் விவசாயம் செய்து பெறும் நெல்லைக் கோணேசர் கோவிலுக்கு அனுப்பிவைக்கும்படி பணித்தானென்றும் கோணேசர் கல்வெட்டுக் கூறுகின்றது. எனவே பள்ளக் குடியிருப்பு என்பதுதான் பள்ளிக் குடியிருப்பு என்று மாற்றமடைந்திருக்கலாமென்பது பொருத்தமாகத் தோன்றுகின்றது. இவர்களுடைய சந்ததியில் வந்தவர்களே இங்கிருக்கும் பிள்ளையார் கோவிலைக் கட்டியதாகக் கூறுகின்றார்கள்.

சுமார் இருநூறு வருடங்களுக்குமுன் கொட்டில்கோயிலாகக் கட்டப்பட்டிருந்து பிள்ளையாரை ஸ்தாபித்துவைத்து வழிபட்டு வந்தார்கள். இவ்வூருக்கு முற்காலத்தில் "உமனகுடி" என்ற பெயரும் இருந்துவந்ததாம். இங்கு வாழ்ந்த ஏழு குடிமக்களில் படையாண்ட குடிமக்கள் பரம்பரையில் வந்த திரு. க. மாரிமுத்து பரம்பரையின் முன்னோர்கள் இந்தக் கோவிலைக் கற்கோவிலாகக் கட்டினார்கள்.

கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்நபனமண்டபம், தெரிசன மண்டபங்களைக் கொண்டதாக இந்த ஆலயம் அமைந்திருக்கின்றது. வசந்தமண்டபம், பாகசாலை என்பனவுமுண்டு. வைரவருக்குத் தனிக்கோவில் கட்டப்பட்டிருக்கின்றது. அழகிய தூபியையுடைய கருவறையில் பிள்ளையார் சிலாவிக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. மகாமண்டபத்தில் பிள்ளையார், வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணியர் முதலிய எழுந்தருளி விக்கிரகங்கள் காணப்படுகின்றன. மூஷிகம் பலிபீடம் என்பனஸ்நபன மண்டபத்திலிருக்கின்றன. வாசலில் மணிக்கோபுரமும் இருக்கின்றது. கொட்டியாரப்பற்றிலுள்ள ஆலயங்களில் இக்கோவில் முறையாக அமைக்கப்பட்ட முதன்மைவாய்ந்த ஆலயமாக இருக்கின்றது.

தினமும் ஒருநாளைக்கு ஒருபூசையும், வெள்ளிக்கிழமைகளில் மூன்றுகாலப் பூசையும் நடைபெற்று வருகின்றது. ஆவணிச் சதுர்த்தியை ஆரம்பதினமாகக் கொண்டு தொடர்ந்து பத்து நாட்களுக்கு அலங்கார உற்சவமும், திருவெம்பாவை, சிவராத்திரி, நவராத்திரி, பிள்ளையார் கதை முதலிய விசேட பூசை வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன. சுமார் இருநூறு குடும்பங்களுக்கு மேற்பட்ட சைவமக்கள் வாழும் இக்கிராமத்திலுள்ள இந்தக் கோவிலை ஆலய பரிபாலனசபை சிறப்பாக நடத்தி வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திவிநாயகர் கோவில் குச்சவெளி

திருக்கோணமலை மாவட்டத்தில் கட்டுக்குளம்பற்றில், திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து முப்பத்தினாலு கில்லோமீற்றர் தூரத்திலுள்ள சைவத் தமிழ்க் கிராமம் குச்சவெளி. கடற்கரையை அடுத்துள்ள இந்தக் கிராமத்தில் வாழும் மக்களின் முக்கிய தொழில் விவசாயம். தெற்கிலும், தென்மேற்கிலுமுள்ள மலைத்தொடர்களுக்கு இடைப்பட்ட பெரிய பிரதேசத்தில் விவசாயம் நடைபெற்று வருகின்றது. பண்டைக் காலத்தில் விவசாய விளை நிலங்களைச் சுற்றிக் காடுகள் நிறைந்திருந்தன. அந்தக் காட்டில் வேடர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் காடுகளில் தேன் எடுத்தும், கிளங்குகள் கிண்டியெடுத்தும் வாழ்ந்து வந்தார்கள். ஒரு நாள் ஒரு வேடன் அல்லைக் கிளங்கு கிண்டும்போது நிலத்தினடியில் ஒரு கல்லில் ஆயுதம் பட்டு அக்கல்லிலிருந்து இரத்தம் சொட்டுவதைக் கண்டு ஆச்சரியமடைந்தான். இந்த அதிசயத்தை அக்காலத்தில் அந்தக் கிராமத்தின் பெரிய தலைமைக்காரராயிருந்த சந்தநாதர் என்பவரிடம் வந்து கூறினான். அவர் உதவிக்கு ஆட்களை அழைத்துக்கொண்டு போய் நிலத்தை அகழ்வித்தபோது ஒரு பிள்ளையார் திருவுருவம் கிடைத்தது. அதன் புயத்திலிருந்து இரத்தம் சுரந்துகொண்டிருந்ததாம். அந்த பிள்ளையாரைப் பயபக்தியோடு மங்கலவாத்தியங்கள் ஒலிக்க எழுந்தருளச் செய்து குச்சவெளி மக்கள் குடியிருக்கும் இடத்தில் அரசமரத்தடியில் வைத்துப் பூசை செய்வித்து வந்தார். சுமார் இருநூற்றைம்பது வருடங்களுக்குமுன் இது நிகழ்ந்ததாக முதியவர்கள் கூறுகின்றார்கள். இந்த அரசமரம் இன்றும் இருக்கின்றது.

சந்தநாதர் காலத்தில் மண்சுவர் வைத்துக் கட்டப்பட்டு ஒலையால் வேய்ந்த கோவிலில் இருந்த பிள்ளையாரைப் பயபக்தியோடு மக்கள் வழிபட்டுவந்தார்கள். மக்களுடைய பக்தி விஸ்வாசத்திற்கோற்பப் பிள்ளையாரும் அருள்புரிந்து வந்தார். நினைத்த காரியங்கள் நிறைவேறின. நோய்கள் நீங்கின. இத்தகைய அருட்செயலால் பக்தி பெருகவே திரு. காசிநாதர் என்பவருடைய காலத்தில் இவ்வாலயம் கற்கோவிலாகக் கட்டப்பட்டது. இப்பொழுது இந்தப் பரம்பரையின் ஏழாவது தலைமுறையினரின் பராபரிப்பில் இவ்வாலயம் இருந்துவருகின்றது. கதிர்காமர், கறுவல்தம்பி, கார்த்திகேசு, வேலுப்பிள்ளை என்பவர்கள் முறையே மணியகாரர்களாயிருந்து பராபரித்துவந்த இந்தக் கோவிலில் 1944ஆம் ஆண்டு கடைசியாகக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இப்போது பாலஸ்தாபனம் செய்து கோவில் திருப்பணி வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பரிபாலனசபையை அமைத்து நிர்வாகத்தை நடத்தி வருகின்றார்கள்.

குளக்கோட்டு மன்னன் கோணேசர் கோவிலைக் கட்டித் திருப்பணியை நிறைவேற்றியபின் கோணேசர் கோவில் தொண்டுகளுக்காகக் குச்சவெளியில் மக்களைக் குடியேற்றினான். அவர்கள் அங்கிருந்து தர்ப்பைப் புல்லில் "கூர்ச்சம்" செய்து கோவிலுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பி வந்தார்கள். இது அவர்களுக்கிடப்பட்ட பணியாகும். கூர்ச்சம் செய்து அனுப்பிவந்த இடமாதலால் கூர்ச்சவெளி என்பது காலக்கிரமத்தில் குச்சவெளியென்று பெயர்மாற்றம் ஏற்பட்டதாகப் பெரியோர்கள் கூறுகின்றார்கள். இங்கிருக்கும் சித்திவிநாயகர் ஆலயத்தை மத்தியாகக் கொண்டு நாச்சியார்மலை, வெள்ளாட்டிமலை, செம்பிமலை, கன்னிபாய்ந்தமலை, பறையன்கல்மடுமலை, நடுவுமலை, பெரியமலை எனப் பல மலைகளும், பிராமணமடு, சின்னக் குருப்பிட்டிக் குளம், பெரிய குருப்பிட்டிக் குளம், பறையன் கல்மடு, அட்டமடு, காக்கயன் நெடுங்கேணி எனப் பல குளங்களும் காணப்படுகின்றன.

குச்சவெளி சைவத் தமிழ்க் கிராமமாயிருந்ததினால் பிராமணர்கள் வாழ்வதற்குத் தனியிடம் ஒதுக்கி அவர்கள் வாழ்ந்த இடம் பிராமணமடு என்றும், குருமாருக்கென ஒதுக்கப்பட்ட இடங்கள் பெரிய குருப்பிட்டி, சின்னக் குருப்பிட்டி என்றும் பெயர்கள் வழங்கிவந்திருப்பதைக் அவதானிக்கக்கூடியதாயிருக்கின்றது.

இங்குள்ள மலைகளையும், குளங்களையும், விவசாய முக்கியத்துவங்களையும் குறிப்பிடும் "குருவிக்காவற் பாட்டுக்கள்" கர்ண பரம்பரையாக இங்குள்ள மக்களால் பாடப்பட்டு வருகின்றன.

பூதலம் புகழ்பெருகு தனிக்கல் வயல்தன்னில்
புனக் குருவி வாராமலே காவல் செய்வாய்
ஆதலம் புகழும் அம்பாளின் இசைபாட
ஐங்கரனும் அறுமுகனும் அம்மனும் துணையே.

புகழ் பெருகு கரிகால சோழகுல ராசன்
பூமியில் விதைக்க விதை இல்லாதபோது
மகிழ்வினொடு கிளியினுருவாகப் பறந்து
வானுலகு சென்று நெற்கதிர் கொய்து வந்து

அகளாங்கன்னிக்கு நித்திய பூசை புரியவும்
ஆதுலர்கள் வேதியர்க்கு அன்னமிடி தீர
திலகமுறு காராளர் பயிரிட்டு விளைவித்த
செந்நெலை விரும்பியே தின்னாமலேகாய்

.....................................................................

நடுவுமலை பெரியமலை செம்பிமலையுடனே
நாச்சியார் வெள்ளாட்டி நாகராசன்வாழ்
சுவாமி மலை அம்மன்மலை கரடிமலை தன்னில்
சுற்றிலுள்ள தினைக்குருவி ஒடிவருமே

.....................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திவிநாயகர் கோவில், குச்சவெளி

இப்பாட்டில் கூறப்பட்டுள்ள கரடிமலை என்பது குச்சவெளியில் கடற்கரையோரமாக இருக்கின்றது. இந்த மலையிலும் தமிழ் மக்கள் பிள்ளையாரை வைத்து வழிபட்டு வந்திருக்கின்றார்கள். இந்த மலையில் ஒரு ஆலயத்தைக் கட்ட முயற்சித்தபோது அரசாங்கம் அதைத் தடுத்துவிட்டது. பின்னர் அந்த மலையடிவாரத்தில் சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன் கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபங்களைக் கொண்ட ஓர் அழகான கோவிலைக் கட்டிப் பிள்ளையாரை ஸ்தாபித்து பூசை வழிபாடு விழாக்கள் செய்துவருகின்றார்கள். இந்தக் கோவிலிலும் மேற்கொண்டு எதுவும் செய்யவிடாமல் புதைபொருளாராய்ச்சித் திணைக்களம் தடுத்துவருகின்றது.

தற்போது பாலஸ்தாபனம் செய்யப்பட்டுத் திருப்பணி வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சித்திவிநாயகர் கோவிலில் உச்சிக்காலம், மாலைச்சந்தியாகிய இரண்டு கால பூசைகளும், கும்பாபிஷேகத்தை முதல் நாளாகக் கொண்டு பத்து நாள் அலங்கார உற்சவமும், பிள்ளையார்கதை, கந்தசஷ்டி, திருவாதிரை, ஆவணிச் சதுர்த்தி, சிவராத்திரி, சித்திராபூரணை முதலிய விசேட பூசைகளும் நடைபெற்றுவந்தன. கந்தபுராணப் படிப்பும் இங்கு நடைபெற்றுவந்ததாம். இவ்வாலயத்தில் பிராமணக் குருக்களும், சைவக் குருக்களும் பூசை செய்து வந்திருக்கின்றார்கள். "அல்லைக் கிளங்கின் அடிமுடி கண்டோர் கல்லைப் பிளக்கும் வல்லவராவர்" என்பது இவ்வாலயத்தின் தாரக மந்திரமாக மக்களுடைய வாயில் ஒலிப்பதைக் கேட்கக்கூடியதாயிருந்து வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரத விநாயகர் கோவில் திரியாய்

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள கட்டுக்குளப்பற்றில் திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து நாற்பத்திரண்டு கில்லோமீற்றர் தூரத்தில் உள்ள திரியாய் என்ற கிராமத்தில் இக்கோவில் இருக்கின்றது. யானோயாவுக்கும் புடவைக்கட்டு ஆற்றுக்கும் இடையே கிழக்கே கடலும் மேற்கே மலைகளாலும் சூழப்பட்ட இயற்கையமைப்பைக் கொண்டது திரியாய்க் கிராமம். திருக்கோணேஸ்வரத்தில் திருக்கோவிலெடுத்த குளக்கோட்டு மன்னன் கோணேசர் கோவிலில் ஆயிரம் விளக்குகள் ஏற்றப்படவேண்டுமென்று திட்டம்பண்ணி வைத்தான். இந்த விளக்குகளுக்குத் தாமரைத் திரியும் நெய்யும் கொடுத்துக்கொண்டிருக்கும் திருத்தொண்டைச் செய்வதற்காக மருங்கூரிலிருந்து கொண்டுவரப்பட்ட மக்களைக் குடியேற்றினான். அவர்கள் இந்த இடத்தில் குடியமர்த்தப்பட்டார்கள். அவர்கள் இவ்வூரிலிருந்து தாமரைத்திரி தயாரித்து விளக்கெரிப்பதற்கு இங்கிருந்து இலுப்பை எண்ணெயும் அனுப்பப்பட்டதாகவும் கோணேசர் கல்வெட்டில் கூறப்படுகின்றது. இலுப்பை விதை எடுப்பதற்காக அக்காலத்தில் இலுப்பை மரங்களையும் அதிகமாக வளர்த்து வந்தார்களாம். வரதவிநாயகர் கோவில் வாசலில் மிகப்பெரிய இலுப்பை மரம் இன்றும் காணப்படுகின்றது. இதனை இக்கோவிலின் தலவிருட்சமாகவும் கொள்கின்றார்கள்.

இவ்வாலயத்தின் கருவறையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் வரதவிநாயகரைப் பற்றிய சுவையான செய்தியொன்று கிடைக்கின்றது. தற்போது இவ்வூரில் வாழ்ந்துகொண்டிருக்கும் எழுபத்தேழு வயதுடைய திரு. தம்பிரெத்தினசிங்கம் என்பவர் இந்த வரலாற்றைத் தருகின்றார். அன்னாருக்கு முதலில் நன்றியைக் கூறுகின்றேன். இவருக்கு ஏழு தலைமுறைக்கு முன்பிருந்த திரு. வீரவாகு உடையாரின் முன்னோர்கள் இந்தியாவிலுள்ள மருங்கூரிலிருந்து வந்தவர்கள். காசியிலிருந்து எடுத்த சிவலிங்கமொன்றை, வீரவாகு உடையாரின் முன்னோர்கள் பரம்பரையாக வைத்துப் பூசை செய்து வழிபட்டு வந்தார்கள். வீரவாகு உடையாருக்குப்பின் வென்றிமாலை உடையார், நினைவாத்த உடையார், கந்தப்பர், முருகப்பர் என்பவர்கள் ஒருவர்பின் ஒருவராக இந்தப் பரம்பரையினர் புளியமரமொன்றின்கீழ் வைத்து வழிபட்டு வந்தார்கள். கந்தப்பர் பரம்பரையில் வந்த சோமநாத வன்னியனாரின் சகோதரியைக் கல்யாணம் செய்தவர் கதிர்காமதம்பி என்பவர். இவருடைய மகன் கணபதிப்பிள்ளை வன்னியனார் இந்த லிங்கத்தை வைத்து வழிபட்டுவருங்காலத்தில் இவருக்கு மூக்கினுள்ளே முளை வளர்ந்து உபத்திரவப்படுத்திக்கொண்டிருந்தது. எந்தவிதமான வைத்தியத்தாலும் குணப்படாதிருந்த இந்த நோயை நீக்கியருளும்படி தாங்கள் வணங்கி வரும் லிங்கப் பிள்ளையாரை வேண்டிக்கொண்டார். லிங்கத்தைப் பிள்ளையார் என்று கருத்திற்கொண்டே இவர்கள் வழிபட்டு வந்தார்கள். கணபதிப்பிள்ளை வன்னியனார் தமது நோயை நீக்கித்தரும்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்கடன் வைத்து விரதமிருந்து பத்துப் பாடல்களைக்கொண்ட பதிகம்பாடி லிங்கப்பிள்ளையாருக்குச் சமர்ப்பித்தார். "என்சிரசிலுறு குறையை நீக்கி வைத்தால் உந்தனக்கோர் ஆலயமும் கட்டி வைப்பேன்" என்பது பதிகத்திலுள்ள வேண்டுகோள். இந்தச் சங்கற்பத்தின்படி அவருடைய மூக்கிலிருந்த முளை மறைந்துவிட்டது. அதே வேளையில் லிங்கத்தில் ஒரு மூக்கு வளர்ந்திருந்ததாம். இந்த அதிசயக் கணபதிலிங்கத்தை வைத்துக் கணபதிப்பிள்ளை வன்னியனார் வரதவிநாயகர் கோவிலைக் கல்லால் கட்டுவித்தார்.

1892ஆம் ஆண்டு மார்கழி மாதம் இருபதாம் திகதி திரு. கதிர்காமர் கந்தப்பிள்ளை என்பவர் இவ்வாலயத்திற்கு நன்கொடையாக நிலம் வழங்கியதற்குரிய சாசனம் ஆலயத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது.

பரம்பரை பரம்பரையாகப் பரிபாலிக்கப்பட்டு வந்த இந்தக் கோவில் நிர்வாகத்தை 1942ஆம் ஆண்டு திரு. கந்தப்பிள்ளை அருளம்பலம் என்பவர் திரியாய் மக்களுக்குப் பொதுவுடமையாக்கிக் கொடுத்துள்ளார். அதன்பின் பரிபாலனசபை ஆலயத்தை நடத்தி வருகின்றது.

கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்நபனமண்டபம், வசந்தமண்டபம், யாகசாலை, பாகசாலை, வைரவர்கோவில், மணிக்கோபுரம் என்பனவற்றை முழுமையாகக் கொண்டு முறையாக அமைக்கப்பட்ட இந்தக் கோவிலில் சிவலிங்க வடிவிலுள்ள விநாயகர் ஸ்தாபிக்கப்பட்டுள்ளார். இந்த லிங்கத்தில் மூக்குப்போன்ற ஒரு புருவம் இருக்கின்றது. பிள்ளையார் அங்கியை அதன்முன் வைத்துப் பூசை செய்து வருகின்றார்கள். பிள்ளையாருக்குரிய பூசைமுறைகளே செய்யப்பட்டு வருகின்றன. ஸ்ரீ க. கந்தையா ஐயர் இவ்வாலயத்தில் பூசை செய்துகொண்டிருக்கின்றார். மகாமண்டபத்தில் எழுந்தருளிப் பிள்ளையாரும், வேலும், நாகதம்பிரானும் காணப்படுகின்றன. மூஷிகம், பலிபீடத்துடன் ஸ்தம்பமண்டபம் காட்சியளிக்கின்றது. உச்சிக்காலம், மாலைச்சந்தி ஆகிய இரண்டுகால நித்திய பூசைகளும், கும்பாபிஷேக தினத்தை ஆரம்பமாகக் கொண்டு தொடர்ந்து பத்து நாட்கள் அலங்கார உற்சவமும் நடைபெற்று வருகின்றது. மாதசதுர்த்தி, பிள்ளையார் கதை, கந்தசஷ்டி, திருவெம்பாவை முதலிய விசேட பூசைகளும் நடைபெற்று வருகின்றன.

1943ஆம் ஆண்டு புனருத்தாரணத் திருப்பணிகள் தொடங்கி 1953ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. 1968ஆம் ஆண்டு வரையும் சிறப்பாகத் திருவிழாக்கள் நடைபெற்றுவந்தன. அதன்பின் ஆலய நிகழ்ச்சிகளில் மக்களுடைய ஈடுபாடு தளர்ச்சியடைந்திருப்பதுபோல் காணப்படுகின்றது. கருவறைப் பிரதிஷ்டையில் ஏதோ குறைபாடிருப்பதாகப் பேசிக்கொள்கின்றார்கள். பெரியோர்கள் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தி ஆலயத்தை முன்போல் பிரகாசிக்கச் செய்யவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னமரவாடிப் பிள்ளையார் கோவில்

இக்கோவில் கிழக்கு மாகாணத்தின் வடக்கெல்லையில், திருக்கோணமலை மாவட்டத்தில் திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து 73 கில்லோமீற்றர் தூரத்தில் இருக்கின்றது. இவ்வாலயத்திற்குக் கிழக்குத் திசையில் கடற்கரையோரமாகவுள்ள மலையொன்றில் ஒரு சிவன்கோவில் இருந்ததற்குரிய இடிபாடுகளும், சிதைந்த திருவுருவங்களும் காணப்படுகின்றன. இக்கோவில் கருங்கற் திருப்பணியாய் இருந்ததற்குரிய அடையாளங்கள் காணப்படுகின்றன.

தென்னமரவாடிப் பிள்ளையார் கோவிலுக்குத் தென்மேற்கே பறையனாற்றுக்கு அப்பால் மணற்கேணி என்ற ஒரு இடமிருக்கின்றது. அங்கு சைவ ஆலயம் ஒன்று இருந்து சிதைந்துபோன அழிபாடுகள் காணப்படுகின்றன. காற்றூண்களும், கல்வெட்டும் அங்கிருந்ததாம். காடுகளை அழித்து வயல்வெளிகளை உண்டாக்கியபோது இந்தக் கோவில் கண்டுபிடிக்கப்பட்டதாக தற்போது தென்னமரவாடிப் பிள்ளையார் கோவில் பூசகராயிருக்கும் திரு. மா. சிற்றம்பலம் ஐயர் அவர்கள் கூறுகின்றார்கள்.

இந்த வரலாறுகளைப் பின்நோக்கிப் பார்க்கும்போது தென்னமரவாடி ஒரு சைவத்தமிழ்ப் பிரதேசமாய் பண்டைக் காலத்தில் இருந்திருக்கவேண்டும். தென்னன் – மரபு – அடி, என்பது தென்னன்மரபடி என்று வழங்கிவந்து அந்தப் பெயர் இன்று தென்னமரவாடியாகத் திரிந்து வழங்கிவருகின்றது. தென்னன் என்பது பாண்டிய மன்னர்களைக் குறிக்கும் பொதுப்பெயர். திருக்கோணமலை மாவட்டத்தில் பாண்டிய மன்னர்களின் ஆட்சி நடைபெற்றுவந்தமைக்கு வரலாறுகள் காணப்படுகின்றன. திருக்கோணேஸ்வரத்தைப் பாண்டிய மன்னர்கள் ஆதரித்து மானியம் வழங்கியதாகக் கோணேசர் கல்வெட்டில் காணப்படுகின்றது. பாண்டியமன்னர்களின் "மீன்இலச்சனை" பொறிக்கப்பட்ட கற்றூண்கள் கோட்டை வாசலில் இன்றும் காணப்படுகின்றது. திருக்கோணமலையிலுள்ள "செம்பியனாறு" என்ற ஊர்ப்பெயரும் பாண்டியர் மரபு வழிப்பெயரே. எனவே பாண்டியராட்சிக்காலத்தில் செம்பியனாறு சிறப்புடன் விளங்கியிருக்கலாம்.

தென்னமரவாடி ஆலயம் இன்று கற்பக்கிரகம், அர்த்த மண்டபம், தெரிசனமண்டபங்களைக்கொண்ட மடாலயமாக இருக்கின்றது. கருவறையில் சுமார் மூன்றடி உயரமான பிள்ளையார் சிலை பீடத்துடன் காணப்படுகின்றது. அர்த்த மண்டபத்தில் தாமிரத்தாலான பிள்ளையார் விக்கிரகமும், வெள்ளிவேலும், அம்மன் சிலாவிக்கிரகமும், மூஷிகம், பலிபீடம் என்பனவுமுண்டு. 1935ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பெற்று சிறப்பாக பூசை, விழாக்கள் நடைபெற்று வந்ததாம். மாதசதுர்த்தி, பிள்ளையார்கதை முதலிய அலங்காரப் பூசைகளும், சித்திரைமாதத் தொடக்கத்தில் கந்தபுராணப்படிப்பு ஆரம்பித்து நிறைவேற்றுவதும் இங்கு நடைபெற்றுவந்ததாம். 1941ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பெற்று இன்னும் திருப்பணிவேலைகள் நடைபெறாமலிருந்து வருகின்றது. இதனால் அலங்காரப் பூசைகளொன்றும் இப்போது நடைபெறுவதில்லை. ஒரு நாளுக்கு ஒரு பூசை மாத்திரம் நடைபெற்றுவருகின்றது. சைவக்குருக்கள்மாரே தொடர்ந்து இவ்வாலயத்திற்குப் பூசைசெய்து வருகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னமரவாடியைச் சுற்றியுள்ள இடங்களைப்பற்றிய வரலாறுகள் காலத்தால் மறைந்தும், மறைந்துகொண்டுமிருக்கின்றன. தமிழ் மக்களும், சைவசமயமும் இங்கெல்லாம் பரவியிருந்ததென்பதை நினைவுகூர்வது சாலவும் பொருத்தமாயிருக்குமெனக் கருதுகின்றேன்.

தென்னமரவாடியைச் சுற்றிப் பறையன்குளம், பறையனாறு, பறையன்வெளி, பறையனோடை என்னும் இடங்கள் பழைய வரலாற்றொன்றைக் கூறுகின்றன. பறையனாறு பதவியா குளத்திலிருந்து உற்பத்தியாகிக் கிழக்கேயோடித் தென்னமரவாடிக்கருகாமையில் கடலில் சங்கமமாகின்றது. தற்போது பதவியா என்றழைக்கப்படும் இடத்தில் முற்காலத்தில் சைவத் தமிழ்மக்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். தமிழ் மன்னராட்சிக்குள் அந்தப் பிரதேசம் இருந்திருக்கின்றது. 1965ஆம் ஆண்டு புதைபொருளாராய்ச்சியாளர்கள் அந்தப் பிரதேசத்தில் அகழ்வாராய்ச்சி செய்தபோது ஒரு தங்கப்பதக்கம் கண்டெடுக்கப்பட்டது. அதனை ஒரு பட்டயமென்றும் கொள்ளலாம். வட்டவடிவமான அந்தப் பதக்கத்தில் நடுவில் நந்தியும், அதற்கிரு பக்கங்களிலும் இரண்டு குத்துவிளக்குகளும், மேற்பக்கம் இரண்டு சாமரைகளும் பொறிக்கப்பட்டு கீழ்ப்பக்கத்தில் "மகேஸ்வரபூமி, ஸ்ரீபதிக்கிராமம், பிராமணர்களுக்குத் தானம் செய்யப்பட்டது" என்று எழுதப்பட்டிருந்தது. புதைபொருளாராய்ச்சியாளர்களால் எடுத்துச் செல்லப்பட்ட இந்தப் பதக்கம் தொல்பொருட்காட்சிச்சாலையில் இருக்கலாம். இதனைவிட சிவலிங்கங்களும், சிவன், அம்பாள் விக்கிரகங்களும் இங்கு கிடைத்திருக்கின்றன. பதவியாவிலுள்ள மொறக்காவ, தித்தக்கொணாவ, காட்டுக்கொல்லாவ, ஏராமடு என்னுமிடங்களில் பிள்ளையார் விக்கிரகங்கள் காணப்படுகின்றன.

இந்த பதவியாவைத் தமிழ் மன்னனொருவன் ஆண்டகாலத்தில் பகையரசனொருவன் படையெடுத்து வந்தானாம். மாற்றரசனுடைய படையெடுப்பைத் தடுக்க நினைத்த மன்னன் பதவியாக் குளத்தின் குளக்கட்டைக் "கொழுமோர்" காய்ச்சி ஊற்றி உடைக்கும்படி ஆணையிட்டானாம். கொழுமோர்ப் பிரயோகம், கற்பாறைகளையும் உடைக்கும் பண்டைக்கால விஞ்ஞானப் பிரயோகம். அதாவது குளக்கட்டில் நெருப்பை எரித்து சூடேற்ற வேண்டும். நன்கு சூடேறிய பின் அந்த இடத்தில் மோரைக்கரைத்து ஊற்றவேண்டும். அப்படிச் செய்யும்போது குளக்கட்டில் வெடிப்பு ஏற்படும். இப்படிச் செய்தபோது குளக்கட்டு வெடித்து நீர் கசிந்து ஓடத் த்தாடங்கிது. அது பெரியகுளமாதலால் குளத்திலுள்ள பெரிய மீனொன்று வெடிப்பை அடைத்துக் கொண்டதாம். அந்த மீனை வெட்டி வெளியேற்றும்படி அரசன் ஆணையிட்டானாம். இதனைச் செய்ய அஞ்சி யாரும் முன்வரவில்லை. ஒரு பறையன் துணிந்து முன்வந்தானாம். அதனைச் செய்யும்போது வெள்ளம் புரண்டு தன்னை அள்ளிக்கொண்டு போகும் என்பதை உணர்ந்த அவன் தனது அங்கங்கள் எங்கெங்கு கிடக்கின்றனவோ அங்கெல்லாம் தன்பெயர் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு பறையன் அந்த மீனை வெட்டி குளத்தைத் திறந்தான். வெள்ளம் புரண்டு பறையனை அள்ளிக்கொண்டு சென்று சிதைத்துத் தள்ளியது. மாற்றான் படையும் சிதைந்து அழிந்ததாம். பறையன் கேட்டுக்கொண்டபடி அவனுடைய அங்கங்கள் சிதறிக்கிடந்த இடங்களுக்கு பறையன்குளம், பறையன்வெளி, பறையனோடை, பறையனாறு என்று பெயரிடப்பட்டதாக திரியாயில் ஓய்வுபெற்ற கிராமத்தலைவர் திரு. சி. பூ. பொன்னம்பலமவர்கள் தகவல் தந்துதவினார்கள். இந்தப் பறையனாறுதான் தென்னமரவாடிப் பிள்ளையார் கோவிலுக்குச் சமீபமாக ஓடுகின்றது. இதுவே கிழக்கு மாகாண எல்லையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்புறுபிட்டி விநாயகர் கோவில்

திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து இருபத்திரண்டு கில்லோமீற்றர் தூரத்தில் கட்டுக்குளம்பற்றிலுள்ள சைவக் கிராமம் கும்புறுபிட்டி. கிழக்கே கடலாலும், மேற்கே வேலப்ப மலையாலும் வயல்களாலும் சூழப்பட்டுச் சலப்பை ஆற்றுக்கும், இறக்கக்கண்டி ஆற்றுக்கும் இடைப்பட்டபகுதி கும்புறுபிட்டி எனப்படுகின்றது. தென்னஞ்சோலைகளாலும், வயல்களினாலும் இயற்கையழகு பெற்றுவிளங்கும் இந்தக் கிராமத்தின் மத்தியில் விநாயகராலயம் காணப்படுகின்றது. இந்தக் கிராமத்திற்கு மேற்கே நாலு கில்லோமீற்றர் தூரத்தில் வேலப்ப மலை இருக்கின்றது. வேலப்ப மலையில் பன்னெடுங் காலத்திற்குமுன் பெரிய ஆலயமொன்றிருந்து அழிந்துவிட்டதற்குரிய அடையாளங்கள் காணப்படுகின்றன. இங்கு வாழும் முதியவர்களும் இவ்வாலயத்தைப்பற்றிச் செவிவழிச் செய்தியாகத் தாம் அறிந்தவற்றைக் கூறுகின்றார்கள். சுமார் நூற்றியைம்பது வருடங்களுக்குமுன் வேலப்ப மலையிலிருந்து கொண்டு வரப்பட்ட விநாயகர் விக்கிரகமே இந்தக் கோவிலில் இருப்பதாகக் கூறுகின்றார்கள். வேலப்ப மலையிலிருந்து கிடைத்த முத்துக்குமாரனுடைய தாமிர விக்கிரகமொன்று இங்குள்ள கண்ணகையம்மன் கோவிலில் வைக்கப்பட்டிருக்கின்றது. இப்பிரதேசம் பண்டைக்காலத்தில் குமரபுரம் என வழங்கி வந்திருக்கின்றது. வேலன் எழுந்தருளியிருந்த மலை வேலப்பமலையென்றும் அங்கு கோவில் கொண்டிருந்த முத்துக் குமரனுடைய பெயரைத் தாங்கி இவ்வூர் குமரபுரம் என வழங்கி வந்திருப்பதும் வரலாற்று ஆசிரியர்களுக்குப் பெரு விருந்தாயமைகின்றது.

இத்தகைய சிறப்புக்களோடு விளங்கிய பழமைமிக்க சைவக்கிராமத்தில் இன்று இருக்கும் விநாயகர் கோவில் சிறிய மடாலயமாக இருந்து வருகின்றது. அக்காலத்தில் குமரபுரச் சைவமக்களின் வழிபாட்டுத் தலமாயிருந்த வேலப்ப மலைக் கோவிலானது இயற்கை ஏதுக்களினாலோ வேறு எக்காரணத்தினாலோ அழிவுற்றிருக்கலாம். நெடுங்காலத்திற்குப்பின் இற்றைக்குச் சுமார் நூற்றைம்பது வருடங்களுக்குமுன் வேலப்ப மலையிலிருந்த பிள்ளையாரைக் கொண்டு வந்து ஒரு மரத்தடியில் வைத்து வழிபட்டு வந்தார்கள். பின்னரும் அது பராபரிப்பிழந்து புற்று வளர்ந்து மூடிக்கொண்டது. இந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையாரின் வரலாற்றையறிந்த இவ்வூர்ப் பெருமகன் திரு. சின்னத்தம்பி கனகசபை வைத்தியர் என்பவர் புற்றை அகழ்ந்து பிள்ளையாரை எடுத்துச் சிறு கொட்டில் கோவில் கட்டி அதில் வைத்துத் தானே பூசை செய்து வழிபட்டு வந்தார். அவருக்கு ஆண் குழந்தைகள் இல்லாததால் பொன்னம்மாளும், அவருக்குப்பின் கண்ணகைப்பிள்ளையும், அவருடைய கணவன் திரு. விஸ்வலிங்கம் என்பவர்களும் ஆலயத்தைப் பராபரித்து வந்தார்கள். திரு. விஸ்வலிங்கம் என்பவர் கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபங்களைக் கொண்ட கற்கோவிலாகக் கட்டினார். இப்பொழுது திரு. வி. சுப்பிரமணியம் என்பவரும் அவருடைய சகோதரர்களும் ஆலயத்தைப் பராபரித்து வருகின்றார்கள். இவர்கள் இவ்வாலயத்திற்கு அழகிய மணிக்கோபுரம் கட்டியிருக்கின்றார்கள்.

கருவறையில் இரண்டரையடி உயரமான பிள்ளையார் சிலையும், வைரவர் சூலமும், வேலும் வைக்கப்பட்டிருக்கின்றது. ஒரு நாளைக்கு ஒரு தரம் நித்தியபூசையும், மாத சதுர்த்தி, பிள்ளையார் கதை, திருவெம்பாவை, சித்திரா பூரணை முதலிய விசேட பூசைகளும் நடைபெற்று வருகின்றன. பழந்தமிழ் சைவப்பிரதேசமாகிய குமரபுரம், குமரபுட்டியாகிப் பின்னர் கும்புறுப்பிட்டியாகத் திரிபுப் பெயர் பெற்றிருக்கலாம். இங்கிருந்து எட்டுக் கில்லோமீற்றர் தூரத்தில் பறையன்குளம் எல்லைக் காளி கோவில் இருக்கின்றது. இதுவும், கந்தளாய் காளி கோவிலும், சம்பூர்ப் பத்திரகாளி கோவிலும் திருக்கோணேஸ்வரத்தின் எல்லைக் காளிகோவில்கள் என்று இங்கு வாழும் முதியவர்கள் கூறுகின்றார்கள். சமராக்குளம், புளியங்குளம், கற்கிடங்குக்குளம், மயிலார்குளம், வண்ணாத்திகுளம், கற்கட்டுக்குளம், அலியன்குளம் முதலிய குளங்களால் நீர் வளம்பெற்ற கிராமத்தில் அருள்வளம் பெருக்கும் கோவில் சிறப்பாயமைய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திவிநாயகர் கோவில் நிலாவெளி

திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து பதினாறு கில்லோமீற்றர் தூரத்தில் நிலாவெளி என்ற சைவக் கிராமம் இருக்கின்றது. இங்கு இப்பொழுது ஒரு பகுதியில் இஸ்லாமியரும், கிறீஸ்தவர்களும் வாழ்கின்றார்கள். இக்கிராமத்தின் மத்தியில் சித்தி விநாயகர் ஆலயம் காணப்படுகின்றது. இந்தக் கிராமத்தின் பண்டைக்கால வரலாற்றைப் பார்க்கும்போது பாடல் பெற்ற திருக்கோணேஸ்வரத்தோடும், பெரியகுளத்திலுள்ள நாதனார் கோவிலோடும் தொடர்புடைய சம்பவங்கள் கிடைக்கப்பெறுகின்றன.

குளக்கோட்டுமன்னன் திட்டம் பண்ணிவைத்த கோணேசர் கல்வெட்டில் கூறப்பட்டுள்ள இந்துவெளி என்ற இடமே பிற்காலத்தில் நிலாவெளி என்று பெயர் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. கோணேசர் ஆலயத்தில் செய்யப்படும் யாகங்கள், வேள்விகள், அன்னதானங்கள் முதலியவற்றினால் கிடைக்கும் சாம்பர் கொட்டப்பட்டு வெண்மையான வெளியாகக் கிடந்ததால் இந்துவெளி எனப்பட்டதாம். இதுவே நிலாவெளி எனக் கூறப்படுகின்றது.

நிலாவெளிக்குத் தென்மேற்குத் திசையிலுள்ள பெரியகுளம் என்ற இடத்தில் இராஜராஜசோழனால் கட்டப்பட்ட "நாதனார்" கோவிலுக்கு நிலாவெளியிலிருந்து மாடுகள் மானியமாகக் கொடுக்கப்பட்டதாக ஒரு கல்வெட்டு நாதனார் கோவிலில் காணப்படுகின்றது. இதனை நந்தனார் கோவில் என்று இப்போது கூறுகின்றார்கள். நாதனார் கோவில் கல்வெட்டுக்கள் வேறு சிலவும் இருப்பதாகக் கூறுகின்றார்கள். மேலே கூறப்பட்ட இரண்டு வரலாறுகளினாலும் பன்னெடுங் காலத்திற்கு முன்பே நிலாவெளி சைவத் தமிழ்க் கிராமமாக இருந்துவந்துள்ளதென்பது புலனாகின்றது. கோணேசர்கோவில் நிர்வாகத்தை நடத்துவதற்காகக் குளக்கோட்டு மன்னனால் நியமிக்கப்பட்ட கனகசுந்தரப் பெருமாள் நிலாவெளியில் தான் இருந்ததாகவும், கோணேசர் கோவிலில் காப்புக் கட்டுதல், விழா நடத்துதல் ஆகிய பணிகளை அவர் செய்துவந்ததாகவும் கோணேசர் கல்வெட்டு கூறுகின்றது.

போத்துக்கீசரால் 1624ஆம் ஆண்டு கோணேசர் ஆலயம் அழிக்கப்பட்டபின்பே திருக்கோணமலையைச் சூழவுள்ள கிராமங்களில் ஆலயங்கள் தோன்றியிருக்கின்றன. தற்போது சித்திவிநாயகர் கோவில் இருக்குமிடத்தில் ஓலைக்கொட்டிலால் அமைக்கப்பட்ட சிறிய ஆலயம் இருந்துவந்தது. இந்தக்கோவிலை இன்றைக்கு நூறு வருடங்களுக்குமுன் திரு. ஆறுமுகம் ஆழ்வாப்பிள்ளை என்பவரை தர்மகர்த்தாவாகக் கொண்டு நிலாவெளி மக்கள் கற்கோவிலாகக் கட்டினார்கள். இந்தக் கோவிலுக்கு 1908ஆம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்முதல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அன்றுதொடக்கம் இவ்வாலயம் சிறப்பாக நடத்தப்பட்டு வந்திருக்கின்றது. இந்தக் கோவில் வரலாற்றை மனமகிழ்ச்சியுடன் தந்துதவிய திரு. கயிலாயபிள்ளை கெஜரெத்தினம் அவர்களுக்கு எனது நன்றி உரித்தாகுக. அவரும் அவருடைய முன்னோரும் இவ்வாலயத்தைப் பண்டைக் காலத்திலிருந்த சைவமணம் இன்றும் இக்கிராமத்தில் தொடர்ந்து இருந்து வருகின்றது.

இரண்டாவது உலக மகாயுத்தத்தினாலும் பின்னர் ஏற்பட்ட கோரப் புயலினாலும் இவ்வாலயம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. எனினும் கிராம மக்களின் ஊக்கத்தினாலும் திரு. கந்தப்பர் கணபதிப்பிள்ளை என்ற பெரியாருடைய தியாகம், விடாமுயற்சியினாலும் மீண்டும் திருப்பணிகள் செய்யப்பட்டு 1972ஆம் ஆண்டு இரண்டாம்முறை கும்பாபிஷேகம் நடைபெற்று ஆலயம் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றது. இன்னும் சில திருப்பணிகள் நிறைவேறாத நிலையில் இருக்கின்றன.

கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்நபனமண்டபம், ஸ்தம்பமண்டபம், யாகசாலை, பாகசாலை, களஞ்சியம் என்பனவற்றைச் சாஸ்திர ரீதியாகக் கொண்டு அமைக்கப்பட்ட சிறந்த ஆலயமாகக் காணப்படுகின்றது. கருவறையில் விநாயகப் பெருமானுடைய சிலாவிக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. மகாமண்டபத்தில் விநாயகர், சந்திரசேகரர், வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணியர் முதலிய எழுந்தருளி விக்கிரகங்கள் இருக்கின்றன. வைரவருக்கும், சண்டேஸ்வரருக்கும் தனிக் கோவில்கள் உள்ளன. மணிக்கோபுரமும் கட்டியிருக்கின்றார்கள். உச்சிக்காலம், மாலைச்சந்தியாகிய நித்திய பூசைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆவணி மாத அவிட்ட நட்சத்திரத்தில் திருவிழா ஆரம்பமாகிப் பத்து நாட்கள் அலங்கார உற்சவம் நடைபெற்றுவருகின்றது. ஆவணிச்சதுர்த்தி, பிள்ளையார் கதை, கந்தசஷ்டி, திருவெம்பாவை, திருக்கார்த்திகை, சிவராத்திரி முதலிய விசேட காலங்களில், சிறப்புப் பூசைகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாலயத்திற்கு வன்னிமரம் தலவிருட்சமாக இருந்து வருகின்றது. இவ்வாலயத்தில் கடந்த நாற்பது ஆண்டுகளாகச் சைவக் குருக்கள் பரம்பரையே பூசை செய்துகொண்டு வருகின்றது. அதற்குமுன் பிராமணர்கள் பூசை செய்து வந்தார்களாம். சமீபகாலத்தில் பூசை செய்துகொண்டிருந்த சிவஸ்ரீ ம. சண்முகக் குருக்களுக்குப்பின் இப்பொழுது சிவஸ்ரீ இ. இரத்தினேஸ்வரக் குருக்கள் பூசைசெய்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலாவெளி சித்தி விநாயகர் ஊஞ்சல்

*ஆக்கியோன்:*
திரு. வே. அகிலேசபிள்ளை அவர்கள்
*திருக்கோணமலை*

சீருலவு செம்பவளத் தூண்கள் நாட்டித்
திகழுமெழின் மரகதத்தால் விட்டம் பூட்டி
பேருலவு நித்திலச் சங்கிலிகள் மாட்டிப்
பிரமைமிகு தமனியப் பொற் பலகையோட்டி
ஏருலவுமலங்கிர்தப்பொன் னூஞ்சல் மீதே
இருந்து நிலாவெளியதனி லினிதாய் வாழும்
வாருலவு கனதன வல்லபையின் பாகம்
மருவு சித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

இந்திரனு மலரயனும் பாதந்தாங்க
இருபுறமும் பூதகணநாதர் தேங்க
வந்தடியார் கரங்குவித்துப் போற்றி செய்ய
வானவர்கள் புட்பமழை மகிழ்வாய்ப் பெய்ய
அந்தர துந்துபிகளைந்து மிகுந்தொலிக்க
அரிய ரத்னக் கழல்களிற் கிண்கிணி கலிக்கச்
சுந்தரமார்ந் திலகுநிலா வெளியில் வாழும்
தூயசித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

அன்னை தந்தை பார்த்து மனக் களிப்புக் கொள்ள
அரியமறை வேதியர்க ளாசி விள்ளத்
தன்னிகரிலா மகளிர் கவரி போடச்
சண்முகவேண் மனைவியரோ டருகினாட
மின்னு சந்திர சூரியர்கள் கவிகை தாங்க
மிகுமடியார் துதிக்குமொலி யெங்கு மோங்க
வன்னமுறு நிலாவெளியி லினிது வாழும்
வல்லசித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

மற்புயஞ்சேர் நாரதர் யாழதனை மீட்ட
மலர்மகளுங் கலைமகளும் வடந்தொட்டாட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலாவெளி சித்தி விநாயகர் ஊஞ்சல்

பொற்புலவு மயிராணி களாசி நீட்டப்
பொன்னுலக வரம்பையரா லாத்தி காட்டக்
கற்பகலா மடமகளி ரினிது வாழுங்
கவினிலகு நிலாவெளியி லிருந்தென்னாளும்
அற்புதமா யடியவருக் கருள்பாலிக்கும்
ஆதிசித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

அட்டதிக்கி லுள்ளவர்கள் பணிசெய் தேத்த
அரவணையிற் றுயின் மாமன் மகிழ்ந்து போற்றக்
கட்டழகா ரரம்பையர்கள் நடனமாடக்
கந்தமலர் மாலையில் வண்டிசைகள் பாட
எட்ட நின்று முனிவரர் பல்லாண்டு கூற
இருபுறமும் தொண்டர் குழாம் நெருங்கி மீற
மட்டவிழு நிலாவெளியூர் தன்னினாளும்
மருவு சித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

ஆதிமறை முதற் பொருளே யுமையா ளீன்ற
ஐங்கரனே யன்பர்தமக் கருள் பாலிக்கும்
கோதில் குணக் குன்றே யங்குச பாசங்கைக்
கொண்டவனே யடியருளக் கோயில் வாழும்
பாதி மதி தரித்த சிவ பெருமான் பெற்ற
பாக்கியமே யெனவெவரும் பரவிப் போற்ற
நீதி பிறழாத நிலாவெளியில் வாழும்
நித்திய சித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

கருணைபுரிந் தமரர்தமை முன்னாட் காத்த
கயமுகனைச் செற்றவரே யாடீரூஞ்சல்
மருமலர்க் காவிற் றுணைவன் வள்ளிமாதை
மணமுடிக்கச் செய்தவரே யாடீரூஞ்சல்
இறுமையுறு மேருவிற் பாரதத்தைக் கோட்டால்
எழுதியவெம் பெருமானே யாடீரூஞ்சல்
தருமநெறி திகழுநிலா வெளியில் வாழும்
தகைகொள் சித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

தங்கரத்ன முடி சிரசி லிருந்தேயாடத்
தயங்குமெழின் முப்புரிநூன் மார்பிலாடத்
தொங்கு துதிக் கையில் ரத்னக் கலசமாடத்
துலங்குகின்ற செவிகளிற் குண்டலங்களாடச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கையுறு மங்குச பாசங்களாடத்
திகழுமணிப் பூஷணங்கள் சிறந்தேயாட
மங்கல வார்ப் போங்கு நிலா வெளியினாளும்
மருவு சித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

சிந்துர வானனமாடச் செவிகளாடத்
திருவருள்செய் விழியாடக் கரங்களாடத்
தொந்திவயி றசைந்தாடத் துதிக்கை யாடத்
துலங்குமொற்றைக் கோடாடத் தொண்டராட
கந்தமலர்ப் பதமாடச் சதங்கையாட
கருது பதினெண்விதமாங் கணத்தோராட
நந்து தவழ் பணைகொணிலா வெளியில் வாழும்
நல்லசித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

வந்தவினை தவிர்ப்பவரே யாடீரூஞ்சல்
மலைமகளின் தலைமகனே யாடீரூஞ்சல்
தந்திமுக முடையவரே யாடீரூஞ்சல்
சண்முகற்கு மூத்தவரே யாடீரூஞ்சல்
முந்து பிரணவப் பொருளே யாடீரூஞ்சல்
மூஷிகவாகன முடையீர் யாடீரூஞ்சல்
சிந்து புடை சூழுநிலா வெளியில் வாழும்
செய்ய சித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

பார் வாழி செந்நெல் விளை பழனம் வாழி
பாவையர்கள் கற்புநெறி பல்கி வாழி
கார்வாழி யானினங்கள் கதித்து வாழி
கருதரிய வேதியரெக் காலும் வாழி
ஏர்வாழி சிவ சமய மெங்கும் வாழி
இலங்குமுயிர்த் தோற்றமெலா மென்றும் வாழி
சீர்வாழி செய்யநிலா வெளியூர் வாழி
சித்தி விநாயகர் கழல்கள் வாழிதானே.

## எச்சரிக்கை

திருவார் நதி மதிசூடிய சிவனுக் கருமகனே
பரிவாயருள் புரிவாய் கணபதியே எச்சரிக்கை

அருமாமறைப் பதியே யடியவர் தேடிய நிதியே
மருமாமலர்க் குழலாருமை மகனே எச்சரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலாவெளி சித்தி விநாயகர் ஊஞ்சல்

தொந்தி வயிற் றைந்துகரத் தூயா எச்சரிக்கை
சுடர்வேலுள குகனுக்கருந் துணைவா எச்சரிக்கை

மெத்தும் புகழுள்ள நிலாவெளியூர் தனில் வாழும்
பக்தர்க்கருள் சித்திக்கண பதியே எச்சரிக்கை.

### பராக்கு

பந்தவினை தீர்த்தருள் செய்பவனே பராக்கு
பால விலோசனமுடைய பகவா பராக்கு

வாமி சிவகாமி யருண் மைந்தா பராக்கு
மணியரவிற் றுயிலுமரி மருகா பராக்கு
மாங்கனிக்குத் தந்தை வலம் வந்தாய் பராக்கு
வல்லவையைப் பாகமதில் வைத்தாய் பராக்கு

இத்தரை சொல் மதிவெளியி லினிதாக வாழும்
எழின் மருவு சித்தி விநாயகனே பராக்கு.

### லாலி

மண்ணுலகும் விண்ணுலகும் வந்தொழும் பாதா
மணியரவ மணியுமரன் மகிழு மலர்ப் பாதா – லாலி லாலி

அடியவருக் கருள்புரியம் ஆனைமுகத் தையா
அருமறைசொன் மூலமதி லமர்ந்திருக்குந் துய்யா – லாலி லாலி

வந்தவினை தீர்த்தருளும் வல்லவையின் நேசா
மற்கய முகன்தனை முன் வதைசெய்த வீசா – லாலி லாலி

சித்தி மிகுந்த நிலா வெளியூரில் வாசா
சித்தி விநாயக கிருபை செய்தருள்வாய் ஈசா – லாலி லாலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடலியம்பதிப் பிள்ளையார் கோவில் சாம்பல்தீவு

திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து ஏழு கில்லோமீற்றர் தூரத்தில் இருக்கின்றது சாம்பல்தீவு என்ற சைவக் கிராமம். திருக்கோணமலையிலிருந்து நிலாவெளிக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் சாம்பல்தீவுச் சந்தையிலிருந்து பிரிந்து செல்லும் கிளைப் பாதையினூடாகச் சென்று இந்தக் கோவிலை அடையலாம்.

தெட்சணகயிலாயம் என்று போற்றப்படும் திருக்கோணேஸ்வரத்தில் பண்டைக் காலத்தில் நடைபெறும் யாகங்கள், வேள்விகள், அன்னதானங்கள், என்பனவற்றினாலும், பாகசாலையிலும் சேரும் சாம்பல்களை எடுத்துச் சென்றுகுவிக்கப்பட்ட ஒரு தீவாக இந்தக் கிராமம் ஆதியில் காணப்பட்டமையினால் சாம்பல்தீவு என்று பெயர் பெறலாயிற்று. சைவமும், தமிழும் தழைத்தோங்கி வளரும் இக்கிராமத்தில் பண்டைக்காலம் தொடக்கம் பல ஆலயங்கள் மக்களால் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கின்றது. இந்த ஆலயங்களில் வடலியம்பதிப் பிள்ளையார் கோவிலும் ஒன்றாகும். இவ்வாலயத்திலுள்ள பிள்ளையார், வடலிப்பிள்ளையார் என்று அழைக்கப்படுகின்றார். இவ்வாறு கூறுவதற்குக் காரணமும் இருக்கின்றது. காடு துப்புரவாக்கி வடலிகள் புரட்டும் பொழுது நிலத்தின் அடியிலிருந்து இந்தப் பிள்ளையார் வெளிப்பட்டார். ஆயுதங்கள் தாக்கியதால் பிள்ளையாருடைய ஒரு கையில் ஊனம் ஏற்பட்டுவிட்டது. வடலியின் அடியில் கிடைத்த வடலிப் பிள்ளையார் எனப் பெயர் வைத்தார்கள். இந்தப் பிள்ளையார் வெளிப்பட்ட இடத்தில் பண்டைக்காலத்தில் ஒரு சிறிய கொட்டிற்கோவில் கட்டி பிள்ளையாரை வைத்து வழிபட்டு வந்தார்கள். ஊனமடைந்த பிள்ளையார் செய்த அற்புதங்களால் ஊனமற்ற பிள்ளையார் அந்தக் கொட்டிற் கோவிலில் சிறிது காலத்தின்பின் ஸ்தாபிக்கப்பட்டார். முன்னர் கிடைத்த ஊனமடைந்த பிள்ளையாரை எடுத்துச் சென்று தீர்த்தக் கடற்கரையிலுள்ள சிறுகோவிலில் வைத்து வழிபட்டு வருகின்றார்கள்.

பல ஆண்டுகளுக்கு முன்பு செம்பிமலைச் சுவாமியார் எனச் சிறப்புப் பெயர் பெற்ற ஸ்ரீலஸ்ரீ சோமேஸ்வரானந்தகிரி எனப்படும் சந்நியாசி ஒருவர் இந்தக் கிராமத்தில் சில காலம் தங்கியிருந்தார். அவருடைய சேவைகளுக்கு இந்தக்கிராமத்தில் இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியோர்கள் நல்ல ஆதரவு கொடுத்தார்கள். ஸ்ரீலஸ்ரீ சோமேஸ்வரானந்தகிரி சுவாமிகளுடைய பெருமுயற்சியினாலும், கிராமத்து மக்களுடைய ஒத்துழைப்பினாலும் வடலியம்பதிக் கொட்டிற் கோவில் ஆகம முறைப்படி அமைந்த கற்கோவிலாகக் கட்டப்பட்டது. 1936ஆம் ஆண்டு திருப்பணி வேலைகள் நிறைவேறி மகா கும்பாபிஷேகமும் நடைபெற்றது. இந்தக் கும்பாபிஷேகத்தின்போது சாம்பல் தீவிலுள்ள வாலையம்மன் கோவிலில் இருந்த பிள்ளையாரை எழுந்தருளச்செய்து வடலியம்பதியில் பிரதிஷ்டை செய்து, வடலியம்பதியிலிருந்த ஊனமடைந்த பிள்ளையாரைத் தீர்த்தக்கடற்கரைக் கோவிலில் ஸ்தாபித்தார்கள்.

இரண்டாவது உலக மகாயுத்தத்தின்பின் இவ்வாலயம் சீர்குலைந்து வழிபாட்டுக்கு வசதியற்ற நிலையில் இருந்துவந்தது. சாம்பல்தீவு மக்கள் இவ்வாலயத்தைப் புனருத்தாரணம் செய்யவேண்டும்மென்று நீண்டகாலமாக முயன்றுவந்தார்கள். இத்திருப்பணியை நிறைவேற்றுவதற்காகப் புனருத்தாரண சபையொன்றை ஸ்தாபித்தார்கள். புனருத்தாரண சபையும், பொது நலம் விரும்பும் சைவ அன்பர்களும் சேர்ந்து ஒருங்கிணைந்த பெருமுயற்சியால் வடலியம்பதிப் பிள்ளையார் கோவில் திருப்பணிகள் நிறைவேறி 7– 6– 79இல் புனருத்தாரண சபைச் செயலாளராகிய திரு. வ. தங்கராசா அவர்களின் சலியாத உழைப்பினால் இப்பெரும் திருப்பணி நிறைவேறியது. இவ்வாலயத்தைப் பற்றிய வரலாறுகளைத் தந்துதவிய அன்னாருக்கு நன்றி உரித்தாகுக. கும்பாபிஷேகத் தினத்தைத் தீர்த்த தினமாகக் கொண்டு பத்து நாள் அலங்கார உற்சவமும் நடைபெற்று வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாம்பல்தீவு வடலியம்பதிப் பிள்ளையார் திருவூஞ்சல்

ஆக்கியோன்:

கழகப்புலவர் திரு. பெ. பொ. சிவசேகரம் அவர்கள்

திருக்கோணமலை

## காப்பு

செல்வம் நிறைந்துவரச் செய்கருமங் கைகூட
அல்லல் அகல அருள்சேரத் – தொல்லைப்
படலையடி நின்று பணிவாரைக் காக்கும்
வடலியடிப் பிள்ளையே வா.

சீராரும் பிரபந்தச் செய்யுளாலே
செந்தமிழில் அமுதூறுஞ் சொல்லினாலே
ஏராரும் இயலிசையின் இசையினாலே
இதமாரும் விருத்தப்பா நடையினாலே
ஆராத பேரின்பம் ஆரக் கவியில்
அழகான தமிழூஞ்சல் பதிகம் வாழத்
தாராரும் பெருமானைச் சாம்பல் தீவு
தனிலமரும் வடலியானை வழுத்துவோமே.

ஆரியமுஞ் செந்தமிழுங் கால்களாக
அகிலமொழி ஆங்கிலமே விட்டமாக
சீரிலங்கு கலைஞானங் கயிறதாகச்
செழும்புலவர் அன்புள்ளம் பலகையாக
வாரிழ் உலகமெலாம் வடந்தொட்டாட்ட
வடலியடிப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்
தாரணியோர் புகழ்பதிசேர் சாம்பல்தீவு
தனிலமர்ந்த கரிமுகனே ஆடீரூஞ்சல்.

குளமார மழைபெய்யக் கோடை வெய்யில்
கொதியாற நிலமகளுங் குளிர்ந்தேயாட
களமார நெற்பயிர்கள்கழனியெங்கும்
கனகமணிக் கதிரெறிந்து கண்ணிலாட
வளமாரக் கமஞ் செய்யும் சாம்பற்றீவில்
வடலியடைப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்
இளமாதர் உளமதில் இன்பமாட
இபமாகி வந்தவரே ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாம்பல்தீவு வடலியம்பதிப் பிள்ளையார் திருவூஞ்சல்

வானத்து மேகங்கள் மண்ணைப் பார்த்து
வருடமொரு மும்மாரி மழையைப் பெய்ய
தானத்தை மறவாத தரணி மக்கள்
தருமங்கள் கருமங்கள் தவறாது செய்ய
மானத்தை உயிராகப் போற்று கின்ற
மக்களுறை பதியான சாம்பல் தீவில்
ஞானத்தே னருள்வடலிப் பிள்ளையாரே
நலம்பெருக வளம்பெருக ஆடீரூஞ்சல்.

செம்பாட்டான் வெள்ளையொடு கறுத்தக் கொழும்பான்
தெவிட்டாத விலாட்டோடு தேன்சுரக்கும்
அம்பலவி கிளிச்சொண்டன் மாம்பழங்கள்
அணியணியாய் வீடெங்கும் அழகு செய்யும்
கொம்பெல்லாம் பலாக் கனிகள் வெடித்துத் தூங்கும்
கோடில்லாப் பனை நிலத்தில் வாசம் வீசும்
செம்பழங்கள் கொட்டிநிற்கும் சாம்பல்தீவில்
சிறுவடலிப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்.

பாடுபட்டிங் குழைப்பாரைப் பார்க்குங் கண்கள்
பணிசெய்யும் அடியாரை ஈர்க்குங் கண்கள்
மாடுகட்டிச் சூடடிக்கும் உழவர் தம்மை
மகிழ்ந்தணைத்து வரமளிக்குங் கருணைக் கண்கள்
காடுவெட்டிக் கழனியாக்குஞ் சாம்பல் தீவார்
காதலித்துப் போற்றிவரும் கமலக்கண்கள்
வாடி வருவார்க்கருளும் கண்கள் கொண்ட
வடலியடிப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்.

பெற்றெடுத்த உமையம்மை உள்ளமாட
பேசாத ஊமைகளும் பேசியாட
கற்றறிந்தோர் உனைக்கண்டு களிப்பில் ஆட
கலைதேர்ந்த சிற்பிகளின் கண்களாட
சற்குணத்தார் வாழுமுயர் சாம்பல் தீவைச்
சார்ந்துநிற்கும் வடலியடிப் பிள்ளையாரே
மற்புயத்தோள் ஆடிவர ஆடீரூஞ்சல்
மறலிபயந் தோடிடநீர் ஆடீரூஞ்சல்.

சாதிமத பேதங்கள் சாயப் போலிச்
சாத்திரங்கள் கோத்திரங்கள் சப்பையாக
மாதர்தமை யடிமைசெயும் மடைமை சாய
வஞ்சனையும் பொறாமைகளும் மறைந்து போக
வாதுகளும் சூதுகளும் வரண்டு போக
வடலியடிப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்
தீதகலப் பணிபுரிவார் வாழும் சாம்பல்
தீவிலுறை கரிமுகனே ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்கொழிக்க மண்செழிக்க ஆடீர் ஊஞ்சல்
புதுமரங்கள் வளங்கொழிக்க ஆடீரூஞ்சல்
அன்பளிப்பால் அமுதுபடைத் திடுவார் உள்ளம்
ஆடிவர வடலியனே ஆடீரூஞ்சல்
கன்றினுக்குப் பால் சுரக்கும் கறவைப் பசுக்கள்
கடலெங்கும் பால்பொழியும் சாம்பல் தீவில்
நின்றருளும் கஜமுகனே ஆடீரூஞ்சல்
நிலையான பரம் பொருளே ஆடீரூஞ்சல்.

ஆதிமுதற் பரம் பொருளே ஆடீரூஞ்சல்
ஆணைமுகப் பெரும் பொருளே ஆடீரூஞ்சல்
ஓதுநான் மறைப் பொருளே ஆடீரூஞ்சல்
ஓங்காரத் துட்பொருளே ஆடீரூஞ்சல்
சாதமருள் ஆண்டவனே ஆடீரூஞ்சல்
சாம்பல்தீ வமர்ந்தவனே ஆடீரூஞ்சல்
மாதுமையாள் புத்திரனே ஆடீரூஞ்சல்
வடலியடிப் பிள்ளையாரே ஆடீரூஞ்சல்.

## வாழி

மாரிவளங் குன்றாது வையம் வாழி
வளமாரத் தொண்டு செயும் உழவர் வாழி
நீரிலுறை மீனினங்கள் நிலைத்து வாழி
நீதிநெறி யாளர் மொழி நீடு வாழி
சீரிலங்கு தென்கோணைச் சாம்பல் தீவின்
செய்வளமும் கனிவளமும் சிறந்து வாழி
வாரியடித் தமுதூட்டு வாரும் வாழி
வடலியடிப் பிள்ளையாரும் வாழி வாழி.

## எச்சரிக்கை

கஜமாமுக நிதியே கணபதியே எச்சரிக்கை
கலைசேர் பிறை மதியே யணி ஒளியே எச்சரிக்கை

உமையாள் தருபாலா குரு நாதா எச்சரிக்கை
உயிரே பரம் பொருளே விளங் கனியே எச்சரிக்கை

எழுதாமறைப் பொருளே திரு வருளே எச்சரிக்கை
எனையாளிறையோனே மறை யோனே எச்சரிக்கை

சாம்பற் பதியோனே முதி யோனே எச்சரிக்கை
சாற்றும் புவி யூஞ்சற்கவி யோனே எச்சரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரனே குர பரனே ஐங்கரனே எச்சரிக்கை
வடலிப் பெருமானே அருளாளா எச்சரிக்கை.

## பராக்கு

திருமருவு சாம்பலூர்த் தேவே பராக்கு
திகழ் வடலிப் பிள்ளையார் தேவே பராக்கு

பரவு மடியவர் துயரந் தீர்ப்பாய் பராக்கு
பன்னிரண்டு கண்ணுடையான் அண்ணா பராக்கு

உலகமுதற் பரம் பொருளாய் உதித்தாய் பராக்கு
ஒங்காரத் துள்ளொளியாய் உறைவாய் பராக்கு

தாதைரத மச்சிலுத்த தனையா பராக்கு
தமிழூஞ்சல் கவியணியுந் தலைவா பராக்கு

நீதிநெறி யோங்கவரு நிமலா பராக்கு
நித்திமாய்ச் சத்தியமாய் நின்றாய் பராக்கு.

## லாலி

லாலி லாலி லாலி லாவி லாலி
பூதகண நாத ஜெய பாத லாலி

நாறுமலர்ப் பாத வேத கீதா லாலி
நம்பன் லாலி ஒற்றைக் கொம்பன் லாலி

வாலைதரு பாலா ஆதி மூலா லாலி
வண்ண லாலி வேலன் அண்ண லாலி

தாரிலங்கு மார்ப தங்கக் கிரீடா லாலி
தந்தி லாலி வட்டத் தொந்தி லாலி

பூதகணஞ் சூழுகின்ற போதா லாலி
புத்திசாலி அருட் சித்திலாலி

சேணுயர்ந்து பனைவளரும் தீவு லாலி
தீவு லாலி சாம்பல் தீவு லாலி

சீரிலங்கு வடலியடிப் பிள்ளை லாலி
பிள்ளை லாலி வடலிப் பிள்ளை லாலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் ஜெய ஜெய
மங்களம் மங்களம் மங்களம்

ஐந்துகரத் தானைமுகத் தொந்தியர்க்கு மங்களம்
ஆறுமுகமானவரின் அண்ணனுக்கு மங்களம்

கூறுபுகழ் நீறணியும் குமாரருக்கு மங்களம்
குலமணியார் சித்தி புத்தி மாதருக்கு மங்களம்

சங்கரனார் மைந்தருக்கும் சாம்பலணி ஊரருக்கும்
தருவடலிப் பிள்ளையார்க்கும் ஊஞ்சலுக்கும் மங்களம்

சஞ்சலங்கள் தீர்ப்பவர்க்கும் சக்கரத்தை முறித்தவர்க்கும்
அஞ்சலிகள் செய்பவர்க்கும் அடியவர்க்கும் மங்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி விக்னேஸ்வரர் ஆலயம்
## செல்வநாயகபுரம்

திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து ஆறு கில்லோமீற்றர் தூரத்தில் செல்வநாயகபுரம் என்ற குடியேற்றக் கிராமம் இருக்கின்றது. இலங்கை சுதந்திரமடைந்தபின்இலங்கையின் பலபாகங்களிலும் புதிய குடியேற்றக் கிராமங்கள் தோன்றின. திருக்கோணமலையிலிருந்து நிலாவெளிக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் சோலைவைரவர் கோவில் சந்தியிலிருந்து மேற்குப்பக்கமாக கதிர்காமத்தம்பி வீதி பிரிந்து செல்கின்றது. அந்த வீதிவழியே சென்று இந்த ஆலயத்தை அடையலாம். 1960ஆம் ஆண்டு கிராமக் குடியேற்றம் நடைபெற்றது திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து பெயர்ந்து சென்று குடியேறிய மக்கள் செல்வநாயகபுரத்தில் வாழ்கின்றார்கள். தமிழ் மக்களின் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களின் ஞாபகார்த்தமாக இந்தக் குடியேற்றத் திட்டம் நடைபெற்றது. அறுநூறுக்கு மேற்பட்ட குடும்பங்கள் அங்கு வாழ்கின்றார்கள்.

''கோவில் இல்லா ஊரில் குடியிருக்கக்கூடாது'' என்று நினைத்து அங்கு குடியேறிய மக்கள் செல்வநாயகபுரம் கிராமத்தின் மத்தியில் இந்த ஆலயத்தைக் கட்டினார்கள். ஆலயங்கள் நிறைந்த திருக்கோணமலைப் பட்டினத்தில் வாழ்ந்து ஆலய வழிபாடுசெய்து பழக்கப்பட்ட மக்கள் இவ்வாலயத்தைக் கட்டிப் பயபக்தியோடு வழிபட்டு வந்தார்கள். கற்பக்கிரகம், அர்த்தமண்டபங்களைக் கொண்ட இந்தக் கற்கோவிலின் கருவறையில் விக்கினேஸ்வரப் பெருமான் ஸ்தாபிக்கப்பட்டுள்ளார். மகாமண்டபம் கிடுகினால் வேயப்பட்டிருக்கின்றது. அக்கிராமம் புதிய குடியேற்றத் திட்டத்தில் அமைக்கப்பட்டதால் காடு திருத்தி நாடாக்கும் பெருமுயற்சியில் மக்கள் பெரிதும் கஷ்டப்பட்டார்கள். இந்தக் கஷ்டத்தின் மத்தியிலேயே இந்த ஆலயமும் அமைக்கப்பட்டது. இதனால் இந்த ஆலயத்தை அமைக்கப் பெரிதும் சிரமப்பட்டார்கள். இப்போதும் சிரமப்பட்டுக்கொண்டே இருக்கின்றார்கள். வருடா வருடம் நடைபெறும் கோணேசப் பெருமானுடைய ஊர்வலத்தில் கோணேசப் பெருமானை இந்தக் கிராமத்து மக்கள் விக்கினேஸ்வரர் ஆலயத்தில் வரவேற்று விசேட பூசைகள் நடத்தி உபசரித்து அனுப்புவார்கள். ஒரு நாளைக்கு ஒரு வேளை நித்திய பூசையும், நவராத்திரி, சிவராத்திரி, திருவெம்பாவை முதலிய விசேடகால பூசைகளும் நடைபெற்று வருகின்றன. ஆலயத்தில் சில திருத்தவேலைகளைச் செய்து 9- 10- 80ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. இவ்வாலயத்தைப் பரிபாலன சபை நடத்தி வருகின்றது. பரிபாலன சபைத் தலைவர் திரு. நா. கணேசமூர்த்தி அவர்கள் இவ்வாலயத்தின் முன்னேற்றத்திற்காகப் பெரிதும் பாடுபட்டு உழைத்து வருகின்றார். இவ்வாலய வரலாற்றைத் தந்துதவிய அன்னாருக்கு நன்றி உரியதாகுக. கிராமத்தை முன்னேற்றப் பாடுபடும் மக்கள் ஆலயத்தையும் சிறப்பாக நடத்தத் தீவிரமாக முயற்சிக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீசித்திவிநாயகர் கோவில்
# சீனக்குடா

திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து ஒன்பது கில்லோமீற்றர் தூரத்தில் சீனக்குடா கிராமம் இருக்கின்றது. திருக்கோணமலையிலிருந்து கொழும்புக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் ஆறு கில்லோமீற்றர் தூரத்தில் ஒரு பாதை பிரிந்து கிண்ணியாவுக்குச் செல்கின்றது. அந்தப் பாதை வழியாகச் சென்று சீனக்குடா ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயத்தை அடையலாம். திருக்கோணமலையை வந்தடையும் புகையிரதப் பாதையில் சீனக்குடா ஒரு பிரதான புகையிரத நிலையம். இந்தப் புகையிரத நிலையத்திற்குப் பக்கத்தில் இவ்வாலயம் இருக்கின்றது.

திருக்கோணமலையின் இயற்கைத் துறைமுகம் உலகப் பிரசித்தி பெற்றது. துறைமுகம் பல மலைகளாலான இயற்கை அரணைக் கொண்டது. அதனால் பல வளைகுடாக்களும் இயற்கையாகவேயமைந்துள்ளன. பிரித்தானியராட்சிக் காலத்தில் திருக்கோணமலையில் கடற்படைத் தளம் அமைத்தார்கள். தள அமைப்பின் ஓர் அங்கமாக பிரம்மாண்டமான நூற்றிரண்டு எண்ணெய்த் தாங்கிகள் கட்டப்பட்டன. இந்தத் தாங்கிகளில் எண்ணெய் நிரப்புவதற்காக வரும் கப்பல்களை அணைத்துக் கட்டுவதற்குக் கட்டப்பட்ட முதலாவது கப்பல்கட்டும் துறைமுக மேடையைக் கட்டியவர்கள் சீனத் தொழிலாளர்கள். அவர்கள் இவ்வேலையைச் செய்வதற்காகத் தங்கியிருந்த இடமாதலால் இந்த இடம் சீனக்குடா அல்லது சீனன்வாடி என்று பெயர் பெற்றது. இவர்கள் இந்த இடத்தில் கடலட்டைகள் பிடித்துத் தங்கள் நாட்டிற்கும் ஏற்றுமதி செய்தார்களாம். இதனாலும் இந்த இடத்தில் சீனர்கள் நிரந்தரக் குடிகள் போல் வாழ்ந்ததால் சீனக்குடா என்ற பெயர் நிலைத்து விட்டது. திருக்கோணமலைக்குரிய விமானத் தளமும் இங்குதானிருக்கின்றது. பிறிமா மாவாலை, எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களென்பன இங்கு அமைவதால் இன்று சீனக்குடா ஒரு தொழிற்பேட்டையாக மாறியமைந்திருக்கின்றது. முற்காலத்தில் சைவத் தமிழ் மக்கள் மாத்திரம் இங்கு வாழ்ந்திருந்தார்கள். இக்கிராமத்திற்கிடப்பட்ட பெயரும் அதனை உறுதிப்படுத்துகின்றது. இவர்கள் தமது வழிபாட்டுக்காக ஒரு சிறு கொட்டில் கோவிலைக் கட்டி பிள்ளையாரை வைத்து வழிபாடு செய்துவந்தார்கள். இரண்டாவது உலக யுத்தத்தின்பின் சீனக்குடாக் கிராமம் பலதுறைகளிலும் அபிவிருத்தியடைந்து வந்ததால் நிரந்தரக் குடிகளுடன் வந்தேறிய சைவமக்களும் சேர்ந்து இந்த ஆலயத்தைச் சிறப்பாக அமைக்க எண்ணினார்கள். அதனால் ஆலய பரிபாலன சபையொன்று 1958ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. தலைவர் திரு. சுப்பிரமணியமும், செயலாளர் திரு. வீரக்குட்டி முருகேசு என்பவரும் ஏனைய நிர்வாக உறுப்பினர்களும் சேர்ந்து மூலஸ்தானத்தைக் கல்லால் கட்டிப் பிள்ளையார் திருவுருவத்தைக் கிண்ணியாத் துறையடியிலிருந்து ஊர்வலமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்தருளச் செய்து ஆலயத்தில் ஸ்தாபித்து வழிபட்டு வந்தார்கள். உத்தியோகக் கடமையில் இங்கு வந்திருந்த பல சைவப் பெரியார்கள் இவ்வாலயத்தைப் பெரிதாகக் கட்டத் திட்டமிட்டு, கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபங்களைக் கொண்டதாக கற்கோவில் கட்டி 1969ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் உத்தர நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் செய்வித்தார்கள்.

இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள பிள்ளையாருடைய அற்புதத்தால் பல அன்பர்களுக்கு நேர்ந்த சங்கடங்கள் நீங்கியதாகவும், நம்பினோர் பலருக்குத் தும்பிக்கையான் சுபகாரியங்களை நிறைவேற்றி வைத்ததாகவும் அனுபவித்தவர்கள் கூறுகின்றார்கள். இதனால் மேலும் இவ்வாலயத்தைச் சிறப்பாகக் கட்டவிரும்பிய அடியவர்கள் ஆலயத்தில் புனருத்தாரணம் செய்து பிள்ளையார் கோவிலுக்கருகில் முருகப் பெருமானுக்குத் தனியாக ஆலயமும், பரிவார மூர்த்திகளாக வைரவருக்கும் நாகதம்பிரானுக்கும் தனித்தனியே கோவிலுங்கட்டி 1980ஆம் ஆண்டு சித்திரை மாதம் அத்த நட்சத்திரத்தில் சிவஸ்ரீ சு. சச்சிதானந்தேஸ்வரக் குருக்களைக் கொண்டு கும்பாபிஷேகம் செய்வித்தார்கள்.

ஆலயத்தின் கருவறையில் விநாயகப் பெருமான் ஸ்தாபிக்கப்பட்டுள்ளார். அர்த்த மண்டபத்தில் விநாயகப் பெருமானின் எழுந்தருளி விக்கிரகம் வைக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாலயத்தில் தற்போது மூன்றுகாலப் பூசைகள் நடைபெற்று வருகின்றன. கும்பாபிஷேக தினத்திற்கு முந்நிய பத்து நாட்களும் அலங்கார உற்சவம் செய்து முடிவில் சங்காபிஷேகமும் நடைபெற்று வருகின்றது. பிள்ளையார் கதை, திருவெம்பாவை, நவராத்திரி, விநாயகர் சதுர்த்தி, வருடப்பிறப்பு முதலிய விசேட காலங்களில் சிறப்பாகப் பூசை வழிபாடுகள் அனுட்டிக்கப்பட்டு வருகின்றன. பிராமணக் குருக்கள் ஆலயப் பூசைகள் நடத்தி வருகின்றார். இவ்வாலய பரிபாலன சபையார் ஆலயத்தில் சமய வகுப்புக்களை நடத்தி, மாணவர்களுக்குச் சமயபாடப் போட்டிகள் வைத்துப் பரிசில்கள் வழங்கி ஊக்கப்படுத்தி வருகின்றார்கள். இவ்வாலய முன்னேற்றத்திற்கு உழைப்பதற்காக இந்து மாணவர் மன்றம், இந்து மகளிர் மன்றம் என்பன இயங்கி வருகின்றன. இவ்வாலயத்திற்கு இந்து சமயத்தவர்கள் மாத்திரமல்ல பிற மதத்தவர்களும் வந்து வழிபட்டுச் செல்கின்றார்கள். ஆலயத்தின் சுற்று மதிலைப் பூரணப்படுத்தவும், மணிக்கோபுரங்கட்டவும் முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதாக இவ்வாலயத்தின் தகவல்களைத் தந்துதவிய ஆலய பரிபாலன சபைப் பொருளாளர் திரு. ஆறுமுகம் அவர்கள் கூறுகின்றார்கள்.

சீனக்குடாச் சித்திவிநாயகர் ஆலயச் சூழல் விரைவாக மாற்றமடைந்துகொண்டு வருவதை அவதானிக்கக்கூடியதாயிருக்கின்றது. தொழிற்பேட்டைபோல் விரைவாக மாறி வரும் சீனக்குடாவில் பிற மதத்தவர்களும் வந்து குடியேறிக் கொண்டிருப்பதாலும், குடியேற்றப்படுவதாலும் ஆதியில் வாழ்ந்த சைவமக்களின் பாரம்பரியத்தை ஸ்ரீசித்திவிநாயகராலயத்தைச் சிறப்பாகப் பராபரிப்பதன்மூலம் பாதுகாக்கச் சைவமக்கள் முன்னின்று உழைப்பார்களாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனக்குடா ஸ்ரீ சித்திவிநாயகர் திருப்பொன்னூஞ்சல்

ஆக்கியோன்:
சிவகதாவாரிதி - திரு. த. சாம்பசிவம் அவர்கள்
*திருக்கோணமலை*

## காப்பு

பொன்னொளிசேர் நல்லிலங்கா புரியி லுள்ள
புகழ் செறிந்த திருக்கோணைப் பதியிற் சார்ந்த
தொன்மைசெறி சீனக் குடாவிலுறை ஸ்ரீ
சித்திவிநாயகர் மேற் பொன்னூஞ்சல்பாட
மண்ணுதவ அமரர்களுக் கிடுக்கண் செய்த
வன்மைசெறி கயமுகனா மவுணன் தன்னை
வண்மைநிறை கொம்பொன்றால் வென்றுவந்த
சின்மயமா முகவனடி காப்பதாமே.

சீர்மேவு நாதவிந்து பாதமாக
நிரமேவு சத்தியொளி விட்டமாக
பேர்மேவு நாமங்க ளிழையதாகப்
பெருமைமிகு நான்மறைகள் கயிறதாக
ஏர்மேவு மாகமங்கள் பலகையாக
இசைமேவு பிரணவப் பொற் பீடமீது
கார்மேவு சீனக்குடாப் பதிசார் கோவில்
ஸ்ரீசித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

சந்திர சூரியர் வெண்குடைக ளேந்த
சமீரணர் சந்ததமுங் கவரி வீச
நந்திபிரான் சாந்தியற்றி உவந்து வாங்க
தேவர் பரிவட்டமசையிப் புளகம் வீங்க
வந்து வழிபடு மடியர்துதித் திசைக ளோங்க
வன்கயவர் அவ்விடம்விட் டகன்று நீங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனக்குடா ஸ்ரீ சித்திவிநாயகர் திருப்பொன்னூஞ்சல்

சிந்து புட்பமொதுங்கு சீனக்குடாவில் மேவு
ஸ்ரீ சித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

மங்கலமார் அமரர் மலர்த் தொடைகள் தூக்க
மாவலிய பூதர்நிரை நெருங்கிச் சூழ
பொங்குசுடர் கண்டிருள்கள் அழிந்து நீங்க
போற்றவரு மெய்யடியார் மலங்கள் மாள
தங்குறைகளோதி யிசை பாடுகின்ற
தன்னடியார் குறையெல்லாந் தீர்த்தே யென்றும்
தெங்குசெறி சீனக்குடாப் பதியில் மேவும்
ஸ்ரீ சித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

புந்திசெறி கின்னரர்கள் சுருதி கூட்ட
புவன நாயகர்கள் பொற் றாளம் போட
சிந்தைமகிழ் அரம்பையர்கள் சேர்ந்தே யாட
சேவிக்கு மன்பரிடர் யாவு மோட
அந்தி சந்தி தும்புரு நாரதர் யாழ்மீட்ட
அமிழ்தனைய இசை யட்ட திக்கும் நீட
கந்தமலர் பூக்குசீனக் குடாவில் மேவும்
ஸ்ரீ சித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

அமரர்களை முன்னாளிற் பொருது வென்ற
திமிர்பிடித்த கயமுகனா மரக்கனோடு
சமர்செயவே கொம்பொன்றை முறித்தே யேவி
சணப்பொழுதி லுயிர்கவர்ந்த கணேசநாதன்
இமயமலை யம்மைதரு மூத்த மைந்த
இபமுகமும் பஞ்சகர மினிது கொண்டாய்
கமலநிறை சீனக்குடாப் பதிசார் கோயில்
ஸ்ரீ சித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

ஏதமிலா வியாசரிஷி இயம்ப வின்ப
மெழிலுறு சீர் பாரதத்தை மேருவென்னும்
பூதரமா மேட்டின்கண் மருப்பொன் றாலே
பூதலத்தா ருயவரைந்த பூதநாதன்
மாதங்க முகமுமைங் கரமுங்கொண்ட
மன்னு பெருச் சாளிமிசைவந் தாடீரூஞ்சல்
மாதர்மிகு சீனக்குடாப் பதியில் மேவும்
ஸ்ரீ சித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.
மாதுபங்கன் பாலகனே யாடீரூஞ்சல்
மாதிருமால் மருகோனே யாடீரூஞ்சல்
தாதர் துயர் தீர்ப்பவரே யாடீரூஞ்சல்
தருபாசாங் குசத்தினரே யாடீரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேதபந்தம் போக்குபவ யாடீரூஞ்சல்
பெரிய துதிக் கையினரே யாடீரூஞ்சல்
மாதிரஞ்சூழ் சீனக்குடாப் பதிசார் கோவில்
ஸ்ரீ சித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

பெருமைமிகு குறுமுனிவன் கொணர்ந்த தூய
பெருகு காவிரியாகு நதியை நல்ல
திருமருவு காகவுரு வாகி யங்கே
திசையெட்டுங் கவிழ்த்தேகும் வகையே செய்த
குருமணியே உனதுகழற் சேவை செய்யும்
குணமதனை யெனக்கருள்வ தெந்த நாளோ
பெரும்புகழ் சேர் சீனக்குடாத் தன்னில் மேவும்
ஸ்ரீ சித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

தேசுநிறை பொன்மகுடம் சிரசிலொளிர
திகழ்சுடர் மணிப்பட்டம் நுதலிலொளிர
மாசிவரு மருப்பினிலே பொன்பூ லொளிர
மாபெரிய முறக்காதிற் கடுக்கன் ஒளிர
பேசரிய காசுநிரை மார்பிலொளிர
பெருவயிற் றரையிற் பின்னுசர்ப்பமொளிர
தேசமுயர் சீனக்குடாப் பதிசார் கோவில்
ஸ்ரீ சித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

விணிணமரு மதிமுடியீராடீஞ்சல்
விமலர்தரு மைந்தரே யாடீரூஞ்சல்
செண்பகமாத் தொடையீரே யாடீரூஞ்சல்
சீர்கண்கள் மூன்றுடையீராடீரூஞ்சல்
நுண்புலமையெலி வாகனத்த ராடீரூஞ்சல்
சண்முகற்கு மூத்தவரே யாடீரூஞ்சல்
சண்பயர்கோன் புகழுதிருக் கோணைக் குடாவின்
ஸ்ரீ சித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

## வாழி

பந்திவளர் பசுவினம் பால் சொரிந்து வாழி
பரவையெழு முகில் மழையைப் பொழிந்து வாழி
சிந்திவரு கண்டிகைநீ றென்றும் வாழி
தேனமுதத் தமிழ்ப் புலவர் மிகுந்து வாழி
சந்தொடுங்கு குழன்மடவார் கற்பும் வாழி
சலனமிலா நால்வருணத் தோரும் வாழி
அந்தமில் சீர் சீனக்குடாப் பதிசார் கோயில்
சித்திவிநாயகருள் வாழி வாழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லூன்றிக் கந்தசுவாமி கோவில்

திருக்கோணமலைப் பட்டினத்தில் உலகப் பிரசித்திபெற்ற திருக்கோணமலைத் துறைமுகத்திற்குச் சமீபமாக சுங்கவீதிக்கருகாமையில் இவ்வாலயமிருக்கின்றது. சிறந்த நிலையிலிருக்கும் இவ்வாலயம் தோன்றி வளர்ந்த வரலாறு சுவையான சம்பவங்களை உள்ளடக்கியிருக்கின்றது. சுமார் இருநூறு ஆண்டுகளுக்குமுன் பாரதநாட்டில் திருவேரகம் என்னும் மகாதலத்தில் வாழ்ந்த சுப்பிரமணிய சர்மா சிவபதமடைந்துவிட்டார். சிற்பி ஸ்ரீசண்முகமூர்த்தியைப் பூரணப்படுத்தியபோதிலும் அதனைச் சுப்பிரமணிய சர்மாவுடைய சுற்றத்தார் ஏற்றுக்கொள்ள மறுத்ததோடல்லாமல் அழித்துவிடும்படியும் கூறினார்கள். சிற்பி குமாரநாதர் அதனை விரும்பவில்லை. கவலைப்பட்டுக்கொண்டிருந்த சிற்பியினுடைய சொற்பனத்தில் தோன்றிய சண்முகப்பெருமான் "நம்மை இலங்கைக்குச் செல்லும் கப்பலில் ஒரு பேழையிற் பத்திரமாகச் சேமித்து ஏற்றிவிடுதி" என்று பணித்தருளினார்.

பறங்கிப்பேட்டைக்கு வந்த ஒரு பாய்க்கப்பலில் மற்றும் பொருட்களோடு சிற்பி ஸ்ரீசண்முகப்பெருமானுடைய பேழையையும் ஏற்றிவிட்டார். அக்கப்பல் இலங்கையின் கிழக்குக் கரையில் வந்துகொண்டிருக்கும்போது கோணேசர் மலைக்கும் அரிமலைக்குமிடையில் வசமான காற்றில்லாமையால் ஆறு நாட்கள் வரை ஓடமுடியாமல் நின்றுவிட்டது. இதனால் கவலைப்பட்டுக்கொண்டிருந்த கப்பற் தலைவனுடைய சொற்பனத்திலே பெருமான் தோன்றி, விக்கிரகம் வைக்கப்பட்டிருக்கும் பெட்டியின் அடையாளம் காட்டி இதனைக் கடலில் எடுத்துவிட்டால் இக்கப்பல் ஓடும், இல்லையேல் இவ்விடத்தை விட்டு அகலாது என்று திருவாய் மலர்ந்தருளினார். கப்பற் தலைவனும் அவ்வாறே செய்தான். கப்பலும் அசைந்து ஓடியது.

அந்தப் பேழையானது கடலிலே மிதந்து வந்தது. தற்போது கந்தசுவாமிமலை என்று கூறப்படும் மலைச்சாரலில் கடற்கரையோரமாக நின்ற குருகுலத்தார் மூவர் இந்தப் பேழையை எடுத்துத் தாளைமர நிழலிலே வைத்துவிட்டுப் பட்டங்கட்டி ஆறுமுகம் என்பவருக்கு அறிவித்தார்கள். அவர் வந்து அப்பேழையைத் திறந்து பார்த்து அதிசயப் பட்டு, சவலை முதலித்தம்பி என்னும் வேளாண் பிரபுவை அழைத்துக் காண்பித்தார். இருவரும் ஆனந்தமடைந்து கந்தசுவாமிமலைச் சாரலில் முடமாண்டான் என்னுமிடத்தில் ஒரு சிறுகோவிலை அமைத்து அங்கே இந்தச் சண்முகப் பெருமானை ஸ்தாபித்தார்கள். அவ்வாலயத்தில் முப்பது வருடம்வரை பூசை நடைபெற்று வந்தது. இக்காலத்தில் ஒல்லாந்த பிரான்சிய இராசகலகம் ஏற்பட்டது. இதனால் பூசகராகிய பிரம்மஸ்ரீ கணபதி ஐயரும் பட்டங்கட்டி ஆறுமுகத்தின் சந்ததியினரான ஸ்ரீவேலப்ப மணியமும் இந்த மூர்த்தியை எடுத்துச்சென்று தம்பலகமம் கோணேசர் கோவிலில் வைத்திருந்தனர். அங்கே இருபத்திரண்டு வருடகாலம் ஸ்ரீசண்முகப்பெருமான் இருந்தார். பெருமானை அங்கு ஸ்தாபிக்க மூன்றுமுறை முயன்றும் தடைகள் ஏற்பட்டுவிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறிருக்க தென்னிந்தியாவிலிருந்து வந்து வில்லூன்றிப்பகுதியில் காணி வாங்கிக் குடியிருந்தார் பிரம்மஸ்ரீ வைரவ நாதக் குருக்கள். இவர் மகாவலிகங்கைக் கரையிலே கமம் செய்வித்துக் கொண்டிருக்கும் காலத்தில் அங்கே அகஸ்திய ஸ்தாபனத்தில் அகத்தியரால் பூசிக்கப்பெற்று, நெடுங்காலமாகப் பூசனையின்றியிருந்த விநாயகரைத் தமது வயல் நிலத்தில் ஆலயமமைத்து அதில் வைத்துப் பூசை செய்துவந்தார். இந்தக் குருக்களுக்கும் வேலப்ப மணியம் என்பவருக்கும் சொற்பனத்திலே பெருமான் தோன்றிப் பணித்த பிரகாரம், இவர்கள் இருவரும் ஸ்ரீவைரவநாதக் குருக்களின் சுற்றத்தவரான ஸ்ரீசுப்பையர், ஸ்ரீவிஸ்வநாதபட்டர், ஸ்ரீராமபட்டர் என்பவர்களும் சேர்ந்து ஆலோசித்து 1899ஆம் ஆண்டு எழுதப்பட்ட சாசனத்தின்படி ஸ்ரீவைரவநாதக் குருக்களின் காணியில் குருகுலத்தாரும் சேர்ந்து கற்பக்கிரகம், அர்த்த மண்டபங்களைக் கொண்ட ஆலயமொன்றை அமைத்தார்கள். அந்த ஆலயத்தின் கருவறையில் ஸ்ரீசண்முகப் பெருமானையும், அர்த்த மண்டபத்தில் அகத்தியர் பூசித்ததும், அகத்திய ஸ்தாபனத்திலிருந்து வைரவநாதக் குருக்களால் கொண்டு வரப்பட்டதுமாகிய விநாயகரையும் பிரதிஷ்டை செய்யப்பட்ட அந்நாளிலேயே பிரசித்தி பெற்ற ஸ்ரீகதிரவேலு முதலியார் என்னும் செல்வந்தர் இந்த மூர்த்திகளுக்குரிய திருவாபரணங்களையும், இரண்டு தோட்டங்களையும், ஒரு கிட்டங்கியையும் நன்கொடையாகக் கொடுத்துதவினார்.

அக்காலத்தில் எழுதப்பட்ட சாசனத்தின் பிரகாரம் ஆலயத்திற்கு நிலங்கொடுத்துதவிய உரிமையின்படி நித்திய, நைமித்திகப் பூசைகளையும், வரவு செலவுகளையும் பரம்பரையாக நடத்திவரும் பிராமணர்களும், கதிரவேலு முதலியாரின் சந்ததியாரும், வேலப்ப மணியத்தின் சந்ததியாரும் கூட்டுமுகாமையாளர்களாக இருந்து கோவில் காரியங்களை நடத்தி வந்தார்கள். இன்றும் அந்த நடைமுறை பின்பற்றப்பட்டு வருகின்றது.

பிராமணர்களும், ஊர்ப் பொதுமக்களும் சேர்ந்து மற்றுமுள்ள மண்டபங்களையும், பரிவார மூர்த்திகளுக்கு ஆலயங்களையும் காலந்தோறும் அமைத்தார்கள். அர்த்தமண்டபத்திலிருந்த விநாயகருக்கு உள்வீதியின் நிருதிமூலையில் ஆலயமும், மற்றும் தண்டபாணி, நாகேஸ்வரர், நவக்கிரகங்கள், பைரவர், சூரியன் முதலிய பரிவார மூர்த்திகளுக்கு ஆலயங்களும் அமைத்து மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்தார்கள். இவ்வாலயத்தின் கருவறையில் கடலிலிருந்து கிடைத்த பஞ்சலோகத்தினாலாய ஸ்ரீசண்முகப் பெருமானே பிரதிஷ்டை செய்யப்பெற்றுள்ளார். மகோற்சவ காலத்தில் இந்தப் பெருமானையே எழுந்தருளி மூர்த்தியாக எழுந்தருளச் செய்வார்கள். அவ்வேளையில் சிறிய ஆறுமுகசுவாமியின் திருவுருவத்தையும் வேலாயுதத்தையும் கருவறையில் வைப்பார்கள். எல்லா ஆலயங்களிலும் கருவறையில் சிலாவிக்கிரகந்தான் பிரதிஷ்டை செய்வது வழக்கம். ஆதலால் பிரம்மஸ்ரீ இ. கு. பூரணானந்தேஸ்வரக் குருக்களுடைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையார் பிரம்மஸ்ரீ வை. இராமலிங்கக் குருக்கள் ஏனைய முகாமையாளர்களுடன் யோசித்து கற்பக்கிரகத்தில் வைப்பதற்காக ஸ்ரீ சண்முகமூர்த்தியின் சிலாவிக்கிரகமொன்றை இந்தியாவில் செய்வித்தார்கள். ஸ்ரீசண்முகப்பெருமான் அவர்களுக்கு சொற்பனத்திலே தோன்றி "நானே இங்கிருப்பேன்" இந்தியாவிலிருந்து வந்து கொண்டிருக்கும் சிலாவிக்கிரகத்தை ஆனைகோட்டையில் ஒரு கோவிலுக்குத் தேவைப்படுகின்றது. அங்கே அனுப்பிவைக்கச் சொன்னாராம். அதன்படியே அனுப்பி வைத்தார்களாம். ஆனைக்கோட்டையில் மூத்தவிநாயகர் கோவிலில் இருக்கும் விக்கிரகம் அதுவாயிருக்கலாம் என்று கூறுகின்றார்கள்.

வள்ளி, தெய்வயானை சமேதராக மயில்வாகனத்தில் ஆரோகணித்தவண்ணம் சண்முகப்பெருமான் திருவோலக்கங் கொண்டுள்ளார். மகாமண்ட மேடையில் தெற்கே பார்த்த வண்ணம் பிள்ளையார், சக்திசமேதராக ஆறுமுகசுவாமி, முத்துக்குமாரசுவாமி, தண்டாயுதபாணி, ராஜராஜேஸ்வரி முதலிய திருவுருவங்கள் இருக்கின்றன. ஸ்நபனமண்டபத்தில் சிவலிங்கப்பெருமானுக்கும், அம்பாளுக்கும் தனித்தனியே ஆலயங்களுண்டு. ஸ்தம்ப மண்டபத்தில் மயூரம் பலிபீடமும், வெளிமண்டப வாசலில் சாளக்கிராமமும், மணிக்கோபுரமும் உண்டு. ஆலயத்திற்கு அழகான சித்திரத்தேர் ஒன்றுண்டு.

ஆலயத்தில் நான்கு காலங்களில் நித்தியபூசை நடைபெற்றுவருகின்றது. ஆவணி அமாவாசியைத் தீர்த்தாந்தமாகக் கொண்டு முன்வரும் பௌர்ணமியில் கொடியேற்றப்பட்டு பதினைந்து நாட்களுக்கு மகோற்சவமும், பூங்காவனமும் தெப்போற்சவமும் நடைபெறுகின்றது. சண்முகப்பெருமான் இலங்கைக்கு வந்து சேர்ந்த முடமாண்டான் கடற்கரையிலேயே இன்றும் சமுத்திர தீர்த்தமாடச் செல்வார். வெளியூர், உள்ளூர் அடியார்கள் ஆலயத்தில் தங்கியிருந்து கந்தசஷ்டி விரதம் அனுட்டிப்பார்கள். நவராத்திரி, திருக்கார்த்திகை, திருவெம்பாவை, தைப்பூசம், சிவராத்திரி, வைகாசி விசாகம் என்பன விசேட அலங்கார விழாக்களாக நடைபெறுகின்றன. உரிய காலங்களில் கந்தபுராணப் படிப்பும், மயூரகிரி புராணப் படிப்பும் இவ்வாலயத்தில் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. இவ்வாலயத்திற்கெனச் சிறப்பான ஊஞ்சல்பாட்டு இருக்கின்றது. தற்போது ஆலயத்தில் பிரம்மஸ்ரீ சி. சுரானந்தேஸ்வரசர்மா அவர்கள் பூசை செய்துகொண்டிருக்கின்றார். தகவல்களைத் தந்துதவிய அன்னாருக்கு நன்றி உரியதாகுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை
# வில்லூன்றி கந்தசுவாமியார்
# திரு ஊஞ்சல்

ஆக்கியோன்:

திரு. த. குமாரசாமிப் புலவர் அவர்கள்

சீர்பூத்தகனகவரைச் சிகரத் தொன்றாந்
திரிகோணமலையுளவில் லூன்றிவாழு
மேர்பூத்த வள்ளி தெய்வயானையாக
மிசைந்திடு சண்முகப் பரனல் லூஞ்சல்பாடக்
கார்பூத்தது திக்கையொரு கோட்டிரண்டு
கன்னமுமிழ் மும்மதநாற்புய நால்வாய்க்கோ
ணேர்பூத்தகய முகத்து வினாயகேச
நிமலர்மலர்ந்தாளிணைகணினைதல் செய்வாம்.

பணமணி கொளரவரசுகால் களாகப்
பரந்த கடலுலகமது பலகையாக
வணிதிகழ்நால் வேதமவை விட்டமாக
வருணிர விமதியுடுக் கோள்வி தானமாகக்
குணமருவுமாக மாசாத்திரங்ளோடு
குலவு சிவபுராணங்கள் கயிறதாக
மணிவளர் தென்றிரி கோணமலைவில்லூன்றி
வளநகர் வாழ்சண்முகரே யாடீருஞ்சல்.

சந்திரராதவர் தவளக்குடை நிழற்றச்
சமீரணர் வெணிகவரி புடைபெயரவீச
விந்திரன் வெள்ளிலை துவர்க்காயடைப்பையேந்த
யமினிருதி துதிசொல்புகழினிது கூறத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை வில்லூன்றி கந்தசுவாமியார் திருஊஞ்சல்

தந்திரநாயகன் வீரவாகு வென்னுந்
தம்பியுடைவான் கொடுசார்ந்தயலினிற்க
மந்தரநேர்திரி கோணமலை வில்லூன்றி
வளநகர் வாழ்சண்முகரே யாடீரூஞ்சல்.

தங்கநவரத்னமணித் தண்டையாடத்
தமனியவம் பரமிடைசாருடைவாளாட
வங்கணரைஞாணோடு சதங்கையாட
வகன் மார்பிலார முபவீதமாடத்
துங்கமுறு வேலாடப்படைகளாடச்
சூரனைவென்றணி மவுலிவாகையாட
மங்கலமார்திரிகோணமலை வில்லூன்றி
வளநகர்வாழ் சண்முகரே யாடீரூஞ்சல்.

கனகமணியணி திகழ்மாமவு லிமின்னக்
கமலமலரனையமுகங் கருணைகாலத்
தினகரனை நகுகுழைக்குண்டல மிலங்கத்
திருப்புயங்கள் செச்சையந்தார் வாசம்வீசப்
பனகமணிப் பணியாடவலயமாடப்
பாவையர்களிரு பாலும்மகிழ் வினாட
வனமுறுதென்றிரி கோணமலை வில்லூன்றி
வளநகர் வாழ்சண்முகரே யாடீரூஞ்சல்.

வட்டமணித்தவின் முரசஞ்சங்கமோங்க
வரிசையுள நாகசுரம் வயங்கியோங்கத்
திட்டமுள வீணைவிதமிசை கடாங்கச்
சீருடைமத்தள தாளமினி மைவீங்க
இட்டமுறுந்தித்தியினி தோசைவாங்க
வேனையபல்லிய விசையுமினிதுதேங்க
மட்டமர் தென்றிரிகோணமலை வில்லூன்றி
வளநகர் வாழ்சண்முகரே யாடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை மாவட்டத் திருத் தலங்கள்

நலமருவுசுரர் பொழி பூமாரிவீழ
நயமருவுமன்பர் குழாநயந்து சூழ
வலமருவுமாயயனே முதலோர் தாழ
வரமருவு முனிவர் மகிழ்வுததியாழக்
குலமருவு கொடியிடையார் மருங்குவாழக்
கூர்மருவுவேலினொளி திமிரம்போழ
மலர்மருவு திரிகோணமலை வில்லூன்றி
வளநகர் வாழ்சண்முகரே யாடீரூஞ்சல்.

உருமேவுமடியருள மன்புகூர
வெளிமேவு கைகள் சிரமீதுசேரக்
கருமேவு பிறவியெனுங் கடன்கழூரக்
கருதரிய மெய்ஞ்ஞான மலர்ந்து சாரத்
திருமேவுமானந் தவருவி சோரத்
தெருண் மேவுதுதிமொழிகள் பொலிவினார
மருமேவு திரிகோணமலை வில்லூன்றி
வளநகர் வாழ் சண்முகரே யாடீரூஞ்சல்.

வீங்குமராமா லையரேயா டீரூஞ்சல்
விழையருளின் வேலையரே யாடீரூஞ்சல்
ஓங்குதெய்வ யானையரே யாடீரூஞ்சல்
உயரமரர் சேனையரே யாடீரூஞ்சல்
பாங்குன பன்னிரு தோளீரா ராடீரூஞ்சல்
பதுமமலர் நிகர்தாளீ ராடீரூஞ்சல்
வாங்குபுகழ்த் திரிகோணமலை வில்லூன்றி
வளநகர் வாழ் சண்முகரே யாடீரூஞ்சல்.

செந்திரு மாறிருமருகீர ா டீரூஞ்சல்
செஞ்சடையான்தரு முருகீராடீரூஞ்சல்
உந்தியசீரெழிலுடையீரா டீரூஞ்சல்
உன்னாதருளத் தடையீரா டீரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை வில்லூன்றி கந்தசுவாமியார் திருஊஞ்சல்

புந்தியினர்க்கருள் வரத்தீரா டீரூஞ்சல்
புகரிலையவேற்கரத் தீரா டீரூஞ்சல்
மந்திரமார் திரிகோணமலை வில்லூன்றி
வளநகர் வாழ்சண்முகரே யாடீரூஞ்சல்.

ஆதிகுகனருள் வாளியடியர் வாழி
யாறுமுகமாறிரண்டு கரங்கள் வாழி
சோதிவடி வேல் வாழிபடைகள் வாழி
தோகைதெய்வயானைகுறமாது வாழி
நீதியுளமயில் சேவல் தகரும் வாழி
நியதிமையயா கமங்கச்சைவம் வாழி
வீதி திகழ்திரி கோணமலையும் வாழி
வில்லூன்றி வளநகரும் வாழி வாழி.

### பராக்கு

சீரார் வில்லூன்றி நகர்த்தே வேபராக்கு
தேவகுஞ்சரி நாதசேயே பராக்கு
ஏராறுமாறு முகத்தெந்தாய் பராக்கு
இந்திரற்குவானுலக மீந்தாய் பராக்கு
சூராகுமயிலேறு தோண்றால் பராக்கு
தோமிலாக் கோழியுயர்துவசா பராக்கு
வாராருமுலையுமைதன் மகனே பராக்கு
வள்ளிமிசையா சைவளர் மிகிபா பராக்கு
தாராரிராறு புயத்தலைவா பராக்கு
தண்ணளி மிகுந்தருள் செய்சாமி பராக்கு
காரார்களன்றந் தகர்த்தா பராக்கு
கருணைமா கடலாகுங்கந்தா பராக்கு
ஏராரும் வெற்றி வேலிறைவா பராக்கு
இமையவர் முனீந்திரருக்கினியாய் பராக்கு
பேராகுமடியருளம் பிரியாய் பராக்கு
பேணாதவர்க்கணுகாப் பெரியாய் பராக்கு
பாராருங் கோணமலைப் பரமா பராக்கு
பல்குபுகழ் வில்லூன்றிப் பாலா பராக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எச்சரிக்கை

பலவந்த நிக்ரகசிமயபரனே யெச்சரிக்கை
பல்லாயிரங்கதிர் நேரும் வேற்கரனே யெச்சரிக்கை
தணிகாசலத் தமர்வேற் குணமலையே யெச்சரிக்கை
சந்தார் தடம்புயனே யெங்கள் கந்தா வெச்சரிக்கை
அடியார்க்கருள் வடிவேற்கை யெம்மையா வெச்சரிக்கை
அத்தாபரிசுத்தா வெங்கணித்தா வெச்சரிக்கை
சுரராஜகன்னிகை நாயகசுவாமி யெச்சரிக்கை
சொல்லா மறைவல்லார் தொழுசுவாமி யெச்சரிக்கை
கும்போற்பவன்றனையாள னுகூலா வெச்சரிக்கை
கோலாகலமயில் வாகனவேலா வெச்சரிக்கை
வடிவேற் கரகுகனே சுப்ரமண்யா வெச்சரிக்கை
வாளார்விழிக்குறமான் மணவாளா வெச்சரிக்கை
சூர்மாவடுதீரா குகப்பேரா வெச்சரிக்கை
சோதீயெங்களா தீயருட்டோன்றா வெச்சரிக்கை
தீவைமாதுரனாமைங்கரன் றுணைவா வெச்சரிக்கை
தோலாவலியுள வாரணத்துவசா வெச்சரிக்கை
நாலாமறை வடிவாகியசீலா வெச்சரிக்கை
நக்கீரர் சொற்கிரங்கு மனுகூலா வெச்சரிக்கை
கதிர்காமநன்னகர் மேவியகந்தா வெச்சரிக்கை
கங்காசுதமழு வேந்திதன்மைந்தா வெச்சரிக்கை
சேலார்விழியிமவான்மகள் பாலா வெச்சரிக்கை
சிறியேன்கவிக்கிரங்கு மனுகூலா வெச்சரிக்கை
வேலா திரிகோணமலைமேலா வெச்சரிக்கை
வில்லூன்றிநன்னகர் மேவருள் விரதாவெச்சரிக்கை.

## லாலி

சச்சிதானந்த குகலாலிலாலி – லோக
சர்வஜனரக்ஷகனே லாலிலாலி
பச்சைமயில் வாகனனேலாலிலாலி – சிவ
பாலகனே வேலவனே லாலிலாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பர்வதகுமாரிசு தலாலிலாலி – எங்கள்
பரமகருணாநிதி யேலாலிலாலி
சர்வபரிபூரணனே லாலிலாலி – உயர்
சரவணதடோற்பவனே லாலிலாலி

முத்தியருள் மாமுருகலாலிலாலி – யார்க்கும்
மூவாமுழுமுதலேலாலிலாலி.
சத்தியுரு மாமுதலே லாலிலாலி – பர
தத்துவா தீதசுர லாலிலாலி
போதகுண சாகரனே லாலிலாலி – சுர
புங்கவனே சண்முகனே லாலிலாலி
மேதகைய சிவகுருவே லாலிலாலி – வர
வில்லூன்றி நாயகனே லாலிலாலி.

## மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் – ஜெயஜெய
மங்களம் மங்களம் மங்களம்.

சங்கரனார் மைந்தருக்குச் சர்வசனரக்ஷகர்க்கு
பங்கயப்பொற்பாதருக்குப் பாலசுப்ரமண்யருக்கு – மங்களம்

ஆறுமுகவேலருக்கு ஆறிரண்டு தோளினர்க்கு
வீறுமயில்வாகனர்க்கு மேலருள்செய் சீலருக்கு – மங்களம்

தெய்வமகணாயகர்க்குச் செல்வவள்ளி காந்தருக்கு
சைவரைரக்ஷிப்பவர்க்குத் தக்ககரு ணாலயற்கு – மங்களம்

கோணமலை வில்லூன்றிக்கோயில்வளர் நேயருக்கு
கணவருண்மேவி வளர்கருணா கடாக்ஷருக்கு – மங்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை
# வில்லூன்றி கந்தசுவாமியார்
# பக்திப் பாமாலை

ஆக்கியோன்:

சைவப்புலவர் பண்டிதர் திரு. இ. வடிவேல் அவர்கள்

## காப்பு

ஓங்காரத்துட்பொருளா யுலகோருய்ய
உதிக்கின்ற ஒண்பொருளே உமையாள்மைந்தா
பாங்கான ஆனைமுகப் பரனே வந்தென்
பாமாலை ஏற்றருள் செய்வாய் நீயே.

திரிகோண மாமலையி னொருகோணத்தே
சிறந்தோங்கு கந்தகிரிச் சாரல்தன்னில்
அருளாளர் வாழ்கின்ற வில்லூன்றிக்கே
ஆறுமுக வேலவனே அமர வாராய்.

சூரனொடு சிங்கமுகன் பதுமன் தன்னைச்
சுடர்கின்ற வேலெறிந் தழித் தாயுன்றன்
வீரவருள் காட்டி நல் வில்லூன்றிக்கே
வேண்டுவார் வேண்டுவதை ஈயவாராய்.

அருணகிரி நாதர் முதலான அன்பர்க்கு
அருள்சுரந்தருணைமலை மீதுவந்தாய்
அடியார்கள் வாழ்கின்ற வில்லூன்றிக்கே
அமர்ந்தினிதே அருள்செய்ய விரைந்துவாராய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை வில்லூன்றி கந்தசுவாமியார் பக்திப் பாமாலை

சொல்லூறு செந்தமிழின் சுவையே சோலை
மலையோடு பரங்குன்ற மலைவாய் விட்டு
வில்லூன்றித் தலமதனில் வந்த கந்தா
வினையாவுந் தீர்த்தெம்மைக் காக்கவாராய்.

பழனிமலை மீதிலுறை பாலா வேலா
பரனாருக் குபதேசமருளுஞ் சீலா
வளமோங்கு வில்லூன்றித் தலத்தே மேவி
வரமருளி அடியாரைக் காக்க வாராய்.

ஆவினன் குடிவாழுமழகா ஆங்கே
அரனாருக் கருஞானம் அருளுந் தேவா
சேவிக்கு மடியர்வாழ் வில்லூன்றிக்கே
சீர்மேவும் அருள்தந்து சிறக்க வாராய்.

சித்ர வடிவேலனே சிக்கல் தன்னில்
சிங்காரமாயுறையுங் கோலத்தோடு
இக்கணமே வில்லூன்றி தன்னில் மேவி
இடர்தீர்த்தே அருள்செய்து காக்க வாராய்.

அடியார்கள் புடைசூழ அரனார் தந்த
ஆறுமுக நாதனே அயில்வே லையா
படிமீதி லோங்கு கதிர் காமம் விட்டுப்
பாங்கான வில்லூன்றித் தலத்தே வாராய்.

அணிதில்லை அம்பலத்தரனார் மைந்தா
அமரர் துயர் தீர்த்தருளுமாதி மூர்த்தி
தணிகைமலை மீதிருந் தன்பர் போற்றும்
தரணியுயர் வில்லூன்றித் தலத்தே வாராய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை மாவட்டத் திருத் தலங்கள்

மாங்கனிக்காய் மாயப்ரபஞ்ச மெல்லாம்
மயிலேறி விளையாடி வந்த வேலா
தேங்கதலிச் சோலை நிறை வில்லூன்றிக்கே
திருவடிவைத் தமர்ந்தருள விரைந்து வாராய்.

வேலேந்து கையோனே வினைகள் தீர்க்கும்
வித்தகனே விண்ணவர்கள் போற்றுந் தேவே
பாலேந்திப் பழமேந்தி அடியார் சூழ்ந்து
பணிந்திடவே வில்லூன்றித் தலத்தே வாராய்.

ஆறுபடை வீடுடையாய் அடியாருய்ய
ஆறுமுகமோடுவருமாதி மூர்த்தி
ஏறுமயி லேறியெம் வினைகள் யாவும்
நீறுபடச் செய்து நிதங் காக்கவாராய்.

குன்றுதோறாடிவரு குமரா கோலக்
குறமாது வள்ளி மணவாளா தெய்வ
குஞ்சரி மனத்திலுறை குகனே வேலா
குறைதீர அருள்தந்து காக்க வாராய்.

அடியர் துயர் தீர்த்தருள அரனார் நெற்றி
அருட்கண்ணில் அவதரித்த ஐயா உன்னை
கடிமலர் கொண்டேத்தி நிதம் பணியுமன்பர்
களித்திடவே வில்லூன்றித்தலத்தே வாராய்.

கோதண்ட நியாச புரிக்குமரா சரணம்
குறவள்ளி தெய்வானை குகனே சரணம்
ஏதங்களறுத்த வேல் முருகா சரணம்
எமையாளுமீசனே சரணம் சரணம்.

*முருகா சரணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை வில்லூன்றி கந்தசாமி பத்துப் பதிகம்

ஆக்கியோன்:

திரு. வே அகிலேசபிள்ளை அவர்கள்

திருகோணமலை

## காப்பு - வெண்பா

சத்திமுன்பு தந்தகந்த சாமியின்மேற் செந்தமிழாற்
பத்தும் பதிகமும் யான் பாடவே – முத்திதரும்
ஓங்கார ரூபமதாய் உற்பவித்தோன் பொற்பதத்தை
தாங்கிடுமே னென்சிரமேற் றான்.

## ஆசிரிய விருத்தம்

சித்திர மிகுந்த நவரத்தினமிழைத்திடுஞ் சிங்கார முடிகளாறும்
திகழ் சந்திரோதய மெனப்பிரபை தங்கியருள் செய்திடுமுகங்களாறும்
பத்தியொடு பாதமலர் துதிசெய்யு மடியரைப் பாலிக்கும் விழியீராறும்
பகரரிய வேன்முதற் படைநிரை துலங்கிடும் பன்னிரு கரத்தினழகும்
தித்தியென நடனமிடு மயின்மீது வள்ளியொடு தெய்வநாயகியு மருவ
சிந்தை மகிழ்வாகவென் கண்காண முன்வந்து சிறியேனையாட்கொள்ளுவாய்
கத்துகடல் சூழ்ந்திடுஞ் திருக்கோணை நகர்மீது கவிகள் முப்பழமுதிர்க்குங்
கந்தமிகு சோலைசூழ் வில்லூன்றிதனின் மேவு கந்தசாமிக் கடவுளே.

காலையிலெழுந்துன் னாறெழுத்தோதாது கன்னெஞ்சனாகி நிதமுங்
கன்னனிகர் மொழிபகரு மின்னார்கள் போகமே கருதரும முத்தியென்றும்
ஆலவிழி யிமையாத நாட்டமென் றெண்ணு மெனை யாளுநாளெந்தநாளோ
அய்யனே மெய்யனே மெய்யனே ஈராறு கையனே ஆறானனத்தினானே
ஞாலமிசையுனையன்றி யடியவர்படுயரைத் தவிர்க்கவொரு தெய்வமுண்டோ
சரவணபவாவென்று கூவுவோர் முன்னின்று தண்ணருள்வழங்கு மரசே
காலமிது தாமதஞ் செய்யாதென் முன்வந்து கருணையொடு காட்சி தருவாய்
கந்தமிகு சோலைசூழ் வில்லூன்றி தனின் மேவு கந்தசாமிக்கடவுளே.

சிங்கார மயிலேறு மையனே விண்ணூறுந் தேவ சேனாதிபதியே
திறன்மேவு மவுணரை வதைத்திந்திரன்றுயர் சிதைத்திடும் வேற்கையனே
செங்கமல வேதனின் சிரமீது குட்டியே செப்பரிய பொருளுரைத்த
சீலனே யுமைதந்த பாலனே கீரனைச் சிறையால் விடுத்த தேவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொங்குமுகிண் முலைவள்ளி தெய்வானையம்மனைக் கோலமுடனருகிருத்துங்
குமர குரு பரகுழக சரவணசடாட்சரா கொடிய மும்மலமகற்றிக்
கங்குகரையற்ற பேரின்ப வெள்ளத்தினைக் காட்டியதின் மூழ்கவைப்பாய்
கந்தமிகு சோலைசூழ் வில்லூன்றி தனின்மேவு கந்தசாமிக் கடவுளே.

நன்மையிது தீமையிதென்று மறியேனரிய நாலுவேதத்தினுடனே
நானிலம்புகழு மாகம புராணங்களையும் நயனத்தினாற் கண்டிரேன்
மன்னர் முதலானவர்க ளனு பவித்திடு சுகமு மாய்கையென் றெண்ணிடாத
மடையனுக்குனதுபத மலர்காட்டியாட்கொள்ள மனமிரங்கிடவில்லையோ
என்னிருவிழிக்குள்வளர் மணியே ரசஞ்சேரு மினியதேனேயமுதமே
எங்குநிறைகின்ற பரிபூரணவிலாசனே இமையவர்கள் பணிசீலனே
கனமலை பிளந்தன்று நற்கீரனைக் காத்த கந்தனே பரிசுத்தனே
கந்தமிகு சோலைசூழ் வில்லூன்றிதனின்மேவு கந்தசாமிக் கடவுளே.

இந்திரனு நீ வானசந்திரனுநீ கிரண இரவியென வந்தவனுநீ
ஏகநாயகனுநீ பூமியையோரடியாக வியல்புடனளந்தெடுத்த
தந்தரியுமருக சற்குருவுநீ யெனது தந்தை தாயானவனுநீ
சனகாதி முனிவர்முன் தட்சணாமூர்த்தமாய்த்தான்வந்திருந்தவனுநீ
சந்ததஞ்சரியை கிரியாயோக ஞானநெறி தவறாதவர்க்கு மகிழ்வாய்ச்
சாலோக சாரூப சாமீப சாயுச்ய சம்பத்தளிப்பவனுநீ
கந்தருவர் முதலான கணநாதர் துதிசெயுங் கடவுணீ யெனையாளுவாய்
கந்தமிகு சோலைசூழ் வில்லூன்றி தனின் மேவு கந்தசாமிக் கடவுளே.

மண்ணுலக மீதுன்ற னாறெழுத்தினையோது மாணடியவர்கள் பக்கலில்
வந்தணுகிடும் பில்லியேவல் சூனியம் வைப்பும் மற்றுமுள பேய்களிடரும்
பன்னரிய நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டெனும் நோய்களும்
பந்தமிகு சிங்கமொடு யாழிபுலி கரடியின் பயமான வாதனைகளும்
பன்னகம் முதலான துட்டசெந்துக்களாற் படருமிகு மல்லலெல்லாம்
பரிதியைக் கண்டபனி போலோடுமென்னிலிப் பாருலகினின்புகடனைக்
கன்னிகர் மனத்தினால் என்னவிதமாகயான் களறுவேனருடருகுவாய்
கந்தமிகு சோலைசூழ் வில்லூன்றி தனின்மேவு கந்தசாமிக் கடவுளே.

வன்னமயின் மீதேறி வந்துதாருகனோடு மற்றுமுள அவுணரையெலாம்
வடிவேலினாற் றொலைத்தமரர்மிடியைத் தீர்த்து வானாடு குடியேற்றியே
நன்னயமிகுத்த தெய்வயானையம்மனையு நாயகியெனா மணந்தே
நவிலரிய செந்தியம் பதிதனைச் சார்ந்தபின் நங்கைகுற மங்கைதன்னை
இந்நிலந்தனில் வேட்டு மனைவியர்களிருவரொடு மெழின்மஞ்ஞை மீதிலேறி
இன்பமுட னாறுதலமீதினு முலாவிவரு மேந்தலே யழகுவாய்ந்த
கன்னமதமொழுகு கயமுகனுக்கோர் துணையான கந்தனே யருடருகுவாய்
கந்தமிகு சோலைசூழ் வில்லூன்றி தனின்மேவு கந்தசாமிக் கடவுளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை வில்லூன்றிக் கந்தசாமி பத்துப் பதிகம்

அஞ்செழுத் தெட்டெழுத் தென்னவே யம்புவியில தியட்சரங்கள் சொல்வார்
ஆறெழுத்தினைவெல்ல வேறெழுத்தேதெனினு மகிலமிசையானறிகிலேன்
கொஞ்சுகிளி மொழிவள்ளி தெய்வானை பாகனே கோலவச்சிர தேகனே
குன்றுதோறாடன்முத லெண்ணரிய தலமீது குலவிவருமமரர் கோவே
தஞ்சமெனவுன் பதம் நம்பினேன் புகழுறு சடாட்சரந்தன்னை யடியேன்
சந்ததம் பூசித்து நின்னிசையினைச் சொலத் தண்ணருள் வழங்குமையா
கஞ்சமலர் வாவியிற் கயலினங் குதிகொளுங் காட்சியுடனழகு வாய்ந்த
கந்தமிகு சோலைசூழ் வில்லூன்றி தனின்மேவு கந்தசாமிக் கடவுளே.

அரவணையு மண்ணலுக் கரியபிரணவமோது மாதியே செகசோதியே
அருணகிரிமுதலான பெரியோர்கணின் விழியி னருளினாலகமகிழ்ந்தே
திரமிகும் பாமாலை பாடியுன் றோளிற் சிறப்புடன் மகிழ்ந்தணிந்தார்
சிறுவனாகிய யானு மிப்பதிகமெழுதியே சேவடிதனிற் சூடினேன்
சரவணபவானந்த கந்தனே யிஃதினிற்றப்புகளிருந்த போழ்துந்
தரணிமிசை யப்பிழை பொறுத்துளம் விரும்பியே தயவுவைத்தருடருகுவாய்.
கரமீது வடிவேலிலங்கிடுங் காட்சியென் கண்காண்ப தெந்தநாளோ
கந்தமிகு சோலைசூழ் வில்லூன்றிதனின் மேவு கந்தசாமிக் கடவுளே.

பூமிதனினான்மறை விளங்கலும் மும்மாரி போதுமெனவே பொழிவதும்
பொழிவுடன் செந்நென்மிக விளைவதும் நாற்குலம்பெட்புடன் வாழ்ந்திடுவதும்
சாமநிகர் குழலுடைய மங்கையர்கள் கற்புநெறி தவறாதிருந்திடுதலும்
சகலராசாக்களின் செங்கோறழைத்தலும் சைவசமயம் வாழ்வதும்
ஏமமுதலாய்ப் பஞ்சலோகங்கள் விளைவதும் எந்தநாளுந் தவறிலா
தெண்ணரிய தானதருமங்கணடைபெறுவதுமுனிருவிழிக் கருணையன்றோ
காமர்செறி குக்குடத்துவசனே யெற்குனது காட்சிதந்தாளுமையா
கந்தமிகு சோலைசூழ் வில்லூன்றிதனின் மேவு கந்தசாமிக் கடவுளே.

### வாழி

சீர்வாழி மனுநீதி தவறாத மன்னரின் செங்கோறழைத்து வாழி
செப்பரிய அரிவையர்கள் கற்பினொடு சைவநெறிதேங்கியெங்கெங்கும்வாழி
ஏர்வாழி சிவகடாட்சரம்வாழி யஃதோது மிணையற்ற வடியர் வாழி
இயல்புள்ள வேதியர்கண் முதனாற்குலத்தவரு மென்னாளும் வாழி வாழி
கார்வாழி முகினிறத்தவன் வாழி சிவன் வாழி கமலமலரயனும் வாழி
கலைமகளு மலைமகளு மலர்களும் வாழியிருகந்தன்மனைவியர்கள் வாழி
பார்வாழி மகிமையுறு திருக்கோணைநகர் வாழி பாவலர் சிறந்து வாழி
பச்சைமயின் மீதுவரு கந்தசாமியினுபய பதமலர் நிதம் வாழியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லூன்றிக் கந்தன் தேர்ச் சிந்து

ஆக்கியோன்:

ஞானசிரோன்மணி சைவப்புலவர்-பண்டிதர் இ.வடிவேல்

1. வில்லூன்றிக் கந்தனவன் சிங்காரத் தேரிலே
வீதி வலம் வருகிறார்–தேரிலே
வீதி வலம் வருகிறார்
வேதியர் மாதவர் விஞ்சையர் நாரதர்
கீதம் மிசைத்திடும் நாதம் ஒலித்திட (வில்)

2. ஆனை முகத்தவரும் ஐந்து முகத்தவரும்
அன்னையும் காண வருகிறார்– ஆறுமுகன்
அன்னையும் காண வருகிறார்
இந்திரன் சந்திரன் சூரியன் நாரணன்
மந்திர நாயகன் வந்து வணங்கிட (வில்)

3. வள்ளிதெய் வானையுடன் வானோர் துதித்துட
புள்ளி மயில் அமர்ந்தவன்– சண்முகன்
புள்ளி மயில் அமர்ந்தவன்
சூர னுடலற வாரி சுவறிட
வேலை விடவல்ல வீர வடிவேலன் (வில்)

4. கங்கை அணிந்த சிவன் ண்ணில் பிறந்தவன்
கார்த்திகைப் பால முருகன் –வேலவன்
கார்த்திகைப் பால முருகன்
மூவரும் தேவரும் யாவரும் போற்றிடும்
தேவர் சிறைமீட்ட தெய்வக் குருபரன் (வில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. திருக்கோண மாமலையில் திருவேர கத்திருந்து
விருப்போடு வந்தமர்ந்தவன் –வில்லூன்றியில்
விருப்போடு வந்தமர்ந்தவன்
சேவற் கொடியுடன் சித்திரத் தேரிலே
பாவலர் போற்றிடப் பக்தர்கள் சூழ்ந்திட (வில்)

6. தொல்லை இரும்பிறவிச் சூழும் தளையறுத்து
நல்லோரைக் காக்க வருகிறான்–ஆறுமுகன்
நல்லோரைக் காக்க வருகிறான்
மண்ணவர் துன்பங்களை மாய்ந்து மடிந்திட
விண்ணவர் போற்றிடும் புண்ணிய மூர்த்தியாய் (வில்)

--------✧✧✧-------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலையூற்று
# ஸ்ரீ பாலமுருகன் ஆலயம்

பாலையூற்று ஸ்ரீ பாலமுருகன் ஆலயம் திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து நான்கு கிலோமீற்றர் தூரத்தில் இருக்கின்றது. திருக்கோணமலை- அனுராதபுரம் நெடுஞ்சாலையில் அனுராதபுரச் சந்தியிலிருந்து தெற்குப் பக்கம் செல்லும் கிளைப்பாதையில் பாலையூற்று என்னும் குடியேற்றக் கிராமம் இருக்கின்றது.

1946ஆம் ஆண்டு நடைபெற்ற புதிய குடியேற்றத் திட்டங்களில் பாலையூற்றும் ஒன்று. அங்கு பெரும்பாலும் இந்து மக்களே வாழ்கின்றார்கள். இங்கு குடியேறியவர்களில் சிவகுரு என்னும் முருக பக்தர் கதிர்காமத்துக்குச் சென்று கதிர்காமக் கந்தனின் அருளால் ஒரு வேலாயுதத்தைக் கொண்டுவந்து பாலையூற்று மக்களுக்காக ஒரு வழிபாட்டுத் தலத்தை உருவாக்கி சிறிய கொட்டில் கோவிலில் வேலாயுதப் பெருமானை எழுந்தருளச் செய்து அவரே பூசை செய்துவந்தார்.

1976ஆம் ஆண்டு ஆலடி விநாயகர் தேவஸ்தானப் பிரதம குரு ஸ்ரீ முத்துக்குமாரசாமிக் குருக்களைக் கொண்டு வேலாயுதப் பெருமானைப் பாலஸ்தாபனம் செய்து ஸ்ரீ பாலமுருகன் கோவிலுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. ஆலயத் திருப்பணி வேலைகளைத் தொடங்குவதற்காகத் திருப்பணிச் சபையொன்று அமைக்கப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களால் திருப்பணி வேலைகள் சீராக நடைபெறவில்லை.

1982ஆம் ஆண்டு திருப்பணிச்சபையைப் புனரமைப்புச் செய்து திரு.இராசரெட்டினம் என்பவரைத் தலைவராகவும் திரு.ச.பாக்கியராசா என்பவரை செயலாளராகவும் கொண்ட புதிய திருப்பணிச்சபை செயல்படத் தொடங்கியது. அக்கால கட்டத்தில் நாட்டில் ஏற்பட்ட கலவரங்களால் மீண்டும் திருப்பணி வேலைகள் தடைப்பட்டன. 1990ம் ஆண்டு திரு.ச.பாக்கியராசா தலைமையில் புதிய திருப்பணிச் சபை தீவிரமாகத் திருப்பணி வேலைகளைச் செய்து நிறைவேற்றியது.

சிற்ப சாஸ்திர முறைப்படி அமைக்கப்பட்ட ஸ்ரீ பாலமுருகன் ஆலயம் தூபியோடு அமைந்த கற்பக்கிரகம், அர்த்தமண்டபம்- மகாமண்டபம், மயூரம் பலிபீடமும் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பமண்டபமும் காணப்படுகின்றது. தம்பமண்டபத்தின் வடக்குத் திசையில் வசந்த மண்டபம் கட்டப்பட்டிருக்கின்றது. தம்பமண்டபத்தையடுத்து மக்கள் நின்று வழிபடக் கூடியதாக தெரிசன மண்டபத்தையும் கொண்டது இந்த ஆலயம். வடகிழக்குத் திசையில் வைரவப் பெருமானுடைய ஆலயமும் தனிச் சன்னிதியாக அமைந்திருக்கின்றது.

மூலமூர்த்தியாகிய பாலசுப்பிரமணியப் பெருமானுடைய சிலாவிக்கிரகம் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. மயூரத்துடன் நின்ற பாவனையிலுள்ள மூலமூர்த்தி துவிபுஜங்களையுடையவர். ஒருகை வேலுடன் சேர்ந்த அபயகரம், மற்றக்கை வரதம்.

மகாமண்டபத்தின் வலப்பக்கத்தில் பிள்ளையாரும் இடப்பக்கத்தில் பார்வதி அம்மையும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றனர். இவை இரண்டும் சிலாவிக்கிரகங்கள் எழுந்தருளி மூர்த்தியாகிய சிவசுப்பிரமணியப் பெருமானும் வள்ளி, தெய்வயானை சமேதராக மகா மண்டபத்தில் எழுந்தருளியிருக்கிறார். வைரவர் சந்நிதியில் வைரவப் பெருமானின் சிலாவிக்கிரகம் காணப்படுகின்றது. மயூர, சர்ப்ப வாகனங்களும், மஞ்சமும் இவ்வாலயத்தில் இருக்கின்றன.

1993ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் பின்னர் இரண்டுகால நித்திய பூசைகள் நடைபெற்று வருகின்றன. வைகாசி விசாகத்தைத் தீர்த்த தினமாகக் கொண்டு அலங்கார உற்சவம் பத்து நாட்களுக்கு நடைபெறுகின்றது. கந்த சஷ்டி, திருவெம்பாவை, நவராத்திரி, தைப்பூசம் என்பனவும்– திருக்கார்த்திகையுடன் பன்னிரண்டு கார்த்திகைத் திருவிழாக்களும் விசேஷமாக நடைபெற்று வருகின்றன.

ஸ்ரீ.சி.சுப்பிரமணிய சர்மா பூசகராகப் பணியாற்றி வருகிறார். விசேட உற்சவங்களுக்கு சிவ ஸ்ரீ சண்முகதாசக் குருக்கள் பூசைப்பணியாற்றி வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துக்குமாரசுவாமி கோவில்

இந்த ஆலயம் திருக்கோணமலைப் பட்டினத்தில், திருஞானசம்பந்தர் வீதியில் இருக்கின்றது. திருக்கோணமலைப் புகையிரத நிலையத்திலிருந்து ஒரு கில்லோமீற்றர் தூரத்திலுள்ளது. இவ்வாலயத்திற்கு வடகிழக்கே பிரசித்திபெற்ற ஸ்ரீபத்திரகாளியம்பாள் ஆலயமும், வடக்கே விஸ்வநாத சுவாமி (சிவன்) கோவிலும் அமைந்து சைவத்தமிழ் மக்கள் நெருக்கமாய் வாழும் இடத்தில் இருந்தபோதிலும், இவ்வாலயத்திற்குச் சமீபமாக இஸ்லாமியப் பள்ளிவாசலொன்று காணப்படுகின்றது. பள்ளிவாசலையண்டி நெருக்கமாய் வாழும் இஸ்லாமிய மக்களும் முத்துக்குமாரசுவாமி கோவிலில் பற்றும், பக்தியுமுடையவர்களாய் வாழ்கின்றார்கள்.

முத்துக்குமாரசுவாமி என்பது முருகனுடைய திருநாமங்களிலொன்று. இத்தலம் முருகவழிபாட்டுத் தலமாகவே இருந்துவருகின்றது. நித்திய, நைமித்திய கருமங்கள் யாவும் ஸ்ரீசண்முகப்பெருமானுக்கு உரியவையாகவே நடைபெற்று வருகின்றன. ஆனால் கருவறையில் லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. இதுபற்றித் தற்போது ஆலய முகாமையாளராயிருக்கும் திரு. சி. சிவானந்தம் அவர்களை விசாரித்தபோது இவ்வாலயத்தின் பழைய வரலாறுகள் கிடைத்தன.

தற்போதுள்ள ஆலயத்தைக் கட்டுவதற்குமுன் சுமார் 1800ஆம் ஆண்டளவில் அந்த இடம் ஒரு வழிபாட்டுத் தலமாக இருந்துவந்திருக்கின்றது. சடையர் என்னும் பண்டார சாது ஒருவர் அவ்விடத்தில் ஒரு சிறு குடிசை கட்டி வேல் ஒன்றை வைத்து வழிபாடு செய்து வந்தார். அவருக்குப் பின் திரு. செல்லையாபிள்ளை என்பவர் அக்குடிசைக் கோவிலைச் சற்றுப் பெரிதாகக் கட்டி அந்த வேலை வைத்து வழிபாடு செய்துவந்தார். அக்காலத்தில் வாழ்ந்த திரு. மு. சண்முகம்பிள்ளை என்பவர் சிறந்த முருகபக்தன். செல்லையாபிள்ளையின் மறைவுக்குப்பின், இந்தியாவிலிருந்து வந்த ஒரு சந்நியாசி காசியிலிருந்து கொண்டுவந்த சிவலிங்கமொன்றைத் திரு. மு. சண்முகம்பிள்ளையிடம் கொடுத்து "நீ வழிபட்டு வரும் ஆலயத்தில் இந்த லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்" என்று வேண்டிக் கொண்டார். வேண்டுகோளை மறுக்க முடியாமல் ஏற்றுக் கொண்ட சண்முகம்பிள்ளையவர்களுக்குத் தர்மசங்கடமாகி விட்டது. 'நானோ முருகவழிபாடு செய்பவன். சந்நியாசியோ லிங்கத்தை தந்து பிரதிஷ்டை செய்யும்படி சொல்கின்றார்'. இவ்வாறு கவலைப்பட்டுக்கொண்டிருந்தார். இறைவன் அவருடைய கனவில் தோன்றி, இந்த லிங்கத்தை ஏற்றுக்கொண்ட உனக்கு இஷ்டசித்திகளெல்லாம் கிடைக்க இருக்கின்றது. லிங்கத்தை ஸ்தாபிப்பதற்குரிய மூலஸ்தானம் இதுதானென்றும், மற்றும் பரிவார மூர்த்திகள் அமையவேண்டிய இடங்களையும், தீர்த்தக் கேணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கவேண்டிய இடம் முதலானவற்றையும் இறைவன் அவருக்குக் காட்டிக்கொடுத்தாராம். அடுத்த நாள் காலையில் அவ்விடத்திற்குப் போய்ப் பார்த்தபோது கனவில் கண்ட அடையாளங்கள் பிரத்தியட்சமாகவும் சரியாகவுமிருந்தன. இறைவனுடைய பெருங்கருணையை நினைத்து பரவசமடைந்த சண்முகம்பிள்ளையவர்கள், கனவில் தனக்கு இறைவன் காட்டிய பிரகாரம் ஆலயத் திருப்பணி வேலைகளைத் தொடங்கினார். திருப்பணி வேலைகள் பூர்த்தியாகிக்கொண்டிருக்கும்போது தீர்த்தக் கிணற்றையும் தோண்டினார். திருப்பணிவேலைகள் ஓரளவு பூரணமடைந்திருந்தாலும், மூர்த்திகளுக்கும், மற்றுள்ள தேவைகளுக்கும் பணமில்லாமல் கவலைப்பட்டுக்கொண்டிருந்தார். ஒரு நாள் இறைவன் கனவில் தோன்றித் தீர்த்தக் கிணற்றை இன்னும் ஆழமாகத் தோண்டும்படி கூறினாராம். மேலும் கிணற்றை ஆழமாக அகழ்ந்தபோது, ஆழத்தில் திரவியங்கள் கிடைக்கப்பெற்றன.

அதனையெடுத்து மூர்த்திகளும், மூர்த்திகளுக்குரிய சர்வாபரணங்களும் செய்வித்து காசியிலிருந்து சந்நியாசியாரால் கொண்டுவரப்பட்ட லிங்கத்தை ஸ்தாபித்து, அதனுடன் வேலையும் பிரதிஷ்டைசெய்து 1889ஆம் ஆண்டு ஆனி மாதம் பத்தாந் திகதி மகாகும்பாபிஷேகத்தைச் செய்வித்தார். சண்முகப்பிள்ளையவர்களுடைய காலத்திற்குப்பின், அவருடைய மருகர் திரு. நவரெட்ணம் அவர்களும் முத்துக்குமாரசுவாமி கோவிலைப் பராபரித்துவந்தார்கள். முன்னைய இருவருக்கும் ஆண் சந்ததி இல்லாததால் மருமக்கள் ஆலயத்தைப் பராபரித்தனர். திரு. நவரத்தினத்திற்கு இறைவன் ஆண் சந்ததியை அனுக்கிரகித்தார். அதனால் திரு. நவரத்தினத்திற்குப்பின் அவருடைய மூத்த மகன் திரு. ந. இராஜவரோதயம் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்) அவர்கள் ஆலயப்பராபரிப்புக்கு உரியவரானார். இராஜவரோதயம் சிறுவனாயிருந்ததால், அவர் பொறுப்பேற்கும் வரையும் அவருடைய மாமனார் திரு. லிங்கரெட்டினம் என்பவர் ஆலயத்தைப் பராபரித்து வந்தார். இவருடைய காலத்தில் 1932ஆம் ஆண்டு (6.4.32) இவ்வாலயத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

திரு. ந. இராஜவரோதயம் அவர்களைப் பலரும் அறிவார்கள். மக்களுக்கும், மகேஸ்வரனுக்கும் தொண்டனாய் வாழ்ந்தவர். ரெட்ணராஜவரோதயம் என்பது அவருடைய முழுப்பெயர். அவர் தன் பெயரைச் சுருக்கி என். ஆர். ராஜவரோதயம் என்று எழுதி வந்தார். இவர் பாராளுமன்ற உறுப்பினராயிருக்குங் காலத்தில் முத்துக்குமாரசுவாமி கோவிலில் திருப்பணிகள் செய்து கும்பாபிஷேகம் செய்ய வேண்டுமென்று ஆசைப்பட்டுக்கொண்டிருந்தார். 1950ஆம் ஆண்டு திருக்கோணேசப் பெருமானுடைய பெருங்கருணையினால் நிலத்திலிருந்து வெளிப்பட்ட கோணேசர்கோவில் திருவுருவங்களுக்கு ஆலயமமைக்க வேண்டுமென்று உறுதிபூண்டார். இந்த நோக்கத்திற்காக, திருக்கோணமலைச் சைவப்பெருமக்களுக்கு வழிகாட்டியாயிருந்த இராஜவரோதயம், கோணேசப்பெருமானுக்கு ஆலயமெடுத்தபின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துக்குமார சுவாமி கோவில் கும்பாபிஷேகம் செய்யவேண்டுமென்று சங்கற்பம் செய்து பின்போட்டுவிட்டார். கோணேசப்பெருமானுக்குக் கோவிலெடுத்துக் கும்பாபிஷேகம் செய்வித்த இராஜவரோதயமவர்கள் மாபெரும் திருப்பணியைச் செய்து நிறைவேற்றிய திருப்தியோடு இறைவன் திருவருளுக்குப் பாத்திரராகி இயற்கையெய்திவிட்டார். அவருக்குப்பின் அவருடைய மகன் திரு. இ. ஸ்ரீதரன் ஆலயப் பராபரிப்புக்குரியவரானார். இவர் இளைஞராயிருப்பதால், திரு. இராஜவரோதயமவர்களுடைய சகோதரி புவனேஸ்வரியின் கணவர் திரு. சி. சிவானந்தம் அவர்கள் தற்போது ஆலயப் பொறுப்பையேற்று முகாமையாளராயிருந்து நடத்தி வருகின்றார். 1942ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது உலக மகாயுத்தத்தில் எல்லாக் கோயில்களும் பூட்டப்பட்டிருந்தது. இந்த ஆலயத்தில் மாத்திரம் தொடர்ந்து பூசைகள் நடைபெற்றுவந்தன.

கருவறையில் லிங்கத்துடன் வெள்ளி மயிலும் தங்கவேலும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. மகாமண்டபத்தில் பிள்ளையார், வள்ளி, தெய்வயானை சமேத முத்துக்குமார சுவாமியும், தண்டாயுதபாணியும் எழுந்தருளி விக்கிரகங்களாக வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த மண்டபத்தில் கிழக்குமுகமாக பிள்ளையார் சிலாவிக்கிரகமும், சண்டேஸ்வரருமுண்டு. ஸ்தம்ப மண்டபத்தில் மயூரம், பலிபீடம் என்பனவும், வசந்த மண்டபத்தையடுத்துள்ள யாகசாலைக்கருகில் பைரவருக்குத் தனியாலயமுமுண்டு. வெளிப்பிரகாரத்தில் நாகதம்பிரானுக்குத் தனியாலயமுண்டு.

ஆலயத்தில் நித்தியப்படி மூன்றுகாலப் பூசை நடைபெற்றுவருகின்றது. வைகாசி விசாகத்தைத் தீர்த்ததினமாகக் கொண்டு பத்து நாட்களுக்கு மகோற்சவம் நடைபெற்றுவருகின்றது. ரதோற்சவத்தையடுத்து ஆலயத் தீர்த்தக் கேணியில் சுவாமி தீர்த்தமாடுவார். கந்தசஷ்டி ஆறுநாளும் உள்ளூர், வெளியூர் அடியார்கள் ஆலயத்திலிருந்தே விரதமனுட்டிப்பார்கள். மாதந்தோறும் கார்த்திகைவிழாவும் திருக்கார்த்திகைக்கு விசேஷ விழாவும் நடைபெறுகின்றது. திருவெம்பாவை, தைப்பூசம், சிவராத்திரி என்பன விசேடமாக அனுட்டிக்கப்பட்டு வருகின்றன.

ஆனி உத்திரத்தில் ஆரம்பித்து ஆவணி மாதம் வரையும் கந்தபுராணப் படிப்பும், கந்தசஷ்டி நாட்களில் மயூரகிரிப்புராணப் படிப்பும் நடைபெற்றுவருகின்றது. இவ்வாலயத்திற்குச் சிறப்பான ஊஞ்சல் பாட்டு உண்டு.

தற்போது கும்பாபிஷேகம் செய்யும் நோக்கத்தோடு திருப்பணி வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. நவக்கிரக கோவிலும் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றது. மக்களுடைய ஆதரவாலும், முகாமையாளராகிய திரு. சி. சிவானந்தம் அவர்களுடைய பக்திபூர்வமான விடாமுயற்சியாலும் இவ்வாண்டு கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூட்டிவைப்பதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை முத்துக்குமாரசுவாமி திருப் பொன்னூஞ்சல்

*ஆக்கியோன்:*
திரு. த. சரவணமுத்துப்பிள்ளை அவர்கள்
*திருகோணமலை*

## காப்பு

விரிகடல்சூழ் தென்னிலங்கைக் கரையின் மேய
வீங்குபுகழ் திருக்கோணா சலத்தில் வாழும்
கரியவனும் நான்முகனுந் தேடிக் காணா
கண்ணுதலோன் திரு முத்துக் குமாரன் மீது
பெருமகிழ்லி லன்புமிகுந் தூஞ்சல் பாடப்
பேணுபவர்க் கருள்சுரந்தே துன்பம் நீக்குங்
கரடமத கரிமுகங் கொண்டுள்ள வெங்கள்
கணபதிதன் இருசரணங் காப்பதாமே.

சீர்பூத்த திருமணி மண்டபத்தினூடே
செம்பவளக் கால் முத்தங் கயிறதாக
ஏர்பூத்த வயிரமணிப் பலகை பூட்டி
இருபுறமும் தேவியர்கள் இனிது மேவப்
பார்பூத்த பல்லுயிரு மினிது வாழ
மண்ணவரும் விண்ணவரும் பாடி யாடக்
கூர்பூத்த வேல்கொடு வெஞ் சூர்முற் கீண்ட
கோணைமுத்துக் குமாரரே யாடீரூஞ்சல்.

சோதி நவரத்தினமணி மகுட மின்னச்
சுடர்கொள் நவமணிக் குழைகள் துலங்கி மின்ன
ஏதமிலா வன்பர்களுக் கின்ப மூட்டும்
இலங்கிலை வேலொன்கரத்தி லினிது மேலும்
பீதகப் பன் மணிகளொடு மதாணி யாடப்
பேணுபவர் முகமதனிற் களிநின்றாடக்
கோதை பசும் பட்டினுடன் பாங்கராடக்
கோணைமுத்துக் குமாரரே யாடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்டரளக் கவிகை நிழல் பரந்து மேவ
மெல்லியலார் இருமருங்குங் கவரி வீசத்
தண்டளவத் தாமநறு வாசம் வீசத்
தகைமை செறி மறையவர்கள் வேத மோதப்
பண்டமுவி மாகதர்கள் கீதம் பாடப்
பரத நாட்டியமாதர் நடன மாடக்
கொண்டறவழி நறைமலர்ப் பூஞ் சோலைசூழ்ந்த
கோணைமுத்துக் குமாரரே யாடீரூஞ்சல்.

திருமருவு திருக்கோண மலையில் வாழும்
சீரியநற் சண்முகமாஞ் செல்வப் பேரோன்
தருமமெனுந் துறையினிறை பொருளிறைக்குந்
தயாளகுண னியற்று திருக் கோயில் தன்னில்
பரவையெழு மோதையென அன்பரார்ப்பப்
பார்த்தவர்கள் கண்களித்துமன மகிழ்ச்சிகூர
குருமருவு சம்பந்தர் பதிகம் பெற்ற
கோணைமுத்துக் குமாரரே யாடீரூஞ்சல்.

மரபுநெறி தவறாத மறையோர் மற்றோர்
மாதர்களும் மக்களும் மனமகிழ்ந்து நோக்க
கருமைசெறி யவர்விழி கண் மனத்தினோடுங்
கனக மணிச் சந்நிதிமுன் ஊஞ்சலாட
முருகவிழ் பூங் கழற்றேவி மார்கள் நோக்க
முகமதனில் புன்முறுவல் கனிந்து தோன்ற
குறைகடல் சூழ் ஈழவள நாட்டின் மேய
கோணைமுத்துக் குமாரரே யாடீரூஞ்சல்.

மங்குல் படி சிகரநெடு மியம மாது
மறைநாலுந் தேடரிய கடவுள் தாமுந்
தங்குமெழிற் றுணைவியரோடு ஊஞ்சல்மீது
தனையனெழுந் தருளுமியல் மகிழ்ந்து நோக்கப்
பொங்குமதக் கரிமுகத்தோன் புளகமெய்தப்
புரந்தரனும் மாலயனும் போற்றி நிற்கக்
கொங்குலவு மிந்தத் தண்தாமத் திண்தோள்
கோணைமுத்துக் குமாரரே யாடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி திருப் பொன்னூஞ்சல்

சந்தனமுஞ் சண்பகமு மடர்ந்தே யோங்குந்
தண்பொதியக் குறுமுனிக்குத் தமிழை யோதிக்
கந்தமெறி சோலைவளர் பழனி மேய
கருணைசெறி யறுமுகவா ஆடீரூஞ்சல்
பந்தமற உனையேத்தும் முனிவர் விண்ணோர்
பார்வாழச் சிங்கமுகத் தவுணன் றன்னைக்
குந்தமொடு முன்றடிந்து வாகை பூண்ட
கோணைமுத்துக் குமாரரே யாடீரூஞ்சல்.

திங்களொடு கங்கை நறுங் கொன்றை சூடுஞ்
செஞ்சடையோன் றன்புதல்வா ஆடீரூஞ்சல்
சங்கமொடு சக்ரமுந் தாங்கி நின்ற
சலசலோசனன் மருகா வாடீரூஞ்சல்
பொங்கு புகழ் வேதமொரு நான்குமோதும்
போதனைமுன் றளைபுரிந்தோ யாடீரூஞ்சல்
குங்குமுஞ் சந்தனமும் கமழும் மார்ப
கோணைமுத்துக் குமாரரே யாடீரூஞ்சல்.

ஆறுமுகத்தோடு கரமீராறும் வாழி
அசுரர்குலம் படப் பொருத வேலும் வாழி
வீறுகொள் எண் திக்கினுஞ்செல் மயிலும் வாழி
விருது நின்று கூவிடுமஞ் சேவல் வாழி
பேறுதரு மஞ்செழுத்து நீறும் வாழி
பெட்புலவு சடாட்சரமும் மறையும் வாழி
கூறு பெருமித வடிவா ரென்றும் வாழி
கோணைமுத்துக் குமாரரே வாழி வாழி.

கோணமலை புகழ் பரப்பி வாழி வாழி
கொள நல்ல பக்திநெறி வாழி வாழி
ஞாலமெங்குஞ் சிறந்தோங்க வாழி வாழி
வடிவேலா முத்துக்குமரா வாழி வாழி
கானமயில் கொண்டவரே வாழி வாழி
பார்வதியின் பாலகனே வாழி வாழி
கோணைமுத்துக் குமாரரே வாழி வாழி
குறவள்ளி தெய்வானையுடன் வாழி வாழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி
# எச்சரிக்கை, பராக்கு, லாலி, மங்களம்

ஆக்கியோன்:
சைவப்புலவர் பண்டிதர் - இ. வடிவேல் அவர்கள்
திருகோணமலை

## எச்சரிக்கை

அருவாய் அருவுருவாய் அருளுருவாய் வருமுருகா
திருமால் தரு மருகா முத்துக் குமரா எச்சரிக்கை

ஆதி யந்தமில்லாப் பரஞ் சோதி சிவனாரின்
ஆதி சக்தியான அறுமுகவா எச்சரிக்கை

இகபோகமும் பரபோகமும் ஈவாய் எச்சரிக்கை
அகமேவிநின் றாளும் அறுமுகவா எச்சரிக்கை.

ஈவேறவே யடியார்க்கருள்ஈவாய் எச்சரிக்கை
பாடல்பெறு கோணைமுத்துக் குமரா எச்சரிக்கை.

உன்பாதமே தஞ்சமென்று உருகும் அடியாரைக்
கண்பார்த்தருள் செய்யுங் கந்த சுவாமி எச்சரிக்கை

ஊனாய் உயிர்க் குயிராய் உம்பர் கோனாகியுயர்ந்த
கோணாசலம் மேவும் முத்துக் குமரா எச்சரிக்கை.

## பராக்கு

அருள்பெருகு முத்துக் குமரா பராக்கு
ஆனைமுகவற் கிளைய அரனே பராக்கு

வரமருளு வள்ளிமண வாளா பராக்கு
வந்தனைசெய் யடியர்துயர் தீர்ப்பாய் பராக்கு

அவுணர்குலம் அழியவேல் விடுவாய் பராக்கு
ஆடுமயில் ஏறும் அறுமுகவா பராக்கு

சங்கரனுக் குபதேசம் அருள்வாய் பராக்கு
சங்கரியின் மைந்தனே குகனே பராக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி எச்சரிக்கை, பராக்கு, லாலி, மங்களம்.

குன்தோ றாடிவரு குமரா பராக்கு
குறுமுனிக் கினியதமிழ் கொடுத்தாய் பராக்கு

மங்கை தெய்வானை மண மகிழ்வாய் பராக்கு
மால மருக முருக சண்முகனே பராக்கு.

### லாலி

லாலி லாலி லாலி லாலி லாலி
ஆலமுண்ட கண்ட சுத லாலி லாலி

ஆறு படை வீடுடைய ஐயா லாலி
ஆறு முக வேலவனே லாலி லாலி

சூரனுடல் கூறுபடச் செய்வாய் லாலி
சுத்த சத்துவப் பொருளே லாலி லாலி
வீர வடிவேல் முருகா லாலி லாலி
வெற்றி தரும் வித்தகனே லாலி லாலி

வள்ளி தெய்வ யானை மணவாளா லாலி
அல்லல் களைந் தன்பர் துயர் தீர்ப்பாய் லாலி

கொள்ளை பகை நீறுபடச் செய்வாய் லாலி
கோணைமுத்துக் குமரனே லாலி லாலி.

### மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் ஜெய ஜெய
மங்களம் மங்களம் மங்களம்

கார்த்திகைப் பெண்களறுவர் கொங்கையமு துண்டுவளர்
கீர்த்திமிகு கார்த்திகேய மூர்த்தியுமை பாலகற்கு (மங்)

விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும் வேதமோதும் வேதியர்க்கும்
கண்ணின் மணியாயிருந்து கருணைபொழி கந்தனுக்கு (மங்)

சரவணத்துள்ளே வளர்ந்து சராசரத்துள்ளே நிறைந்து
அரன்தனக்கும் அயன்தனக்கும் அரும்பொருளுரைத்தவற்கு (மங்)

கோணைமுத்துக் குமரனடி கூடும் அடியார் தமக்கும்
தேனினு மினிய தமிழ்த் தெய்வ அடித் தாசருக்கும் (மங்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை
# முத்துக்குமாரசுவாமி வெண்பா

ஆக்கியோன்:
திரு. த. கனகசுந்தரம்பிள்ளை அவர்கள்
திருகோணமலை

## விநாயகர் வணக்கம்

கங்கையணியுங் கணபதியைக் கைதொழுது
மங்குல் படி கோணை மாமலையில் – தங்குமொரு
முத்துக்குமார முதல்வன் கழலிணைக்கோர்
பத்துப் பகர்வல் வெண்பா.

திருமாலு நான்முகனுந் தேடியுங் காணாப்
பெருமா னருள்புதல்வ பேசு – மொருமான்
வயிற்றுதித்த நங்கை மணவாளா கோணை
யயிற் கரத்தா யாற்ற வருள்.

தேனோங்கு சோலைத் திகழிமய கன்னியருள்
வானோங்கு சோலை மலையோனே – தானோங்கு
வேலனே கோணை விலங்க லினிதமர்வாய்
காலனுறு போது வந்து கா.

வானோர் நிலைகலங்க வந்தெதிர்த்த தாருகனைத்
தானோர் கணத்திற் றபவெறிந்த – கோனார்
அடியார்க் கருளுமண்ணல் வாழுங் கோணைப்
படியார்க்கு முண்டோ படர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை முத்துககுமாரசுவாமி வெண்பா

வாரியாய் மண்ணாய் வாளியாய் வசுவனலாய்
பாரிலொடுத்த பலவுருவம் – போரில்
இமைப்பொழுதின் முன்னே யிறந்துபட வென்றோன்
சிமைக் கோணை வெற்பனென்றே செப்பு.

சமயந்தன் முதலமரர் தம்மைச் சிறையில்
நயந்து வைத்த சூரன் னடுவமரில் – பயந்து
சரந்தொடுத்தோ யோடத் தனிக்கோணை வெற்ப
கரந்தூக்கி யஞ்சலென்றே கா.

திங்கள் கழியென்பு தேன்பிலுற்றும் நறையார்
கங்கையணி சங்கரன் காதலா – செங்கண்
அரிமருகா கோணை யசலமினி தமர்வாய்
பரிமருகா வென்றே பகர்.

செங்கயற் கண் மாதறத்தின் செல்வியுமையாள் புதல்வா
அங்கயற்கண் வள்ளி தெய்வயானையாம் – மங்கையர்கள்
வாழவரைக் கோணை வைகுமுருகா வுன்னைத்
தாழ வரநிதம் யாண்டுந் தா.

பூதப்படையள்ளிப் போசனமா யுண்டுவந்த
ஏதத்தரி யெறிந்த வேந்தல் – சீதத்து
மேகம்படி சோலை விண்ணோங்கு கோணையார்
மாகந்த னென்றே வழுத்து.

ஓராறு சென்னியுடையானைக் கோணையா
ரீராறு கண்களுடை யெம்மானைத் – தேராது
போக்காதே வீண்காலம் பொங்கும் பழவினையை
நீக்கு மனனே நினைந்து.

கங்கை மகனைக் கருமான் மருமகனைச்
செங்கை யயிலுடைய செவ்வேளைத் – தங்கடியார்
துன்பந் தீர்கோணைச் சுதரிறையை வாழ்த்தினால்
இன்பம் பெறலா மினிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் மிகு முத்துக்குமாரசுவாமி கோவில்
# தேர்ச் சிந்து

சித்திரத் தேரில்வரும் முத்துக்குமரனே
பக்தரைக் காக்க வந்தருள்–குமரனே
பக்தரைக் காக்க வந்தருள்
உத்தமி நாயகி வள்ளி தெய்வானையும்
பக்கமிருந்துணைப் பாடிமகிழ்ந்திட (சித்)

சிங்கார வேலனவன் சித்திரத் தேரிலே
செல்லும் பவனி காணுவோம் –தேரிலே
செல்லும் பவனி காணுவோம்
சங்கரன் நாரணன் ஐங்கர நாயகன்
இங்கித மாகவே கண்டு மகிழ்ந்திட (சித்)

சந்திர சூரியரும் வந்து வணங்கிட
கந்தனே தேரிலேறி வா–கருணைக்
கந்தனே தேரிலேறி வா
சந்தத முன்னடி வந்து வணங்கிடும்
உந்தனடியவர் கண்டு துதித்திட (சித்)

தேவாரப் பாடல்பெற்ற திருக்கோணமாமலையில்
மேவும் குமார தெய்வமே –திருமலை
மேவும் குமார தெய்வமே
பாமாலை பாடியும் பூமாலை சூடியும்
நாவாரச் சேவிக்கும் நல்லடியார் தொழ (சித்)

பாரினில் கேடெல்லாம் வேரோடழிந்திட
தேரினில் ஏறிவந்தருள் –காந்தனே
தேரினில் ஏறி வந்தருள்
சூரனுடலற வாரி சுவறிட
வேலை விடவல்ல வீர வடிவேலா (சித்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள் மிகு முத்துக்குமாரசுவாமி கோவில் தேர்ச் சிந்து

வண்ணப் பூந் தேரதனை வானவர் சூழ்ந்துவர
மண்ணினைக் காக்க வந்திடாய் –ஆறுமுகா
மண்ணினைக் காக்க வந்திடாய்
பண்ணிய பாவங்கள் மண்ணிலழிந்திட
புண்ணிய மோங்கிடப் புத்தொளி வீசிட (சித்)

குறிப்பு:
முத்துக்குமாரசுவாமி கோவில்
புதிய சித்திரத் தேரோட்டத்தின்
போது பாடியது

ஆக்கம் –
ஞானசிரோன்மணி சைவப்புலவர்–பண்டிதர்
இ.வடிவேல்.
திருக்கோணமலை. 23.05.94



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெருகலம்பதி சித்திரவேலாயுதசுவாமி கோவில்

இந்த ஆலயம் கிழக்கு மாகாணத்தில் திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் எல்லைக் கோவிலாக இருந்து வருகின்றது. இரு மாவட்டங்களையும் பிரித்து ஆலயத்தினருகே வெருகல்கங்கை ஓடிக் கொண்டிருக்கின்றது. இது மகாவலிகங்கையின் ஒரு கிளை. மறு கிளை குருக்கள் கங்கை. இங்குதான் பழைமை வாய்ந்த அகஸ்தியர் ஸ்தாபனம் இருக்கின்றது. இந்த ஸ்தாபனம் இருக்குமிடத்திற்குக் கோவில்தெருமேடு என்று பெயர். வெருகல்கங்கை சித்திர வேலாயுதசுவாமி கோவிலை மேற்குப்பக்கமாகவும், தெற்குப் பக்கமாகவும் சுற்றி வளைத்துக்கொண்டு பாய்ந்து சென்று வங்காளவிரிகுடாவில் கெங்கைத்துறைமுகத்துவாரம் என்ற இடத்தில் சங்கமமாகின்றது. கதிர்காமத்தில் மாணிக்க கங்கையும் கதிரைமலை வள்ளிமலை என்பனவும் அமைந்திருப்பது போல வெருகலம்பதியில் வெருகல்கங்கையும், வெருகல்மலை, படிவெட்டுமலை என்பன அமைந்திருப்பதாலும், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பனவும் முறையாயமைந்த க்ஷேத்திர மாயுமிருப்பதால் இதனை உபய கதிர்காமம் என்று மக்கள் போற்றி வருகின்றார்கள்.

வெருகல்குளம், கிரான்குளம், தரைசேனைக்குளம் என்பன மேலும் நீர்வளத்தை கொடுத்துக்கொண்டிருக்கின்றன. கடம்பு முதலிய விசேட விருட்சங்களால் சூழப்பட்ட இப் பதியில் நிலவும் அமைதிக்குள் இயற்கையின் ஓங்கார நாதத்தை அவதானிக்கத் தெரிந்தவர்கள் அனுபவிக்கக்கூடிய க்ஷேத்திரமாய் அமைந்திருப்பது இந்த திருப்பதி. சித்திரவேலாயுதப் பெருமான் ஓங்காரத்தின் உட்பொருளை உணர்ந்தும் மூர்த்தியாக இங்கு எழுந்தருளியிருந்து திருக்கோணமலை மாவட்டத்திற்குத் திருவருள் பாலித்துக்கொண்டிருக்கின்றார். திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து கரையோரமாக மட்டக்களப்புக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் நாற்பத்தெட்டுக் கில்லோமீற்றர் தூரத்தில் இவ்வாலயம் இருக்கின்றது. கடல் மார்க்கமாக மோட்டார்ப் படகில் மூதூருக்குச் சென்று அங்கிருந்து வெருகலம்பதியை அடையலாம். திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து கந்தளாய்க்கூடாக மட்டக்களப்பிற்குச் செல்லும் நெடுஞ்சாலை வழியாகவும் இவ்வாலயத்தைச் சென்றடையலாம்.

செவிவழிச் செய்தியாக இப்பிரதேசத்தில் நிலைபெற்று வரும் ஆதிவரலாறுகள் இவ்வாலயத்தில் பழமையை விளக்குகின்றன. வேடர்கள் இப்பகுதியில் வாழ்ந்த காலத்தில் அதாவது குவேனியின் வம்சத்தவர்கள் வாழ்ந்த காலத்தில் இவ்வாலயம் தற்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் இடத்தில் ஒரு ஆலமரம் இருந்ததாம். அந்த மரப்பொந்தில் இருந்த வேலுக்கு வேடர்கள் பூசை வழிபாடு செய்து வந்தார்கள். பிற்காலத்தில் இந்தியாவிலிருந்து வந்து இப்பாதை வழியாகக் கதிர்காமத்திற்குச் சென்ற செட்டியொருவர் வேடர்கள் வழிபட்டுவந்த வேல் இருந்த ஆலமரத்தின்கீழ் படுத்திருந்தார். அவருடைய கனவில் முருகன் தோன்றி இவ்விடத்தில் தனக்கு ஆலயம் அமைக்கும்படி அருளாணையிட்டார். ஆலயம் அமைக்கப் பணமில்லாது கலக்கமடைந்த செட்டியாருக்குக் கல்மலை என்ற இடத்தில் திரவியம் வைக்கப்பட்டிருக்கின்றது, அதனை எடுத்து ஆலயத்தைக் கட்டும்படி கனவில் கூறினார் முருகப்பெருமான். அதன்படி செட்டியார் திரவியத்தையெடுத்து இவ்வாலயத்தைக் கட்டிமுடித்தார். ஆலயத் திருப்பணிகளை நிறைவேற்றிய செட்டியார், இந்நாட்டிலிருந்து அரசாண்ட மன்னனிடமிருந்து ஏழு மாணிக்கக் கற்களைப் பெற்றுவந்து இவ்வாலயத்தில் கருவறையில் மாணிக்கக் கற்களை யந்திரத்தின்கீழ் வைத்து முருகப்பெருமானைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தார்.

திருகோணேஸ்வரத்திற்குத் திருப்பணி செய்த குளக்கோட்டு மன்னன் கந்தளாய் குளத்தைக் கட்டி நீர்ப்பாய்ச்சி இரண்டாயிரத்து எழுநூறு அவணம் நெல் விதைக்கும் விதைப்புத் தரையைக் கொட்டியாபுரப்பற்றில் உண்டாக்கினான். அந்த நிலத்தில் விவசாயம் செய்யச் சிந்து நாட்டிலிருந்து மக்களைக் கொண்டுவந்து குடியேற்றினான். விவசாயத்தையே தொழிலாகக் கொண்ட சிந்துநாட்டவர்கள் தம்பலகமம் தொடக்கம் வெருகல் வரையும் குடியமர்த்தப்பட்டார்கள். இந்தியாவிலிருந்து குளக்கோட்டு மன்னனால் அழைத்துவரப்பட்ட தனியுண்ணாப் பூபாலவன்னியனின் ஆளுமையின் கீழ் சிந்துநாட்டவர்கள் விவசாயம் செய்து கோணேஸ்வரத்திற்கு நெல் முதலிய திரவியங்களை அனுப்பிவந்தார்கள். வெருகல் சித்திரவேலாயுதசுவாமி கோவிலை நிருவகிக்கும் பொறுப்பும் சிந்து நாட்டவர்களிடம் விடப்பட்டது. ஈச்சிலம்பத்தை, மல்லிகைத்தீவு, ஆநெய்தீவு, பள்ளிக்குடியிருப்பு (உமனகிரி) கங்குவேலி, திருமங்கலாய், இலங்கைத்துறை, கிளிவெட்டி, சம்பூர், மூதூர் முதலிய இடங்களில் பல ஆலயங்களையமைத்த சிந்து நாட்டவர்கள், வெருகலம்பதியையும் பரிபாலனம் செய்து வந்தார்கள். அந்தப் பரம்பரையினரே இன்றும் பரிபாலனம் செய்து வருகின்றார்கள்.

இவ்வாலயத்தைத் திருப்பணி செய்து நிறைவேற்றிய செட்டியார் கும்பாபிஷேகம் செய்வித்தபோது மாணிக்கக் கற்களைக் கொடுத்துதவிய மன்னனையும் கும்பாபிஷேகத்திற்கு அழைத்திருந்தார். மன்னன் வரும் வழியில் நெற்கதிர்களால் பந்தல் அமைத்து வரவேற்கப்பட்டான். அந்த இடத்திற்குக் கதிர்வெளி எனப் பெயர்சூட்டப்பட்டது. இப்போது "கதிரவெளி" என்ற பெயர் வழங்கிவருகின்றது. அன்று செட்டியாரால் கட்டப்பட்ட கோவில் கற்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபங்களை மாத்திரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டதாயிருந்தது. மகாமண்டபம் உட்குவிவாக மூடுசாந்துபோட்டுப் புதுமையாக அமைக்கப்பட்டிருக்கின்றது. தெரிசனமண்டபம், ஸ்தம்பமண்டபம் முதலிய ஏனைய அமைப்புகளெல்லாம் சிந்து நாட்டவர்களால் கட்டப்பட்டதென அறியக்கிடக்கின்றது. அந்தச் சந்ததியில் வந்த திருவாளர் செல்லப்பிள்ளை இராசையா என்பவர் தற்போது ஈச்சிலம்பத்தை என்னுமிடத்தில் வாழ்ந்து வருகின்றார். சுமார் எண்பது வயது மதிக்கத்தக்க அவரே மேற்கூறிய வரலாறுகளைத் தந்துதவினார். அவர் மூன்று மைல் தூரத்திலுள்ள சித்திரவேலாயுதசுவாமி கோவிலுக்குத் தினமும் போய் ஆலயத்தைப் பக்தி சிரத்தையோடு பரிபாலித்து வருகின்றார். எனினும் ஒரு பரிபாலனசபை அவருக்கு உதவியாக இருந்து இயங்கி வருகின்றது.

கருவறையில் வள்ளி தெய்வானை சமேத சித்திரவேலாயுதப் பெருமான் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார். மகாமண்டபத்தில், பிள்ளையார், மகாவல்லி, கஜாவல்லி சமேதராக ஆறுமுகப்பெருமான், உமையம்மை சமேத சந்திரசேகரர் மூர்த்தங்கள் தெற்கு வாசல் தெரிசனராக வீற்றிருக்கின்றனர். மயூரம் பலிபீடத்துடன் ஸ்தம்ப மண்டபமும், பரிவார மூர்த்திகளாக விநாயகரும், பைரவரும் தனிக் கோவில்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளனர். இவ்வாலயத்தில் விசேடமாயமைக்கப்பட்ட கதிர்காமசுவாமி கோவில் ஒன்றுண்டு. கதிர்காமத்தில் பூசைகள் செய்யப்படுவதைப் போலவே இங்கும் பூசை, திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. தினமும் மூன்றுகாலப் பூசையும், ஆவணி உத்தரத்தில் கொடியேறி பதினெட்டு நாட்கள் மகோற்சவம் நடைபெற்று வெருகல் கங்கையில் தீர்த்தோற்சவம் நடைபெறுகின்றது. கந்தசஷ்டி, வைகாசி, விசாகம், ஆடியமாவாசை, கௌரிநோன்பு, திருவெம்பாவை முதலிய விசேட உற்சவங்களும் நடைபெற்று வருகின்றன.

மக்கள் காவடியெடுத்துக் காணிக்கை செலுத்துவதுபோல் இங்கு மாடுகளும் காவடியெடுத்துக் காணிக்கை செலுத்துவதை ஆலய உற்சவ காலங்களிற் பார்க்கலாம். இது சிந்து நாட்டவர்களின் பாரம்பரித்தையுணர்த்தும் நேர்கடனாகவுமிருந்துவருகின்றது. கோவில் விதானை, கங்காணம், உண்டியல் கங்காணம் என்னும் ஆலய நிர்வாகப் பணிப்பாளர்களின் பண்டைய நிர்வாக முறை இன்றும் இவ்வாலயத்தில் பின்பற்றப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெருகலம்பதி
# ஸ்ரீசித்திரவேலாயுதசுவாமி திருவூஞ்சல்

ஆக்கியோன்:
வடதுன்னைவாசர் திரு. தா. முருகேச பண்டிதர் அவர்கள்

பொன்னாரு மேரு கொடு முடியினொன்றாய்ப்
போந்த திருக்கோண நன்மலை தென்கீழ்பால்
மன்னுமலர்ச் சோலைபுடைசூழ்ந்து பொங்கும்
மகாவலி கங்கா நதியாம் வெருகற்றீர்த்தம்
பொன்னிநதி போலவலப் புறமாயோடிப்
போகுமுயர் வெருகலெனும் பதியின் மேவும்
சின்மய சித்திரவேலோ னூஞ்சலாற்றச்
சித்திவிநாயக னருளே காப்பதாமே.

சீர்மேவு நாதவிந்து கால்களாகச்
சிவமேவு சத்தி திகழ் விட்டமாக
நேர்மேவு சிவாகமநூ லிழையதாக
நிருமலநால் வேதமுமே கயிறதாகப்
பேர்மேவு முபநிடதம் பலகையாகப்
பெருமைதரு பிரணவமாம் பீடமேவித்
தேர்மேவுந் திருவீதி வெருகன் மேவும்
சித்திர வேலாயுதரே யாடீரூஞ்சல்.

இந்திரனோ டரியயனு மிருபானின்றே
யிடராறுநற் றுதிகூறி யேத்தி யாட்ட
அந்தமிலாத் தொண்டர்குழா மயிலின்மேவி
ஆறுமுக குகமுருக வையா வென்றே
சந்ததமு மேத்தவிடர் தீர்த்தே யாடும்
சாம்பசிவ சண்முகனே சாமி நாதா
சிந்தைமகிழ்ந் தருள்பொழி சீர் வெருகல் மேவுஞ்
சித்திர வேலாயுதரே யாடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசவனா ரிடரகற்றித் துறக்கமேற
வைத்தபெருங் கருணையரே வைவேற் கையா
பூசுரனாம் பொன்னோன்முன் னமரர்க்காகப்
பொருப்பிலுயர் வடிவெடுத்த போதா நாதா
ஆசுரமா வீரதகேந் திரத்திலுற்ற
வசுரர் சிளை முளைக்க வந்நாள் வந்து
தேசமெலாம் புகழத்திரு வெருகல் மேவும்
சித்திரவேலாயுதரே யாடீரூஞ்சல்.

ஆறுருவங் கொண்டு சரவணத்தின் மேவி
யருளாட்டஞ் செய்தவரே யாடீரூஞ்சல்
ஏறுமயிலேறி யண்ட மெல்லாங் காத்த
இணையறுவேற் கையாரே யாடீரூஞ்சல்
கூறு பிரணவப் பொருளை யீசர்க் கோதிக்
குருவெனப் பேர் கொண்டவரே யாடீரூஞ்சல்
தேறுபெருந் திருவருள் சேர் வெருகல் மேவும்
சித்திரவேலாயுதரே யாடீரூஞ்சல்.

கோலமயில் வாகனரே யாடீரூஞ்சல்
குஞ்சரிக்கு நாயகரே யாடீரூஞ்சல்
நாலுமறைப் பொருளாரே யாடீரூஞ்சல்
நாதவிந்து நாயகரே யாடீரூஞ்சல்
வேலமருங் கையாரே யாடீரூஞ்சல்
விண்படைக்கு நாயகரே யாடீரூஞ்சல்
சீலமலிந் தருள் பெருகும் வெருகல் மேவும்
சித்திர வேலாயுதரே யாடீரூஞ்சல்.

முத்திதரு பரங்கிரியே முதலாந் தெய்வ
மூவிரண்டு தலத்தாரே யாடீரூஞ்சல்
பத்திமிகு கதிரைமலை தன்னின் மேவிப்
பரகதிதந் தருள்பவரே யாடீரூஞ்சல்
சுத்தமனத் தொண்டரகத் தூடு வாழ்ந்து
சுகமருளுங் கருணையரே யாடீரூஞ்சல்
சித்தியெலாம் பொலி வெருகற் பதியின் மேவும்
சித்திர வேலாயுதரே யாடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராரும் பெருந்தவராந் தொண்டர் கூடிப்
பெருந்துதியாற் பெருமானே யருளென் றேத்த
நேராருந் திருநோக்காற் கருணை செய்யும்
நின்மல சம்பந்தரே யாடீரூஞ்சல்
காராரும் மலைக்குறமான் வள்ளித் தாயை
காக்க வனந் தனில் நடித்த கருணையோடு
சீராருந் திருவருள்சேர் வெருகல் மேவும்
சித்திரவே லாயுதரே யாடீரூஞ்சல்.

துங்க அய வாகனரே யாடீரூஞ்சல்
சூரனையாட் கொண்டவரே யாடீரூஞ்சல்
கங்கைதனில் வந்தவரே யாடீரூஞ்சல்
கவுரியிளம் பாலகரே யாடீரூஞ்சல்
எங்குநிறை வானவரே யாடீரூஞ்சல்
ஈசனிளம் பாலகரே யாடீரூஞ்சல்
செங்கமலஞ் செறி வெருகற் பதியின் மேவும்
சித்திரவே லாயுதரே யாடீரூஞ்சல்.

உருத்திரசன்மப் பெயர்கொண் டவையின் மேவி
உயர்தமிழை விரித்தவரே யாடீரூஞ்சல்
செருத்தணியி லுறைந்து வள்ளி யம்மைதேரச்
சீரனைத்துந் தெரித்தவரே யாடீரூஞ்சல்
மருத்துளசி மாதவன்கண் மணியின்வந்த
மங்கையரை மணந்தவரே யாடீரூஞ்சல்
திருத்திகழ் சீர் வெருகலெனும் பதியின் மேவும்
சித்திர வேலாயுதரே யாடீரூஞ்சல்.

## வாழி

மாசமொரு மூன்றுமழை பொழிந்து வாழ்க
மலிவளமுஞ் செங்கோலும் மன்னி வாழ்க
பூசுரரந்தண ரறமும் பொழிந்து வாழ்க
புண்ணியமும் நன்னெறியும் புவிமேல் வாழ்க
ஈசுரவாலய தரும கர்த்தரென்றும்
இன்பமிகுந் திசைமருவி யினிது வாழ்க
தேசுமலிந் துயர் வெருகற் பதியும் வாழ்க
சித்திரவே லவனருளும் வாழ்க வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெருகலம்பதி
# ஸ்ரீசித்திரவேலாயுதசுவாமி பதிகம்

ஆக்கியோன்:
திரு. தா. முருகேச பண்டிதர் அவர்கள்
வடதுன்னை

சீரோங்கு மணியணி செறிந்து செங்கதிர்விடும் திருமுடியொ ராறினழகும்
செம்பதும மலரனைய வதனமிரு மூன்றினுஞ் சேர்ந்தருள் பொழிந்த விழியும்
நீரோங்கு மடியவர்க் குறுகுறைக ணீக்கவுறு நீளபய வரத கரமும்
நிகரிலாதுயர் ஞான சக்திவேலும்புடையி நீங்காத படையதொன்றும் காரோங்கு
மஞ்ஞைமே லாரோகணஞ் செய்த கருணைநிறை திருவுருவமும்
காட்டியாட் கொளவள்ளி தெய்வானையோ டெனது கண்முனே தோன்றியருள்வாய்
வேரோங்கு மாமரச் சோலைசூழ்ந்தோங்கியுயர் விண்ணினைத் தடவியாடும்
வெருகலம்பதி மேவி யருள்தருங்குக சித்ர வேலாயுதக் கடவுளே.

காற்றினொடு தீகங்கை யாற்றில் கலந்தமல கமலநிறை
கான்முனைகளாகிநட மாடவுமையம்மையார் கைக்கொண்டணைந்தபோது
தோற்றுமொரு முதலாக வந்தமரரின்பதுயர் தொலைத்துவிண் பதமளிக்கத்
தோகைமயின் மீதேறி வாகைவேல்கொண்டசுர துட்டரை யழித்த சாமீ
தேற்றுவழியின்றியலையுஞ் சுணங்கற்குனது திருநயன வருளளிப்பாய்
சிவனுமையவட்குநடு வாகிமுவுருவெனச் சேர்ந்த சோமாஸ்கந்தனே
வேற்றுருவெடுத்துவினை செய்தசூரற்முன் மேலான பதவியீந்த
வெருகலம்பதிமேவி யருள்தருங்குக சித்திர வேலாயுதக் கடவுளே.

கண்கண்ட தெய்வமிக் கலியுகந்தன்னிலே கடவுணீ யொருவனன்றோ
கவலைகொடு வாடுநின்தொண்டருக்கருள்செயுங் கருணையுறு வாறுமுகவா
பண்கொண்ட செந்தமிழ்ப் பாவலர்க்கெளியனாய்ப் பரிவினையறுத்த புலவா
பகவனே பரமனார்க் குபதேச குரவனே பாலனே காத்தருளுவாய்
மண்கொண்ட மாயவன் மாமருகனானவா மழலைமொழி வள்ளி கணவா
மாதங்க மாதினை மணந்துமகபதி துயர மாற்றியரசாள வைத்தோய்
விண்கொண்டல் தவழுமுயர்சோலைசூழ் கதிர்காம மேவியுங் காத்த குருவே
வெருகலம் பதிமேவி யருள்தருங்குகசித்ர வேலாயுதக் கடவுளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெருகலம்பதி ஸ்ரீசித்திரவேலாயுதசுவாமி பதிகம்

பெற்றதாய் தந்தைநீ யுற்றசுற்றத்தினொடு பிறவுநீ குருவு நீயே
பேரின்ப முதவுமுயர் நாதாந்த முதலுநீ பேதமையினொன்று முணராச்
சிற்றறிவி னோடொழுகு மேழையைத் காத்துனது திருவடிப் பெருதருவாய்
சிவனுதவு மைந்தனே யுமையணைசெய் கந்தனே திருமயிலேகைத்த வீரா
கற்றவர்களுக்கு மேலான நக்கீரனைக் காத்துக் கடைக்கணித்த
கருணைபொழி திருமுருக பெருமைபெறு மானந்த கழலடிக்கடிமையருள்வாய்
வெற்றிபெறு மானினஞ் சுற்றமொடு கூடவே வேழமுஞ் சூழ மருவும்
வெருகலம் பதிமேவி யருள்தருங்குகசித்ர வேலாயுதக் கடவுளே.

காலயுதக்கொடி படைத்தகங்காசுதா கார்த்திகைத் தாயரறுவர்
கரமலரமர்ந்து பாலுண்டு களிசெய்தவா கடம் பணிய முடியுடையவா
சூலாயுதத்தொடே இயமன் கடாமீது தோன்றி யென் முன்புவந்து
துயரந்தராதெனைக் காக்க மயின்மீதிலே சோதி வேலோடும் வருவாய்
மாலானவற்கு நம் மருகனே முருகனே வள்ளிக்கு வந்த கணவா
வனசரர்கள் காணவே வேங்கைமரமாய்வந்த வள்ளலே புள்ளிமயிலா
மேலானசோலையிற்றொனருவி நதியினொடு மேவிக் கலந்து பாயும்
வெருகலம்பதிமேவி யருள்தருங்குகசித்ர வேலாயுதக் கடவுளே.

நீயன்றி யுற்றதுணை யிக்கலியுகத்திலே நிருமலா வேறு முண்டோ
நின்னையே வேண்டுமடி யேனுக்கு வேண்டியவை நீயன்றி யார் தருகுவார்
தாயன்றி மைந்தற்கு மற்றொருவர் தஞ்சமோ சாமிநீ யறியாததோ
சஞ்சலமகற்றியே வஞ்சர்பாற் சேராது தண்ணருள் புரிந்து காப்பாய்
சேயொன்றி யடியனேன் செய்தபிழை யாவையுந் தீர்த்துநின் கருணை புரிவாய்
செங்கமல வாசனைச் சிறைசெய்து சிட்டியுஞ் செய்தவற்கருள் செய்தவா
வேயொன்றியோங்கியுயர் தருவினச் சூழலொடு விண்ணினைத் தடவி வளரும்
வெருகலம் பதிமேவி யருள்தருங் குகசித்ர வேலாயுதக் கடவுளே.

யானுன்னையனுதினம் மறவாத்தியானமோ டிணையடி பதிந்த நெஞ்சம்
எளியனுக் கீந்துனது தொண்டரோடு கூட்டிநல் லின்பந்திளைக்க வருள்வாய்
மானென்னுமுயர்வடிவு கொண்ட காஞ்சனையினரு மருகனே திரு முருகனே
மாசெந்தி லேரகம் பழனியாதிய தலமும் மன்னியே நடனமிடுவோய்
தேனென்னு மொழியுடைய தெய்வானை காந்தனே சிறுகுறுமுனிக் கோசனே
தீதிலாவன்பருக் கின்பசுகமீந்திடுந் தேவசேனாதிபதியே
மீனொன்ற வுயருங் கடம்பவன மாஞ்சோலை மிகுதியு மலர்ந்து சொரியும்
வெருகலம் பதிமேவி யருள்தருங் குகசித்ர வேலாயுதக் கடவுளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தரையிலுயர் கங்கை சோலைமலையாதிய விசைந்திடுந் தலமிதென்றே
இணையிலாவருவுருவு கொண்டடியவற்கருள இங்ஙனே வீற்றிருந்து
சித்தமிகு தொண்டனாம் நல்லநாயக வணிக சேட்டனின் குட்ட நோயைத்
தீர்த்தவனி மீதுயர்வை நாட்டியித் தலமீது திருவருணீறப்பியுற்றாய்
அத்திமுகனுக்கிளைய ஆறுமுக நாதனே அம்பிகைக்கினிய மணியே
அதிமதுரமாதமிழ் மொழியினுக்கேநல்ல ஆசிரிய அருள் செய்குவாய்
வித்தகம் பொலிமகத் தெழுசெச்சை யூர்ந்துலக மேவு துயர் தீர்த்த ஐயா
வெருகலம்பதிமேவி யருள்தருங் குகசித்ர வேலாயுதக் கடவுளே.

ஆண்டுதொறு மாவணித் திங்கள் பூருவபக்க மறுமூன்று தின உற்சவம்
ஆதிநாட் டொட்டடியர் கூட்டத்தினோருக் கருங் காட்சி தந்துமேலும்
வேண்டுவர மீந்தருளி னோடுறையுமையனே வீரவாகாதி யோரை
விண்ணவருமெச்ச முசுகுந்தனுக் காளாக மேவிப் புரக்க வைத்தோய்
தூண்டுமிடியும் பிணியு மென்னைவிட்டகலாது துயர் செய்ய வாடுகின்றேன்
தூயவருளீந்து சுகவாழ்வு சீரருமுவாய் சுவாமி நாதா சிவாதா
மீண்டுவரு சென்மமினி வாராது தேவநின் விமலவடி நிழல் வைப்பாய்
வெருகலம் பதிமேவி யருள்தருங்குகசித்ர வேலாயுதக் கடவுளே.

தேவாதி தேவனின் திருவடிக் காட்படுஞ் சிந்தையுந் தந்து நாயேன்
செய்தவிப் பாவிலுறு குறைபொறுத் துன்னரிய திருவடிக் கேற்றியருள்வாய்
பூவாதியுலகம் புகழ்ந்து போற்றிடுமரிய புண்ணியம் பொலியுமிடமாம்
போற்றுந் தபோவனந் தன்னிலே மானினம் புள்ளி மயிலோடு கூடி
ஓவாதுறைந்து சஞ்சார வாழ்வெய்தவே யுடனுறாஉ மதயானைகள்
ஓங்கார மூர்த்தியை யுணர்த்தியெங்கணு முலவு முயர்பதியிலுறைவு மையா
வேவார்களைத் தொலைத் தன்பர்களை யண்டியே மேவ அருள்வாழ்வு தருவாய்
வெருகலம் பதிமேவி யருள்தருங் குகசித்ர வேலாயுதக் கடவுளே.

மண்ணிலுறு வளமெலா மோங்க மாசத்திலே மழை மூன்று பெய்து வாழி
மாமறையொ டாகம புராண காவியமெலாம் மன்னிமிக வோங்கி வாழி
புண்ணியமிகுந்த வறநாலெட்டு மெங்கணும் பொலிவொடு சிறந்து வாழி
பூசுரரு மன்னருஞ் செங்கோலு நீதியும் பொறுமையு மிகுந்து வாழி
கண்ணியமிகுந்த வாலயதரும கர்த்தருங் கருணை பெற்றோங்கி வாழி
கற்றவரு நற்றவரு முற்றபணியாளரும் காதலோ டேத்தி வாழி
விண்ணவரு மண்ணவரு மெண்ணியவை யெய்தவே மேலாநல் லருள்வழங்கும்
வெருகலம்பதி வாழி யதிலுறுஞ் சிவசித்ர வேலனருள் வாழி வாழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெருகல்
# சித்திரவேலாயுதசுவாமி பேரில்
# சிறைவிடு பதிகம்

ஆக்கியோன்:

திரு. வே. அகிலேசபிள்ளை அவர்கள்

*திருக்கோணமலை*

## கலித்துறை

நறைமலர்களின்மேற் றும்பி நணுகலாற் பாயுஞ் செந்தேன்
குறைவற வாறாயோடுங் கொள்கைசேர் வெருகல் வாழும்
பிறையறுகணிவோன் றந்த பெருமைசேர் செவ்வேண்மீது
சிறைவிடு பதிகம் பாடிச் சிந்தையைக் களிப்போ மன்றே.

## வெண்பா

மெத்துபுகழுற்ற வெருகல்தனில் வாழுகின்ற
சித்திரவேலாயுதனே செவ்வேளே – இத்தருணம்
வாட்டமுறுகின்ற வெம்மை மாமயின்மேல் வந்து சிறை
மீட்டெடுக்க வேண்டும் விரைந்து.

சந்திரோதயமனைய சண்முகமு மெழின்மருவு தாமரைப் பாத வழகுந்
 தண்ணருள்சுரக்கும் விழியீராறு மோராறு தங்க நவரத்தின முடியும்
சுந்தர துவாதசாதித்தர்போற் செவியிற்றுலங்கு குண்டல நிரைகளும்
 தோகை தெய்வானையொடு வள்ளிநாயகி பக்கல் சூழ்ந்திடுமலங்காரமும்
விந்தையுறு கரகமலமீதினிலிலங்கிடும் வேலாயுதத்தி னொளியும்
 மிக்கவலி யுற்றமயில் சேவலுங் கண்காண விரை வினிலெழுந்து வந்தே
சிந்தையதுவாடித் தியங்காம லெங்களைச் சிறைவிடுத் தாளுமையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கமல வாவிசூழ் வெருகறனிலை வாழ்ந்திடுஞ் சிங்கார வடிவேலனே.
செப்பரிய குகையினுளிருந்த நற்கிரனைச் சிறையால் விடுக்க விலையோ
தேவர்துயர் நீக்கிடச் சூரபத்மன் மீது திறல்வேலை யேவவிலையோ
ஒப்புவமையில்லாத இந்திர குமாரனுக் குறுதிமொழி சொல்ல விலையோ
உருகியனுதினது னின்னாறெழுத் தோதுவோர்க் குன்னருள் வழங்கவிலையோ
தப்புரை பகர்த்த வெண்ணாயிரஞ் சமணர்கடமைக் கழுவிலேற்ற விலையோ
சந்ததமு நின்பாத நம்புமடியார் துயர் தவிர்த் திடுதென் மிகவருமையோ
செப்பனைய முலைவள்ளி தெய்வானை பாகனே சிறை விடுத் தாளுமையா.
செங்கமல வாவிசூழ் வெருகறனில் வாழ்ந்திடுஞ் சிங்கார வடிவேலனே.

கண்டுமொழி பேசியிரு விழிவலையை வீசிடுங் கன்னியர்கள் காதலாலோ
காலைமாலையி லுன்றனாறெழுத் தோதிக் கசிந்து நெக்குருகி நிதமும்
தொண்டுபுரியாமன் மிகுகன்னெஞ்சனாகியித் தொல்லுலகில் வாழுமென் முன்
சுருதியுங் காணாத மலரடி சிவந்திடத் தோற்றிவந் தருடருவையோ
அண்டருக் கரசான இந்திரற் கெழின்முடி யளித்தரசு செய்ய வைத்த
அய்யனே துய்யனே ஈராறு கையனே ஆறானனத் துளானே
செண்டுமுலை வள்ளி தெய்வானை மகிழ் கொழுனனே சிறைவிடுத் தாளுமையா
செங்கமல வாவிசூழ் வெருகறனில் வாழ்ந்திடுஞ் சிங்கார வடிவேலனே.

அட்டதிக்குறு சராசரமெலா மனதேங்கி யஞ்சிப் பயந்தொடுங்க
ஆதிசேடனும் வெருவியுட னொளித்திட வானினமரர்கண் மனங்கலங்க
மட்டுக்கடங்காத மைமுகில்களேழும் மறைந்தோடியே யொழிக்க
மடமடென வண்டகோளகைமுகடுநெரியவே வலிகொண்டெழுந்து நின்று
வட்டமிட்டோடி நடமாடு மயின் மீதிலே வந்து விளையாடு மையா
வாமியபிராமி சிவகாமி மகிழ் பாலனே மதகயமுகன்றுணைவனே
சிட்டருக் கருள்புரியும் வேன்முருகனே யெங்கள் சிறைவிடுத் தாளுமையா
செங்கமல வாவிசூழ் வெருகறனில் வாழ்ந்திடுஞ் சிங்கார வடிவேலனே.

அத்தனருண் மாங்கனிக்காக மயின்மீதேறி யண்ட கோளகைக ளெல்லாம்
அரைநொடியினிற் சுற்றினீர் வள்ளிநாயகிக்காக வனமீது சென்றீர்
பத்தியொடு நித்தியந் துத்தியஞ் செயுமன்பர் பக்கலிற் றுயருறாமற்
பாதுகாத் தவர்கட்கொர் தீதுவாராமலே பட்சமொடு கிருபைசெய்தீர்
இத்தருணமேழையேஞ் சித்தமிக வாடியே ஏங்கித் தவிக்குதையா
எழின்மருவு தேவியர்கள் புடைமருவ வயில் கரத்தினிலிருந்தொளிபரப்ப
சித்தியென நடனமிடு மயின்மீது வந்தெமது சிறைவிடுத் தாளுமையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி பேரில் சிறைவிடு பதிகம்

செங்கமல வாவிசூழ் வெருகறனில் வாழ்ந்திடுஞ் சிங்கார வடிவேலனே.
அந்திசந்தியு முனதுபாத கமலத்தினை அருச்சனைகள் செய்து வரவும்
ஆறெழுத்தோதிணாதன்மீது நீறணியு மடியார் பக்கலின் சேரவும்
சந்ததமு மெமதுநா முருகவேளென்னுமொழி தன்னை மறவாது சொலவும்
சண்டனுறுகின்றபொழுதுங் கந்தனேயென்று சாற்றியென் கைகூப்பவும்
சிந்தைமகிழ் வோடுனதுசந்நிதியையிருகால் தினம் வலஞ் செய்து வரவும்
செந்தாமரைக் கழலை யென்றலை வணங்கவும் செவி யுனது புகழ்கேட்கவும்
சிந்தாகுலந் தீரவுங் கிருபைதந் தெமது சிறைவிடுவித் தாளுமையா
செங்கமல வாவிசூழ் வெருகறனில் வாழ்ந்திடும் சிங்கார வடிவேலனே.

மன்னுமடியார்க்குறும் வாதபித்தத்தினொடு மாருத சேடநோயும்
வஞ்சனையினால் வரும் பில்லிசூனியமேவல் வைப்பு முதலானவைகளும்
பன்னகமுதறி துட்ட செந்துக்களால் வரும் பாரதீ வினைகளெல்லாம்
பருதியைக் கண்டபனி போலகலவே கிருபை பாலித்திடுங் குழகனே
இந்நிலந் தன்னிலுன் பொன்னடிக் கேவல்செயு மெளியவர்க் கருள்செயாமல்
இன்னமிகு தாமதஞ் செய்திடுதல் நீதியோ வெழின்மருவு கூடனகரில்
தென்னவனெனப் பெயர்படைத்த முருகையனே சிறை விடுத் தாளுமையா
செங்கமல வாவிசூழ் வெருகறனில் வாழ்ந்திடும் சிங்கார வடிவேலனே.

பச்சைமான் மருகனே யஞ்செட்டெனச் சுருதி பகரட் சரங்களெல்லாம்
பாரின்மிசை யாறெழுத்துக் கிணையதாகவே பகரநா வருகுமோதான்
கொச்சைமகள் கொழுனனே குமரகுருபர முருக குழகனே யழகனேநீ
கோதிலா வாறெழுத் தோதியா னனுதினங் கும்பிட்டு நினைவணங்க
இச்சையுடன் வந்தெமக் கருள்புரிந் திடவேணு மிந்நேரந் தன்னிலே
எங்கணால் வர்க்கு மெய்திய விடரகற்றிட வெழுந்தருளி வரவேணு நீ
செச்சையணி செஞ்சரோருகபாத சீலனே சிறைவிடுத் தாளுமையா
செங்கமல வாவிசூழ் வெருகறனில் வாழ்ந்திடுஞ் சிங்கார வடிவேலனே.

அஞ்சுபூதியமதிற் றோன்று முலகினில் வாழு மடியவற்கருள்புரியவே
ஆறுமுகமோடவதரித்து வாவியினில் விளையாடியறு மாதர் முலையுண்டு
அஞ்சலிசெய் தேவர்துயர் நீக்கி வேல்வாங்கியே யருகினவ வீரர் சூழ
அழகுமயின் மீதிவர்ந்தேறி யவுணனை வென்று அரிதனக் கரசு நல்கி
மஞ்சுமிகு தேவகுஞ்சரிதனை மணந்து பின் வள்ளி நாயகியை வேட்டு
மானிலத்தினிலாறு தலமீது மன்பர்கள் மனத்தின் மீதும் மகிழ்வுடன்
செஞ்சரண் ஒலிக்கவிளையாடு முருகையனே சிறைவிடுத் தாளுமையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கமல வாவிசூழ் வெருகறனில் வாழ்ந்திடுஞ் சிங்கார வடிவேலனே.
பாவலர்க டுதிசெய்யும் அருணகிரி நாதனைப் பண்டுவந் தாண்டுகொண்டாய்
பாண்டிநா டதனிலே புலவர்பெருமானெனப் பகரரிய பேர் படைத்தாய்
காவலனெனா மதுரை தன்னிலரசுரிமையைக் கைக்கொண்டு புவியை யாண்டாய்
கடல்சுவற வேல் விடுத்தாய் செண்டினான் மேருகர்வத்தை நீக்கிவைத்தாய்
மேவலர்களைச் செற்று வானாடு குடியேற்றி வித்ததல்லாம லிந்த
மேதினியி னின்னடியர் பகைவற்கு யமனெனா மிக்கதுயர் நீக்கி வைப்பாய்
சேவலங்கொடியனே யிப்பெருமை யுள்ளநீ சிறைவிடுத்தாளுமையா
செங்கமல வாவிசூழ் வெருகறனில் வாழ்ந்திடுஞ் சிங்கார வடிவேலனே.

அய்யனே யெங்களைச் சிறையினான் மீட்டெடுக்கா திருக்கின்றதேனோ
அழகான மஞ்ஞையருகில்லையோ தேவியரோடன்பு மொழி பகர்கிறீரோ
துய்யமலைகளினின்று விளையாடுகின்றீரோ தொண்டர் தம் புடைசென்றீரோ
சுடர்மஞ்சமீதி லறிதுயிலோ வலாதுமது சொர்ணமன முருகவிலையோ
மெய்யடியவர்க் கிடர்செய் பகைவர்மேல் வைத்திடும் மிக்க கவனத்தினாலோ
வேளைக்கிரங்காது தாமதஞ் செய்கிறீர் வேறு கவனத்திருந்தாற்
செய்யவேறனை விடுத்தாலு மெங்கட் குற்ற சிறைவிடுத் தாளு மையா
செங்கமல வாவிசூழ் வெருகறனில் வாழ்ந்திடும் சிங்கார வடிவேலனே.

## கலித்துறை

சங்கினஞ் சூற்கொண்டுளைந்தீனு முத்தைச் செந்தாமரை வாழ்
செங்கழலன்னங்க டம்முட்டையென்று பின் சேர்த்து வைக்குந்
துங்கமிகுந்த வெருகலில் வாழ் சிவ சுப்ரமண்யா
இங்குவந்தெங்கள் சிறைமீட்கவேண்டு மெழுந்திருமே.

அன்னங்கள் வாழுஞ் செந்தாமரை வாவியு மண்ட முட்டும்
பொன்னின் நறுமலர்ப் பூஞ்சோலைகளும் பொருந்தி யெழில்
துன்னும் வெருகல்தனில் வாழ்ந்திடுஞ் சிவசுப்ர மண்யா
மின்னும் மயிலின் மிசைவந்தெமைச் சிறைமீட்குதுமே.

கையாறுடன் கழலாறோடிக் கீதங் கழற நற்றேன்
செய்யார் மலரினின்றும் வீழ் வெருகற் சிவகுருவே
மையார் விழி வள்ளிநாயகிக்காய் வனமார்க்கஞ் சென்றாய்
ஐயாவெமைச் சிறைமீட்பதுமக் கோரரிதல்லவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ முருகன் கோவில்
# திருக்கோணமலை

திருக்கோணமலைப் பட்டினத்தில் பத்தாம் குறிச்சி என்ற இடத்தில் இந்தக் கோவில் இருக்கின்றது. குருகுலமக்கள் நெருக்கமாகக் குடியிருக்கும் பத்தாம் குறிச்சியில் கடல் அலைகள் தவழ்ந்து வந்து முருகன்கோவிலைத் தொட்டுச்செல்லும் அளவுக்குக் கடற்கரை ஓரமாக இந்தக் கோவில் அமைந்திருக்கின்றபோதிலும், கோவிலுக்குக் கடலால் எந்தவிதமான சேதமும் ஏற்படுவதில்லை. இதுவும் அதிசயந்தான். இந்தக் கோவிலில் இருந்து அரைக்கில்லோற்மீற்றர் தூரத்தில் கடலால் பிரிக்கப்பட்டுக் கோணேசர் கோவில் காட்சியளிக்கின்றது.

இன்று கற்கோவிலாகக் கட்டப்பட்டிருக்கும் இவ்வலாயம் சுமார் நூறு வருடங்களுக்கு முன் ஓலைக்கொட்டிலாக இருந்தது. அக்காலத்தில் இந்த இடத்தில் தொழில் செய்த மீனவர்கள் தங்களின் தொழிற் பாதுகாப்புக்காகவும், கடலில் சென்று தொழில் செய்யும்போது ஆபத்துக்கள் ஏற்படாதிருப்பதற்காகவும் முருகனை நினைத்து இந்த இடத்தில் ஒரு கொட்டில் கோவில் கட்டி அதில் வேல் ஒன்றை வைத்து பூசை பிரார்த்தனை செய்து தொழிலுக்குச் சென்று வந்தார்கள். தொழிலினால் நல்ல ஊதியம் கிடைத்ததால், வருடத்தில் ஒரு நாள் இந்த இடத்தில் பெரிய மண்டபம் அமைத்து மக்களுக்குச் சிறந்தமுறையில் அன்னதானம் செய்து வந்தார்கள். இதனைப் பேரமுது என்று கூறுவார்கள். காலஞ்செல்லச் செல்ல தாங்கள் வைத்து வழிபடும் வேல்தான் தங்களுக்கு எல்லா நன்மைகளையும் செய்கின்றது என்ற நம்பிக்கை வலுப்பெற்றதால் அந்த வேலுக்கு வல்லிபுரம் என்பவரைப் பூசகராக நியமித்து நித்திய பூசையைச் செய்து வந்தார். மக்களுக்குப் பக்தியும் விஸ்வாசமும் வளர வளரக் கொட்டில் கோவிலைப் பெரிதாகக் கட்டிச் சைவக் குருக்களைக் கொண்டு நித்திய பூசை செய்வித்து வந்தார்கள். வருடா வருடம் நடைபெற்றுவந்த அன்னதானமும் மிகச் சிறப்பாகக் பெருவிழாபோல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்றது. இந்த அன்னதானத்தின்போது திருக்கோணமலையிலுள்ள பிராமணர்களையெல்லாம் அழைத்துத் தானம் வழங்கி அன்னதானத்தை விரிவாகவும், விசேஷமாகவும் செய்துவந்தார்கள். மேலும் மேலும் இந்த வேல்முருகன்மீது மக்களுக்குப் பக்திபெருகிய காரணத்தினால் கற்கோவில் கட்டவேண்டுமென்ற எண்ணமும் உறுதிப்பட்டு வந்தது. இதனால் இந்த இடத்தில் குடியிருக்கும் மக்கள் ஸ்ரீமுருகன் ஆலய பரிபாலன சபையை அமைத்து நிதி திரட்டி 1952ஆம் ஆண்டு கோவில் திருப்பணியை ஆரம்பித்து நிறைவேற்றி 1956ஆம் ஆண்டு கும்பாபிஷேகத்தைச் செய்வித்தார்கள். கும்பாபிஷேகத்தின்பின் பிராமணக் குருக்களைப் பூசைசெய்ய ஏற்பாடு செய்தார்கள். இப்போதும் அவ்வாறே நடைபெற்று வருகின்றது.

அழகிய தூபியையுடைய கருவறையில் வேல் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. வள்ளி தெய்வயானை சமேத சண்முகப் பெருமானும், முத்துலிங்கசுவாமி, நந்தகோபாலர், மகாமண்டபத்தில் எழுந்தருளியுள்ளார்கள். பிள்ளையார் சிலாவிக்கிரகமும் அங்கு வைக்கப்பட்டிருக்கின்றது. காலை, மாலை இரண்டு கால நித்திய பூசைகள் நடைபெற்றுவருகின்றன. கும்பாபிஷேக தினத்தை முதல் நாளாகக் கொண்டு வைகாசி மாதத்தில் பத்து நாட்கள் அலங்கார உற்சவம் நடைபெறுகின்றது. உற்சவ முடிவின் மறுநாள் அன்னதானம் நடைபெறுகின்றது. அன்னதானத்தினால் உருவாகிய ஆலயத்தில் தொடர்ந்தும் அன்னதானம் நடைபெற்று வருவது போற்றத்தக்கதே. திருவெம்பாவை, நவராத்திரி, திருக்கார்த்திகை, சித்திரா பூரணை போன்ற காலங்களில் விசேட பூசை விழாக்களும் நடைபெற்று வருகின்றன. மகாமகத்தின்போது திருக்கோணமலையிலுள்ள பல ஆலயங்களிலுமிருந்து சுவாமிகள் எழுந்தருளிச் சென்று தீர்த்தக் கடற்கரையில் எல்லாச் சுவாமிகளோடும் நின்று மக்கள் திரளாக வந்து தீர்த்தமாடுவார்கள். இத்தினத்தில் ஸ்ரீமுருகனும் சென்று தீர்த்தமாடுவார். இதுவும் திருக்கோணமலையில் நடைபெற்றுவருகின்ற பக்திபூர்வமான சமயப் பெருவிழாவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கிருஷ்ணன் கோவில்

திருக்கோணமலைப் பட்டினத்தில், புகையிரத நிலையத்திற்குச் சமீபமாக, வீரகத்திப் பிள்ளையார் கோலுக்கருகே இவ்வாலயம் இருக்கின்றது. சைவாலயங்கள் நிறைந்த திருக்கோணமலையிலுள்ள ஒரேயொரு கிருஷ்ணன் கோவில் இதுவாகும். வீரகத்திப் பிள்ளையார் கோவில் வரலாற்றில் கூறப்பட்டுள்ள திரு. பெரியராசகோன் முதலியாருடைய தருமக் காணியில் (வீரகத்திப்பிள்ளையார் கோவில் நிலம்) திரு. மாரிமுத்து நாயக்கரும், திருவிளங்க நகரத்தாரும் (வாணிபர்) ஆரியநாட்டாரும், ஊரவர்களும் கூடிப் பெருமாள்கோவிலைக் (கிருஷ்ணன்கோவில்) கட்டினார்கள். 1825ஆம் ஆண்டில் சுற்றுமதிலும் அக்கிரகாரமும் கொண்டதாக இவ்வாலயம் அமைக்கப்பட்டது. கற்பக்கிரகம், அர்த்தமண்டபமும் கருங்கற் திருப்பணியாக அழகிய தூபியுடன் கட்டப்பட்டிருக்கின்றது.

திரு. மணிமுத்துநாயக்கர் என்பவர் வட இந்தியாவைச் சேர்ந்த வைஷ்ணவர். இலங்கையைப் பிரித்தானியர் ஆளத் தொடங்கிய ஆரம்பக் காலத்தில் அவர்கள் வைத்திருந்த தரைப்படையில் வட இந்தியர்களைக் கொண்ட படைப் பிரிவொன்றிருந்தது. (இவர்களைத் தலைப்பாக்கட்டிகள் என்று அக்காலத்தவர்கள் கூறுவார்கள்.) இந்தப் படையைச் சேர்ந்தவர்கள் வைஷ்ணவர்கள். இவர்கள் தங்களுக்கென்று ஒரு வழிபாட்டுத் தலத்தை அமைக்க முற்பட்டார்கள். அந்த நாட்களில் தற்போது கிருஷ்ணன்கோவில் இருக்குமிடத்தில் மூன்றுநாட்களாக ஆகாயத்தில் ஒரு பெருமாள் (கருடன்) வட்டமிட்டுக்கொண்டிருப்பதை அவதானித்தார்கள்! கருடன் பெரியபெருமாளாகிய மகாவிஷ்ணுவின் வாகனம். கருடாள்வாரென்று வைஷ்ணவர்கள் அதனை வழிபடுவார்கள். ஆதலால் கருடன் வட்டமிட்ட அந்த இடத்தைத் தமது வழிபாட்டுத் தலமாக பெருமாளே காண்பித்ததாகக் கருதினார்கள். அந்த இடத்தை வீரகத்திப் பிள்ளையார் கோவில் உரிமையாளர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார்கள். அந்த நாளில் இதைப்பற்றி எழுதப்பட்ட சாசனமொன்று இன்றுமிருக்கின்றது. இவ்வாறு பெற்றுக்கொண்ட நிலத்தில் திருவிளங்க நகரத்தாரையும், ஆரியநாட்டாரையும் சேர்த்து கூட்டாக இந்த ஆலயத்தை அமைத்தார்கள். கருங்கற் திருப்பணியினாலான கற்பக்கிரகமும், அர்த்தமண்டபமும் அமைப்பதற்கு இந்தியாவிலிருந்து கருங்கற்கள் கொண்டுவரப்பட்டதாம். திருக்கோணேஸ்வரத்தின் வரலாற்றில் இராமேஸ்வரம் கோவில் அமைப்பதற்கு திருக்கோணமலையிலிருந்தும் கருங்கற்கள் எடுத்து செல்லப்பட்டதாக ஒருசெய்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கின்றது. அப்படியிருக்க இந்தக் கிருஷ்ணன் கோவில் கட்டுவதற்கு இந்தியாவிலிருந்து கற்கள் கொண்டுவரப்பட்டதற்கும் ஒரு காரணம் உண்டு. இராமபக்தனாகிய அனுமாரால் தீவைக்கப்பட்டு எரிந்த இலங்கையிலுள்ள கற்கள் சுடுபட்ட கற்கள் என்ற காரணத்தால், வைஷ்ணவ பக்தர்கள் இந்தியாவிலிருந்து கற்களைக் கொண்டு வந்தார்களாம். அந்தக் கற்களால் கட்டப்பட்ட கோவில் இன்றுமிருக்கின்றது.

வடஇந்தியப் படைவீரர்கள் ஆலயமைப்பதற்கு உற்றதுணையா யிருந்தவர்கள் திருவிளங்க நகரத்தாரும், ஆரியநாட்டாருமாவர். இந்தப்படையினர் இந்தியாவுக்கு மீண்டு செல்ல வேண்டி நேர்ந்ததால், அக்காலத்தில் ஆரியநாட்டாரிடமும், திருவிளங்க நகரத்தாரிடமும் ஆலயப் பராபரிப்பை ஒப்படைத்துச் சென்றுவிட்டார்கள். அதன்பின் இவ்வாலயத்தில் பூஜை செய்துகொண்டிருந்த திரு. இரகுஐயருடன் சேர்ந்து ஆரியநாட்டாரும், திருவிளங்க நகரத்தாரும் 1837ஆம் ஆண்டில் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். அந்த ஒப்பந்தத்தின்படி இரகுஐயர் பூசைப்பொறுப்பையும், மேலதிக அதிகாரத்தையும் பெற்று ஆலயத்தை நடத்திவந்தார்.

ஸ்ரீஇரகு ஐயருக்குப்பின், ஸ்ரீமுத்துச்சாமிக் குருக்களும், அதன்பின் ஸ்ரீசுப்பையாக் குருக்களும் பூசைசெய்துகொண்டு வந்தார்கள். இரகுஐயருடைய மகள் செல்வி தர்மசம்வர்த்தனி அம்மாளை திரு. கா. பஞ்சநதக் குருக்கள் திருமணம் செய்தார். அதனால் உரிமைபிரகாரம் ஸ்ரீபஞ்சநதக் குருக்கள் இவ்வாலயத்தில் பூசைசெய்துவந்தார். பஞ்சநதக் குருக்களுக்குப்பின் அவருடைய புதல்வர் சிவஸ்ரீ ப. யோகீஸ்வரக் குருக்கள் ஆலயப் பொறுப்பையேற்று பூசைசெய்துவந்தார். இவர் சிறந்த ஞானஸ்தர். ஆகையால் இவருடைய காலத்தில் ஆலயம் சிறந்த நிலையில் இருந்து வந்தது. அவருக்குதவியாக ஸ்ரீபாலகிருஷ்ண ஐயரும் பூசைசெய்து வந்ததாக அறியக்கிடக்கின்றது. யோகீஸ்வரக் குருக்களுடைய மறைவுக்குப் பின் அவருடைய மகள் செல்வி சி. கோகீஸ்வரக்குருக்களுடைய பொறுப்பில் ஆலய நிர்வாகம் இருந்துவருகின்றது.

ஆதியிலமைக்கப்பட்ட ஆலயத்தில் காலத்திற்குக் காலம் திருப்பணிகள் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. ஆரியநாட்டாரும், திருவிளங்க நகரத்தாரும் மகாமண்டபம், ஸ்நபன மண்டபம், ஸ்தம்பமண்டபம், வசந்தமண்டபம் என்பனவற்றைக் கட்டியிருக்கின்றார்கள். இரண்டாவது உலகயுத்தத்தின் தாக்கத்தால் ஆலயம் பராபரிப்பிழந்திருந்தபோதிலும், நித்யபூசைகள் நடைபெற்றுவந்தன. 1941ஆம் ஆண்டு ஆலயத்தில் சில திருப்பணிகளைச் செய்து கும்பாபிஷேகம் செய்திருந்தார்கள். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ கிருஷ்ணன் கோவில்

1942ஆம் ஆண்டில் ஜப்பானியருடைய குண்டு வீச்சினால் ஆலயப் பராபரிப்புச் சீர்குலைந்துவிட்டது. பின்னர் 1980ஆம் ஆண்டு பல திருப்பணிகள் செய்யப்பட்டு புனருத்தாரண மகாகும்பாபிஷேகம் நடைபெற்று இன்று சிறப்பாக ஆலயப் பூசை விழாக்கள் நடைபெற்றுவருகின்றன.

அழகிய விமானத்தோடு விளங்கும் கருவறையில் ருக்குமணி, சத்தியபாமா சமேதராக ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றார். அர்த்தமண்டபத்தில் ருக்குமணி, சத்தியபாமா சமேதராக ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவின் எழுந்தருளி விக்கிரகமும், வரதராஜபெருமாள், நாகதம்பிரான் என்பவர்களுடைய சிலாவிக்கிரகமும் வைக்கப்பட்டிருக்கின்றது. ஸ்நபனமண்டபத்தில் ஸ்ரீநாராயணமூர்த்தியும், ஸ்தம்பமண்டபத்தில் கருடாள்வாரும், ஸ்ரீராமானுஜரும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளனர்.

காலைச்சந்தி, மாலைச்சந்தியாகிய இரண்டுநேரமும் நித்தியபூசைகள் நடைபெற்றுவருகின்றன. ஆவணிமாதத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்ற தினத்தை முதல்நாளாகக்கொண்டு பத்து நாட்கள் அலங்கார உற்சவம் நடைபெறுகின்றது. வைகாசித் திருவோணத்தில் கம்சன் கதை படிக்கப்பட்டு கிருஷ்ணபரமாத்மாவுக்கு உற்சவம் நடத்துவார்கள். வைகாசித்திருவோணத்தை கிருஷ்ணபரமாத்மாவின் அவதாரத் தின விழாவாகவும், அதனையடுத்து வரும் ஐந்தாம் நாள் ருக்குமணி கல்யாண விழாவாகவும் ஆறாம் நாள் கம்சன்கதைவிழாவாகவும், ஏழாம் நாள் வாணாசுரன் போராகவும், பத்தாம் நாள் சத்தியபாமா கல்யாணவிழாவாகவும் அலங்கார உற்சவம் நடைபெற்றுவருகின்றது. ஆவணிமாத ஜென்ம அஷ்டமியன்று உறியடிவிழா சிறப்பாக நடைபெற்றுவருகின்றது. புரட்டாதிச் சனிவாரம் நான்கு நாட்களிலும், கார்த்திகை விளக்கீடன்றும் இரவில் விசேட திருவிழாவும், மார்கழி மாதத்தில் வைகுண்டஏகாதசி விழாவும் திருப்பாவை விழாவும், ஒவ்வொரு ஏகாதசியிலும் திருவிழாவும் இவ்வாலயத்தில் நடைபெற்றுவருகின்றது. இவ்வாலயத்தில் கடைசியாக நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் பின்னர் இவ்வாலயச் சூழலில் ஒருவகையான அருட்பிரகாசம் காணப்படுகின்றது. மக்களுடைய ஆதரவும் பெருகி வருகின்றது. விழாக்காலங்களில் சுவாமி இரண்டாவது வீதியில் திருவுலாச் செல்லக்கூடியதாக வீதியை தூய்மைப்படுத்துவதற்கு நிருவாகம் முன்வரவேண்டும். இவ்வாலயம் பற்றிய செய்திகளைத் தந்துதவிய செல்வி சி. யோகீஸ்வரக்குருக்கள் அவர்களுக்கு நன்றி உரியதாகுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உவர்மலைக் கோணேசபுரம் ஞான வைரவர் கோவில்

திருக்கோணேசப் பெருமான் மகா சிவராத்திரிக்கு அடுத்த நாள் மூன்று நாட்களுக்கு திருக்கோணமலைப் பட்டினத்தையும் சூழலையும் சுற்றி திருவுலா வருவார். இதன் விரிவான வரலாற்றை இந்நூல் திருக்கோணேசர் கோவில் வரலாற்றில் காண்க.

உவர்மலையின் ஒரு பகுதியில் குடியேறிய சைவ மக்கள் கோணேசப் பெருமான் நகர்வலத்துக்குச் செல்லும் போது தமது குடியேற்றப் பகுதிக்கும் எழுந்தருளச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அவர்களின் வேண்டுகோள் நிறைவேறியதால் அவர்கள் அந்தப் பகுதிக்கு கோணேசபுரம் என்று பெயரிட்டுள்ளார்கள்.

இன்று ஞானவைரவர் ஆலயம் இருக்கும் இடத்தில் 1968ஆம் ஆண்டு ஒரு வேப்பமரத்தடியில் திரு.சதாசிவம் என்பவரும் குடும்பத்தினரும் ஒரு திரிசூலத்தை வைத்து வழிபட்டு வந்தார்கள். பின்னர் 1971ஆம் ஆண்டு செல்வநாயகம் என்பவர் சிறிய கொட்டில் கோயில் அமைத்து அதில் அந்தத் திரிசூலத்தை வைத்து ஆதரித்து வழிபட்டு வந்தார்.

1975ஆம் ஆண்டு கோணேசபுரம் இளைஞர் கழகம் வள்ளுவர் வட்டம் என்னும் இரண்டு தொண்டர் அணிகளும் கோணேசர்புர மக்களின் உதவியுடன் கொட்டில் கோவிலை அகற்றி கற்பக் கிரகம் – அர்த்த மண்டபங்களை கல்லினால் கட்டி திரிசூலத்தை மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்து வழிபாடு நடாத்தி வந்தார்கள். இளைஞர்களின் விடா முயற்சியும் மக்களின் ஆதரவும் வலுவடையவே ஞானவைரவப் பெருமானின் திருவருளால் தீர்த்தக் கிணறும் மகா மண்டபமும் சேர்ந்த மடாலயத் திருப்பணி 1992ஆம் ஆண்டு நிறைவேறியது.

1995ஆம் ஆண்டு ஆதியில் வைத்து வழிபட்டுவந்த திரிசூலத்தை தலவிருட்சமாகிய வேப்பமரத்தடியில் பிரதிஷ்டை செய்து கற்பக் கிரகத்தில் ஞானவைரவர் சிலாவிக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்து பிள்ளையார் பால முருகன் சிலாவிக்கிரகங்களை மகாமண்டபத்திலும் நாகதம்பிரானுக்குத் தனிச்சந்நிதி அமைத்து இரட்டை நாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலாவிக்கிரகத்தை அச்சந்நிதியிலும் பிரதிஷ்டை செய்து 06-02-95 இல் மகாகும்பாபிஷேகத்தை நிறை வேற்றினார்கள்.

வடக்கு வீதியில் புதிதாக வசந்தமண்டபம் கட்டி உற்சவ மூர்த்தியாகிய ஞானவைரவரை பஞ்சலோகத்தில் செய்து அதில் பிரதிஷ்டை செய்தும் சண்டேஸ்வரப் பெருமானுக்குத் தனிச் சந்நிதி அமைத்து சண்டேஸ்வரரின் சிலாவிக்கிரகத்தை அதில் பிரதிஷ்டை செய்தும் 19-06-97 இல் இரண்டாவது கும்பாபிஷேகம் இனிது நிறைவேறியது. ஆலயத்துக்கு மணிக்கோபுரமும் சுற்றிமதிலும் கட்டப்பட்டிருக்கிறது. மடைப்பள்ளி களஞ்சிய சாலை, காரியாலயமும் இங்கு காணப்படுகின்றது.

இவ்வாலயத்தில் நித்திய பூசை காலை, மாலை, வேளைகளில் நடைபெற்று வருகின்றது. தைப்பூசம், மகா சிவராத்திரி சித்திரா பூரணை, ஆடிப்புர ஆவணிச் சதுர்த்தி, நவராத்திரி கந்த சஷ்டி, கார்த்திகை விளக்கீடு, திருவெம்பாவை முதலிய விஷேட தினங்களில் சிறப்பான பூசைகள் நடைபெற்று வருகின்றன. சிவஸ்ரீ ஆனந்தசிவம் ஐயர் ஆலயப் பூசைகளைச் செய்து வருகிறார். அவருடைய பக்தி பூர்வமான பூஜைகள் ஆலய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாயிருக்கின்றது.

ஆனி உத்தரத்தைத் தீர்த்த தினமாக நிர்ணயித்து பத்துத் தினங்கள் அலங்கார உற்சவம் நடத்தவும் தீர்மானித்துள்ளார்கள். திருக்கோணமலைப் பட்டணத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள இவ்வாலயத்தை உவர்மலை மத்திய வீதி வழியாகச் சென்று கோணேசபுரச் சந்தியிலிருந்து செல்லும் கிளைப்பாதை வழியாகச் சென்றடையலாம்.

திரு.கி.இராமச்சந்திரனைத் தலைவராகக் கொண்ட ஞானவைரவர் ஆலய பரிபாலன சபை இவ்வாலயத்தைப் பரிபாலனம் செய்து வருகின்றது. இவ்வாலயத்தின் சார்பில் அறநெறிப் பாடசாலை ஞாயிறுதோறும் நடைபெற்று வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மன்
## ஊஞ்சல்பாடல்

தார்சிறந்த முத்ததனாற் கால் நாட்டி
தனிப்பவளக் கொப்பதனாற் கொடுங்கை மாட்டி
வார்சிறந்த வைரத்தாற் பலகை பூட்டி
வண்ணநவ மணிமாலை வயங்கச் சூட்டி
ஏர்சிறந்த சித்திரங்க ளெங்குந் தீட்டி
இலகுதிருப் பொன்னூசல் சேர்வை காட்டி
சீர்சிறந்த மாதவனா ராடீரூஞ்சல்
ஸ்ரீகிருஷ்ணபர மாத்மனே யாடீரூஞ்சல்.

வச்சிரமணித் தங்கத்தாற் கால்கள் நாட்டி
வைரங் கோமேதகத்தாற் பலகை பூட்டி
பச்சைமணி மரகதத்தாற் கொடுங்கை மாட்டி
பசும்பொன்னின் சங்கிலியின் வடங்கள் பூட்டி
உச்சிதமாய் வானவர்கள் சமைத்த வூஞ்சல்
உலகளந்த வாமனனார் உண்மையாகச்
செச்சைமணி மாயவனா ராடீரூஞ்சல்
ஸ்ரீகிருஷ்ணபர மாத்மனே யாடீரூஞ்சல்.

சீர்மருவு மாமறைகள் கால்களாக்கிச்
சிறந்தவுயர் சாத்திரத்தைப் பலகையாக்கித்
தூமருவு புராணமதைக் கொடுங்கையாக்கிச்
சொல்லரிய பல்கலைகள் சங்கிலிகளாக்கிப்
பூமகளும் நிலமகளும் பொற்பே யோங்கப்
பொன்னுலகர் செய்தளித்த பொன்னினூஞ்சல்
தேமருவு வண்டுளப மாலை பூண்ட
ஸ்ரீகிருஷ்ணபர மாத்மனே யாடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மன் ஊஞ்சல்பாடல்

அணியணியாய்த் தேவர்கள்வந் தடிகொண்டாட
அரம்பையரும் அமரர்களும் மகிழ்ந்து பாட
கணிகையர்கள் கொலுமுகத்திற் களித்தேயாட
கன்னியர்கள் இருமருங்குங் கவரிபோட
பணிவுடனே கின்னரர்கள் யாழில் மீட்ட
பன்னிருவ ராழ்வார்கள் பதத்தினாட
திணிவு பெருந் திருமார்பா ஆடீரூஞ்சல்
ஸ்ரீகிருஷ்ணபர மாத்மனே யாடீரூஞ்சல்.

மாமறையோர் மாமுனிவோர் மகிழ்ந்து போற்ற
வானவர்கள் பூமாரி பொழிந்து ஆர்ப்பச்
சேமமுடனே முரசஞ் சிறக்கச் சாற்ற
தெரிவையர்கள் திருவருளாற் சிறந்து போற்ற
பூமகளும் பார்மகளும் மருங்கில் வாழ்த்தப்
பொன்னடியி லடியார்கள் பொழிந்து வாழ்த்த
தேமருவு தாமமெழில் மார்பிலங்க
ஸ்ரீகிருஷ்ணபர மாத்மனே யாடீரூஞ்சல்.

இந்திரரும் வானவரும் வடந்தொட் டாட்ட
இறையவரும் மறையவரும் வடந்தொட் டாட்ட
சந்திரருஞ் சூரியரும் வடந்தொட் டாட்ட
தானவரும் வானவரும் வடந்தொட் டாட்ட
விந்தைமிகு தேவரெலாம் வடந்தொட் டாட்ட
கொந்தலங் குழன்மடவார் வடந்தொட் டாட்ட
சிந்தைமகிழ் தேவியர்கள் மார்பிலங்க
ஸ்ரீகிருஷ்ணபர மாத்மனே யாடீரூஞ்சல்.

பொன்னணிந்த நவமணிமா மாலையாட
புகழ்பெரிய வண்டுளப மாலையாட
வண்ணமுள்ள சந்திரவட்டக் குடைகளாக
வாகுவலயங்களுமே யோங்கியாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னுமணி யணியாடை பதக்கமாட
மகரமணிக் கண்டிகையாட மாலையாட
மன்னுமெழிற் திருமலையிற் சிறந்தேயோங்கும்
ஸ்ரீகிருஷ்ணபர மாத்மனே யாடீரூஞ்சல்.

சதுர்மறையைத் திருடியவன் தன்னை வென்றோன்
சடக்குமிகு ராவணனைச் சமரில் வென்றோன்
மதிகெட்ட இரணியனைக் கிழித்த சிங்கம்
மகிழ்வுற்றுப் பிரமனையுங் காத்த மூர்த்தி
கதிகலங்க அசுரர்தமை வதைத்த கோவே
கன்னியர்கள் துகில்கவர்ந்த கள்ள மாயன்
சதுரிலகுங் கஞ்சன்தன்னைக் கொன்ற கண்ணன்
ஸ்ரீகிருஷ்ணபர மாத்மனே யாடீரூஞ்சல்.

சங்கரனு மைங்கரனும் மகிழ்ந்து வாழ்த்த
சதுர்முகனும் அறுமுகனும் மகிழ்ந்து போற்ற
துங்கமுள்ள தவசித்தர் துதித்துப் போற்ற
சொல்லு பதினெண்கணமுந் தொழுது போற்ற
எங்குமுள்ள வண்ணத்தோர் ஏத்திப் போற்ற
ஈராறு ஆழ்வார்கள் இணங்கிப் போற்ற
பொங்குமெழில் தங்குதிரு மலையில் வாழும்
ஸ்ரீகிருஷ்ணபர மாத்மனே யாடீரூஞ்சல்.

மலர்மேவு திருமகளோர் பக்கல் மேவ
மாசற்ற நிலமகளோர் பக்கம் மேவ
நலமேவு கவுத்துபமும் மார்பிலங்க
நாதமிகு பாஞ்சசன்யம் கையிலோங்க
வலமேவும் ஆழியதும் கையிலோங்க
வங்கமெறி கடல் துறந்து வந்த மாயன்
சிலைமேவும்மலர்க்கரத்தா ராடீரூஞ்சல்
ஸ்ரீகிருஷ்ணபர மாத்மனே யாடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனீஸ்வரன் கோயில்

இந்த ஆலயம் திருக்கோணமலையிலுள்ள ஒரேயொரு கோவிலாகிய ஸ்ரீகிருஷ்ணன் கோவிலுக்கு எதிரே, வீரகத்திப் பிள்ளையார் கோவிலுக்குச் சமீபமாக திருக்கோணமலைப் புகையிரத நிலையத்திலிருந்து சிறிது தூரத்தில் மடத்தடியில் இருக்கின்றது. இவ்வாலயம் 1885ஆம் ஆண்டளவில் கட்டப்பட்டது. ஸ்ரீகிருஷ்ணன் கோவில் ஆதீனகர்த்தராயிருந்த சிவஸ்ரீ கா. பஞ்சனதக் குருக்களுக்கும், அவருடைய மனைவியார் தர்மசம்வர்த்தனி அம்மாளுக்கும் கிரகதோஷம் காரணமாக சிக்கலான சுகவீனங்கள் ஏற்பட்டிருந்ததாம். சனீஸ்வரனுடைய தோஷத்தை நீக்குவதற்காக ஸ்ரீபஞ்சனதக் குருக்களும், அவருடைய மனையாரும் இவ்வாலயத்தைக் கட்டினார்கள்; கர்ப்பக்கிரகத்தையும் அர்த்த மண்டபத்தையும் கட்டிமுடித்து இந்தியாவிலிருந்து கருவறைக்குரிய சிலாவிக்கிரகத்தையும், எழுந்தருளி விக்கிரகத்தையும் கொண்டுவந்து இவ்வாலயத்திற் பிரதிஷ்டைசெய்து பூஜை வழிபாடுகளை நடத்திவந்தார்கள்.

இவர்களுக்கேற்பட்ட நோய் துன்பங்கள் நீங்கிவிட்டபடியால் நம்பிக்கைகொண்ட பொதுமக்களும், தங்கள் கஷ்டதுன்பங்கள் நீங்குவதற்காக இவ்வாலயத்தில் வழிபாடு செய்யத் தொடங்கினார்கள். மக்களுடைய ஆதரவு பெருகப் பெருக ஆலயமும் பெரிதாகக் கட்டப்பட்டது. தெரிசன மண்டபம் பெரிதாகக் கட்டப்பட்டிருக்கின்றது. இவ்வாலயம் கட்டப்பட்ட காலத்தில் இதனைச் சூழவுள்ள இடங்களெல்லாம் தமிழ் மக்களே வாழ்ந்திருந்தார்கள். இதனால் மக்களுடைய ஆதரவும் ஆலயத்திற்கு இருந்துவந்தது. கற்கோவிலாகவே கட்டப்பட்ட இவ்வாலயம் இன்று நல்ல முறையில் பரிபாலிக்கப்பட்டு வருவதோடு மக்களுடைய ஆதரவும் பெருகிக்கொண்டிருக்கின்றது.

திருக்கோணமலையை சிவபூமியென்று சொல்லலாம். ஆலயங்கள் அனேகமுண்டு. சிவன், சக்தி, முருகன், பிள்ளையார் என்பவர்களுக்கு எத்தனையோ கோவில்கள் இருந்த போதிலும் இலங்கையிலுள்ள ஒரேயொரு சனீஸ்வரன் கோவில் இதுவாயிருப்பதால், புரட்டாதி மாதத்தில் இவ்வாலயத்தில் மக்கள் திரள் திரளாக வந்து எள்ளெண்ணெய் எரித்து வழிபாடு செய்வார்கள். மக்களுக்குத் துன்பங்கள் அதிகரிக்க, அதிகரிக்க சனீஸ்வர வழிபாடும் பெருகிக்கொண்டிருக்கின்றது. இவ்வாலயத்திற்குத் "தாண்டிமரம்" தலவிருட்சமாயிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். "தாண்டிக் காய்க்குள் சனியன் புகுந்ததுபோல" என்று பழமொழி சொல்லுவார்கள். தாண்டி மரத்திற்கும் சனிபகவானுக்கும் புராணசம்பந்தமான கதைகளுமிருக்கின்றன. இவ்வாலயம் கட்டப்பட்ட காலந்தொடக்கம் இந்தத் தாண்டிமரம் இருந்துவருகின்றதாம். சிவஸ்ரீ கா. பஞ்சநதக் குருக்களுக்குப்பின் அவர்களுடைய பரம்பரையினரால் பரிபாலிக்கப்பட்டுவந்த இவ்வாலயம் சிவஸ்ரீ. ப. யோகீஸ்வரக் குருக்களுக்குப்பின் அவருடைய மகள் செல்வி சி. யோகீஸ்வரக்குருக்களால் தற்போது பரிபாலனம் செய்யப்பட்டு வருகின்றது.

புரட்டாதிச் சனீஸ்வர விரத காலங்களில் இங்கு பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன. காலைச் சந்திப் பூசையோடு திருக்கதவு திறந்தால் இராப்பூசைவரையும் தொடர்ந்து பூசைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும். ஏராளமான பக்தர்கள் வந்துகூடி வழிபாடு செய்கின்றார்கள். இரண்டாவது உலக மகா யுத்தகாலத்திற்குமுன் ஒவ்வொரு சனிப் பிரதோஷத்திற்கும் விசேட அலங்காரப் பூசைகள் நடைபெற்று வந்தன. சகல பூசைகளையும் விழாக்களையும் முன்போலச் சிறப்பாகச் செய்வதற்காக விரைவில் இவ்வாலயம் கும்பாபிஷேகம் செய்யப்படவிருப்பதாக ஆலய ஆதீனகர்த்தா செல்வி சி. யோகீஸ்வரக் குருக்களவர்கள் கூறுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தெரு ஞான பைரவர் கோவில்

இவ்வாலயம் திருக்கோணமலைப் பட்டினத்தின் மத்தியில் அமைந்திருக்கிறது. பிரதான வீதியிலுள்ள விக்கினேஸ்வர மகா வித்தியாலயத்துக்கு அருகில் இவ்வாலயம் இருக்கின்றது.

சுமார் 150 வருடங்கட்கு உட்பட்ட காலப் பகுதியில் தோற்றுவிக்கப்பட்ட இவ்வாலயம் கடல் வணிகர்களின் காப்பிடமாக ஆரம்பகாலத்தில் இருந்தது. பருத்தித் துறையிலிருந்து கடல்மார்க்கமாகப் பண்டங்களை வத்தைகளிலும், உருக்களிலும் ஏற்றிவரும் வணிகர்கள் இவ்வாலயம் இருக்கும் இடத்துக்குச் சமீபமாகவுள்ள கடற்கரைத் துறைமுகத்தில் (றேகு–சுங்கப்பகுதி) ஆறுமாதகாலம் நங்கூர மிட்டுத் தங்கியிருப்பார்கள். அடுத்த ஆறுமாதகாதம் காலநிலை மாற்றம் காரணமாக இடமாற்றம் செய்து திருக்கோணமலைத் துறைமுகச் சுங்கப்பகுதியில் நங்கூரமிட்டுத் தங்கியிருந்து மீண்டும் இங்குள்ள பண்டங்களை ஏற்றிக் கொண்டு பருத்தித்துறைக்குச் செல்வார்கள். இந்த வணிகர்கள் தங்கள் வத்தைகள் உருக்களுக்கும், பண்டங்களுக்கும், கடற்பிரயாணத்துக்கும், காவல்தெய்வமாக இருந்து எங்களைக் காக்கவேண்டுமென்று நேர்த்திவைத்து, வைரவரை வழிபடுவதற்கு சூலத்தை வைத்து வழிபட்ட தொட்டில் கோவில்தான் இவ்வாலயம் என்று அறியக்கிடக்கிறது.

இங்குள்ள வணிகர்களுடன் பண்டமாற்று வியாபாரம் நடைபெற்ற இந்த இடத்தை இங்குள்ளவர்களே காலக்கிரமத்தில் வழிபாட்டுத் தலமாக மதித்துப் பயபக்தியுடன் பேணி வந்தார்கள். அக்காலத்தில் இவ்விடத்திலிருந்து அத்திமரத்தடியில் கொட்டில் கோவில் கட்டி பைரவ சூலத்தை வைத்து வழிபடத் தொடங்கினார்கள். வைரவ சுவாமியின் அற்புதச் செயல்களால் கவரப்பட்ட வணிகர்கள் பைரவருக்குக் கற்கோவில் கட்ட முற்பட்டார்கள். அவர்களுடைய விடாமுயற்சியால் தோன்றியதே இப்போதிருக்கும் கற்கோவில்.

கற்பகக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபங்களைக்கொண்ட இவ்வாலயத்தின் கற்பக்கிரகத்தின்மேல் விமானம் (தூபி) அமைக்கப்பட்டிருக்கிறது. கற்பக்கிரகத்தில் ஞானபைரவர் சிலாவிக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. மூலமூர்த்தி சதுர்ப்புஜங்களை உடையது. வலக்கரம் இரண்டிலும் உடுக்கும், சூலமும், இடக்கரம் இரண்டிலும் பாசமும் கபாலமும் காணப்படுகிறது. நான்கு வேதங்களாகிய நாய் வாகனத்துடன் காக்கும் கருணா மூர்த்தியாகக் காட்சி தருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருந்தெரு ஞான பைரவர் கோவில்

அர்த்த மண்டபத்தின் வலப்பக்கமுள்ள மேடையில் சூலமும், இடப்பக்கமுள்ள மேடையில் நாகதம்பிரானும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது.

மகாமண்டபத்தின் வலப்பக்கமுள்ள மேடையில் பிள்ளையாரும், இடப்பக்க மேடையில் வீரபத்திரரும், பத்திரகாளியின் தாமிர விக்கிரகத் திருவுருவமும் (எழுந்தருளி) பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது தலவிருட்சம் அத்தி.

நித்திய பூஜை ஒருநாளைக்கு ஒருதரம் மாலையில் நடைபெறுகிறது. வெள்ளி செவ்வாய்க் கிழமைகளில் காலையிலும், மாலையிலும், பூஜை நடைபெற்று வருகின்றது.

தைப்பூசம், சிவராத்திரி, வைகாசிப் பொங்கல், நவராத்திரி, திருவாதிரைக் காலங்களில் நைமித்திய பூஜைகள் அபிஷேசங்கள் ஆகியன சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

நவராத்திரி உற்சவ நிறைவுநாளின் விஜய தசமியன்று கும்பவிழாவும், வைகாசிப் பௌர்ணமியன்று பொங்கல் விழாவும் மிகச் சிறப்பாக நடைபெறுவதுண்டு.

ஸ்நபன அபிஷேகங்களை சிவாச்சாரியர்களாகிய பிரம்ம ஸ்ரீ யோகீஸ்வரக் குருக்களும், பிரம்ம ஸ்ரீ கு.சோமாஸ்கந்த ஐயரும் செய்துவந்தார்கள். அவர்களுடைய மறைவுக்குப்பின் வேதாகம மாமணி ஸ்ரீ.கோ.ரவிச்சந்திரக் குருக்களை வரவழைத்துச் செய்விக்கிறார்கள். ஏனைய பூசைகள் யாவும் வணிக பரம்பரையினரே செய்துவருகிறார்கள்.

ஆதி நாட்களில் வைரவிப் பிள்ளையின் மகன் விநாயக மூர்த்திச் சாமியார் பூசைகளை நடத்திவந்ததாகவும் அவருடைய சகோதரர் பரமுவும் ஆலயத்தைப் பரிபாலித்துவரும் காலத்தில் பரமுவின் மகன் இராசையா என்பவர். ஆகமமுறைப்படி பூசை செய்துவந்ததாகவும் அவரைத் தலைவராகக் கொண்டு சுப்பிரமணியம், சின்ன ராசா, நடராசா, கோணமலை, பசுபதிப்பிள்ளை என்பவர்கள் கோவிலைப் பரிபாலனம் செய்துவந்ததாகவும் இப்போது கோணமலை என்பவரின் மகன் வரதராசா பூசை செய்து வருவதாகவும் அறியக்கிடக்கின்றது. கோணாமலையின் மகன் தங்கவடிவேல் என்பவரும் இராசையாவின் மகன் சோமசுந்தரம் என்பவரும் ஆலய பரிபாலனத்தில் அக்கறை செலுத்தி வருகிறார்கள்.

ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்யப்படவிருப்பதாக அறிகிறோம். பக்தி மார்க்கத்தின் மக்கள் வழிபடப் பயன்படும் புனித ஆலயமாக அமைவதே மேன்மையானது. ஆகம முறைப்படி பூசைகள் ஒழுங்காக நடைபெற நிர்வாகம் கவனமெடுக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானவைரவர் கோவில் அன்புவழிபுரம்

திருக்கோணமலையிலிருந்து அனுராதபுரத்திற்குச் செல்லும் நெடுஞ்சாலையில் பட்டினத்திலிருந்து ஐந்து கில்லோமீற்றர் தூரத்தில் அன்புவழியுரம் என்ற குடியேற்றக் கிராமம் இருக்கின்றது. இலங்கை சுதந்திரமடைந்தபின் தோன்றிய சைவக்கிராமங்களில் இதுவுமொன்றாகும். 1952ஆம் ஆண்டில் மக்கள் இங்கு குடியேறினார்கள். குடியேறிய மக்கள் தில்லையம்பலப் பிள்ளையார் கோவிலைக் கட்டி வழிபட்டுவரும் காலத்தில் அன்புவழிபுரத்தின் வடக்குப்பக்கமாகக் குடியேறிய பலர் தாம் வசிக்கும் இடத்தில் ஒரு வைரவர் கோவிலைக் கட்ட முற்பட்டார்கள்.

அக்காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து திருக்கோணமலைக்கு விஜயஞ் செய்திருந்த குன்றக்குடி ஆதீனக் குருமகா சன்னிதானம், குன்றக்குடி அடிகளாரவர்கள் அன்புவழிபுரத்திற்கு வருகைதந்து இங்கு குடியேறியுள்ள மக்களை ஆசீர்வதித்து அவர்களுக்கு வழிபாட்டுஸ்தலம் இல்லாததை உணர்ந்து இந்த ஞானவைரவர் ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைத்தார். அதன்பின்னர் அங்கு அமைக்கப்பட்ட கொட்டிற் கோவிலில் அடிகளாரால் ஸ்தாபிக்கப்பட்ட சூலத்தை வைத்து மக்கள் வழிபட்டு வந்தார்கள். இக்கோவிலைக் கற்கோவிலாக அமைப்பதற்கு 1953ஆம் ஆண்டு தொடக்கம் திருப்பணிவேலைகளைச் செய்துகொண்டு வந்தார்கள். மக்களுடைய வசதியீனம் காரணமாக திருக்கோவிலமைக்கும் வேலை தாமதப்பட்டுக்கொண்டு வந்ததெனினும் மக்களின் விடாமுயற்சி கைகூடி 1980ஆம் ஆண்டு கோவிற் திருப்பணிவேலைகளை நிறைவேற்றி கும்பாபிஷேகத்தை நடத்தினார்கள். இப்போது மக்களுடைய ஆதரவால் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. ஆலயத்தின் கிழக்கே ஒரு குளம் காணப்படுகின்றது. மேற்கிலும், வடக்கிலும் மலைகளால் சூழப்பட்ட இயற்கைச் சூழல் இவ்வாலயத்தில் தெய்வீக நினைவை உண்டாக்கிக்கொண்டிருக்கின்றது.

கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபங்களைக் கொண்ட இவ்வாலயத்தின் கருவறையில் இரண்டடி உயரமான வைரவமூர்த்தி ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. வீதியில் நாகதம்பிரானுக்கு தனிப்பீடம் அமைத்திருக்கின்றார்கள். நாள்தோறும் மாலையில் நித்தியபூசையும், வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் விசேட பூசைகளும் நடைபெற்று வருகின்றன. கும்பாபிஷேக தினத்தை ஆரம்பமாகக் கொண்டு பத்து நாட்களுக்கு அலங்கார உற்சவமும் நடைபெறுகின்றது. நவராத்திரி, திருவெம்பாவை முதலிய விசேட காலங்களில் சிறப்பு வழிபாடுகளும் நடைபெற்றுவருகின்றன. ஆலயத்தைப் பராபரிக்கும் பரிபாலன சபையில் பெண்களும் பங்குபற்றித் தொண்டாற்றுவது போற்றத்தக்கதே. கோணேசப் பெருமானுடைய நகர்வலம் நடைபெறும்போது இந்தக் கோவிலுக்கும் பெருமான் எழுந்தருளுவார். அப்போது இங்குள்ள மக்கள் இவ்வாலயத்தில் கோணேசப் பெருமானைப் பயபக்தியோடு வரவேற்று வழிபாடுசெய்து பெருவிழாவாகக் கொண்டாடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோலை வைரவர் கோவில்

திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து நாலு கில்லோமீற்றர் தூரத்தில், பட்டினத்திலிருந்து நிலாவெளிக்குச் செல்லும் வீதியில் உப்புவெளிக் கிராமத்தில் இந்த ஆலயம் இருக்கின்றது. இந்த இடத்தைச் சோலையடி என்று கூறுவதால் இது சோலை வைரவர் கோவில் என்று பெயர் பெற்றது. இரண்டாவது உலக மகாயுத்த காலத்திற்குமுன் இங்கு துரோபதையம்மன் சடங்கும் நடைபெற்று வந்ததாம். பஞ்சபாண்டவர்கள் வனவாசம் செல்லும் பாரதக் கதை படிக்கப்பட்டு அதற்குரிய பூசைகளும் நடைபெற்று வந்ததாகக் கூறுகின்றார்கள். கோணேசர் கோவிலுக்கு எல்லைக்காவல் தெய்வமாக இருந்துவந்த இந்த வைரவரை நெடுங்காலமாக மக்கள் வழிபட்டு வந்திருக்கின்றார்கள்.

பண்டைக்காலத்தில் மண்சுவர் வைத்துக் கிடுகினால் வேயப்பட்ட சிறிய கோவிலாயிருந்தது. வைரவர் மூர்த்திகரம் நிறைந்தவராயிருந்திருக்கின்றார். மக்களுக்கேற்படும் நோய் துன்பங்களை நீக்கி கிராமத்திற்கே காவல்தெய்வமாக இருப்பவர் இந்த வைரவர். வழிப்போக்கர்கள் இந்த வைரவரை வழிபடாமல் பிரயாணத்தைத் தொடருவதில்லை. அவருடைய அற்புதங்களால் மக்கள் பயபக்தியோடு வழிபட்டு வந்திருக்கின்றார்கள். இரவில் அவருடைய நடமாட்டத்தைக் கண்டதாகவும், மக்களுக்கும், கிராமத்திற்கும் வந்த கேடுகளை வைரவர் நீக்கியதாகவும் மக்கள் கூறுகின்றார்கள். இந்த வைரவருடைய அற்புதங்களை அனுபவித்தவர் திரு. கதிர்காமத்தம்பி என்ற பக்தர். இவர் உப்புவெளிக் கிராமசபைத் தலைவராயிருந்தவர். வைரவர்மீது வைத்திருந்த பயபக்தியினால் இந்தக் கோவிலைக் கற்கோவிலாகக் கட்டுவதற்குப் பெரும் பாடுபட்டவர். முன்பிருந்த கொட்டிற்கோவில் பின்னர் சிறிய கற்கோவிலாகக் கட்டப்பட்டிருந்தது. அதனைப் புனருத்தாரணம் செய்து கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், வசந்தமண்டபங்களைக்கொண்ட பெரிய கோவிலாகக் கட்டி 1975ஆம் ஆண்டு மிகச் சிறப்பாகக் கும்பாபிஷேகம் செய்வித்தார். கருவறையில் வைரவர் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. பஞ்சலோகத்தினாலாக்கப்பட்ட எழுந்தருளி விக்கிரகம் அர்த்த மண்டபத்தில் வைத்துப் பூசை நடைபெற்று வருகின்றது. கும்பாபிஷேக தினத்தைத் தீர்த்த தினமாகக் கொண்டு அதற்கு முந்திய பத்து நாட்கள் அலங்கார உற்சவம் நடைபெற்று வருகின்றது. சுவாமி தீர்த்தமாடியபின் கிராமப் பிரதட்சணம் செய்து ஆலயத்தை அடைவார். நித்திய பூசைகள் இரண்டுகாலம் நடைபெற்று வருகின்றன. தைப்பொங்கல், வருடப்பிறப்பு வைகாசிப் பொங்கல் என்பனவும் விசேட பூசைகளாக நடைபெற்று வருகின்றன. கோணேசர் நகர்வலம் செல்லும்போது இவ்வாலயத்தில் நாகதம்பிரானுக்குத் தனிப்பீடம் அமைக்கப்பட்டிருக்கின்றது. மக்களுடைய ஆதரவோடு பெரியார் திரு. கதிர்காமத்தம்பியவர்களுடைய குடும்பத்தினர் இவ்வாலயத்தைப் பரிபாலித்து வருகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகதம்பிரான் கோவில் சேனையூர்

திருக்கோணமலை மாவட்டத்தில் கொட்டியாபுரப்பற்றில் சேனையூர்க் கிராமத்தில் இவ்வாலயம் இருக்கின்றது. முப்பது வருடங்களுக்குமுன் தோன்றிய இவ்வாலயம் இன்று மிகப் பிரசித்பெற்றதாக விளங்குகின்றது. நாகர் இனத்தைச் சேர்ந்தவர்கள் இலங்கையில் நாக வழிபாடுடையவர்களாக இருந்தார்கள் என்பது சரித்திர வரலாறு. உஷ்ணப் பிரதேசங்களில் சர்ப்பங்கள் நிறைய வாழ்கின்றன. இதனால் சர்ப்பங்களுக்கு ராஜாவாகிய நாகத்தை வழிபடும் வழக்கம் இங்கு இருந்துவருகின்றது. சேனையூரில் வாழ்ந்த மருதப்பர் சண்முகம் என்பவர் தெய்வ பக்தியிற் சிறந்தவர். தமது கிராமத்தின் காட்டுப் பகுதியில் ஓரிடத்தில் ஒரு பெரிய புற்று இருப்பதையும், அதில் நாகபாம்பு வாசம் செய்வதையும் அறிந்திருந்தார். தோட்டவேலை செய்து வாழ்ந்த அவர் இந்த நாகபாம்பின் மீது வைத்திருந்த பயபக்தியினால் தோட்டத்திற்குச் செலவுசெய்யும் பணங்களைச் சேர்த்து நாகதம்பிரானுக்குக் கோவிலொன்று கட்டினார். ஏதோ ஒரு அற்புத நிகழ்ச்சியால் பக்திகொண்ட சண்முகமென்பவர், சிலநாட்கள் வீட்டுக்கு வராமலே நாகதம்பிரான் கோவிலில் தங்கிவிடுவார். நாகதம்பிரானிடங்கொண்ட பிரேமையினால் தமது சொந்தப் பணத்தினால் கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், தெரிசன மண்டபங்களைக் கொண்டதாய் பெரிய கற்கோவிலொன்றைக் கட்டி கருவறையில் வெள்ளியால் செய்யப்பட்ட நாகதம்பிரானைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டுவந்தார். ஆலயச் சூழல் வெண்மணல் பரந்த விஸ்தாரமான அழகிய இடமாகக் காணப்படுகின்றது. சுற்றுப்புறமெல்லாம் மிகவும் சுத்தமாக வைக்கப்பட்டிருக்கின்றன. நாகராஜா தன்னிஷ்டம் போல் உலாவி வரக்கூடிய இடமாக இது காணப்படுகின்றது.

காலக்கிரமத்தில் இவ்வாலயத்தின் அற்புதங்கள் மக்களாலறியப்பட்டு அதனால் பொதுமக்கள் இவ்வாலயத்தில் பயபக்தியோடு பொங்கல் பூசைசெய்து வழிபட்டுவரத் தொடங்கினார்கள். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் மக்கள் பலர் பொங்கிப் படைத்து வழிபடுவார்கள். வைகாசி விசாகத்தில் விஷேச பொங்கல்விழா நடைபெறுகின்றது. இந்த ஆலயம் கட்ட ஆரம்பித்த காலத்தில் நாகபாம்பு இருந்த புற்றை மூலஸ்தானத்திற்குள் வைத்துக் கட்டிவிட்டார்கள். அந்தப் புற்றுக்குள் இருக்கும் நாகம் வெளியே வந்து போகக்கூடியதாக ஸ்தானத்திற்குப் பின்புறத்தில் துவாரங்கள் விடப்பட்டிருக்கின்றன. பூசையின் முடிவில் புதுச் சட்டியில் பால்பழம் எடுத்துச் சென்று நாகராஜர் புறப்பட்டு வரும் வாசலில் வைப்பார்கள். அது வந்து பிரசாதத்தை உண்டு செல்லும். குழந்தையில்லாதவர்கள் இவ்வாலயத்திற்கு நேர்கடன் வைத்து மக்கட்பேறு பெற்றிருக்கின்றார்கள். இந்த ஆலய வழிபாட்டினால் இந்தப் பகுதியில் பெரும்பாலும் விஷக்கடி குறைந்திருக்கின்றதாகக் கூறுகின்றார்கள். இலங்கையில் பல இடங்களிலும் நாகதம்பிரான் கோவில்கள் இருக்கின்றன. ஆனால் கிழக்கு மாகாணத்தில் கொட்டியாபுரப்பற்றில் இவ்வாலயம் மிகப் பிரசித்தமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேனையூர் வீரபத்திரர் கோவில்

திருக்கோணமலை மாவட்டத்தில் கொட்டியாரப்பற்றில் சேனையூர் என்ற சைவத் தமிழ்க் கிராமம் ஒன்று இருக்கின்றது. இக்கிராமத்தின் மத்தியிலுள்ள பிரசித்தி பெற்ற ஸ்ரீவர்ணகுலப் பிள்ளையார் கோவிலுக்கு வடகிழக்கில் சுமார் முன்னூறு மீற்றர் தூரத்தில் இவ்வாலயம் இருக்கின்றது. கொட்டியாபுரப்பற்றிலுள்ளதும் மகாவலிகங்கைக் கரையோரமாகப் பண்டைக்காலத்தில் திருக்கரைசையம்பதி சிறப்புற்று விளங்கிய காலத்தில் சேனையூர்ப் பகுதியில் வாழ்ந்த சைவப் பெருங்குடி மக்கள் இவ்வாலயத்தைக் கட்டியிருக்கலாம்.

சிதைவடைந்திருக்கும் ஆலயக் கட்டிடம் மிகப் பழமை வாய்ந்த சரித்திரப் பின்னணியையுடையதாய் காணப்படுகின்றது. கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபங்கள் யாவும் விரிசல்கண்டுவிட்டன. வாயிற் தூண்கள், படிகள், கற்பக்கிரகத்தின் மேற்தளங்கள் யாவும் கருங்கற்களாலானவை. சுவர்கள் செங்கற்களால் கட்டப்பட்டிருக்கின்றன. அக்கற்களையும் அதற்குப் பயன்படுத்தியுள்ள சாந்துகளையும் அவதானிக்கும் போது பொலநறுவைக்காலக் கட்டடம்போல் காணப்படுகின்றது. சுவர்கள் இரண்டடி அகலமானவை. திருமங்கலாய் சிவன்கோவில், அகத்தியர் ஸ்தாபனச் சிவன்கோவில், கங்குவேலிச் சிவன்கோவில் அமைப்புக்களைப்போல இவ்வாலயமும் அமைக்கப்பட்டிருக்கின்றது.

ஆலயம் சிதைவடைந்தபின் அங்கிருந்த திருவுருவங்கள் அகற்றப்பட்டிருக்கலாம். ஆலயத்தினுள்ளேயே பெரிய வேப்பமரம் வளர்ந்திருக்கக்கூடிய அளவுக்கு இவ்வாலயம் நீண்ட காலமாகப் பராபரிப்பிழந்திருக்கின்றது. சுற்றிலும் புதர்மண்டிக் கிடக்கின்றது. ஆலயத்தைச் சுற்றி முருகைக்கற்கள் அடுக்கிக் கட்டப்பட்ட சுற்றுமதிலும் சிதைந்து காணப்படுகின்றது. இவ்வாலயத்திலிருந்த சில ஆயுதங்களையெடுத்து ஆலயத்திற்கு முன்பக்கமாகவுள்ள பிரம்மாண்டமான ஆலயமரத்தடியில் பெரிய மேடையமைத்து அதில் ஸ்தாபித்திருக்கின்றார்கள். குலிசம், ஈட்டி, நான்கு சூலங்கள் மேடையில் ஸ்தாபிக்கப்பட்டு வருடாவருடம் வைகாசி மாதத்தில் பெரிய மடைவைத்துப் பரிகலவேள்வி செய்துவருகின்றார்கள். கிராமத்தில் ஏற்படும் நோய் பிணிகள் நீங்கவும், மழையைவேண்டியும் இந்தப் பரிகலவேள்வி நடைபெற்று வருகின்றது. வேள்வி செய்யும் தினத்தில் அயல் கிராமங்களிலிருந்தும், அயல்களிலிருந்தும் பெருந்திரளான மக்கள் வந்து கூடுகின்றார்கள். வீரபத்திரருக்கு வேள்வி செய்யும்போது, மாரியம்மன், பேய்ச்சியம்மன் என்பவர்களுக்கும் மடைவைத்து வேள்வி செய்வார்கள். வேள்வியின் முடிவில் பரிகலங்களுக்குரிய கலசங்களுக்குமேலே ஒரு வெள்ளைச் சீலையை நான்குபேர் தட்டிபோல் உயர்த்திப் பிடித்துக்கொள்ள பிரதான பூசாரியார் அரிசியையும் வேப்பம் பத்திரியையும் சேர்த்து எடுத்து ஆகாயத்தை நோக்கி எறிவார். இதைப் பரிகலங்கள் ஏற்றுக்கொள்வதால் அரிசி நிலத்தில் வந்து விழுவதில்லை. சீலைத் தட்டியிலும் விழுவதில்லை. எப்படி மாயமாய் மறைகின்றதோ தெரியாதாம். இது ஒரு அதிசய நிகழ்ச்சியாக இங்கு நடைபெற்று வருகின்றது. சேனையூரில் வாழும் விஸ்வகர்மா இனத்தைச் சேர்ந்தவர்கள் இவ்வாலயத்தைப் பரம்பரை உரிமையோடு நடத்தி வருகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியகுளம் நாதனார் கோவில்

திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து அனுராதபுரம் செல்லும் நெடுஞ்சாலையில் ஒன்பது கில்லோமீற்றர் தூரம் சென்று வெல்க்கம் விகாரைச் சந்தியையடைந்து அங்கிருந்து பிரிந்து செல்லும் கிளைப்பாதை வழியாக ஐந்து கில்லோமீற்றர் தூரம் சென்றால் இந்தக் கோவிலை அடையலாம்.

முற்காலத்தில் தமிழ் பௌத்தர்கள் இருந்ததற்குரிய சரித்திர வரலாறுகள் இருக்கின்றன. இங்கு காணப்படும் பௌத்த ஆலயமும் தமிழ்ப் பௌத்தர்கள் வாழ்ந்த இடம் போல் காணப்படுகின்றது. குடியேற்றத் திட்டத்தின்கீழ் மக்களை குடியேற்றக் காடுகளை அழித்தபோது இந்தக் கோவில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த இடத்தில் ஒரு தமிழ்க் கல்வெட்டும் நான்கு பாளி மொழிக் கல்வெட்டும் காணப்படுகின்றன. பழுதடைந்திருக்கும் பௌத்த விகாரைகளையும், பௌத்த சின்னங்களையும் பாதுகாக்க எடுக்கப்படும் அக்கறை இந்துக் கோவிலுக்கு எடுக்கப்படவில்லை, வேதனைக்குரியதே.

பெரியகுளம் நாதனார் கோவிலுக்கு நிலாவெளியிலிருந்து மாடுகள் தானமாக வழங்கப்பட்ட வரலாற்றை நிலாவெளியிலிருக்கும் திரு. ஜெகரெத்தினம் என்பவரிடமிருந்து அறிந்தேன். பெரியகுளக் காட்டில் சைவக் கோயில்கள் இருக்கக் கண்டதாகப் பல முதியவர்கள் கூறியதாகவும் அவர் சொன்னார். சைவக் கோயில்கள் அங்கிருந்ததாகக் கல்வெட்டுக் கூறுகின்றது. பதினோராம் நூற்றாண்டில் இங்கிருந்த சைவ ஆலயங்கள் சோழ மன்னரின் ஆதிக்கத்தில் உன்னத நிலையில் இருந்ததாக அறியக்கிடக்கின்றது. அக்காலத்தில் இங்கிருந்த பௌத்தர்கள் இலங்கையின் தெற்கே சென்றுவிட்டதாக ஒரு குறிப்பு இங்கே வைக்கப்பட்டிருக்கின்றது. பௌத்த மன்னர்கள் இந்தக் கோவில்களைப் புனருத்தாரணம் செய்ததாகவும் அந்தக் குறிப்பு கூறுகின்றது. புதைபொருளாராய்ச்சியாளர்களின் பணிமனை ஒன்றும் இங்கு காணப்படுகின்றது. அவர்கள் பாரபட்சமற்ற முறையில் ஆய்வு செய்வார்களானால் உண்மைகள் புலனாகும். இன்று பௌத்த மக்களிடமிருக்கும் விபரீத எண்ணம் ஒழியுமானால் இந்த ஆலயம்பற்றிய சரியான விளக்கம் கிடைக்கும். அது இல்லையென்றால் நாதனார் கோவிலும் மறைந்து வரலாறுகளும் திரிபுபட்டு மறைக்கப்பட்டுவிடும். சிலர் இதை நந்தனார் கோவில் என்றும் கூறுவார்கள். பஞ்சவிம்சதி எனப்படுவது மூர்த்திகளைப் பிரதிட்டை செய்வதற்கு அமைக்கப்படும் ஆதாரசிலை. இருபத்தைந்து பதம், ஒன்பது பதம் கொண்டதாக ஆதார சிலைகள் அமைப்பார்கள். பதம் என்பது குளிகள். இந்த விதி முறை இந்துக்களுடைய ஆலய அமைப்பு முறையிலுள்ளவை. சிதம்பரம் முதலிய பாரதநாட்டுத் தலங்களிலும் கருவறையில் இருபத்தைந்து பதம் கொண்ட ஆதாரசிலையைப் பார்க்கலாம். திருக்கோணேஸ்வரத்தின் கருவறையில் ஒன்பது பதம் கொண்ட ஆதார சிலை வைக்கப்பட்டிருக்கின்றது. இந்துக்களுடைய இந்தச் சிற்ப சாஸ்திர முறைப்படி பெரியகுளம் நாதனார் கோவிலில் புத்தருடைய சிலையை பஞ்சவிம்சதியில் ஸ்தாபித்திருக்கிறார்கள். புத்தர் சிலை இப்பொழுது அங்கு இல்லை. பஞ்சவிம்சதி ஆதாரசிலை மாத்திரம் இருக்கின்றது. இந்துக்களுடைய செல்வாக்கு உள்ள இடமாக முற்காலத்தில் இந்த இடம் இருந்ததென்பதை பஞ்சவிம்சதி ஆதாரசிலை உணர்த்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் நிறைவு



திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள திருக்கோவில்களின் வரலாறுகளைப் படித்து முடிக்கும் போது உங்கள் நெஞ்சத்தில் தோன்றும் கருத்தோவியம்தான் இந்நூலின் ரசம். ரசனை ஒவ்வொருவருடைய கண்ணோட்டத்தையும் கருத்தோட்டத்தையும் பொறுத்த வரையில் மாறுபடும் தன்மையுடையது. எனவே இந்நூலை ரசிப்பதில் எல்லோரும் ஒரு முடிவுக்கு வர முடியாது என்பதை உணர்கின்றேன். எனது உள்ளக் கிடக்கையை உரைப்பதினால் உங்களோடு நானுமொரு ரசிகனாகிவிடலாமல்லவா?.

திருக்கோணமலை மாவட்டத்தில் குளக்கோட்டு மன்னனுடைய ஆத்மீகச் செயலாக்கம் ஒருகாலத்தில் மக்கள் அனைவரையும் செந்நெறியில் வாழச் செய்தது. கடமை உணர்ச்சியைப் பரவலாக மக்களுடைய உள்ளத்தில் ஆழப் பதியச் செய்தது. நாம் சைவத் தமிழினம் என்ற கட்டுக்கோப்பை உண்டாக்கியது. கடவுட் கொள்கையில் உறுதியை ஏற்படுத்தியது. இறைவனுடைய பணிக்காக ஒவ்வொருவரும் தம்மை எளிமையாக்கிக்கொள்ளச் செய்தது என்பதைக் காண்கின்றேன். குளக்கோட்டு மன்னன் திருப்பணி செய்த கோணேசர் கோவிலுக்குத் தொண்டர்களாகவும், கோணேசப் பெருமானுடைய அருளாட்சியின் கீழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியாக வாழ்ந்த, வாழ்கின்றவர்களாகவும் மக்களைக் காண்கின்றேன்.

இயற்கை ஏதுக்களும், வேறு காரணங்களும் மக்களின் குடியிருப்பை மாற்றி இடம்பெயரச் செய்தபோதிலும் கடவுட் கொள்கையில் சிவம்பெருக்கும் சைவர்களாக மக்கள் உறுதியோடு சிவநெறியில் வாழ்ந்தார்கள் என்பதைக் காண்கின்றேன். ஆலயங்கள் உணர்த்திய ஆத்மீக தர்மத்தை, ஆலயங்கள் அழிந்த பின்பும், அழிக்கப்பட்ட பின்பும் அவ்விடங்களில் எஞ்சியுள்ள திருவுருவங்கள், கல்வெட்டுக்கள், திருவுருவங்களின் சிதைந்த பாகங்கள், ஆலயங்களின் சிதைவுகள் என்பன இன்றும் உணர்த்திக்கொண்டிருப்பதைக் காண்கின்றேன்.

தெய்வீக அற்புதங்கள் திருக்கோவில்களைத் தோற்றுவித்துத் திருக்கோணமலை மாவட்டத்தில் சைவத் தமிழ்ப் பண்பாட்டை வளர்த்தெடுத்ததைக் காண்கின்றேன். வெருகல் தொடக்கம் தென்னமரவாடி வரையும் வாழ்ந்த தமிழ் மக்களின் பண்பாடு, பழக்கவழக்கம், சமயநெறி என்பனவற்றை அன்றும் இன்றும் மக்களின் சைவ அனுஷ்டான விழாக்களில் காண்கின்றேன். மேற்கூறிய யாவற்றையும் அனுபவித்து அனுபூதியில் ரசிக்க அருள் சுரந்த மாதுமையம்பாள் சமேத கோணேசப் பெருமானுடைய திருவடிகளை நெஞ்சக்களத்தில் கண்டு நிறைவு செய்கின்றேன்.

"என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே"

ஓம் சிவம்.

இ. வடிவேல்
சைவப்புலவர் – பண்டிதர்
திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by Unie Arts (Pvt) Ltd. Colombo 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org